# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

# தரம் 12



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 12

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
இணையத்தளம்: **www.nie.lk** மின்னஞ்சல் : **info@nie.lk**

**வரலாறு**
தரம் - 12
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2017

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

*பதிப்பு :*
*தேசிய கல்வி நிறுவகம்*

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, கலாநிதி மாபுள்கொட சுமணரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக்குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

| | |
|---|---|
| கல்விசார் அலுவல்கள் சபை | தேசிய கல்வி நிறுவகம் |

**பாட ஒருங்கிணைப்பு**

| | |
|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**பாடநிபுணத்துவ சேவை**

| | |
|---|---|
| பேராசிரியர் ஹங்குரன்கெத்த தீரானந்த தேரர் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். மாலனி அந்தகம | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். இந்திராணி முணசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். யூ.பீ. கருணானந்த | களனிப் பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். கே.எம்.பீ. குலசேகர | களனிப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். எம். சோமதிலக | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். பத்மசிரி கன்னங்கர | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி. என்.ஆர். தேவசிறி | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி. ஆர். தசநாயக | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி. ஏ. தேவிவித்தியாலங்கார | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| விரிவுரையாளர் ஆர்.எம். சத்தியகுமார் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | |
|---|---|
| அருட் சகோதரி மேரி டொனேட்டா | அதிபர் சேவை (ஓய்வு நிலை) புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, வத்தளை |
| திருமதி. ஆர்.டபிள்யூ.எஸ். தால எதிரிவீர | ஆசிரியர் சேவை (ஓய்வு நிலை) |
| திருமதி. டபிள்யூ.டீ.கே.டீ. பிட்டிகல | அதிபர் சேவை (ஓய்வு நிலை) |
| திருமதி. நந்தா மனம்பேரி | ஆசிரியர் சேவை (ஓய்வுநிலை) |
| திரு. யூ.எல்.எம். பசீர் | ஆசிரியர் சேவை (ஓய்வு நிலை) |
| திரு. யூ.எல். சிபார்தீன் மரிக்கார் | சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விப் பணிமனை, வத்தேகம |
| திருமதி. ஏ. இந்திராணி | குருவிட்ட மத்திய கல்லூரி |
| திரு.பீ.எல்.ஏ.யூ.ஜி. பெரேரா | சதர்வோதய பிரிவெனா, தேவாலகம |
| திரு. எச்.எம். நளின் பண்டார | ஆசிரியர் சேவை, குருவிட்ட மத்திய மகா வித்தியாலயம், குருவிட்ட |
| திரு. ஜீவன சுரங்க கமகே | வலல்லாவிட்ட மகாவித்தியாலயம் |
| திரு. சமந்த பியதாச | ஸ்ரீபுத்த ஜயந்தி மத்திய கல்லூரி, பலாங்கொடை |
| திரு. திமதி ஏகநாயக | கல்னேவ மகா வித்தியாலயம் |

**நிகழ்ச்சித்திட்டக் குழு**

திருமதி. டீ.எச்.சீ. நிஷானி தர்மபால - சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை
திருமதி. டபிள்யூ.எஸ்.எஸ். குணவர்தன - உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காகத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக இருபத்து மூன்று தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும், அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் இரு பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரிச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். வரலாறு எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**- கலைத்திட்டக்குழு -**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vii |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | ix - xlv |
| **கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்** | |
| இலங்கை வரலாறு | 1 - 109 |
| இந்திய வரலாறு | 110 - 205 |
| ஐரோப்பிய வரலாறு | 206 - 292 |
| உலக வரலாறு | 293 - 363 |

# வரலாறு

# பாடத்திட்டம்

# தரம் 12

**(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

## அறிமுகம்

2017 புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய வரலாறு பாடப் பாடத்திட்டம், நான்கு பகுதிகளைக் கொண்டது.

- இலங்கை வரலாறு (பண்டு தொட்டு கி.பி. 1978 வரையில்)
- இந்திய வரலாறு (பண்டு தொட்டு பிரித்தானியர் ஆட்சி முடிவு வரையில்)
- ஐரோப்பிய வரலாறு (கிரேக்க, உரோம நாகரிக காலத் தொடக்கம் கி.பி 1989 வரையில்)
- நவீன உலக வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் கி.பி. 1989 வரையில்)

இலங்கையின் தற்போதைய நிலையைக் கருதுகையில் பண்டு தொட்டு தனிமையாகவன்றி, பல்வேறு பூகோளத் தாக்கங்களுக்கு உட்பட்டவாறு சுதேசத்துவமடைந்து போசிப்புப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளமையைக் காண முடிகின்றது. அவ்வாறான போக்குகளையும் அவற்றின் தாக்கங்களையும் இனங்காண்பதற்காக இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய பாடவிடயங்களும் க.பொ.த. உயர்தர வரலாற்றுப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.



க.பொ.த. உயர்தர வரலாறு பாடத்தைத் தெரிவு செய்யும் மாணவர்க்குக் கட்டாயமாக இலங்கை வரலாறு எனும் பகுதியைப் பயிற்ற வேண்டும். அத்துடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய மூன்று பகுதிகளுள் ஒன்றைத் தமது விருப்புக்கேற்பத் தெரிவு செய்து கொள்ளலாம்.

2017 இல் நடைமுறைக்கு வரும் இப்பாடத்திட்டத்திற்கமைய கற்றல் கற்பித்தற் செயன்முறையையும் விடய உள்ளடக்கம் தொடர்பான குறிக்கோள்களை அடைதலையும் இலகுபடுத்துவதற்காக கற்றற் பேறுகள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றைக் கட்டியெழுப்பும் போது அது சார்ந்த பூகோள போக்குகளை இனங்காணப்பட்டதோடு வரலாறு தொடர்பாக அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டவிதத்துக்கமைய, விடய உள்ளடக்கத்தில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**இலங்கை வரலாறு:**

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பாக, முன்னைய பாடத்திட்டத்தில் இருந்ததைவிட கூடுதலான அளவு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.
- மூலாதார வகைப்பாட்டிற்காக சமகால விதந்துரைப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.
- புதிய பாடத்திட்டத்தில் எமது பண்டைய தொழினுட்பம் எனும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

**இந்திய வரலாறு:**

- முன்னைய பாடத்திட்டத்தில் கி.பி. 1206 வரையிலேயே கவனஞ் செலுத்தப்பட்டது. புதிய பாடத்திட்டத்தில் இந்தியா சுதந்திரம் பெறும் வரையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த இந்திய வரலாற்றினை விட இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய நிகழ்வுகள் தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய வரலாறு:**

- பூகோள ரீதியில் செல்வாக்குச் செலுத்திய, பூகோளச் சக்திகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**நவீன உலக வரலாறு:**

- உலகில் இடம்பெற்ற பூகோள ரீதியான போக்குகள் குறித்து கூடுதலான கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டம் 12 ஆம், 13 ஆம் தரங்களுக்குரியது. அதற்கமைய அந்தந்த தரத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக விடய உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு தனிநபருக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும், தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

iv. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



**(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**(VI).ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**(VII)"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# வரலாறு - பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்று போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும்.
3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

# தேசிய பொது இலக்குகளுக்கும் பாட குறிக்கோள்களுக்குமான தொடர்பு

| பாட குறிக்கோள்கள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **i** | **ii** | **iii** | **iv** | **v** | **vi** | **vii** | **viii** |
| 1. வரலாற்று போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல். | √ | √ | | | | | √ | |
| 2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும். | √ | √ | √ | | | √ | √ | |
| 3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல். | √ | √ | √ | | | | | √ |
| 4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல். | √ | √ | √ | | | | | |
| 5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல். | √ | √ | √ | | | | | |
| 6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல். | | | | | √ | | | |
| 7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல். | | | | | √ | | | |
| 8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல். | √ | √ | √ | | | | √ | |
| 9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல். | | √ | | | | | | |
| 10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல். | | √ | | | | | | |

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தரம் | தவணை | இலங்கை வரலாறு | இந்திய வரலாறு | ஐரோப்பிய வரலாறு | நவீன உலக வரலாறு |
|---|---|---|---|---|---|
| 12 | தவணை 1 | 1.1, 2.1, 3.1, 4.1, 5.1 | 1.1, 2.1, 3.1 | 1.1, 2.1 | 1.1, 2.1 |
| | தவணை 2 | 5.2 | 4.1, 5.1 | 2.2, 3.1, 4.1 | 3.1, 4.1 |
| | தவணை 3 | 6.1 | 5.1, 6.1 | 5.1, 6.1, 7.1 | 5.1, 6.1, 7.1 |
| 13 | தவணை 1 | 7.1, 8.1 | 7.1, 8.1 (முதல் இரண்டு பகுதிகளும்) | 8.1, 9.1, 10.1 | 8.1, 9.1 |
| | தவணை 2 | 9.1, 10.1 | 8.1 (இரண்டாவது பகுதி), 9.1 | 11.1, 12.1, 13.1 | 10.1 |
| | தவணை 3 | 11.1 | 10.1, 11.1 | 13.2, 14.1 | 11.1, 12.1 |

# பாடத்திட்டம்

# தரம் 12

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## இலங்கை வரலாறு (ஆதி காலம் தொடக்கம் 1978 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்றுப் பெறுமானத் தொகுதிகள், கால ஒழுங்கு என்பன தொடர்பாகக் கற்றறிந்து, அதன் மூலம் பெறப்படும் வழிகாட்டலை நடைமுறை வாழ்க்கையில் எடுத்துக்காட்டுவார். | 1.1 வரலாறு என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவார். | 1. வரலாறு அறிமுகம்<br>1.1 வரலாறு - பொருள் விளக்கம் | • வரலாறு தொடர்பான பொருள் விளக்கங்களைச் சேகரிப்பார்.<br>• வரலாறு எனும் பாடத்துக்கென பொருள் விளக்கம் ஒன்றினைக் கட்டியெழுப்புவார். | 07 |
| | 1.2 வரலாறு கற்பதன் மூலம் பெறப்படும் பயன்களை எடுத்துக்காட்டுவார். | 1.2 வரலாறு கற்பதன் பயன்கள் | • வரலாற்றைக் கற்பதன் மூலம் பெறத்தக்க பயன்களை விபரிப்பார்.<br>• வரலாற்றைக் கற்பதன் பெறுமானத்தை மதித்து கருத்துரைப்பார். | |
| காலம் அவகாசம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நாகரிகம் பரவிய விதம் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 1.3 வரலாறு கற்பதற்குரிய காலச்சட்டகத்தையும் அவகாசத்தையும் தெளிவுபடுத்துவார். | 1.3 கற்றாய்வுக்குரிய காலம்<br>• வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் கி.பி. 1978 வரை | • வரலாற்றுப் பாடம் தொடர்பாக கற்றாய்வுக்குரிய கால வீச்சை எடுத்துக் காட்டுவார்.<br>• சுலபமாகக் கற்பதற்கு கால அளவினைப் பிரித்துக் காட்டுவார்.<br>• கற்றலை இலகுப்படுத்துவதற்காக காலவீச்சை வகைப்படுத்திக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் புவியியற் காரணிகளின் தாக்கத்தினை விளங்கி செயற்படுவார். | 2.1 இலங்கை வரலாற்றில் கற்றாயவேண்டிய வெளிஇடம் தொடர்பாக விளக்குவார்.<br><br>2.2 புவியியல் ரீதியான அமைவிடம் இலங்கை வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை நுணுகியாராய்வார். | 2. **வெளி இடம் சார் நிலமைகள்**<br>• குறைவரள் வலயம்<br>• மத்திய மலைநாடு<br>• கரையோர சமவெளி<br><br>2.2 புவியியல், ரீதியான அமைவிடமும் மனித நடவடிக்கைகளும்<br>• இந்தியாவுக்கு அருகில் அமைந்திருத்தல்<br>• இந்தியாவில் இருந்து பிரிந்திருத்தல்<br>• இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்<br>• உள்ளக புவியியல் காரணிகள் மலைகள், ஆறுகள், சமவெளிகள், துறைமுகங்கள் என்பன மனித நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் தாக்கம்<br>• வளங்களின் வியாபகமும் மானிட செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் | • இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய வெளிசார் நிலைமைகளை எடுத்துக் காட்டுவார்.<br>• இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய பிரதேசங்களைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• இலங்கையின் உள்வாரி, வெளிவாரி அமைப்பினை விபரிப்பார்.<br>• புவியியல் ரீதியான வேறுபாடு மனித தொடர்புகள் மீது செல்வாக்கு செலுத்தும் விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• இலங்கையின் புவியியல் ரீதியான அமைவிடத்தினை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய வெளி இடம் சார் அம்சங்களை எடுத்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| மூலாதார விமர்சனத்தின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் பகுத்தாய்வு ரீதியான அறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | 3.1 வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் மூலாதாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வார். | 3. மூலாதாரங்கள்<br>3.1 இலங்கையின் வரலாற்றைக் கற்க உதவும் மூலாதாரங்கள்<br>• இலக்கிய மூலாதாரங்கள்<br>• தொல்பொருள் ஆய்வுகள்<br>• கல்வெட்டுக்கள்<br>• நாணயங்கள்<br>• கர்ண பரம்பரைக் கதைகள் | • வரலாற்றைக் கட்டியெழுப்ப பங்களிக்கும் மூலாதாரங்களைப் பெயரிடுவார்.<br>• மூலாதாரங்களின் தன்மைக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்துவார்.<br>• மூலாதார வகைகளுக்கு ஏற்ப வரலாற்று விடயங்கள் கட்டியெழுப்பத்தக்க விதத்தைத் தெளிவுபடுத்துவார். | 18 |
| | 3.2 மூலாதாரப்பகுப்பாய்வு மூலம் வரலாற்று விடயங்கள் கட்டியெழுப்பப்படும் விதத்தை எடுத்துக்காட்டுவார். | 3.2 மூலாதாரங்களை விமர்சன ரீதியில் ஆராய்தல் | • வரலாற்று மூலாதாரங்களை விமர்சன ரீதியில் நுணுகியாய்வார்.<br>• மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்களை நுணுகியாய்வார். | 4. குடியேற்றங்களின் ஆரம்பமும் பரவலும் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி வரை)<br>4.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர்) (கி.மு. 10000 - கி.மு 1800) | • இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• மிகப் பழங்காலம் முதற் கொண்டே இலங்கையில் குடியிருப்புக்கள் இருந்தமை தொடர்பில் பெருமிதங் கொள்வார்.<br>• வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களை இலங்கைப் படத்தில் குறிப்பார். | 15 |
| | 4.2 முன் வரலாற்றுக் கால மானிட செயற்பாடுகள் தொடர்பாகத் தேடியறிவார். | 4.2 முன் வரலாற்றுக் காலம் வரலாற்றுக்கு உதய காலம் கி.மு. மூன்றுக்கும் கி.பி. மூன்றுக்கும் இடையில்) (கி.மு. 1800 - கி.மு 6 ற்கும் இடையில்) | • முன் வரலாற்றுக் காலத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• முன் வரலாற்றுக் கால விருத்தியை மதிப்பார்.<br>• முன் வரலாற்றுக் கால இடங்களை இலங்கைத் தேசப்படத்தில் குறிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 வரலாற்றுக்காலம் மற்றும் அதன் குடியிருப்புக்கள் தொடர்பாக நுணுகியாய்வார். (கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து) (கி.மு. 6 - இன்று வரை) | 4.3 வரலாற்றுக் காலம்<br>• இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து மக்கள் குழுக்களின் வருகை | • வரலாற்றுக் காலத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் உருவாகிய விதம் பற்றி விளக்குவார்.<br>• வரலாற்றுக் கால குடியிருப்புக்களை இலங்கைத் தேசப் படத்தில் குறிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 5.1 இராசரட்டை நாகரிகத்தின் தொழில்நுட்ப அடிப்படையை அறிமுகம் செய்வார். | **5. இராசரட்டை நாகரிகம் (பொலன்னறுவைக்கால இறுதி வரை)**<br>5.1 இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படைகள் | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படையை விளக்குவார்.<br>• இராசரட்டை நாகரித்தின் விருத்திக்கு அதன் அடிப்படை பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குவார்.<br>• இராசரட்டை நாகரிகம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார். | 100 |
| | 5.2 இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, தொழில்நுட்பம் என்பனவற்றை விளக்குவார். | 5.2 இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, தொழில்நுட்ப நடவடிக்கைகள்<br>• அரசியல்<br>- அரச ஆட்சியாளர்கள்<br>- ஆட்சி முறைகள்<br>- யுத்த உபாயங்கள்<br>- வெளிநாட்டுத் தொடர்புகள்<br>• சமயமும் பண்பாடும்<br>- புத்த சமயம் நிறுவப்படலும் பரவலும்<br>- ஏனைய சமயங்கள்<br>- கலை, பண்பாடு | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படையை வலுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்த அரசர்களை எடுத்துக் காட்டுவார்.<br>• இராசரட்டை நாகரீகத்தின் விருத்தியை மதிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பொருளாதாரம்<br>- விவசாயம்<br>- கைத்தொழில்<br>- வர்த்தகம்<br>• சமுகம்<br><br>• விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பமும்<br>- நீர்ப்பாசனம்<br>- கட்டிடக்கலை<br>- வைத்தியம்<br>- உலோக தொழிநுட்பம் | • இராசரட்டை நாகரிகத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், குளங்கள், அணைகள் என்பனவற்றைப் படமொன்றில் குறிப்பார். | |
| | 5.3 இராசரட்டை நாகரிகத் தின் அடிப்படைகள் பலவீனமடைந்தமையால் தளர்ச்சியடைந்து வீழ்ச்சியுற்ற விதத்தை எடுத்துக் காட்டுவார். | 5.3 இராசரட்டை நாகரிகத்தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை பலவீனம் அடைந் தமைக்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சி யடைந்த விதத்தைத் தெளிவு படுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 6.1 இராசரட்டை நாகரிகமானது அதன் ஆரம்பகால அடிப்படைகளிலிருந்து மாற்றமடைந்த ஒரு புதிய யுகத்தில் பிரவேசித்தலையும், அதன் செயற்பாட்டையும் விமர்சிப்பார். | 6. இராசரட்டை நாகரிகத்திற்குப் பிற்பட்ட காலம்<br>6.1 ஆட்சி மையங்கள் பற்றிய அறிமுகம்<br>- தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகலை, கம்பளை<br>- வெளிநாட்டுத் தொடர்புகள்<br>- சமயம், பண்பாடு, சமூகம் | • பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளை அறிமுகம் செய்வார்.<br>• இராசரட்டை இராசதானிகளுக்கும் பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளுக்குமிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுவார். | 90 |
| | 6.2 யாழ்ப்பாண இராசதானி தொடர்பாக நுணுகியாய்வார். | 6.2 யாழ்ப்பாண இராசதானி | • யாழ்ப்பாண இராசதானியின் ஆரம்பம், வளர்ச்சி என்பனவற்றை விபரிப்பார்.<br>• யாழ்ப்பாண இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 கோட்டை இராசதானி தொடர்பாக நுணுகி யாய்வார். | 6.3 கோட்டை இராசதானி | • கோட்டை இராசதானியின் ஆரம்பம், வளர்ச்சி என்பன தொடர்பாகத் தெளிவுபடுத்து வார்.<br>• கோட்டை இராசதானியின் சிறந்த அரசர்களை உயர்வாக மதிப்பார்.<br>• கோட்டை இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய உப கண்டத்தின் செயற்பாடு அதன் தாக்கம் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 1.1 இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை விபரிப்பார். | 1. **இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களைப் பகுத்தலும் ஆய்வு செய்தலும்**<br>• இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்<br>• மூலாதாரங்களின் வகையீடுகள்<br>• மூலாதாரங்களை ஒப்பீட்டு ரீதியில் கற்பதன் முக்கியத்துவம்<br>• மூலாதாரங்கள் தொடர்பான விமர்சனங்கள் | • இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களைப் பெயரிடுவார்.<br>• இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை வகைப்படுத்துவார்.<br>• இந்திய வரலாற்றை கட்டியெழுப்பும்போது மூலாதாரங்களைப் பயன்படுத்தும் விதத்தினை விளக்குவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| இந்திய உப கண்டத்தின் செயற்பாடு, அதன் தாக்கம் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 2.1 புவியியல் ரீதியான அமைவிடம் இந்திய வரலாற்றில் செல்வாக்கு செலுத்திய விதத்தினை ஆராய்வார். | 2.1 புவியியல் ரீதியான காரணிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதம்<br>• புவியியல் ரீதியான அமைவிடம்<br>- தனி அமைவு<br>- சார்பு அமைவு<br>• புவியியல் காரணிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதம்<br>• பரந்த இந்தியாவும் வேற்றுமையில் ஒற்றுமையும் | • இந்தியாவின் தனி அமைவினையும் சார்பு அமைவினையும் விபரிப்பார்.<br>• இந்தியாவின் அமைவிடம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மானிடத் தொடர்புகள் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• இந்தியாவின் பௌதிக அம்சங்களை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் போக்குகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 3.0 சிந்துநதி நாகரிகத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பன தொடர்பாகத் தகவல்களை நுணுகியாய்வார். | 3. **சிந்து நதியை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற நகர நாகரிகம்**<br>• ஹரப்பா நாகரிகத்தை அறிமுகம் செய்தல்<br>• ஆரம்பம், விரிவாக்கம் தொடர்பான கருத்துக்களும் சமகால நாகரிகங்களுக்கிடையிலான தொடர்புகளும்<br>• நகரத்திட்டங்களும் இயல்புகளும்<br>• சமூக ஒழுங்கமைப்பு<br>• சமய நம்பிக்கைகள்<br>• கலைத்திறன்கள்<br>• பொருளாதார நிலை<br>• வீழ்ச்சியும் அது தொடர்பாக ஆய்வாளர்களின் கருத்தும் | • ஹரப்பா நாகரிகம் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.<br>• ஹரப்பா நாகரித்தின் சிறப்பினை மதிப்பார்.<br>• ஹரப்பா நாகரிகம் சிறப்புற்று விளங்கிய இடத்தினை தேசப்படத்தில் அடையாளமிடுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| இந்திய வரலாற்று விரிவாக்கம், வளர்ச்சி என்பன தெடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 வேத காலம் தொடர்பான தகவல்களை விபரிப்பார். | 4. **கங்கைச் சமவெளி வழியே பரவிய மானிட குடியிருப்பு**<br>• இருக்கு வேத இலக்கியத்தின் மூலம் வெளிப்படும் மானிட குடியிருப்பு விரிவாக்கத்தின் நிலை<br>• ரிக் வேத காலத்தின் அரசியல், சமுக, பொருளாதார, பண்பாட்டுக் கோலங்கள்<br>• பிந்திய வேத கால குடியிருப்பு விரிவாக்கம்<br>• பிந்திய வேத காலத்தின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சி | • வேத காலம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• வேத காலமே இந்திய நாகரிகத்தின் அடிப்படை என்பதற்கான தகவல்களை முன்வைப்பார்.<br>• இருக்கு வேத காலம், பிந்திய வேத காலம் ஆகியவற்றில் குடியிருப்புக்களின் விரிவாக்கத்தைத் தேசப்படத்தில் குறிப்பார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 5.1 பதினாறு பெருங்குடியேற்றங்களின் விரிவாக்கம் தொடர்பாக விபரிப்பார். | **5. அரசியல், மானிட சிந்தனைகளின் வளர்ச்சி**<br>• குடியேற்றப் பரம்பலும் பதினாறு பெருங்குடியேற்றங்களும் | • பதினாறு பெருங்குடியேற்றங்களை விபரிப்பார்.<br>• பதினாறு பெருங்குடியேற்றங்களில் பலம் பொருந்திய அரசுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• பதினாறு பெருங்குடியேற்றங்களைத் தேசப்படமொன்றில் குறிப்பார். | 25 |
| | 5.2 சமய, தத்துவ கருத்துக்கள் இந்திய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்துள்ள விதத்தினை நுணுகியாய்வார். | • சமய சிந்தனைகளின் வளர்ச்சி<br>• பண்பாட்டு வேறுபாடுகளும் புதிய சமய சிந்தனைகள் தோற்றம் பெறலும் பரவலடைதலும்<br>• அரசியல் சிந்தனைகள் மற்றும் புதிய சமய சிந்தனைகளின் மனித நடவடிக்கைகளிலும் செயற்பாடுகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் | • இந்தியாவில் வளர்ச்சியடைந்த புதிய சமய சிந்தனைகளை விபரிப்பார்.<br>• புதிய சமய சிந்தனைகள் அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• புதிய சமய சிந்தனைகள் மனித சமுதாயத்தில் தாக்கம் விளைவித்த விதத்தை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்று விரி வாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 6.1 பேரரசு வாத எண்ணக் கருவினை மௌரியப் பேரரசினுாடாகத் தெளிவுபடுத்துவார். | **6. பேரரசு எண்ணக்கருவும் மௌரியப் பேரசும்**<br>• ஆட்சி கோட்பாடுகளின் வளர்ச்சியும் பேரரசு எண்ணக் கருவும்<br>• மௌரியப் பேரரசின் வளர்ச்சி<br>• மௌரியப் பேரரசின் ஆட்சி யாளனான அசோகனும் அவனது கொள்கைகளும்<br>• மௌரியப் பேரரசின் கீழ் அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டுப்போக்குகள்<br>• மௌரியப் பேரரசின் வீழச்சியும் காரணங்களும் | • பேரசு எண்ணக்கருவை விபரிப்பார்.<br>• பலம் வாய்ந்த மௌரியப் பேரரசு கட்டியெழுப்பப்பட்ட விதத்தினைத் தெளிவுபடுத் துவார்.<br>• பேரரசு ஒன்றின் சிறப்பியல்பு களை மௌரிய ஆட்சியின் அடிப்படையில் விபரிப்பார்.<br>• மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக் கான காரணங்களை முன்வைப் பார்.<br>• மௌரியப் பேரரசின் பரவலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டு வார். | 30 |

# ஐரோப்பிய வரலாறு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பல்வேறு பின்னணியை முன்வைத்து நாகரிகங்கள் கட்டியெழுப்பப்படும் முறை பற்றித் தெளிவுபடுத்துவார்.** | 1.1 நவீன ஐரோப்பா தோற்றம் பெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | 1. **தற்கால ஐரோப்பிய நாகரிகத்தின் அடித்தளம்**<br>1.1<br>• கிரேக்க, உரோம, கிறிஸ்தவ நாகரீக ஆரம்பம்<br>• இஸ்லாம் பரவல்<br><br>1.2<br>• மானிய முறையின் வீழ்ச்சி<br>• சிலுவை யுத்தம்<br>• வர்த்தக முன்னேற்றம்<br>• நகர முன்னேற்றம்<br>• மத்திய வகுப்பினரின் எழுச்சி | • நவீன ஐரோப்பிய நாகரீக வளர்ச்சியில் கிரேக்க, உரோம, கிறிஸ்தவ நாகரிகங்கள் தாக்கம் செலுத்தியுள்ள விதத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• மானிய முறையின் வீழ்ச்சி, நவீன ஐரோப்பாவின் தோற்றம் ஆகியவற்றிற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகப் பரம்பலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் உலகில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.** | 2.1 ஐரோப்பா தற்கால உலகத்திற்கு மாற்றம் அடைந்தமை தொடர்பாக விபரிப்பார்.<br><br>2.2 ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்களில் பேரரசைக் கட்டியெழுப்பிய விதத்தைப் ஆராய்வார். | **2. தற்கால ஐரோப்பிய ஆரம்பம்**<br>2.1 மறுமலர்ச்சியும் அறிவு வளர்ச்சியும்<br>• விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்<br>• தேசிய அரசுகளின் எழுச்சி<br><br>2.2 நாடுகாண் பயணங்கள்<br>• ஐரோப்பாவின் ஆட்சிப் பரம்பல் | • மறுமலர்ச்சி, அறிவு வளர்ச்சி என்பவற்றை விமர்சிப்பார்.<br>• புதிய வளர்ச்சி ஐரோப்பாவை நவீன யுகத்திற்குக் கொண்டு சென்ற விதத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• நாடுகாண் பயணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பாவின் நாடுகாண் பயணங்கள் ஏனைய நாடுகளில் ஏற்படுத்திய தாக்கத்தினை விமர்சிப்பார்.<br>• நாடுகாண் பயணங்களையும் ஐரோப்பாவின் விஸ்தரிப்பையும் உலகப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| சமயத்துறையில் ஏற்படும் மாற்றம் சமூகத்தில் ஏனைய துறைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அடையாளங் கண்டு மாற்றத்திற்கு முகங் கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்வார். | 3.1 ஐரோப்பாவில் மதச் சீர்த்திருத்தம் ஏற்படு தற்கான காணரங் களை விபரிப்பார்.<br><br>3.2 புரட்டஸ்தாந்து மதச் சீர்த்திருத்தம், எதிர் மதச் சீர்த்திருத்தம் என்பவற்றின் விளைவு களை ஆராய்வார்.<br><br>3.3 சமயத்தை முன்னிட்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட மோதல்களை பகுப் பாய்வு செய்வார். | 3. சமய சீர்திருத்தமும் எதிர் சமய சீர்திருத்தமும்<br>3.1 சமய சீர்திருத்தத்தின் பின்னணி<br>3.2<br>• புரட்டஸ்தாந்து சமய சீர்திருத்தம்<br>• எதிர் சமய சீர்திருத்தம்<br>3.3 முப்பதாண்டுப் போர்<br>• போரின் முக்கிய கட்டங்கள்<br>• வெஸ்ட்பாலியா உடன் படிக்கை | • மதச் சீர்திருத்தத்தின் பின்னணியை விளக்குவார்.<br>• மதச் சீர்திருத்தத்தின் விளைவு களை எடுத்துக் காட்டுவார்.<br>• மதச் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய நாடுகளைத் தேசப்படம் ஒன்றில் குறிப்பார்.<br>• மதச் சீர்திருத்தம் பற்றித் தெளிவுபடுத்துவார்.<br>• உரோமன் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களின் பரவலை ஐரோப்பா படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• எதிர்மதச் சீர்திருத்தத்தின் விளைவுகளை விமர்சிப்பார்.<br>• முப்பது ஆண்டுப்போரைத் தெளிவு படுத்துவார்.<br>• முப்பது ஆண்டுப் போரின் விளைவுகளை எடுத்துக் காட்டு வார்.<br>• முப்பது ஆண்டுப் போரின் இறுதியில் காணப்பட்ட ஐரோப்பாவினைத் தேசப்படம் ஒன்றில் அடையாளமிடுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிப்பது மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்த விதத்தை விமர்ச்சிப்பார். | 4.1 பிரித்தானிய பொருளாதார சமூக நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இசைவாக அரசியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விமர்சிப்பார்.<br><br>4.2 பிரித்தானிய பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற முறையின் பிரதான இயல்புகளை விமர்சிப்பார். | **4. பிரித்தானியப் பாராளுமன்ற முறை**<br>4.1 பாராளுமன்றத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்<br>4.2 பாராளுமன்ற முறையின் இயல்புகள்<br>• பிரதிநிதித்துவ முறை<br>• கட்சி முறை<br>• கெபினட் முறை | • பிரித்தானிய பொருளாதாரம் சமுகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை விமர்சிப்பார்.<br>• பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இசைவாக அரசியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• பிரித்தானியப் பாராளுமன்ற முறையில் ஜனநாயகம் செயற்படும் விதத்தினை விபரிப்பார்.<br>• பிரதிநிதித்துவ முறை, கட்சி முறை, கெபினட் முறை என்பனவற்றைப் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் அடிப்படையில் விமர்சிப்பார்.<br>• பிரதிநிதித்துவப் பாராளுமன்ற முறை மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவிய முறையை எடுத்துக் காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இயற்கையின் சவால்களுக்கு முகங் கொடுப்பதில் மனிதன் பெற்ற வெற்றியைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அதன்படி செயற்படுவார். | 5.1 உலகின் போக்கினை மாற்றி அமைப்பதில் கைத்தொழில் புரட்சி ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான தகவல்களை சேகரிப்பார். | 5. கைத்தொழில் புரட்சி<br>• ஆரம்பம்<br>• பரவல்<br>• விளைவு | • கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணியையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் விமர்ச்சிப்பார்.<br>• கைத்தொழில் புரட்சியின் விளைவுகளை எடுத்துக் கூறுவார்.<br>• கைத்தொழில் புரட்சியின் பரவலைத் தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் தமது உரிமையை வென்றெடுக்கலாம் என்பதை அமெரிக்க சுதந்திரப்போரை அடிப்படையாகக் கொண்டு விமர்சிப்பார். | 6.1 அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாகரிகம் பரவிய விதத்தைப் பரீட்சிப்பார். | **6. அமெரிக்க சுதந்திரப் போர்**<br>6.1 குடியேற்றங்கள் தோற்றம் பெறல்<br>• அமெரிக்காவின் ஆரம்ப குடியேற்ற வாசிகள்<br>• ஐரோப்பியர் அமெரிக்காவிற்கு சென்று குடியேற்றங்கள் அமைத்தமை<br>• வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றங்கள் | • அமெரிக்காவின் ஆரம்ப குடியேற்றவாசிகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிவார்.<br>• பிரித்தானியர் அமெரிக்காவில் அமைத்த குடியேற்றங்கள் பற்றித் தகவல்களை விமர்சிப்பார்.<br>• வட அமெரிக்காவில் காணப்பட்ட பிரித்தானிய குடியேற்றங்களைத் தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார். | 20 |
| | 6.2 அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தினை விபரிப்பார். | 6.2 சுதந்திரப் போர்<br>• சுதந்திரப் போருக்கான காரணங்கள்<br>• சுதந்திரப் போரின் முக்கிய கட்டங்கள்<br>• குடியேற்றவாசிகளின் வெற்றிக்கான காரணங்கள்<br>• சுதந்திரப் போரின் விளைவுகள் | • அமெரிக்க சுதந்திரப் போரை விமர்சிப்பார்.<br>• அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றின் முக்கியத்துவம் பெறும் விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | |

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## நவீன உலக வரலாறு (கி.பி. 1500 ஆம் ஆண்டு தொடக்கம்)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்று சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 1.1 வணிக முதலாளித்துவ முறையின் எழுச்சியானது நவீன உலகின் எழுச்சிக்கு வழிவகுத்த முறையினைப் பகுத்தாய்வார். | **1. நவீன உலகின் தோற்றம்**<br>1.1 மானிய முறையின் வீழ்ச்சியும் வணிக முதலாளித்துவத்தின் எழுச்சியும் | • வணிக முதலாளித்துவத்தைப் பகுத்தாய்வார்.<br>• ஐரோப்பாவில் முதலாளித்துவத்தின் எழுச்சியை விபரிப்பார்.<br>• வணிக முதலாளித்துவத்தின் எழுச்சியானது நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 25 |
| | 1.2 தேசிய அரசுகளின் எழுச்சி நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய விதத்தினைப் பகுத்தாய்வார். | 1.2 தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை | • தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் பற்றி விபரிப்பார்.<br>• ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளைத் தேசப் படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• தேசிய அரசுகளின் தோற்றமானது, நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் உலகுடன் தொடர்பு பட்ட முறையினை எடுத்துக் காட்டுவார். | 1.3 நாடுகாண் பயணங்கள்<br>• 16 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் நிலைமை<br>• ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்கள் | • ஐரோப்பாவின் நாடுகாண் பயணங்களுக்கு முன்னர் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கக் கண்டங்களில் காணப்பட்ட நிலைமையைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாகியமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• நாடுகாண் இயக்கத்தையும் அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டுவார்.<br>• நாடுகாண் பயணங்களைத் தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 2.1 ஐரோப்பாவின் வலிமைமிக்க அரசுகள் உலகம் முழுவதும் தமது அதிகாரத்தைப் பரவச் செய்த விதத்தைப் பகுத்தாய்வார். | 2. ஐரோப்பாவின் அதிகாரப் பரவலும் பேரரசுகள் கட்டியெழுப்பப்படுதலும்<br>• வட, தென் அமெரிக்கா<br>• ஆசியா<br>• ஆபிரிக்கா | • ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்கள் மீது தமது கவனத்தை செலுத்தியமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பிய நாடுகள் உலகின் ஏனைய நாடுகளில் தமது அதிகாரத்தைப் பரப்பிய விதத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• ஐரோப்பிய நாடுகளின் அதிகாரப் பரவலுடன் உலகில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பியரின் அதிகாரப் பரவலை தேசப்படம் ஒன்றில் குறித்துக்காட்டுவார். | 35 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 3.1 பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஆங்கிலப் புரட்சியின் பங்கினைப் பரீட்சிப்பார். | 3. நவீன உலகினை உருவாக்கிய புரட்சிகள்<br>3.1 கி.பி. 1688 ஆங்கிலப் புரட்சி | • ஆங்கிலப் புரட்சிக்கான காரணங்களை விளக்குவார்.<br>• ஆங்கிலப் புரட்சியின் தொடக்கத்தினையும் வளர்ச்சியையும் விபரிப்பார்.<br>• நவீன உலகை உருப்படுத்துவதில் ஆங்கிலப் புரட்சியின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவார். | 20 |
| | 3.2 அமெரிக்க சுதந்திரப் போராட்டம் ஓர் உலக சக்தியாக அமைந்த விதத்தினைப் பகுத்தாய்வார். | 3.2 அமெரிக்க சுதந்திரப் போராட்டம் | • அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தை விபரிப்பார்.<br>• அமெரிக்காவில் பிரித்தானியரது குடியேற்றங்களைப் படமொன்றில் குறித்துக்காட்டுவார்.<br>• அமெரிக்க சுதந்திரப்போராட்டம் உலக வரலாற்றின்மீது செலுத்திய தாக்கத்தினை விபரிப்பார். | |
| | 3.3 மனித உரிமைகளைக் காப்பதின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டிய பிரான்சிய புரட்சியைப் பகுத்தாய்வார். | 3.3 பிரான்சியப் புரட்சி | • பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களை பகுத்தாய்வார்.<br>• பிரான்சியப் புரட்சியின் மூலம் வென்றெடுத்த அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக் காட்டுவார்.<br>• மனித உரிமைகளைப் பாதுகாத்தலானது முழு நவீன உலகமும் ஏற்றுக் கொண்டுள்ள ஓர் எண்ணக்கரு என்பதைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 சவால்களை எதிர்நோக்கும்போது ஆக்கியல் சிந்தனை வளர்ச்சியடையும் விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 4. கைத்தொழில் புரட்சி<br>• கைத்தொழில் புரட்சிக்கான காரணங்கள்<br>• தொழில்நுட்ப வளர்ச்சி<br>• பரவல்<br>• விளைவுகள் | • கைத்தொழில் புரட்சியை அறிமுகம் செய்வார்.<br>• தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட புதிய உற்பத்தி தொடர்பாக விபரிப்பார்.<br>• கைத்தொழில் புரட்சி புதிய உலகின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• கைத்தொழில் புரட்சியின் பரவலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் பல்வேறு அரசியல் கருத்துக்கள் நடைமுறையில் செயற்பாடாக மாற்றமடைந்த விதத்தினைப் பரீட்சிப்பார். | 5.1 லிபரல்வாதம், தேசிய வாதம் என்பன நடைமுறையில் செயற்படும் முறையினைத் தெளிவுபடுத்துவார். | 5. தாராண்மை வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் எழுச்சி<br>• தாராண்மை வாத மற்றும் தேசிய வாத இயங்கங்களிலும் எழுச்சி<br>• 1848 ஆம் ஆண்டு புரட்சி<br>• பல்வேறு பிரிவுகள்<br>• இத்தாலிய ஐக்கியம்<br>• ஜேர்மனியின் ஐக்கியம் | • அரசியல் சிந்தனையின் வளர்ச்சியுடன் புரட்சி அணிகள் எழுச்சி பெற்ற விதத்தினை விபரிப்பார்.<br>• லிபரல் வாதமும் தேசிய வாதமும் நடைமுறையில் செயற்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 6.1 முதலாம் உலக யுத்தத்தின் அழிவுகளை எடுத்துக் காட்டுவார். | 6. முதலாம் உலக யுத்தம்<br>- யுத்தம் ஏற்படுவதில் தாக்கம் விளைவித்த வரலாற்றுப் பின்னணி<br>• புதிய பேரரசுக் கொள்கை<br>• ஆபிரிக்கா தொடர்பான போட்டி<br>• போல்கன் பிரச்சினை<br>• ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை<br>• யுத்தத்தின் முக்கிய கட்டங்கள்<br>• யுத்தத்தின் விளைவுகள்<br>• வேர்சேல்ஸ் உடன்படிக்கை<br>• ஐரோப்பிய தேசப்படம் மாற்றமடைதல்<br>• சர்வதேச மன்றம் ஏற்படுத்தப் பட்டமை | • உலக யுத்தம் நடைபெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• உலக யுத்தத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.<br>• உலக யுத்தத்துடன் தொடர்புடைய இடங்கள், நாடுகள் என்பவற்றைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| சுதந்திரமும் மனித உரிமையும் பொது மக்களது போராட்டத்தின் விளைவு என்பதனை விளங்கி, அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார். | 7.1 சமுதாயத்தின் தேவை கவனிக்கப்படாமையானது புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்பதனைப் பிரான்சியப் புரட்சியின் மூலம் விமர்சிப்பார். | **7. பிரான்சியப் புரட்சி**<br>• பிரான்சின் பழைய முடியாட்சி முறை<br>• பிரான்சியப் புரட்சிக்கான காரணங்கள்<br>• புரட்சியின் ஆரம்பமும் பரவலும்<br>• புரட்சியின் பிரதான கட்டங்கள்<br>• புரட்சியின் விளைவுகள் | • பிரான்சியப் புரட்சிக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• புரட்சியின் முக்கிய கட்டங்களை விபரிப்பார்.<br>• பிரான்சியப் புரட்சியின் விளைவுகளை விமர்சிப்பார். | 20 |

# இலங்கை வரலாறு



## வரலாற்று அறிமுகம்

எந்தவொரு பாடதிட்டத்தையும் கற்கும் போது அப்பாடத்திட்டத்தின் இயல்பு, அதன் வரைவிலக்கணம், அதனைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள், பாடத்தைக் கற்க வேண்டிய வரையறைகள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இப்பாட அலகைக் கற்கும்போது எதிர்பார்க்கப்படுவது அதன் நோக்கங்களை அடைந்துக்கொள்வதாகும். இதற்கமைய முதலாவது பாடம் பற்றிய வரைவிலக்கணமும் பாடத்தின் தன்மையும், வரலாற்றைக் கற்பதன் மூலம் தமது வாழ்க்கையில் அடைந்து கொள்ளக்கூடிய பயன்களும், அதனைக் கற்க வேண்டிய வரையறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 1.0** : வரலாற்றுப் பெறுமானத் தொகுதிகள் அதன் கால ஒழுங்கு தொடர்பாகக் கற்றறிந்து, அதன் மூலம் பெறப்படும் வழிகாட்டலை நடைமுறை வாழ்க்கையில் எடுத்தக் காட்டு வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : வரலாறு என்றால் என்னவென்பதைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- வரலாறு பற்றிய வரைவிலக்கணங்களைச் சேகரிப்பார்.
- வரலாறு பற்றிய வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்கிக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**வரலாற்று அறிமுகம்**
**வரலாற்று வரைவிலக்கணம்**

- ஹிஸ்ட்ரி (History) எனும் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். அதன் பொருள் ஆராய்தல் என்பதாகும். “ வரலாறு என்பது மனிதனின் கடந்த காலத்தைப் பற்றிக் கற்பதாகும்”என்று கிரிஸ்ஹேஸ்ட் (Kris Hirst) குறிப்பிட்டுள்ளார்.
- வரலாறு என்பது தேசங்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் மனிதர்களின் அரசியல் நிலையில் செல்வாக்குச் செலுத்திய ஏனைய முக்கியமான மாற்றங்களையும் உள்ளடக்கிய மனித வர்க்கத்திளரிடையே ஏற்பட்ட சம்பவங்களின் கதை.” என்று ஜோன் ஜே (John J) குறிப்பிட்டுள்ளார்.
- “வரலாறு என்பது மனிதனைப் பற்றிய கற்கை” என்று ஆர். பி கொலின்வுட் குறிப்பிடுகிறார்.

இவ்வரைவிலக்கணங்களுக்கு அமைவாக வரலாற்றுப்பாடத்தின் மூலம் மனித இனத்தின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரையான தகவல்கள் விளக்கப்படுகின்றன.

- பல்வேறு காலகட்டங்களில் மனிதனின் சமய, அரசியல், சமூக, பொருளியல் பற்றிய தகவல்களை விவரித்தல் இப்பாடத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.
- கீழ்வரும் காலகட்ட வகுத்தலின் மூலம் இலங்கையின் வரலாற்றைக் கற்கலாம்.
- வரலாற்றின் இயல்புக்கமைய அது பல்வேறுப்பட்ட பாடவிடயங்களைத் தன்னுள் கொண்ட ஒருபாடமாகும்.
- காலகட்டம் என்பது எல்லா விடயங்களையும் அவை இடம்பெற்ற காலத்திற்கு ஏற்ப ஒழுங்குப்படுத்தித் தொகுப்பதாகும்.

  உ+ம் இலங்கையின் வரலாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் இன்றைய காலம்வரை முறையாக வளர்ச்சி பெற்றதை இனங்காட்டுதல்.

வரலாறு

- வரலாற்றுக்கு முற்பட்ட (கி.மு. 100,000 - கி.மு. 1800)
- முன் வரலாறு (கி.மு. 1800 - கி.மு. 600)
- வரலாறு (கி.மு. 600 - இன்றுவரை)
  - புராதன (கி.மு. 600 - கி.பி. 500)
  - மத்திய (கி.மு. 500 - கி.பி.1500)
  - நவீன (கி.பி. 1500 - இன்றுவரை)

ஜீ.எம். திரவலியன் எனும் வரலாற்று அறிஞனின் கருத்துப்படி, வரலாறு என்பது பல பாடங்களால் ஆனதாகும். இதற்கு அமைவாக அவர், வரலாறு என்பது அனைத்துப் பாடங்களையும் கொண்ட ஒரு நிர்மாணம் எனக் குறிப்பிட்டுள்ளார். அப்படியென்றால் சமயம், புவியியல், அரசியல், விஞ்ஞானம், தொழினுட்பம், கலை,சட்டம் ஆகிய சகல விடயங்களும், வரலாற்றுப் பாடத்தினுள் உள்ளடங்கும் என்பார்.

உ-ம் :

| | |
|---|---|
| அரசறிவியல்: | நிகழ்கால அரசியல் எதிர்கால வரலாறாகும். |
| புவியியல்: | வரலாற்று நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்தும் புவியியல் காரணிகளை விளக்குதல் |
| விஞ்ஞானமும் தொழினுட்பமும்: | பல்வேறு காலகட்டங்களில் பிரயோகிக்கப்பட்ட விஞ்ஞான, தொழினுட்பங்கள் மனித பண்பாட்டில் உருவாக்கிய மாற்றங்களுக்கான காரணிகளைப் பற்றிக் கலந்துரையாடல். |

சமயம்: எந்தவொரு நாட்டினதும் பண்பாட்டில் அந்நாட்டு மக்கள் பின்பற்றும் சமயம் அடிப்படையாக அமைவதாகவும் இயற்கையை வணக்க,வழிபாடு செய்வதிலிருந்து பல்வேறு சமயத்தலைவர்களின். வெவ்வேறு தத்துவங்களைத் தம்முள் கொண்ட அறப்போதனைகளை மேற்கொண்டமையும் மக்கள் அவற்றை ஒப்புக்கொண்டு அதற்கியைய வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் பழகிக் கொண்ட மையின் மூலம் அவர்களது பண்பாட்டு விருத்திக்கு அவை செல்வாக்குச் செலுத்திய விதத்தைப் பற்றிக் கருத்துரைத்தல்.

- இவ்வாறு பல்வேறுபட்ட பாடங்களின் தனித்தன்மையுடனான மூலாதாரங்களும் எண்ணக்கருக்களும் பற்றி ஆழமாகக் கலந்துரையாடப்படாவிட்டாலும் வரலாற்றுப் பாடத்திற்குரிய வெவ்வேறுப்பட்ட விடயங்களைக் கலந்துரையாடல்.
- ‘‘வரலாறு என்பது உங்களுடைய எண்ணங்களல்ல. உங்களுடைய ஞாபகங்களே’’ என்று டபிள்யூ.சி.சேலரும், ஆர்.ஜே.யேட்மனும் (W.C.Sellar & R.J. Yeatman) குறிப்பிட்டுள்ளதற்கு அமைவாக, வரலாறு என்பது ஒரு பிரபந்தம் அல்ல அது உண்மையாக நடைபெற்றவற்றினைக் கொண்டு உருவாக்கிக்கொள்ளப்பட்ட ஒரு பாடமாகும் எனப் பொருள்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய வரலாறு என்பது. ஆதி தொட்டு இன்றுவரை மனிதன் செய்த, சொன்னவற்றின் உள்ளடக்கத்தைத் தம்முள் கொண்ட மனித பண்பாடாகும். அவற்றைக் கற்பிப்பதற்கு வசதியாக சமயம், அரசியல், புவியியல், பொருளியல், சமூகம், கலாசாரம், விஞ்ஞானம், தொழினுட்பம் எனும் விடயப்பரப்புகள் ஒன்று சேர்க்கப்பட்டு. எல்லாத்துறைகளைக் கொண்ட பகுதிகளைக் கொண்டு இது உருவானதாகத் தெளிவாகின்றது.

**கணிப்பீடும் மதிப்பீடும் - 1**

- வரலாற்றுப்பாடம் பற்றிய வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்கவும்.
- வரலாறு என்றால் என்ன என்று உதாரணங்களுடன் விளக்குக.

**தேர்ச்சி மட்டம் 1.2** : வரலாற்றைக் கற்பதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- வரலாற்றைக் கற்பதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்களை விபரிப்பார்.
- வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதன் பெறுமதியை மதித்துப் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**1.2 வரலாற்றைக் கற்பதன் பயன்கள்.**

- தாம் வாழும் சமூகம், உலகம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.
    - ஒரு நாட்டின் சமூகம், இனம், கலாசாரம்,சட்டம், ஆகியவற்றின் நிகழ்கால நிலை பற்றி அறிந்திருக்க வேண்டும். வரலாறுப் பாடத்தின் மூலம் ஒன்றை ஆரம்பத்திலிருந்து கற்பதற்கான வழி பிறக்கின்றது.
    - அறிவு வேகமாக விருத்தி அடைவதனால், துரிதமாக மாற்றமுறும் விரிவான உலகம் பற்றி விளங்கிக் கொள்ள முடியுமாயிருத்தல்.
    - தாம் வாழும் சமூகம் பற்றியும் வெளி உலகம் பற்றியும் தெளிவின்மையால் தவறான தீர்மானங்களை மேற்கொள்ளத் தூண்டுவதிலிருந்து தவிரத்துக் கொள்ளலாம்.
    - வரலாற்றைச் சரியாகக் கையாள்வதன் மூலம் இன்று எமது சமூகம் எதிர்கொண்டுள்ள பிரிவினை, இளைஞர்களின் விரக்தி போன்ற பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்வதற்கு முடியுமாயிருத்தல்.
    - நிகழ்காலத்தை நன்கு விளங்கிக் கொள்ள முடியுமாயிருத்தல் நிகழ்கால சமூகம், உலகம், வளர்ச்சியுற்று, முறையாக மாற்றமுற்றுக்கொண்டிருக்கும்.
    - செயற்பாடுகளின் பிரதிபலனாகும், அப்படியென்றால் நிகழ்காலத்தை விளங்கிக்கொண்டு, எதிர்காலத்தைக் காண்பதற்கான மாற்றங்களின் தொகுதி பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதாகும்.
    - இதனால் வரலாறு, மனித சமூக விருத்தியின் நடுநிலையமாகக் கருதப்படுகின்றது.
    - எதிர்காலத்தை வடிவமைத்துக்கொள்வதற்காக இறந்த காலத்திலிருந்து படிப்பினை களைப் பெற்றுக்கொள்ளல்.
    - ஈ.எச்.கார் எனும் வரலாற்றியலாளர் ‘‘நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டும்’’ என விளக்கியுள்ளார்.

- சமூகத்திலும், உலகத்திலும்அரசியல் நிகழ்வுகளையும் எழுச்சிகளையும் புரிந்து கொள்ளல்.
- நாட்டின் எதிர்காலத் தலைவர்களுக்கு அது ஒரு முன்மாதிரியாக அமையும்.
- வரலாற்றுப் பாடத்திற்கு எதிர்கால நிகழ்வுப்பற்றி முன்னுரைக்க முடியாது. அத்தோடு அது புனைந்துரைக்கப்படுவதும் இல்லை. என்றாலும் சமமான சந்தர்ப்பங்களும் சமமான பிரச்சினைகளும் சிக்கல்களும் எழும்பும்.

  உ-ம்:

  இறந்த காலத்தைக் கற்கையில் பல்வேறு நாடுகளும் முகம்கொடுத்த யுத்தங்களும் அதற்கான பின்னணிகளும் அதன் வெற்றி தோல்விகளும் ஆக்கிரமிப்புகள், புரட்சிகள் பற்றியும் கற்கிறோம். திரும்பவும் பிரான்ஸியப் புரட்சியைப் போல் ஒன்று இடம் பெறாவிட்டாலும் வேற்று நாட்டு ஆட்சியாளர்களின் வஞ்சகம், ஊழல், அநீதிகளால் சுமத்தப்படும். வரிச்சுமை போன்ற காரணிகளால் ஆட்சியாளருக்கு எதிராகப் புரட்சி ஒன்று ஏற்படலாம். அதனால் அவ்வாறான பின்னணிகளைத் தெரிந்துகொள்வதற்கும் இதனால் ஏற்படும் அழிவைத் தடுத்துக் கொள்வதற்கும் வரலாற்றைக் கற்பதன் மூலம் முடிமாயிருக்கின்றது.
- தேசியத் தனித்துவத்தைத் தெரிந்துக்கொள்வதற்கு இலகுவாயிருத்தல்.
- தேசிய ஒற்றுமையை உருவாக்கிக் கொள்வதற்கும், அந்நிய கலாசாரங்களை மதிப்பதற்கும் பழகிக் கொள்ளல்.
- மனிதத்தன்மையை விளங்கிக்கொள்வதற்கும், அதன்மூலம் தன்னைப்பற்றிய மிகவும் சரியான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் முடியுமாயிருத்தல்.
  - ஆர்.ஜீ. கொலின் வூட் எனும் வரலாற்றியலாளர் தமது நூலான Idea of History இல் வரலாறு என்பது எதற்காக?'' என்பதற்கு ''மனிதனின் தனிப்பட்ட புரிந்துணர்வுக்காக'' என்று குறிப்பிட்டுள்ளார்.
- வரலாற்றுப்பாடத்தின் மூலம் உயர்ந்த இராஜதந்திரிகளில் இருந்து சாதாரண குடிமகன்வரை அதாவது ஆட்சியாளர்கள், சமய நிறுவனங்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், வியாபாரிகள், பெண்கள், விவசாயிகள் சாதாரண மனிதர்கள் என்றவாறு சமூகத்தின் சகல தராதாரங்களிலும் உள்ளோரப்பற்றிக் கலந்துரையாடப்படுகின்றது.
- இங்கு உன்னதமானவர்களும் தாழ்வானவர்களும் என்று நபர்களைக் கண்டறிய முடியும். அதனால் மனிதர்களின் உணர்வுகள், போக்குகள், நோக்குகள் பற்றி ஆய்வுகளுக்குட்படுத்தப்படுகின்றது. இதற்கமைய ஏனையவர்களைப் பற்றியும் புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும்.
- வரலாறு மாற்றமுறும் தன்மையை விளங்கிக்கொள்ளுதல்
  - வரலாறு என்பது எந்நேரமும் மாற்றமுற்று வருகின்ற பரிணாமவாத செயற்பாடு ஒன்றைப்பற்றிய அறிக்கையாகும். அதனால் மாற்றமுறுதலும் மாற்றங்களுக்கு முகங்கொடுத்தலும் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- காலமும் சுற்றாடலும் பற்றிய கருத்து வளர்ச்சியடைதல்.
  - வரலாறு, காலமும் சுற்றடாலும் சம்பந்தமாகத் தமக்குரிய இடத்தை அளவிட்டுப் பார்க்கும் இயற்கையான முறையொன்றாகும்.வரலாற்றின் அடிப்படையே அதுவாகும்.
  - வரலாற்றுக்குரிய காலநிர்ணயம் மனித வரலாற்றில் மிக முக்கிய நாட்களைத் தொடர்புபடுத்தியதாக உள்ளதைத் தெரிந்துக்கொள்ளல்.

    உ.ம்:
    - புத்தரின் பரிநிர்வாணத்துடன் பௌத்த வருடம் ஆரம்பமானவை.
    - இயேசுநாதரின் பிறப்புடன் கிறிஸ்தவ வருடம் ஆரம்பமானவை.
    - இந்தியாவில் சக – சாதவாகன யுத்தத்தின் வெற்றியுடன் சக வருடம் ஆரம்பமானவை.
    - நபிகள் நாயகம் மக்காவைத் துறந்து மதீனாவுக்குப் பயணப்பட்டதைத் தொடர்ந்து ஹிஜ்ரி வருடம் ஆரம்பமானமை.

    இக்கால முறைப்படி பல்வேறு வரலாற்று விடயங்களை விவரித்தல்.
    - புத்தர் பெருமானின் பரிநிர்வாணத்தின் 218 ஆண்டுகளுக்குப் பின்னர் அசோக மன்னனின் முடிசூடு விழா இடம்பெற்றமை.
    - இயேசுநாதரின் பிறப்பின் பின் 1815 ஆவது வருடத்தில் இலங்கை முழுவதும் பிரிதானியரின் ஆளுகைக்கு உட்பட்டமை.
- சுற்றாடலை விளங்கிக் கொள்ளுதல்.
  - சுற்றாடல் என்பது பௌதீகச் சூழலாகும்.
    - காலநிலை, மலை, நதி, நீர்நிலைகள், மழைவீழ்ச்சி, சமவெளிகள் போன்ற பௌதீக காரணிகள் சுற்றாடலைச் சேரும்.
    - நாட்டின் வரலாற்று நிகழ்வுகளை விவரிக்கையில் அவற்றுடன் சம்பந்தப்பட்ட புவியியல் காரணிகள் விவரிக்கப்படுகின்றன.
- விமர்சனத்துடன் கூடிய சிந்தனை வளர்ச்சியடைதல்.
  - வரலாறு உருவாவது நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட மூலாதாரங்களின் அடிப்படையிலாகும்.
  - இங்கு மூலாதாரங்கள் பலவற்றுடன் இந்நிகழ்வு உறுதிப்படுத்தப்பட்டால் அது வரலாற்றுச் சம்பவமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
  - வரலாற்றைக் கற்பவர்கள் மேற்குறிப்பிட்ட தன்மைகளுக்குப் பழக்கப்படுவதினால் அவர்களிடம் விமர்சனப் பண்பு ஏற்படுகின்றது.

**கணிப்பீடும் மதிப்பீடும் : 1**

1) வரலாற்றைக் கற்பதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் யாவை என்பதனை விளக்குக.
2) வரலாற்றுப் பாடத்தின் தன்மையை உதாரணங்கள் தந்து விளக்குக.
3) ‘‘வரலாறு என்பது எல்லாப் பாடங்களையும் தன்னுள் கொண்டதொரு அமைப்பாகும்’’. இக்கூற்றை உதாரணம் தந்து விளக்குக.

**தேர்ச்சி மட்டம் 1.3** : வரலாறு கற்பதற்குரிய காலச்சட்டகத்தையும் அவகாசத் தையும் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 01

**கற்றற்பேறுகள்** :

- வரலாற்றுக்குரிய கற்றற் காலகட்டத்தைக் காண்பித்தல்
- இலகுவாகக் கற்பதற்காக காலகட்டத்தை வகுத்துக் கொள்ளல்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
**பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.**

உயர்தர வரலாற்றுப் பாடத்திற்குக் கையாளக்கூடிய விடயங்களின் உள்ளடக்கமும் கால கட்டமும் தொடர்பாக இலகுவான முறையில் மாணவர்களை அறிவூட்டுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**1.3 கற்கும் காலம்**

இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு எடுக்கப்பட்டுள்ள கால எல்லை

- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சீர்த்திருத்தம்வரை கற்க வேண்டியுள்ளமை.
    - வரலாற்றுக்கு முற்பட்ட காலம்.
        - இது பிரதானமாக இரண்டு காலகட்டங்களாகும். அவை: புராதன கற்காலமும் மத்திய கற்காலமுமாகும்.
        - தொல்பொருள் மூலாதாரங்களைக் கொண்டே இது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- முன்வராற்றுக் காலம்
    - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக்காலத்திற்கும் இடைப்பட்ட காலம், முன்வரலாற்றுக் காலமாகக் கொள்ளப்படல்.
    - கி.மு. 5000 ஆண்டுகளிலிருந்து இந்த யுகத்திற்குரிய பண்புகள் புலப்படத் தொடங்கின.
    - நிரந்தரக் குடியிருப்புகள், மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல், இரும்புத் தொழினுட்பம், மந்தைவளர்ப்பு என்பன இதன் விசேட பண்புகளாகும்.
    - பெரும்பாலும் தொல்பொருள் காரணிகளைக் கொண்டே இந்த யுகம் கட்டியெழுப்பபடல்.
- வரலாற்றுக்காலம்
    - கி.மு.600 லிருந்து இந்த யுகம் ஆரம்பமாகிறது.
    - தொல்பொருள், இலக்கிய மூலாதாரங்களிலிருந்து விவரிக்கப்படுகின்றது.
    - வரலாற்றுக் காலம் பிரதான கட்டங்கள் மூன்றைக் கொண்டுள்ளன.
    - தேசிய மன்னராட்சிக் காலம்

- மேலைத்தேயத்தவரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம்
- சுதந்திரத்தின் பின்னரான காலம்
- இந்தக்காலகட்டங்களுக்குரிய அரசியல், பொருளியல், கலாசார காரணிகள், உட்படுத்தப்பட்டிருப்பதாக மாணவர்களுக்குத் தெரிவியுங்கள். இதற்கியைபாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை தரம் 12 இற்கும், 16ஆம் நூற்றாண்டிலிருந்து 1978 வரை 13ஆம் தரத்திற்கும் கற்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

# 2. சுற்றாடல்

சுற்றாடல் என்பது பௌதீக அமைப்பும் காலநிலைக் காரணிகளுமாகும். நாட்டின் வரலாற்றை நிர்ணயிப்பதில் சுற்றாடல் பெருஞ் செல்வாக்கைக் கொண்டுள்ளது. நாட்டின் உட்புற, வெளிபபுற அமைப்பு, நிலத்தோற்ற வேறுபாடு, காலநிலைத் தன்மைகளும் இதற்குட்படும். இலங்கையின் வரலாற்றை உருவாக்குவதில் சுற்றாடலின் ஆதிக்கம் பற்றி இப்பாடத்தினைக் கற்பதன் மூலம் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 2.0** : நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் புவியியற் காரணிகளின் தாக்கத்தினை விளங்கிச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இலங்கை வரலாற்றில் கற்க வெண்டிய புவியியற் காரணிகளின் தாக்கத்தினை விளங்கிச் செயற்படுவார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற்பேறுகள்** :

- இந்து சமூத்திரத்தில் அதன் அமைவிடத்தை விளக்குவார்.
- இலங்கையின் வரலாற்றில் அதன் புவியியல் நிலை கொண்டுள்ள செல்வாக்கை விளக்குவார்.
- இலங்கையின் உள்ளகப் புவியியல் அமைப்பைப் படம் ஒன்றில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2. சுற்றாடல்**

**2.1 இலங்கையின் புவியியற் காரணிகள்.**

- வெளியமைப்பு:
    - இந்தியாவிற்கு அருகாமையில் அமைந்திருத்தல்
    - இந்தியாவிலிருந்து விலகி, தீவொன்றாக அமைந்திருத்தல்
    - இந்து சமூத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்
- உள்ளக அமைப்பு:
    - சமநிலம்
    - நதிகளும், வடிநிலங்களும்
    - மத்திய மலைநாடு
    - கடல்நீர் ஏரிகளும், துறைமுகங்களும்

- புவியியல் நிலைமை வரலாற்றில் கொண்டுள்ள செல்வாக்கு
    - அகலாங்கு $5^{o}$ 55"– $9^{o}$ 51" வடக்கிற்கும் நெட்டாங்கு $79^{0}$ 42"– $81^{o}$ 51" கிழக்கிற்கும் இடையில் அமைந்துள்ள வெப்ப வலய நாடாகும்.
- இந்தியாவிற்கு அருகாமையில் அமைந்துள்ளமையால் ஏற்பட்ட செல்வாக்குகள்.
    - இந்திய மக்கள் குழுக்களின் வருகையும் குடியிருப்புககளை அமைத்துக் கொள்ளலும்.
    - காலத்திற்கு காலம் ஏற்பட்ட குடியேற்றங்களும், ஆக்கிரமிப்புகளும்.
    - அரசியல், கலாசார செல்வாக்கு
    - படையுதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
    - இந்தியாவில் பிரித்தானியரின் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இலங்கையின் துறைமுகங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் தேவை.
- இந்தியாவிலிருந்து விலகித் தனித் தீவாக அமைந்துள்ளமை.
    - சுதந்திரமான அரசொன்றாக வளர்ச்சியுற்றமை.
    - இலங்கைக்கென்றே தனிப்பண்பாடு உருவாகி வளர்ச்சியுற்றமை.
    - இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்கள் அரசியல் ஆதிக்கங்கள் நேரடியாக இலங்கையைப் பாதித்தமை.
    - தேரவாத பௌத்த சமயம் அரச மதமானமையும் அது பாதுகாக்கப்பட்டமையும்.



***உலகில் இலங்கையின் அமைவிடம்***




***இந்தியாவிலிருந்து பிரிந்து அமைந்திருத்தல்***

- இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.
  - பல்வேறு மக்கள் கூட்டத்தினரும் வருகை தந்தமை
    உ-ம்: ஆரியர்கள், திராவிடர்கள், முஸ்லிம்கள்
  - வணிக மத்திய நிலையமாக வளர்ச்சி பெற்றதுடன் வர்த்தகம் விருத்தியுற்றமை.
  - வர்த்தகர்களுள் சிலர் இந்நாட்டின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளல்.
    உ-ம்: சேன, குத்திக, எல்லாளனின் ஆக்கிரமிப்புகள்
  - பல்வேறு நாட்டுப் பிரயாணிகளினதும் வருகை
    உ-ம்: பாஹியன் தேரர், இப்னு பதூதா
  - வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் வருகை தந்தமை.
  - பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது திரும்பியமை.

**உள்ளக புவியியல் அமைவு**

- சமநிலங்கள்
  - குடியிருப்புகள் உருவாதலும் பரவுதலும்
  - வடக்கு, கிழக்குச் சமநிலங்களை மையமாகக் கொண்ட அரசுகள்
  - நீர்ப்பாசன நாகரீகத்திற்கான அடிப்படை உருவானமை

இலங்கையின் புவிப்பௌதிகவமைப்பு



- நதிகளும் வடிநிலங்களும்.
  - இலங்கையின் . நீர்த்தொகுதி அருந்தன்மையைப் பெறல்.
  - குடியிருப்புகள் உருவானமையும் விருத்தியுற்றமையும்.
    உ-ம்: மல்வத்து ஓயா – அநுராதகாம.
    கலா ஓயா – உருவெலகாம
    கல் ஓயா – தீககாம
  - அரசுகளின் எல்லைகளாக நதிகளைக் கொள்ளுதல்.
    உ-ம்: மகாவலி கங்கையும் கலா ஓயாவும் இராஜரட்டையின் தென் எல்லைகளாதல்.
  - போக்குவரத்து நதிகளினூடகவே மேற்கொள்ளப்படல்
    உ-ம்: மகாவலி கங்கையிலிருந்து இராசரட்டை வரையான பாதை மகாவலியினூடாக இடம் பெற்றமை.
  - நீர்பாசனக் கட்டமைப்பு உருவானமை.
    உ-ம்: மகாவலியில் - மினிப்பே கால்வாய்
    கலா ஓயாவில் - கலாவாவி
  - அரசுகளின் தலைநகர்கள் நதிக்கரைகளில் அமைந்திருந்தமை.
    உம்: அநுராதபுரம், பொலன்னறுவை
  - நதிகளின் கழிமுகத்தை அண்டித் துறைமுகங்களும் வணிக மத்திய நிலையங்களும் தோன்றியமை.

- மத்திய மலைநாடு
  - பூகோளப் பிரிவிற்கு அடிப்படையாய் அமைந்த இடமாகும்.
  - மலை, வன, நீர் அரண்களால் பாதுகாக்கப்பட்டுள்ளமை
  - மத்திய மலைநாட்டில் தோன்றிய இராச்சியங்கள்
    உ-ம்: கம்பளை, கண்டி
  - மத்திய மலைநாட்டினால் முழு நாட்டிலும் அரசியல் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது சிரமமாய் இருந்தமை.
  - வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளும், உள்நாட்டுக் கலவரங்களும் ஏற்பட்ட போது பாதுகாப்பு இடமாய் இருந்தமை.
  - இலங்கையின் ஆற்றுத் தொகுதிகளின் போசணைப் பிரதேசமாய் இருந்தமை.
  - மலைநாட்டில் பிரித்தானியர் பெருந்தோட்ட செய்கையை ஆரம்பித்தமை, சமூக பொருளாதா கலாசார மாற்றத்திற்கு காரணமாய் இருந்தமை.
  - இடை வலயத்தில் இறப்பர் செய்கையும், கரையோரப்பிரதேசத்தில் தென்னையும் பயிரிடப்பட்டமை.
  - தலைநகரத்தில் இருந்து தூரத்தில் அமைந்திருந்தமையால் மத்திய மலைநாடு இலங்கையின் சுதந்திரப் போராட்டங்களின் மத்திய நிலையமாகத் திகழ்ந்தமை.
    உ-ம்:
    - 1818 ஊவாவெல்லஸ்ஸ சுதந்திர போராட்டம்
    - 1848 மாத்தளை சுதந்திரப் போராட்டம்.



***மினிப்பே அணைக்கட்டு***

- துறைமுகங்கள்
    - தீவைச் சுற்றி அமைந்திருந்த துறைமுகங்கள்:

      உம்:

      புராதன காலத்தில்: மகாதித்த, கோகண்ண, கொடவாய, ஜம்புகோளப்பட்டினம், ஊராதோட்டை, தேவநகரம்

      நவீன காலத்தில்: காலி, கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை
    - முதலாவது ஆரியக் குடியேற்றங்கள்:

      உம்: பத்தகச்சாயனாவின் குழுவினர் கோகண்ண துறைமுகத்தை வந்தடைதல்.





இலங்கையின் மத்திய மலைநாடு



மத்திய மலைநாட்டில் பெருந்தோட்டப் பயிர்செய்கை

- தென்னிந்திய ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டமை.
  உ.ம்: மகாதித்தையினூடாக பல்வேறு ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டமை.
- வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டமை: இந்தியா, பர்மா, சீனா, அரேபியா, எகிப்து, உரோம், கிரேக்கம்
- சிங்கள அரசர்கள் படையுதவிகள் பெற்றுக்கொண்டமை
- இந்தியாவுடனான கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டமை
  உ.ம்: கஜபாகு மன்னன் பத்தினி வழிபாட்டைக் கொண்டுவந்தமை.
- மத்திய காலத்தில் வர்த்தகம் விருத்தியுற்ற முக்கிய துறைமுகங்கள்.
  உ.ம்: கொழும்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி
- ஐரோப்பியரின் வருகையில் இலங்கையின் இயற்கைத் துறைமுகங்களின் செல்வாக்கு
  உ.ம்: பிரித்தானியரின் வசமிருந்த பெரிய இயற்கைத் துறைமுகம் பாதுகாப்பான ஒன்றாகத் திகழ்ந்தமை.




***திருகோணமலைத் துறைமுகம்***

**கணிப்பீடும் மதிப்பீடும் : 1**

1. இலங்கையின் வரலாற்றைத் தீர்மானித்த காரணிகளுள் புவியியற் காரணிகள் பற்றிக் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் கலந்துரையாடுக.
    I. இந்தியாவின்அருகாமையில் அமைந்திருந்தமை
    II. இந்தியாவிலிருந்து பிரிந்து அமைந்திருந்தமை.
    III. மத்தியில் மலைநாடு அமைந்திருந்தமை.
    IV. துறைமுகங்கள் காணப்பட்டமை.
2. இலங்கைப் படம் ஒன்றில் கீழ்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக:
   மத்திய மலைநாடு, சிவனொளிபாதமலை, மிஹிந்தலை, ரிடிகலை, திம்புலாகல, அத்துகல்புர, கோவிந்தமலை, சீகிரிய, யாப்பாஹுவ.
3. இலங்கைப்படம் ஒன்றில் கீழ்வரும் நதிகளைக் குறித்துப் பெயரிடுக:
   மல்வத்து ஓயா, கலா ஓயா, தெதுறு ஓயா, களனி கங்கை, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை, கும்புகன் ஓயா, கல்ஓயா, மஹாவலி கங்கை.
4. இலங்கைப்படமொன்றில் கீழே தரப்பட்டுள்ள துறைமுகங்களைக் குறித்துப் பெயரிடுக.
   ஜம்புகோளபட்டணம், ஊராதோட்டை, மகாதித்த, கோகண்ண, கற்பிட்டி, கொழும்பு, காலதித்த, காலி, மாத்தளை, தேவநகரம், கொடவாய, மட்டக்களப்பு.

**தேர்ச்சி மட்டம் 2.2** : புவியியல் அமைப்பானது இலங்கை வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- இலங்கையில் நிலவும் காலநிலைக்காரணிகளைக் குறிப்பிடுவார்.
- காலநிலைக் காரணிகள், வரலாற்றின் மீது தாக்கம் செலுத்திய விதத்தை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2.2 காலநிலைக் காரணிகள்**

- இலங்கை ஆசியாக் கண்டத்திலுள்ள வெப்ப வலய நாடாகும்
- இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைப்பது பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களாலாகும்
- பருவக்காற்றுகள் இரண்டும் கிடைக்கும் காலம் பற்றிய விளக்கம்: தென்மேல் பருவக்காற்று மே – செப்டெம்பர் , வடகீழ் பருவக்காற்று டிசம்பர் - பெப்ரவரி
- மேற்காவுகையும் சூறாவளியும் மழை தரும் இன்னும் இரு முறைகளாகும்.
- பருவகாற்றை அடிப்படையாகக் கொண்டே இலங்கை இருகாலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஈரவலயம், உலர்வலயம் என்பனவே அவையாகும்.
- காலநிலைக்காரணி வரலாற்றில் கொண்டுள்ள செல்வாக்கு
    - பருவக்காற்றை ஆதாரமாக்க கொண்ட பிரயாணங்களை மேற்கொள்ளல். ஆக்கிரமிப்பாளர்கள், வியாபாரிகள் பிரயாணிகளின் கடற்போக்குவரத்து இடம்பெறல்.
    - உலர்வலயத்திற்கு மழைவீழ்ச்சியைக் கொடுக்கும், வடகீழ் பருவபெயர்ச்சிக் காற்றை அடிப்படையாக வைத்தே நீர்பாசன நாகரீகமும் விவசாய வாழ்க்கை முறையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை.
    - ஈரவலயக்காலநிலைக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டே விவசாய வாழ்க்கை முறை மாற்றமுற்றமை.
      உ-ம்: இலங்கையர் மேலதிகமாக உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தமை.
    - வெப்ப வலயக் காலநிலையை அடிப்படையாகக்கொண்ட இலங்கையில் விளைந்த பயிர்களைத் தேடி ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வருகை தரல்.
      உ-ம்: கறுவா

- ஐரோப்பியரால் இந்நாட்டிற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பயிர்கள்.
  உ-ம்: ஒல்லாந்தரால் கோப்பி, ரம்புட்டான், தூரியன், மெங்குஸ், கடுகுடா
- பிரித்தானியர் ஈரவலயப் பிரதேசத்திற்குப் பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகப்படுத்தியமை.
  உ-ம்: தேயிலை, இறப்பர், கொக்கோ, சிங்கோனா



***சிங்கோனா***

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. இலங்கையின் வரலாற்றை நிர்ணயிப்பதில் காலநிலைக் காரணிகள் கொண்டுள்ள செல்வாக்கை உதாரணங்களின் மூலம் விளக்குக.
2. கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளின் படி இலங்கைப் படம் ஒன்றில் குறிக்க.
   a. மத்திய மலைநாட்டையும், நதிகளையும் கொண்ட இலங்கைப்படம் ஒன்றை பிரதிசெய்க.
   b. தென்மேல், வடகீழ்பருவக்காற்றுகள் வீசும் திசையைக் கீறிக் காண்பிக்க.
   c. 2000 மி.மீ. மழைவீழ்ச்சிக் கோட்டை வரைந்து காண்பிக்க.
   d. தென்மேல் பருவக்காற்றின் போது காற்றின் செயற்பாட்டை வரைந்துக் காண்பிக்க.
   e. இதற்கமைய உலர், ஈரவலயங்களைப் பெயரிட்டுக் காண்பிக்க.
   f. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் தலைநகர்களை அதில் குறித்துக் காட்டுக.
      1. அநுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனிய, யாப்பஹுவ, குருணாகலை, கம்பளை, கோட்டை, கண்டி.

# 3. மூலாதாரங்களைப் பரீட்சித்தல்

ஒரு நாட்டின் வரலாற்றைச் சரியாகப்புரிந்து கொள்வதற்கு இன்று எஞ்சியிருக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட மூலாதாரங்களைப்பற்றித் தெளிவு பெற்றுக்கொள்ளுதல் அத்தியவசியமாகும். இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு ஆதாரமாக உள்ள மூலாதாரங்கள் இருவகைப்படும். அவை: இலக்கிய, தொல்பொருள் மூலாதாரங்கள் என வகைப்படுத்தப்படும். பொதுவாக நோக்குகையில் இலக்கிய மூலாதாரத்தை, நாட்டின் வரலாற்றைத் தொடராக எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறிருந்தாலும் வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்ற காலங்களுக்கிடையில் பெரும் இடைவெளி நிலவுகிறது. அத்துடன் இலக்கிய மூலாதாரங்களை எழுதும் போது அதன் ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகள், அவர்கள் வாழ்ந்த சுற்றாடற் காரணிகள் போன்றவையும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இவ்வாறான காரணிகளால் அவற்றின் உள்ளடக்கம் வரலாற்றுக் கருப்பொருளைச் சுற்றி பல்வேறு காரணிகளின் செல்வாக்கு இருப்பதை விளங்கிக் கொள்ள முடியுமாயுள்ளது. ஆகையால் தொல்பொருள்கள் நம்பகமான மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | மூலாதாரங்களைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் கட்டியெழுப்பப்படும் அறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவார். |
| **தேர்ச்சி மட்டம் 3.1** | : | வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் மூலாதாரங்கள் தொடர்பாகப் பரீட்ச்சித்துப் பார்ப்பார். |
| **பாடவேளைகள்** | : | 10 |
| **கற்றற்பேறுகள்** | : | |


- வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்யும் மூலாதாரங்களைப் பெயர் குறிப்பார்.
- மூலாதாரங்களின் வகைக்கேற்ப அவற்றை வகைப்படுத்துவர்.
- மூலாதாரங்களின் வகைக்கேற்ப வரலாற்றுக் காரணிகளை கட்டியெழுப்பக்கூடிய விதத்தை விளக்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

## 3.1 இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

- மூலாதாரங்களை வகைப்படுத்தல்
  - இலக்கிய மூலாதாரங்கள்
  - தொல்பொருள் மூலாதாரங்கள்
  - ஆவணங்கள்
  - நாணயங்கள்




**உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்**

- வம்சக் கதைகள்
  - ஒரு நாட்டின், நபர்களினதோ, பொருட்களினதோ, பரம்பரைக் கதைகளை விவரிக்கும் கிரந்தங்கள் வம்சக் கதைகள் எனப்படுகின்றன.
  - வம்சக் கதைகள் இலங்கையின் பழைய இலக்கிய எழுத்து சம்பிரதாயத்தைச் சேர்ந்தவை.
  - தற்போது எஞ்சியிருக்கும் வம்சக் கதைகள், அவை எழுதப்பட்ட மொழிகளின் மரபுகள் என்பவற்றை அவதானிக்கையில் இருவகைப்படும்.
  - இலங்கையின் வரலாற்றுக் கதைகளை விரிவாக எழுதிச் செல்லும் மகாவம்சம், இலங்கையின் வரலாற்று மூலாதாரங்களுள் பிரதானமானதாகும். அவை பல்வேறு பகுதிகளைக் கொண்டதாகும்.

- சிங்கள வம்சக் கதைகள்.

  உ-ம்: பூஜாவலிய, சிங்கள, தூபவம்சம், சிங்கள போதிவம்சம், தலதா சிரித, ராஜாவலிய

| பகுதிகள் | காலகட்டங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| மகாவம்சத்தின் முதலாவது பகுதி | வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து மகாசேன னின் ஆட்சி முடியும் வரை: 36 ஆம் அத்தியாயத்தில் 50 ஆவது கவிதைவரை. | திகசந்த செனவியா பிரிவெனாவில் வாழ்ந்த மகாநாம தேரர். |
| மகாவம்சத்தின் இரண்டாம் பாகத்தின் முதலாவது பகுதி. | கி.மு. 302 - 1186 வரை 37 ஆவது அத்தியாயத்தில் 51 ஆவது கவிதையிலிருந்து 79 ஆவது அத்தியாயம் வரை. | தம்பதெனியாவில் வாழ்ந்த தர்மகீர்த்தி தேரர் என்று கருதப்படுகின்றது. |
| அப்பிரிவின் இரண்டாவது பகுதி. | கி.பி. 1186 - 1357 வரை 80 ஆவது அத்தியாயத்தில் இருந்து 91 ஆவது அத்தியாயம் வரை. | ஆசிரியர் பற்றி நிச்சய மில்லை |
| அப்பிரிவின் மூன்றாவது பகுதி. | கி.பி.1357 - 1815 வரை 92 ஆவது அத்தியாயத்தில் இருந்து 101 ஆவது அத்தியாயம் வரை. | திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த புத்த ரக்கித தேரர் எனக் கருதப்படுகிறது. |
| மகாவம்சத்தின் மூன்றாவது பகுதி | 1815 - 1935 வரை 102 ஆவது அத்தியாயத்தில் இருந்து 114 ஆவது அத்தியாயம் வரை. | யகிரல பஞ்ஞானந்த தேரர் |
| மகாவம்சத்தின் நான்காவது பகுதி | 1936 - 1956 வரை 115 ஆவது அத்தியாயத்தில் இருந்து 124 ஆவது அத்தியாயம் வரை. | பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர தலைமையிலான குழுவினரால் |
| மகாவம்சத்தின் ஐந்தாவது பகுதி | 1956 - 1978 வரை 125 ஆவது அத்தியாயத்தில் இருந்து 129 ஆவது அத்தியாயம் வரை. | பேல்லன ஸ்ரீ ஞான விமல தேரரின் தலைமையிலான குழுவினரால். |
| மகாவம்சத்தின் ஆறாவது பகுதி | 1978 - 2010 வரை 130 ஆவது அத்தியாயத்தில் இருந்து 133 ஆவது அத்தியாயம் வரை. | தயாரிக்கப்பட்டுக் கொண்டி ருக்கின்றது. |

- **அட்டுவாக்கள்**
  - அட்டகதா அல்லது அட்டுவா என்பது திரிபிடக கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விரிவுரைகளைக் கொண்ட பல நூல்கள்
  - அட்டகதாக்கள் முதலில் எழுதப்பட்டது சிங்கள மொழியிலாகும். (சீஹளட்டகதா) பின்னர் தேவைக்கேற்ப திருத்தங்களுடன் பாளிக்கு மொழிபெயர்க்கப்பட்டவை.
  - கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த புத்த கோஸ தேரரினால் முதலில் சிஹளட்டகதா, பாளியில் மொழிபெயர்க்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.
    உ-ம்: சமந்தபாஸாதிகா, சம்மோஹவினோதனி, சாராந்த தீபனி, மனோரதபூரணி
  - தம்மபால தேரர், உபஸேன தேரர் என்போரும் அட்டுவாக்களை எழுதிய ஆசிரியர்களாவர்
  - சமய நூல்கள்
    - பனகதா வடிவில் விடயங்களை விளக்குவதற்காக எழுதப்பட்ட நூல்களின் தொகுதி
      உ-ம்: சீஹலவத்து, ரசவாஹினீ, சத்தர்மாலங்காரய
    - ஏனைய இலக்கியங்கள்
      உ-ம்: சரிதைகள், தூதுகாவியங்கள், போர்க்காவியங்கள்

**வெளிநாட்டு மூலாதாரங்கள்**

இலங்கைக்கு வந்த வெளிநாட்டினராலும் இலங்கையைப் பற்றிக் கேட்டறிந்துகொண்ட வெளிநாட்டினராலும் எழுதப்பட்ட நூல்கள், அறிக்கைகள், நாட்குறிப்புகள், படங்கள் என்பவை வெளிநாட்டு மூலாதாரங்களாகும்.

- கிரேக்க, உரோம மூலாதாரங்கள்
  - அரிஸ்டோட்டல் - டீமுண்டோ
  - மெகஸ்தனிஸ் - இன்டிகா
  - தொலமி – பூகோள சாஸ்திர பிரவேசம்
  - கொஸ்மஸ் இன்டிகோப்லேவூஸ்டஸ் - டெபோ கிராபியா கிறிஸ்டியானா
  - பிளினி - நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா.

- அராபிய மூலாதாரங்கள்
  - சுலைமான்
  - அபூ செய்யீத் - சில் சிலாத் அல் தவாரிஹ்
  - அல் புரூனி, மசூதி, பு்ர்தாத்பே ஆகிய எழுத்தாளர்களின் அறிக்கைகள்

.

- சீன மூலாதாரங்கள்
  - பாஹியன் தேரரின் அறிக்கைகள் - கி.பி. 5ஆம் நூற்றாண்டு

- இந்திய மூலாதாரங்கள்
    - இராமாயணத்தின் இலங்கை காண்படலம்
    - மகாபாரதம், ராஜதரங்கணி, திவ்யபிரபந்தம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பட்டினப்பாலை.

- ஐரோப்பிய மூலாதாரங்கள்
    - கிழக்கிந்திய நாடுகளைத் தெரிந்துக்கொள்வதில் ஈடுபட்ட புராதன ஐரோப்பிய பிரயாணிகள், கிறிஸ்தவ சமய குருமார் என்போர் இலங்கை பற்றிய தகவல்களை சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

      உ-ம்: மார்க்கோ போலோ, ஜோன் டீ மாரி ஞோலி
    - போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானியர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள்

      உ-ம்: ரிபெய்ரோ - இலங்கை வரலாறு<br>
      குவேரோஸ் - இலங்கை அரசு<br>
      பேஸ்தியஸ் - இலங்கையின் பிரதான செய்திகள்<br>
      தகுடோ, வெலன்டைன் போன்ற எழுத்தாளர்கள்
    - போர்துக்கேயரும் ஒல்லாந்தரும், தயாரித்த தோம்பு எனும் பதிவேடுகள்.
    - ஆங்கில எழுத்தாளர்கள்: ரொபட்நொக்ஸ், மேஜர் டேவி, எமர்ஸன் டெனன்ட், ஜோன் டொயிலி.

- தென் கிழக்காசிய மூலாதாரங்கள்
    - ஜின காலமாலி - ரதன பஞ்ஞ தேரர், சியம் (தாய்லாலாந்து) யசவன்ஜோ எனும் பர்மிய வம்சக்கதைகளில் இலங்கை, இந்திய பௌத்த சாசன வரலாறு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- தொல்பொருள் மூலாதாரங்கள்
    - புராதான சமூகத்தின் நாகரிகத்திற்குச் சொந்தமான எஞ்சியிருக்கும் அடையாளங்கள் தொல்பொருள் மூலாதாரங்களுள் உள்ளடங்கும்.

**தொல்பொருட் சிதைவுகள்**

**சமயசார்பானவை**

**கட்டடங்கள்**
- தாதுகோபங்கள்
- ஆராமைகள்
- போதி மனைகள்
- தானசாலைகள்

**கட்டிட உபபகுதிகள்**
- சந்திர வட்டக்கல்
- காவற்கல்
- கொரவக்கல்
- நுழைவாயில்

**வேறு கலை நிர்மாணங்கள்**
- சித்திரம்
- சிற்பம்
- செதுக்கல்

**சமய சார்பற்றவை**
- குளங்கள்
- நீர்பாசன நிர்மாணங்கள்
- அரண்மனைகள்
- பூங்காவனங்கள்
- தடாகங்கள்
- அரசசபை மண்டபங்கள்
- வைத்தியசாலைகள்
- பாலங்கள்
- அம்பலங்கள்
- கோட்டைகள்.

**ஆவணங்கள்**
- கல்வெட்டுக்கள்
- பொற்சாசனங்கள்
- செப்பேடுகள்
- ஓலைச்சுவடிகள்
- களிமண் சுவர், பலகை போன்ற பல்வேறு பொருட்களில் எழுதப்பட்டுள்ள பழைய ஆவணங்கள்

**கல்வெட்டுக்கள்.**


கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டிருக்கும் கற்களின் வடிவிற் கேற்ப அவை: குகை, குன்று, சுவர், தூண், கல்வெட்டுக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.



***மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு***

**நாணயங்கள்**

- உள்நாட்டு நாணயங்கள்
    - அநுராதபுரத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கையில் நாணயப் பாவனை இருந்து வந்துள்ளது. இந்நாட்டில் கிடைக்கப்பெற்ற புராதன நாணயம் கஹபண எனப்படுகின்றது. உ-ம்: யானை, சுவெஸ்திகா, இலட்சுமி, சிங்க உருவ நாணயங்களும், தங்கத்தாலான கஹபண நாணயமும்.
    - இந்நாட்டிற்குத் தேவையான நாணயங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்ப்புகளும் கிடைக்கப்பெற்றுள்ளமை.
    - இங்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நாணயங்கள்
      உ-ம்: உரோம, சீன, அராபிய, இந்திய நாணயங்கள்




***இலங்கையின் பண்டைய நாணயங்கள்***



***பண்டைய உரோம நாணயங்கள்***

**நாட்டார் கதைகளும் பரம்பரைக் கதைகளும்**

- சம்பிரதாயபூர்வமாக மக்களிடையே புழக்கத்திலுள்ள வரலாற்று ரீதியான விடயங்களும், அவை தொடர்பான கதைகளும் நாட்டார் கதைகள், பரம்பரைக் கதைகள் எனப்படுகின்றது.
- நாட்டார் கதைகளும் பரம்பரைக் கதைகளும் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையானவையாகும்.
- நாட்டார் கதைகள் பரம்பரைக் கதைகளும் பயன்படுத்தப்படுவது.
    - வரலாற்றில் உறுதிப்படுத்தப்படாத ஒரு விடயத்தின்படி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவாகும்.
    - கதை ஒன்றைப்பற்றியோ சம்பவம் ஒன்றைப்பற்றியோ விமர்சன ரீதியாக ஆராய்ந்து பார்த்தலுக்காகும்.
    - நபரொருவரைப்பற்றிய சம்பவம், இடம், பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவாகும்.
    - ஆட்சியாளர்களின் ஆளுமை பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்காகவாகும்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : மூலாதாரப் பகுப்பாய்வு மூலம் வரலாற்று விடயங்கள் கட்டியெழுப்பப்படும் விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற்பேறுகள்** :

- வரலாற்று மூலாதாரங்களை விமர்சன ரீதியாகப் பரிசீலிப்பார்.
- மூலாதாரங்களைக் கையாளும்போது கவனிக்க வேண்டிய விடயங்களைத் தெரிந்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**3.2** மூலாதாரங்களை உள்நாட்டு, வெளிநாட்டு மூலாதாரங்கள் என இரண்டாக வகைப்படுத்தலாம்.

உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களின் கீழ் வம்சக்கதைகள், இலங்கை வரலாற்றைக் கற்பதில் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

**தீபவம்சம்**

- இன்று வரை எஞ்சியிருக்கும் இலங்கையின் புராதன வம்சக்கதை தீபவம்சமாகும். இது பாளி மொழியில் எழுதப்பட்டுள்ளது.
- கி.பி. 4 - 5 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதாக கருதப்படுகின்றது.
- புத்தர் பெருமானின் வாழ்க்கையின் சில சம்பவங்களும் அவரது இலங்கை வருகையும் விவரிக்கப்பட்ட பின்னர் விஜயனிலிருந்து மகாசேன மன்னனின் ஆட்சியின் முடிவு வரை இலங்கையின் ஏகப்பட்ட வரலாற்று விடயங்களைத் தன்னுள் கொண்டுள்ளது.
- தீபவம்சம், மகாவம்சத்தைவிடச் சிறிய நூலாக இருந்தாலும் இதிலுள்ள சில விடயங்கள் மகாவம்சத்தில் காணக்கிடைக்கவில்லை.
- தீபவம்சத்தின் உள்ளடக்கத்தின் சாராம்சமாவது:
  - ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச பரம்பரை
  - புத்தரின் சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்களும், அன்னாரது இலங்கை வருகையும்
- இலங்கையின் ஆரியர்களின் ஆரம்பக் குடியிருப்புகள் நிறுவப்படல்.
- பண்டுகாபயனது கதை
- இலங்கைக்கு பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்படல்.
- மகாசேன மன்னனின் காலம் வரையிலான அரசர்கள் பற்றிய தகவல்கள்.

**மகாவம்சம்**

- மகாவம்சம் இன்றுவரைக்கும் விரிவாக எழுதப்படுகின்ற நூலாகும். அதில் இந்நாட்டின் முழுமையான வரலாறு எழுதப்பட்டுள்ளது. ஆகையால் அது விரிவானதொரு படைப்பாகும். மகாவம்சத்தில் முதலாவது தொகுதி 37 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் மகாவிகாரையின் திக்சந்த செனவியா பிரிவொனாவைச் சேர்ந்த மகாநாம தேரர் எனக்கருதப்படுகின்றது.
- இது கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- மகாசேனனின் ஆட்சியில் இறுதிக்காலம் வரையிலான இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு மகாவம்சத்தின் முக்கியத்துவம்.
  - மகாவம்சத்தின் ஆரம்பப் பகுதியை எழுதுகையில் வேறு நூல்களையும், நாட்டார் கதைகளையும் மூலாதாரமாகக் கொண்டுள்ளார்.

    உ-ம்: தீபவம்சம். சிஹலட்டகதா, மகாவம்சம், வினய அட்டகதா, உத்தரவிஹார அட்டகதா.
  - மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள அரசியல் விடயங்களாவன:
    - மகாசேன மன்னன் வரையிலான அரசவம்சத்தின் ஆட்சி பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளமை.
    - அந்நிய ஆக்கிரமிப்புகளிலிருந்து மக்களைக் காப்பாற்றிய அரசர்களின் விடயங்கள் கூறப்பட்டுள்ளமை.
    - விவசாய நடவடிக்கைகளுக்குப் பெருந்தொண்டாற்றிய மன்னர்களைப் பற்றிய விடயங்கள்.
    - புத்த சாசனத்தின் முன்னேற்றத்திற்காக மன்னர்கள் புரிந்த தொண்டுகள்.
    - பொதுமக்களுடைய நலன்களில் ஆட்சியாளர்களின் செயற்பாடுகள்.

- **சமய விடயங்கள்.**
  - மகாவம்சம் சமயத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ளது.
  - புத்தர் பெருமானின் இலங்கை வருகையிலிருந்து மகாசேன மன்னனின் இறுதிக்காலம் வரை மகாவிகாரையை மையாகக் கொண்டு சமய வரலாற்றையும் மகாவிகாரைக்கு உதவி புரிந்த ஆட்சியாளர்களையும் அவர்களால் புரியப்பட்ட சேவைகளையும் விவரித்துள்ளது.
  - மகாவிகாரையின் சாதனைகளைப் பற்றிய அதிக தகவல்கள் இடம் பெற்றுள்ளமையால் மகாவம்சம் மகாகவிகாரையின் வம்சக்கதை என்று ஒரு பகுதியினர் கூறுகின்றனர்.
  - அபயகிரி, ஜேதவன மற்றும் சமயப்பிரவினர் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

- **சமூக, கலாசார விடயங்கள்.**
  - இலங்கையில் வாழ்ந்த பல்வேறு சமயப்பிரிவுகள், தொழிற்குழுவினர், வைபவங்கள், உட்பட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளமை.
  - திருமணத் தொடர்புகள், உணவுபானங்கள், ஆடையணிகள் சம்பந்தப்பட்ட விடயங்களும், உள்ளடங்கும்.

- **பொருளியல் விடயங்கள்.**
  - விவசாய நடவடிக்கைகள், நீர்ப்பாசன நடவடிக்கைகள், வர்த்தகம், தொழில் உட்பட பொருளியல் விடயங்கள்.

- **தொழினுட்பம்:**
  - நீர்ப்பாசனம், கட்டடம், சிலைகளை வடித்தல், தாதுகோபங்களைக் கட்டல், பாதை, பாலங்களை நிர்மாணித்தல் போன்ற பல்வேறு விடயங்களில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

- மகாவம்சம் குறிப்பிடும் விடயங்கள், ஏனைய மூலாதாரங்களிலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை.
- சமயப் பின்னணியைக் கொண்டு மகாவம்சம் எழுதப்பட்டாலும் அதில் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார விடயங்கள் நிறையவே உள்ளடங்கியுள்ளன.
- சமய, கலாசார விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டமை.
  - மகிந்தருடைய வருகை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை. இந்தியாவின் சாஞ்சி தூபியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் பெறப்பட்ட எழுத்தாவணங்களில் சமயத் தூபியில் சம்பந்தப்பட்ட குருமார்களது பெயர்கள் பலவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை. (கஸ்ஸப்பகோத்த, மஜ்ஜிம, துன்துஹிஸ்ஸா) அத்தோடு அசோக மன்னனின் 2ஆம், 13ஆம் தூண் கல்வெட்டுகளில் தர்மத்தை பிரசாரப்படுத்திய இடங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
  - அதே போன்று மிஹிந்தலையிலும் ரஜகலையிலும் உள்ள கல்வெட்டுகளில், மஹிந்த, இத்திய, உத்திய, வர்த்தசால எனும் குருமாரின் வரலாற்றை உறுதிப்படுத்தியுள்ளமை.
  - சங்கமித்தை பிக்குணியின் வருகையும் பிக்குணிசாசனம் உருவாக்கப்பட்டமையும், புனித வெள்ளரசு மரம் நடப்பட்டமை தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளமை.
  - வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்கள் தொல்பொருள் அகழ்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.

    உ-ம்: ருவன்வெலிசாய, அபயகிரி, ஜேதவன, மிரிசவெட்டிய, மிஹிந்தலை, இசுறுமுனி

- **அரசியல், பொருளாதாரத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.**
    - மன்னர்கள், இளவரசர்கள், பிராந்திய அரசர்கள் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை.
    - உத்திய மன்னன் - மிஹிந்தலைக் குகைக்கல்வெட்டு
    - சத்தாதிஸ்ஸ, லஞ்சதிஸ்ஸ – ரஜகல கல்வெட்டு
    - மகாசூலி, மகாநாம, குட்டகண்ணதிஸ்ஸ, மகாதாத்திக, மகாராக – மகாரத்மலே கல்வெட்டு
    - வசப மன்னரும் அவனுடைய புதல்வர்களும் - வல்லிபுரம் பொற்சாசனம், பெரிமியன் குளம், ஹெபெஸ்ஸ, தம்மென்னாகந்த கல்வெட்டுகள்.
    - புத்த பாரிந்த மன்னன் பௌத்தத்தைத் தழுவியது பற்றிய ருவன் வெலிசாய கல்வெட்டு
    - திரிதர மன்னன் - கதிர்காமக் கல்வெட்டு
    - குமாரதாச மன்னன் - நாகரிகந்த கல்வெட்டு
    - IV ஆம் மஹிந்த மன்னன் - மிஹிந்தலை சுவர்க்கல்வெட்டு
    - அமைச்சர்கள், அரச உத்தியோகத்தர்கள்.
        - அமைச்சர்கள் - பரமாகந்த கல்வெட்டு
        - பொருளாளர் - மிஹிந்தலைக் கல்வெட்டு
        - கணக்காளர் - மஹஎலகமுவ, கல்வெட்டு
        - சேனாதிபதிகள் - (பத்துமாமல்லர்கள்) வெல் எல்லு கொடத்த, மஹஎலகலமுவ, சிதுல்பவ்வ, கல்வெட்டுக்கள்
        - இளவரசர்கள் - ஹெபெஸ்ஸ கல்வெட்டு

- **பொருளியல் சார்ந்த நடவடிக்கைகள் உறுதிப்படல்.**
    - வர்த்தகத் தரங்கள் - செஸ்சேறுவ கல்வெட்டு
    - வர்த்தகர்கள் - செஸ்சேறுவ கல்வெட்டு
    - வரி வகைகள் - கொடவாய கல்வெட்டு
    - சந்தைகள், வர்த்தக சட்டத்திட்டங்கள் - ஹோபிடிகம (பதுளை) கொடவாய, ஹெபெஸ்ஸ, திம்பிரிவெல கல்வெட்டுக்கள்.
    - மகாதித்த அகழ்வுகளின் போது வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் கிடைக்கப்பெற்றமை.

- **தொழினுட்ப விடயங்கள் உறுதிப்படுத்தப்படல்:**
    - ருவன்வெலிசாய, லோவாமகாபாய போன்றவை கட்டப்பட்ட விதம் பற்றிய விவரம்.

- **சமூக விடயங்கள் உறுதிப்படுத்தப்படல்.**
    - சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு குலத்தவர், மக்கள் குழுவினர், பற்றிய விடயங்கள் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- சமூகத்தில் பல்வேறுப்பட்ட தொழில் பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றமை.
  உம்: செப்புக் கொல்லர்கள், நெசவாளர்கள், வைத்தியர்கள் பற்றிய தொழில் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றமை.

- **மூலாதாரம் ஒன்றென்ற முறையில் மகாவம்சத்தின் குறைபாடுகள்:**
  - சமய வரலாற்றிற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளமையால், அரசியல் விடயங்கள் போதியளவில் இடம்பெறாமை.
  - இந்தியாவின் பௌத்த விடயங்களுக்கான வரலாற்றிற்கு முதல் 5 அத்தியாயங்களும் ஒதுக்கப்பட்டுள்ளமை.
  - ஆசிரியரின் தனிப்பட்ட எண்ணங்கள், விருப்பு வெறுப்புகள் என்பவற்றிற்கமைய சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமையால் சில இடங்களில் நடுநிலைமை பேணப்பட்டிராமை
  - ஆசிரியரின் ஒரு நோக்காக அமைந்தது மகாவம்சத்திற்கு மூலாதாரமான படைப்புகளில் காணப்பட்ட விவரமான விடயங்களை உள்வாங்குதலாகும். அதனால் சில முக்கியமான விடயங்கள் விடுபட்டு போயுள்ளமை.
  - அநுராதபுரத்திற்கு சமகாலத்தில் காணப்பட்ட பிராந்திய அரசுகள் பற்றிய விடயங்கள் போதியளவில் இடம்பெறாமை.
  - மஹாவிகாரைக்குச் சார்பாக நடந்துக்கொண்ட தேவனம்பியதிஸ்ஸ, துட்டகைமுனு, குட்டகண்ணதிஸ்ஸ போன்ற மன்னர்களைப் பெரும் விருப்புடன் வர்ணிக்கையில் மகா விகாரையுடன் முரண்பட்ட மகாசேனன் போன்ற மன்னர்களைப் புறக்கணிப்புடன் குறிப்பிட்டுள்ளமை.
  - துட்டகைமுனுவின் வாழ்வையும், சாதனைகளையும் வர்ணிப்பதற்கு 37 அதிகாரங்களுள் பதினொன்றை ஒதுக்கியிருப்பதோடு, துட்டகைமுனுவின் வரலாற்றை முற்படுத்துவதற்காக காவந்ததிஸ்ஸ போன்ற மன்னர்களின் முக்கியத்துவம் இருட்டடிப்புச் செய்யப் பட்டுள்ளமை.
  - முக்கியத்துவமற்ற செய்திகளும், வர்ணனைகளும் இடம்பெற்றுள்ளன.

**தொல்பொருள் மூலாதாரங்கள்.**

**ஆவணங்கள்**

- கல்வெட்டுகள், பொற்பத்திரங்கள், செப்பேடுகள், தகடுகள், சுவர், மரம், பல்வேறு பாத்திரங்கள் என்பவற்றில் எழுதப்பட்டவை ஆவணங்கள் எனப்படும்.
- கல்வெட்டுகள் பல்வேறு வகைப்படும். குகை, குன்று, சுவர், தூண் கல்வெட்டுகள் என அவற்றை வகைப்படுத்தலாம்.
- ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் பிராமிய (பிராகிருத) எழுத்துக்களால் ஆனது. குருமாருக்கு குகைகளைத் தானமளித்தல் தொடர்பாகவே அவற்றில் பெரும்பாலானவை எழுதப்பட்டிருந்தன.

- கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பின்னரே விவரமான கல்வெட்டுகள் எழுதப்படத் தொடங்கின. விகாரைகள், ஆராமைகளுக்கு நிலபுலன்களை வழங்குதல் ஆராமைகளின் நிர்வாகம். அரச சட்டங்களை மக்களுக்கு அறியப்படுத்தல், வரிவசூலித்தல், வர்த்தகம், குற்றவாளிகளை மன்னித்தல், ஒருவருடைய சேவை நலனைப் பாராட்டுதல் போன்ற பல்வேறு விடயங்களைக் குறித்து வைப்பதற்குக் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. தற்போது கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் புராதானமானதாக அறியப்பட்டுள்ளது உத்திய மன்னனுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மிஹிந்தலை சுவர்க் கல்வெட்டாகும்.

- **கல்வெட்டுக்களில் உள்ளடங்கியுள்ள விடயங்களின் முக்கியத்துவம்**
  - மஹாவம்சம் உட்பட ஏனைய இலக்கிய மூலாதாரங்களில் உள்ள விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதில் கல்வெட்டுக்கள் முக்கியமானதாகும்.

    உ.ம்: துட்டகைமுனு மன்னனது பத்து மாமல்லர்களைப்பற்றிக் கல்வெட்டுக்கள் உறுதிப் படுத்தியுள்ளன.
  - கொரவக்கல கல்வெட்டிலும் சித்துல்பவ்வ (தளபதி மித்ச, நந்திமித்த), வெல் எல்லுகொடகந்த கல்வெட்டு, சங்கபால விஹாரைக் கல்வெட்டு, (தளபதி, பசதேவ, புஸ்ஸ தேவ) இதற்கு மேலாக பல்லேபெத்த, எகொடபத்துவ கல்வெட்டுகளிலும் இவர்களைப் பற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
  - மஹிந்த தேரரின் வருகை கல்வெட்டுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
  - வம்சக்கதைகளில் கூறப்பட்டுள்ள அரசியல், நிர்வாகம், சம்பந்தப்பட்ட விடயங்கள், பொருளாதார, சமூக, கலாசார விடங்கள் பெருமளவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
  - வம்சக் கதைகளில் கூறப்படாத தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றைப் பிரதி செய்யும்போது ஏற்பட்ட தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கும் கல்வெட்டுக்கள் முக்கியத்துவமானவையாகும்.

    உ.ம்: இளவரசர்கள், பிராந்திய அரசர்கள் பற்றியவை (குசலானகந்த, ஹென்னன்னேகல, யம்பரகல, யட்டஹலென போன்ற கல்வெட்டுகள்)
  - கதுறுவெல கல்வெட்டில் அமைச்சர் பரம்பரை ஐந்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளமை
  - விஹாரைகளின் நிர்வாகம் பற்றிய விடயங்கள் (மிஹிந்தலை சுவர்க் கல்வெட்டு, களுதியபொக்குண கல்வெட்டு)
  - வசப மன்னனின் இரு புதல்வர்களான உதர (ஹெபஸ்ஸ கல்வெட்டு, துடக (கம்மென்னாகந்த கல்வெட்டு) என்போர் மகாராஜா பட்டத்துடன் ஆட்சிபுரிந்தமை.
  - இலக்கிய மூலாதாரங்களில் வெளிப்படாத கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் நிலவிய பிரதேச நிர்வாக அலகுகள் பல பற்றிய தகவல்கள் கல்வெட்டில் கிடைக்கப் பெற்றுள்ளமை.

    உ.ம்: பம்பரகல, கோணவத்த, எம்புல் அம்பே, நெட்டுக்கந்த பெரியபுளியன்குளம், குசலானகந்த , சித்துல்பவ்வ
  - இலங்கையின் அரசாட்சியின் ஆரம்பம், இலக்கிய மூலாதாரங்களுள் இந்தியாவுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. என்றாலும் கல்வெட்டுகளில் இருந்து பெறப்படும்

தகவல்களின் மூலம் தெரியவருவது இலங்கையின் அரசாட்சி இலங்கையில் தோன்றி பரிணாமம் அடைந்தது என்பதாகும்.

உ-ம்: காமினி பருமக, மபுறுமுகா, ரஜ, மகாரஜ எனும் பெயர்களினாலாகும்.

- கல்வெட்டுகளின் பரவலுக்கு அமைவாக அரசின் பலம் பரவியிருந்த பிரதேசங்கள் பற்றித் தீர்மானிப்பது இலகுவாகும்.

  உ-ம்:

  - வசப மன்னனுடைய ஆவணங்கள் வல்லிபுரத்திலும் மட்டக்களப்பில் காசிமோட்டையிலும், தெற்கில் திஸ்ஸமகாராமையிலும், குருணாகலில் கலஉடையிலும், தம்மன்னாவையிலும், ஹெபஸ்ஸயிலும் கண்டறியப்பட்டதிலிருந்து அம்மன்னனுடைய ஆட்சி இலங்கை முழுவதும் பரவியிருந்தமை தெரிய வருகிறது.
  - இந்நாட்டில் நிலவிய உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாகவும் பொருளாதாரநிலை தொடர்பாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கல்வெட்டுகள் முக்கியத்துவமானவையாகும்.

    உ-ம்: தோணிகல கல்வெட்டு – நெல், பயறு, உளுந்து போன்ற தானிய வகைகள், தற்கால வங்கிகள் போன்ற தாபனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - லபு எட்டபெந்திகல கல்வெட்டு – வர்த்தக தரங்களும் அதன் செயற்பாடுகளும். ஹோபிடிகமுவ கல்வெட்டு – சந்தை ஒன்றின் பரிபாலனமும் அது தொடர்பான சட்டத்திட்டங்களும்.

- விவசாய நடவடிக்கைகளும் கைத்தொழில்களும் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளமை.

  உ-ம்: வெஸ்ஸகிரிய ஒவ்வொரு போகத்திற்கும் பயிரிடப்பட வேண்டிய தானிய வர்க்கங்கள் தொடர்பாக அரசனால் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது பற்றி ஆதாரங்கள் உள்ளமை. சிஹிநெட்டி (ஒருவகை நெல்) விதைப்பதல்லாது பயறு விதைக்கக் கூடாது.

- அநுராதபுரக்காலத்தில் குளங்கள், அணைக்கட்டுகளின் நிர்வாகம் தொடர்பான தாபனம் ஒன்று சம்பந்தமாக கல்வெட்டுகளில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை. அதேபோன்றே நீர்பாசனம் தொடர்பாக அறவிடப்பட்ட போஜகபதி, தகபதி, வரிகள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளமை.

- இலங்கையில் காணப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பாகவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

  உ-ம்: கொங்கல கல்வெட்டு - மணிகர (இரத்தினம் பட்டை தீட்டுவோர்)
  வேகிரிய - பஹுதமுல்ல கல்வெட்டு - குமுபகர (குயவர்கள்
  துலாதர (பொற்கொல்லர், கபர (கொல்லர்), தடிக (தந்த செதுக்கல்),
  பெஹுகர (நெசவாளர்) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை.

**நீதிமன்ற செயற்பாடுகள்.**

சித்துல்பவ்வ கல்வெட்டு – நீதிமன்றத்தால் விதிக்கப்படும். தண்டப் பணத்தை சித்துல்பவ்வ விகாரைக்கு தானமளித்தல்.

வேவெல்கெட்டிய கல்வெட்டு – கிராமத்தில் கடமையைப் புரிதல் தொடர்பான சட்டத்திட்டங்கள்.



***தோணிகல கல்வெட்டு***

**கணிப்பீடும் மதிப்பீடும் 1**

இலக்கம் 1 - 3 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதாவதொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருத்தபாடற்றது. அவ்வாறு பொருந்தாத பெயர் யாதென்று கண்டறிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

1. 1. சிலப்பதிகாரம் 2. பட்டினப்பாலை 3.பதிற்றுப்பத்து
4. திருவாலங்காடு 5.மணிமேகலை (..............)

2. 1. வல்லிபுரம் பொற்சாசனம் 2. பனாக்கடுவ செப்பேடு
3. கொண்டவட்டவான் கல்வெட்டு 4. அலஹாபாத் தூண் கல்வெட்டு
5. புளியன் குளம் தூண் கல்வெட்டு (..............)

3. 1. ஆர்ப்பாக்கம் கல்வெட்டு 2. பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு
3. திருவாலங்காடு கல்வெட்டு 4. சிதம்பரம் கல்வெட்டு
5. ராமேஸ்வரம் கல்வெட்டு (..............)

**4 – 5 ஆம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை எதிரிலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

4. I ஆம் பராக்கிரமபாகுவுக்கும் II ஆம் கஜபாகுவுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைச் சமாதானபடுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் விடயங்கள் கீழ்வரும் எந்த ஆவணத்தில் பதிக்கப்பட்டுள்ளன?
1. தெவனகல குன்றுக் கல்வெட்டில் 2. கல்விகாரைக் கல்வெட்டில்
3. ஆம்பகமுவக் கல்வெட்டில் 4. சங்கமு விகாரைக் கல்வெட்டில்
5. மினிப்பேக் கல்வெட்டில் (..............)

5. இலங்கையின் புராதான செய்திகள் எனும் நூலின் ஆசிரியர் யார்?
1. ரிபைரோ 2. குவேரோஸ் 3. தகுடோ 4. பெல்தியஸ்
5. வெலன்டைன் (..............)

**6 - 7 ஆம் வினாக்களுக்கான பெயர்கள் பலவும் x, y நிரல்களில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றிற்கு ஒன்று சரியாகப் பொருத்தினால் பெறப்படும் . கீழே தரப்பட்டுள்ள சரியான விடைத்தொகுதியின் இலக்கத்தைத் தெரிவு செய்து, அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

6.

| X | Y |
|---|---|
| I. ரசவாஹினி | 1. மயில்வாகனப் புலவர் |
| II. பரவி சந்தேசய | 2. வேதேஹ தேரர் |
| III. சத்தர்மரத்னாவலிய | 3. வீதாகம மஹாமைத்திரிய தேரர் |
| IV. லோவெட சங்கராவ | 4. ஸ்ரீ ராஹுல தேரர் |
| V. யாழ்ப்பாண வைபவமாலை | 5. தர்மசேன தேரர். |

1. BEDAC 2. BADCE 3. BACDE 4. BEDCA 5. BDECA
(..............)

7. 1. வல்லிபுரம் A. பொற்சாசனம்
   2. ஹோபிடிகமுவ B. ஒழுக்கக்கோவை
   3. கல் விஹார C. தூண் கல்வெட்டு
   4. தோணிகல D. செப்பு சாசனம்
   5. பனாகடுவ E. குன்றுக்கல்வெட்டு

1. ABCDE 2. AEBDC 3. ACDEB 4. ACBED 5. ADECB (..............)

**இலக்கம் 9 - 10 வினாக்களுக்கு ஒன்றிற்கொன்று பொருத்தப்பாடற்ற பெயர் சோடி ஒன்று காணப்படுகின்றது. பொருத்தப்பாடற்ற அச்சோடிப்பெயர்களைக் கண்டறிந்து, அவ்விலக்கத்தைப் புள்ளிக்கோட்டிமீது எழுதுக.**

9. I. வேவெல் கட்டி கல்வெட்டு – கிராமத்தொகுதியில் கடமையைப் புரிதல் தொடர்பான விடயங்கள்.
   II. மிஹிந்தலைச் சுவர்க் கல்வெட்டு - பிக்குமார் தொடர்பான அறிவுறுத்தல்களும் சட்டத்திட்டங்களும்
   III. பதுளை (ஹோபிடிகம) தூண்கல்வெட்டு – சந்தையின் நிர்வாகம்.
   IV. கொடவாய கல்வெட்டு – மஹாயான தர்மத்தின் பிரதி
   V. வல்லிபுர பொற்சாசனம் - யாழ்ப்பாணக் குடா நாட்டில் விஹாரை ஒன்றைக் கட்டுதல் தொடர்பானது. (..............)

10. I. விசுத்திமார்க்க - மஹாநாமதேரர்.
   II. நிகாய சங்கிரஹய - தேவரக்கித ஜயபாகு தம்மரக்கித தேரர்.
   III. சிங்ஹள போதிவங்கஸ – வில்கம்முல தேரர்.
   IV. சாராணார்த்த சங்கிரஹய - புத்தகோஷ தேரர்.
   V. தம்பியா அட்டுவா கெடபதய – ஐந்தாம் காசியப்ப மன்னன். (..............)

11. **கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

01. மஹாவம்சத்தின் முதலாம் பிரிவு மஹாவிகாரையின் வம்சக்கதையாகும்.”
   I. இதன் ஆசிரியரைப் பெயர் குறிக்க. (புள்ளி 1)
   II. இதனுள் அடங்கும் அத்தியாயங்கள் எத்தனை? (புள்ளி 1)
   III. இதற்காக எழுதப்பட்ட டீகாவையைப் பெயரிடுக. (புள்ளி 2)
   IV. இதில் கூறப்பட்டுள்ளதன்படி இந்நாட்டில் கட்டப்பட்ட முதலாவது தூபியைப் பெயரிடுக. (புள்ளி 1)
   V. மேல் குறிப்பிட்ட எடுகோளையிட்டுக் கருத்துரைக்க. (புள்ளி 1)

02. அநுராதபுரக்காலத்தின் முடிவு வரை இலங்கையின் வரலாற்றைக் கற்பதில் பாளி வம்சக் கதைகளின் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள், தொல்பொருள் மூலாதாரங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதத்தை விளக்கிக் கூறுக. (புள்ளி 1)

03. மகாசேன மன்னனின் ஆட்சிகாலம் முடியும் வரை இலங்கை வரலாற்றைக் கற்பதில் பாளி வம்சக் கதைகளின் முக்கியத்துவத்தை அளவீடு செய்க. (புள்ளி 1)

4. அநுராதபுர காலத்தின் அரசியல் வரலாற்றைக் கற்பதின் மூலாதாரமாகக் கல்வெட்டுகளின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க. (புள்ளி 14)

## 4. குடியேற்றங்களின் ஆரம்பமும் அவற்றின் பரம்பலும்

எந்தவொரு சமூதாயத்திலும் எழுத்துத் தோன்றுவதற்கு முன்னுள்ள காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனக் குறிப்பிடப்படும். மனிதனின் அன்றாடத் தேவைக்கு அவசியமான உபகரணங்களைத் தயாரித்துக் கொள்வதற்கு கற்களைப் பாவித்தமையால் அக்காலம் கற்காலம் எனப்படுகிறது. மனித பரிணாமத்தில் இருந்து (இன்றிலிருந்து 2.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்) நவீன காலம் வரை மனித வரலாற்றின் காலகட்டத்தைப் பிரதானமாக இரண்டாக வகுக்கலாம். பல்வேறுப்பட்ட காலகட்டங்களில் மனிதர்கள் பாவித்த கல்லாயுதங்கள் தொழினுட்பம் வளர்ச்சி அடைந்த விதத்தை வைத்து இக்காலகட்டம் பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் புராதன காலத்தில் பெரிய கல்லாயுதங்கள் பாவிக்கப்பட்டதோடு அது புராதன கற்காலம் எனப்படுகின்றது.

மத்திய, சிறிய அளவிலான கல்லுபரணங்கள் பாவிக்கப்பட்ட இரண்டாவது காலகட்டம் மத்திய கற்காலம் எனப்படும். இந்நாட்டில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் ஹோமோ சேபியன் (சாபியன்) எனும் பெயரால் அழைக்கப்படுகிறான். இற்றைக்கு ஓருலட்சத்து இருபத்தையாயிரம் வருடங்களுக்கு முன்னர் ஆசியாக் கண்டத்தை ஊடறுத்து அல்லது இந்து சமுத்திரத்தைக் கடந்து முதலாவது மனிதக் கூட்டம் இந்நாட்டிற்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, இந்நாட்டில் வாழ்ந்த வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதன் வேட்டையாடியும் இடத்திற்கிடம் அலைந்து திரிந்து உணவைச் சேகரித்துக் கொண்டும் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் பின் முன்வரலாற்றுக் காலத்தினுள் பிரவேசித்தான். கல்லாயுதங்களின் பாவனையைக் குறைத்துக் கொண்டு உலோகத்தைப் பயன்படுத்தியதோடு, விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு அலைந்துதிரியும் வாழ்க்கையிலிருந்து மீண்டு நிரந்தரமான குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதற்கு முயற்சித்தமையும் இக்காலகட்டத்தில் காணப்படும் பிரதான இலட்சணமாகும். இறந்தவர்களுக்கு மயானங்களை அமைத்தல் கலாசாரத்தின் விசேடத்துவ அம்சமாகும். கி.பி. 6ம் நூற்றாண்டளவில் இருந்து இந்தியாவிலிருந்து முதலாவது மக்கள் கூட்டம் வருகை தந்து இந்நாட்டின் நதிகளை அண்டிக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டது வரலாற்றுக் காலத்தின் ஆரம்பமமாகக் கருதப்படுகிறது.

**தேர்ச்சி 4.0** : இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக அதன் விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்களை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றி விளக்குவார்.
- மிகப் புராதன காலத்திலிருந்து இலங்கையில் குடியிருப்புகள் இருந்ததை மதிப்பார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனையும் அவனது கலாசாரப் பண்புகளையும் விவரிப்பார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குடியேற்றங்களைப் படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**4.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்**

- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமும் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமையும் இவ்விரு காலகட்டங்களாகும்.

**ஆரம்பகாலம்**
- தாழ் ஆரம்ப கற்காலம் (பெறப்பட்டுள்ள ஆதாரங்கள் நிச்சயமானதாயில்லை)
- இடை ஆரம்ப கற்காலம் (இன்றிலிருந்து 1,25,000 வருடங்கள் வரையில்)
- உயர் ஆரம்ப கற்காலம் (ஆதாரங்கள் கிடைக்கவில்லை)

**மத்திய கற்காலம்:** இன்றிலிருந்து 40,000 வருடங்களுக்கு முன்பு வரை

- **வரலாற்றுக்கு முற்பட்ட காலமும் குடியேற்றமும்**
  - இன்றிலிருந்து 1,25,000 தொடக்கம் 75,000 வருடங்களுக்கிடைப்பட்ட காலத்திற்கான வரலாற்றுக்கு முற்பட்ட குடியேற்றங்கள்பற்றி ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை இடை ஆரம்பக்காலத்தை சார்ந்தவை.

- இக்குடியேற்றங்கள் அனைத்தும் கண்டறியப்பட்டுள்ளது. பூந்தல, பதிராஜவெல, வெல்லே கங்கொட, மினிஹா கல்கந்த எனும் அரைகுறை வறள் வலய கடற்கரையோரத்தில் திறந்த குடியேற்றங்களாகும்.
- இரணைமடு படிவுகள் எனும் பெயரால் அறியப்பட்டுள்ள மணலும் சரளை மண்ணும் கலந்த செம்மண் படிவு வலயத்தில் இலங்கையின் புராதன குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.
- புராதன கற்கால யுகத்தில் குடியிருப்புகளில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளது, அக்கால மனிதனால் பாவிக்கப்பட்ட கல்லுபகரணங்கள் மட்டுமேயாகும்.
- தாழ்நாட்டு ஈரவலயத்திற்குரிய இரத்தினபுரியைச் சூழவுள்ள பிரதேசம் இந்நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட புராதன கற்காலத்திற்குரிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இன்னொரு பிரதேசமாகும்.
- மணல், வண்டல் மண், களிமண், உடனான இரத்தினபுரி படிவு இதற்கு இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியுள்ளது.
- இந்நாட்டின் ஆரம்பகால மனிதன் பாவித்த செப்பனிடப்படாத கல்லுபகரணங்களும் இந்நாட்டில் வாழ்ந்து அழிந்து போன பிராணிகளின் ஏராளமான எலும்புகளும் இரத்தினப்புரிப் படிவுகளிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.
- இரத்தினபுரிக் கல்லுபகரணங்கள், ‘‘இரத்தினபுரி கற்கால தொழில் நுட்பம்’’ என்றும் உயிரினங்களின் எலும்புகள் ‘‘இரத்தினபுரி உயிர்த்தொகுதி’’ என்றும் தொல்பொருளியலாளர்களால் பெயரிடப்பட்டுள்ளன.
- தாழ் ஆரம்ப கால கற்காலம் எனப்படும் இந்நாட்டின் ஆரம்ப வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றுக் குடியிருப்புகள் பரந்துபட்டுக் காணப்பட்ட பிரதான சுற்றாடல் வலயங்கள் இரண்டாகும்.
    - அரைகுறை வறள் வலய கடற்கரையோரப் பிரதேசம் (இரணைமடுப் படிவு வலயம்)
    - தாழ்நாட்டு ஈரவலயத்தைச் சேர்ந்த இரத்தினபுரியை அண்டிய வடிநிலப் பிரதேசம்.



***இரணைமடுப் படிவு வலயம்.***

- **மத்திய கற்காலக் குடியிருப்புகள்.**
  - இலங்கையின் மத்திய கற்காலம் இன்றிலிருந்து 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாதல்.
  - மத்திய கற்காலமாகும் போது நாட்டின் சகல காலநிலை வலயங்களிலும் வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியேற்றங்கள் பரந்து காணப்பட்டதாக அறியப்பட்டுள்ளது.
  - மத்திய கற்காலத்தில் வாழ்ந்தவன் பொதுவாக ''பலாங்கொடை மனிதன்'' எனப்படுகின்றான்.
  - ஆரம்ப பண்புகளுக்கு அமைய வரலாற்றுக்கு முற்பட்ட குடியேற்ற வகைகள் இரண்டாகும்.
    - இயற்கையான கற்குகைகள்
    - திறந்த வெளிகள்.



***பெலிலென***


- குடியேற்றங்களைத் தெரிவு செய்வதில் (உணவைப்பெற்றுக்கொள்ளும் வசதியுடன் நீரைப்பெற்றுக் கொள்ளும் வசதியும்.) பிரதான காரணிகள் இரண்டு பற்றிக் கவனம் செலுத்தியுள்ளனர்.
- மத்திய கற்காலம் ஆகும் போது வரலாற்றுக்கு முற்பட்ட குடியேற்றங்கள் பல்வேறு காலநிலை வலயங்களிலும் பரவிக் காணப்பட்டுள்ளது தெரியவருகிறது.
  - பூந்தள, வில்பத்து பல்லேமலல ஆகிய கரையோரங்களில் திறந்த குடியிருப்புகள்
  - பாஹியன்கல, பட்டதொம்பலென, பெலிலென, அலவலலென ஆகிய தாழ்நாட்டு ஈரவலய இயற்கையான கற்குகைகளினுள் அமைந்த குடியிருப்புகள்.
  - பொத்தான, அலிகல, போன்ற உலர்வலய திறந்த குடியிருப்புகள்
  - பண்டாரவளை, வெலிமடை, நாவலபிட்டிய போன்ற மத்திய மலைநாட்டை அண்டிய பிரதேசங்களில் திறந்த வெட்டை வெளிகள்.
  - ஹோர்டன் சமவெளி, நக்கில்ஸ் போன்ற உயர்மலைநாட்டுப் புல்வெளிகள்.



*குருவிட்ட படதொம்பலென*

- **மத்திய கற்காலத்தில் பிரதானமான வரலாற்றுக்கு முற்பட்ட வாழ்விடங்களின் கால அளவு.**
    - பாஹியங்கல - இன்றிலிருந்து - 41,000 வருடங்கள்.
    - குருவிட்ட பட்டதொம்பலென - 36,000 வருடங்கள்.
    - கித்துல்கல பெலிலென - 31,000 வருடங்கள்.
    - கம்பஹா அலவலலென - 14000 வருடங்கள்.
    - பெல்லன் பெந்திபெலஸ்ஸ - 12000 வருடங்கள்.
    - சீகிரிய பொத்தான - 5800 வருடங்கள்.
    - மாதொட்ட (மன்னார்) - 3800 வருடங்கள்.

# ஆரம்பக் குடியேற்றங்கள்



**வரலாற்றுக்கு முற்பட்டகால தொழினுட்பம்.**

- வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் தொழினுட்பம் முற்றுமுழுதாக கல்லுபகரணங்களாலேயே ஆக்கப்பட்டுள்ளது.
- புராதன கற்காலத்திற்குரிய பெருந்தொகையான செப்பனிடப்படாத கல்லுபகரணங்கள் இரத்தினபுரி, மாணிக்கச் சுரங்களிலிருந்தும் இரணைமடுப் படிவுகளிலிருந்தும் கண்டறியப்பட்டுள்ளன.
- மத்திய கற்காலத்தில் நுண் கல்லாயுதங்கள் பற்றிய ஆதாரங்கள் 40,000 வருடங்களுக்கு முன்னையவை கிடைக்கப்பெற்றுள்ளன. அவை மிகவும் சிறியதாகவும் நுணுக்கமாகவும், நிர்மாணிக்கப்பட்டுள்ளமையால் நுண்கல்லாயுதங்கள் என்று குறிப்பிடப்டுகின்றன.
- திரிகோண வட்டவடிவ பல்வேறு கேத்திர கணித உருவங்களில் உருவாக்கப்பட்டுள்ள நுண்கல்லாயுதங்கள் தொழினுட்பத்திறனை வெளிக்காட்டும் வகையிலான ஆக்கங்களாக காணப்படுகின்றன.
- உபகரணங்களை உற்பத்தி செய்து கொள்வதற்காக கூடிய வெண்குச்சான் வில் (திரிவாணாக்) கல் மூலப் பொருளாகக் கையாளப்பட்டுள்ளதோடு, ஓரளவிற்கு மஞ்சள் நிறத்திலான திரிவாணாக்கல்லும் பாவிக்கப்பட்டுள்ளன.
- மிருகங்களை வேட்டையாடுதல் தொடக்கம் வெட்டுவதற்கும் சீவுவதற்கும் தட்டுவதற்கும் வளைப்பதற்கும் நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான விதத்தில் கல்லுபரகரணங்கள் செய்யப்பட்டுள்ளன.

**வாழ்க்கை முறை**

- வாழ்வதற்காக வேட்டையாடுவதே வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறையின் பண்பாய் இருந்தது.
- வேட்டைக்கு மேலதிகமாக உணவாகக் கொள்ளக்கூடிய தாவர உணவுகளையும் சேர்த்துக் கொண்டு அலைந்து திரியும் வாழ்க்கை முறையைக் கையாண்டுள்ளான்.
- அவர்கள் மழைக்காலங்களில் பாதுகாப்பு கருதி இயற்கையாய் அமைந்த கற்குகைகளினுள் ஒன்று கூடினர்.
- வேட்டையாடுவது பெருமளவிற்கு மேற்கொள்ளப்பட்டிருப்பது ஆண்களாலாகும். அவர்கள் தனித்தனியாகவோ குழுக்களாகவோ அந்நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கலாம்.
- மத்திய கற்காலத்தில் சனத்தொகை அடர்த்தி பத்து சதுர கிலோ மீற்றருக்கு ஒரு நபராகவோ, 50 சதுர கிலோ மீற்றருக்கு ஒரு குடும்பமாகவோ இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.
- இயற்கையான கற்குகைகளில் வாழ்ந்த ஜனத்தொகை மிகவும் குறைந்தளவைக் கொண்ட சிறிய குடும்பங்களாக வாழ்ந்திருக்கலாம்.
- உலர் வலயத்தில் வெட்ட வெளிகளில் தற்காலிகமாக அமைத்துக்கொள்ளப்பட்ட முகாம்களில் வாழ்ந்துள்ளதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது இறந்த உறவினர்களின் சடலங்களை குகையினுள்ளே புதைத்துள்ளனர்.


**உணவுப்பழக்க வழக்கம்.**

- வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் உணவின் தன்மை அவர்கள் வாழ்ந்த சுற்றாடலில் இருந்து பெற்றுக்கொள்ளகூடிய வளங்களின் தன்மைக்கு ஏற்பத் தீர்மானமாகியுள்ளது.
- மாமிச உணவுகளில் வேட்டையாடிப் பெறப்பட்ட பன்றி, முள்ளம் பன்றி, மான், மரை, உடும்பு, குரங்கு, காட்டுக்கோழி என்பவற்றின் மாமிசங்கள் பிரதானமானவை.
- இதற்கு மேலாக நன்னீர் மீன்கள், நண்டுகள்,ஆமைகள், பல்வேறு பறவைகளின் மாமிசங்களையும் உணவாகக் கொண்டுள்ளனர்.
- சிப்பிகளும், நத்தைகளும் இக்காலத்தில் மக்கள் விரும்பியுண்ணும் உணவு வகைகளாக இருந்து வந்துள்ளன.
- களப்புகளை அண்டிக் காணப்பட்ட சிப்பிகள், நாட்டின் உட்பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பது உப்புத்தேவையை நிறைவு செய்து கொள்வதற்காயிருக்கலாம் என நம்பப்படுகின்றது.
- தாவர உணவுகளாக காட்டு ஈரப்பலாக்காய், காட்டு வாழை, கெக்குண விதை, முட்கிழங்கு, வேறு கிழங்கு வகைகளுடன் தேனையும் பாவித்துள்ளனர்.
- இற்றைக்கு 13,000 ஆண்டுகளுக்கு முன்னர் மலைநாட்டில் வாழ்ந்த மனிதன் பார்லியைப் பயிரிட்டு உணவாகக் கொண்டுள்ளமைக்கான ஆதாரம் ஹோட்டன் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.
- பலாங்கொடை மனிதன் நெருப்பின் பாவனையைத் தெரிந்து வைத்திருந்தபடியால் மாமிசத்தைச் சுட்டுச் சாப்பிட்டிருப்பான் எனக்கருத முடியும்.

**பண்பாட்டு முறை**

- பண்பாட்டு முறைபற்றித் துலக்கமான ஆதாரம் கிடைக்கப்பெற்றிருப்பது இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறையிலாகும்.
- ஒருவர் மரணித்ததன் பின்னர் உடல் உக்கிப்போகும்வரை காட்டில் கிடத்திவிட்டு, எலும்புக்கூட்டை குகைகளினுள் அடக்கம் செய்துள்ளனர்.
- எலும்புகளை அடக்கம் செய்வதற்கு முன்னர் மண்டை ஓட்டிலும் எலும்பின் வெளிப்புறங்களிலும் சேற்றுக்கல்லால் (சிவப்பு) தோய்க்கப்பட்டுள்ளது சமயத்தேவை ஒன்றுக்காக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.
- சேற்றுக்கல் பூசப்பட்டிருந்தமைக்கான ஆதாரம் பாஹியன்கல, இராவண எல்ல குகைகளில் கண்டறியப்பட்டுள்ளன.

***இரண்டாக வளைத்துப் புதைக்கப்பட்ட மனித உடலின் எலும்புக்கூடு***



- கம்பினாலோ கொம்பினாலோ வடிவிலான சிறிய குழி ஒன்றைத் தோண்டி அதனுள் எலும்புகளை வைத்து சருகுகளினாலோ மண்ணினாலோ மூடியுள்ளனர்.
- கித்துள்கல பெலிலெனையில் அவ்வாறு புகைக்கப்பட்ட மனிதர்கள் 12 பேரின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள எல்லா எலும்புக்கூடுகளும் புதைக்கப்பட்டிருப்பது மூட்டுகளிலிருந்து மடித்து ஒடுங்கச் செய்யப்பட்டாகும்.
- அவ்வாறு மடித்துப் புதைக்கப்பட்டிருப்பது ஏதாவது நம்பிக்கை அடிப்படையிலோ அல்லது குகைகளினுள் காணப்படும் பற்றாக்குறையினாலோ இருக்கலாம்.
- நத்தை, சிப்பி ஓடுகளினாலும் மனித எலும்புத் துண்டுகளாலும் செய்யப்பட்டவற்றை ஆபரணங்களாகப் பயன்படுத்தியுள்ளனர்.

**வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் உடலமைப்பு**

- இதுவரைக்கும் அகழ்வுகளின் மூலம் பெறப்பட்டுள்ள : பலாங்கொடை மனிதர்களின் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 75 மட்டிலிருக்கும்.
- அவை அனைத்தும் இன்றிலிருந்து 38,000 – 5,500 வருடகால இடைவெளியில் வாழ்ந்த மனிதர்களது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.
- மண்டை ஓட்டின் அளவு, ஆண்களினது 1600 சென்றிமீட்டர், பெண்களது 920 கன சென்றிமீட்டர் அளவுடையதாகக் காணப்பட்டது.
- ஆண்களினது உயரம் குறைந்தபட்சம் 174, பெண்களினது உயரம் உயர்ந்தபட்சம் 166 சென்றிமீட்டர்களாக இருந்துள்ளன. வளர்ந்த மனிதர் ஒருவரது மண்டை ஓடு மிகவும் தடிப்பானது அதன் நாடிப்பகுதி முன்னோக்கித் தள்ளிக் கொண்டுள்ளது. மூக்குச் சப்பையானது, தாடையும் பற்களும் பெரியவை, கழுத்துக் குட்டையானது.
- முழு மொத்தத்தில் பலாங்கொடை மனிதன் குட்டையான தடித்த உருவத்துடனானவன் ஆவான்.
- பலாங்கொடை மனிதனின் உயர்ந்த ஆயுள் காலம் 35-40 வயதாக இருந்திருக்கலாம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புகளின் தன்மையை உதாரணங்களுடன் விளக்குக.
2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதால் கருதப்படுவது என்ன என்பதை விளக்கி, வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது என்பதையிட்டு கருத்துரைக்க.
3. கீழே தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுக.: இரணைமடு, புந்தள, பதிராஜவெல, மினிஹா, கல்கந்த, பாஹியன்கல, அலவள, பொத்தான, அலிகல, மாங்குளம்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : முன் வரலாற்றுக் கால மானிட செயற்பாடுகள் தொடர்பாகத் தேடியாய்வார்.

**பாடவேளைகள்** : 5

**கற்றற்பேறுகள்** :

- முன் வரலாற்றுக் காலத்தை விளக்குவார்.
- முன் வரலாற்றுக் கால முன்னேற்றத்தை மதிப்பார்.
- முன் வரலாற்றுக் கால வாழ்விடங்களைப் புறவுருவப் படம் ஒன்றில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**4.2 முன் வரலாற்றுக் காலகட்டம்**

- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே முன் வரலாற்றுக் காலகட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.
- இக் காலக்கட்டத்திலேயே வரலாற்று யுகத்திற்கான வாழ்வு முறைக்கு மனிதன் தயார்ப்படுத்தப்படல் ஆரம்பமானது.
- கி.மு 5000 ஆண்டுகள் கால எல்லைக்குப் பின்னரே மனிதனின் இக் காலகட்டப் பிரவேசம் ஆரம்பமானதாகக் கருதப்படுகிறது.
- கி.மு. 1800 இலிருந்து மட்பாத்திரங்களின் பாவனையும் விவசாயச் செய்கையும் நுகர்வும் பற்றிய ஆதாரங்கள் தொரவக்க, பொத்தான, அலிகல ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.
- நிரந்தரமான குடியிருப்புக்களை உருவாக்கிக் கொள்ளல், இரும்பின் உபயோகம், மட்பாத்திரங்களை உற்பத்தி செய்தல், மாடு, குதிரைகளின் வளர்ப்பு, நெற் பயிர்ச்செய்கை என்பன இக் காலக்கட்டத்தில் துலாம்பரமாகத் தெரியும் வளர்ச்சிகளாகும்.


**முன் வரலாற்றுக் காலக் குடியிருப்புகள்**

- முன் வரலாற்றுக் காலத்தில் அலைந்து திரிந்து, வேட்டையாடிய வாழ்க்கை யிலிருந்து மீண்டும், இக்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக நிரந்தரமான வசிப்பிடங்களை அமைத்துக்கொள்ள ஆரம்பித்தனர்.
- அதிகமான குடியிருப்புகள் உலர் வலயத்தில் நதிக்கரைகளை அண்டியும் மலைநாட்டை அண்டியும் பரவிக் காணப்பட்டதற்கான ஆதாரங்களுள்ளன.
- கி.மு 900 இல் அநுராதபுரத்தில் இருந்த முன்வரலாற்றுக் காலக் குடியிருப்புகள் 10 ஹெக்டயர் பிரதேசத்தில் பரந்து காணப்பட்டதுடன் கி மு. 700 - 600 வரையான காலத்தில் 50 ஹெக்டயர் வரை விருத்தியுற்றுச் சென்றது.

- உடரஞ்சாமடம பிரதேசத்தில் கண்டறியப்பட்ட குடியிருப்பு மண் வீடுகளால் ஆனது. கம்பினால் சுவர் கட்டப்பட்டு, கூரை புற்களினால் வேயப்பட்டு, களிமண் வைக்கப்பட்டு முறையாகக் கட்டப்பட்டிருந்ததற்கான ஆதாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.
- அநுராதபுர உள்நகரில் கண்டறியப்பட்ட வீடு அரை வட்டவடிவிலும் சதுர வடிவிலும் காணப்படுகின்றது.

**தொழினுட்பம்**

- கல்லாயுத தொழினுட்பத்திலிருந்து மீண்டு இரும்புத் தொழினுட்பத்தினை நோக்கிச் செல்வது துலக்கமாய் தெரிகிறது.
- விவசாயத்திற்குத் தேவையான மண்வெட்டி, கலப்பை, கத்தி ஆகிய உபகரணங்களை இரும்பினால் உற்பத்திச் செய்து கொண்டுள்ளனர்.
- வனைதல் சில்லைக் கண்டறிந்ததனால் உயர் தொழினுட்பத்துடன் விசித்திரமான மண்பாண்டங்களை உற்பத்தி செய்துள்ளனர்.
- மண்பாண்டங்களை உணவைச் சமைப்பதற்கும், இறந்தவர்களின் அஸ்தியைப் பாதுகாத்து வைப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர்.
- செப்பு உலோகத்தைப் பயன்படுத்தி வளையல் போன்ற ஆபரணங்களை உற்பத்தி செய்துள்ளனர்.
- இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கருஞ்சிவப்பு மட்பாண்டங்கள், இந்தியாவின் கருஞ்சிவப்பு மட்பாண்டங்களுக்குச் சமமானவையாகும்.



அநுராதபுர உள்நகரில் அமைந்திருந்த வீடு



பொம்பரிப்பு மட்பாண்டம்



உடரஞ்சாமட மட்பாண்டம்

**கலாசாரம்**

- பெரிய கற்களைப் பயன்படுத்தி, இறந்தவர்களுக்குக் கல்லறை கட்டுதல் முன்வரலாற்றுக் கால கலாசாரத்தின் முக்கிய இலட்சணமாகும்.
- இன்று முன்வரலாற்றுக் காலத்துக்குரிய மயானங்கள் ஐம்பதிற்கு மேல் கண்டறியப் பட்டுள்ளன.
- அஸ்தியை அவர்கள் பாவித்த உபகரணங்கள், உணவு வகைகள் சிறிய அல்லது பெரிய மட்பாண்டங்களில் வைக்கப்பட்டு பெரிய கற்பாறைகளினால் பாதுகாப்பது பிரதான சடங்கு முறைகளில் ஒன்றாக விளங்கியதற்கு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறைகள் பல்வேறுபட்டிருந்தன.
  - கல்லறைகளினால் ஆனவை
  - அஸ்தி கலசத்தால் ஆனவை
  - களிமண் ஓடத்தால் ஆனவை
  - கருங்கல் முக்கோண வடிவிலானவை
  - குழிகளால் ஆனவை
  - விரிவாக்கக் கூடிய வகையிலானவை
- கண்டறியப்பட்ட புதைகுழிகள் பலவும் கல்லறை மயானங்கள் களிமண் ஓடமயானங்கள, அஸ்திக் கலச மயானங்கள் என்பவையாகும்.
- கல்லறை மயானம் எனப்படுவது, கற்பாறைகள் நான்கை நாற்புறமும் வைத்து, அதனுள் அஸ்தி கலசங்கள் வைக்கப்பட்ட மேற்பகுதி தட்டையான கல்லொன்றினால் மூடப்பட்டதாகும். இவ்வாறான மயானங்கள் இப்பன் கட்டுவையிலும், ரம்பேவையிலும் யான் ஓயாப் பள்ளத்தாக்கிலும் கண்டறியப்பட்டுள்ளன.
- அஸ்திக் கலச மயானம் என்பது பெரியதொரு மட்பாண்டத்தினுள் சிறிய மட்பாண்டங்களில் அஸ்தி வைக்கப்பட்டு கல்லாலான மூடியால் மூடப்பட்டவை. இவ்வாறான கல்லறைகள் பொம்பரிப்பில் கண்டறியப்பட்டுள்ளன.

- களி மண் ஓட மயான முறையில், களிமண்ணால் உருவாக்கப்பட்ட ஓடம் போன்ற வடிவிலான நிர்மாணத்தினுள் சடலத்தை இட்டு எரியூட்டியுள்ளனர். இவ்வாறான மயானங்கள் ரஞ்சாமடம, நிகவலமுல்ல, ஹல்துமுல்ல எனும் பிரதேசங்களில் கண்டறியப்பட்டுள்ளன.
- இலங்கையின் முன்வரலாற்றுக் கால மயான முறையும் களி மட்பாண்ட உற்பத்தி முறையும் இந்திய நாகரிகத்திற்குச் சமனானவை எனப்படுகிறது.



***இப்பன்கட்டுவ கல்லறை***



***களிமண் ஓடத்தில் தகனஞ் செய்யும் முறை***



***களிமண் சாடியிலிட்டு அடக்கம் செய்யும் முறை (பொம்பரிப்பு)***



***கல்லறைகளில் வைக்கப்பட்ட அஸ்திக்கலசம் மற்றும் பொருட்கள்***



***இப்பன் கட்டுவ கல்லறையில் கிடைத்த மாலை மணிகள்***

**வாழ்க்கை முறை**

- வேட்டையாடுதலை முற்றாகக் கைவிடா விட்டாலும் அதிலிருந்து மீண்டு உணவு உற்பத்திக்கான விவசாய வாழ்க்கை முறைக்கு வந்தனர்.
- சேனைப் பயிர்ச் செய்கையும் நெற் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டுப் பரவலடைந்தன. உணவுப் பொருட்களின் உற்பத்தியுடன் நிலையான குடியிருப்புக்களை உருவாக்கிக் கொள்வ துடன் சிறிய கிராமங்கள் உருவாகத் தொடங்கின.
- விவசாயம், போக்குவரத்து, உணவுத் தேவைக்காக மாடு, குதிரை, ஆடு போன்ற பிராணிகளை வளர்க்கத் தொடங்கினர்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன் வரலாற்றுக் காலத்தை வேறுபடுத்திக் காண்பிக்கக்கூடிய பண்புகளை விளக்குக.
2. கீழ்வரும் தலைப்புகளின் கீழ் முன் வரலாற்றுக் காலம் பற்றி விவரிக்க.
   **1.** குடியிருப்புக்கள் 2. தொழினுட்பம் 3. வாழ்க்கை முறை
3. கீழே தரப்பட்டுள்ள இடங்களை இலங்கை புறவுருவப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுக.
   இப்பன்கட்டுவ, ரம்பேவ, யான் ஓயா, பொம்பரிப்பு, ரஞ்சாமடம், நிகவலமுல்ல

**தேர்ச்சி மட்டம் 4.3** : வரலாற்றுக் காலம் மற்றும் அதன் குடியிருப்புக்கள் தொடர்பாக நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 5

**கற்றற்பேறுகள்** :

- இலங்கையின் வரலாற்றுக் காலத்தைப் பற்றி அறிந்து கொள்வார்.
- வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் உருவான விதம் பற்றி விளக்குவார்.
- வரலாற்றுக் காலத்தின் குடியிருப்புகளை புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**4.3 வரலாற்றுக் காலம்**

- கி.மு. 600 - 500 க்கு இடைப்பட்ட காலகட்டம் வரலாற்று யுகத்தின் ஆரம்ப காலகட்டம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கூட்டம் இந்நாட்டிற்கு இடம்பெயர்ந்தமை இக்காலத்தில் துலாம்பரமாகத் தெரியும் ஓர் அம்சமாகும்.
- அவர்கள் இந்நாட்டிற்கு வருகை தரும்போது முறையான அமைப்புடன் கூடிய சமூகம் ஒன்று இந்நாட்டில் இருந்து வந்தது.
- மகாவம்சத்திலும் ஏனைய முக்கியமான வம்சக்கதைகளிலும் கூறப்படும் விதத்தில் இயக்கர், நாகர், தேவர் எனும் மக்கள் இனத்தவர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இங்கு வாழ்ந்து வந்துள்ளமை தெரிய வருகின்றது.
- வியாபாரத்திற்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான சூழல் நிலவியமையால் இந்திய இனக்குழுக்கள் வருகை தந்தமையும் பரவலடைந்தமையும் பற்றி இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
  இந்நாட்டு மூலாதாரங்கள் : மகாவம்சம், போதிவம்சம் போன்றவை
  வெளிநாட்டு மூலாதாரங்கள் : குவான் சுவானின் அறிக்கை, யாஹியனின் அறிக்கை, இராமாணயம், மகாபாரதம், திவ்வியபிரபந்தம்
- இந்திய இனக் குழுக்கள் இந்நாட்டிற்கு வருகை தந்த காலகட்டத்தில் இந்நாட்டில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உலோக தொழினுட்பத்தை அறிந்திருந்த முன்னேற்றமான சமூகம் ஒன்று இருந்துள்ளதாக இலக்கிய, தொல்பொருள், ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

- மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஜயன் உட்பட்ட குழுவினர் இந்நாட்டிற்கு வருகை தந்த வேளையில் அநுராதபுரத்தில் 50 ஹெக்டேயருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் குடியேற்றம் விரிவடைந்திருந்ததுடன் அது நகரமொன்றாக வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.
- இந்திய மக்கள் குழுக்கள் வருகை தந்த வரிசை
    - விஜயன் உட்பட்ட கூட்டத்தினர்.
    - மதுராபுரி இளவரசி உட்பட்ட குழுவினர்
    - பண்டுவாசுதேவ உட்பட்ட குழுவினர்
    - பத்தக்கச்சாயனா உட்பட்ட குழுவினர்
    - மஹிந்த தேரர் உட்பட்ட குழுவினர்
    - சங்கமித்தை பிக்குணியுடன் வருகைதந்த குழுவினர்
- இந்தியக் குடியேறிகள், நதிக்கரைகளை அண்டிய பிரதேசங்களில் ஆரம்பக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.
- விவசாயத்திற்குப் பொருத்தமாயிருத்தல், நீரைப்பெற்றுக் கொள்ளகூடிய வசதி, அதிக காடுகள் காணப்பட்டமை என்பன குடியிருப்புகளின் பரவலில் மானசீகமாகப் பங்களிப்புச் செய்திருக்கலாம்.
- ஆரம்பக்கால குடியேற்றங்கள் இடம்பெற்ற நதிப்பள்ளத்தாக்குகளாவன: மல்வத்து ஓயா, தெதுறு ஓயா, மகாவலி கங்கை, கல் ஓயா, மாணிக்க கங்கை, வளவ கங்கை, களனி கங்கை
- குடியிருப்புகள் : அநுராதகாம, உருவெலகாம, உபதிஸ்ஸ காம, விஜித்த காம, ராமகோண, தீக காம, காசரகாம, கல்யாணிகாம

- **ஆரம்ப வரலாற்றுக்காலம்**.

வரலாற்றுக் காலத்தின் ஆரம்ப காலம் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

- ஆரம்பக்குடியிருப்புகள் நீர்வள நாகரீகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது ஆரம்ப வரலாற்றுக் காலத்திலாகும். (கி.மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை.)
- நதிக்கரைகளை அண்மித்த குடியிருப்புகள் நாட்டின் உட்பகுதிகளுக்குப் பரவலடைந்து சிறிய குளக் கிராமமாக வளர்ச்சி பெற்றது.
- அதிகமான குடியிருப்புகள் உலர் வலயத்தில் பரவியமைக்கக்காரணம், அங்கு காணப்பட்ட செம்மண் விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்திருந்த மையினாலாகும்.
- குடித்தொகைப்பெருக்கத்துடன் மழைநீர் போதியதாயின்மையால் சிறிய குளங்களை அமைத்து நீரைச் சேமித்து வைத்துக் கொண்டனர்.

**குடியிருப்புகளின் தன்மை.**

- ஒரு சிறிய குளத்தை மையமாகக் கொண்டு ஒரு கிராமம் உருவானது.
- இவை வாபி காம (குளக்கிராமம்) எனும் பெயரால் அறியப்பட்டது.
- குளம், வயல், சேனை, காடு, வீடு, என்பவை குளக்கிராமத்தின் பிரதான அங்கங்களாகும்.
- ஒரு கிராமத்தில் 5-25 க்கு இடைப்பட்ட குடும்பங்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.
- கிராமத்தின் தலைவர் கமிக எனப்பட்டார்.
- ஆரம்பகால குளக்கிராமம் சுதந்திரமாகச் செயற்பட்டதோடு பிற்காலத்தில் கிராமங்கள் ஒன்றிணைந்து நகரங்களாக விருத்தியடைந்தன.
- குடித்தொகைப் பெருக்கத்துடன் சிறிய குளங்களின் நீர் போதியதாக இன்மையால் கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து பெருங் குளங்களை நிர்மாணித்தனர்.
- கி.பி. 3ஆம் நூற்றாண்டாகும் போது மத்திய மயப்படுத்தப்பட்ட தலைநகரமாக அநுராதபுரம் மிகவும் அபிவிருத்தியுற்றிருந்தது.

**வாழ்க்கை முறை**

- ஆரம்ப காலத்தில் விவசாயம் அடிப்படையாக அமைந்தாலும் பிற்காலத்தில் தொழில்களுக்கேற்ப கிராமங்கள் பிரிந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.
- நெற்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கையின் மூலம் உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை விவசாய கிராமங்கள் எனப்பட்டன.
- தொழிலுக்கியை வியாபார கிராமம், மீன்பிடிக்கிராமம், குயவர்களின் கிராமம் என்றவாறு பிரிந்து சென்றன.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. இலங்கையின் வரலாற்றுக்காலம் என்பதை விளக்குக.
2. கீழ்வரும் தலைப்புகளின் கீழ் வரலாற்றுக் காலம் பற்றி விளக்குக.
   a. குடியிருப்புகள் உருவானமை
   b. வாழ்க்கை முறை
3. கீழே தரப்பட்டுள்ள இடங்களையும் நதிகளையும் இலங்கைப் புறவுருவமொன்றில் குறிக்க :
   a. அநுராத கிராமம், உருவெல கிராமம், உபதிஸ்ஸ கிராமம், விஜித கிராமம், ராம கிராமம், தீக கிராமம், காசர கிராமம், கல்யாணி கிராமம், மல்வத்து ஓயா, கலாஓயா, தெதுறு ஓயா, மகாவலி கங்கை, கல்ஓயா, மாணிக்க கங்கை, வளவ கங்கை, களனி கங்கை.

## 5. இராசரட்டை நாகரிகம் (பொலன்னறுவையின் இறுதிக் காலம் வரை)

ஆரம்ப காலத்தில் இலங்கை ருஹுணு, பிஹிட்டி, மாயா என்றவாறு மூன்று உப பிரதேசங்களாக வகுக்கப்பட்டிருந்தன. 1215 ஆம் ஆண்டுவரை பிஹிட்டி ரட்ட பிரதேசத்தில் தலைநகர் அல்லது அரசரின் நிர்வாக மையம் அமைந்திருந்தது. இவ்வாறு பிஹிடி ரட்ட பிரதேசம் அரசரின் மத்திய நிலையமாக இருந்தமையால் அதற்கு ரஜரட்ட எனப் பெயர் ஏற்பட்டது. அநுராதபுரம், பொலன்னறுவை என்பன தலைநகர்களாக விளங்கிய காலத்தில் பிஹிட்டி ரட்ட அல்லது ரஜரட்ட என்பதன் மூலம் ஒற்றுமை கட்டியெழுப்பட்ட படியால் அவ்விராச்சியங்கள் நிலைத்த காலகட்டம் இராசரட்டை நாகரீகம் எனக் குறிப்பிடப்படுகின்றது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வந்த குழுவினர் இந்நாட்டில் புதிய குடியிருப்புகளை ஆரம்பித்தமையும், கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இந்நாட்டிற்குக் கிடைக்கப்பெற்று முழு நாட்டிலும் அது பரவியமையும் அதற்குப்பொருத்தமான முறையில் நிர்வாக முறையொன்று உருவானமையும் கி.பி. 6 ஆம் நூற்றாண்டாகும் போது நீர்பாசன நாகரீகம் கட்டியெழுப்பப்பட்டு விவசாய பொருளாதார முறைக்குச் சக்திமிக்க அடிப்படையிட்டமையும் சமகால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய தொழினுட்பத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டமையும் இராசரட்டைக் காலத்தின் முக்கியமான பண்புகளாகும். அதேபோல பௌத்த, இந்து சமயங்களின் ஊடாகச் சிறந்த சமூக அமைப்புக் கலாசாரமும் உருவவானமையும். மேலைத்தேய கீழைத்தேய நாடுகளுடனான நல்லுறவுகளைப் பேணிக்கொண்டு அந்நிய நாட்டினருடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல் மூலம் இராசரட்டை நாகரிக காலத்தில் உலகத்தில் சமகாலத்தில் வெற்றிபெற்ற இனத்தினருக்கு இரண்டாம் பட்சமாகாத முறையில் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையரால் இயலுமாயிருந்தது. இராசரட்டை நாகரீக காலத்தில் நிலவிய அதன் அரசியல், பொருளியல், சமூக, கலாசாரத்தன்மைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி இறந்த கால ஆய்வின் மூலம் நிகழ்கால சமூகம் பெற்றுக் கொள்ளக்கூடிய பாடத்திலும் முன்மாதிரியிலும் மாணவர்களை ஈடுபடுத்தல் இப்பாட அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 5.0** | : | இலங்கையின் நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம் 5.1** | : | இராசரட்டை நாகரிக்கத்தின் வெற்றிகரமான தொழினுட்ப அடிப்படையை அறிமுகப்படுத்துவார். |
| **பாடவேளைகள்** | : | 02 |
| **கற்றற்பேறுகள்** | : | |

- இராசட்டை நாகரிகத்தின் அடிப்படையை விளக்குவார்
- இராசரட்டை நாகரிகத்தின் வெற்றிக்கு அதன் அடிப்படை பங்களிப்பு செய்த விதத்தை விளக்குவார்.
- இராசரட்டை நாகரிகம் சம்பந்தப்பட்ட விடயங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**5.1 இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை**

இராசரட்டை என்பது அரசர்களின் நாடாகும்.

- பண்டுகாபய மன்னன் அநுராதபுர இராசதானியைக் கட்டியெழுப்பிய காலத்தில் (கி.மு. 4 ஆம் நூற்றாண்டில்) இருந்து 1215 ஆம் ஆண்டில் பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியுறும் வரை அநுராதபுரமும், பொலன்னறுவையும் இந்நாட்டின் தலைநகராதல்.
- 15 நூற்றாண்டுகளாக அதன் நீண்ட காலத்தில் இதனைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியாளர்களின் கீழ் உலர்வலயத்தில் இந்த நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டது.
- இதனால் இக்காலம் ‘‘இராசரட்டை நாகரீக காலம்’’ என அறியப்படுகிறது.
- 12 ஆம் நூற்றாண்டில் இருந்து இந்நாட்டில் காணப்பட்ட பிரதேச பிரிவுகளுக்கு அமைய இராசரட்டை, ருகுணு, பிஹிட்டி, மாயா என்று மூன்று பிரிவுகளாக பிரிந்திருந்தமை.
- அநுராதபுரமும் பொலன்னறுவையும் பிஹிட்டி ரட்டையைச் சேர்ந்தமை.
- அநுராதபுர, பொலன்னறுவை இராச்சியங்களை அடிப்படையாகக் கொண்டு 1215 வரை இந்நாட்டின் வரலாற்றை விபரிப்பதற்கு இராசரட்டை நாகரிகம் எனும் சொல் கையாளப்படுகின்றது.


**இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை**

- இராசரட்டை நாகரிகம் விவசாயத்தையும், வர்த்தகத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையைக் கொண்டிருந்தது.
- 1215 ஆம் ஆண்டு வரை பெருமளவுக்கு இந்நாட்டின் குடியிருப்புகள் பரவியிருந்தது தாழ்நாட்டு உலர்வலயத்திலாகும். வடகீழ் பருவக்காற்றால் வருடத்தில் ஒரு போகத்திற்கு கிடைக்கும் மழைவீழ்ச்சியைச் சேகரித்து விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வந்தனர். உலர் வலயத்தில் காணப்பட்ட புவியியல் வேறுபாட்டை விவசாயத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு அம்மக்கள் தெரிந்து வைத்திருந்தப்படியால் உயர்வான நிலங்களில் குளங்களை அமைத்து, தாழ்ந்த பரந்த சமவெளிப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். குளங்களி லிருந்து விவசாய நிலங்களுக்கு நீரை எடுத்துச் செல்வதற்காக நீண்ட கால்வாய்களை உருவாக்கினர். அதனால் நீர்ப்பாசன நாகரிகமொன்று தோற்றம் பெற்றது. இதுவே இராசரட்டையின் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.
- இலங்கையின் அமைவிடத்தின்படி அது இந்தியா, தூர கிழக்காசியா, ஐரோப்பாவுக்கான பாதையின் மையத்தில் அமைந்திருந்தது. இந்நிலை வெளிநாட்டு வர்த்தகத்திற்கு மிகவும் வாய்ப்பாயிருந்தது. அக்கால வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பாய்மரப் படகுகளுக்குப் பொருத்தமான குடாக்கள், கப்பல்கள் தரித்து நிற்பதற்கான துறைமுகங்கள் பலவும் நாட்டைச் சுற்றிலும் அமைந்திருந்தன. அத்துறைமுகங்களை உள்நாட்டுடன் தொடர்புபடுத்துவதற்கான பாதைத் தொகுதி யொன்றும் அமைவுற்றிருந்தது. இதனால் துறைமுகத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் வசதியையும் அது கொண்டிருந்தது. இப்பின்னணியில் இராசரட்டை காலத்தில் உலகின் பல்வேறு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு இலங்கையரால் இயலுமாயிருந்தது. இதனால் வியாபாரம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கத் தொடங்கியது.
- இராசரட்டை நாகரிக காலத்தில் கலாசாரக்கட்டமைப்பு உருவானது பெருமளவுக்கு இந்தியச் செல்வாக்கினாலாகும் என்றாலும் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறுபட்ட கலாசார முறைகள் இலங்கையின் சமய, சமூக சூழலுக்குப் பொருத்தமாக வளர்ச்சியுறத் தொடங்கின. உதாரணமாக சமயம், கலை, வீடமைப்பு, பழக்க வழக்கம், கல்வி, நிர்வாகம் போன்ற பிரிவுகளிலான தகவல்கள், இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளியல், சமூக, கலாசார, தொழினுட்ப செயற்பாடு களைக் கற்கும் போது அறியக்கூடியதாயிருக்கும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை அம்சங்களை விளக்குங்கள்.

## அநுராதபுர யுகம்



79°30'0"E
80°0'0"E
80°30'0"E
81°0'0"E
81°30'0"E
82°0'0"E
9°30'0"N
9°0'0"N
8°30'0"N
8°0'0"N
7°30'0"N
7°0'0"N
6°30'0"N
6°0'0"N
விளக்கம்
நகரம்
கிராமம்
ஜம்புகோளப்பட்டினம்
பிராச்சினாராம
சூகரித்த
குருந்தி
மகாதித்த
கோணகாமம்
உபதிஸ்ஸகாமம்
அநுராதபுரம்
உருவெல
சேருநகரம்
தம்பபிட்ட
அரிட்டகிரி
பொலன்னறுவை
விஜித்தபுரம்
தக்கிணகிரி
போலகாமம்
சாமகல்ல
ஆலிசாரா
மகாகல்ல
நெலிசொப்ப
தோலபப்பத
கிரிகும்பில
சங்கத்தலி
பதலத்தலி
அம்பட்டகோல
கேமாராம
ஆலோக்கலென
அம்பதித்த
சொன்னகிரி
மகியங்கனை
தீகவாபி
வெனகல
தெவனகல
வாகிரிகல
கல்யாணி
கிரி மண்டலம்
மலையகம்
தீக மண்டலம்
சுமணகூடம்
நாகபப்பத
காலதித்த
காஜரகாமம்
பிம்மதித்த
சித்தல பப்பத
தீசவாவி
மாகாகாமம்
உருகுணை தேசம்
மகாநாகசுல
கசாகல்ல
கிம்ஹதித்த
நில்வலாதித்த
தேவ நகரம்
0 10 20 30 40
Kilometers

## பொலன்னறுவை யுகம்



விளக்கம்
நகரம்
கிராமம்
இராசரட்டை
தக்கிணதேசம்
மலயரட்டை
உருகுணரட்டை
ஜம்புகோளப்பட்டினம்
மகாதித்த
குருந்தி
கிரிகண்டக
பல்லவவங்க
இராசரட்டை
(பிகிட்டி ரட்டை)
வேலாகம
கோகண்ணதித்த
கானவாபி
கொட்டசார
அநுராதபுரம்
பத்தபாசான
சேரிநகரம்
ஏகத்வாரபப்பத
மண்டலகிரி
மனிஹிரி
பொலன்னறுவை
(புலஸ்திநகரம்)
தாமரக்கபப்பத
சுபப்பபத
ஏராவுவுரட்ட
பதலத்தலி
வாபிநகரம்
தக்கிண
தேசம்
லங்காபப்பத
சோபர
மஹியங்கனை
உத்தர மலய
புங்ககாமம்
மலய ரட்ட
தீகாமடுல்ல
கல்யாணி
தக்கிண மலய
கதலிகாம
உத்தனதவார
சமந்தகூடம்
காலதித்த
காஜரகாமம்
மாகாகாமம்
தேவ நகரம்
79°30'0"E
80°0'0"E
80°30'0"E
81°0'0"E
81°30'0"E
82°0'0"E
9°30'0"N
9°0'0"N
8°30'0"N
8°0'0"N
7°30'0"N
7°0'0"N
6°30'0"N
6°0'0"N

**தேர்ச்சி மட்டம் 5.2** : இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம், தொழினுட்பம் என்பனவற்றை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 09

**கற்றற்பேறுகள்** :

- இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படையைப் பலமுறச் செய்வதில் பங்களித்த மன்னர்களை அறிமுகஞ் செய்வார்.
- இராசரட்டை நாகரிகத்தின் அபிவிருத்திகளை மதிப்பார்.
- இந்நாகரிகத்தின் வரலாற்றிடங்களையும், குளங்களையும், அணைக்கட்டுக்களையும் படத்தில் குறிப்பார்.
- நாட்டின் வரலாற்றைக் கற்பதன் மூலம் இன்றைய சமூகத்திற்கு, அன்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களையும் முன்மாதிரிகளையும் மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
**பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.**

**5.2** இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளாதார, தொழினுட்ப, சமூக, கலாசார விடயங்களில் கவனத்தைச் செலுத்திக் கீழே தரப்பட்டுள்ள உபதலைப்புகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களையும் வைத்துப் பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**5.2 அநுராதபுர இராசதானி**

**அரசியல் நடவடிக்கைகள்.**

அநுராதபுர, பொலன்னறுவை, இராச்சிய காலத்தில் ஆட்சிபுரிந்த புகழ்பெற்ற மன்னர்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் ஆட்சி நடவடிக்கைகள் அமைந்திருந்த விதம். நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள், நாட்டின்பாதுகாப்பு நடவடிக்கைகள், யுத்த முறைகள், அக்காலத்தில் நிலவிய வெளிநாட்டுத் தொடர்புகளின் இயல்புகள் போன்றவற்றில் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

**அரசர்கள்**

அநுராதபுரத்தில் பண்டுகாபய மன்னனிலிருந்து கடைசி அரசனான ஐந்தாம் மகிந்தன் வரை கீழே தரப்பட்டுள்ள அரசர்களின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக விசேட அவதானத்தைச் செலுத்தி, அநுராதபுர இராச்சியத்தில் அரசியல் வரலாறு தொடர்பாக மாணவர்களுக்கு அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பண்டுகாபய மன்னன்**
    - பண்டுகாபய மன்னனின் இளமைக்காலம் பற்றிய செய்திகள்
    - இயக்கர் குலத்தவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.
    - ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள்.
    - முதன் முறையாக அநுராதபுர கிராமத்தை, நகரமாக்கி, அதனைத் தலைநகராக்கிக் கொள்ளுதல்.
    - கிராமங்களுக்கு எல்லை வகுத்தல்.
    - ஆரிய இனத்தினருக்கும் தேசிய மக்களுக்கும் இடையே ஏற்பட்ட கலப்பினை அது ஏற்பட்ட விதத்தைப் பரிசீலித்தல்.

- **மூத்தசிவ மன்னன்.**
    - பண்டுகாபய மன்னனது காலத்தில் உறுதியான அரசொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தமை மூத்தசிவ மன்னனுக்கு வாய்ப்பாக அமைந்தமை.
    - மகாமேகவனப் பூங்காவை உருவாக்குதல்.

- **தேவானம்பியதிஸ்ஸ மன்னன் (கி.மு. 250 - 210)**
    - அசோகப் பேரரசருடன் கொண்டிருந்த தொடர்புகள்
    - முடிசூடுவதற்காக மௌரியப் பேரரசரிடமிருந்து பஞ்சவஸ்துக்கள் கிடைக்கப் பெற்றமை.
    - மௌரிய முடிசூட்டு முறை இந்நாட்டில் ஸ்தாபிதமடைந்தமை. (ஆரம்பமாதல்)
    - தேவானம்பிய'' எனும் பட்டம் கிடைக்கப்பெற்றமை.
    - பௌத்த மதம் அறிமுகமடைதலும், நாடு முழுவதும் வியாபித்தலும்.
    - பிக்கு, பிக்குணி, பக்தன், பக்தை, என்ற சமயப்பிரிவினர் தோன்றுதல்.
    - புனித வெள்ளரசு மரம் நடப்படல்.
    - புத்தர் பெருமானின் தாதுப்பொருட்களை வைத்து தூபராம தூபியைக் கட்டுதல்.
    - பௌத்த சமயம் அரச மதமாதல்.
    - மகாநாக இளவரசனால் மாகமையைத் தலைநகராகக் கொண்டு உறுகுணை இராச்சியம் உருவாதல்.

- **உத்திய, மகாசிவ, சூரதிஸ்ஸ மன்னர்கள்**
    - சூரதிஸ்ஸ மன்னனது காலத்தில் சேன, குத்திக ஆக்கிரமிப்பு
    - அசேல மன்னனால் நாடு மீட்கப்படலும் எல்லாளனால் ஆக்கிரமிக்கப்பட்டு அவன் அரசனாதலும்.

- **அநுராதபுரக்காலத்தின் முற்பாதியில் காணப்பட்ட பிராந்திய அரசுகள் (உறுகுணை இராச்சியம்)**
    - காவந்திஸ்ஸ மன்னன் காலம்வரையான உறுகுணை வரலாறு
    - உறுகுணை இராச்சியம் தொடர்பான ஆவணங்கள்
    - களனி அரச வம்சம்
    - சமகால ஏனைய அரசுகள்.
    - காவந்திஸ்ஸ மன்னனின் கீழ் உறுகுணை ஐக்கியப்படல்
    - எல்லாள மன்னனுக்கு எதிராக உறுகுணையில் படைகள் ஒன்று திரட்டப்படல்.

- **எல்லாள மன்னன்**
    - அநுராதபுரத்தை ஆக்கிரமித்து, அரசதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலும், 44 ஆண்டுகள் அங்கு ஆட்சிபுரிதலும்.
    - சட்டத்தைப்பேணி நியாயமான மக்கள் விருப்புடன் கூடிய ஆட்சியாளனாயிருத்தல். எல்லாள மன்னனுக்குச் சமகாலத்தில் உறுகுணையில் காவந்திஸ்ஸ மன்னனுடைய ஆட்சி பரவலடைதல்.

- **துட்டகைமுனு மன்னன். (கி.மு. 161-137)**
    - துட்டகைமுனு மன்னன் மகாவம்சத்தில் வீரபுருஷனாக்கப்பட்டுள்ளமை.
    - துட்டகைமுனுவின் வெற்றிகளுக்கு காவந்திஸ்ஸ மன்னனுடைய செயற்பாடுகள் பங்களித்த விதம்.
    - எல்லாள மன்னனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டமும் அதன் வெற்றியும்.
    - நாட்டை ஒன்றுபடுத்தல்
    - இலங்கையின் சிரேஸ்ட மன்னர்களுள் ஒருவனாக வரலாற்றில் இடம் பெறல்.
    - மன்னனுடைய சமய சேவைகள்: ருவன்வெலிசாய, மிரிசவெட்டிய, லோகமகாபாய என்பவற்றை நிர்மாணித்தல்.



***ஆயிரங்கால் மண்டபம் (லோகமகாபாய)***

- **வலகம்மா மன்னன்.(கி.மு. 89- 77)**
  - கல்லாட நாக மன்னனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய மகாரத்தவை கொன்று ஆட்சிக்கு வரல்.
  - வலகம்பாகு மன்னன் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்கள்.
  - மன்னனுக்கு எதிராக ஏற்பட்ட கலவரங்கள்: தீய என்ற பிராமணனின் கலவரம்.
  - தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு: ஏழு பாண்டியரின் படையெடுப்பு
  - ''பெமினதியா'' என்ற பஞ்சம்.
  - படைகளைத் தயார்படுத்தி மீளவும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளல்
  - ஆவணங்களில் ''பிதிமகாராஜ'' என்று குறிப்பிடப்பட்டுள்ளமை.
  - அவனது சமய சேவைகள்.
  - அபயகிரி தூபியை அமைத்து, பிக்கு ஒருவரின் பெயரில் அதனைத் தானமளித்த முதலாவது சம்பவம்.
  - இம்மன்னனது காலத்தில் முதலாவது சமயபேதம் ஏற்பட்டமை
  - திரிபிடகம் இவனது காலத்தில் எழுத்துருப் பெற்றமை.

- **வசப மன்னன். (கி.பி.65-109)**
  - இலம்பகர்ண வம்சத்தின் முதலாவது மன்னனாவான்.
  - இவனது ஆட்சிக்கால ஆவணங்கள் நாடெங்கும் பற்பல பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன: யாழ்ப்பாணம், சித்துல்பவ்வ, திஸ்ஸமகாராமையின் கிழக்கு, குருணாகலை ஆகிய இடங்களில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளமையை உதாரணமாகக் கொள்ளலாம்.
  - வல்லிபுரம் பொற்சாசனம், கொடவாய கல்வெட்டு என்பவற்றில் இடம்பெற்ற விடயங்கள்.
  - சமய நடவடிக்கைகள்: அதிகமான விகாராமைகள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
  - வசப மன்னனுடன் ஆரம்பமான அரச வம்சம் நான்கு நூற்றாண்டுகளுக்கு அண்மிய காலம் வரை நாட்டை ஆட்சி செய்தமை.
  - பெருங்குளம் கட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தமை.

- **மகாசேன மன்னன்.**
  - மகாவிகாரைப் பிக்குகளுடன் கருத்து முரண்பாடு ஏற்படல்.
  - அரசனின் மகாவிகாரைக்கு எதிரான நடவடிக்கைகளால் மக்கள் அவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுதல்.
  - நிகாய (பிரிவு) பேதத்துக்கு வழிவகுத்தமை.
  - சமய, கலாசார முன்னேற்றத்துக்குப் பணியாற்றியமை. மின்னேரி, கோகண்ண, கலந்தக விகாரைகளைக் கட்டியமை.

- குளங்களும், கால்வாய்களும் அமைத்தமை நீர்பாசனத்திற்குப் பெருந் தொண்டாற்றியமை.
- மின்னேரி தெய்வம் எனச் சிறப்பிக்கப்பட்டமை.

- **ஸ்ரீ மேகவண்ண மன்னன்.**
  - மஹாவிகாரையை பழைய நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட்டமை.
  - புனித தந்ததாது இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டமை. பின்னர்அது அபயகிரி விஹாரையில் வைக்கப்பட்டமை.
  - வடஇந்திய மன்னான சமுத்திரகுப்தனுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தமை.
  - புத்தகயாவில் புனித யாத்திரை செல்வோர் தங்குவதற்காக விடுதியைக் கட்டுவித்தமை.

- **II ஆம் ஜெட்டதிஸ்ஸ மன்னனிலிருந்து மித்தசேன மன்னன் வரை (கி.பி. 331-433)**
  - II ஆம் ஜெட்டதிஸ்ஸ, புத்ததாச, I ஆம் உபதிஸ்ஸ
  - மித்தசேன மன்னனின் காலத்தில் பண்டுவின் தலைமையில் ஐந்து பாண்டியர்களின் படையெடுப்பு இடம்பெற்றமை.

- **தாதுசேன மன்னன்.**
  - 27 ஆண்டுகளுக்கு அண்மிய காலம்வரை இந்நாட்டில் நிலவிய அந்நிய ஆட்சியை முற்றுப்பெற வைத்து மீளவும் நாட்டைச் சுதந்திரமடையச் செய்தமை.
  - மௌரிய வம்சத்தினர் மீளவும் ஆட்சிக்கு வரல்.
  - பொருளாதார விருத்திக்காகப் பெருஞ் சேவை புரிந்தமை.

- **காசியப்ப மன்னன்.**
  - அநுராதபுரத்திலிருந்து தற்காலிகமாகச் சீகிரியாவுக்கு தலைநகரத்தை இடம் மாற்றுதல்.
  - பாதுகாப்புக் கோட்டையாக சீகிரியவை நிர்மாணித்தமை, உன்னத படைப்புகளாக சுவர் ஓவியங்கள்,கண்ணாடிச்சுவர்,நுழைவாயில், பூங்காக்கள், தடாகங்கள் நிர்மாணித்தல்.



பாதுகாப்பு அரணாக சீகிரியை வடிவமைத்தல்



சீகிரியத் தோட்டம்

- **மானவர்ம மன்னன்.**
  - மானவர்ம வம்சத்தின் முதல் மன்னனாயிருத்தல்.
  - பல்லவ மன்னனின் உதவியைப் பெற்றுக்கொண்டு அநுராதபுரத்திற்கு மன்னனாதல்
  - அதிகமான சமயக்கட்டடங்களையும் அதிகமான பிரிவெனாக்களையும் அமைத்தல்
  - கலாசார ரீதியான செல்வாக்கு ஏற்படல் :
    உ-ம்: அநுராதபுரத்தின் இசுறுமுனியவிலும் பல்லவ கலைச் செல்வாக்கு காணப்படுகின்றமை. சிங்கள எழுத்துத் தொகுதியில் பல்லவ கிரந்த எழுத்தின் செல்வாக்குக் காணப்படல்.
  - மன்னனின் பெயரின் இறுதிப்பகுதியான "வர்மன்" என்பதுகூட பல்லவரின் செல்வாக்கால் ஏற்பட்டதெனக் கருதமுடியும்.

- **I ஆம் சேன மன்னன்.**
  - இந்தியாவிற்கு தப்பியோடி இருந்த மஹிந்த இளவரசனைக்கொன்று தனது அரச பதவியை உறுதிப்படுத்திக் கொண்டமை
  - அக்காலத்தில் தென்னிந்தியாவில் பலமுற்றிருந்த பாண்டிய மன்னனான ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனால் ஆக்கிரமிக்கப்படல்.
  - சிங்கள அமைச்சர்களிடையே காணப்பட்ட பேதங்களால் சிங்கள படை தோல்வியுற்றமை. வட பிரதேசம் ஆக்கிரமிப்பாளர் கைவசப்படல்.
  - அநுராதபுரத்தின் திறைசேரி உட்பட அனைத்துச் செல்வங்களும் ஆக்கிரமிப்பாளர்களால் கொள்ளையிடப்பட்டமை.
  - மன்னனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்படல்.
  - பாண்டியப்படை திரும்பி இந்தியா சென்ற பின்னர் மீண்டும் ஆட்சியை மீட்டுக்கொள்ளல்.
  - பாண்டியரின் ஆக்கிரமிப்பால் அழிவுற்ற சமயக் கட்டடங்களைப் புனரமைத்ததோடு புதிய விகாரைகளைக் கட்டுவித்தமை.

- **II ஆம் சேன மன்னன்.**
  - பாண்டிய மன்னன் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனின் மகனான ii ஆம் வரகுணவர்மன் தனது தந்தைக்கு எதிராக உதவி கோரி இங்கு வந்தமை.
  - i ஆம் சேன மன்னனின் காலத்தில் ஏற்பட்ட அபகீர்த்தியைப் போக்கிக் கொள்வதற்காக இதனைச் சந்தர்ப்பமாகக் கொண்ட ii ஆம் சேன மன்னன், குட்டக தளபதியின் கீழ் இந்தியாவுக்குப் படையை அனுப்புதல்.
  - குட்டக தளபதி ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனைத் தோற்கடித்து, வரகுணவர்ம பாண்டியனை அரசபீடத்தில் அமர்த்துதல்.
  - I ஆம் சேன மன்னனால் இந்நாட்டிலிருந்து கவர்ந்து செல்லப்பட்ட சொத்துக்களையும் மேலும் பல செல்வங்களையும் இந்நாட்டிற்குக் கொண்டுவருதல்.
  - பாண்டியரை வென்றமையைப்பற்றிய ஆவணங்கள் காணப்படுகின்றமை.
  - சமாதானம் நிலவிய இக்காலத்தில் பௌத்த சாசனத்திற்கும் பொதுமக்களின் நலன்களுக்குமான பல்வேறு சேவைகளைப் புரிந்தமை.

- **V ஆம் காசியப்ப மன்னன்.**
  - ii ஆம் சேன மன்னின் மகனான இவனைப்பற்றி மகாவம்சத்தில் (ii ஆம் பகுதியில்) மிகவும் உயர்வாகக் கூறப்பட்டுள்ளது.
  - சிறந்த கல்விமானான அவன் "தம்பியா அட்டுவா கெடபதய" எனும் நூலை எழுதினான்.
  - பாண்டிய மன்னனான மாறவர்மன் (ii ஆம் இராஜசிங்கன்), i ஆம் பராந்தகன் எனும் சோழ மன்னனுக்கு எதிராக உதவி கோரி இங்கு வரல்.
  - மன்னன் சக்க சேனாதிபதியின் கீழ் பாண்டியருக்கு உதவியாகப் படையை அனுப்புதல்.
  - சிங்களப் படையினரிடையே தொற்று நோயொன்று பரவியமையால் ஆக்கிரமிப்பு வெற்றி பெறவில்லை.
  - சிறப்பான சமய சேவைகளில் ஈடுபட்டமை.

    உ-ம்:

    பௌத்த சங்க சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல், அபிதர்ம பிடகயனவை தங்கத்தட்டில் எழுதுவித்தமை. மஹாவிகாரைக்கும், அபயகிரி, ஜேத்தவன விகாரைகளுக்கும் ஒரே விதமாக உதவிகள் புரிந்தமை, பல்வேறு விகாரைகளைக் கட்டுவித்ததோடு அவற்றிற்கு நிலபுலன்களை வழங்கியமை. அபயகிரி விகாரையின் நிர்வாகம் தொடர்பாகச் சட்டத்திட்டங்களை உருவாக்கியமை.

- **iv ஆம் மஹிந்த மன்னன்.**
  - அநுராதபுரத்தின் இறுதியான சிறந்த மன்னன் இவனாவான்.
  - iii ஆம் கிருஷ்ணன் அல்லது வல்லபன் எனும் இராஷ்டிர கூட மன்னனால் இலங்கை மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படல்.
  - சேன தளதிபதியினால் அவ்வாக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டமை.

- **v ஆம் சேன மன்னன்.**
  - மிகவும் இளவயதில் ஆட்சிபீடமேறியமை.
  - சேன தளபதிக்கும் மன்னனுக்குமிடையே மோதலேற்பபட்டமை.
  - பின்னர் இருவரும் சமாதானமடைதல்.
  - மது போதைக்கு அடிமையானதால் அரச பரிபாலனம் சீர்குலைவுற்றமை.
  - மிக இளவளதிலேயே மரணமுற்றமை.

- **v ஆம் மஹிந்த மன்னன்**
  - அநுராதபுர இராசதானியின் கடைசி மன்னனாவான்.
  - மிகவும் பலவீனமான மன்னனாயிருந்ததால் குடிமக்கள் வரி செலுத்துவதைக் கூட நிராகரித்தனர்.

- படையினருக்குச் சம்பளத்தைக் கொடுக்க முடியாமையால் கேரளக் கூலிப் படையினர் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு கிளர்ச்சி செய்தமை.
- மன்னன் அநுராதபுரத்தைத் துறந்து உறுகுணைக்குத் தப்பியோடல்.
- உறுகுணையில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு அங்கு ஆட்சி புரிதல்.
- i ஆம் இராஜ இராஜ சோழனால் அநுராதபுரம் ஆக்கிரமிக்கப்படல்.
- சோழர்கள் அந்நகரைக் கொள்ளையிட்டு அழித்தொழித்தமை.
- அநுராதபுரத்தைக் கைவிட்டு, பொலன்னறுவையை சோழர்கள் தலைநகராக்கிக் கொள்ளல்.
- i ஆம் இராஜேந்திர மன்னனால் உறுகுணையும் ஆக்கிரமிக்கப்பட்டு, மன்னனையும், குடும்பத்தினரையும் கைதியாக்கி இந்தியாவிற்கு கொண்டுசெல்லல்.

- **பொலன்னறுவை இராசதானி**.
  - தலைநகரம் பொலன்னறுவைக்கு மாற்றப்படுவதற்கான காரணங்கள்.
  - பொலன்னறுவையிலிருந்து உறுகுணைப் பிரதேசத்தை இலகுவாக ஆட்சி புரியலாம்.
  - பொலன்னறுவையை அண்டிய பிரதேசங்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி யடைந்தமை.
  - அநுராதபுரத்தை விட இந்துக் கோவில்களை அமைக்க போதிய நிலபுலன்கள் காணப்பட்டமை.
  - திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து பொலன்னறுவைக்கு மகாவலிக் கங்கையினூடாக படைகளை நகர்த்த முடியுமாயிருந்தமை.
  - 992 ஆம் ஆண்டில் அநுராதபுரத்தை ஆக்கிரமித்து அழிவடையச் செய்த சோழர்கள், அதைக் கைவிட்டு, பொலனறுவையைத் தமது தலைநகராக்கிக் கொண்டமை.
  - பொலன்னறுவைக்கு ‘‘ஜனநாத மங்களம்’’ என பெயர் சூடல்.
  - இராசரட்டையை ‘‘மும்முடிச்சோழ மண்டலம்’’ எனக் குறிப்பிட்டுக் கொண்டமை.
  - 1070 ஆவது ஆண்டுவரையும் சோழப்பேரரசின் பிராந்தியமாக இலங்கையின் வடபகுதி ஆட்சிபுரியப்பட்டமை.

- **i ஆம் விஜயபாகு மன்னனிலிருந்து மாகனின் ஆக்கிரமிப்பு வரை அரசியல் வரலாறு.**
  - உறுகுணையில் காணப்பட்ட அரசியல் நிலைமை.
  - V ஆம் மஹிந்தனின் மகன்மாருள் ஒருவனான கஸ்ஸப்ப, I ஆம் விக்ரமபாகு எனும் பெயருடன் உறுகுணையின் மன்னனாதல்.
  - எனினும் சோழர்களால் இம்முயற்சி முறியடிக்கப்படல்
  - i ஆம் விக்கிரமபாகுவின் பின்னர் உறுகுணையின் அரசியல் நிலை மோசமடைந்தமை.

- கித்தி, மஹாலான கித்தி, லோகேஸ்வர, கேசதாது காசியப்ப, எனும் சுதேச இளவரசர்களும் விக்கிரம பாண்டியன் எனும் வெளிநாட்டு இளவரசர்களும் சோழருக்கு எதிராக உறுகுணையின் தலைமையை ஏற்றுச்செயற்பட முனைந்தமை.
- கித்தி குமாரன், புத்தராஜவின் உதவியுடன் உறுகுணையை ஒன்றுபடுத்தி i ஆம் விஜயபாகு எனும் பெயருடன் அரசனாதல்.
- i ஆம் விஜயபாகுவுக்கு எதிராகச் சோழரால் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகளின் விளைவுகள்.
    - உறுகுணையிலிருந்து தோல்வியுற்று மலைநாட்டில் தலைமறைவாதல்.
    - தம்பலகாமத்தில் இருந்து கொண்டு மன்னன் சோழருக்கு எதிராகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளல்.
    - சோழ ஆக்கிரமிப்பால் பலுட்டகிரிக்குத் தப்பியோடல்.
    - இறுதியாகச் சோழரை வெற்றி கொண்டு பொலன்னறுவையை விடுவித்தல்.
    - வீர இராஜேந்திர சோழனால் அனுப்பப்பட்ட படைக்கு முகங்கொடுக்க இயலாது, வாகிரிகலைக்குப் பின்வாங்குதல்.
    - மகாநாகலையை மையமாகக் கொண்டு மீளவும் சோழருக்கு எதிராகச் செயற்படல்.
    - சோழ நாட்டில் ஏற்பட்ட நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, மகாநாககுலையில் இருந்து மூன்று பக்கமாக படைகளை அனுப்பி பொலன்னறுவையைச் சுற்றிவளைத்துக் கொண்டு தாக்கி, 1070 இல் சோழரைத் தோற்கடித்து பொலன்னறுவையை விடுவித்துக் கொள்ளல்.

- i ஆம் விஜயபாகு மன்னனுடைய செயற்றிறமை.
    - நாட்டைச் சோழ ஆதிக்கத்திலிருந்து மீட்டுக் கொண்டமை.
    - பொலன்னறுவையையே தனது தலைநகராகக் கொள்ளுதல்
    - அரச நிர்வாக நடவடிக்கைகளைப் புனரமைத்தலும் தலதாமாளிகையைக் கட்டுதலும். பர்மாவிலிருந்து குருமாரைத் தருவித்து உபசம்பதாவை மேற்கொள்ளளுதல்.
    - சீர்குலைந்திருந்த நீர்ப்பாசனத் தொகுதியை மீளவும் கட்டமைப்புச்செய்தமை.
    - சோழருக்கு எதிராக பாண்டியருடனும் கலிங்கருடனும் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை.
    - புத்தனாயக்கவிற்கு "பனாகடுவ செப்பு சாசனம்" மூலம் நன்றிக் கடனைச் செலுத்தல்.

- **i ஆம் விஜயபாகுவிலிருந்து i ஆம் பராக்கிரமபாகு மன்னன்வரை இலங்கையின் அரசியல் நிலைமை.**
    - i ஆம் விஜயபாகுவின் மறைவைத் தொடர்ந்து நாட்டில் அரசியல் நிலைமை குழப்பகரமாதல்.

- விஜயபாகு மன்னின் மகனான விக்கிரமபாகு இளவரசனைக் (கஸ்ஸப) கவனத்திற் கொள்ளாது, இளவரசி மித்தாவின் மகன் மானாபரணனை இளவரசனாக நியமித்தமையால் அமைதியின்மை ஏற்பட்டது.
- இதனால் இலங்கை நான்கு அரசர்களின் கீழ் பிரிந்து சென்றமை.
  1. விக்கிரமபாகு - இராசரட்டை - பொலன்னறுவை
  2. மாணாபரன - தக்கிண தேசம் - புங்ககாம
  3. கித்சிரி மேக - தொலொஸ் தஹஸ்ரட்ட - மகாநாககுல
  4. ஸ்ரீவல்லப - அட்டதஹஸ் ரட்ட - உதுன்தொர
- 1153 ஆம் ஆண்டு வரை இலங்கையில் குழப்பகரமான நிலை ஒன்று காணப்பட்டமை.

- i ஆம் பராக்கிரமபாகு மன்னனின் செயற்றிறன் (1140-1186)
  - இளவயதிலேயே தக்கிண தேசத்தின் மன்னனாதல்.
  - இராசரட்டையைக் கைப்பற்றிக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள்.
  - இராசரட்டையைக் கைப்பற்றிக் கொள்வதற்காக கஜபாகு மன்னனுடன் மேற்கொண்ட போர்கள்.
  - மலைநாட்டைக் கைப்பற்றிக் கொள்ளல்.
  - வடமேற்கு, கிழக்கு, பிரதேசங்களை வசப்படுத்திக் கொள்ளல்.
  - பொலன்னறுவையைக் கைப்பற்றுவதற்காக, கஜபாகு மன்னனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளுதல். (சங்கமுவிகாரைக் கல்வெட்டு)
  - மானாபரணனுடன் பராக்கிரமபாகு மேற்கொண்ட போர் நடவடிக்கைகள்.
  - 1153 ஆம் ஆண்டில் பொலன்னறுவையின் அரசனாதல்.
  - சுகலா அரசியை வென்று, புனித தந்ததாதுவையும் பாத்திரதாதுவையும் தமதாக்கிக் கொள்ளல்.
  - 1154 ஆம் ஆண்டில் முழு நாட்டிற்கும் ஏக மன்னனாக மகுடம் சூடப்படல்.
  - பர்மாவை ஆக்கிரமித்தலும் பாண்டியருக்குப் படையுதவி கொடுத்தலும் இதற்கான காரணங்களும் அதன் விளைவுகளும்.

- **ii ஆம் விஜயபாகு அரசனாதல்**
  - பராக்கிரமபாகுவிற்கு புத்திரர்கள் இன்மையால் இவனது சகோதரியின் மகன் அரசனாதல்.
  - கலிங்க வம்சத்திற்கு அரசு உரிமையாதல்.

- **நிஸ்ஸங்கமல்ல மன்னன்.**
  - II ஆம் விஜயபாகு மன்னனின் பின்னர் அவனது இளவரசனாயிருந்த நிஸ்ஸங்கமல்ல மன்னன் அரசனாதல்.
  - i ஆம் பராக்கிரமபாகுவின் பின்னர் பொலன்னறுவையின் அரசர்களுள் இவனே சிரேஷ்டமானவனாவான்.

- சிம்மாசனம் ஏறுகையில் அவன் எதிர்நோக்கிய இடர்பாடுகள்
- அவ்விடர்பாடுகளை எதிர் கொண்டு சமாளித்த விதம்
- தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்:
  - புத்த சமயத்திற்குச் சலுகைகள் வழங்கியமை.
  - நாடெங்கும் பயணஞ் செய்தமை.
  - துலாபாரக் கொடையை வழங்கியமை.
  - குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கியமை.
  - வரிச்சுமையிலிருந்து மக்களை விடுவித்தமை.

- **நிஸ்ஸங்க மல்ல மன்னரின் பின்னர், பொலன்னறுவை இராச்சியத்தின் அரசியல் நிலைமை:**
  - தளபதிகள் பலமடைதல். சிம்மாசனத்திற்கு தாம் நினைத்தவர்களை மன்னர்களாக அமர்த்துதல். ஆட்சியாளர்களை அவர்கள் பொம்மைகளாக நடத்தல்.(கீர்த்தி, பராக்கிரம, ஆயுஸ்மந்த தளபதிகள்.)
  - கலிங்க – பாண்டிய வம்சத்தினரிடையே எழுந்த சிம்மாசனத்துக்கான போராட்டங்கள்
  - லீலாவதி, கல்யாணவதி அரசிகளின் காலத்தில் ஓரளவு ஆட்சி உறுதி காணப்பட்டமை

- **கலிங்க மாகனது ஆக்கிரமிப்பு:**
  - பொலன்னறுவையின் இறுதி ஆட்சியாளனான பராக்கிரம பாண்டியனின் காலத்தில், கலிங்க நாட்டிலிருந்து வந்த மாகனின் ஆக்கிரமிப்பு.
  - 24,000 சேரப் படையுடன் 1215 இல் பொலன்னறுவைக்குள் பிரவேசித்த மாகன், பராகிரமபாண்டியனைப் பதவி இறக்கி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளல்
  - கலிங்க மாகனின் கொடுங்கோன்மையால் நாட்டு மக்களும் பௌத்த பிக்குகளும் இராசரட்டையைக் கைவிட்டு, உறுகுணைக்கும், மலைநாட்டிற்கும், தென்மேற்குத் திசைக்கும் இடம்பெயர்ந்து சென்றமை.
  - இராசரட்டை நாகரீகத்திற்கு அடிப்படையாயிருந்த நீர்ப்பாசனமும் பௌத்த சமயமும் வீழ்ச்சியுற்றமை.
  - உறுகுணைப்பிரதேசம் அடக்கி வைக்கப்பட்டிருந்தமையால் அங்கு மாகனுக்கு எதிரான இயக்கம் வளர்ச்சிப்பெற்றமை.
  - ஆட்சி மையம் தென்மேற்குத் திசைக்கு இடம்மாறியமை

- **ஆட்சிமுறை – அநுராதபுர காலம்.**
  - மன்னராட்சி முறை பெருமளவுக்கு மக்கள் நலன் பேணியதாக இருந்தமை.
  - பண்டுகாபய மன்னன் நகர, கிராம நிர்வாகத்தை முறைப்படுத்தி அமைப்பு ரீயான ஆட்சிக்கு அடிப்படை இட்டிருந்தமை.

- தேவனம்பிய திஸ்ஸ மன்னனின் ஆட்சியின் போது இந்திய ஆட்சி நிர்வாக முறை ஒன்றின் செல்வாக்கிற்குட்பட்டமை.
- நிர்வாகம் சம்பந்தமான பதவிகள் பற்றி ஆவணங்களில் காணப்படுகின்றமை.
- மத்திய ஆட்சியின் வசதிக்காக நாடு பிரதேச அலகுகளாகப் பிரிந்திருந்தமை.
- உறுகுணையின் நிர்வாகத்திற்காக இளவரசர் பதவி, அரச குடும்பத்தவர்களுள் ஒருவருக்கு வழங்கப்பட்டமை.
- தளபதி, பொருளாளர், புரோகிதர், அமைச்சர் போன்ற உயர் பதவிகள் மூலம் நாடு நிர்வகிக்கப்பட்டமை.
- தோவரிக்க, அதெக, அணக, அசிக்காஹக, தண்டநாயக்க எனும் பதவிகள் நிர்வாகத்தின் அடுத்தகட்ட உத்தியோகத்தர்களாவர்.
- கிராம ஆட்சியில் கமிக, பருமக, மபுறுமுக, பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் காணப்பட்டமை.
- அநுராதபுரக்காலத்தின் பிற்பாதியில் நிர்வாகக் கட்டமைப்பில் மாபா, ஏபா, மஹலே, வெத்சம்தருவன், வெலசுன் சம்தருவன், தமிழ்அதிகாரி, மெய்காப்பாளர் எனும் பதவிகளும் சம்பந்தப்பட்டமை

- **சோழர்களின் ஆட்சியின் போது இலங்கையின் அரசியல் நிலைமை**:
  - இராசரட்டையின் சோழ நிர்வாகத்தைப்பற்றி விளக்கமளித்தல்
  - சோழர்கள் பொலன்னறுவையைத் தமது தலைநகராகக் கொண்டு அதற்கு ''ஜனநாத மங்களம்'' எனப் பெயரிடல்.
  - சோழப்பேரரசின் ஒரு பிராந்தியமாக இராசரட்டையைக் கருதி '' மும்முடி சோழ மண்டலம்'' என அதனைக் குறிப்பிட்டமை.
  - சோழதளபதி ஒருவரால் அது நிர்வகிக்கப்படல், உயர் உத்தியோகத்தர்களாக சோழ நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருந்தமை.
  - சோழர்களின் நிர்வாகம் பெருமளவுக்கு இராணுவத்தன்மை பெற்றதாயிருத்தல்.
  - இராசரட்டையின் சகல செல்வங்களையும் சோழர்கள் தமதாக்கிக் கொள்ளல்.
  - நீர்ப்பாசன கட்டமைப்புகளை சிதைவடையச் செய்தல் அவர்களுடைய கொள்கையல்ல என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
  - இலங்கையின் செல்வத்தைச் சோழர்களின் நலனுக்காகப் பயன்படுத்துதல்.
  - தஞ்சாவூர் கோவிலின் பரிபாலனத்திற்காக கிராமங்களை அன்பளிப்புச் செய்தமை.
  - வருடாந்தம் திரட்டப்படும் திறை, வரி, காணிக்கை, என்பன சோழரின் தலைநகருக்கு அனுப்பிவைக்கப்படல்.
  - சோழப்பேரரசரின் கண்காணிப்பின்றி, சோழ உத்தியோகத்தர்கள் தம் விருப்பப்படி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
  - இப்பகுதியை ஆட்சிபுரிவதற்கு சோழப் பேரரசிலிருந்து படையுதவி வழங்கப்பட்டமை.

- **பொலன்னறுவைக்கால நிர்வாக அமைப்பு:**
    - I ஆம் விஜயபாகு மன்னன், அநுராதபுரக்காலத்தில் நிலவிய நிர்வாக முறைமையை அதே விதமாக முன்னெடுத்துச்செல்வதற்கு முயற்சித்தமை.
    - தக்கிண தேசம், உறுகுணைதேசம், என்ற நிர்வாகப் பிரிவுகள் மாபா, ஏபாக்களால் நிர்வகிக்கப்பட்டமை
    - உறுகுணையை இரண்டாகப் பிரித்து தொலொஸ்தஹஸ் ரட்ட, அட்டதஹஸ்ரட்ட என பிற்காலத்தில் ஆண்டமை.
    - நாடு, உறுகுணை, பிஹிட்டி, மாயா, என்று நிர்வாக அலகுகள் மூன்றாக இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

- **யுத்ததந்திரம்**
    - பூரண பாதுகாப்பு முறை கையாளப்பட்டது.
    - கோட்டைகள் (விஜிதபுர, சிகிரி, யாப்பகுவ) கட்டப்பட்டன.
    - நீர் அகழிகள் அமைக்கப்பட்டமை (வசபமன்னன்)
    - முறையான இராணுவ அமைப்பும் செயற்பாடும் நிலவியது. (துட்டகைமுனு, மகா பராக்கிரமபாகு மன்னர்கள்)
    - நாற்படைகள் (யானை, குதிரை, காலாள், தேர்) காணப்பட்டமை.
    - யுத்தங்களும், யுத்ததந்திரங்களும் பற்றிய நூல்களை மன்னர்கள் கற்றனர். (i ஆம் பராக்கிரமபாகு கௌடில்யரின் ‘‘அர்த்தசாஸ்த்திரத்தைக் கற்றமை)
    - எதிரிகளைத் திசைதிருப்புவதற்கு உபாயங்கள் கையாளப்பட்டன. (துட்டகைமுனு, பராக்கிரமபாகு.)
    - கீழைத்தேய யுத்த தர்மம் கைக்கொள்ளப்பட்டமை.
      உம்: துட்டகைமுனு எல்லாளனுக்கிடையே மூண்ட போர், i ஆம் பராக்கிரமபாகு மன்னன், கைதியான ii ஆம் கஜபாகு மன்னனை உரிய கௌரவத்துடன் நடத்தியமை.

- **வெளிநாட்டுறவு.**
    - வெளிநாடுகளுடன் கொண்டிருந்த உறவுகளும் அவற்றின் விளைவுகளும்
    - இலங்கையின் அமைவிடம் வெளிநாட்டுத் தொடர்புகளில் கொண்டிருந்த முக்கியத்துவம்.
    - கிழக்கு மேற்குத் தொடர்புகளுக்கான மையம்.
    - இந்தியாவுக்கு அருகிலுள்ளமையால், இந்தியாவுடனான தொடர்புகள் முக்கியத்துவமாயிருந்தமை.
    - அரசியல், கலாசார ரீதியான இந்திய உறவுகள்
    - மேற்கிந்திய தொடர்புகள் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமை.

- **அநுராதபுரக் காலத்தில் இந்தியாவுடனான தொடர்புகள்**.
    - பௌத்த சமய அறிமுகம் மௌரிய வம்ச சம்பிரதாயத்துக்கு அமைவான முடிசூட்டு விழாவுக்கான பஞ்சவஸ்துக்கள் இங்கு அனுப்பப்பட்டமை
    - இந்திய மன்னர்கள் பாவித்த பதவிகள், பட்டங்களை எமது மன்னர்களும் கையாண்டமை.
    - மௌரிய, குப்த யுகங்களில் கொண்டிருந்த தொடர்புகள்.
    - ஆக்கிரமிப்புகள், இடம் பெயர்வுகள் தொடர்பான உறவுகள்.
    - இக்காலகட்டத்தில் இந்திய ஆக்கிரமிப்புகள் பல நிகழ்ந்தமை.
        - சேன, குத்திக, எல்லாளன், பூலஹத்தன் உட்பட பஞ்ச திராவிடர்கள், பண்டு பாரிந்தவுடனான ஐந்து பாண்டியர்கள், கரிகாற் சோழன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், i ஆம் பராந்தக சோழன், iii ஆம் ராஜராஜ சோழனும் i ஆம் ராஜேந்திர சோழனும்

- **புலப்பெயர்வுகள்:**
    - சங்கமித்தை பிக்குணியுடன் வருகை தந்த 18 கலைக் குழுவினரின் வருகை.
    - சிங்கள மன்னர்கள் இந்தியாவிலிருந்து படையுதவி பெற்றமை:
      இளநாகன், i ஆம் முகலன், அபயநாகன், iii ஆம் அக்ரபோதி, மானவர்மன் ஆகிய மன்னர்கள்.
    - இந்திய மன்னர்கள், இலங்கையில் இருந்து படையுதவி பெற்றமை:
      ii ஆம் வரகுணவர்மன், மாறவர்மன், ii ஆம் இராஜசிங்க எனும் மன்னர்கள் மற்றும் இரண்டாம் சேன மன்னன் பாண்டிய நாட்டை ஆக்கிரமிக்க சேனை ஒன்றை அனுப்பியமை.
    - விவாகத் தொடர்புகள்: மதுரை இளவரசி, புத்தகச்சாயனா அரசி, iv ஆம் மஹிந்த மன்னன் கலிங்க இளவரசியை மணந்தமை.
    - நட்புறவுத் தொடர்புகள்: கஜபாகு மன்னர், சோழர்களுக்கு எதிராகச் சேர மன்னருடன் நல்லுறவு பூண்டிருந்தமை.
    - இந்தியக் கடலில் படைகளின் வருகையும் அது தொடர்பான விளைவுகளும்.
    - உரோமாபுரியின் குளோடியஸ் மன்னன் ருவன்வலிசாயவை அலங்கரிப்பதற்காக பாதிகாபய மன்னனது காலத்தில் கண்ணாடி மணிகளை இலங்கைக்கு அனுப்பியமை.

- **பொலன்னறுவை யுகத்தின் வெளிநாட்டுத் தொடர்புகள்**:
    - i ஆம் விஜயபாகு, i ஆம் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்ல மன்னன் எனும் முக்கியமான மன்னர்களுடனான தொடர்புகள்.
    - அரசியல், பொருளாதாரம், கலாசாரத்துறையிலான தொடர்புகள்.
    - i ஆம் விஜயபாகு மன்னன், சோழருக்கு எதிரான மன்னர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள்.
      உ-ம்:
      ஜகதிபாலவின் மகளான லீலாவதியை தனது பட்டத்து இராணியாக்கிக் கொள்ளல், கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை மணந்து கொள்ளல். தனது சகோதரியான

மித்தா இளவரசியைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுத்தல். தனது புதல்வனான விக்கிரமபாகு இளவரசனுக்கு சுந்தரி எனும் கலிங்க இளவரசியை மணமுடித்துக் கொடுத்தல். மேலை சாளுக்கிய இராச்சியத்திற்கு காணிக்கைகளை அனுப்பி நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல்.

- இவ்விவாகத் தொடர்புகளால் கலிங்க, பாண்டிய வம்சத்தவர்கள் இலங்கையின் சிம்மாசனத்துக்கு உரிமை கோரும் நிலை ஏற்பட்டது.
- இதனால் கலிங்க, பாண்டிய மோதல் பொலன்னறுவைக்காலம் முழுதும் பரவலாக இடம்பெற்றமை.
- பர்மாவுடன் வியாபாரத் தொடர்புகளை மேற்கொண்டு பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொண்டமை.
- பர்மாவிலிருந்து உபசம்பதாவைத் தருவித்து மீளவும் பௌத்த சமயத்தைப் புத்துணர்ச்சி அடையச் செய்தமை.

- **I ஆம் பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுத் தொடர்புகள்**
    - பர்மிய ஆக்கிரமிப்பு
    - ஆரம்ப காலத்தில் பர்மாவுடன் நல்லுறவைப் பேணினாலும் பிற்காலத்தில் அத்தொடர்பு சிதைவடைந்து பர்மாவை ஆக்கிரமித்தல்
    - பர்மிய ஆக்கிரமிப்பின் பின்னர் மீண்டும் வர்த்தக, சமயத் தொடர்புகள் உறுதியடைந்தமை.
    - பாண்டிய நாட்டுக்குப் படையுதவி கொடுத்தல்: சோழருக்கு எதிராக பாண்டியர்கள், பராக்கிரமபாகுவிடம் உதவிகோரிய போது அதற்கிணங்கி பாண்டிய நாட்டுக்குப் படையுதவி புரிந்தமை. நீண்ட காலமாக சோழருக்கு எதிராகப் படை நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
    - கம்போடியாவுடன் சம்பந்தங்களைக் கொண்டிருந்தமை
    - இலங்கையின் இளவரசி ஒருத்தி, திருமணத் தொடர்புக்காக அங்கு அனுப்பப்பட்டமை.
    - பொலன்னறுவை இராச்சியத்திலும், அரச மாளிகையிலும் சீன நாணயங்களும், மண்பாண்டத் துண்டுகளும் கிடைக்கப்பெற்றிருக்கின்றபடியால் சீனாவுடனும் உறவுகள் கொண்டிருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை.

- **நிஸ்ஸங்கமல்லனது வெளிநாட்டுத் தொடர்புகள்.**
    - சோழருக்கு எதிராக தென்னிந்திய அரசுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தமை. சாளுக்கிய, கலிங்க, குஜராத், ஆந்திரா, பீமா ஆகிய நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததாக தனது கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளான்.
    - நாற்படைகளும் சூழ, தென்னிந்தியாவுக்குச் சென்றதாக இராமேஸ்வரக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - பராக்கிரமபாகு மன்னனைப்போன்றே நிஸஸங்கமல்ல மன்னனும் சோழருக்கு எதிராகப் பாண்டிய இளவரசர்களுக்கு உதவி புரிந்துள்ளான்.

- **சமயமும், கலாசாரமும்.**
    - இலங்கையில் பௌத்த சமயம் நிலைபெறுதலும் பரவலடைதலும்
    - இந்தியப் பின்னணி
        - அசோகப் பேரரசின் சிறப்பான கவனத்திற்கு இலங்கை உட்பட்டிருந்தமை.

- **இலங்கையில் பௌத்த சமயம் ஸ்தாபிக்கப்பட்டமை.**
    - மகிந்த தேரரின் வருகை.
    - இளவரசன் அரிட்டன் உட்பட்ட குழுவினர் துறவு பூண்டமையுடன் பௌத்த சாசனம் நிறுவப்படல்.
    - மகாமேகவனம் தானமளிக்கப்படலும் அங்கு மகாவிகாரை கட்டப்படலும்.
    - தூபாராம தூபி கட்டப்படல்.
    - புனித வெள்ளரசு மரம் கொண்டுவரப்படலும் அது நாட்டப்படலும்.
    - புனித வெள்ளரசு மரத்திற்கு வணக்க, வழிபாடுகள் நிகழ்த்துவதற்கும் அதைப் பரிபாலிப்பதற்கும் 18 குலத்தவர்கள் இங்கு வருகைத் தந்தமை.
    - அனுலாதேவி பிக்குணியாதலும், பிக்குணி சாசனம் தோற்றுவிக்கப்படலும்.
    - விகாரைகளும், தூபிகளும் கட்டப்படுதலும் பௌத்த கட்டடங்கள் உருவாதலும்.

- **பௌத்த சமயம் பரவுதலுக்கான காரணங்கள்.**
    - தேவானம்பிய திஸ்ஸ மன்னர் பௌத்த சமயத்தை தழுவுதல்.
    - பௌத்த சமயத்திற்கு அரச அனுசரணை கிடைத்தல்.
    - அது அகிம்சை வாத சமயமாயிருத்தல்.
    - அதுவரை இந்நாட்டில் முறையான சமயம் ஒன்று காணப்படாமை.
    - அரசர்களும், அமைச்சர்களும் விகாரைகளையும் தூபிகளையும் கட்டுவித்தமை.

- **பௌத்த சமயத்தின் பரம்பல்.**
    - பௌத்த சமயம் அரச மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமை.
    - பிக்கு, பிக்குணி சாசனங்கள் ஆரம்பிக்கப்பட்டமையும் அது நாடுபூராகவும் பரவியமையும்.
    - மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேதவன விகாரை என்பவற்றை மையமாகக் கொண்டு பிக்குகள் சாசனமும், கல்வியும் பரவலடைந்தமை.
    - கித்சிரி மேவ மன்னனின் காலத்தில் புனித தந்தம் இங்கு கொண்டுவரப்பட்டமை.
    - இலங்கையில் மகாயான பௌத்தத்தின் செல்வாக்கு ஏற்பட்டமை.
    - கீழைத்தேய தேரவாத பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாக இலங்கை திகழ்ந்தமை.
    - நாடு முழுவதும் பௌத்தம் பரவியிருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை.

- **வேறு சமயங்கள்.**
  - ஜைண (சமண) சமயம்.
    - வலகம்பாகு மன்னனின் காலத்தில் கிரி எனும் குருவைப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டமை.
  - இந்து சமயம்.
    - மகாசேன மன்னனின் காலத்தில் சிவதேவாலயங்கள் அழித்தொழிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றமை
    - பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமயத்தின் வணக்க வழிபாடுகளும், நம்பிக்கைகளும் பரவலடைந்தமை
    - சிவ, பார்வதி, இலட்சுமி சிலைகள் காணப்படுகின்றமை
  - பிராமணிய செல்வாக்கு
    - வலகம்பாகு மன்னனின் காலத்தில் தீய என்ற பிராமணன் கலவரம் புரிந்தமை
    - அநுராதபுர யுகத்தின் பிற்பாதியில் தென்னிந்திய மக்கள் இந்நாட்டிற்கு வருகை தந்ததுடன் அந்நாட்டின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், இந்நாட்டில் செல்வாக்குப் பெற்றமை.



***பொலன்னறுவை சிவன் கோயில்***

- **கலையும் கலாசாரமும்.**
  - கட்டடக்கலை: தூபிமனை, போதிமனை, சிலைமனை, விகாராராமை, வைத்தியசாலை, தானசாலை, பொய்கை.
  - கட்டடங்கள் பற்றிய மூலாதாரங்கள்.
  - குகை நிர்மாணம்: தம்புளை




***பொலன்னறுவைக்கால சந்திர வட்டக்கல்***



***கணபதி உருவம் (1065 - 1120)***



***நடராஜா உருவம்***

- தூபிகள்: தூபிகளின் வடிவமைப்பு, பிரதான அங்கங்கள், இராசரட்டையின் பிரதான தூபிகள், தூபிகளுடன் இணைந்த புதியவைகள், தூபிகளை நிர்மாணித்த மன்னர்கள்.
- சித்திரக்கலை: சீகிரி சித்திரங்கள், ஹிந்தகல சித்திரங்கள், திவங்க சிலை மனை சித்திரங்கள்.




***அபயகிரி தானசாலை***



***திவங்க சிலை மனை சித்திரங்கள்***

- சிற்பக்கலை: புத்த சிலைகள், அதன் வெளிப்பாடுகள், புகழ்பெற்ற புத்த சிலைகள், போதிசத்வ சிலைகள்

  உம்:- சமாதிசிலை, கல் விகாரைசிலைகள்.
- செதுக்கல்களும் சிலைகளும்: சந்திரவட்டக்கல், வாமனர்கள், காவற்சிலைகள், கொரவக்கல், நுழைவாயில், தெய்வ, மனித உருவங்கள்.



***மிகிந்தலை கண்டக சைத்திய நுழைவாயில்***



***காவற்கல்***

- **கல்வி:**
    - பன்சலை, பிரிவெனாக்கள், பிக்குகள் ஊடாகப் பரவிச்சென்ற கல்வி
    - பாளி, சமஸ்கிருத, சிங்கள மொழிகளின் பாவனை
    - மகாவிகாரை, அபயகிரி, ஜேதவனாராமய, சித்துல் பவ்வ போன்ற பௌத்த கல்வி நிலையங்கள்.
- **மொழி:**
    - பௌத்த சமயத்தின் வருகையுடன் மொழி, எழுத்துக் கலைகளின் விருத்தி
    - எழுத்துத் தொகுதியின் பரிணாமம்
    - எழுத்துக் கலை
    - தழிழ் மொழியின் வளர்ச்சி
    - பொலன்னறுவைக் காலத்தில் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- **இலக்கியம்:**
    - பாளி சமஸ்கிருத, சிங்கள இலக்கியங்கள்.
    - இலக்கிய நூல்கள்
        - ஹெல அட்டுவா கிரந்தம், பாளி இலக்கியம், சீகிரி கிறுக்கல் கவிதைகள், Iஆம் அக்கிர போதி மன்னனின் காலத்தில் 12 பெருங்கவிஞர் வாழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளமை. ஜானகி ஹரண
    - வம்சக்கதைகள்.
    - இலக்கியச் செயற்பாடுகளில் மன்னர்களின் பங்களிப்பும் படைப்பும்.

      உ-ம்:

      குமாரதாச மன்னன் (ஜானகிஹரணய), IIஆம் முகலன் மன்னன், Iஆம் அக்கபோதி மன்னன், IVஆம் சேன மன்னன், (சியபஸ்ஸகர) Vஆம் காசியப்ப மன்னன் (தம்பியா அட்டுவா கெட்டபதய) Iஆம் விஜயபாகு மன்னன்.
    - இராசரட்டை நாகரிகத்தில் கவிதை இலக்கிய நிர்மாணங்களும், படைப்பாளிகளும்
- **பொருளாதாரம்**
    - விவசாயம்
        - பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக மூலாதாரங்களிலிருந்து தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை.
        - விவசாயம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெறுவதற்கான காரணிகள்
        - விவசாய முறைகள்: சேற்று நிலச்செய்கையும் சேனைச் செய்கையும்.
        - விவசாய உபகரணங்களும், தொழிநுட்பங்களும் ஆவணங்களின் மூலம் இது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை.

          உ-ம்: தோணிக்கல் கல்வெட்டு
        - விவசாயமும் அதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களும்.
        - விவசாயத்தை விருத்தி செய்வதில் ஈடுபட்ட ஆட்சியாளர்கள்.

- **நீர்ப்பாசனம்**
    - விவசாயத்தின் முன்னேற்றத்திற்கு நீர்பாசனத்துறை வழங்கிய உதவிகள்
    - நீர்ப்பாசனத்தில் நாட்டம் செலுத்திய மன்னர்கள்.
    - பெருங்குளம் கட்டிய முதல்வனான வசப மன்னன் 11 குளங்களையும், 12 கால்வாய்களையும், நிர்மாணித்தான்.
    - மகாசேன மன்னன், மின்னேரி, ஹுருளு, கவுடுளு, மகாகணாதரா, உட்பட 16 குளங்களை வெட்டுவித்தான். பாரியளவிலான கால்வாய் ஒன்றையும் அமைத்தான்.
    - தாதுசேன மன்னன் கலா - பளளு வாவி உட்பட 18 குளங்களை வெட்டுவித்ததோடு, நீர்ப்பாசனத்துறையின் மாபெரும் நிர்மாணங்களில் ஒன்றான ஜய கங்கை எனும் யோத வாவியை நிர்மாணித்தான்.
    - Iஆம் அக்போ மன்னன் மிஹிந்தலா, குறுந்து, ஹிரிவடுன்ன வாவிகளையும் அமைத்ததோடு, மினிப்பே (மணிமேகலா) அணையைக் கட்டி அதிலிருந்து கால்வாயையும் கட்டுவித்தான்.
    - IIஆம் அக்போ கிரித்தலை, கந்தளாய்க் குளங்களைக் கட்டுவித்தான்.
        - மானவம்மன் எட்டுக் குளங்களைக்கட்டுவித்தான்.
        - பொலன்னறுவைக் காலத்தில், Iஆம் விஜயபாகு அழிவுற்றிருந்த குளங்களையும், கால்வாய்களையும் புனரமைத்தான்.
        - மகா பராக்கிரமபாகு மன்னன் பராக்கிரம சமுத்திரம் உட்பட பெருங்குளங்களையும், கால்வாய்களையும் நிர்மாணித்து நீர்பாசனத்திற்கு ஆற்றிய பெருந்தொண்டு.

- **வியாபாரமும், கைத்தொழிலும்.**
    - வியாபாரம்:
        - இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள வியாபார வழிகள்
        - வியாபாரமும் இலங்கையில் குடியேற்றங்கள் உருவானமையும்.
        - உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரமும், வர்த்தக சந்தையும்.
        - இலங்கையுடன் நெருக்கமாக வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகள்.
        - ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்.
        - பிரதானமான துறைமுகங்கள்
        - வர்த்தகப் பொருட்களைக் கையாளும் போக்கு
        - பணப் பரிமாற்றம் இடம்பெற்றமை
        - வர்த்தக அமைப்புகளும் வர்த்தகத் தரங்களும்
        - வெளிநாட்டு வியாபாரத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள்
    - கைத்தொழில்
        - 18 தொழில் கலைஞர்களின் வருகை (வம்சக் கதைகள்)
        - ஆவணங்கள், இலக்கிய மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் கைத்தொழில் தகவல்கள்

- தொல்பொருள் எச்சங்கள்
- கைத்தொழிலும் அவற்றிற்குப் பயன்படுத்திய உபகரணங்களும்

- **விஞ்ஞானமும் தொழினுட்பமும்**
  - நீர்ப்பாசனத் தொழினுட்பம்

    குளமொன்றின் முக்கியமான அங்கங்கள்: கலிங்கற்றொட்டி, அணைக்கட்டு, மதகு, சுருங்கை, அலைதாங்கி, கலிங்கல் அணை குளத் தொகுதியின் சிறு குளங்கள்
  - கட்டடக் கலை: தூபிமனை, சிலைமனை, போதிமனை, விஹாராராம, வைத்தியசாலை, தூபி, அரசமாளிகை



***நீர்ப்பாசனத் தொழினுட்பம்***



***அரச மாளிகை***

- வைத்தியத் தொழினுட்பம்: மிஹிந்தலையிலும் பொலன்னறுவையிலும் வைத்தியசாலைகளின் சிதைவுகள் கண்டறியப்பட்டமை.
  - வைத்திய உபகரணங்களும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களும்
  - புத்ததாச மன்னன் காலத்தில் சீரான வைத்திய முறையொன்று நிலவியமை
  - அநுராதபுர காலத்தில் வைத்திய நடவடிக்கைகளுக்குப் பணியாற்றிய அரசர்கள்

- **உலோகத் தொழினுட்பம்.**
  - கப்பல் தொழினுட்பம்: இந்தியா உட்பட ஏனைய பல நாடுகளுடனும் தொடர்புகளைக் கொள்வதற்கான முன்னேற்றகரமான கப்பல் தொழினுட்பம் ஒன்று காணப்பட்டமை.

    உ-ம்:

    இந்தியாவுக்குத் தூதுக் குழுக்களை அனுப்புதல், உரோமாபுரிக்குத் தூதுக் குழுக்களை அனுப்பியமை. இளநாகன் போன்ற மன்னர்கள் இந்தியாவுக்குத் தப்பிச் செல்லுதல், கஜபாகு மன்னனால் புரியப்பட்ட இந்திய ஆக்கிரமிப்பு விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் பர்மா போன்ற நாடுகளுடன் தொடர்புகள் வைத்திருந்தமை. பர்மிய ஆக்கிரமிப்பு, பாண்டிய ஆக்கிரமிப்பு போன்றவற்றிற்காக பராக்கிரமபாகு மன்னன் கப்பல்களைக் கட்டியதாக தெரிய வருகின்றது.



***பொலன்னறுவை ஆலாஹன பிரிவென வைத்தியசாலை***





***ஆலாகன பிரிவென வைத்தியசாலையில் கண்டெடுக்கப்பட்ட உபகரணங்கள்***

**கணிப்பீடும் மதிப்பீடும் 1**

**கீழ்வரும் வினாக்களுக்கு விடையளித்தல்.**

***1, 2 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க X, Y தொகுதிகளைப் பாவிக்க. இவை பொருத்துமாறு ஒன்றிணைத்தால் பெறப்படும் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.***

1.

| X | Y |
|---|---|
| I. வேவல்கெட்டிய கல்வெட்டு | A. வர்த்தகச்சந்தை ஒன்றின் சட்டதிட்டங்கள் |
| II. கொண்டவட்டவான் கல்வெட்டு | B. அரசர்கள் இருவருக்கிடையே செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம். |
| III. ஹோபிட்டிகம தூண் கல்வெட்டு | C. கிராம நீதி, நிர்வாக சட்டத்திட்டங்கள் |
| IV. கொடவாய கல்வெட்டு | D. கிராம ஆட்சிபற்றிய சட்டத்திட்டங்கள் |
| V. சங்கமு விகாரைக் கல்வெட்டு | E. துறைமுகத்திலிருந்து அறவிட்ட தீர்வை வரி |

1. EDABC 2. DEABC 3. CBDAE 4. CDEAB 5. BEADC (.............)

2.

| X | Y |
|---|---|
| I. துட்டகைமுனு | A. ரிவிதேவ |
| II. வலகம்பா | B. கபிசீய |
| III. தாது சேன | C. நந்திமித்த |
| IV. I ஆம் விஜயபாகு | D. மிகார |
| V. I ஆம் பராக்கிரமபாகு | E. லங்காபுர |

1. EDABC 2. DEABC 3. CBDAE 4. CDEAB 5. BEADC (.............)

***3, 4 ஆம் வினாக்களுக்கு தலைப்பொன்றின் கீழ் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று குறிப்பிட்ட தலைப்பிற்குப் பொருத்தமற்றது. அதனைக் கண்டறிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது இடுக.***

3. இராசரட்டையில் சோழரின் ஆட்சி

a. Iஆம் இராஜேந்திரன் இலங்கையை ஆக்கிரமித்து Vஆம் மகிந்த மன்னனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு சென்றான்.

b. சோழரின் நிர்வாக மத்தியஸ்தானமாக இருந்தது பொலன்னறுவையாகும்.

c. இலங்கையின் சோழர் ஆட்சி நிலவிய பிரதேசத்தை உள்ளடக்கிய நிர்வாக அலகு ‘‘மும்முடிச்சோழ மண்டலம்’’ எனப்பட்டது.

d. திருகோணமலையில் வெல்கம விகாரை சோழரின் ஆட்சியின் போது ‘‘ராஜராஜ பெரும்பள்ளி’’ என்று குறிப்பிடப்பட்டது.

e. சோழர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிய கலிங்க மாகன் இராசரட்டையில் தனது ஆட்சியை நிலைநிறுத்தினான். (.............)

4. பொலன்னறுவையின் பொருளாதாரம்.

a. அநுராதபுரக்காலத்தில் ஆரம்பமான நீர்ப்பாசனத் தொகுதி பொலன்னறுவைக் காலத்தில் உச்ச நிலையை எய்தியது.

b. பொலன்னறுவைக் காலத்தில் பெருங்குளங்கட்டிய சிரேஷ்ட மன்னன் நிஸ்ஸங்கமல்லனாவான்.

c. தோப, தும்புதுலு, எரமுது வாவிகளை ஒன்றிணைத்தே பராக்கிரம சமுத்திரம் நிர்மாணிக்கப்பட்டது.

d. வெளிநாட்டு வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பிரச்சினை ஒன்றாலேயே I ஆம் பராக்கிரமபாகுவின் பர்மியப்படையெடுப்பு இடம்பெற்றது.

e. ஊராதோட்டை, பொலன்னறுவைக் காலத்தில் வர்த்தகம் இடம்பெற்ற முக்கியமான துறைமுகமாகும். (.............)

**சரியான விடயங்களைத் தெரிவு செய்து அதன் எழுத்துக்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

5. I ஆம் விஜயபாகு மன்னன்.

a. நாட்டை ஐக்கியப்படுத்தல்

b. உபசம்பதாவை நடத்தி பிக்குகள் சாசனத்தை மீளவும் அமைத்தமை.

c. கலிங்க மாகனைத் தோலியுறச்செய்தமை.

d. திபெத்துடன் சமயத் தொடர்புகளைப் பேணியமை. (.............)

6. வலகம்பா மன்னனின் ஆட்சிகாலம்.

a. புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமை

b. ஏழு திராவிடர்களின் ஆக்கிரமிப்பு

c. திரிபிடகம் எழுத்துருப்பெற்றமை.

d. மௌரிய - இலம்பகர்ண மோதல், ஆரம்பமானவை. (.............)

**சரியான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் இடுக.**

7. அநுராதபுரத்தில் கட்டப்பட்டுள்ள தூபிகளின் சரியான வரிசைப்படுத்தல் எது?

a. தூபராம, மிரிசவெட்டி, ருவன்வெலிசாய, அபயகிரி, ஜேதவன

b. தூபராம, ருவன்வெலிசாய, அபயகிரி, மிரிசவெட்டி, ஜேதவன

a. தூபராம, மிரிசவெட்டி, அபயகிரி, ருவன்வெலிசாய, ஜேதவன

b. தூபராம, அபயகிரி, மிரிசவெட்டி, ருவன்வெலிசாய, ஜேதவன

c. தூபராம, ஜேதவன, மிரிசவெட்டி, அபயகிரி, ருவன்வெலிசாய (.............)

8. அநுராதபுர மன்னர்களின் சரியான வரிசைப்படுத்தல் எது?

a. சத்தாதிஸ்ஸ, துலந்தன, கல்லாடநாக, லஞ்சதிஸ்ஸ, வட்ட காமினி அபய

b. சத்தாதிஸ்ஸ, கல்லாடநாக, துலந்தன, லஞ்சதிஸ்ஸ, வட்ட காமினி அபய

c. சத்தாதிஸ்ஸ, துலந்தன, கல்லாடநாக, வட்ட காமினி அபய, லஞ்சதிஸ்ஸ

d. சத்தாதிஸ்ஸ, வட்ட காமினி அபய, கல்லாடநாக, துலந்தன, லஞ்சதிஸ்ஸ

e. சத்தாதிஸ்ஸ, துலந்தன, லஞ்சதிஸ்ஸ, கல்லடாநாக, வட்ட காமினி அபய

(.............)

**கணிப்பீடும் மதிப்பீடும் 2**

**கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. I. வட்டகாமினி அபய மன்னனுக்கு முகம்கொடுக்க நேர்ந்த சவால்கள் யாவை? (புள்ளிகள் 07)

   II. அவன் அச்சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெற்ற விதத்தை விளக்குக. (புள்ளிகள் 07)

2. மகாபராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுத் தொடர்புகளை விமர்சன ரீதியில் ஆராய்க. (புள்ளிகள் 14)

3. Iஆம் விஜயபாகு மன்னன் பொலன்னறுவைக் காலத்தில் ஆட்சி புரிந்த சிரேஷ்டமான அரசனாவான். கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் இக்கூற்றை ஆராய்க.

   I. வெளிநாட்டு ஆதிபத்தியத்திலிருந்து நாட்டைமீட்டலும் நாட்டை ஐக்கியப்படுத்தலும். (புள்ளிகள் 07)

   II. அவனுடைய பௌத்த சாசன செயற்பாடுகள் (புள்ளிகள் 07)

4. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் தேவனம்பிய திஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக.

   I. மௌரியப் பேரரசுடன் அரசனின் அரசியல் தொடர்புகள் (புள்ளிகள் 04)

   II. புத்த சாசனத்தை ஆரம்பித்தல் (புள்ளிகள் 05)

   III. கலாசார விருத்தி. (புள்ளிகள் 05)

5. "துட்டகைமுனு மன்னனின் செயற்றிறனை உன்னதப்படுத்தி மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது."

   I. இம்மகாவம்சத்தின் ஆசிரியர் யார்? (புள்ளிகள் 01)

   II. துட்டகைமுனு மன்னனுக்கு முன்னர் மகாகாமையை ஆட்சிபுரிந்த மன்னர்கள் இருவரைப் பெயர் குறிக்க. (புள்ளிகள் 02)

   III. துட்டகைமுனு மன்னனின் சாதனையை விளக்கமாக குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

   IV. மகாவம்சத்தின் ஆசிரியரால் துட்டகைமுனு மன்னனின் செயலாற்றலின் உன்னத தன்மை எடுத்தாளப்பட்டிருக்கும் விதத்தைப் பரிசீலிக்க. (புள்ளிகள் 07)

6. கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு முடியும் வரை நீர்ப்பாசன முறை விருத்தியுற்ற தன்மையை கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் பரிசீலனை செய்க.

   I. குளங்களையும், கால்வாய்களையும் நிர்மாணிப்பதில் அரசர்கள் ஆற்றிய பங்களிப்பு (புள்ளிகள் 07)

   II. நீர்பாசனத் தொழினுட்பம். (புள்ளிகள் 07)

7. இராசரட்டை நாகரீகத்தில் காணப்பட்ட தொழினுட்பத்தை விளக்கிக் கூறுக. (புள்ளிகள் 14)

**கணிப்பீடும் மதிப்பீடும் 3**

1. கீழே தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுக: அநுராதபுரம், சித்துல்பல்வ, குருணாகல், திஸ்ஸமகாராம, சீகிரிய, பொலன்னறுவ, வாக்கிரிகல, மகாநாககுல, மின்னேரி வாவி, ஹுருளு வாவி, திஸாவாவி. யோத வாவி, கலாவாவி, கிரித்தலை வாவி, கந்தளாய்க்குளம், பராக்கிரம சமுத்திரம், ஜயகங்கை, மினிப்பே கால்வாய்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படைப் பலவீனப் பட்டமையால் அதன் சீர்குலைவும், வீழ்ச்சியும் ஏற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற்பேறுகள்** :

- இராசரட்டையின் நாகரிகத்தின் அடிப்படைப் பலவீனப் பட்டதற்கான காரணங்களை விளக்குவார்.
- இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

**பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.**

பல நூற்றாண்டுகளாக முன்னேற்றத்துடன் திகழ்ந்த நீர்வள நாகரீகம் கி.பி.13ஆம் நூற்றாண்டாகும் போது படிப்படியாக வீழ்ச்சியுற்று இலங்கையின் தென்மேல் பகுதிகளுக்குத் தலைநகர்கள் இடம் பெயர்வதைக் காணக்கூடியதாயிருந்தது. அவ்வாறு வெற்றிகரமாகத் திகழ்ந்த இராசரட்டை நீர்வள நாகரிகம், சீர்குலைவதற்கும், வீழ்ச்சியடைவதற்குமான காரணங்களைக் கலந்துரையாடுதல் இந்த அலகின் நோக்கமாகும்.

**5.3. இராசரட்டை நாகரிகத்தின் சீர்குலைவும், வீழ்ச்சியும்.**

- அநுராதபுர இராச்சியத்தின் இறுதி அரைப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசர்கள் சிலர் பலவீனமாயிருந்தமை.
  உ-ம்: Vஆம் சேன, Vஆம் மகிந்த எனும் அரசர்கள்
- அரச குலத்தினரிடையே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்காகத் தொடர்ந்து நிகழ்ந்த மோதல்கள். (மௌரிய இலம்பகர்ண மோதல்கள்)
- பாண்டியர், சோழர் போன்ற தென்னிந்திய அரசர்களின் ஆக்கிரமிப்புகள்.
- தென்னிந்திய ஆக்கிரமிப்புகளாலும் சிங்கள மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து படையுதவி பெற்றமையாலும் இலங்கையில் திராவிடர்களின் பலம் அதிகரித்துச் சென்றது.
- ஆக்கிரமிப்பாளர்களால் அரச திறைசேரி கொள்கையிடப்பட்டமை, பௌத்த, சமய மத்திய நிலையங்கள் அழிக்கப்பட்டமை.
- யுத்தங்களால் நீர்ப்பாசனத் தொழினுட்பம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி
- கூலிப் படையினரின் செயற்பாடுகள்.
- சோழப்பேரரசின் ஆதிக்கம் விரிவடைந்தமை.
- கி.பி. 992 மட்டில் Iஆம் இராஜராஜ சோழன் இலங்கையை ஆக்கிரமித்து அநுராதபுரத்தைக் கைவிட்டு, பொலன்னறுவையைத் தனது தலைநகராக்கிக் கொண்டமை.

- **பொலன்னறுவை இராச்சியத்தின் சீர்குலைவும், வீழ்ச்சியும்**
  - பொலன்னறுவையின் இறுதிக் காலத்தில் பலம் வாய்ந்த மன்னர்கள் தோன்றாமை
  - பராக்கிரமபாகு மன்னனால் கட்டியெழுப்பப்பட்ட நிர்வாகத்தைக் கொண்டு கடுமையான மத்திய மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை நடத்துவதற்காகச் செயற்றிறன் மிக்க திறமையான அரசர்கள் தோன்றாமை.
  - பராக்கிரமபாகுவினால் உருவாக்கப்பட்ட இராணுவ ரீதியான நிர்வாகக் கட்டமைப்பால் ஏற்பட்ட பாதகமான நிலை.
  - மகாபராக்கிரமபாகு மன்னன் நாட்டை ஒன்றுபடுத்துவதற்காக நடத்திய தொடரான யுத்தங்களும், வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளும் பங்களிப்புச் செய்தமை.
  - தளபதிகள் பலம் பெறல்.

    உ-ம்: தாவுறு, கித்தி, ஆயுஸ்மந்த, பராக்கிரம போன்ற தளபதிகள் மன்னனை அகற்றி இன்னொருவனை சிம்மாசனத்தில் அமர்த்துதல்.
  - வெளிநாட்டு பரம்பரை தொடர்புள்ள ஆட்சியாளர்கள் உறுகுணை மக்களால் விரும்பப்படாமையால் அடிக்கடி கிளர்ச்சிகள் ஏற்பட்டமை.
  - மத்தியாட்சி குழப்பமுற்றமையால் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனமை.
  - எதிரிகளின் ஆக்கிரமிப்பால் நீர்ப்பாசனத்திற்கு ஏற்பட்ட அழிவு.
  - கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
  - கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்ட வரை நிலவிவந்த நீர்வள நாகரிகம் 1215 இல் மாகனின் ஆக்கிரமிப்புடன் வீழ்ச்சியுற்றமை.
  - மாகனின் கொடூரமான செயற்பாடுகளால் பொதுமக்களும் பிக்குமாருடன் இராசரட்டையைக் கைவிட்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்லல்.
  - மாகனின் செயற்பாடுகளால் இராசரட்டை பிரதேசம் மக்கள் இல்லாமலாகி, காடடைந்து போனமை.
  - தொற்று நோய்கள் பரவியமை
  - நீர்ப்பாசனத் தொழினுட்பமும் பௌத்த சமயமும், வீழ்ச்சியுற்றமை.
  - உறுகுணைப்பிரதேசம் கடுமையாக அடக்கி வைக்கப்பட்டிருந்தமையால் மாகனுக்கு எதிராகப் பலம் வாய்ந்த எதிரிப்படையொன்று அங்கிருந்து ஏற்படாமற் போனமை.
  - தலைநகரங்கள் தென்மேற்கிற்கு இடம்பெயர்ந்தமை.

**கணிப்பீடும் மதிப்பீடும் 1**

1. அநுராதபுர இராச்சியத்தின் தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்குமான காரணிகளை விளக்குக.
2. பொலன்னறுவை இராச்சியத்தின் தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்குமான காரணிகளை விளக்குக.
3. இராசரட்டை நாகரிகத்தின் தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்குமான காரணிகளை விளக்குக.

# 6. இராசரட்டை நாகரிகத்தின் பின்னரான காலப்பகுதி

பொலன்னறுவை இராசதானியின் இறுதி ஆட்சியாளனான பராக்கிரம பாண்டியனுடைய ஆட்சிக்காலமானது 1215ல் இடம்பெற்ற கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புடன் முடிவுற்றது. கலிங்க மாகன் இலங்கையில் பொலன்னறுவையை அண்டிய பகுதிகளிலும் இராசரட்டை வடமேல் பகுதிகள் மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் தனது நேரடி அதிகாரத்தை நிலைநாட்டிக்கொண்டான். இதன் பின்னரான மாகனது மிகக் கொடிய ஆட்சிக்காலப்பகுதியில் தமது பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்த மக்கள் குன்றுகளையும், மலைகளையும் அண்டிய பகுதிகளிலும் தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். அவ்வாறு இடம்பெயர்ந்து வந்த மக்களுக்குத் தலைமை தாங்கிய நால்வர் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- புவனேகபாகு இளவரசன் - கோவிந்த மலை
- சுப தளபதி - சுப பப்பத அல்லது யாப்பகுவ
- சங்க தளபதி - மினிப்பே
- 3ஆம் விஜயபாகு மன்னன் - தம்பதெனிய

இவற்றுள் சில ஆட்சி நிலையங்கள் பிற்காலத்தில் இலங்கையின் இராசதானிகளாகவும் உருவாகின. இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியுடன் இலங்கையில் உருவாக்கப்பட்ட தம்பதெனிய, குருணாகலை, கம்பளை,கோட்டை எனும் இராசதானிகளது அரசியல் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றி இந்த அலகில் நோக்கப்படுகின்றது.

13ம் நூற்றாண்டின் பின் உருவான யாழ்ப்பாண இராசதானியின் அரசியல் நடவடிக்கைகள் பற்றியும் இங்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 6.0** : இலங்கையின் நாகரிகங்களது வரலாற்று ரீதியிலான பரவல் மற்றும் வளர்ச்சிப் போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : இலங்கை நாகரிகமானது அதன் ஆரம்ப கால அடிப்படையிலிருந்து மாற்றமடைந்த ஒரு யுகத்திற்குள் பிரவேசித்தலையும் செயற் பாட்டையும் ஆராய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 35

**கற்றற்பேறுகள்** :

- பொலன்னறுவை யுகத்தின் பின்னர் உருவான இராசதானி களை அறிந்துக் கொள்வார்.
- இராசரட்டை இராசதானி மற்றும் பொலன்னறுவை யுகத்தின் பின்னர் உருவான இராசதானிகளுக்கு இடையி லான வேறுபாட்டை விளக்குவார்.
- பொலன்னறுவை யுகத்தின் பின்னர் உருவான இராசதானி களை வரை படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

## 6.1 ஆட்சி மையத்தளங்கள்.

### தம்பதெனிய இராசதானி

- **3ஆம் விஜயபாகு மன்னன். (கி.பி.1232 – 1236)**
  - இவர் பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள்.
  - மகாவம்சம், பூஜாவலிய, ராஜ ரத்னாகாரய, சில கல்வெட்டுகள்
  - 3ம் விஜயபாகு மன்னனுடைய பூர்விகம் பற்றிய தகவல்களின் தெளிவின்மை.
    - நாட்டின் முக்கியமான அரச வம்சத்தின் தொடர்ச்சியாக வந்தவன் என வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
    - ராஜ ரத்னாகாரயில் குறிப்பிடப் பட்டுள்ளதன்படி இவரது தந்தை கலிங்க வம்சத்தவராவார்.
    - சில பாண்டிய கல்வெட்டு ஆதாரங்களின்படி அவர் பாண்டிய வம்சத்திற்கு உரியவராவார்.
    - சில மூலாதாரங்களின் படி அவர் சிரிசங்கபோ பரம்பரையில் இருந்து வந்தவராகக் குறிப்பிடப் பட்டுள்ளது.



***தம்பதெனிய அரச மாளிகைகளின் படிவரிசை***

- **அரசியல் ரீதியான முக்கியத் துவம்.**
  - iiiஆம் விஜயபாகு தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தது வன்னி பிரதானி ஒருவனாக என்று மகாவம்சத் திலும், பூஜாவிலியிலும் குறிப் பிடப்பட்டுள்ளது.
  - இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த தலைவர்கள் மத்தியில் மாகனுக்கு எதிராக சிறப்புற ஒழுங்கமைத்து செயற்பட 3ஆம் விஜயபாகு மன்னனுக்கு மட்டுமே பலமிருந்தது, சமகால மூலாதாரங்களில் இவர் ''வன்னி நிரிந்து'' என அறியப்படுகின்றார்.

- மாயாரட்டை அல்லது தக்கிண தேசத்தை ஒன்றுபடுத்தி அங்கு அரசியல் உறுதித் தன்மையை கட்டியெழுப்ப முடியுமானவை மற்றும் தம்பதெனியாவை (ஜம்புதுரோனி) தனது ஆட்சி மையமாக ஆக்கிக் கொண்டமை.
- தம்பதெனியாவை மதில் மற்றும் அகழி என்பவற்றின் மூலம் பாதுகாப்பான ஆட்சித்தளமாக உருவாக்கி எதிரிகளது தாக்குதல்களை முறியடிக்கக கூடிய மையத்தளமாக மாற்றியமைத்தமை.

- **சமய ரீதியிலான முக்கியத்துவம்.**
  - கொத்மலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாது மற்றும் பாத்திர தாதுவை பெலிகலவிற்கு எடுத்து வந்து அங்கு தலதா மாளிகையொன்று அமைத்து அதில் பாதுகாத்தமை.
- தம்பதெனியாவில் விஜயசுந்தரா ராமய மற்றும் வத்தளையில் விஜயபாகு விகாரை என்பவற்றைக் கட்டுவித்தமை.
- களனி விகாரையின் சைத்திய மற்றும் அங்கு அழிவுற்ற நிலையில் இருந்த கட்டிடங்களைப் புனர்நிர்மாணம் செய்வித்தமை.

- **2ம் பராக்கிரமபாகு மன்னன். (கி.பி. 1236 – 1270)**
  - இவர் பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள்:
    - மகாவம்சம், பூஜாவலிய, தம்பதெனிய அஸ்ன, கந்தவுறு சிரித
  - இவர் தொடர்பாக அரசியல், சமயம், கல்வி வளர்ச்சி மற்றும் கலைகளின் மறுமலர்ச்சி எனும் துறைசார் தலைப்புகளில் நோக்கலாம்.

  - **அரசியல் ரீதியான முக்கியத்துவம்.**
    - சந்திரபானுவின் முதலாவது ஆக்கிரமிப்பு
    - மாகனிடமிருந்து நாட்டை விடுவிக்க மன்னன் நடவடிக்கைகளை மேற்கொண்டி ருக்கும் போது தென் கிழக்காசியாவில் தாமிரலிங்க தேசத்திலிருந்து (லிகோர் பிரதேசம்) வந்த சந்திரபானு இலங்கையை ஆக்கிரமித்தான்.
    - மன்னனது 11ஆவது ஆட்சி ஆண்டான கி.பி.1247ல் இந்த ஆக்கிரமிப்பு இடம்பெற்றது.
    - இந்த ஆக்கிரமிப்பின் போது 2ம் பராக்கிரமபாகு தனது மருமகனான இளவரசன் வீரபாகுவை அனுப்பி சந்திரபானுவைத் தோற்கடித்தான்.
    - சந்திரபானுவின் இந்த ஆக்கிரமிப்பு இலங்கையின் தென்மேல் கடற்கரையோரப்பகுதியினூடாக இடம்பெற்றிருக்கலாம் எனவும் கருதப்புடுகின்றது. சிலரது கருத்துப்படி இந்த ஆக்கிரமிப்பானது இலங்கையின் வடக்குத் துறைமுகமொன்றின் ஊடாக இடம்பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.
    - வீரபாகுவால் சந்திரபானு தோற்கடிக்கப்பட்ட பின்னர் சந்திர பானு தனது நாட்டிற்குத் திரும்பிப் போனதாக அறிய முடியவில்லை. மூலாதாரங்களில் உள்ள தகவல்களின்படி சந்திரபானு தோல்வியுற்ற தனது படையினருடன் யாழ்ப்பாணக்

குடா நாட்டில் தனது அதிகாரத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டான். யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணப்படும் சாவகச்சேரி, சாவன்கோட்டை, மற்றும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தெற்கே காணப்படும் ஜாவக் கோட்டை எனும் பெயர்கள் அக்காலம் முதலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக எண்ணலாம்.

- **கலிங்க மாகனைத் தோற்கடித்தல்.**
    - கி.பி 1255ல் கலிங்க மாகன் 2ம் பராக்கிரமபாகுவினால் தோற்கடிக்கப்பட்டான்.
    - மாகனைத் தோற்கடிக்க பாண்டியப் பேரரசின் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது உதவி 2ம் பராக்கிரமபாகுவிற்குக் கிடைத்ததாக தென்னிந்தியக் கல்வெட்டுகளில் அறியக்கிடைக்கின்றது. எனினும் இது பற்றிய ஆதாரங்கள் இலங்கை மூலாதாரங்களில் காணக்கிடைக்கவில்லை.
- **சந்திரபானுவின் 2வது ஆக்கிரமிப்பு**
    - கி.பி. 1261/ 1262ம் ஆண்டுகளில் சந்திரபானு தென்னிந்தியாவில் இருந்து படை திரட்டி வந்து யாப்பகுவயைத் தாக்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதன்போது யாப்பகுவவில் விஜயபாகுவும் அவனது சகோதர உறவான வீரபாகுவும் இருந்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்பின் போது தம்பதெனிய ஆட்சியாளரிடம் புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுவையும் தருமாறு கேட்டனர்.
    - ஜடாவர்ம வீர எனும் பாண்டிய மன்னனால் அமைக்கப்பட்ட குச்சியாமலை கல்வெட்டில் குறிப்பிடப்படுவதன் படி இலங்கையில் இருந்த இரு மன்னர்களுள் ஒருவர் போர்க்களத்தில் உயிர் நீத்ததாக அறிய முடிகின்றது.
    - இவ்விரு மன்னர்களுள் ஒருவரான 2ம் பராக்கிரமபாகுவால் சந்திரபானு தோற்கடிக்கப்பட பாண்டியரிடம் உதவி வேண்டப்பட்டுள்ளது. போர்க்களத்தில் சந்திரபானு இறந்தான். இதன் பின்னர் சந்திரபானுவின் மகன் ஒருவனுக்கு இலங்கையின் வட பகுதி ஆட்சியைப் பொறுப்பளித்து, பாண்டியருக்குக் கீழ்ப்பட்ட அரசாக வைத்திருந்துள்ளனர்.
    - 2ம் பராக்கிரமபாகுவால் சந்திரபானு தோற்கடிக்கப்பட்ட பின்னர் பொலன்னறுவைக்குச் சென்று அங்கு மீண்டும் பட்டாபிஷேகம் நடாத்தப் பட்டுள்ளது. எவ்வாறாயினும் பொலன்னறுவையில் அதிக காலம் மன்னன் தங்கியிராததுடன் தனது மருமகனான வீரபாகுவிற்கு பொலன்னறுவையைப் பொறுப்பளித்து, மன்னன் தம்பதெனியாவிற்குத் திரும்பினான்.

- **சமயம் சார் சேவைகள்**
    - பெலிகலையிலிருந்து தம்பதெனியாவிற்கு புனித தந்ததாதுவை எடுத்து வந்தமை மற்றும் பூஜை செய்வித்தமை.
    - சாசனத்தை புனர்நிர்மாணம் செய்து பிக்குகள் சாசனத்தை ஒழுங்குபடுத்தி, திம்புலாகல மேதங்கர போன்ற மகா பிக்குகளது தலைமையில் சாசனத்தை

புணர்நிர்மாணம் செய்து பிக்குகளது ஒழுக்ககரமான வாழ்விற்குத் தேவையான சட்டதிட்டங்களை உருவாக்கியமை. அதுவே "தம்பதெனிய கதிகாவத" எனப்படுகிறது.

தனது மகனான விஜயபாகு இளவரசனது மேற்பார்வையின் கீழ் ருவன்வெலிசாய உட்பட விகாரைகளை புனர்நிர்மாணம் செய்வித்தமை. இந்தப் புணர்நிர்மாணங்களின் பின்னர் அநுராதபுர நகரின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு என்பன வன்னிப் பிரதானிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலன்னறுவை நகரமும் புனர்நிர்மானம் செய்யப்பட்டது.

- மகாவலி கங்கையின் தாஸ்தொட்டையில் உபசம்பதா வைபவம் நடத்தப்படல்.
- தாமிரலிங்க தேசத்திலிருந்து தர்மகீர்த்தி தேரர் இந்நாட்டிற்கு வருகைத்தந்து, அவருடைய வழிகாட்டுதலுக்கமைய, வனவாசம் செய்யும் பிக்குகள் பரம்பரையை உருவாக்குதல்.
- களனி விகாரை, பென்தொட விகாரை, கலப்பாத விகாரை, பெலிகல விகாரை, வாகிரிகல விகாரை மற்றும் தெவிநுவர உபுல்வன் தேவாலய என்பவற்றை புனர்நிர்மாணம் செய்தமை.
- வெவ்வேறு பகுதிகளில் பிரிவெனாக்களை நிறுவியமையும் பிக்குகளின் கல்வி வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தமையும்.
- இரத்தினபுரி மஹசமன் தேவாலயத்தை கடடுவித்தமை.
- வருடாந்தம் "கதீன" எனப்படும் பௌத்த பூஜையை நடாத்தியமையும் பெரஹரா என்பவற்றை நடாத்த அனுசரணை வழங்கியமையும். (பென்தர பெரஹரா, எசல பெரஹரா)
- மாகனால் கைப்பற்றப்பட்ட விகாரைச் சொத்துகளை மீளவும் அந்தந்த விகாரைகளுக்கு திருப்பி வழங்கியமை.

**கல்வி வளர்ச்சியும் கலைகளின் மறுமலர்ச்சியும்**

- பிரிவெனாக்களை உருவாக்கியமையும் அவற்றை கலைகளின் மையத்தளங்களாக ஆக்கியமையும். (நந்தன பிரிவெனா, குருநாகல மகேந்திர பிரிவெனா, பராக்கிரம பிரிவெனா, பலாபத்தல, வகிரிகல, தம்பதெனியா, விஜயசுந்தரா ராமய)
- வெளிநாடுகளிலிருந்து திரிபீடகத்தில் புலமை பெற்ற பிக்குகளை அழைத்து வந்து பாளி இலக்கியங்களது வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தமை.
- மன்னன் படித்த பண்டிதனாக இருந்தமையும் நூலாசிரியனாகக் காணப்பட்டமையும். (விசுத்தி மார்க்க சன்னய, வனவினிச சன்னய, கவிசிலுமின) இவர் "கலிகால சாஹித்திய சர்வக்ஞ பண்டித" எனும் பட்டப்பெயர் உடையவராகக் காணப்பட்டார்.
- நூல்களின் உருவாக்கத்திற்கு ஆதரவளித்தமை. இதனால் சிங்கள, பாளி, சமஸ்கிருத மொழிகளில் பல்வேறு துறைசார் நூல்கள் தோற்றம் பெற்றன.

## தம்பதெனிய யுகத்தில் கல்வியும் இலக்கியமும்

### கல்வி

- தம்பதெனிய யுகத்தில் கல்வி தொடர்பாக நோக்கும் போது 12ம் நூற்றாண்டில் காணப்பட்ட அஷ்டமூல பிரிவெனாக்களுக்கு ஒப்பாக இக்காலத்தில் பங்சமூல பிரிவெனா எனப்படும் கல்வி நிறுவனங்கள் பற்றி அறியக்கிடைக்கின்றது.
- மயுரபாத பிரிவெனா மற்றும் தேவபதிராஜ பிரிவெனா என்பன இக்காலத்தில் காணப்பட்ட உன்னதமான இரு கல்வி மையத்தளங்களாகும்.

### இலக்கியம்

- சிங்கள மொழியில் எழுதப்பட்ட நூல்கள்

| நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் |
|---|---|
| • பூஜாவலிய, கவிசிலுமின, வனவினிச சன்னய | மயுரபாத பிரிவெனாதிபதி புத்தபுத்ர தேரர் |
| • சிதத் சங்கராவ, வனவினிச சன்னய | 2ம் பராக்கிரமபாகு மன்னன் |
| • விசுத்தி மார்க்க சன்னய சத்தர்ம ரத்னாவலிய | வேதேக தேரர்<br>தர்மசேன தேரர் |

- பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்கள்

| நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் |
|---|---|
| • ரசவாஹினி, சமன்தகூட வர்ணனாவ | வேதேக தேரர் |
| • பேசஜ்ஜமஞ்ஜுசா | பங்சமூல பிரிவேனாதிபதி |
| • தைவக்ஞகாமதேனு | அனேமதஸ்ஸி தேரர் |
| • ஹத்தவனகல்ல விஹாரவங்சய | அனேமதஸ்ஸி தேரரின் சீடன் |

**யாப்பஹுவ இராசதானி**



*யாப்பஹுவ படிவரிசை*

**1ம் புவனேகபாகு மன்னன் (கி.பி. 1272 – 1284)**

- கி.பி. 1272ல் தம்பதெனியாவில் ஆட்சியேற்று தனது சிறிது கால ஆட்சியின் பின் ஆட்சி மையத்தளமாக யாப்பஹுவவை தெரிவு செய்தான்.
- கதலிவாட, ஏபான, திப, ஹிமியாகை எனும் பெயர்களால் அறியப்பட்ட சிங்கள் வன்னிப் பிரதானிகளினது அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை.
- காலிங்கராயர் மற்றும் சோடகங்கன் என்போர் தொடுத்த தென்னிந்திய ஆக்கிரமிப்பிற்கும் முகங்கொடுக்க நேரிட்டமை.
- வெளிநாடுகளுடன் தொடர்புகளை கட்டியெழுப்பிக்கொண்டமை.
  உ+ம்: எகிப்திற்கு அனுப்பிய தூதுப்பயணம் ஒன்று பற்றி அராபிய அறிக்கை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 1ம் புவனேகபாகுவிற்குப் பிற்பட்ட காலப்பகுதி.
- 1ம் புவனேகுபாகு மன்னனின் மரணத்திற்குப் பின்னர் இலங்கையில் அரசனற்ற காலம் ஒன்று உருவானதாக இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- பாண்டியரது ஆதரவைப் பெற்ற ஆரியச் சக்கரவர்த்தி எனப்படும் தமிழ் தளபதி யாப்பஹுவவை ஆக்கிரமித்து தந்ததாதுவையும், பாத்திர தாதுவையும் கைப்பற்றிச் சென்று குலசேகரன் எனும் பாண்டிய மன்னனுக்குக் கொடுத்ததாக அறியப்படுகிறது.

- இந்த அரசனற்ற காலப்பகுதியின் பின்னர் 3ம் பராக்கிரமபாகு (கி.பி 1281 – 1293) யாப்பஹுவவில் அரச அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டமை.
- கி.பி. 1292ல் மார்க்கோ போலோ எனும் இத்தாலி நாட்டு தேசப்பயணி இலங்கைக்கு வந்தமை.
- 2ம் புவனேகபாகு மன்னன் (ஸ்ரீ நிவாச புவனேகுபாகு) 3ம் பராக்கிரமபாகு ஆட்சி புரிந்த பொலன்னறுவை மீது ஆக்கிரமிப்பு நடாத்தி அவனைப் பதவி நீக்கம் செய்து யாப்பஹுவையின் அரசனானான்.

**குருணாகலை இராசதானி**

பின்னர் 2ம் பராக்கிரமபாகு மன்னன் தனது ஆட்சி நிலையமாக குருணாகலையை அமைத்துக்கொண்டான்.

**4ம் பராக்கிரமபாகு மன்னன் (பண்டித பராக்கிரமபாகு கி.பி. 1302 – 1326)**

- அமைதியான ஆட்சிக்காலமாததால் நாட்டில் சாசன மற்றும் கலைத் துறைகளில் உச்ச வளர்ச்சி ஏற்படுதல்.
- குருணாகலை நகரில் விசித்திரமான தலதா மாளிகை ஒன்றை அமைத்து அங்கு புனித தந்ததாதுவை வைத்தமை.
- தெவுந்தரையில் இருமாடி விகாரையை அமைத்தமை.
- வெலிகம அக்கரபோதி விகாரை மற்றும் வீதாகம கனானந்த பிரிவெனாக்களைக் கட்டுவித்ததமை.
- கண்டி நகரில் அஸ்கிரி விகாரையைக் கட்டியமை.
- பல மூலாதாரங்களில் பாளி மொழியில் இருந்த ஜாதகக் கதைகளை ஒன்று திரட்டி அவற்றைச் சிங்கள மொழிக்கு மொழிப்பெயர்ப்பு செய்து ‘‘பன்ஸிய பனஸ் ஜாதக கதை’’ என்ற நூல் இவர் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. வீரசிங்க பதிராஜ எனும் அமைச்சர் இதற்குத் தலைமை தாங்கியுள்ளார்.
- போதி மாபா எனும் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட கலகத்தில் மன்னன் மரணமடைந்தமை, 3ம் விஜயபாகுவுடன் ஆரம்பித்த தம்பதெனிய அரச பரம்பரை இத்துடன் முடிவுற்றமை.
- 4ம் பராக்கிரமபாகுவின் பின்னர் 3ம் புவனேகுபாகு (வன்னி புவனேகுபாகு) மற்றும் 5ம் விஜயபாகு (சவுலு விஜயபாகு) குருணாகலையில் ஆட்சிபீடம் ஏறியமை.

**குருணாகலை யுகத்தில் இலக்கியங்கள்.**

- சிங்கள ஜாதக கதை நூலுருப்பெறல்
- எலு போதி வங்சய மற்றும் அனாகத வங்சய – வில்கம்முல ஸ்ரீ பராக்கிரமபாகு தேரர்
- தலதா சிறித – தெவ்தர தம்பசங்கினாவன்
- தாதுமஞ்ஜுசாவ

**கம்பளை இராசதானி**

- 4ம் புவனேகபாகு மன்னன் (கி.பி. 1341 – 1351) கம்பளைக்குத் தனது இராசதானியை மாற்றியமைத்தான்.
- 1344ல் அரபு நாட்டு நாடுகாண் பயணியான இப்னுபதூதா இலங்கை வரல்.
- இக்காலகட்டத்தில் வடக்கே ஆரியச் சக்கரவர்த்திகள் பலம் பெற்றிருந்ததாக இப்னுபதூதாவின் குறிப்புக்களிலிருந்து தெரிய வருகின்றமை.
- 4ம் புவனேகபாகு மன்னன் கம்பளையில் ஆட்சி செய்யும் காலத்தில் 5ம் பாராக்கிரமபாகு மன்னன் கேகாலை மாவட்டத்தில் தெதிகமவை மையமாகக் கொண்டு அரசாண்டு வந்தான். 4ம் புவனேகபாகு மற்றும் 5ம் பராக்கிரமபாகு எனுமிருவரும் Vம் விஜயபாகுவின் (சவுலு விஜயபாகு) புத்திரர்கள் ஆவர்.

**தெதிகம**

- தெதிகம பிரதேசம் ஆட்சி மையத்தளமாக முதன்முதலில் 12ம் நூற்றாண்டிலேயே முக்கியத்துவம் பெற்றது. 1ம் பராக்கிரமபாகுவின் தந்தையான மானாபரண தக்கிண தேசத்தில் ஆட்சி செய்யும் போது ஆட்சி மையத்தளமாக இருந்த புங்ககாமவே, தெதிகம என அறியப்பட்டுள்ளது.
- 5ம் பராக்கிரமபாகு தெதிகமவில் ஆட்சி பீடமேறி கி.பி 1351 ல் கம்பளையில் அரசனாகும் வரை சுமார் பத்து வருடங்கள் வரையில் தெதிகம சுதந்திர அரசாக இருந்ததாக நம்பப்படுகிறது.
- 4ம் புவனேகுபாகுவின் மரணத்தின் பின்னர் 5ம் பராக்கிரமபாகு மன்னன் கம்பளைக்கு வந்து ஆட்சியை ஏற்றான்.
- முற்காலத்தில் அரச குடும்பங்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாத புதிய இருவர் இக்காலப்பகுதியில் அரசியல் துறையில் தோன்றினர். சேனாதிலங்கார தளபதியின் குடும்பத்தினர் மற்றும் அழகக்கோனார் குடும்பத்தினர் எனும் இரு பரம்பரையினராவர்.

**01. சேனாதிலங்கார தளபதியின் குடும்பம்**

- இப்பரம்பரையின் தலைவர் சேனாதிலங்கார ஆவார். இவர் வர்த்தகத்தினால் பெருமளவில் சொத்துடையவராகக் காணப்பட்டார். 4ம் புவனேகபாகு மற்றும் 5ம் பராக்கிரமபாகு மன்னர்களின் காலத்தில் அமைச்சராகவும் சேனாதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.
- சேனாதிலங்கார செய்த முக்கிய பணியாக லங்காதிலக விகாரை அமைத்தமையைக் குறிப்பிடலாம்.
- லங்காதிலகயில் அலவல குன்றுக் கல்வெட்டில் சேனாதிலங்காரவினால் லங்காதிலக விகாரை அமைத்தமை மற்றும் அதற்கு அவரும் ஏனையோரும் செய்த உபகாரங்கள் பற்றியும் காணப்படுகின்றது.

## 02. அழகக்கோனார் அல்லது அழகேஷ்வர பரம்பரை

- வர்த்தகத்தினால் பெருமளவில் சொத்து உடையோராகக் காணப்பட்டனர். கித்சிரிமேவனது களனி கல்வெட்டுப்படி இந்தப் பரம்பரையின் முதலாமவர் இந்தியாவில் கேரளத்தில் உள்ள முக்கிய நகரொன்றான வங்சிபுரத்திலிருந்து வந்துள்ளார்.
- றைகமவை மையத்தளமாகக் கொண்டு பெரும் பலமுடையவராகக் காணப்பட்ட நிஸ்ஸங்க அழகக்கோனார் (அல்கோனார்) ‘‘சுல்தான்’’ அல்லது அரசன் என இப்னு பதூதாவினால் குறிப்பிடப்பட்டுள்ளார். அத்தோடு அவரிடம் அரச அதிகாரத்தின் சின்னமாக வெள்ளை யானை ஒன்றும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.
- இப்னு பதூதாவின் நூல் மூலமாகவும் ஏனைய மூலாதாரங்களை ஆராய்ந்ததன் விளைவாகவும், 1344ம் வருடமாகும் போது அழகக்கோனார் பரம்பரையில் பிரபு ஒருவர் றைகமவை மையமாகக் கொண்டு பெரும் பலத்தைக் கட்டியெழுப்பி யிருந்ததாக முடிவிற்கு வர இயலுமாகின்றது. எனினும் அவர் கம்பளை அல்லது தெதிகம ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்படவில்லை.
- 5ம் பராக்கிரமபாகுவின் பின்னர் கம்பளை மன்னனான 3ம் விக்கிரமபாகு மிகவும் பலவீனமான அரசனாகக் காணப்பட்டான்.
- இக்காலத்தில் சேனாதிலங்காரவின் பலம் குன்றியிருந்ததுடன் விக்கிரமபாகுவின் இறுதி ஆட்சிக் காலத்தில் அழகக்கோனார் அரச சபையில் பிரதம மந்திரியாக இருந்தார்.
- எவ்வாறாயினும் அவர் ‘‘பிரபுராஜா’’ எனும் பட்டப்பெயரால் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டதுடன் பெரும் பலத்தை உடையவராகக் காணப்பட்டார். நிஸ்ஸங்க அழகக்கோனார் விக்கிரமபாகு மன்னனது சகோதரி ஒருவரைத் திருமணம் செய்து அரச குடும்பத்துடன் உறவுகளை ஏற்படுத்தித் தனது அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக் கொண்டார்.
- இதன்போது வடக்கே ஆரியச் சக்கரவர்த்தி பலம் பெற்றிருந்ததுடன் அவரது அதிகாரிகள் நீர்கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு எனும் மேற்குத் தறைமுகப் பகுதிகளில் வரி அறவீட்டில் அடிக்கடி ஈடுபட்டுக் கொண்டு இருந்தனர். இதனால் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் கம்பளை மன்னனுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டமை.
- ஆரியச் சக்கரவர்த்தியின் இச்செய்கையை நிறுத்த நிஸ்ஸங்க அழகக்கோனாரால் பாதுகாப்புக் கோட்டையொன்று ஜயவர்ததனபுரத்தில் கட்டியெழுப்பப்பட்டமை
- போதியளவினலான உணவை கோட்டையில் களஞ்சியப்படுத்திய பின்னர் அமைச்சர் நிஸ்ஸங்க அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியின் வரி அறவிடும் அதிகாரிகளை விரட்டியடித்ததாக ராஜாவலிய மற்றும் அழகேஷ்வர யுத்தய என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் கோபமுற்ற ஆரியச் சக்கரவர்த்தி தன் படையை அனுப்பியதுடன் அது அழகக் கோனாரின் படையினரால் துரத்தியடிக்கப்பட்டது. அழகக்கோனாரின் இவ்வெற்றிகளின் பின் கம்பளை மன்னனாக 5ம் புவனேகபாகு பெயரளவில் ஆட்சிப்பீடம் ஏறினாலும் நிஸ்ஸங்க அழகக்கோனார் அரசின் நிர்வாக நடவடிக்கைகளில் முன்னுரிமை வகிப்பவராகக் காணப்பட்டார்.

- எலு அத்தனகலு வங்க அழகக்கோனாரை ‘‘ஸ்ரீ லங்காதீஸ்வர’’ என அழைக்கின்றமை. கி.பி. 1382ல் அழக்கோனார் இறந்தமை. அதன் பின் வந்த அழகக்கோனார் பரம்பரையினர் அந்தளவில் பலம் பெற்றிருக்காமை.
- நிஸ்ஸங்க அழக்கோனாரின் பின்னர் குமார அழகேஷ்வர என்பவர் றைகம நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அதன் பின்னர் வீர அழகேஷ்வர அப்பதவியைப் பெற்றுக் கொண்டமை
- கி.பி. 1405, 1409 மற்றும் 1411 எனும் வருடங்களில் சீனாவின் யுங்லோ எனும் பேரரசன் அனுப்பிய சென் ஹோ எனும் தளபதி இலங்கைக்கு வந்துள்ளமை. 1409ல் அவன் இலங்கை வந்த போது றைகம அழகேஷ்வர அவனை உரிய முறையில் வரவேற்கவில்லை. எனவே அவன் தான் கொண்டுவந்த காணிக்கைகளை தெவுந்தர தேவாலயத்திற்கு அளித்து காலியில் மும்மொழியிலான கல்வெட்டைப் பதித்தான். (சீன, பாரசீக, தமிழ் மொழிகளில் எழுதப்பட்டுள்ளது). பின்னர் கி.பி. 1411ல் பெரும் படையுடன் இலங்கை வந்த அவன், வீர அழகேஷ்வர உட்பட அவரது உறவினர்களைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளான். இந்நிகழ்வினால் அழகேஷ்வரப் பரம்பரையினர் இலங்கை அரசியல் துறையிலிருந்து நீங்கினர்.

**கம்பளை யுகத்தில் கலாசார நடவடிக்கைகள்.**

இக்கால கலாசார நடவடிக்கைகள் தொடர்பாகக் குறிப்பிட்ட சில தலைப்புக்களில் நோக்க முடியும்

**மொழி மற்றும் இலக்கியம்**

**சிங்கள மொழியில் எழுதப்பட்ட நூல்கள்**

- சத்தர்மாலங்காரய
- நிகாய சங்கிரஹய
- பாலாவதார சன்னய
- திசர சந்தேஷய
- மயுர சந்தேஷய
- எலு அத்தனகலு வங்சய

**பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்கள்**

- பாரமி மஹா ஷதகய
- வுத்தமாலா சன்தேஷ ஷதக
- விமுக்தி சங்கிரஹய

**கட்டிட நிர்மாணமும், கலைகளும்**

- தென்னிந்தியக் கலைஞர்கள் இங்கு வந்தமையும் அவர்கள் இந்நாட்டு கலை நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும்

  உ-ம்:

  தர்மகீர்த்தி எனும் பிக்குவுடன் வந்த கணேஷவராசாரி உட்பட்ட கலைஞர்கள் கடலாதெனிய, லங்காதிலக, விஜயோத்பாய, நியம்கம்பாய எனும் விகாரைகளை அமைத்தமை.
- விகாரைகள் மற்றும் தேவாலயங்களில் மரச்செதுக்கல் வேலைப்பாடு இக்காலத்தில் பிரசித்தம் பெறல்
- எம்பக்க செதுக்கல் வேலைப்பாடு இந்த யுகத்திற்குரியதாகக் கருதப்படுகின்றது.



*எம்பக்க தேவாலயம்*



*எம்பக்க மரச் செதுக்கல்கள்*

**தேர்ச்சி மட்டம் 6.2** : யாழ்ப்பாண இராசதானி தொடர்பாக நுணுகி ஆய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- யாழ்ப்பாண இராசதானியின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சியை அறிந்து கொள்வார்.
- யாழ்ப்பாண இராசதானி வளர்ச்சியடைந்த விதத்தினை விபரிப்பார்.
- யாழ்ப்பாண இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- யாழ்ப்பாண இராசதானி தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கான மூலாதாரங்கள்
  - யாழ்ப்பாண வைபவமாலை, செகராச சேகரமாலை, கைலாச மாலை
- 13ம் நூற்றாண்டின் அரைப்பாகத்தில் ஜாவா நாட்டுச் சந்திரபானு மன்னன் வடக்கே யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் சில வன்னிப் பிரதேசங்களிலும் தன் அதிகாரத்தைப் பரவச் செய்து ஆட்சி செய்ததாக மூலாதாரங்களிலுள்ள தகவல்களின் அடிப்படையில் அறிய முடிகிறது.
- 2ம் பராக்கிரமபாகு பாண்டியரது பூரணமான உதவியுடன் சந்திரபானுவைத் தோற்கடித்ததோடு அதன் பின்னர் பாண்டியர் வடபகுதியில் தம் பிரதிநிதியாக சந்திரபானுவின் மகன் ஒருவனை நியமித்தமை.
- பாண்டியரது ஆட்சி பலவீனமுற்ற நிலையில் 1310 - 1311 வரையான காலப்பகுதியில் ஆரியச்சக்கரவர்த்திகள் வடபகுதியில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டமை. யாழ்ப்பாண வைபவ மாலையில் ஆரியச்சக்கரவர்த்திகளாக விஜய கூழங்கை குலசேகர, விக்கிரம சிங்கன், வரோதயன், மார்த்தாண்டன், குணபூசனன், வரோதயன், ஜயவீரன், கனகசூரியன், பரராஜசேகரன், சங்கிலியன் எனும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இவர்கள் பாண்டிய பேரரசின் தென் பகுதியொன்றான ''வெச்சருக்கை நாடு'' எனும் பிரதேச ஆட்சியாளர்களது குடும்பத் தொடர்புடையவர்களாவர் எனக் கருதப்படுகிறது.
- இப்பரம்பரைக்குரிய 12 ஆட்சியாளர்கள் பற்றிய தகவல்கள கிடைக்கின்றன. அவ்வனைவரதும் பெயர்களின் பின்னால் சிங்கை ஆரியன் எனும் பெயர் காணப்படுகிறது.
- 1344 ல் இலங்கை வந்த இப்னு பதூதா ஆரியச்சக்கரவர்த்தியை இலங்கையின் சுல்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- 3 ஆம் விக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் கம்பளை இராசதானியைத் தாக்கி அங்கு சில பகுதிகளில் வரி அறவிடப்பட்டமை.
- 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன், சப்புமல் குமாரனை அனுப்பி ஆரியச் சக்கரவர்த்தியை தோற்கடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை.
- போர்த்துக்கேயரால் 1619 ல் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டமை.

**தேர்ச்சி மட்டம் 6.3** : கோட்டை இராசதானி பற்றி நுணுகி ஆய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- கோட்டை இராசதானியின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி பற்றித் தெளிவுபடுத்துவார்.
- கோட்டை இராசதானியின் சிறந்த மன்னரை மதிப்பார்.
- கோட்டை இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**6ம் பராக்கிரமபாகு மன்னன்.**

- கோட்டை இராசதானி 6ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியேற்புடன் ஆரம்பமாகின்றது. கி.பி.1412ல் றைகமவில் அதிகாரம் பெற்ற இவன் கி.பி.1415ல் ஜயவர்தனபுரக் கோட்டையைத் தனது ஆட்சி மையத்தளமாக அமைத்துக்கொண்டான்.
- இவர் பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள்.
  இலக்கியம் -
  ராஜாவலிய, அழகேஷ்வர யுத்தம், பெரகும்பா சிரித, சந்தேஷ காவ்ய, காவிய ஷேகரய, கூட்டோவின் அறிக்கை.
  தொல்பொருள் -
  பெப்பிலியான கல்வெட்டு, சமன் தேவாலய கல்வெட்டு, தெனவக சாசனம், கடலாதெனிய கல்வெட்டு, மடவள கல்வெட்டு.
- மன்னனது சிறுபராயம், அரச பதவியேற்பு மற்றும் ஆட்சியுரிமை என்பன பற்றிய பல்வேறு பாரம்பரியக் கதைகள் பிற்கால எழுத்தாளர்களது நூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- பெரக்கும்பா சிரிதவில் உள்ளதன்படி, அவரது தந்தை கம்பளையை ஆட்சி செய்த 5ம் பராக்கிரமபாகுவின் பேரனொருவனான லமனி ஜயமஹலேன (ஜயபால மஹீபதி) என்பவராவார். தாய் சுனேத்ரா தேவியாவார். 6ம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கை வந்த வங்காள சமஸ்கிருத எழுத்தாளரான ஸ்ரீ ராமசந்திர பாரதியும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.
- ராஜாவலியவில் குறிப்படுவதன்படி கம்பளை யுகத்தில் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்த தளபதி சென் ஹோவினால் வீர அழகேஷ்வர மற்றும் அவரது உறவினர்கள் சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்ட போது அதில் ஜயமஹலேனவும் இருந்ததாகக் காணப்படுகின்றது. அதன் பின்னர் இளவரசன் பராக்கிரமபாகு தன் தாயுடன் பிரதேச ஆட்சியாளர் ஒருவரது பாதுகாப்பின் கீழ் வாழ்ந்துள்ளார்.

- சீனத் தளபதியினால் இளவரசன் பராக்கிரமபாகுவும் சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் பின்னர் பேரரசனால் இளவரசனுக்கு அபயமளிக்கப்பட்டதாகவும் அவனை இலங்கைக்கு அனுப்பி அரசனாக்கியதாகவும் போர்த்துகேய வரலாற்றாசிரியர் ஒருவரான தியொகு த குட்டோ குறிப்பிட்டுள்ளார்.

**அரசியல் ரீதியான முக்கியத்துவம்.**

- 1ம் பராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கையை ஒன்றுபடுத்த முடிந்தமையும், அதனை நிலையாகப் பேணியமையும், அதற்காக அவர் கையாண்ட நடவடிக்கைகளும் பின்வருமாறு.
- இக்காலப்பகுதியில் சமமாக தன் அதிகாரப் பலத்தை வளர்த்துக் கொண்டிருந்த தெதிகம பராக்கிரமபாகு மன்னனைக் கீழ்ப்படியச் செய்ய நடவடிக்கைகள் எடுத்தமை.
- பௌத்த சமயத்திற்குப் பெருமளவில் ஆதரவளித்து பிக்குமாரது உள்ளங்களை வென்றதுடன் பிரசித்தமான ஆட்சியாளனாக முயன்றமை. இதனால் தெதிகமவில் தங்கியிருந்த பிக்குக்கள் கோட்டை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வந்து வசிக்கத் தொடங்கியமை.
- இலங்கைக்கு வந்த சீயம் மற்றும் காம்போஜ பிக்குகளினது குழுவொன்றிற்கு சிங்கள உபசம்பதா விழாவை மன்னன் தனது ஆதரவில் நடாத்தியமை.
- தெதிகம பராக்கிரமபாகு மன்னன், 6 ம் பராக்கிரமபாகு மன்னனது இளவரசனாகச் செயற்பட்டிருப்பதாக பரவி சந்தேஸயில் உள்ள தகவல்கள் அடிப்படையில் தெளிவு பெற முடிகின்றது இதனூடாகத் தெதிகம உட்பட நான்கு கோரளை மற்றும் மலைநாட்டுப் பிரதேசங்களில் தனது அதிகாரத்தைப் பரவச் செய்ய முடிந்தமை.
- உலர் வலயம் மற்றும் ருஹுனு ரட்டையில் காணப்பட்ட சுதந்திர ஆட்சி அலகுகள் மற்றும் வன்னியர்களைக் கீழப்படியச் செய்தமை, வன்னித் தலைவர்கள் 18 பேரைக் கீழ்ப்படியச் செய்ததாக சந்தேசயில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- சப்புமல் குமார உட்பட பெரும் படை ஒன்றை அனுப்பி வடக்கே ஆரியச் சக்கரவர்த்தியின் கீழ் இருந்த யாழ்ப்பாண இராசதானியைக் கைப்பற்றியமை.
- மலைநாட்டில் ஜோதிய இளவரசன் ஏற்படுத்திய கலகத்தை அம்புலுகல குமாரனை அனுப்பி முறியடித்தமை.
- மலைநாட்டில் பலம் பெற்றிருந்த கிராமத் தலைவனான விக்ரமபாகுவின் கீழ்ப்படிதலைப் பெற்றுக்கொண்டமை.

**வெளிநாட்டுப் போர் வெற்றிகள்.**

- தென் இந்தியாவின் அதிவீரராம பட்டினத்தை ஆக்கிரமிப்பு செய்தமை.
- விஜயநகரப் பேரரசின் துறைமுகங்களை ஆக்கிரமிப்புச் செய்தமை.

**கலாச்சார ரீதியான வளர்ச்சி.**

- பழைய வழிபாட்டிடங்களை அபிவிருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுத்தமை.
- சிவனொளிபாதமலை, அத்தனகல்ல விகாரை, கடலாதெனிய, லங்காதிலக, மஹியங்கண, களனி விகாரை போன்ற பௌத்த வணக்கஸ்தலங்களை வளர்ச்சியடையச் செய்தமை.
- தனது தாயின் பெயரில் பெப்பிலியான சுனேத்ரா தேவி பிரிவெனாவை அமைத்து அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்குக் கிராமங்களைப் பரிசாகப் பெற பூஜை செய்ததாக பெப்பிலியான சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - பெருமளவிலான பிரிவெனாக்கள் வளர்ச்சியுற்றிருந்தமை மற்றும் கற்ற பண்டிதர் பலர் இருந்தமை.
- அரசன் உடபட அமைச்சர்கள் பலர் நூலுருவாக்கத்தில் ஈடுபட்டமை.
- ஸ்ரீராமச்சந்திர பண்டிதர் போன்ற கற்ற பணடிதர்கள் இலங்கை வந்தமை.

**6ம் பராக்கிரமபாகுவின் பின்னரான கோட்டையின் அரசியல் நிலைமை.**

- 6ம் பராக்கிரமபாகுவின் மகள் உலகுடைய தேவிக்கும் நன்னூர்த்துணைவருக்கும் பிறந்த ஜயபாகு இளவரசன், வீர விக்ரமபாகு எனும் பெயரில் சிம்மாசனம் ஏறியமை.
- யாழ்ப்பாண அரசனாக இருந்த சப்புமல் குமாரன், 6ம் புவனேகபாகு எனும் பெயரில் ஆட்சிக்கு வந்தமை. மன்னனது நான்காம் ஆட்சியாண்டில் சிங்கள பெரலிய (ராஜாவலிய) சிங்கள சங்கய (தெதிகம கல்வெட்டு) எனும் பெயரில் அறியப்பட்ட கலகத்திற்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டமை.
- அம்புலுகல குமாரன், 8ம் வீர பராக்கிரமபாகு எனும் பெயரில் ஆட்சிப்பீடமேறியமை.
- 9ம் தர்ம பராக்கிரமபாகு ஆட்சிப்பீடமேறுதல்.
- 6ம் விஜயபாகு மன்னனது ஆட்சிக்காலம் மற்றும் விஜயபாகு கொள்ளை.
- தர்மபால இளவரசனது ஆட்சிக் காலமும் கோட்டை இராசதானியின் வீழ்ச்சியும்.

**கோட்டை யுகத்தில் கல்வியும், இலக்கியமும்.**

**கல்வி**

- 6ம் பராக்கிரமபாகு மன்னனது அமைதியான ஆட்சிக் காலத்தில் கல்வித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்படல்.
- வீதாகம ஸ்ரீ கனானந்த, தொட்டகமுவே விஜயபா, தேவேந்திர இறுகல்குல திலக, காரகல பத்மாவதி, பெப்பிலியான சுனேத்ரா தேவி, ரெபத்தொட தர்மராக போன்ற பல பிரிவெனாக்கள் வளர்ச்சியுற்று இருந்தமை. இக்கல்வி நிலையங்களில் இருந்த பெரும் எண்ணிக்கையான பிக்குக்கள் கலைப் பணியில் ஈடுபட்டமை.
- இக்கல்வி நிலையங்களில் சிங்களம், பாளி, சமஷ்கிருதம், பிராகிருதம், தமிழ் எனும் மொழிகளும் காவியம், நடனம், ஜோதிட சாஸ்திரம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

- இக்காலத்தில் இருந்த கல்வி நிலையங்கள் சர்வதேச ரீதியில் கீர்த்தியுடன் விளங்கியமையால் சமஸ்கிருத பண்டிதர் ஒருவரான ஸ்ரீ ராமச்சந்திர பாரதி எனும் பண்டிதர் இலங்கை வந்தமை.

**இலக்கியம்**

- பல வகையிலான நூல்கள் எழுதப்பட்டமை.
- தூது காவியம், பக்தி காவியம், யுத்த காவியங்கள், அறநெறி நூல்கள், போதனைக் காவியங்கள்
- துறவிகள் மட்டுமன்றி துறவு வாழ்வு மேற்கொள்ளாதவர்களில் பண்டிதர்கள் பலரும் நூலாக்கத்தில் ஈடுபட்டமை.

| நூலாசிரியர் | நூல் |
|---|---|
| தொட்டகமுவே ஸ்ரீ ராஹுல தேரர் | காவியஷேகரய, பஞ்சிகா பிரதீபய, செலலிஹினி சந்தேஷய, பரவி சந்தேஷய |
| வீதாகாம மகா மைத்திரிய தேரர் | புதுகுண அலங்காராய, லொவெட சங்கராவ, ஹன்ச சந்தேசய |
| வேத்தேவே தேரர் | குத்தில காவியம் |
| இறுகல் குலதிலக பிரிவெனாபதி தேரர் | கோகில சந்தேஷய |
| தம்மதிண்ண விமலகீர்த்தி தேரர் | சத்தர்மரத்தகாரய |
| 6ம் பராக்கிரமபாகு மன்னன் | ருவன்மல நிகண்டுவ |
| ஸ்ரீ ராமசந்திர பாரதி | பக்தி சதகம் |
| நன்னருந்துணையார் | புராண நாமவாலிய, சரசோதி மாலை எனும் தமிழ் சோதிட நூல், பெரகும்பா சிரித, கிரா சந்தேஷ, குவேனி அஸ்ன, எலுசிலோ சதகய |

**கணிப்பீடும் மதிப்பீடும் 1**

**கீழ்வரும் முறையிலான பல்தெரிவு வினாக்களை வழங்கி மாணவரை மதிப்பிடுங்கள்.**

இல. 01 மற்றும் 02, என்பவற்றிற்கான வினாவில் உள்ள பொருத்தமற்ற பெயரைத் தெரிவு செய்க.

01. 1. புங்ககாம 2. அநுராதபுரம் 3. பொலன்னறுவை 4. குருணாகல் 5. தம்பதெனிய (..……..)

02. 1. சரசோதிமாலை 2. சத்தர்மரத்னாவலிய 3. பூஜாவலிய 4. கவிசிலுமின 5. சமந்தகூட வர்ணனாவ (..……..)

இல. 03 தொடக்கம் 4 வரையிலான வினாக்களில் 5 பெயர்சோடிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத பெயர் சோடி ஒன்று காணப்படுகின்றது. பொருத்தமற்ற பெயர்ச் சோடியைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை முன்னால் உள்ள அடைப்புக்குள் எழுதுக.

03. 1. முலசிக மற்றும் சிகவலந்த வினிஸ - பிக்குகளுக்கான ஒழுக்கவிதி கோவையாகும்.
 2. தம்பியா அட்டுவா கெடபதய - தம்பத கதைக்கு எழுதப்பட்ட விளக்க உரையாகும்.
 3. பெரகும்பா சிரித - 6ஆம் பராக்கிரமபாகுவின் சிறப்புப் பற்றி வர்ணிப்பதாகும்.
 4. சமந்த பாசாதிக்காவ - திரிபீடகத்தின் ஒரு பகுதியான ஒழுக்கம் பற்றிய விளக்க உரையாகும்.
 5. சத்தர்ம ரத்ணாவலிய - சோதிட நூலாகும். (…......)

04. 1. வம்சத்தப்பகாசினி - மகாவம்சத்திற்கான விளக்க உரை ஒன்றாகும்.
 2. சரசோதிமாலை - தமிழ் மொழியிலான சோதிட நூலாகும்
 3. கந்தவுரு சிரித - தம்பதெனிய யுகத்தில் மன்னர்களது அன்றாட வாழ்வு பற்றிய விளக்கமாகும்.
 4. வீரசோழியன் - தமிழ் இலக்கண நூல் ஒன்றாகும்.
 5. பூஜாவலிய - ஸ்ரீமகாபோதி புனித வெள்ளரசு மரம் பற்றி எழுதப்பட்ட வம்சக்கதை ஒன்றாகும்.

**இல.05-06 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்க.**

05. 6ஆம் பராக்கிரமபாகு மன்னனது பணிகள் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
 01. கலிங்க மாகனைத் தோற்கடித்தமை 02. கோட்டையை வேறுப்படுத்தியமை
 03. இலங்கையை ஐக்கியப்படுத்தியமை 04. சந்திர பானுவைத் தோற்கடித்தமை
 05. பாண்டிய அரசின் சிம்மாசன உரிமைப்போரில் கலந்து கொண்டமை. (…......)

06. கவிசிலுமின யாரால் எழுதப்பட்டது?
 1. வேதேக்க தேரர் 2. அனோமஸ்சி தேரர் 3. 2ம் பராக்கிரமபாகு மன்னன்
 4. தர்மசேன தேரர் 5. புத்தபுத்திர தேரர் (………)

பின்வரும் 07ம் 08ம் வினாக்களில் ஒரு தலைப்பின் கீழ் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு விடயம் தலைப்பிற்குப் பொருத்தமற்றதாகும். அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை முன்னுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

07. தம்பதெனிய அரச வம்சம்

1. 3ம் விஜயபாகு தம்பதெனிய அரச வம்சத்தின் ஆரம்பக் கர்த்தா ஆவார்.
2. இதற்கு முன்னிருந்த மன்னனுடன் 3ம் விஜயபாகு மன்னனுக்கு குடும்ப உறவு காணப்படவில்லை.
3. 3ம் விஜயபாகு மன்னனின் பின்னர் அரசு 2ம் பராக்கிரமபாகுவிற்கு உரித்தானது.
4. சீனத் தளபதி சென்-ஹோவினால் இப் பரம்பரையின் கடைசி மன்னன் சீனாவிற்குப் பிடித்துச் செல்லப்பட்டான்.
5. 4ம் பராக்கிரமபாகுவின் மரணத்துடன் தம்பதெனிய முடிவுற்றது. (………)

08. கோட்டை நகரம்

1. கோட்டை நகரமானது நிஸ்ஸங்க அழகக்கோணாரால் அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கோட்டையினால் உருவானது.
2. கோட்டை நகரம் ஸ்ரீ ஜயவர்தனபுர எனவும் அறியப்படுகிறது.
3. 6ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் கோட்டை நகரம் உச்ச வளர்ச்சி கண்டது.
4. 1565ல் ஒல்லாந்தர் கோட்டையை கைப்பற்றிக் கொண்டனர்.
5. 1551ல் தொன் யுவான் தர்மபாலக் கோட்டை அரசனானான்.

(………)

X மற்றும் y யையும் இணைக்கும் போது பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவுச் செய்க.

09.

| X | Y |
|---|---|
| 1. 1ஆம் விஜயபாகு மன்னன் | A. கலிகால சாஹித்திய சர்வக்ஞ பண்டிதன் |
| 2. 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் | B. யாழ்ப்பாணக் குடா நாட்டை வெற்றி கொள்ளல் |
| 3. நிஸ்ஸங்க மல்ல மன்னன் | C. இலங்கையிலிருந்து சோழரைத் துரத்தியமை |
| 4. 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் | D. பர்மா மீதான ஆக்கிரமிப்பு |
| 5. 6ஆம் பராக்கிரமபாகு மன்னன் | E. துலாபார தானம் வழங்கியமை. |

1. CABED 2. CDEBA 3. CDEAB 4. CEABD 5. CDAEB (………)

10.

| X | Y |
|---|---|
| i. ரசவாஹினி | A. மயில்வாகனப்புலவர் |
| ii. பரவி சந்தேஷய | B. வேதேக தேரர் |
| iii. சத்தர்ம ரத்னாவலிய | C. வீதாகம மைத்திரிய தேரர் |
| iv. லோவெட சங்கராவ | D. ஸ்ரீ ராஹுல தேரர் |
| v. யாழ்ப்பாண வைபவமாலை | E. தர்மசேன தேரர் |

1. BEDAC 2. BADCE 3.BDCAE 4.BEDCA 5. CDAEB (………)

**கணிப்பீடும் மதீப்பீடும் 02**

கீழ்வருமாறு விமர்சன ரீதியிலான மற்றும் வினாக்களை வழங்கி மாணவரை மதிப்பிடுங்கள்.

1. 2ம் பராக்கிரமபாகு மன்னனது அரசியல் மற்றும் கலாசார பணிகளைப் பற்றிக் கலந்துரையாடுக.
2. "6ம் பராக்கிரமபாகு மன்னனது நீண்ட ஆட்சிக் காலமானது போர் மற்றும் அமைதி தொடர்பாக இலங்கை வரலாற்றின் இறுதியான கீர்த்திமிக்க காலப்பகுதியாகும்." கலந்துரையாடுக.
3. கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
   i. தம்பதெனிய யுகத்தில் இலக்கியப் பணிகள்
   ii. யாழ்ப்பாண இராசதானியின் எழுச்சி
   iii. கோட்டை யுகத்தில் கலாசார அபிவிருத்தி
4. கோட்டை யுகத்தில் கல்வி மற்றும் இலக்கிய பணிகளை விமர்சிக்க.
5. "2ம் பராக்கிரமபாகு மன்னன் வெளிநாட்டவர் செல்வாக்கிலிருந்து இலங்கையை விடுவித்து பலமிகு ஆட்சியைக் கட்டியெழுப்பிய சிறந்த ஆட்சியாளனாவான்."
   a. 2ம் பராக்கிரமபாகுவின் தந்தையின் பெயர் என்ன?
   b. இவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 2 நூல்களைப் பெயரிடுக.
   c. 2ம் பராக்கிரமபாகுவின் சமயப் பணிகளைத் தெளிவுப்படுத்துக.
   d. மேற்தரப்பட்ட கூற்றைக் கருத்திற் கொண்டு 2ம் பராக்கிரமபாகுவின் சிறப்பை விமர்சிக்குக.



# இந்திய வரலாறு

# இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

ஒரு நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படுவது பல்வேறு மூலாதாரங்களிலிருந்து கிடைக்கும் தரவுகளைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்ப்பதன் மூலமாகும். இதற்காகப் போதியளவு இலக்கிய மூலாதாரங்களைப் போலவே தொல்பொருள் மூலாதாரங்கள் காணப்படுவதும் முக்கியமானதாகும். ஆயினும் இந்திய வரலாறு முகங்கொடுக்கும் பிரச்சினை யாதெனில் தொடர்ச்சியான வரலாற்று அறிவைக் கற்பதற்கான ஆதாரங்கள் போதியவு இன்மையாகும். இந்நிலைமையானது பண்டைக் காலம் முதல் 13ம் நூற்றாண்டில் முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பு இடம்பெற்ற காலப்பகுதி வரை தெளிவாகத் தெரிகின்றது. அசோக மன்னனின் ஆட்சிக்காலத்திற்கு முன்னர் எழுதப்பட்டதென ஏற்றுக் கொள்ளத்தக்க கல்வெட்டுக்களும் மிகக் குறைவானதாகும். வெளிநாட்டு மூலாதாரங்களின் வரலாற்றுத் தன்மையும் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் அலெக்சாண்டரின் இந்திய ஆக்கிரமிப்புக் காலம் வரையில் வரையறுக்கப்பட்டுள்ளதாகவே அமைந்துள்ளது. அதேபோன்று இந்திய வரலாறு முழுவதும் நிலவிய பிராமண, தெய்வங்களின் உருவாக்க வாதம் இந்திய வரலாற்றின் யதார்த்த நிலையிலிருந்து இந்தியரைத் தூரமாக்குவதற்கும் காரணமாயமைந்துள்ளது. இந்தியாவின் பௌதீக ரீதியான நிலப்பரப்பின் விசாலத்தன்மையும் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிந்து கொள்வதற்குத் தடையாக அமைந்துள்ள மற்றொரு காரணியாகும். இவையனைத்தினூடாகவும் தெரிய வருவது வரலாறு தொடர்பில் இந்தியாவின் நிலை ஒப்பீட்டளவில் பலவீனமானதாகும். ஆயினும் இலக்கிய மூலாதாரங்களின் பற்றாக்குறையைத் தொல்பொருள் மூலாதாரங்கள் மூலம் இழிவளவாக்கி இந்திய வரலாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 1.0** : கால ஒழுங்குமுறை, மூலாதாரங்கள் அதன் பயன்கள் என்பவற்றை அணுகிக் கட்டியெழுப்பப்படும் ஆய்வு ரீதியான அறிவினைத் தம் வாழ்க்கையில் படிப்பினையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற்பேறுகள்** :

- இந்திய வரலாற்றைக் கற்பதற்குள்ள மூலாதாரங்களைப் பெயரிடுவார்.
- இந்திய வரலாற்றைக் கற்பதற்குள்ள மூலாதாரங்களை வகைப்படுத்துவார்.
- இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்பும் போது மூலாதாரங்களைப் பயன்படுத்த வேண்டிய முறையைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**மூலாதாரங்களை வகைப்படுத்தல்**

- தொல்பொருள் மூலாதாரங்கள்
- இலக்கிய மூலாதாரங்கள்
- எழுத்தாவணங்கள்
- நாணயங்கள்

**தொல்பொருள் மூலாதாரங்கள்**

பண்டைய இந்தியா அகன்ற நிலப்பரப்பில் பரம்பிக் காணப்பட்ட பல பிரதேச ஆட்சிப் பகுதிகளைக் கொண்டிருந்த நாடாகும். இதனுடைய வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கட்டியெழுப்புவதற்குப் போதுமான இலக்கிய மூலாதாரங்கள் காணப்படாவிடினும் இந்தியர்களின் வரலாற்றின் தொன்மையை உலகறியச் செய்த மொஹெஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பற்றிய தகவல்கள் முழுமையாகத் தொல்பொருள் மூலாதாரங்களி லிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் வரலாற்றுத் தகவல்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குத் தொல்பொருள் மூலாதாரங்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

**எழுத்தாவணங்கள்**

எழுத்தாவணம் என்பது கருங்கல், களிமண், செப்பு, தங்கம், வெண்கலம், பித்தளை போன்ற ஊடகங்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மேல் எழுதப்பட்டவையாகும். தொல்பொருள் மூதாரங்களுள் அதிகளவு தகவல்களைத் தரும் முக்கியத்துவம் வாய்ந்த மூலாதாரங்களாக அமைவதும் இவையாகும்.
''பண்டைய இந்தியாவின் அரசியல் வரலாறு பற்றிய அறிவு முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது எழுத்தாவணங்களைப் பொறுமையுடன் பரிசிலித்ததன் மூலமேயாகும்.''
- பிளீட்

**கல்வெட்டுக்கள்**

எழுத்தாவணங்களுள் கல்வெட்டுக்களே பிரதானமானவை. உரிய காலப்பகுதிக்குரிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குக்- கல்வெட்டுக்கள் உதவியாக அமைந்துள்ளன. கல்வெட்டு எழுதப்பட்டுள்ள கற்களின் அமைவிற்கேற்ப அவை குகைக் கல்வெட்டு சுவர்க் கல்வெட்டு, தூண் கல்வெட்டு, குன்றுக் கல்வெட்டு எனப் பல்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய தெரிவு செய்யப்பட்ட உதாரணங்கள் பின்வருமாறு,
உ-ம்: அசோக கல்வெட்டுக்கள்
மௌரிய காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் பிரதான மூலாதாரங் களாகும். அசோகக் கல்வெட்டுக்கள் மூன்று வகைப்படும்.

- குன்று/ பாறை கல்வெட்டு
- குகைக் கல்வெட்டு
- தூண் கல்வெட்டு

- பிராகிருதம், மகதம், கிரேக்கம், உரோமானியம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளமை.

- அசோக தர்மங்கள் பற்றி அதிகளவான தகவல்கள் கிடைத்துள்ளமை
- கலிங்க தேச வெற்றி, மௌரியப் பேரரசின் பரம்பல் முதலிய அரசியல் தகவல்கள் பல அடங்கியுள்ளமை
- கிர்னார், கால்சி, சபாஸ்கரி, பராபர், ஜௌகடா, யெரகுட், சோபாரா, தௌலி, ரூப்னாத், மான்சேரா, சாரணாத், கைராத், மஸ்கி முதலிய பிரபல்யமான கல்வெட்டுக்கள் பலவும் கிடைக்கப் பெற்றுள்ளமை.



***அலகபாத் தூண் கல்வெட்டு***

**சமுத்திர குப்தன் காலக் கல்வெட்டுக்கள்**

- அலகாபாத் பிரசஸ்தி (அலகாபாத் சாசனம்)
  இது சமுத்திர குப்த மன்னனின் அரசியல் நடவடிக்கை பற்றி அறிவதற்குதவும்.
- அசோக மன்னனால் அமைக்கப்பட்ட அசோக கற்றூண் ஒன்றில் இது பொறிக்கப்பட்டுள்ளது.
- சமுத்திர குப்தனின் போர் நடவடிக்கைகளின் முடிவில் 'நூறு போர்களின் வீரன்' என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அலகாபாத் சாசனம் அழகிய தூண் ஒன்றாகும்.
- காவிய நடையிலும் உரை நடையிலும் எழுதப்பட்ட இக்கல்வெட்டின் சில பகுதிகள் அழிவடைந்துள்ளன.
- இதில் அடங்கியுள்ள 8 புகழ் கவிதைகளில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுகின்றன.

- முதலாம் இரண்டாம் கவிதைகளில் 1ம் சந்திர குப்தனின் போர்கள்
- மூன்றாம் கவிதையில் சமுத்திரகுப்தனின் அறிவாற்றல்
- நான்காவது கவிதையில் தந்தையால் சமுத்திரகுப்தன் அரசனாக்கப்பட்டமை
- ஐந்தாம், ஆறாம் கவிதைகளில் அரசை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட போர்கள்

- ஏழாம், எட்டாம் கவிதைகளில் அவனது போர் நடவடிக்கைகளின் நான்கு சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன,
  - ஆரியாவர்த்தனத்தைக் கைப்பற்றியமை
  - எட்டு வகையான அரசைத் தன்னடிப்படுத்தியமை
  - தட்சிணாபதத்தை ஆக்கிரமித்தல்
  - எல்லைப் பிரதேச இராச்சியங்களுடன் போரிட்டமை

இது தவிர ஏரான் சாசனம், கயா சாசனம், நாலந்தா சாசனம் எனும் கல்வெட்டுக்களும் சமுத்திர குப்தனின் காலத்திற்குரியவையாகும்.

**வேறு முக்கியமான கல்வெட்டுக்கள்**

- கனிஷ்கனின் - சாரணாத்
- காரவேலனின் - காதிகும்பா
- உருத்திரதாமனின் - ஜுனாகட் (முதலாவது சமஸ்கிருத கல்வெட்டு)
- 2ம் சந்திர குப்தனின் - மெஹராலி தூண் கல்வெட்டு, உதயகிரி சாசனம்
- முதலாம் புலிகேசியின் - ஐஹோல் கல்வெட்டு
- ஹர்ஸனின் - புரோச்சி
- முதலாம் ராஜேந்திரனின் - திருவாலங்காடு செப்பு சாசனம்



***ஜுனாகட் (முதலாவது சமஸ்கிருதக் கல்வெட்டு)***

**நாணய மூலாதாரங்கள்**

- வர்த்தகம், பொருளாதாரநிலை, மக்கள் வாழ்க்கை, ஆக்கிரமிப்புக்கள், இராச்சியங்களின் வீழ்ச்சி முதலிய தகவல்கள் பலவற்றையும் உறுதிப்படுத்திக் கொள்ள உதவும்.
- நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள், குறியீடுகள், எழுத்துக்கள் என்பவற்றின் மூலம் அதனை வெளியிட்ட அரசன், பிரபு, வர்த்தகம், தரம் நாகரிகம் முதலிய தகவல்களை அறிய முடியும்.
- தங்கம், வெள்ளி, செப்பு, வெண்கலம் முதலிய உலோகங்களைக் கொண்டு நாணயங்கள் வெளியிடப்பட்டதன் மூலம் அக்காலப் பகுதிக்குரிய பொருளாதார நிலையை விளங்கிக் கொள்ள முடியும்.
- நாணய மூலாதாரங்களுள் முக்கியத்துவம் வாய்ந்த உதாரணங்கள் சில வருமாறு,
  - பக்டீறியன் கிரேக்க நாணயங்கள்

  இரண்டு நூற்றாண்டுகள் வரை வடமேல் இந்தியாவை ஆட்சி செய்த பக்டீறியன் கிரேக்க அரசர்கள் 30 பேர்கள் பற்றி அறிய உதவும் ஒரே மூலாதாரமாகும்.



***தியோடோடஸ் காலத் தங்க நாணயம்***

குஷாண நாணயங்கள்

- உரோமானிய பாணியில் தயாரிக்கப்பட்டுள்ளன.
- தெய்வ உருவங்களும் புத்தர் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளமை
- குஜிலாகட்பீசஸ், வேமாகட்பீசஸ், கனிஷ்கன், ஹுவிஷ்க வாசுதேவன் எனும் அரசர்களுக்குரிய நாணயங்கள் கிடைத்துள்ளமை.



***கனிஷ்க மன்னன் காலத் தங்க நாணயம்***

குப்த நாணயங்கள்

- குப்த யுகத்தின் பொருளாதார, அரசியல், கலாசார தகவல்கள் பலவும் இதன் மூலம் வெளிப்படுகின்றன.
- பல்வேறு வகைகளாக இந்நாணயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.
  - வாள் வீரன்
  - வில் வீரன்
  - குதிரை வீரன்
  - சிங்க வீரன்
  - உருவங்கள் பொதித்த நாணயங்கள்
  - வீணை வகை
  - இலக்குமி வகை



*சமுத்திர குப்தன் காலத் தங்க நாணயம்*

கண இராச்சியங்களுக்குரிய நாணயங்கள்

- மாளவம், யாதவம், மல்லா, மித்திரம்,பாஞ்சாலம் முதலிய கண இராச்சியங்கள் பற்றித் தகவல்கள் கிடைக்கும் ஒரே மூலாதாரமாக இருத்தல்


தொல்பொருள் சிதைவுகளான நினைவுச் சின்னங்கள்

- ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிலவிய நாகரிகம், மக்கள் வாழ்க்கை, வாழ்க்கை முறை பற்றிப் புரிந்து கொள்ள முடிதல்.
- ஹரப்பா நாகரிகத்திற்குரிய சிதைவுகள் மூலம் அக்கால நகர வாழ்க்கையின் பண்புகள் வெளிப்படுத்தப்படல்.
- பொருளாதார நிலை, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்படல்.
- அக்காலப் பகுதிக்குரிய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு பற்றி புரிந்து கொள்ள முடிதல்.

  உ-ம்:

- சிந்து நதி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற பல்வேறு உருவங்கள் பொறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான முத்திரைகள்

- மதகுருவின் உருவம், செம்மணற் கல்லில் செதுக்கப்பட்ட மனித உருவங்களிரண்டு, வெண்கலத்தால் செய்யப்பட்ட நிர்வாணமான நடனமாதுவின் உருவம் உள்ளிட்ட சிலைகள்
- சிந்து நதிப் பள்ளத்தாக்கின் சித்திர எழுத்து மற்றும் மானுட எச்சங்கள்






***ஹரப்பா நாகரிகத்திற்குரிய களிமண் வண்டி மற்றும் ஆபரணங்கள்***


- பௌத்த மத்திய நிலையங்கள் :- சிராவஸ்தி, சாஞ்சி, குசிநகர், சாரணாத்
- புராதன நகரங்கள் :- பாடலி புத்திரம், தக்ஷிலா, கௌசம்பி, இந்திரப் பிரஸ்தம், சாஞ்சி, மாமல்லபுரம், தஞ்சாவூர்,மதுரை
- பண்டைய வரலாற்றிடங்கள்:- மதுராபுரி, வாரணாசி, சிராவஸ்தி, கௌசம்பி
- குகை விகாரைகள்:- நாசிக், கார்லே, அஜந்தா, எல்லோரா




***கௌசம்பி நகரின் சிதைவுகள்***




இந்திரபிரஸ்த நகரின் சிதைவுகள்



எல்லோரா குகை



நாசிக் குகை



கார்லே குகை

**இலக்கிய மூலாதாரங்கள்**

பல்வேறு தலைப்புகளின் கீழ் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரங்கள் பலவும் அறியப்பட்டுள்ளன. அவற்றை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்
2. வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்

**உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்**

- சமய நூல்கள்
  வைதீக இலக்கியங்கள்
- வேதநூல்கள் உள்ளிட்ட கி.மு. 5ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்கள்
- இருக்கு வேத காலத்தில் எழுதப்பட்ட இருக்கு (ரிக்) வேத நூலும் பிந்திய வேத காலத்தில் எழுதப்பட்ட வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உப நிடதங்கள், புராணங்கள், வேதாங்கங்கள், உப வேதாங்கங்கள், சூத்திரங்கள்
- ஆரியரின் அரசியல், பொருளாதார, சமய, சமூக தகவல்கள்
- பிராமணீயங்கள்:- வைதீக மந்திரங்களுக்கான பொருள் உரைநடையில் எழுதப்பட்டுள்ளமை.
- ஆரணியங்கள்:- தெய்வங்கள், ஆத்மா, உலகமும் மனிதனும் பற்றிய அறிவும் விளக்கமும்
- உப நிடதங்கள்:- பாரத தத்துவங்கள் ஒன்றிணைதல். வேதாந்தங்கள் என்றும் அறிமுகமாதல். கர்மம், ஞானம் எனும் இரு பிரிவுகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டிருத்தல் தத்துவார்த்த பெறுமதி கொண்டதாகத் திகழ்தல்
- புராணங்கள்:-
  - புராணம் என்பது பரம்பரைக் கதைகளாகும்
  - புராண நூல்கள் 18 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது
  - பிரபஞ்சத்தில் தோன்றிய தெய்வங்களின் பண்புகள், வரலாற்றுத் தகவல்கள், ஐதீகம் போன்ற அம்சங்கள் அடங்கியுள்ளமை
- வட இந்திய அரச வம்சங்கள் தொடர்பில் ஓரளவு அறிந்து கொள்ளக் கூடியதாயிருத்தல்
- விஷ்ணு, கர்மம், வராகம், பாகவதம், மத்சயம், பிராக்மாண்டம், அக்கினி முதலிய புராண நூல்கள் பலவும் இதில் உள்ளடங்கும்.

**பௌத்த நூல்கள்**

- அங்குத்தர நிகாய - புத்தரின் காலத்தில் இந்தியாவின் அரசியல் நிலை
- அக்கஞ்ஞ சூத்திரம் - இந்திய அரச நிர்வாகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி
- கூட்டதத்த சூத்திரம் - தார்மீக இராச்சியமொன்றினைத் திட்டமிடல்
- சக்கரவர்த்தி சீகநாத சூத்திரம் - பௌத்த சக்கரவர்த்திக் கொள்கை பற்றிய பகுப்பாய்வு
- ஜாதகக் கதைப் புத்தகம் - பாரத சமூக ஒழுங்கமைப்பு
- வினய பிடகம் - சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் சட்டதிட்டம் தொடர்பானவை

- மகா பரிநிப்பான சூத்திரம் - அக்கால வட இந்திய வரலாறு
- மகாவம்சம், தீபவம்சம் - மௌரியர் காலம் மற்றும் பிற்கால சமய, வரலாற்றுத் தகவல்கள்

**சமண நூல்கள்:**
- கி.மு. 6ம் நூற்றாண்டு முதல் கி.மு. 4ம் நூற்றாண்டு வரை இந்திய வரலாற்றுச் சூழலின் வளர்ச்சி
- அரசியல், பொருளாதார, கலாசார தகவல்கள்
- பகவதி சூத்திரம், வைதுங்க சூத்திரம், சமாவதி சூத்திரம் என்பன பிரதான நூல்களாகும்.

**உலகியல் மூலாதார நூல்கள்**
- தர்ம சாஸ்திரம், தர்ம சூத்திர நூல், ஸ்மிருதி நூல், தர்க்க சாஸ்திரம், வைத்திய நூல் முதலியன இதனுள் அடங்கும்.

**வரலாற்று நூல்கள்**
- பஞ்ச தந்திரம் - விஷ்ணு வர்மன்
- ராஜதரங்கனி - கல்கனர்
- சரிதைகள்
  - விக்கிரமாங்க தேவ சரிதை - பில்கனர்
  - நவகாயாபொன் சரிதை - பத்ம குப்தர்
  - இராமர் சரிதை - சந்தியா நந்தி
  - குமார பாலர் சரிதை - ஜயசிங்கர்
  - ஹர்ஸன் சரிதை - பாணபட்டர்
  - யசோவர்மன் சரிதை - வாக்பதியர்

**வேறு இலக்கிய நூல்கள்**

சங்க இலக்கியங்கள்
- கி.பி. 1ம் நூற்றாண்டு முதல் 3ம் நூற்றாண்டு வரை தென்னிந்திய பாண்டிய இராச்சியத்தில் கூட்டப்பட்ட தமிழ்ச் சங்கம் மூலம் எழுதப்பட்ட இலக்கிய நூல்களின் தொகுதியாகும்.
- முதலாம், மூன்றாம் சங்கங்கள் மதுரையிலும் இரண்டாம் சங்கம் கபாடபுரத்திலும் கூட்டப்பட்டது.
- அற நூல்கள் கீழ் கணக்கெனவும் ஒழுக்க நூல்கள் மேல் கணக்கெனவும் கூறப்பட்டன.
- இலக்கிய நூல்களானாலும் சமகால பொருளாதார, அரசியல், கலாசார தகவல்களையும் தரத் தக்க நூல்களைாகக் காணப்பட்டமை
- அரச ஆதரவு பெற்ற 500 இற்கும் மேற்பட்ட புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந்தமை
- அப் புலவர்களுள் அரசர்களும் பெண்களும் இடம் பெற்றமை
- முதல் சங்கம் - அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர்
- இடைச் சங்கம் - தொல்காப்பியர், வள்ளுர்க்காப்பியர்
- கடைச் சங்கம் - கபிலர், பரணர், நக்கீரர்

- முதல் சங்க நூல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. இடைச் சங்க நூல்கள் எட்டாகும்.

  எட்டுத்தொகை நூல்கள்:
  - அகநானூறு - ஐங்குறு நூறு
  - புற நானூறு - பதிற்றுப்பத்து
  - நற்றிணை நானூறு - பரிபாடல்
  - குறுந்தொகை நானூறு - கலித்தொகை
- இவை தவிர இடைச் சங்கத்தில் முன்வைக்கப்பட்ட பத்துப் பாட்டு எனும் நூல்களின் தொகுதியும் காணப்படுகின்றது.
  - திரு முருகாற்றுப்படை - மதுரைக்காஞ்சி
  - பொருநராற்றுப்படை - நெடுநல்வாடை
  - சிறு பானாற்றுப்படை - குறிஞ்சிப்பாட்டு
  - பெரும்பானாற்றுப்படை - பட்டினப்பாலை
  - முல்லைப்பாட்டு - மலைபடு கடாம்
- கடைச் சங்கத்தில் முன்வைக்கப்பட்ட நூல்கள் இரண்டாகும்.
  - துரால்
  - அருள்
- இவ்வகைப்படுத்தலானது வரலாற்றியலாளர்கள் பெரும்பான்மையோரின் கருத்துக் கிணங்கவே உருவாக்கப்பட்டுள்ளது.

**நாடக நூல்கள்**
- மால விகாக்கினி மித்திரம், விக்கிரமோ ஊர்வசி, சாகுந்தலம் (காளிதாசன்)
- தேவி சந்திரகுப்தன், முத்திராராட்சம் (விசாசதத்தர்)
- மிரிச்ச கடிகம் (சுத்திரகர்)

**இலக்கண நூல்கள்**
- பாணினியின் இலக்கண நூல்
- பதஞ்சலியின் இலக்கண நூல்
- தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல்

**காவிய நூல்கள்**
- மேகதூதம், ரகுவம்சம், குமார சம்பவம், ருது சங்காரம் (காளிதாசன்)
- சிசுபாலனம், கிராக்தார்ஜுன் (பாரவி)
- தசகுமார சரிதம் (தண்டி)
- பஞ்ச தந்திரம் (விஷ்ணுவர்மன்)
- நவரத்தினங்கள் எனும் குப்தர் காலக் கவிஞர்கள் 9 பேர்
  - ஒத்வந்தரி - சடகோபர்
  - சேத்தால - சடிங்கு
  - ஷபனகா - காளிதாசன்
  - பட்டா - வரருசி
  - வரசிங்கர்

**அரசியல் நீதி நூல்கள்**

- கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்
    - சந்திரகுப்த மன்னனின் முதலமைச்சரான கௌடில்யர் (சாணக்கியன்/ விஷ்ணு குப்தன்/ வாத்ஸ்யாங்கனர்) என்பவரால் எழுதப்பட்டதாகும்.
    - அரசியல் நீதி நூல் எனும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது.
    - அக்காலப்பகுதிக்குரிய வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கியுள்ளது.
    - குப்தர் காலத்தில் இறுதிப் பதிப்பாகியுள்ளது.
    - இதில் அரச பதவி, மன்னனின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், அமைச்சரவை, நீதிமன்றம், பிரதேச நிர்வாகம், அரச வருமானம், வரப்பிரசாத சேவை எனும் பல்வேறு வகைத் தகவல்களும் அடங்கியுள்ளன.
    - இந்திய அரசர்களைப் போலவே இலங்கை அரசர்களும் (மகா பராக்கிரமபாகு) இதனை அரசியல் நீதி நூலாகக் கற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.

**வேறு நீதி நூல்கள்**

- மனுஸ்மிரிதி, சுக்கிரநீதி, காமண்ட கீய நீதி சாரம், கௌதம தர்ம சாஸ்திரம், பௌத்தாயன தர்ம சூத்திரம், ஆபஸ்தர்ம தர்ம சூத்திரம், விஷ்ணுமிரிதி, வியாழ மிரிதி, நாரதமிரிதி

**வீரகாவியங்கள்**

- இராமாயணம்
    - வால்மீகி எனும் முனிவரால் எழுதப்பட்டது.
    - சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூல் 24000 செய்யுள்களைக் கொண்டது.
    - இந்நூலின் கதாநாயகனான இராமன், விஷ்ணுவின் அவதாரமாக குறிப்பிடப் பட்டுள்ளது.
    - இராம - இராவண கதையில் அதிகளவில் வரலாற்றுத் தகவல்கள் அடங்கியுள்ளன.

- மகாபாரதம்
    - வியாசர் எனும் பண்டிதரால் எழுதப்பட்ட இந்நூல் 3 காண்டங்களாலும் ஒரு இலட்சம் சுலோகங்களாலும் ஆனது.
    - கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான போர் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.
    - இக்காவியத்தில் வரும் கிருஷ்ணன் விஷ்ணுவின் அவாரமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**வீர காவியங்களின் வரலாற்றுப் பெறுமதி**

- பண்டைய இந்தியாவின் சமூகப் பண்பு, ஒழுக்கநெறி தொடர்பான தகவல்கள் அடங்கியிருத்தல்
- ஆரிய ஒழுக்கப் பண்பானது வட இந்தியாவிலிருந்து ராஜஸ்தான் ஊடாக தென்னிந்தியாவுக்குப் பரவிய விதம் வெளிப்படுத்தப்படுகின்றமை.
- முன்னுதாரணமான குடும்ப வாழ்க்கை, ஒழுக்க நெறியிலான சமூகம் என்பன பற்றிய தகவல்கள் அடங்கியிருத்தல்.

- இப்படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் சங்கீதம், நடனம், நாடகம் எனும் கலைத் துறைகள் வளர்ச்சி கண்டமை தொடர்பான தகவல்கள் அடங்கியிருத்தல்
- அயல் நாடுகளிலும் இக்கதையின் செல்வாக்குப் பரவலாகக் காணப்படுதல்

**வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்**

- இலங்கை நூல்கள் - தீப வம்சம், மகா வம்சம், சமந்தாபாசாதிகா, மகாவம்சடீகாவ
- கிரேக்க நூல்கள் - ஜஸ்டின், புளுடாச், மெகஸ்தனீஸ், ஹெர டோரஸ், ஸ்டெடியஸ், ஸ்ட்ராபோ என்போரின் அறிக்கைகளும் பெரிப்லஸ் ஒப் எரித்திரியன் சீ எனும் நூலும்

  உரோம நூல்கள் - பிளினியின் நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா
  தொலமியின் பூகோள சாஸ்திரப் பிரவேசம்

  சீன இலக்கியங்கள் - பாகியனின் அறிக்கை, குவான் சுவானின் அறிக்கை, இத்சிங்கின் அறிக்கை

  அராபிய எழுத்தாளர்கள் - அல்புரூனி, அல்மசூதி, இபன்குர்தாத்பேக், இபன் சஹ்ரியர்

  திபெத் இலக்கியம் - தாரநாத்தின் அறிக்கை

**வெளிநாட்டு இலக்கியங்களுள் சிறப்பான நூல்கள்**

- மெகஸ்தனீஸின் இண்டிகா
  சந்திர குப்த மௌரிய மன்னின் அரசவைக்கு வருகை தந்த செலியுகஸ் நிகேட்டரின் தூதுவரான மெகஸ்தனீஸால் எழுதப்பட்டது.
- இண்டிகா நூலின் மூலப் பிரதி கிடைக்கப்பெறவில்லை.
- பிற்கால கிரேக்க, உரோம எழுத்தாளர்கள் மூல நூலிலிருந்து எடுத்தாளப்பட்ட தகவல்களே எஞ்சியுள்ளன.
- பல்வேறு நபர்களிடமும் கேட்டறிந்த தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளதால் சில தகவல்கள் நம்பகத் தன்மையற்றவை (சாதி முறை, அடிமை முறை)
- ஆயினும் அக்கால இந்தியா பற்றிய முக்கியமான தகவல்கள் உள்ளடங்கியுள்ளன.
- இந்தியாவின் புவியியல் பண்புகள், சமூகம், நிர்வாகம், மௌிய அரச மாளிகை, பாடலிபுத்திர நகரம் அதன் நிர்வாகம் முதலிய முக்கியமான தகவல்கள் அடங்கியுள்ளன.

**குவான் - சுவானின் அறிக்கை**

- சுழல் இலக்கியம் என இது அறிமுக்பபடுத்தப்பட்டுள்ளது.
- இந்திய வரலாறு பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகள் இந்தத்தேரரால் எழுதப்பட்டுள்ளன.
- வின்ஸ்டன் ஸ்மித் அவர்களின் கருத்துப்படி இந்திய வரலாற்றின் இருண்ட வரலாற்றுக் காலப்பகுதிகளுக்கு இவ்வறிக்கை மூலம் ஒளிபாய்ச்சப்பட்டுள்ளது.
- கி.பி. 603 இல் சீனாவின் ஹோனாங் பிரதேசத்தில் லீவு நகரில் பிறந்த இவர் கி.பி. 629 இல் இந்தியா நோக்கிப் புறப்பட்டார்.

- தக்ஷிலா, சிங்கபுரம், காஷ்மீர், சாகல, ஜலந்தார், மதுராபுரி, கனோஜ், அயோத்தி பிரயாகம், கௌசாம்பி, சிராவஸ்தி, வஜ்ஜி எனும் முக்கியமான இடங்கள் பற்றி இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஹர்ஸவர்தன மன்னனின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சமய ஊர்வலம் (பெரஹரா), கனோஜ் பௌத்த மாநாடு பற்றிய முக்கிய தகவல்கள் அடங்கியுள்ளன.
- நாலந்தா பல்கலைக்கழகத்தில் கல்வி பெற்றுள்ளதுடன் அத்தகவல்களும் இடம்பெற்றள்ளமை
- மிகிரகுலனின் ஆக்கிரமிப்பு, தர்ம அசோகன், கனிஷ்கன், 2ம் புலிகேசி முதலிய அரசர்கள் பற்றிய விடயங்கள் அடங்கியுள்ளமை
- நாலந்தா பல்கலைக்கழகம் பற்றிய தகவல் அடங்கியுள்ள ஒரே மூலாதாரம்
- சாஞ்சி பௌத்த விகாரை பற்றியும் இலங்கை வரலாற்றுத் தகவல்கள் பலவும் இதிலடங்கியுள்ளது.

**மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகள்**

- இந்திய வரலாற்றைக் கூறும் தொடர் மூலாதாரமொன்று இன்மை
- இந்து நதிப் பள்ளத்தாக்கின் சித்திர எழுத்துக்களை இதுவரை வாசித்தறிய முடியாமை
- இந்திய சமூகவமைப்பில் வேரோடிப் போயுள்ள தெய்வீகப் படைப்பியல் கொள்கை யதார்த்தமான வரலாற்று மரபுக்குத் தடையாக இருத்தல்
- ‘இந்தியர் வரலாறு பற்றி அற்பமான ஆர்வமுள்ளவர்கள்’ என்று அல்புரூனி குறிப்பிட்டுள்ளமை
- இந்தியாவின் பௌதிக ரீதியான பாரிய பரப்பளவு போலவே புவியியல் தடைகள் காரணமாக முழுமையான வரலாற்று மரபொன்றை ஏற்படுத்த முடியாமை
- ஒரு பொதுவான வருட முறையின்றி ஒவ்வொரு அரச வம்சத்தினரும் ஒவ்வொரு வகையிலான காலக் கணிப்பீட்டைப் பயன்படுத்தியுள்ளமையால் ஏற்படும் இடர்பாடு.
- பௌத்த, சமண, பிராமண சமய மூலாதாரங்கள் சமகால சமூகவமைப்பு பற்றிக் குறிப்பிடும் தகவல்கள் சமய நோக்கில் அமைந்துள்ளமையால் நம்பகத்தன்மை குறைவாதல்

**மூலாதாரங்களை ஒப்பிட்டுக் கற்பதன் முக்கியத்துவம்**

- எந்தவொரு நாட்டிலும் நடைமுறையிலுள்ள வரலாற்று மரபுகளின் வரையறுக்கப்பட்ட தன்மையைத் தவிர்த்துக் கொள்வதற்கு மூலாதாரங்களை ஒன்றுடனொன்று ஓ்பபிட்டுக் கற்க வேண்டியுள்ளமை.
- காஷ்மீரின் வம்சக்கதையான ராஜதரங்கனியில் கல்கனர் வரலாற்று செய்தியை விபரிப்பவர் ஒருவர் செயற்பட வேண்டிய விதத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஒரு நீதிபதியைப் போல மோகம், துவேஷம் எனும் நிலைகளிலிருந்து விடுபட்டு வரலாற்றுச் செய்திகளை விபரித்தல் வேண்டும்.
- இந்திய வரலாற்று மூலாதாரங்களின் பற்றாக்குறை காரணமாக இவ் ஒப்பீட்டுக் கற்றல் முறை மிகவும் தேவையான ஒன்றாகத் திகழ்கின்றது.
- தொடர் வரலாற்று மரபு இல்லாத காரணத்தினால் வரலாற்றின் சில இருண்ட பகுதிகளுக்கு ஒளி பாய்ச்சுவதற்கு ஒப்பிட்டுக் கற்றல் முறை மிகவும் பயனுடைய தாகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

01 - 05 வரையிலான வினாக்களுள் ஒவ்வொரு வினாவிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சொல் ஏனைய சொற்களுடன் ஏதோவொரு வகையில் பொருந்தாது அச்சொல்லைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1)
1. இருக்கு 2. விஷ் 3. அதர்வணம் 4. யசுர் 5. சாமம் ( )

2) 1. சங்கீதம் 2. பிராமணீயம் 3. ஆரணியம் 4. உப நிடதம்
5. வாயு புராணம் ( )

3) 1. மேக தூதம் 2. இருது சங்காரம் 3. சாகுந்தலம் 4. மிரிச்சகடிகம்
5. இரகு வம்சம் ( )

4) 1. பாகியன் 2. தாராநாத் 3. குவான் சுவான் 4. இத்சிங்
5. சங் - யுங் ( )

5) 1. மஸ்கி 2. கிரீனார் 3. லும்பிணி 4. தௌலி
5. காதிகும்பா ( )

06 - 10 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

6) 1. காதிகும்பா கல்வெட்டு - கலிங்க கார வேலன்
2. உருமிந்தைக் கல்வெட்டு - சந்திரகுப்த மௌரியன்
3. கிரீனார் கல்வெட்டு - உருத்திரதாமன்
4. மதுராபுரிக் கல்வெட்டு - 2ம் சந்திர குப்தன்
5. கான்சுவேரா கல்வெட்டு - ஹர்ஸவர்தனன் ( )

7) 1. சூத்ராலங்கார - தந்திராயாணம் 2. பகவத் கீதை - இந்து
3. பகவதி சூத்திரம் - சமணம் 4. மகா பிரஞ்ஞ பாரமிதா - மகாயானம்
5. கதாவஸ்துப்பகரணம் - தேரவாதம் ( )

8) 1. காவிய நூல் - கதா சரித சாகரம் 2. வம்சக் கதை - ராஜ தரங்கனீ
3. வானியல் நூல் - குரு சங்கிதம் 4. வைத்திய நூல் - சுவாச சங்கிதம்
5. நாடக நூல் - பஞ்ச தந்திரம் ( )

9) 1. மெகஸ்தனீஸ் - இண்டிகா 2. கௌடில்யர் - அர்த்த சாஸ்திரம்
3. வான்மீகி - இராமாயணம் 4. காளிதாசன் - மேகதூதம்
5. ஹர்சவர்தனன் - மிரிச்ச கடிகம் ( )

10) 1. ஹெரடோரஸ் - கிரேக்கம் 2. தாராநாத் - சீனா
3. அல்புரூனி - அரேபியா 4. கொஸ்மஸ் - பைசாந்தியா
5. ஸ்ட்றாபோ - உரோம் ( )

11 - 15 வரையிலான வினாக்களுக்கு அட்டவணையில் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களுக்குப் பொருத்தமான இலக்கத்தைப் பின்வரும் அட்டவணையிலிருந்து தெரிந்து எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரி | சரி |
| 2 | சரி | பிழை |
| 3 | பிழை | பிழை |
| 4 | பிழை | சரி |
| 5 | பிழை | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|
| 11) பாடலி புத்திரம் பற்றி மிக நீண்ட விளக்கம் மெகஸ்தனீஸால் முன்வைக்கப்பட்டுள்ளது. | நகர நிர்வாகம் 6 மண்டலங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு மண்டலமும் 5 நபர்களைக் கொண்டிருந்த தென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ( ) |
| 12) ராஜதரங்கனி காஷ்மீர் வரலாற்றைக் கூறுகிறது. | ராஜதரங்கனி நூலின் ஆசிரியர் பாணினி ஆவார். ( ) |
| 13) அர்த்த சாஸ்திரம் சந்திர குப்த மௌரியனின் புரோகிதரான சாணக் கியரால் எழுதப்பட்டது. | அசோகக் கல்வெட்டுக்கள் மௌரியப் பேரரசு பற்றி அறிய உதவும் முக்கியமான மூலாதாரங் களாகும். ( ) |
| 14) பாகியன் தேரர், மகாபத்ம நந்த மன்னன் காலத்தில் இந்தியாவுக்கு வருகை தந்தார். | யுவான் சுவாங் தேரர் ஸ்கந்த குப்த மன்னன் காலத்தில் இந்தியாவுக்கு வருகை தந்தார். ( ) |
| 15) அஸ்வகோசர் கி.பி. 4ம் நூற்றாண் டில் வாழ்ந்தவராவார் | அவரால் மகாபாரதம் மற்றும் சுவப்னவாச தந்தம் எனும் நூல்கள் எழுதப்பட்டன. ( ) |

**கணிப்பீடும் மதிப்பீடும் - 02**

1) பின்வரும் தலைப்புகளுள் விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பெழுதவும்.
   1. ஆரம்ப கால ஆரியர் பற்றிக் கற்பதற்கு இருக்கு வேதத்தின் முக்கியத்துவம்
   2. மெகஸ்தனீஸின் இண்டிகா
   3. சமுத்திர குப்த மௌரியனின் அலகாபாத் சாசனம்
   4. குவான் சுவானின் அறிக்கை

(7 x 2 = 14 புள்ளிகள்)

2) தென்னிந்திய அரசுகள் பற்றிய கற்றலில் சங்க இலக்கியங்களின் பங்களிப்புப் பற்றி ஆய்வு செய்க. (14 புள்ளிகள்)

3) "பண்டைய இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் முதலிடம் வகிப்பவை தொல்பொருள் மூலாதாரங்களாகும்."
   i. ஹரப்பா நாகரிகத்திற்குரிய தானியக் களஞ்சியம் அமைந்திருந்த இடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
      (1 புள்ளி)
   ii. ஹரப்பா நாகரிகத்தில் நிலவிய சமய நிலைமையை வெளிக்காட்டும் கலைப் படைப்புகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளி)
   iii. நாணய மூலாதாரங்களின் வரலாற்று முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)
   iv. இந்திய வரலாற்றைக் கற்பதற்குதவும் வரலாற்று மூலாதாரங்கள் தொடர்பில் மேற்படி கூற்றை விளக்குக. (7 புள்ளி)

4) சமகால வரலாற்றுத் தகவல்களைக் கற்கும்போது அசோகக் கல்வெட்டுக்களின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்க. (14 புள்ளிகள்)

5) இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் வெளிநாட்டு மூலாதாங்களின் பங்களிப்புச் பற்றி மதிப்பீடு செய்க. (14 புள்ளிகள்)

## 2. புவியியல் அமைவிடம் பௌதிகக் காரணிகள் மற்றும் மானிட நடத்தைகள்

எந்தவொரு நாட்டினதும் வரலாற்றைக் கற்பதில் அந்நாட்டின் அமைவிடமும் புவியியற் சூழலும் பௌதிகக் காரணிகளும் மிக முக்கியம் வாய்ந்தவையாகும். இந்தியா ஆசியாக் கண்டத்தின் ஓர் உப கண்டமாக தேச எல்லைகளால் தனிப்பட்டதொரு நாடாகும். ஆப்கானிஸ்தான் முதல் அசாம் வரை 2560 கி.மீற்றர் தூரம் பரந்துள்ள இமய மலைத் தொடர் ஆசியாக் கண்டத்திலிருந்து இந்தியாவைத் தெளிவாகப் பிரித்து விடுகின்றது.

தெற்கு, கிழக்கு, மேற்குத் திசைகளில் இந்து சமுத்திரத்தால் சூழப்பட்ட இந்தியா வடமேற்கே இந்துகுஷ் மலைத் தொடராலும் சுலைமான் மற்றும் கிர்தார் மலைத்தொடர்களாலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இமய மலைத்தொடரின் கிழக்கு முடிவிலிருந்து தெற்கு நோக்கி அமைந்துள்ள அரக்கொண்யாமா மற்றும் நாகலாந்து மலைத் தொடர்கள் மூலம் பர்மாவிலிருந்து (மியன்மார்) பிரிந்துள்ளது.

இந்தியா வடக்கிலிருந்து தெற்காக 3200 கி.மீற்றர் நீளத்தையும் கிழக்கிலிருந்து மேற்காக 4000 கி.மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ளது. எனவே இந்தியா 1800000 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. மலைகளால் எல்லைப்படுத்தப்பட்ட தேசச் சுற்றளவு 9000 கி.மீற்றர் தூரத்தையும் சமுத்திரத்தால் எல்லைப்படுத்தப்பட்ட தேசச் சுற்றளவு 8000 கி.மீற்றர் தூரத்தையும் கொண்டுள்ளது. இவ்வாறு பாரிய நிலப்பரப்பில் பரந்து விரிந்துள்ள இந்தியா புவியியல் பல்வகைமை கொண்டுள்ளது. இந்தியாவின் புவியியல் பல்வகைமையும் அதன் புவியியற் காரணிகளும் இந்திய வரலாற்றை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதம் இப்பாட அலகின் மூலம் கலந்துரையாடப்படும்.

**தேர்ச்சி 2.0** : ஒரு நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படும்போது பௌதிகக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றிப் புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : புவியியல் அமைவிடம் இந்திய வரலாறு தொடர்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :


- இந்தியாவின் புற அமைவு மற்றும் உள்ளக அமைவை விபரிப்பார்.
- இந்தியாவின் அமைவிடம் உள்நாட்டு வெளிநாட்டு மனித தொடர்புகள் சம்பந்தமாக செல்வாக்குச் செலுத்தி யுள்ளதை இனங்காட்டுவார்.
- இந்தியாவின் பௌதிக அம்சங் களை இந்தியப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**இந்தியாவின் புற அமைவு:**
- மத்திய ஆசியாவிலிருந்து வேறாக அமைந்திருத்தல்
- அகலாங்கு, நெட்டாங்கு அமைவிடம்
- உப கண்டமாக அமைந்திருத்தல்

**இந்தியாவின் உள்ளக அமைவு:**
- மலைத்தொடர்கள்
  - இமயம், இந்துகுஷ், காரகோரம், சுலைமான், கிர்தார், ஆரவல்லி, விந்தியம், சத்புரம், நீலகிரி, கிழக்கு காற்றாடி மலைத்தொடர், மேற்கு காற்றாடி மலைத் தொடர்
- கணவாய்கள்
  - கைபர், போலான், மக்ரான், ஹேராத், பரோடா, பல்காட்
- பாலைவனம், மேட்டு நிலம்
  - தக்கண மேட்டு நிலம், தார் பாலைவனம்
- நதிகள்
  - சிந்து, நர்மதா, தப்தி, பிரம்மபுத்திரா, யமுனை, கங்கை, மகா நதி, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, காவேரி
- துறைமுகங்கள்
  - பாருகச்ச/ போச்சி/ புருகுகச்ச
  - சுப்பாரகம்
  - தாமிறலிப்தி
  - லோத்தால்

**இந்தியாவின் புவியியல் அம்சங்கள் அடங்கிய வரைபடம்**




**இந்தியாவின் புவியியில் அம்சங்கள் வரலாற்றில் ஏற்படுத்திய செல்வாக்கு**

**மலைத்தொடர்கள்**

- இமயம்:- இமய மலைத் தொடர், இந்தியாவைத் தனிமைப்படுத்தியது என்ற கருத்து ஆரம்ப காலத்தில் நிலவியது. ஆயினும் அது இந்தியாவைப் பாதுகாத்ததே ஒழிய எப்போதும் இந்தியர்களுக்குத் தடையாக அமையவில்லை.

  உ-ம்:

  - குஷாண ஆட்சியாளர்கள் இமயத்தைத் தாண்டிச் சீனாவின் தேச எல்லை வரை தமதாட்சியை நீடித்தமை
  - இந்தியாவின் பௌத்த கலாசாரம் இமயத்தைத் தாண்டிப் பட்டுப்பாதை முழுவதும் பரவியதுடன் சீனாவில் பௌத்த சமயம் பரவவும் காரணமாயமைந்தது.
  - தற்போது கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகள் மூலம் பௌத்த கலாசாரம் மொங்கோலியா வரை நன்கு பரவியிருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
  - ஹூணர்களின் ஆக்கிரமிப்புக்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்ததுடன் குப்தப் பேரரசு முடிவுறும் தறுவாயில் தாக்கப்பட்டமையால் சில பகுதிகள் அடிபணிய நேர்ந்தமை.

- இந்தியாவின் பாதுகாப்பு அரணான இமய மலைத் தொடர் இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 20000 அடிகளை விட உயர்ந்த 114 சிகரங்களையுடையது. அதில் மிக உயர்ந்தது 29140 அடி உயரமான எவரெஸ்ட் அல்லது கௌரி சங்கர் சிகரமாகும்.
- இந்தியா ஆசியாக் கண்டத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பது இமய மலைத் தொடரினாலாகும். ஆசியாக் கண்டத்திலிருந்து தரைவழியாக இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்தபோதோ ஆக்கிரமிப்பொன்றை மேற்கொள்ளும்போதோ பெருந்தடையாயமைந்தது இம்மலைத்தொடராகும்.
- ஆயினும் இமய மலைத் தொடரிடையே அமைந்துள்ள பாதைகளினூடாக வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள், தர்ம பிரசங்கம் செய்வோர் ஆகியோர் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கும் சீனா, மத்திய ஆசியா, மொங்கோலியா முதலிய இடங்களிலிருந்து இந்தியாவிற்கும் சிறியளவில் சென்று வந்துள்ளனர்.
- வடக்குத் திசையூடாக இந்தியாவுக்குப் பாரிய பாதுகாப்பை வழங்கி ஆசியாவிலிருந்து இந்தியாவை வேறுபடுத்துவதில் வெற்றி கண்ட இமய மலைத் தொடர் காரணமாகவே பண்டைய இந்தியர்களால் தமக்கெனத் தனிக் கலாசாரமொன்றை உருவாக்கிக் கொள்ள முடிந்தது.
- இமய மலைத் தொடர் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பாரிய தடையாக அமைந்தது மட்டுமல்ல திபெத் ஊடாக வேகமாக வீசும் உலர்ந்த அதி குளிரான காற்றிலிருந்தும் இந்தியாவைப் பாதுகாத்தது. அதேபோன்று அடை மழையாகப் பொழியும் பருவக்காற்று மழை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தி இந்து - கங்கை சமவெளியின் மண் வளத்தைப் பாதுகாத்து அதனை முழு நாட்டினதும் செழிப்பான பிரதேசமாக மாற்றுவதில் இம்மலைத் தொடரின் பணி பாரியது.

- **இந்துகுஷ் :-**
  - இனக் குழுக்களின் புலப்பெயர்வுகளின் போதும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின் போதும் இந்திய வரலாறு பிரபலமான மாற்றங்களுக்குட்படுவதற்கு வட மேற்குத் திசையிலிருந்த இந்துகுஷ் மலைத்தொடர் முக்கியம் பெறுகின்றது.
  - இந்தியாவின் வடமேற்குக் காவலன் இந்துகுஷ் மலைத்தொடராகும். சுலைமான் மற்றும் கிர்தார் மலைகளும் இம்மலைத் தொடரினைச் சேர்ந்தவையாகும்.
  - இம்மலைத் தொடரினாலேயே பண்டைய இந்தியா, பாரசீகம் அல்லது ஈரானிலிருந்து வேறாக்கப்பட்டுள்ளது. இம்மலைத் தொடர் இந்தியாவைப் பாதுகாக்கும் அரணாகத் திகழ்ந்த போதும் இம்மலைத் தொடரின் இடையிடையே தாழ்ந்த கணவாய்கள் அமைந்துள்ளன. கைபர் மற்றும் போலான் எனும் கணவாய்கள் அவற்றுள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இக்கணவாய்கள் ஊடாக இந்தியாவிற்கு ஆக்கிரமிப்புக்களும் புலப்பெயர்வுகளும் இடம்பெற்றுள்ளதுடன் அவை இந்திய அரசியல், சமூக, கலாசாரத் துறைகளில் மிகவும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
  - இம்மலைத் தொடரின் வடக்கே ஆரம்பித்து பாய்ந்தோடும் சுவா், சித்ரால், குமால், காபூல், தோச், குராம் முதலிய நதிகளின் பள்ளத்தாக்குகளும் இந்தியாவிற்குள் பிரவேசிக்கும் பாதைகளாகப் பயன்படுத்தப்பட்டன.

- விந்திய மற்றும் சத்புரா மலைகள்:
    - விந்திய மலைத் தொடர், காத்தியவாரிலிருந்து வட கிழக்குத் திசை நோக்கி ஆயிரக் கணக்கான மைல் தூரம் பரந்துள்ள மலைத் தொடராகும். சத்புரா மலை நர்மதா நதிக்குத் தெற்காக அமைந்துள்ளது. வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் பிரிக்கும் பிரதான புவியியல் அம்சம் விந்திய மலைத் தொடராகும்.
    - விந்திய மலைத் தொடரினால் வட இந்தியாவும் தக்கண மேட்டுநிலமும் பிரிக்கப்படுவதால் இப்பிரதேசங்களுக்குமிடையே தொடர்புகளும் முரண்பாடுகளும் கணிசமானளவு குறைந்திருந்தன. அதே போல் வடக்கிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் தென்னிந்தியாவிற்குள் பிரவேிப்பதற்குப் பிரதான தடையாக அமைந்ததும் விந்திய மலைத் தொடராகும்.
    - ஆயினும் இம் மலைத் தொடரின் மேற்கிற்கும் கம்பே குடாவுக்குமிடையே வளமான சமவெளி ஒன்று அமைந்துள்ளது. அது பரோடா மலை இடைவெளியாகும். சாதவாகனர், மேற்கு சாளுக்கியர், ஹர்ஸவர்தனர் முதலிய ஆட்சியாளர்கள் இச்சமவெளியில் போர்களில் ஈடுபட்டுள்ளனர்.

- ஆரவல்லி மலைத்தொடர்:
    - தார் பாலைவனத்திற்கு எல்லை வகுக்கப்பட்டது இம்மலைத் தொடரினாலாகும். அதேபோன்று இம்மலைத் தொடர் வடமேல் திசையிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் வட இந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்குத் தடையாக அமைந்தது.

- கிழக்குக் காற்றாடி மலைத்தொடர், மேற்குக் காற்றாடி மலைத் தொடர்கள்:-
    - தென்னிந்தியாவில் அமைந்துள்ள காற்றாடி மலைத்தொடர்களிரண்டும் முக்கியமான புவியியல் அம்சங்களாகும். கிழக்குக் காற்றாடி, மேற்குக் காற்றாடி இரண்டிற்கும் இடையிலான சமவெளி தக்கண மேட்டுநிலமாகும்.
    - மேற்குக் காற்றாடி மலைத் தொடர் அதி உயரம் வாய்ந்ததாகும். இம் மலைத் தொடர் கடற்கரைக்கு மிகவும் சமீபமமாக அமைந்திருப்பதால் ஆயிரக்கணக்கான மைல்கள் வரை மனித வாழ்விடங்கள் உருவாவதற்குப் போதியளவு இடமில்லாதிருந்தது.
    - மேற்குக் காற்றாடி மலைத் தொடர் கடற்கரைக்கு சமாந்தரமாக மென் சாய்வுடையதாகவும் பள்ளத்தாக்கு மலையிடைவெளி கணவாய், சமவெளி என்பவை குறைவானதாகவும் அமைந்திருந்தமையால் நதிகள் ஊற்றெடுப்பதற்குத் தடையாக அமைந்தது. எனவே நர்மதா, தப்தி எனும் இரு நதிகள் தவிர இந்தியாவின் மேற்குக் கரையை அடையும் வேறு நதிகள் இல்லை.
    - கிழக்குக் காற்றாடி மலைத்தொடர் இதற்கு நேர்மாற்றமானது.
    - இம் மலைத்தொடருக்கும் கடற்கரைக்கும் இடையில் பாரிய இடைவெளி அமைந்துள்ளமை, நதிகள் சில பாய்கின்றமை முதலிய காரணிகளால் இப்பிரதேசத்தில் அரச வம்சங்கள் பலதும் தமது ஆட்சியதிகாரத்தை உறுதிப்படுத்த வசதியாக அமைந்தது.

**கணவாய் வழிகள்**

- இந்துகுஷ், சுலைமான், கிர்தார் முதலிய மலைத் தொடர்களினால் வடமேல் இந்தியா பாதுகாக்கப்பட்டாலும் அம்மலைத் தொடர்களிடையே அமைந்திருந்த இயற்கையான கணவாய்கள் மூலம் ஆக்கிரமிப்பாளர்களும் புலம் பெயர்வாளர்களும் இந்தியாவிற்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமைந்தன.
- வடமேல் கணவாய்கள்:-
  - கைபர் கணவாய் - காபூல் நதிப்பள்ளத்தாக்கிலிருந்து பெஷாவர் வரை அமைந்துள்ளது.
  - போலான் கணவாய் - சுலைமான் மலைகளுக்கு மேற்கில் அமைந்துள்ளது.
  - மக்ரான் கணவாய் - கிர்தார் மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது.
  - ஹேராத் கணவாய் - ஆப்கான் மலைகளுக்கு அண்மிய பிரதேசத்தில் அமைந்துள்ளது.
  - இவை தவிர வடமேல் திசையில் அமைந்துள்ள சிறிய கணவாய்கள் சில காணப்படும். மிகச் சிறிய வர்த்தகக் குழுவினர் மாத்திரம் இக்கணவாய்களைப் பயன்படுத்தியுள்ளனர்.



***போலன் கணவாய்***



கைபர் கணவாய்



மக்ரான் கணவாய்

- மேற்படி கணவாய் வழிகளுள் இந்துகுஷ் மற்றும் கெஹிபா மலைத் தொடர்களுக்கிடையிலான கைபர் கணவாய் இந்தியாவிற்கான வாசல் எனப்படுவதுடன் பண்டைக் காலத்திலிருந்து அதிகமான ஆக்கிரமிப்பாளர்களும் புலம்பெயர்வாளர்களும் பயன்படுத்தியது இவ்வழியையே ஆகும். இதற்கான பிரதான காரணம் யாதெனில் கைபர் கணவாயைத் தாண்டி இந்தியாவிற்குள் பிரவேசிப்போருக்கு நேரடியாகப் பஞ்சாப் எனும் வளமான பகுதியை அடைய முடியும் என்பதனாலாகும்.

  உ-ம்: முதல் புலம்பெயர்வாளர்களான ஆரியர், அலெக்சாண்டர், பக்டிரியன் கிரேக்கர், குஷானர், ஹூணர், துருக்கியரும் மொகலாயரும்
- கைபர் கணவாய்க்கு 800 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள போலான் கணவாய் வடமேற்கு இந்தியாவின் மற்றுமொரு கணவாய் வழியாகும்.
- பாரசீகத்தின் ஹெல்மண்ட நீர்வடிநிலத்திற்கு வந்த ஆக்கிரமிப்பாளருக்கும் புலம் பெயர்வாளருக்கும் இந்தியாவிற்குள் பிரவேசிப்பற்கான அண்மித்த வழியாக இது அமைந்தது.
- இக்கணவாயைக் கடப்பது இலகுவான காரியமல்லாதபடியால் ஆக்கிரமிப்பாளரும் புலம் பெயர்வாளரும் இவ்வழியை அபூர்வமாகவே பயன்படுத்தியுள்ளனர்.

  உ-ம்: சாகர் இந்தியாவினுள் பிரவேசித்தது இவ்வழியூடாகவேயாகும்.
- பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் போலான் கணவாயைக் கடந்து இந்தியாவிற்குள் பிரவேசித்தவர்களுக்கு முதலில் சந்தித்தது கடினமான காலநிலையுடைய சிந்துப் பிரசேதமும் ராஜ்புத்தான் பாலைவனமுமாகும். அதிக வெப்பநிலை, பொருத்தமற்ற காலநிலை காரணமாக இப்பிரசேதம் வாழ்வதற்கு உகந்ததாக அமையவில்லை.
- போலான் கணவாய்க்கு 480 கி.மீற்றர் தூரத்தில் மக்ரான் கணவாய் அமைந்துள்ளது. மிகவும் கஸ்டமான வழியான இது மக்ரான் கரையோரமாக அமைந்துள்ளது. இக்கணவாய் ஊடாக வந்த அநேகமானோர் மரணத்தைத் தழுவியுள்ளனர். இந்தியாவை ஆக்கிரமித்த பேரரசன் அலெக்சாண்டர் திரும்பிச் சென்றது இவ்வழியினாலாகும். அச்சமயம் அவனது படையினருள் அதிகமானோர் மரணித்ததாகச் சொல்லப்படுகிறது.
- மக்ரான் கணவாயூடாக இந்தியாவை ஆக்கிரமித்து வெற்றி கண்டவர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்குள் பிரவேசித்த முஹம்மது பின் காசிம் மட்டுமேயாவார்.

**கணவாய் வழிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதம்**

- கணவாய்களூடாக இந்தியாவிற்குள் பிரவேசித்த வெளிநாட்டினர் இந்தியாவினுள் தமது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டதுடன் இந்திய அரச வம்சங்களைப் பலவீனப்படுத்தியுள்ளனர்.
- அதே போன்று அவர்களின் ஆட்சி முறை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு என்பன இந்தியாவினுள் வேரோடியுள்ளன.
- மேற்கூறிய வெளிநாட்டுச் சக்திகள் இநதியாவிற்குள் பிரவேசித்து அதிகாரத்தை பரவலடையச் செய்தமையால் அவர்களின் கலாசாரப் பண்புகள் இந்திய மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தது.
- மத்திய ஆசியாவிலிருந்து பிரவேசித்த முதல் குடியேற்றக் குழுவினரான ஆரியர்கள் மூலம் யாகம் (வேள்வி), தெய்வ வணக்கம், நீர், நெருப்பு, விருட்ச வணக்கம் என்பன அறிமுகமாதல். அத்துடன் ஆரியர் வருகை காரணமாக அன்றைய இந்தியாவின் சமூக முறையானது முற்றிலும் வேறுபட்டது.

  உ-ம்: கோத்திர அரசியல், குலபேதம் (சாதி பேதம்) அரசாட்சி முறையின் வளர்ச்சி

- அது தவிர தந்தையை அடிப்படையாகக் கொண்ட தந்தை வழி சமூக முறை ஒன்று உருவாவதற்கும் ஆரியரின் வருகையே காரணமாயமைந்தது.
- கிரேக்கம், சீனம், உருது, பாரசீகம், உரோம் முதலிய மொழிகள் இந்தியாவினுள் பிரயோகிக்கப்பட்டதுடன் கட்டடக் கலை, சிற்பக் கலை, செதுக்கல் கலை, வைத்தியக் கலை, சோதிடக் கலை முதலிய கலாசாரப் பண்புகள் இந்திய சமூகத்துடன் இணைந்தன.
  உ-ம்: காந்தார கலை மரபு
  அமராவதி கலை மரபு
- இந்தியாவிற்குள் பிரவேசித்த வெளிநாட்டு இனக் குழுவினரான குஷாணர்களின் கீழ் இந்தியாவின் கலாசாரம் போசிக்கப்பட்டதில் பாரிய பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.
  உ-ம்: நான்காம் பௌத்த பேரவை நடத்தியமை,
  மொழி இலக்கிய, கலாசார வளர்ச்சி,
  காந்தார, மதுரா, அமராவதி கலை மரபுகளின் வளர்ச்சி,
  புத்தர் சிலைகள் உருவாக்கப்பட்டமை
- சீனா, மத்திய ஆசியா, பாரசீகம், கிரேக்கம், அரேபியா முதலிய கீழைத் தேய மற்றும் மேலைத் தேய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டமையால் வர்த்தகத்துறை வளர்ச்சி கண்டமை
- முஸ்லிம்கள் இந்தியாவை ஆக்கிரமித்து சில நூற்றாண்டுகள் அதிகாரத்தை நிலைநாட்டியமையில் இஸ்லாமிய சமயச் சிந்தனைகளும் அவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் இந்திய சமூகவமைப்பில் இணைந்தமை

**பாலைவனங்களும், மேட்டு நிலங்களும்**

- தார் பாலைவனம்
  - தார் பாலைவனம் வடமேற்கிந்தியாவில் அமைந்துள்ள மற்றுமொரு சிறப்பான நிலப்பகுதியாகும். இது ராஜ்புத்தான் பாலைவனம் என்றும் அழைக்கப்படுகிறது. கல்கிரான் எனும் பிரதேசத்தில் ஆரம்பித்து வடகிழக்குத் திசை நோக்கிப் பரவியுள்ள இப்பாலை நிலத்தின் நீளம் 640 கி.மீற்றர் ஆகும். அகலம் 246 கி.மீற்றர் ஆகும்.
  - இப்பாலைவனத்தால் இந்தியாவிற்கு நன்மை ஏற்பட்டது போலவே தீமைகளும் ஏற்பட்டுள்ளன.
  - வடமேற்கு கணவாய் வழிகளூடாக இந்தியாவிற்குள் பிரவேசித்த ஆக்கிரமிப்பு, புலம் பெயர்வுக் குழுவினர் இந்தியாவினுள் பிரவேசிப்பதில் தார் பாலைவனமும் ஆரவல்லி மலைத் தொடரும் பெருந்தடைகளாக அமைந்தமை.
  - இப்பாலைவனம் காரணமாக வட இந்தியா, வடமேல் இந்தியா என இரு பகுதிகளாகப் பிரிவுற்றதுடன் அதனால் வட இந்தியா ஆட்சியாளர்கள் வடமேல் இந்தியாவைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதில் அதிக முயற்சியெடுக்க நேர்ந்தமை.



தக்கண மேட்டு நிலம்

**தக்கண மேட்டுநிலம் அல்லது பீட பூமி**

- மேற்குக் காற்றாடி மலைத்தொடருக்கும் கிழக்குக் காற்றாடி மலைத் தொடருக்கு மிடையே அமைந்துள்ள பிரதேசம் தக்கண பீடபூமி எனப்படும். இது பாரிய நிலப் பிரதேசமாயினும் அதன் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி வளமற்ற பாறைகளையும் சிறிய மலைத் தொடர்களையும் கொண்டுள்ளது.
- இது கிழக்குத் தக்கணம், மேற்குத் தக்கணம் எனும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- மேற்குத் தக்கணத்தில் இராஷ்டிரகூடர், சாளுக்கியர், சாதவாகனர் எனும் அரச வம்சங்கள் இடையிடையே தமது அதிகாரத்தை நிலைநாட்டி வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.
- கிழக்குத் தக்கணத்தின் நிலையோ அதற்கு நேர்மாறானது. மகா நதி, கோதாவரி நதி, கிருஷ்ணா நதி, துங்கபத்திரா நதி, காவேரி நதி எனும் தென்னிந்திய நதிகளனைத்தும் கிழக்குச் சமவெளியின் பாரிய பரப்பளவைச் செழிப்பாக்கிக் கொண்டு பாய்ந்தோடுகின்றன. எனவே இப்பிரதேசத்தில் சாளுக்கியர், இராஷ்டிரகூடர், சோழர், பல்லவர் முதலிய பல்வேறு அரச வம்சங்களும் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டதை வரலாற்றில் அவதானிக்க முடிகின்றது.
- தக்கண மேட்டு நிலத்தில் அமைந்துள்ள உலர் செழிப்பற்ற நிலம், செழிப்பற்ற மலைப் பள்ளத்தாக்குகள், பாயும் நதிகள் காரணமாக ஏறபட்டுள்ள நிலப் பிரிவுகள் காரணமாக இப்பிரதேசத்தில் ஒன்றுபட்ட அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்த முடியவில்லை. அதற்குப் பதிலாக வரலாறு முழுதும் சிற்றரசர்கள் இப்பிரதேசத்தினுள் அதிகாரத்தை பெற்றுக் கொண்ட விதத்தை அறிய முடிகின்றது.



துங்கபத்திரா நதி




சிந்து நதி

**நதித்தொகுதிகள்**

- இந்தியாவின் நதித் தொகுதிகள் இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் மிக முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.
- வடமேல் இந்தியாவில் பாயும் பிரதான நதி சிந்து (இந்து) நதியாகும். இந்நதியை மையமாகக் கொண்டமைந்துள்ள பஞ்சாப் சமவெளி வட மேல் இந்தியாவின் வளமான வலயமாகும். எனவே உலகில் தோன்றிய மிக வளர்ச்சி கண்ட நாகரிகமான ஹரப்பா நாகரிகம் சிந்துநதிக் கரையில் தோற்றம் பெற்றது.
- கி.மு. 1500 இன் பின்னர் இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்த முதல் குடியேற்றக் குழுவினர் (ஆரம்ப ஆரியர்) குடியேற்றங்களை அமைத்தது இச் சமவெளியிலே யாகும்.
- குஷாணர்கள் இந்தியாவிற்கு வந்து தமது ஆட்சியை மேற்கொண்டது. இப்பிரசேத்திலாகும். அவ்வம்சத்தைச் சேர்ந்த கனிஷ்க மன்னன் தனது தலைநகராகக் கொண்டதும் இங்குள்ள புருஷபுரம் (பெசாவர்) ஆகும்.
- வட இந்தியாவில் பாயும் கங்கை, யமுனை ஆகிய இரு நதிகளும் இந்திய வரலாற்றை மாற்றியமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய நதிகளாகும்.
- இவ்விரு நதிகளாலும் அவற்றின் கிளைகளாலும் போசிக்கப்படும் பகுதி கங்கை - யமுனை சமவெளியாகும். (இந்துஸ்தான் சமவெளி) இச்சமவெளி கிழக்கிலிருந்து மேற்காக 3200 கி.மீற்றர் வரை பரந்து செல்கிறது.
- இச்சமவெளி மிகவும் வளமான, பெறுமதியான புவியியல் அலகாகத் திகழ்ந்தமையால் இவ்வலயத்தை மையமாகக் கொண்டு சிறப்பான அரசுகளும் பேரரசுகளும் உருவாயின.

  உ-ம்: 16 மகாஜனபதங்கள், மகதப் பேரரசு, மௌரிய அரச வம்சம்,
  குப்த அரச வம்சம், ஹர்சவர்த்தன அரசு
- பொருளாதார ரீதியிலும் இவ் வலயத்தின் முக்கியத்துவம் எல்லையற்றது. கங்கை, யமுனை நதிகளினதும் கிளையாறுகளினதும் வெள்ளப் பெருக்கால் உருவான வளமான விவசாய நிலம், பாரிய கப்பல்களிலும் பயணம் செய்யக் கூடிய நதிக் கரைகளிலமைந்த துறைமுகங்கள், காடுகளில் கிடைக்கும் மரப்பலகைகள் மற்றும் கனிய வளங்கள் காரணமாக இந்திய வரலாற்றின் எல்லாக் காலப்பகுதிகளிலும் கங்கை - யமுனை சமவெளி செழிப்பாகத் திகழ்ந்துள்ளது. உப்புப் படிவுகள், இரும்புப் படிவுகள் அமைந்திருப்பது போலவே உலகின் அதிகூடிய மழை வீழச்சி கிடைக்கும் பிரதேசமாகவும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.
- பஞ்சாப் சமவெளியிலிருந்து கங்கை - யமுனை சமவெளிக்குள் பிரவேசிக்கும் வாயிலாக அமைந்த டில்லி சமவெளி இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- இந்திய வரலாற்றைத் தீர்மானித்த பனிபட் யுத்தம் இடம்பெற்றதும் டில்லிச் சமவெளியிலாகும். இச்சமவெளியின் முக்கியத்துவம் காரணமாக துருக்கி ஆக்கிரமிகப்பாளர்கள் டில்லியைக் கைப்பற்றி அதனைத் தலை நகராக்கி டில்லி சுல்தான் ஆட்சியை ஏற்படுத்தினர்.
- கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளுக்கிடைப்பட்ட இராச்சூர் பல முக்கிய போர்கள் நிகழ்ந்த இடமாகும். மேற்கு சாளுக்கியருக்கும் சோழருக்கும் இடையில் ஏற்பட்ட கொப்பம், குதல், சங்கம் முதலிய முக்கிய போர்களும் இவ்விரு நதிகளுக்குமிடையில் நடைபெற்றவையாகும்.

- தக்கணத்தின் முஸ்லிம் அரசு, தென்னிந்தியாவின் பாண்டிய, விஜய நகரப் பேரரசுகளின் வரலாறு இராச்சூருடன் பின்னிப் பிணைந்துள்ளது.



***இராய்ச்சூர்***

**துறைமுகங்கள்**

- இந்தியாவில் அமைந்துள்ள துறைமுகங்களும் இந்திய அரசியல் மாற்றங்களில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. பாருகச்சா, சுப்பராகம், கல்யாணி, தாமிரலிப்தி, காவேரி பட்டணம், விசாகப்பட்டணம் முதலிய துறைமுகங்கள் அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளிலும் முக்கியம் வாய்ந்தவை. குறிப்பாகச் சர்வதேசத் தொடர்புகளின் போது இத்துறைமுகங்கள் பெரிதும் உதவியாக அமைந்துள்ளன.

**இந்தியாவின் பரப்பளவும் பல்தன்மையும்**

- இந்தியாவினுள் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் பல்தன்மையை அவதானிக்கலாம்.

  உ-ம்: புவியியல் வேறுபாடு, பல்வேறு சமயங்கள் பல்வேறு கலாசாரங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள்
- வேற்றுமையில் ஒற்றுமை காணல்
  - இந்தியர் எனும் உணர்வு

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்து மாணவர்களை மதிப்பீடு செய்க.

01 - 06 வரையிலான வினாக்களுள் ஒவ்வொரு வினாவிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சொல் ஏனைய சொற்களுடன் ஏதோவொரு வகையில் பொருந்தாது அச்சொல்லைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) 1. காவேரி 2. கிருஷ்ணா 3. ராவி 4. நர்மதா
5. துங்கபத்திரா ( )

2) 1. சுப்பாரகம் 2. சம்பா 3. கௌசம்பி 4. வாரணாசி
5. மதுராபுரி ( )

3) 1. போலான் 2. கைபர் 3. மக்ரான் 4. பரோடா
5. காரகோரம் ( )

4) 1. ஜேலம் 2. குமால் 3. ராவி 4. செனால்
5. பீயஸ் ( )

5) 1. இந்துகுஷ் 2. சுலைமான் 3. தார் 4. ராஜ்மகலி
5. கிர்தார் ( )

6) 1. விந்தியா 2. நீலகிரி 3. தௌலகிரி 4. சத்புரா
5. மகாதேவ ( )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள ABCD கூற்றுக்களுள் சில சரியானவை அல்லது ஒன்று சரியானது. அவற்றுள் A யும் B யும் சரியெனில் இலக்கம் 1, B யும் C யும் சரியெனில் இலக்கம் 2, C யும் D யும் சரியெனில் இலக்கம் 3, A யும் C யும் சரியெனில் இலக்கம் 4, ஒரு கூற்று அல்லது இரு கூற்றுக்களுக்கு மேல் சரியெனில் இலக்கம் 5 என்று அடைப்பினுள் எழுதுக.

7) இந்தியாவின் புவியியல் பண்புகளுக்கேற்ப, பின்வரும் கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை
   A - வடக்கின் மலைத்தொடர் முக்கியம் பெறுவதற்குக் காரணம் அங்கு பிரதான இரு நதிகள் ஊற்றெடுப்பதாகும்
   B - கோதாவரி நதி தெளிவான புவியியல் எல்லை ஆகும்.
   C - கங்கை - யமுனை சமவெளி பேரரசுகளின் மத்திய நிலையமாக விளங்கியது.
   D - மக்ரான் கணவாய் இலகுவாக இந்தியாவினுள் பிரவேசிப்பதற்கான வழியாகும். ( )

8) வடமேற்கின் கணவாயூடாக மெற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் படையெடுப்புகளைத் தடுப்பதற்கு இந்தியாவால் முடியாமற் போனமைக்கான காரணம் அல்லது காரணங்கள்
   A - வட மேல் திசையின் பாதுகாப்புத் தொடரப்பாக இந்திய ஆட்சியாளர்களின் கவனயீனம்
   B - வட மேல் திசையின் எல்லை, பாலைவனமாக இருந்தமை
   C - ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் பாரிய படையைத் திரட்டுவதற்கு இந்திய ஆட்சியளர்களால் முடியாமற் போனமை
   D - வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக இந்திய ஆட்சியாளர்களால் ஒற்றுமைப்பட முடியாமற்போனமை ( )

**மதிப்பீடு - 2**

பின்வரும் வகையில் விளக்க வினாக்களை வழங்கி மாணவர்களை மதிப்பீடு செய்க.

1) வடமேல் இந்தியாவின் கணவாய் வழி இந்திய வரலாற்றைக் கற்பதற்கு உதவி செய்யும் விதத்தை விளக்குக.

2) பண்டைய இந்திய வரலாற்றை வடிவமைப்பதில் புவியியல் காரணிகளின் செல்வாக்குப் பற்றிக் கலந்துரையாடுக.

3) புவியியல் பல்வகைமையூடாக இந்தியா ஒரே நாடாகக் கட்டியெழுப்பப்பட்டமையை உதாரணங்களுடன் விளக்குக.

# 3. இந்து நதியை மையமாகக் கொண்டமைந்த ஹரப்பா நகர நாகரிகம்

இன்று கிடைத்துள்ள புதிய தொல்பொருள் சான்றுகளின்படி இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் மிகப் புராதன நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றறியப்பட்டுள்ளது. இது இந்து நதிக்கரையில் ஆரம்பித்ததாகக் கருதப்பட்டாலும் 20 இலட்சம் சதுர மைல் பிரதேசத்தில் பரவியிருந்ததாக அறியப்பட்டுள்ளது. எனவே இதனை இந்து நதி நாகரிகம் என்றழைப்பது பொருத்தமற்றதெனவும் முதலாவது அகழ்வின் போது அறியப்பட்டது ஹரப்பா நகரம் என்பதால் அதே பெயரில் அறிமுகம் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது. இந்நாகரிகத்தின் முதல் தடயம் கி.மு. 7000 ஆம் ஆண்டு வரை செல்வதுடன் கி.மு. 1650 அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. இங்கு கிடைத்த எழுத்துக்களை வாசித்தறிய முடியாத காரணத்தால் இக்காலப்பகுதி முன்வரலாற்றுக் காலத்திற்குரியதாகும். அதேபோல் இங்கு இரும்பு உற்பத்தி செய்யப்படாமையால் இது வெண்கலயுகத்திற்குரியது. உலகின் பரப்பளவில் கூடியதும் மேலான வளர்ச்சி கண்டிருந்ததுமான நாகரிகம் இதுவாகும். இதன் வளர்ச்சிக் காலம் கி.மு. 3000 முதல் கி.மு. 1800 வரை நிலவியமைக்கான சாட்சிகள் கிடைத்துள்ளன. இந்தியாவின் முதல் குடியேற்றக் குழுவினரான ஆரியருக்கும் இந்த நாகரிகத்திற்கும் எதுவிதத் தொடர்புமில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 3.0** : இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் போக்குகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : சிந்துநதி நாகரிகத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பன தொடர்பாகத் தகவல்களை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :


- ஹரப்பா நாகரிகம் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.
- ஹரப்பா நாகரித்தின் சிறப்பினை மதிப்பார்.
- ஹரப்பா நாகரிகம் சிறப்புற்று விளங்கிய இடத்தினைத் தேசப்படத்தில் அடையாளமிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**


பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

## ஹரப்பா நாகரிகத்தின் அறிமுகம்

ஹரப்பா புராதன நாகரிகம்




- ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் வடமேல் இந்தியாவில் இந்து நதியை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நாகரிகமொன்று நிலவியது.
  (கி.பி. 1826 இல் சாள்ஸ் மாசன் என்பவரால் இதன் முதல் அடையாளம் கண்டறியப்பட்டது.)
- 1853 இல் பிரித்தானியரால் லாகூர் முதல் கராச்சி வரையிலான புகையிரத வீதி அமைக்கும் பணியின்போது இந்நாகரிகத்திற்குரிய சிதைவுகள் மேலும் கிடைக்கப்பெற்றன. பிரித்தானிய இனத்தவரான அலெக்சாண்டர் கனிங்காம் என்பவரால் முதல் முதலாக இந்த நாகரீகம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது.
- 1921 இல் தயாராம் சாணி என்பவரால் முறையான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டமை
- 1921 இல் இந்து நதியின் கிளையாறான ராம் நதிச் சூழலில் மொண்டிகோமரி மாவட்டத்தில் ஹரப்பா நகர் கண்டறியப்பட்டமை
- அதன்படி ஹரப்பா நாகரிகம் என அறிமுகமானமை
- 1922 இல் E.D. பானர்ஜி அவர்களால் சிந்த் லர்கானா மாவட்டத்தில் மொஹஞ்சதாரோ நகரம் கண்டறியப்பட்டது.
- அதன் பின்னர் மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம் என அறிமுகம் செய்யப்பட்டமை




***சாள்ஸ்மாசனால் வரையப்பட்ட சிந்து நதிப்பள்ளத்தாக்கு***



அலெக்சாண்டர் கனின்ஹாம்




ஜோன் மார்ஷல்
(1902 - 1921 இந்தியாவின்
தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்)


- ஹரப்பாவுக்குச் சமமான 14 சிறு நகரங்களும் மொஹஞ்சதாரோவுக்குச் சமமான 17 சிறு நகரங்களும் பின்னர் கண்டறியப்பட்டமையால் இது ஒரு நகர நாகரிகமாக உறுதிப்படுத்தப்பட்டமை
- இங்கு கிடைக்கப் பெற்ற சித்திர எழுத்தாக்கங்களான கல்வெட்டுகளை வாசித்தறிய முடியாத காரணத்தால் தொல்பொருள் ஆதாரங்கள் மூலம் மட்டுமே இந்நாகரிகம் பற்றி அறிய முடிகின்றமை.
- ஹரப்பா நாகரிகம் பற்றி ஆராய்ச்சியிலீடுபட்ட தொல்பொருள் ஆய்வாளர்கள்

| | | |
|---|---|---|
| - தயா ராம் சாணி | - ஆர்.டீ. பானர்ஜி | - எம்.எஸ். வத்ஸ் |
| - ஏ. கோஸ் மகே | - ஜோன் மார்ஷல் | - சுரப் தனன் |
| - எம்.கே. தவாலிகர் | - மோதிமர்வீலர் | - பீ.பீ. லால் |
| - எஸ்.ஆர். ராவோ | - ஷெரீன் ரத்னகர் பொஷலி | - வசந்சிந்தே |

மோதிமர் வீலர்



எஸ்.ஆர். ராவோ




**ஆரம்பமும் பரம்பலும்**

- இந்நாகரிகத்தின் ஆரம்பம் பற்றி இரு கருத்துக்கள் நிலவுகின்றமை
    - சுதேச இனக் குழுவினரால் ஆரம்பிக்கப்பட்டதாக கிளீன் டானியல், நெயார் சர்வீஸ் எனும் கல்விமான்களின் கருத்து.
    - வெளிநாட்டு கிராமிய நாகரிகவாசிகளால் ஆரம்பிக்கப்பட்டதான மோதிமர் வீலர், ஸ்மித் என்போரின் கருத்து
- மெசப்பெத்தேமியா மற்றும் மேற்காசியாவில் அமைந்திருந்த கிராமிய நாகரிகத்தின் சில பண்புகள் ஹரப்பா நாகரிகத்தில் கிடைத்துள்ளமை இரண்டாவது கருத்திற்குக் காரணமாகும்.
- ஹரப்பா நாகரிகத்திற்கேயுரிய தனித்துவம் வாய்ந்த பண்புகள் முதலாவது கருத்திற்குக் காரணமாகும். மேற்கு மற்றும் வடமேல் திசைகளில் அமைந்துள்ள மணற் பாங்கான பகுதிகளில் அறியப்பட்ட கிராமிய கலாசாரத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்களின் கருத்துப்படி அக்கிராமிய கலாசாரமானது படிப்படியாக வளர்ச்சியடைந்து நகராட்சிகள் உருவானது என்பதுடன் அவ்வாறு உருவான நகரங்களை அடிப்படையாகக் கொண்டு ஹரப்பா நாகரிகம் உருவானது என்பதாகும்.
- ஆயினும் 2016 இல் வசந்த் சிந்தே என்பவர் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் பயனாக இந்த நாகரிகத்தின் பிரதான நகரம் ரவிகார்ஹி என அறியப்பட்டுள்ளதுடன் அது ஹரப்பா நகரை விட 3 மடங்கு பெரியது என்பதுடன் இவ்வாராய்ச்சியின்படி இந்நாகரிகமானது சுயாதீனமாக உருவானது என்பதும் அறியப்பட்டுள்ளது.


## ரகிகார்ஹி



***ரகிகார்ஹி அகழ்வுப் பணிகள்***

இன்றைய ஹரியானா மாநிலத்தில் ஹிசார் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்நகரம் 1997 இல் கண்டறியப்பட்டதுடன் 2016 பேராசியர் வசந்த் சிந்தே அவர்களின்படி ஹரப்பா நாகரிகத்தின் தலைநகரம் இதுவென அறியப்பட்டது. இன்றைய பாகிஸ்தானில் மொஹஞ்சதாரோ நகரம் அமைந்துள்ளதுடன் ரகிகார்ஹி இந்தியாவில் அமைந்துள்ளது. இந்நகரம் 350 ஹெக்டேயர் பரப்புடையது. டில்லியிலிருந்து 160 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்நகரம் ஏனைய இரு பிரதான நகரங்களுக்குச் சமமானதாக அமைக்கப்பட்டுள்ளது. ஹரப்பா நாகரிகத்தில் கைத்தொழில் நகரம் இதுவாகுமென கிடைக்கப் பெற்றுள்ள உற்பத்திப் பொருட்களை வைத்து அறியப்பட்டுள்ளது. அவற்றுள் அநேகமானவை வளர்ச்சி கண்ட ஹரப்பா நாகரிகத்திற்கு உரியவை. வளையல், மோதிரம், பிராணிகளின் உருவம், மனித உருவம் முதலியன மிகச் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.


***சுடுமண் வளையல்கள்***



பாத்திரங்கள்



மணிகள்




***அகழ்வாராய்ச்சிப் பொருட்கள்***

ஹரப்பா நாகரிகம் 3 யுகங்களைக் கொண்டது.


- ஆரம்பக் கட்டம் கி.மு. 3500 - 2600
- வளர்ச்சிக் கட்டம் கி.மு. 2600 - 2000
- பிற்கால கட்டம் கி.மு. 2000 - 1600

அரியானா மாநிலத்தில் காணப்பட்ட மேலும் ஐந்து தொல்பொருள் பிரதேசங்கள் (குணால், பிர்ரண, பாமனா, கிரிவாத், மிகாதால்) கி.மு. 5000 திற்கு உரியதாகும். எனவே ஹரப்பா நாகரிகம் வேறொரு இடத்திலிருந்து வளர்ந்ததொன்றல்ல. அது இந்தியாவிலே வளர்ச்சி கண்ட நாகரிகம் என்பது போலவே உலகின் புராதன நாகரிகமும் ஆகும். அதே போன்று மிக விசாலமான மிக வளர்ச்சியடைந்த நாகரிகம் என்றும் அகழ்வுகளின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கக்கார நதி இந்நகருக்குத் தேவையான நீர்வளத்தை வழங்கியுள்ளது. எனவே இந்நகரம் தலைநகராகவும் பயன்பட்டுள்ளது.



*ரகிகார்ஹியில் கிடைத்த விளையாட்டுப் பொருட்கள்*

- தற்போது கிடைத்துள்ள தகவல்களின்படி இது கி.மு. 3000 அளவில் வளர்ச்சியடைய ஆரம்பித்து அவ்வளர்ச்சி 1000 ஆண்டுகளுக்கும் மேலாக நின்று நிலைத்துள்ளதுடன் கி.மு. 1800 அளவில் வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. கி.மு. 1650 ரகிகார்ஹி வீழ்ச்சியடைந்துள்ளது.
- ஹரப்பா நாகரிகத்தின் ஆரம்ப காலம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.
  - மோதிமர் வீலர் - கி.மு. 2500 - 1500 காலப்பகுதி
  - ஜோன் மார்ஷல் - கி.மு. 3250 - 2750 காலப்பகுதி
  - எம். எஸ். வத்ஸ் - கி.மு. 3500 - 2500 காலப்பகுதி
- வடக்கே இமய மலையடிவாரத்தின் ரூபார் வரை தெற்கே மகாரஷ்டிராவின் தைமாபாத் வரை கிழக்கே கங்கை நதியின் ஆலம்கீர்பூர் வரை மேற்கே பலுகிஸ்தானின் சுக்தஜென்டோர் வரை இந்நாகரிகம் பரந்திருந்தமை
- மெசப்பத்தேமியாவின் களிமண் தட்டுக் குறிப்புகளின்படி ஹரப்பா அக்காலத்தில் மெல்லுஹ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மெசப்பத்தேமியா, சுமேர் என அழைக்கப்பட்டது.
- இந்நாகரிகத்தின் முழுமையான பொருளாதாரமும் வெளிநாட்டு வர்த்தகத்திலே தங்கியிருந்தமை இன்று கண்டறியப்பட்டுள்ளது.
- லோதால் எனும் செயற்கைத் துறைமுகம் பிரதான துறைமுகமாகும்.
- இத்துறைமுகம் இன்று 20 கி.மீ. தூரம் வரை நிலப்பகுதியில் அமைந்துள்ளது.
- இது குஜராத்தின் அஹமதாபாத்தில் சரக்வலா எனும் கிராமத்தில் அமைந்துள்ளது.
- எஸ்.ஆர். ராவோ என்பரால் 1954 - 1962 காலப்பகுதி அகழ்வாராய்ச்சியில் கண்டறியப்பட்டது.
- இந்நாகரிகவாசிகள் மெசப்பத்தேமியாவுடன் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கையின் போது இடைமாறும் நிலையமாகப் பயன்படுதப்பட்டது பாரசீக வளைகுடாவாகும்.



லோதால் துறைமுகம் - பிற்காலச் சித்திரம்




செயற்கையான தடாகம்

**சமகால நாகரிகங்களுடனான இடைத்தொடர்பு**

- பல்வேறு இன மக்களும் வாழ்ந்துள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமையால் வேறு நாகரிகங்களுடன் தொடர்புகள் இருந்திருக்கலாம் எனும் கருத்து நிலவுகின்றமை.
- வர்த்தக வளங்களைப் பெற்றுக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு வேறு நாகரிகங்களுடன் தொடர்புகள் நிலவியமை.
- லோதால் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு கப்பல்கள் மூலம் மெசப்பத்தேமியா முதலிய நாகரிகங்களுடன் தொடர்புகள் நிலவியமை

- மெசபத்தேமியாவில் ஹரப்பா நாகரிகத்திற்குரிய முத்திரைகள் கிடைத்துள்ளமை
- வர்த்தக வளங்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பின்வரும் இடங்களுடன் தொடர்புகளை வைத்திருந்தமை
  தங்கம் - மைசூர்
  செப்பு - அரேபியா, ராஜ்புத்தான், பலுக்கிஸ்தான்
  வெள்ளி - ஈரான் (பாரசீகம்)
- கம்பளி மெசபெத்தேமியாவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் முத்து மற்றும் கானீலியன் மணிகள் ஹரப்பாவிலும் பெற்றுக் கொள்ளப்படடமை
- கானீலியன் மணிகள் இந்தியாவுக்கே உரிய உற்பத்தியாகும்.
- மேற்காசியாவின் கிராமிய, நகர நாகரிகங்களில் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள் ஹரப்பாவில் கிடைத்துள்ளமை.

**நகரத் திட்டமிடலும் நகரப் பண்புகளும்**

- தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தொல்பொருள் தகவல்களின்படி (2016) ரகிகார்ஹி பிரதான வர்த்தக நகராக செயற்பட்டுள்ளமை.
- மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்பன நகர நாகரிகத்தின் பிரதான இரு நகரங்களாகத் திகழ்ந்தமை.
- நகரத் திட்டமிடலின் பிரதான பண்பு வீதித் தொகுதிகளாகும். பிரதான நகரங்கள் மூன்றினதும் பண்புகள் ஒத்தவையாகக் காணப்பட்டமை
- 10 - 30 அடிகள் வரை அகலமானதும் 02 மைல்கள் வரை நீளமானதுமான நேரான பெருந்தெருக்கள் காணப்பட்டமை.
- பிரதான வீதிக்கு இரு மருங்கிலும் ஒடுக்கமான கிளை வீதிகள் காணப்பட்டதுடன் அவை பிரதான வீதியுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தமை.



*பெருந்தெரு (பிரதான வீதி)*



*சிறுவீதி*

- வீதிகளை அமைப்பதற்குச் சுடப்பட்ட செங்கல் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
- பிரதான வீதிக்கு இரு மருங்கிலும் வடிகால் (காண்) தொகுதி காணப்பட்டமை.
- நகரத் திட்டமிடலுக்கு மேலதிகமாக பின்வரும் நகரப் பண்புகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளமை.
- மிக வளர்ச்சியடைந்த நாகரிகப் பண்புகள் ரகிகார்ஹியில் கிடைத்துள்ளமை.





***கழிவறையும் குளியலறையும்***



***கிணறும் வடிகால் தொகுதியும்***

**வீட்டுத் தொகுதி**

- பிரதான நகரங்களில் மாடி வீடுகள் அமைக்கப்பட்டிருந்தமை
- அதிகமான வீடுகளில் நிலா முற்றம் அமைக்கப்படடிருந்தமை
- நகர வீடுகளின் யன்னல்கள் வீதிக்கு எதிராக அமைக்கப்பட்டதன் மூலம் சுத்தமான வளியோட்டத்தைப் பெறுவதில் கரிசனை காட்டியுள்ளமை
- மாடி வீடுகளுக்கு மேலதிகமாக தொழிலாளருக்குரிய வீடுகளாகக் கருதத்தக்க சிறிய வீட்டுத் தொகுதிகளும் காணப்பட்டமை

**உள்நகரம்**

- ஏனைய இரு பிரதான நகரங்களினதும் நிர்வாக மத்திய நிலையமாகத் திகழ்ந்தமை.
- 30 அடி உயரமான சுவரினால் அது பாதுகாக்கப்பட்டிருந்தமை.
- மூன்று நகரங்களிலும் மேற்குத் திசையிலே இது அமைக்கப்பட்டிருந்தமை.

**மாளிகை எனக் கருதத்தக்க கட்டடம்**

- 230 x 78 அடி அளவிலான மாளிகையொன்று எனக் கருதத்தக்க கட்டிடச் சிதைவு மொஹஞ்சதாரோ நகரில் கிடைத்தமை.
- புதிய தகவல்களின்படி பிரதான வர்த்தக மற்றும் நிர்வாகத் தலைநகரம் ரகிகார்ஹி ஆகும்.
- ரகிகார்ஹி நகரம் ஹரப்பாவைப் போன்று 2 மடங்கும் மொஹஞ்சதாரோவைப் போன்று 3 மடங்கும் விசாலமானது.
- அது 550 சதுர மைல் பரப்பளவுடையது.
- ஏனைய இரு நகரங்களையும் விட இதன் ஒவ்வொரு பகுதியும் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளமை.
- ஆட்சியாளர்கள் இங்கிருந்தே ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

**ஹரப்பாவின் தானியக் களஞ்சியம்**

- 45 x 15 மீற்றர் அளவிலான இது தானியம் களஞ்சியப்படுத்தும் பிரதான இடமாகத் திகழ்ந்தமை.
- தானியங்களைக் குற்றுவதற்கான உரல்கள் வைக்கப்பட்ட குழிகள் காணப்படுகின்றன.
- கோதுமை மற்றும் வாற்கோதுமை (பார்லி) தானியங்களின் எச்சங்கள் கிடைத்துள்ளமை.
- தானியங்களை வைப்பதற்கான உயர்ந்த மேடை காணப்படுகின்றமை.

**மொஹஞ்சதாரோவின் குளியலறை**


- குளியலறையின் பரப்பளவு 180 x 80 அடிகளாகும். தண்ணீர் தடாகம் 39 x 23 அடி பரப்பளவுடையது.
- இது நகர வாழ்க்கையின் பிரதான பண்புகளுள் ஒன்றாகும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் நீரை நிரப்புவதற்குத் தேவையான குழாயொன்று காணப்பட்டமை
- சிலரின் கருத்துப்படி இது நீரோடு தொடர்புடைய சமய வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டதென்ற கருத்தும் உள்ளது.

**வெளிச்ச வீடு (தூண்கள்)**

- இரவில் நகருக்குத் தேவையான வெளிச்சத்தை வழங்குவதற்காக அமைக்கப்பட்டமை
- இரவு, பகல் இரண்டிலும் செயற்பட்ட உறங்காத நகரமாகச் செயற்பட்டமை.

- ரகிகார்ஹி நகரில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் காணப்படாத பின்வரும் சிறு நகரங்கள் காணப்பட்டமை.

| | | |
|---|---|---|
| - லோதால் | - ரங்பூர் | - தொலவீர் |
| - ரூபார் | - குணால் | - பலாகொட் |
| - சன்ஹுதாரோ | - தெசல்பூர் | - கொட்டிஜி |
| - கலிபங்கன் | - பனாவலி | - அல்லார்தினோ |




*கழிவு நீரை அகற்றுவதற்கான வடிகால் தொகுதி*

**பொருளாதார நிலை**

- மேலான நகரப் பண்புகளுடன் இணைந்ததான வளர்ச்சியடைந்த பொருளாதாரம் நிலவியமை
- பொருளாதாரத்தின் பிரதான துறைகள் நான்காகும்.
  - விவசாயம் - விலங்கு வளர்ப்பு
  - வர்த்தகம் - கைத்தொழில்கள்
- விவசாயத்தின் வளர்ச்சி நிலை தானியக் களஞ்சியம் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றமை.
- கோதுமை, வாற்கோதுமை அதிகளவில் பயிரிடப்படடதுடன் நெல் சிறியளவில் பயிரிடப்பட்டமை
- பருத்தித் துணிக்காகப் பருத்தி பயிரிடப்பட்டமை
- பேரீச்சை பயிரிடப்பட்டமை

**வர்த்தகம்**

- பொருளாதாரத்தின் பிரதான அம்சமாக வர்த்தகம் காணப்பட்டமை
- வெளிநாட்டு வர்த்தகம் முக்கியமான பொருளாதார அலகாக விளங்கியமை
- உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் இரண்டும் வளர்ச்சி கண்டமை
- உள்நாட்டு வர்த்தகப் போக்குவரத்திற்கு வண்டிகள் பயன்படுத்தப்பட்டதுடன் வெளிநாட்டு வர்த்தகம் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் நடைபெற்றமை
- வியாபாரத்தின் போது பயன்படுத்தப்பட்ட தராசு படிகள் என்பவை கிடைத்துள்ளமை
- பிரதான நகரையும் சிறு நகரங்களையம் மையமாகக் கொண்டு வர்த்தக வலையமைப்பு ஒன்று செயற்பட்டமை
- இந்தியாவிலிருந்து பாரீக வளைகுடா மற்றும் பஹ்ரேன் தீவின் ஊடாக மெசப்பத்தேமியா வரையிலான பாதை வெளிநாட்டு வர்த்தகத்தில் பிரதான இடம் வகித்தமை.
- மெசப்பெத்தேமியா, பாரசீக வளைகுடா நாடுகள், பஹ்ரேன், ஈரான் ஊடாக வர்த்தக கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றமை.
- எழுத்தாவணங்களின்படி ஹரப்பாவில் நன்ட்மெல்லூஹ என்பது பிரபலமான வர்த்தகக் நகராகும்.
- லோத்தால் மற்றும் சுக்தஜென்தோர் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான துறைமுகங்களாகக் காணப்பட்டமை
- பிரதான வர்த்தகத் தலைநகராக ரகிகார்ஹி திகழ்ந்தமை

**விலங்கு வளர்ப்பு**

- விலங்கு வளர்ப்பும் பொருளாதாரத்தின் ஓர் அம்சமாகத் திகழ்ந்தமை
- விலங்குவளர்ப்பில் மாடு பிரதான இடம் பெற்றதுடன் பன்றி, கோழி, ஆடு முதலியனவும் இறைச்சிக்காக வளர்க்கப்பட்டுள்ளமை
- மாடு விவசாய வேலைகளுக்கும் வண்டி இழுப்பதற்கும் பாலுணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உபயோகப்படுத்தப்பட்டமை.

**பல்வேறு கைத்தொழில்கள்**

- ஹரப்பா நாகரிகத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய மற்றுமொரு அம்சமாகக் கைத்தொழில் இடம்பெற்றமை

- அதிகளவான கைத்தொழில்கள் உள்நாட்டு வர்த்தகத்திற்கான பொருட்களை உற்பத்தி செய்தமை.
  - நெசவுக் கைத்தொழில்
  - மட்பாண்டக் கைத்தொழில்
  - உலோகக் கைத்தொழில்
  - மீன்பிடிக் கைத்தொழில்
  - முத்துக்குளித்தல்
  - யானைத் தந்த கைத்தொழில்
  - கப்பல்கள், வள்ளங்கள் கட்டும் தொழில்

**சமூக ஒழுங்கமைப்பு**

- தாய்வழிச் சமூகமாகக் காணப்பட்டமை.
- பின்வரும் பகுதியினர் சமூகத்தில் அங்கம் வகித்தமை.
  - சமய குருமார் - வர்த்தகர்கள்
  - ஆட்சியாளர்கள் - பொறியியலாளர்கள்
  - தொழிலாளர்கள் - பொது மக்கள்
- தொல்பொருள் சான்றுகளின்படி பிரதான நால்வகை மனித இனத்தவர் வாழ்ந்துள்ளமை.
  - மங்கோலியர்
  - அல்பைனியர்
  - புரோட்டோ ஒஸ்ட்ரோலொயிட்
  - மத்திய தரணியர்
- அமைக்கப்பட்டிருந்த வீடுகளின் அடிப்படையில் முதலாளி, தொழிலாளி எனும் பிரதான இரு சமூக வகுப்பினர் இருந்ததாகக் குறிப்பிட முடிகின்றமை
- பொது மக்கள் ஈடுபட்ட தொழில்களின் அப்படையில் வகுப்பு வேறுபாடு நிலவியிருக்கலாம்.
- ஆண், பெண் இருபாலாரும் நகைகள் அணிந்தமை.
- ஆடைகளைப் பொறுத்தவரை ஆண்கள் இடுப்பின் கீழ்ப்பகுதியை மறைப்பதற்கு வேட்டி போன்ற துணியையும் பெண்கள் குட்டையான அல்லது நீளப் பாவாடையையும் பயன்படுத்தியுள்ளமை.
- பொழுது போக்காகக் கொம்பு முறித்தல், மல்யுத்த விளையாட்டுக்களும் நடனம், சங்கீதம் போன்றவையும் காணப்பட்டன.
- மரணச் சடங்கு முறைகளாகத் தகனஞ் செய்தல், அடக்கம் செய்தல், அஸ்திக் கலசங்களைப் புதைத்தல் முதலிய முறைகள் பின்பற்றப்பட்டமை

**சமய நம்பிக்கை**

- இந்நாகரிகத்தில் கிடைத்த தொல்பொருள் சான்றுகளுக்கு ஏற்ப பின்வரும் சமய நம்பிக்கை முறைகள் நிலவியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றமை
  - தாய்த் தெய்வ வழிபாடு
  - விருட்ச வழிபாடு
  - நீர் வழிபாடு
- தாய்த் தெய்வ வழிபாடு
  - இது எல்லா வீடுகளிலும் மேற்கொள்ளப்பட்டது. 2000 இற்கும் மேற்பட்ட சுடுமண் சிலைகள் கிடைக்கப் பெற்றுள்ளமை.

- செழிப்பு, சௌபாக்கியம் என்பவற்றுக்காக வணங்கப்பட்டமை.
- பிரபஞ்சத்தினதும் பூமியினதும் தேவதையாகக் கருதித் தாய்த்தெய்வம் வணங்கப் பட்டமை.
- பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்திய பெண் உருவச் சிலைகள் தாய்த் தெய்வமாகக் கருதி வணங்கப்பட்டமை.
- சில பெண்கள் ஆட்சியாளர்களாகவும் இருந்துள்ளமை.

- விருட்ச வழிபாடு
  - விருட்சமாக வளரும் மரங்களுக்கு அதிபதியான தெய்வங்கள் இருப்பதாகக் கருதி அவற்றை வணங்கியமை.
  - ஆலமரம், புளிய மரம், அரச மரம் முதலிய விருட்சங்கள் வணங்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமை.
- நீர் வழிபாடு
  - நாகரிகவாசிகள் அனைவரும் தண்ணீரை மதித்தமை
  - மொஹஞ்சதாரோவின் குளியலறை நீர்வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமை.

**கலையாற்றல்**

- நாகரிகவாசிகள் உயர் கலையாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்தமை.
- கலை நிர்மாணங்களுக்காக உலோகம், களி, கருங்கல் முதலிய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
- மொஹஞ்சதாரோவில் கிடைத்த 19 செ.மீற்றர் உயரமான இடுப்புக்கு மேற்பட்ட ஆண் உருவச் சிலை கலைப் பண்புமிக்கதாகும்.
- மொஹஞ்சதாரோவில் கிடைத்த 4 அங்குலம் உயரமான வெண்கலத்தில் செய்த நடனமாதுவின் உருவம் செதுக்கல் கலைச் சிறப்பை வெளிப்படுத்துகின்றமை.
- ஹரப்பாவில் கிடைத்த செம்மணற் கல்லில் செதுக்கப்பட்ட தலையற்ற ஆண் உருவச் சிலை உயிரோட்டமான தன்மையுடையதாகவும் காணப்படுகின்றமை.
- விளையாட்டு உபகரணங்கள், அலங்காரப் பொருட்கள் என்று தயாரிக்கப்பட்டுள்ள பல்வேறு மிருக உருவங்கள் கலைப்பெறுமதி வாய்ந்ததாகக் காணப்படுகின்றமை
- ஹரப்பாவில் கிடைத்த விசித்திரமான முறையில் ஓவியந் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் கண்கவரும் கலைப்படைப்புகளாகத் திகழ்கின்றமை.

**நாகரிகத்தின் வீழ்ச்சியும் அறிஞர்களின் கருத்தும்**

- கி.மு. 3500 அளவில் ஆரம்பமான ஹரப்பா நாகரிகம் கி.மு. 1650 அளவில் வீழ்ச்சியடைய ஆரம்பித்து கி.மு. 1500 அளவில் முற்றாக இல்லாமலானது.
- வீழ்ச்சிக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.
  - ஆரிய ஆக்கிரமிப்பு
  - காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தம்
  - வெள்ளப்பெருக்கு
  - தொற்று நோய்கள் பரவியமை
  - தீ விபத்து
  - இந்து நதியோட்டத்தில் ஏற்பட்ட மாற்றம்

- கி.மு. 1500 இல் மேற்கொள்ளப்பட்ட ஆரிய படையெடுப்பே ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்குக் காரணம் என்பது முற்றுமுழுதும் பொய்யானது.
- புதிய விஞ்ஞான ஆய்வுகளின்படி நாகரிகவாசிகளின் எலும்புக்கூடுகளை ஆய்வு செய்தபோது அவர்கள் சிறிது சிறிதாக மூச்சுத் தினறி இறந்து போயுள்ளதாக அறிய முடிகின்றமை.
- நீரில் மூழ்கி இறந்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளமை
- ஆரம்பத்தில் ஆங்காங்கே ஒழுங்கின்றி எழும்புக்கூடுகள் காணப்பட்டமையால் அது ஆக்கிரமிப்பின் விளைவாகக் கருதப்பட்டாலும் அது ஆக்கிரமிப்பினால் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை
- காலநிலைச் சீரழிவு எனும் போது நீரியல் வட்டம் முறையற்றுச் செயற்பட்டமையும் பாலைவனக் காலநிலை தோற்றம் பெற்றமையும் மக்கள் வாழ்க்கை முடிவடையக் காரணங்களாக இருந்திருக்கலாம்.
- சில பகுதிகளில் நீர் மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம், வெள்ளப்பெருக்கு என்பவற்றால் மக்கள் வாழ்க்கை முடிவடைந்தமை
- அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமையால் மலேரியா, வாந்திபேதி முதலிய தொற்று நோய்களாலும் மக்கள் வாழ்க்கையை முடிவடையச் செய்துள்ளமை
- எனவே சில பிரதேசங்கள் மக்கள் வாழாத சூனிய நிலையடைந்ததமை
- இந்து நதியின் நீரோட்டப் பாதையில் மாற்றம் ஏற்பட்டமையால் வேறு சில பிரதேசங்கள் மக்கள் வாழ்க்கைக்கு உகந்ததாக மாறியமை
- நாகரிகத்திற்குரிய பிரதான நகரங்கள் இறுதிக் காலப்பகுதியில் திடீர் தீவிபத்துக்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமையால் ஆட்சி முடக்கமடைந்தமை வீழ்ச்சியை வேகப்படுத்தியமை
- சாஹி - தும்ப் அகழ்வில் ஆரியர் எனக் கருதப்பட்டவர்களுக்கும் ஹரப்பா மக்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என அறியப்பட்டமை
- வெளிநாட்டு வர்த்தகமே பொருளாதாரத்தில் வருமானமீட்டும் மார்க்கமாகத் திகழ்ந்தது. அது வீழ்ச்சி கண்ட காரணத்தால் வெள்ளப்பெருக்கின் பின்னர் நாகரிகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதியற்ற நிலை ஏற்பட்டமை
- ஆரம்பத்தில் ஹரப்பா நகரம் வீழ்ச்சி கண்டுள்ளதுடன் கி.மு. 1750 மொஹஞ்சதாரோ, லோத்தால் என்பனவும் கி.மு. 1650 இல் ரகிகார்ஹி வீழ்ச்சியடைந்தமையும்.



***மொஹெஞ்சதாரோவின் எலும்புக்கூடுகள்***

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்து மாணவர்களை மதிப்பீடு செய்க.

பின்வரும் வினாக்களுள் ஒவ்வொரு வினாவிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சொல் ஏனைய சொற்களுடன் ஏதோவொரு வகையில் பொருந்தாது அச்சொல்லைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) 1. சங்குதாரோ 2. மொஹஞ்சதாரோ 3. ஹரப்பா
 4. கொட்டிஜி 5. சுப்பாரகம் ( )

2) 1. ஆர்.டீ. பானர்ஜி 2. மோதிமர் வீலர் 3. ஸ்டுவட்பிகொட்
 4. ஜோன்மார்ஷல் 5. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி ( )

3) 1. ரூபார் 2. ஹரப்பா 3. இந்திரப்பிரஸ்தம்
 4. சங்குதாரோ 5. லோத்தால் ( )

பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.

4) ஹரப்பா நாகரிகத்திற்குரிய சிறு நகரொன்று
 1. தொலவீர் 2. ரகிகார்ஹி 3. ஹரப்பா
 4. மொஹஞ்சதாரோ 5. லோத்தால் ( )

5) ஹரப்பா நாகரிகத்தின் பிரதான வர்த்தக நகராகத் திகழ்ந்தது.
 1. லோத்தால் 2. ரகிகார்ஹி 3. சங்குதாரோ
 4. ரூபார் 5. ஹரப்பா ( )

பின்வரும் வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் 5 கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஒரு கூற்று தலைப்புக்குப் பொருத்தமற்றது. அவ்விலக்கத்தை தெரிந்து அதனை அடைப்பினுள் எழுதுக.

6) ரகிகார்ஹி
 1. ஹரப்பா நாகரிகத்தின் மிகப் பெரிய நகரம்
 2. ஹரப்பாவின் பிரதான வர்த்தக நகரம்
 3. எஸ்.ஆர். ராவோ அவர்களின் அகழ்வுப் பணியில் அறியப்பட்டது.
 4. கி.மு. 1650 இல் வீழ்ச்சியடைந்தது
 5. ஆட்சியாளர்கள் இங்கிருந்தே நிர்வாகம் செய்திருக்கலாம் என்று கருதப்பட்டமை ( )

7) ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான அடிப்படை
 1. இராவி நதியோட்டத்தின் போக்கு மாறியமை
 2. அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமை
 3. தார்ப் பாலைவனத்திலிருந்து வீசிய சூறாவளி
 4. ஆரிய ஆக்கிரமிப்புக்கள்
 5. சனத்தொகை அதிகரிப்பு ( )

8) ஹரப்பா நகரவாசிகளின் சமூக வாழ்க்கை
   1. மொஹஞ்சதாரோவில் கிடைத்த எலும்புக்கூடுகள் கல்கொலோதிக யுகத்துக்குரியதாக கருதப்பட்டமை
   2. மக்கள் வாற்கோதுமை, நெல், கோதுமை முதலியவற்றைப் பயிரிட்டனர்.
   3. பெண்கள் மாலை, வளையல், மோதிரம் முதலிய ஆபரணங்களை அணிந்தனர்.
   4. மக்கள் தாய் தேவதையை வழிபட்டனர்.
   5. இந்து நதி நாகரிக வாசிகள் மொசபத்தேமியாவிலிருந்து பருத்தி இறக்குமதி செய்தமை ( )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் 5 சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி பொருந்தாது, அதனைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

9) 1. ரூபார் - சத்லெஜ் 2. ஹரப்பா - இராவீ
   3. மொஹஞ்சதாரோ - சிந்து 4. கலிபங்கன் - கஸ்ஸ
   5. லோத்தால் - சுவாஸ்து ( )

10) 1. புரம் - இந்து நதிப் பள்ளதாக்கின் கோட்டை
   2. விஷ்பதி - மாடுகளின் பாதுகாவலன்
   3. யஞ்சய - பூஜை அல்லது யாகம் 4. ஜன - ராஜன்
   5. முக்தா - கிராமத்தலைவன் ( )

பின்வரும் வினாக்களுக்கு இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான விடையாக அமையத்தக்க கூற்றைத் தெரிந்து அட்டவணையில் தரப்பட்ட இலக்கங்களை உரிய முறையில் அடைப்பினுள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1 | சரி | சரி |
| 2 | சரி | பிழை |
| 3 | பிழை | பிழை |
| 4 | பிழை | சரி |
| 5 | சரி | சரி முதலாம் கூற்றை மேலும் தெளிவுபடுத்துகிறது. |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 1. ஹரப்பா நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற இலட்சனைகளின் மூலம் அம்மக்களின் சமய நம்பிக்கை வெளிப்படுகின்றது. | ஹரப்பா நாகரிகம் உலகின் மிகப் புராதன நாகரிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ( ) |
| 2. மொஹஞ்சதாரோவின் இறுதிக் காலப்பகுதியில் ஆண்களும் பெண் களும் குழந்தைகளும் வீடுகளிலும் வீதிகளிலும் கொலை செய்யப்பட்டிருந் ததாகக் கருதப்படுகிறது. | மோதிமர் வீலர் அவர்களின் கருத்துப்படி இதன் மூலம் ஹரப்பா நாகரிகத்தை அழிவுக்குட்படுத்திய ஆரியரின் ஆக்கிரமிப்பை அறியக் கூடியதாக உள்ளது. ( ) |

**கணிப்பீடும் மதிப்பீடும் - 02**

1) ஹரப்பா நாகரிகத்தின் பொருளாதார, சமூக நிலைமையைச் சுருக்கமாக விளக்குக. (14 புள்ளிகள்)

2) ஹரப்பா நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் பற்றி நிலவுகின்ற கருத்து வேறுபாடுகள் தொடர்பாக விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக. (14 புள்ளிகள்)

3) "ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகமாகும்".
   i. ஹரப்பா நாகரிகத்திற்குரிய புதிதாகக் கண்டறியப்பட்ட நகரின் பெயர் என்ன? (02 புள்ளி)
   ii. ஹரப்பா நாகரிகத்திற்குரிய தொல்பொருட்கள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளி)
   iii. ஹரப்பா நாகரிகவாசிகளின் சமய நம்பிக்கை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளி)
   iv. மேற்படி கூற்றுடன் நீர் உடன்படுவீரா? காரணங்காட்டி விளக்குக. (07 புள்ளி)

4) "ஹரப்பா நாகரிகம் உலகின் புராதன நகர நாகரிகங்களுள் ஒன்றாகும்".
   i. ஹரப்பா நாகரிகம் நிலவிய பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சி செய்த இருவரைப் பெயரிடுக. (02 புள்ளி)
   ii. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களுக்கு அண்மையில் பாய்ந்தோடும் நதிகள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளி)
   iii. ஹரப்பா நாகரிகவாசிகளின் கலைப் படைப்புக்களை மதிப்பிடுக. (03 புள்ளி)
   iv. ஹரப்பா நகரின் திட்டமிடல் பற்றி விஷேட கவனம் செலுத்தி விளக்குக. (08 புள்ளி)

**கணிப்பீடும் மதிப்பீடும் - 03**

- பின்வரும் இடங்களை இந்தியப் புறவுருவப் படத்தில் குறித்து அவற்றுள் 2 பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
  மொஹஞ்சதாரோ, ஹரப்பா, லோத்தால், சிந்துநதி, ராவீ நதி, ரகிகார்ஹி, தொலவீர், ரூபார்.

## 4. நதிப்பள்ளத்தாக்குகள் ஊடாகப் பரம்பலடைந்த குடியேற்றங்கள்

இந்தியாவில் ஹரப்பா நாகரிகத்திற்குப் பின்னர் உருவான காலப்பகுதி வைதீக யுகம் எனப்படும். மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு விளக்கமளித்த ஆரம்பகால அறிஞர்கள் ஹரப்பாவை ஆக்கிரமித்தது வைதீக ஆரியர்கள் எனச் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறு சுதேச நாகரிகத்தை அடிபணியச் செய்து தமது பலத்தை உறுதிப்படுத்திக் கொண்ட முதலாவது புலம் பெயர்வாளர்களான தாம் செஸ்னியர்களை விட உயர்வானவர்கள் என்று கூறினர். அதன்படி உத்தமர் எனும் பொருள்தரும் ஆரியர் எனும் பெயரால் தமது இனத்தவரை அறிமுகப்படுத்தினர். ஆயினும் ஆரியர் எனப்படுவது ஓர் இனம் என்று உணர்த்தப்படவில்லை என நிகழ்கால ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

வைதீக இலக்கியங்களின்படி வேதத்தைப் புனிதமான நூலாக ஏற்றுக் கொண்ட இந்து முழுமுதற் கடவுளரை வணங்கியவர்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தோர் என அறிமுகப்படுத்துகின்றனர். எது எவ்வாறாயினும் மக்ஸ் மூலர் எனும் அறிஞரின் கருத்துப்படி ஆரியர் எனும் சொல் ஒரு இனத்தை மாத்திரம் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லல்ல. ஆரியர், அயிரியர் என்பது ஈரானியரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் படுவதாகும். அவர்கள் நன்கு வளர்ச்சியடைந்த தேகமும் நீளமான நாசியும், தெளிவான நிறமும் கொண்ட மனிதக் குழுவினராவர். இவ்வாறு வந்த இவ்வினக் குழுவினர் தமது பூர்வீக பூமியிலிருந்து புறப்படும்போது இடையர் யுகம் முடிவடைந்து மனிதன் விவசாய வாழ்க்கைக்குள் பிரவேசித்திருந்தமை தெரியவருகிறது. கிராமங்களில் பெரிய குடும்பமொன்றாகவோ கோத்திரமொன்றாகவோ வாழ்ந்தமைக்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான பின்னணியில் உருவான ஆரியக் குடியேற்றங்கள் அவற்றின் பரம்பலோடு சுதேச கலாசாரத்தோடு ஒன்றிணைந்தன. அதேபோன்று புவியியல் சூழலும் அவர்களது குடியிருப்பின் தன்மையைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

**தேர்ச்சி 4.0** : இந்திய வரலாற்று விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : வேத காலம் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :

- வேத காலம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- வேத காலமே இந்திய நாகரிகத்தின் அடிப்படை என்பதற்கான தகவல்களை முன்வைப்பார்.
- இருக்கு வேத காலம், பிந்திய வேத காலம் ஆகியவற்றில் குடியிருப்புக்களின் விரிவாக்கத்தைத் தேசப்படத்தில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**வைதிக காலத்தில் மானுட குடியேற்றங்களின் ஆரம்பமும் பரம்பலும்**

- ஆரியரின் பூர்வீகம்
  - ஆரியரின் பூர்வீகம் பற்றி நிலையானதொரு கருத்து இல்லாமை
  - ஆயினும் தொல்பொருள் ஆய்வாளர்களும் வரலாற்றியலாளர்களும் ஒன்றிணைந்து பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளமை
    - தென் ரஷ்யாவின் ஸ்டெப்ஸ் புல்வெளியிலிருந்து புலம்பெயர்ந்தமை
    - பொஹமியாவின் ஹங்கேரியன் சமவெளி பூர்வீகம் என்ற கருத்து
    - ஆரியர் இந்தியர்கள் எனும் கருத்து
    - காஷ்மீரும் இமாலயமும் ஆரியரின் முதல் பூமி எனும் கருத்து
    - இருக்கு வேதம் மற்றும் ஈரானின் பரம்பரைக் கதைகளின்படி ஆரியர் இந்தியாவுக்கு வருகை தர முன்னர் இந்திய ஈரானிய மக்களுடன் ஈரானின் அயல் பிரதேசங்களில் தங்கியிருந்தமை
    - சின்னாசியாவின் கப்படோசி பிரசேத்தின் பொசஸ்-கோய் கல்வெட்டின்படி ஆரியர் கி.மு. 15 ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை தந்தமை

- குடியேற்றங்களை அமைத்தலும் அதன் பரம்பலும்
  - இருக்கு வேதத்தின் நதிஸ்மிருதி காண்டத்தில் குறிப்பிடுவதன்படி ஆரியர்கள் முதலில் சப்த சிந்து பிரதேசத்தில் குடியேறியமை
  - சப்த சிந்து என்பது ஜேலட் (விதஸ்தா), சேனாப், ராவி (பருஸ்னி), பியஸ் (விபாஸ்), சட்லேஸ் (சுதுர்தி), சரஸ்வதி, துருஸ்வதி எனும் எழு நதிகள் பாயும் பிரதேசமாக அமைந்தமை
  - அவற்றுள் சரஸ்வதி, துருஸ்வதி எனுமிரு நதிகளும் முற்றாக இல்லாதொழிந்த பின்னர் அப்பிரதேசம் ஐந்து நதிகளின் நாடு எனும் அர்த்தத்தில் பஞ்சாப் என்றழைக்கப்பட்டமை
  - இருக்கு வேதத்தின்படி அவர்கள் பஞ்சாப்பில் வாழ்ந்தமை

- அனு, புரு, யது, துர்வம்சம், ரிடி முதலிய கோத்திரத்தினர் பருஸ்னி (ராவி), சுதுர்தி (சட்டேஸ்) எனும் இரு நதிகளுக்கிடையில் குடியேற்றங்களை அமைத்தமை
- பாரத கோத்திரத்தைச் சேர்ந்த சுதாஸ் மன்னன் பருஸ்னி மற்றும் சுதுர்தி நதிகளுக்கிடையில் வாழ்ந்த 10 கோத்திரத்தினருடனான போர் முன்னணியுடன் தசராஞ்சம் எனும் போரில் ஈடுபட்டமை
- இவ்வாறு இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படும் தரவுகளின்படி வைதிக ஆரியர் ஆப்கானிஸ்தான், பஞ்சாப், சிந்து பிரதேசத்தின் ஒரு பகுதி ராஜ்புத்தான், இந்தியாவின் வடமேற்கெல்லை, காஸ்மீர், சரசு நதியின் கிழக்குப் பிரதேசம் முதலியவற்றில் பரவிக் காணப்பட்டமை.
- மூலாதாரங்களின்படி குடியேற்றங்களின் அடிப்படைப் பண்புகளைக் கருத்திற் கொண்டு வைதீக யுகம் இரண்டாக வகுக்கப்பட்டுள்ளமை.
  - இருக்கு வேத காலம் - இருக்கு வேதத்தின் தகவல் கிடைத்த காலப்பகுதி
  - பிந்திய வேத காலம் - யசுர், சாமம், அதர்வணம், பிராமணீயங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், புராணங்கள், வேதாங்கங்கள், உபவேதாங்கங்கள், சூத்திரங்கள் என்பவற்றின் மூலம் தகவல் அறியப்பட்ட காலப்பகுதி.

- **இருக்கு வேத காலம்**
  - இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 பாடல்களையும் கொண்டமைந்தமை
  - பிராமணர்களால் எழுதப்பட்ட இது வேதநூல் என்பதனால் வரலாற்றை அறிவதற்கான மூலாதாரமாகப் பயன்படுத்துவதில் பிரச்சினை உள்ளது.
  - வேதகாலம் பற்றி அறிவதற்குள்ள ஒரே மூலாதாரம் இது என்பதால் அதில் தங்கியிருக்க வேண்டிய நிலை.
  - ஆரியர் இந்தியாவுக்கு வருகை தந்த ஆரம்பகாலப்பகுதி இருக்கு வேத காலம் எனப்படுகிறது. இருக்கு வேதம் இவ்வாரம்ப காலம் பற்றி அறிவதற்கு உதவியாக அமைகிறது. அதே போன்று வேத காலத்தின் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் தெளிவாகத் தெரியும் வேறுபாடுகளையும் கருத்திற் கொண்டுள்ளது. அதனைப் பின்வரும் வகையில் வெவ்வேறாக விளக்க முடியும்.

- இருக்கு வேத கால அரசியல் நிலை:
  - கோத்திரங்களாகக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டமை
  - கோத்திரத் தலைவன் ராஜன் எனப்பட்டமை
  - பலம் வாய்ந்த கோத்திரங்கள், சிறு கோத்திரங்கள் பலவற்றினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை
    - பலம் வாய்ந்த கோத்திரங்கள்: பரத, புரு, யது, துர்வாஸ, அநு, துருகசு
    - சிறு கோத்திரங்கள் :- அலீன, பக்ஷ, பகலானஸ், சிவ, விஷாணி
  - ஒவ்வொரு கோத்திரங்களிடையிலும் அதிகாரம் தொடர்பான மோதல்கள் ஏற்பட்டு வெற்றியடைந்த குழு அதிகாரத்தை நிலைநாட்டியமை
  - இவ்வாறு பிரபலமான மோதலாக அமைந்தது பரத கோத்திரத்தின் ராஜனான சுதாஸ் என்பவனுக்கெதிராக வேறு 10 கோத்திரங்கள் போரிட்டமை
  - இது வேத பாடல்களில் தசராஞ்ச யுத்தம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - இப்போரில் வெற்றிகொண்ட சுதாஸ் பின்னர் அஜ, சிஸ்ரு, யக்ஷ எனும் ஆரியரல்லாத கோத்திரங்கள் மூன்றை வெற்றி கொண்டமை.

- இவ்வாறு இந்தியா, பாரத தேசம் என்றறியப்படுவதில் இப்பலம் வாய்ந்த கோத்திரத்தின் புகழ் காரணமாயமைந்தது என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளமை
- வேதகால நிர்வாகப் பிரிவுகள் பின்வரும் வகையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
    - கிராமம் - சிறு அலகு, பல குடும்பங்களைக் கொண்டது. கிராமனி அதன் தலைவன்
    - விஷ் - சில கிராமங்கள் ஒன்றிணைந்த அலகு. விஷ்பதி இதன் தலைவன்.
    - ஜன - விஷ் எனும் சில நிர்வாக அலகுகள் ஒன்றிணைந்தது. ராஜன் அதன் தலைவனாதல்.
- அதே போன்று சபை, சங்கம் எனும் மண்டலங்களிரண்டும் ஆட்சியில் முக்கியத்துவம் பெற்றமை.
    - சபை - கோத்திரத்தின் மூத்தவர்களைக் கொண்டமைந்த மண்டலம்
    - சங்கம் - கோத்திரத்தின் சகலரையும் பிரதிநிதித்துவப்படுத்திய மண்டலம்

- அரச நிர்வாகத்திற்குதவிய அதிகாரிகள் மற்றும் அவர்களுக்குரிய கடமைகள் பலவும் குறிப்பிடப்பட்டுள்ளமை
- புரோகிதர், சேனாதிபதி, விஷ்பதி, கிராமணீ முதலியன அவ்வாறான பதவிகளாகும்.
- அரசன் அரச சொத்துக்களின் அதிபதியல்லவென்றும் போரின் அதிபதி என்றும் வேத பாடல்களில் கூறப்பட்டுள்ளமை.
- அரச பாதுகாப்பிற்காக முறையான பாதுகாப்பு ஒழுங்கமைப்புக் கட்டியெழுப்பப் பட்டுள்ளமை.
    - போரில் ஈடுபடும் படைப்பிரிவுகள் சிரத்தா, வூர்தா, கண என்றிருந்தமை
    - பிரதான போராயுதமாக வில்லும் அம்பும் விளங்கியதுடன் ஏனைய கருவிகளாக வாள், கேடயம். கவன், ஈட்டி முதலியவை காணப்பட்டமை
    - ஏனைய பாதுகாப்பு ஏற்பாடுகளான போர்க்கவசம், கோட்டைகள் முதலியவை பற்றியும் தகவல்கள் அடங்கியுள்ளமை.
- அரச நிர்வாகத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக ‘சாரர்’ எனும் பெயரில் பாதுகாப்பு வீரர்கள் செயற்பட்டமை.
- நாட்டின் சட்டங்களும் சம்பிரதாயங்களும் ‘தர்மம்’ என்றும் தண்டனைகள் ‘தண்டம்’ என்றும் அறிமுகப்படுத்தப்பட்டமை.

- இருக்கு வேத கால சமூக நிலை:
    - கோத்திர ரீதியான, கிராமியப் பண்பு கொண்ட சமூகம் காணப்பட்டமை (தற்போது கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகளின்படி அடிமட்ட நிலையிலான சமூகமல்ல என்றறியப்பட்டுள்ளது.)
    - தந்தைவழிச் சமூகமாகக் காணப்பட்டமை
    - இருக்கு வேதப்படி ஆண் குழந்தை கிடைப்பதைப் பெருமையாகக் கருதுதல்
    - ஆண் ஒருவன் பல பெண்களை வைத்திருந்ததாக இருக்கு வேதத்தில் காணப்படுகின்றமை.
    - ஆயினும் பால்ய வயது (திருமணம்) இடம்பெற்றமை
    - விதவைகளின் மறுமணம் செய்வதற்கு உரிமை காணப்பட்டமை
    - திருமண பந்தத்தில் இணையும்போது துணைவனை அல்லது துணைவியைத் தெரிவு செய்யும் உரிமை காணப்பட்டமை

- சமய சடங்குகளின்போது கணவனுக்கு சமமாக மனைவியும் பங்கு கொள்ளும் உரிமை காணப்பட்டமை
- விஸ்வாச்சாரா, அபாலா, கோசா முதலிய கோத்திர நூல்களில் தேர்ச்சி பெற்ற கல்வியறிவு மிக்க பெண்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை
- பட்டத்து இராணியும் அவரது மகளும் அரசவையில் இருக்க வேண்டியிருந்தமை
- தெளிவான சாதி வேறுபாடு காணப்படாவிடினும் ஆரியர், ஆரியரல்லாதோர் எனும் பேதமிருந்தமை
- பால், நெய், பழங்கள், கோதுமை, வாற்கோதுமை மற்றும் தானியங்கள் உணவில் பிரதான இடம்பெற்றதுடன் விஷேட உற்சவங்களின் போது மாமிசமும் புசிக்கப்பட்டமை.
- மதுபான பாவனை காணப்பட்டதுடன் விழாக்களின்போது சோம பானம் அருந்தப்பட்டமை
- நான்கு பகுதிகளைக் கொண்ட எளிமையான ஆடை வகையொன்று காணப்பட்டமை
    - நிவி - இடுப்பின் கீழ் பகுதி ஆடை
    - பரிதோனம் - இடுப்பின் மேல் பகுதி ஆடை
    - அதிவாசம் - தோளிலிடும் சால்வை (அங்கவஸ்திரம்)
    - தலைப்பாகை
- கம்பளி, பருத்தி, மான் தோல் முதலியவற்றில் ஆடைகள் தயாரிக்கப்பட்டமை
- ஆண்கள் தலையை மறைக்கும் ஆடையணிந்தமை
- ஆண், பெண் இருபாலாரும் நகைகள் அணிந்தமை
    - கர்ணசோபன - காதணி
    - குரீர - பெண்கள் தலைக்கணிந்த நகை
    - நையாச்சாணி - மணமகள் அணியும் ஆபரணம்
    - நிக்ஸ - கழுத்தில் அணியும் மாலை

- இருக்கு வேத கால பொருளாதார நிலை:-
    - விவசாயத்தை அடிப்படையாகக் கெண்ட கிராமிய விவசாயப் பொருளாதாரம் நிலவியமை
    - விவசாய நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனம் பயன்படுத்தப்பட்டமை அறியப்பட்டுள்ளது.
    - விலங்கு வளர்ப்பும் பிரதான இடம்பெற்றமை
        - பயிரிடப்பட்ட பயிர்கள்:- நெல், கோதுமை, பருத்தி, வாற்கோதுமை, எண்ணெய் பெற்றுக்கொள்வதற்கான தானியங்கள்
        - தொழில்கள்:- வைத்தியர், கொல்லர், பொற்கொல்லர்
    - பண்டமாற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டமை
    - நதிக் கரையோரமான தரைமார்க்கமாகவும், நதிகளின் நீர் மார்க்கமாகவும் பொருட் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டமை
    - இருக்கு வேதத்தில் நிஸ்க எனும் பெயரில் பண அலகு ஒன்று பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை
    - அதேபோன்று பரிசுகள் வழங்கப்பட்ட போது 100 நிஸ்க அல்லது 100 குதிரைகள் வழங்கப்பட்டதாக இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ளமை.

- இருக்கு வேதத்தில் சமுத்திரம் எனும் சொல் இடம்பெற்றுள்ளமையும் புஜ்ஜு என்பவரின் 100 துடுப்புகளுடனான வள்ளமொன்று கடலில் விபத்துக்குள்ளான போது அஸ்வின் தேவதை காப்பாற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து வெளிநாட்டு வர்த்தகம் நிலவியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றமை.
- கி.மு. 1500 இற்குரிய போகஸ்கோஸ் எனும் எழுத்தாவணத்திற்கமைய அவர்கள் வேதகாலத்தில் பீனீசியர்களுடன் வர்த்தகம் செய்துள்ளமை

- இருக்கு வேத கால சமய நிலை:-
  - இயற்கைப் பொருட்களுக்கும் இயற்கைச் சக்திகளுக்கும் தெய்வீக அந்தஸ்து வழங்கி வணங்கி வழிபட்டமை
  - இவ்வாறு தேவர் சபை ஒன்று பற்றிக் குறிப்பிடப்படுவதன் மூலம் தெய்வீக வாத சமயநிலை வெளிப்படுத்தப்படுகின்றமை
  - இந்த தெய்வங்கள் 3 பிரதான பகுதிகளாக விளங்கியமை
    - ஆகாயத்தில்:- வருணன், சித்திரா, சாவித்திரி, சுசான், சூரியன், விஷ்ணு, உஷா
    - இடையில் :- இந்து, உருத்திரன், வாயு, பர்ஜன்
    - பூமியில்:- புவி, அக்கினி, சோமன், வியாழன், கங்கை
  - ஒவ்வொரு தெய்வங்களும் இயற்கையின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தியமை
    - இந்து:- சக்தி, மழை, மேகம் என்பவற்றுக்கு அதிபதி
    - வருணன்:- நீருக்கு அதிபதி, தாவரம் மற்றும் விலங்கு வாழ்க்கை
    - அக்கினி:- நெருப்புக்கு அதிபதி வீடுகளின் பாதுகாப்பு கடவுள்
    - இயமன்:- மரணத்துக்குப் பொறுப்பானவர்
    - சூரியன்:- நாளுக்கு அதிபதி
    - புவி:- பூமிக்கு அதிபதி
    - உஷா: காலைப் பொழுதுக்கு அதிபதி
    - சோமன்:- சந்திரக் கடவுள்
  - அதிகமான கடவுளருக்கான பூஜைப் பொருள்களுள் ஒன்றான சோம பானம் சோமன் எனும் கடவுளாகவும் வழிபடப்பட்டமை
  - தெய்வங்களுள் பெரும்பாலானோர் நற்கருமங்களுக்கென உருப்படுத்தப்பட்டிருந்த போதிலும் உருத்திரன் மட்டும் தீயகருமங்களுக்கென உருக்கொடுக்கப்பட்டமை
  - வைதீக தெய்வ வழிபாட்டிற்காக இருக்கு வேதத்தில் பல்வேறு கோத்திரங்களுக்கு முரிய 1028 இற்கும் மேற்பட்ட பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை
  - யாகம் வளர்த்தல் எனும் சமயக் கடமையின் ஆரம்பமாக சிறியளவில் ‘மனை யாகம்’ தொடங்கப்பட்டமை
  - குடும்ப உறுப்பினர் அனைவரும் இணைந்து குடும்பத் தலைவன் மேற்கொள்ளும் இந்த யாகத்தின்போது வேத கீதங்கள் பாடப்பட்டதுடன் பால் மற்றும் சோமபானம் பூஜைக்கு வைக்கப்பட்டமை
  - தெய்வத்துக்கும் மனிதனுக்கும் இடைத்தொடர்பை ஏற்படுத்தும் தெய்வமாக அக்கினி முக்கியத்துவமடைந்தமை
  - இந்த சமயக் கொள்கை மேலும் பரவலடைந்தமையானது பிந்திய வேத கால சமய நிலையின் ஆரம்பமாக அமைந்தமை

- **பிந்திய வேத காலம்**

இருக்கு வேத கால ஆரியர் படிப்படியாக தமது நிர்வாக ஒழுங்கைப் பலப்படுத்திக் கொண்டு உறுதியடைந்ததுடன் பிந்திய வேத காலம் ஆரம்பமானது. சப்த சிந்து பிரதேசத்தில் குடியேறியோர் கிழக்குத் திசையின் கங்கை நதிப் பள்ளத்தாக்கு நோக்கி புலம்பெயர ஆரம்பித்ததுடன் பிந்திய வேத காலம் உருவானமை பிரதான வேறுபாடாகும். அதே போன்று இராச்சியத்துக்குத் தேவையான புவியியல் எல்லை வகுக்கப்பட்டமையானது மற்றுமொரு பிரதான அம்சமாகும். அரசனை மையமாகக் கொண்ட ஆட்சி முறை கட்டியெழுப்பப்பட்டதுடன் இக்கால சமூகத்தில் நிலையான நான்கு சாதிப் பிரிவுகளும் வகுக்கப்பட்டன. கி.மு. 900 இற்கும் கி.மு. 600 இற்கும் அண்மிய காலமே இக்காலப் பகுதியாகும். யசுர், சாமம், அதர்வணம் எனும் வேத கிரந்தங்கள், பிராமணீயங்கள், ஆரணியங்கள் போன்று உபநிடதங்கள் முதலிய நூல்களும் இக்காலம் பற்றிய தகவல்களைத் தருகின்றன. அவற்றைப் பின்வரும் வகையில் வெவ்வேறாக இனங்காட்ட முடியும்.

- பிந்திய வேத கால அரசியல் நிலை:
  - இருக்கு வேத கால எளிமையான ஆட்சிமுறை சிக்கலார்ந்ததாக மாறியமை
  - அரசர்களின் பலமும் பராக்கிரமும் வளர்ச்சியடைந்ததுடன் அவர்கள் விசேட வகுப்பினராக அடையாளப்படுத்தப்பட்டமை
  - ஐதீக பிரமாணத்தில் பின்வரும் வகையில் அரசர்கள் இனங்காட்டப்பட்டுள்ளனர்.
    - சாம்ராட் (பேரரசன் - மேற்கின் அரசன்)
    - போஜன் - தெற்கின் அரசன்
    - வீராட் - வடக்கின் அரசன்
    - ராஜன் - மத்திய பிரதேச அரசன்
  - ஆட்சியாளர்களுக்குத் தெய்வீக அந்தஸ்தை வழங்கல் (அரசன் பூமியின் கடவுளாக மனுஸ்மிருதி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.)
  - அரசுரிமை பரம்பரை உரிமை எனும் மரபு உருவானமை.
  - அஸ்வமேதயாகம், ராஜசூய யாகம் முதலிய வேள்விகள் செய்யப்பட்டு அரசனின் பலம் எடுத்துக்காட்டப்பட்டது.
  - கிராமம், விஷ், ஜன முதலிய நிர்வாக அலகுப் பிரிவுகள் மேலும் வளர்ச்சி கண்டமை
  - சபை, சங்கம் முதலிய நிர்வாக ஒழுங்கமைப்பு தொடர்ந்த போதிலும் அவை அரசனுக்கு அடிபணிந்திருந்தமை
  - அரசனின் ஆட்சிக்கு உதவிய ராஜ கர்ண எனப்பட்ட அதிகாரிகள் இருந்ததாக சதபத பிராமணியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
    - புரோகிதர் - அரசனின் ஆலோசகர்
    - சேனானி - சேனாதிபதி
    - கிராமனி - அரச அதிகாரத்தைக் கிராமத்தில் நிலைநாட்டல்
    - சங்ரஹித்திரி - பொருளாளர்
    - பாகதுகர் - வருமான அதிகாரி
    - அக்ஷாவாசகர் - சூதாட்ட நிர்வாகி
    - உக்கிரர் - பாதுகாப்பு அதிகாரி
    - கொவிகர்த்தன - அரசனுக்கு வேட்டையின்போது உதவுபவர்.
    - சாரர் - பாதுகாப்புப் படையினர்.

- அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரியைத் தமது உற்பத்திகளின் மூலமோ மாடுகளாகவோ வழங்க வேண்டியமை
- நீதி மன்றத்தின் பிரதானி அரசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை
- அரசனின் ஆணைப்படி கிராமனிகளால் இத்தண்டனைகள் நிறைவேற்றப்பட்டமை.

- பிந்திய வேத கால சமூக நிலை:-
  - கோத்திர சமூகவமைப்பு மேலும் உறுதிப்பட்டமை.
  - இருக்கு வேதத்தின் பத்தாவது மண்டலத்தில் புருஷ சுக்த வேதத்தில் நான்கு வர்ணங்கள் (குலமுறை) ஆரம்பம் பற்றிய கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளமை. ''பிராமணர் பிரம்மாவின் வாயிலிருந்தும் சத்திரியர் அவரது தேகத்திலிருந்தும் வைசியர் இரு கைகளிலிருந்தும் சூத்திரர் பாதங்களிலிருந்தும் உருவானோராவர்.''
  - இக்கொள்கை காரணமாக பிராமணர்களின் பலம் மேலும் வளர்ச்சி கண்டமை
  - சத்திரியர் ஆட்சி நிர்வாகத்தையும் வைசியர் விவசாயம், வர்த்தகமும் சூத்திரர் மேல் குலத்தினருக்கு சேவையும் புரியும் நிலைமை.
  - இவை தவிர நேசாதாரர் எனம் குலத்தினர் காணப்பட்டதுடன் அக்குலம் மேலும் 8 குலங்களாகப் பிரிந்திருந்தனர்.
    - வர்த்தகர்
    - தக்ஷானர்
    - பங்ஜிஸ்டர்
    - ரதகாரர்
    - கவானிஸர்
    - குலாலர்
    - முருகாசர்
    - கர்தாரர்
  - இக்காலப்பகுதி சமூகவமைப்பை ஒழுங்குபடுத்திய நெறிகளாக பிரம்மச்சாரியம், குடும்பஸ்தம், வான பிரஸ்தம், சந்நியாசம் என்பனவும் விளங்கியமை.
  - மேற்படி நெறி முறைகளின்படி வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மேற் கொள்ளப்பட்ட விதிமுறைகள் காணப்பட்டமை.
    - கர்ப்ப பரிதான கர்மம் (கர்ப்பம் தரித்தல்)
    - நாமகர்ம கர்மம் (பெயர் சூட்டல்)
    - அன்ன பிராசன கர்மம் (உணவூட்டல்)
    - உபநயன கர்மம் (பிரமச்சாரிய ஆரம்பம்)
    - சதுர்கி கர்மம் (திருமணமாதல்)
    - அந்தியேட்டிக் கர்மம் (மரணச் சடங்கு)
  - பெண்களின் உரிமைகள் வேகமாக இல்லாமற் போதல்
  - ஒரு தார மணம், பலதார மணம் காணப்பட்டமை
  - விதவைகளுக்கிருந்த மறுமணம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டமை. அது கடுமையானதாக இருக்கவில்லையென்று தற்சமயம் அறியப்பட்டுள்ளமை.
  - ஆடையணிகள் வேத காலத்தைப் போன்று இருந்ததுடன் சிறு வேறுபாடுகள் காணப்பட்டமை.
  - பொழுதுபோக்கு அம்சங்களாக ஆடுதல், பாடுதல், இசைத்தல் என்பவற்றுடன் வில்வித்தை வண்டியோட்டம் முதலியன நிகழ்த்தப்பட்டமை
  - உணவு பானங்கள் இருக்கு வேத கால முறைப்படி இருந்ததுடன் சோம பானம் முன்னரை விட பிரபல்யமடைந்தமை.

- பிந்திய வேத காலப் பொருளாதார நிலை:-
  - இருக்கு வேத காலத்தைப் போன்றே விவசாயம், விலங்கு வளர்ப்பு, வியாபாரம் எனும் பொருளாதார நடவடிக்கைகள் முக்கிய இடம் வகித்தமை
  - ஆயினும் முன்னரை விட இந்நடவடிக்கைகள் ஒழுங்கமைப்புடனும் பரவலாகவும் மேற்கொள்ளப்பட்டமை
  - சனத்தொகை அதிகரிப்பு, குடியேற்றங்களின் பரம்பல் என்பவற்றுடன் நதிப்பள்ளத்தாக்குகளில் வெற்றிகரமான முறையில் விவசாயம் மேற்கொள்ளப் பட்டமை
  - 24 மாடுகள் பூட்டப்பட்ட கலப்பை ஒன்று பற்றி மூலாதாரங்களில் குறிப்பிடப் பட்டுள்ளமை
  - விளைச்சலை அதிகரிப்பதற்காக யாகம், ஹோமம் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் மந்திரங்களும் பயன்படுத்தப்பட்டமை
  - யசுர் வேத நூலில் மீன்பிடித்தல், துணி நெய்தல், கயிறு திரித்தல், உலோகக் கைத்தொழில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - விவசாய உற்பத்திகளலிருந்து 1/6, 1/8, 1/10 எனும் அளவுகளில் அரசு வரி அறவிட்டமை.
  - மாடுகளில் 1/5 வர்த்தகப் பண்டங்களில் 1/20 எனும் வகையில் வரி அறவிடப்பட்டமை.
  - வியாபாரத்தின் போது பண்டமாற்றுடன் பணப் புழக்கமும் இருந்தமை
  - செப்பு, இரும்பு, களிமண், கருங்கல் என்பவற்றால் ஆயுதங்கள், பாத்திரங்கள் செய்யப்பட்டமை
  - வைதீக நூல்களின்படி பின்வரும் தொழில்கள் இடம்பெற்றுள்ளமை.
    - பாயிழைத்தல்
    - தோல் பொருட் தொழில்
    - கம்மாளத்தொழில்
    - தச்சுத்தொழில்
    - சோதிடம்
    - தங்க நகை செய்தல்
    - மீன்பிடி
    - மாணிக்க வர்த்தகம்
    - விலங்கு வளர்ப்பு
    - இரத்தினம் அகழ்வு
    - படகோட்டுதல்
    - வனைதல் தொழில்
    - சலவைத் தொழில்
    - தகவல் கொண்டு செல்லல்
  - உள்நாட்டு வர்த்தகம் போலவே வெளிநாட்டு வர்த்தகமும் மேற்கொள்ளப்பட்டமை
  - தரைமார்க்கப் போக்குவரத்திற்காக யானைகள், குதிரைகள், மாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன் இரண்டு சக்கரக் குதிரை வண்டிகளும் பயன்பட்டமை.
  - உதேனி, கௌசம்பி, வாரணாசி, சிராவஸ்தி, அபிஜத்ர முதலிய சிறு வர்த்தக நகரங்கள் உருவானமை.

- பிந்திய வேத கால சமய நிலை:-
  - இருக்கு வேத கால சமயக் கொள்கை மேலும் வளர்ச்சியடைந்து பல தெய்வக் கொள்கை ஏக தெய்வக் கொள்கையாக மாற்றங் கண்டமை
  - இருக்கு வேத காலத்திற்குரிய பழைய தெய்வங்களின் அதிகாரங்கள் குறைவடைந்து முக்கியத்துவமிழந்தமை
  - சிவன், விஷ்ணு, பிரம்மா (மும்மூர்த்திகள்) எனும் கொள்கை பிரபலமடைந்தமை.
  - அவர்களுள்ளும் பிராஜாபதி எனும் மகா பிரம்மன் முதலிடம் பெற்றமை.

- அத்துடன் இருக்கு வேத காலத்தின் எளிமையான யாக பூஜை சிக்கலார்ந்த தன்மை பெற்றமை
- அதனூடாக பிராமணரின் நிலை உயர்வடைந்து அவர்கள் பூமியில் உலவும் தெய்வங்களாக மதிக்கப்பட்டமை.
- கடவுளர்கள் தாம் சொல்லும்படி செய்யும் சேவகர்கள் எனும் நிலையில் பிராமணரின் நடவடிக்கைகள் அமைந்தமை
- நியாய கிரந்தங்களில் அவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் பிரயோகத்தில் அவ்வாறு காணப்படவில்லை என்று வேறு மூலாதாரங்களின் மூலம் அறியப்பட்டுள்ளமை.
- ஆரணியங்கள், உபநிடதங்கள் மூலம் ஏற்பட்ட புதிய யுக மாற்றத்தின் காரணமாக பிராமண கொள்கைக்கு எதிராகச் சைவ மரபு மேலெழுந்தமை
- அதன்படி இம்சையான யாக முறையிலான கர்ம மார்க்கத்திற்குப் பதிலாகப் பக்திவாதச் சிந்தனையில் புதிய போக்கு ஏற்பட்டு ஞானவழி மேலெழுந்தமை
- அச்சந்தர்ப்பத்தில் பிராமணவாதம் வீழ்ச்சியடைந்து தியானத்தில் ஈடுபடும் தவ முனிவர்கள் முக்கியத்துவம் பெற்றமை
- சத்திரியர் உபநிடத தத்துவத்தின் முன்னோடிகளானமை
- உபநிடத தத்துவத்தின்படி மோட்சமடைய வேண்டுமெனில் புலன்களை அடக்குதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டமை.
- யாஞ்ஞவல்க முனிவர் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள குணப் பண்புகளின் உத்தம தருணங்களை தனது மனைவிக்கு எடுத்துக் கூறியதாக அதன் உபதேசத்தில் கூறப்பட்டுள்ளமை.
- மனித வாழ்க்கைக்கு மரணத்தின் பின்னர் நிகழ்வதென்ன? எனும் தத்துவார்த்த பிரச்சினைக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டமை.
- இப் பின்னணியில் பிற்காலத்தில் தத்துவார்த்த மற்றும் சமயவாத கொள்கைகள் பலவும் மேலெழுந்தமை.
- புத்தரின் தத்துவங்களிலும் உபநிடதங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை

# 5. அரசியல் மற்றும் மனித சிந்தனையின் வளர்ச்சி

கி.மு. 6ம் நூற்றாண்டாகும் போது இந்தியாவில் கட்டியெழுப்பப்பட்டிருந்த அரசியல் நிர்வாக முறையானது படிப்படியாக வளர்ச்சி கண்டதென்பது மூலாதாரங்களின் மூலம் தெரிய வருகின்றது. இருக்கு வேத காலத்தில் கோத்திரங்களாக ஒழுங்கமைந்த குழுக்கள் பிற்காலத்தில் கிராமம், குடியேற்றம் என்பவற்றை அமைத்துக் கொண்டும் அதன் பின்னர் குடியேற்றங்கள் அரசுகளாகவும் அவை பேரரசுகளாகவும் வளர்ச்சியடைந்ததையும் அவதானிக்க முடிகின்றது. கோத்திரத் தலைவர் பதவி அரச பதவியாகவும் அரச பதவி பேரரசன் என்றும் வளர்ச்சியடைந்த போது அரசனின் நிர்வாக உதவிக்காகப் பதவிகள் பலவும் உருவாயின. அதே போன்று சமகால சமூக பொருளாதார முறையை அனுசரித்து அரசியல் முறையைக் காலத்துக்கேற்ற முறையில் மாற்றியமைப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு நேர்ந்தது. இந்தியாவின் ஆரம்ப வேதகால யுகத்தின் சமய பின்னணியில் தத்துவார்த்த பிரவேசத்தை அவதானிக்க முடியவில்லை.

ஆயினும் பிந்திய வேத காலத்தின் இறுதிப் பகுதியில் சில தத்துவார்த்த சிந்தனையூடான சமய சூழல் உருவானது. அப்போதைய கட்டத்தில் சமூகத்தில் பெரும்பான்மையானோர் குலபேதத்தை முன்னிலைப் படுத்திய பிராமணக் கொள்கை காரணமாக அழுத்தங்களுக்கு ஆளாயிருந்தனர். அதிலிருந்து படிப்படியாக உருவான வளர்ச்சி கண்ட தத்துவார்த்தக் கொள்கை கி.மு. 6 ஆம் நூற்றாண்டாகும்போது ஒழுங்கமைந்த சமயங்களாக வளர்ச்சி கண்டதுடன் அத்தத்துவங்களில் அதிகமானவை பிராமணீயக் கொள்கையில் காணப்பட்ட இம்சையான கொள்கையைக் கடுமையாக எதிர்த்தன.

**தேர்ச்சி 5.0** : இந்திய வரலாற்றின் விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : பதினாறு மகாசனபதங்களின் விரிவாக்கம் தொடர் பாக விபரிப்பார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :

- பதினாறு மகா ஜனபதங்கள் பற்றி விபரிப்பார்.
- பதினாறு மகா ஜனபதங்களில் பலம் பொருந்திய அரசுகளை எடுத்துக் காட்டுவார்.
- பதினாறு மகா ஜனபதங்களைத் தேசப்படமொன்றில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**பதினாறு மகா ஜனபதங்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி**

- பிந்திய வேத காலத்தின் இறுதிப்பகுதியில் கங்கை நதிப் பள்ளத்தாக்கின் பாரிய சமவெளிப் பரப்பில் குடியேற்றங்கள் பரவியமை
- அங்கு நிலையான குடியேற்றங்கள் அமைந்ததுடன் கோத்திர நிலையைத் தாண்டி நிலையான ஆட்சிமுறையொன்றின் தேவை உணரப்பட்டமை.
- அவ்வாறு நிலைபெறும்போது பலவீனமான கோத்திரங்களை அடிபணியச் செய்து பிரபலமான கோத்திரங்கள் தலையெடுத்த பின்னர் பாரிய குடியேற்றங்களாகப் பரிணமித்தமை
- அவ்வாறு பரந்து விரிந்த அரச அலகுகளைக் கட்டியெழுப்புவதற்கு வட இந்தியாவின் புவியியல் நிலை உதவியமை
- வட இந்தியாவின் பொருளாதார வளங்கள் பயன்படுத்தப்பட்டமை
- விவசாய, வர்த்தக நடவடிக்கைகளால் உருவான செல்வந்த வகுப்பினருக்கு நிலையான அரசியல் அலகொன்றின் தேவை உணரப்பட்டமை.
- அதன்படி கி.மு. 6ம் நூற்றாண்டாகும் போது வட இந்தியாவில் நிலையான அரசுகள் 16 தோற்றம் பெற்றமை.

**16 மகா ஜனபதங்களை இனங்காணல்:**

- பௌத்த, சமண சமய மூலாதாரங்கள் மூலமும் வேறு இலக்கிய மூலாதாரங்கள் மூலமும் முக்கியமான 16 ஜனபதங்களை அறிந்து கொள்ள முடிகின்றமை.
- அங்கம், மகதம், காசி, கோசலம், வஜ்ஜி, மல்ல, சேதி, வத்சயம், குரு, பாஞ்சாலம், அஸ்மகம், மத்சயம், சூரசேனம், அவந்தி, காந்தாரம், காம்போஜம் என அறியப் பட்டுள்ளமை.

அங்கம்: இதன் தலைநகரம் சம்பா நகரமாகும். இந்தியாவின் கிழக்கெல்லைக்குச் சமீபமாக அமைந்திருந்தது.

மகதம்: இதன் தலைநகரம் மூன்று சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்தது. அதாவது கிரிவருஜம், ராஜகிருகம், பாடலிபுத்திரம் என்பன. எல்லாக் குடியேற்றங் களிலும் பலம் மிக்கதாகக் காணப்பட்டது.

காசி: வாரணாசியைத் தலைநகரமாகக் கொண்ட காசி குடியேற்றத்துக்கு மிக மேலான பொருளாதாரப் பெறுமதியிருந்தது. கோசலத்துக்குரிய இது பின்னர் மகதத்துக்கு உரித்தானது.

கோசலம்: புவியியல் ரீதியாக வடக்கு, தெற்கு எனப் பிரிந்திருந்த இதற்கு குசாவதி, சாவத்தி என இரண்டு தலைநகரங்கள், பிரசேனஜித் எனும் கோசல மன்னன் இதனைப் பிரபலமான அரசாக மாற்றினான்.

வஜ்ஜி: வைசாலி நகரைத் தலைநகராகக் கொண்ட இங்கு குழுவாட்சி முறை நிலவியது.

மல்ல: குசிநகர் மற்றும் பாவா எனும் இரு தலைநகரங்கள் காணப்பட்டன.

சேதி : சுத்திமதி இதன் தலைநகராகும்.

குரு: இந்திரப் பிரஸ்தம் இதன் தலைநகராகும். புத்தர் காலத்தில் இதன் ஆட்சியாளர் கௌரவியனாவான்.

பாஞ்சாலம்: அபிஜத்திரம் மற்றும் கம்பிலயம் எனும் இரு தலைநகரங்களைக் கொண்டது.

மத்சயம்: தலைநகரம் ஜெய்ப்பூர் ஆகும்

வத்சயம்: கோசம்பியைத் (கௌசாம்பி) தலைநகராகக் கொண்ட இதன் முக்கியமான ஆட்சியாளன் உதயன் ஆவான்.

சூரசேனம்: மதுராவைத் தலைநகராகக் கொண்ட இங்கு அவந்தி புத்திரம் எனும் அரசன் ஆட்சி செய்தான்.

அஸ்மகம்: இது இந்தியாவின் மேல் பகுதியில் அமைந்திருந்தது.

அவந்தி: மஹீஸ்மதி ஆரம்பத்தில் தலைநகராக இருந்து பின்னர் உஜ்ஜயினிக்கு இடம் மாறியது. மண்டபஜோத மன்னன் இதன் பிரபலமான ஆட்சியாளன் ஆவான்.

காந்தாரம்: தக்ஷிலாவைத் (தட்சசீலம்) தலைநகராகக் கொண்ட இதன் முக்கியமான ஆட்சியாளன் புக்கு சாதி மன்னனாவான்.

காம்போஜம்: காந்தாரத்திற்கு வடக்கே இமய மலைக்கண்மையில் அமைந்திருந்த இவ்விராச்சியம் பற்றிய தகவல்கள் குறைவாகும்.

**பதினாறு மகா ஜனபதங்களில் நிலவிய ஆட்சிமுறை:**

- அரசாட்சிமுறை
  - கி.மு. 6ம் நூற்றாண்டாகும் போது மகதம், கோசலம், வத்சயம், அவந்தி எனும் குடியேற்றங்களில் அரசாட்சி நிர்வாகம் மேலெழுந்தமை
  - இதன் நிர்வாகத்தில் அரசனே பிரதானமானவன்
  - சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை மூன்றினதும் அதிகாரம் அரசனிடமே காணப்பட்டமை
  - ஆயினும் அரசன் சர்வாதிகாரியாவதைத் தடுக்கும் வகையில் மந்திரி பர்ஷத் எனும் சபையினால் அரசனின் அதிகாரம் வரையறுக்கப்பட்டமை.
  - யானை, குதிரை, தேர், காலாட்படை எனும் நாற்படைகளாலும் அரசுகளின் அதிகாரம் செயற்படுத்தப்பட்டமை
  - பிந்திய வேத காலத்தில் அரசனுக்கு உதவியாக இருந்த அதிகாரிகள் இக்காலப் பகுதியில் மேலும் வளர்ச்சி கண்டமை
  - சம்பத்தக (நிறைவேற்றுத் துறை), வோகாரிக (நீதித்துறை), சேனாநாயக (இராணுவ தளபதி) முதலிய மேலதிகாரிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை.
  - அரசாட்சி முறையில் ஆட்சியாளர்கள் தமது அதிகாரப் பரவலாக்கலின்போது மத்சய நியாயம் உட்பட இன்னும் பல நியாங்களைப் பின்பற்றினர்.
  - பொருளாதார வளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்திய ஆட்சியாளர்களால் ஏனைய குடியேற்றங்கள் அடிபணியச் செய்யப்பட்டமை

- குழுவாட்சி முறை
  - கண அரசுகள் என்றும் சங்க இராச்சியம் என்றும் இவை குறிப்பிடப்படுவதுண்டு.
  - 16 பாரிய குடியேற்றங்களுள் வஜ்ஜி, மல்ல எனும் குடியேற்றங்களில் இவ்வாட்சி முறை நிலவியது.
  - இவை தவிர பௌத்த இலக்கியங்களில் வேறு 9 குழுவாட்சிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.
    - கபிலவஸ்துவில் சாக்கியர்
    - குசிநகரிலும் பாவாவிலும் மல்லர்
    - வைசாலியில் லிச்சவியர்
    - மிதிலையில் விதேகர்
    - இராம கிராமத்தில் கோலியர்
    - அல்லகப்பத்தில் புல்லியர்
    - கேசபுத்தரத்தில் காலாமயர்
    - பிப்பலிவனத்தில் மோரியர்
    - சுங்சுமாரகிரியில் வக்கயர்
  - இவ்வரசுகள் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிதிகளைக் கொண்ட நிர்வாகக் குழுவினாலே ஆட்சி செய்யப்பட்டது.
  - இவ்வாறான பிரதிநிதிகள் 7707 பேர் இருந்ததாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளன.
  - சப்த அவரிஹானி தர்மம் எனும் ஆசார தர்மங்கள் ஏழின் மேல் அவர்களது ஆட்சிக் கொள்கை கட்டியெழுப்பப்பட்டிருந்தது.
  - நிர்வாக சபை கூடிய இடம் சந்தாகாரம் எனப்பட்டது.
  - பிரவேனி புஸ்தகம் என்பதற்கிணங்க அரச நீதிமன்றம் செயற்பட்டது.

**மகதப் பேரரசின் எழுச்சியும் பரவலும்**

- ஆரம்ப குடியேற்ற காலத்தில் மகதத்தை விடக் கோசலம் பலம்பெற்றிருந்தது.
- ஆயினும் பின்வரும் காரணங்களால் மகதம் பலம் பெற்றது.
- புவியியல் பௌதிகக் காரணிகள்
  - வளமான மண்ணும் இதமான காலநிலையும் காரணமாக வெற்றிகரமான விவசாயப் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டமை
  - கங்கை நதியூடாகப் பரவியிருநத பாரிய சமவெளியானது போக்குவரத்திற்கும் பல்வேறு பொருளாதார முறைகளுக்கும் முக்கியம் பெற்றமை
  - பஞ்சமகா மலைகள் உள்ளிட்ட இயற்கையான புவியியல் அமைவிடம் மகதத்தைப் பாதுகாத்தமை
- கங்கை - யமுனை உட்பட மேலும் பல கிளை நதிகளும் வளப்படுத்தியமை
- அதிக மழை வீழ்ச்சி பெறும் பிரதேசமாக அமைந்தமை

**அரசியல் காரணிகள்**

- அரசியல் பரம்பரையில் பிம்பிசாரன், அஜாசத் முதலிய திறமையான ஆட்சியாளர்கள் உருவானமை.
- அவர்கள் தமது அரசைப் பலப்படுத்துவதற்காக எப்போதும் ராஜதந்திரத்துடன் செயற்பட்டமை.

- மத்சய நியாயம், திருமணத்தொடர்பு, நட்புறவு, சமயத் தொடர்பு முதலிய பல்வேறு உபாயங்கள் மூலம் அரசை விரிவாக்கியமை
- மாற்றமடையும் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளுக்கு மதிப்பளித்து தலைநகரை அடிக்கடி இடமாற்றியமை. கிரிவஜ்ரம், ராஜகிருகம், பாடலிபுத்திரம்
- பிம்பிசார மன்னன் மகதத்தின் படைகளை ஒழுங்கமைத்து மேம்படுத்தியதுடன் அஜாசத் அதில் சீலகண்டாரம், ரசமூசல எனும் நவீன போர்க் கருவிகளால் அதனை பலம் பொருந்தச் செய்தமை
- திறமையான ஆலோசனை கூறத்தக்க அமைச்சர்கள் காணப்பட்டமை. (சுவீதர், வத்சகாரர், கௌடில்யர்)

**பொருளாதாரக் காரணிகள்**

- விவசாயத்திற்கும் விலங்கு வளர்ப்புக்கும் பொருத்தமான சூழல் மகதத்தில் காணப்பட்டமை
- வர்த்தக நடவடிக்கைகளை உள்ளகமாகவும் வெளியகமாகவும் மேற்கொள்ளத் தேவையான பாதைகள், படகுத் துறைகள், துறைமுகங்கள் காணப்பட்டமை
- இரும்பு, தங்கம், இரத்தினம் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்களை மகதம் கொண்டிருந்தமை
- மகதத்துக்குரிய காடுகளிலிருந்து அரிமரம், யானை முதலிய வளங்கள் கிடைத்தமை

**சமூகக் காரணிகள்**

- கங்கை - யமுனை பிரதேசத்தில் புவியியல் தடைகள் இல்லாத காரணத்தால் சமூக ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டமை
- குலபேதம் (வர்ணவாதம்) கடுமையாக நடைமுறைப்படத்தப்படாமை
- வர்த்தகம், கைத்தொழில், விவசாயம் எனும் அம்சங்களுடாகச் செல்வந்த வகுப்பினர் (செட்டிமார்) தோற்றம் பெற்றமை
- இந்த சமூகப் பின்னணியில் மிகவும் சக்திவாய்ந்ததும் விரிவானதுமான அரசியல் முறையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டமை
- அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குச் சத்திரியர்களின் தேவை இல்லாமற் போனமை (ஆரியங்கர், சிசு நாகர், மௌரியர், சுங்கர் எனும் எந்தவொரு வம்சத்தினரும் சத்திரியர் அல்ல)

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

01 - 03 வரையிலான வினாக்களுள் ஒவ்வொரு வினாவிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சொல் ஏனைய சொற்களுடன் ஏதோவொரு வகையில் பொருந்தாது அச்சொல்லைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) 1. அவந்தி 2. கோசலம் 3. வத்சயம்
4. மல்ல 5. மகதம் ( )

2) 1. பிம்பிசாரன் 2. உதயன் 3. சண்டபஜோத
4. கொசல் 5. புண்யமித்திரர் ( )

3) 1. அரியங்கர் 2. சிசுநாகர் 3. நந்தர்
4. மௌரியர் 5. புண்ய மித்திரர் ( )

04 - 06 வரையான வினாக்கள் X, Y நிரல்களாகத் தரப்பட்டுள்ளன. அவற்றை இணைக்கும் போது சரியாக அமையும் விடையின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

4)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. அங்கம் | A - குசிநகர் |
| 2. காம்போஜம் | B - இந்திரப்பிரஸ்தம் |
| 3. குரு | C - சம்பா |
| 4. மல்ல | D - மதுரா |
| 5. சூரசேனம் | E - காந்தாரம் |

1. CEBAD 2. BCEAD 3. ADECB 4. DACEB 5. ECDAB
( )

5)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. இராணுவத் தளபதி | A - வோஹாரிக |
| 2. நீதிமன்றம் | B - சேனாநாயக |
| 3. நிர்வாகம் | C - மந்திரி பரிஷத் |
| 4. நிர்வாக சபை | D - சப்பத்தக |
| 5. சபை | E - சந்தாகார |

1. CEDAB 2. ABCDE 3. BADCE 4. ACEBD 5. BCDAE
( )

5)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. மௌரியர் | A - இராம கிராமம் |
| 2. லிச்சவியர் | B - மிதிலை |
| 3. மல்லர் | C - பாவா |
| 4. விதேகர் | D - வைசாலி |
| 5. கோலியர் | E - பிப்பலீச்சனம் |

1. DCABE 2. DECBA 3. BCDEA 4. AEBDC 5. EDCBA
( )

07 08 வரையிலான வினாக்களின் கூற்றுக்களுக்குப் பொருத்தமான வகையில் விடைத் தொகுதியின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்பினுள் எழுதுக.

- A யும் B யும் சரியெனில் இலக்கம் 1
- B யும் C யும் சரியெனில் இலக்கம் 2
- C யும் D யும் சரியெனில் இலக்கம் 3
- A யும் C யும் சரியெனில் இலக்கம் 4

ஒரு கூற்று அல்லது இரு கூற்றுக்களுக்கு மேல் சரியெனில் இலக்கம் 5 என்று அடைப்பினுள் எழுதுக.

7)

A - பிந்திய வேத காலத்தில் ஆரியர் கங்கை நதிப் பள்ளத்தாக்கில் குடியேறினர்.
B - கோத்திர ஆட்சியின் பின்னர் 'மகாஜனபத' எனும் பாரிய குடியேற்றங்கள் உருவாயின.
C - பிந்திய வேத காலத்தில் நிலையான ஆட்சியமைப்பு உருவானது.
D - புக்குசாதி மன்னன் காந்தாரத்தை ஆட்சி செய்த முக்கியமான ஆட்சியாளன்

( )

8)

A - பிம்பிசார மன்னன் மகதத்தின் போர்ப்படையில் சீலகண்டாரம் எனும் புதிய போர்க் கருவியை அறிமுகப்படுத்தினான்
B - சுனீதர், வத்சகாரர் என்போர் மகதத்தின் பிரபலமான அதிகாரிகளாவர்.
C - அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சத்திரிய குலத்தைச் சேர்ந்தவராக இருக்கத் தேவையில்லை
D - மகதத்தின் தலைநகரம் ஒரு முறை வாரணாசிக்கு மாற்றப்பட்டது.

( )

**கணிப்பீடும் மதிப்பீடும் - 02**

1) பிந்திய வேத காலத்தில் அரசியல் போக்கின் முக்கியத்துவத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

2) "கி.மு. 6ம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய ஆட்சி முறைகளுள் மிகவும் ஜனநாயகத் தன்மையுடையது குழுவாட்சி முறையாகும்."
   i. 16 மகா ஜன பதங்களுள் அடங்காத கண இராச்சியங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   ii. கண இராச்சியங்களின் நிர்வாக முறையின் சிறப்பியல்பைப் பரிசீலிக்குக. (5 புள்ளிகள்)
   iii. மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீரா? அவ்வாறாயின் அதற்கான காரணங்களை முன்வைக்குக. (7 புள்ளிகள்)

3) பதினாறு மகா ஜனபதங்களுள் பலம் வாய்ந்த அரசுகளாக வளர்ச்சி கண்ட அரசுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (14 புள்ளிகள்)

4) மகதத்தின் எழுச்சியில் பிம்பிசார, அஜாசத்த மன்னர்களில் பங்களிப்புப் பற்றி மதிப்பீடு செய்க. (14 புள்ளிகள்)

**கணிப்பீடும் மதிப்பீடும் - 03**

- பின்வரும் இடங்களை இந்திய தேசப்படத்தில் குறித்து அவற்றுள் இரண்டு பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
  சப்தசிந்து பிரதேசம், இந்திரப் பிரஸ்தம், பாடலிபுத்திரம், யமுனா நதி, அங்கம், காசி, தாமிலிப்தி, இமயம், தக்ஷிலா (தட்சசீலம்) (18 புள்ளிகள்)

**தேர்ச்சி 5.2** : இந்திய வரலாற்றின் விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : சமய, மெய்யியல் கருத்துக்கள் இந்திய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்துள்ள விதத்தினை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- இந்தியாவில் வளர்ச்சியடைந்த புதிய சமய சிந்தனைகளை விபரிப்பார்.
- புதிய சமய சிந்தனைகள் அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.
- புதிய சமய சிந்தனைகள் மனித சமுதாயத்தில் தாக்கம் விளைவித்த விதத்தை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**சமய சிந்தனைகளின் வளர்ச்சி**

- கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சமய மற்றும் தத்துவ சிந்தனை வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய வரலாற்றுப் பின்னணி
- பிந்திய வேத காலத்தில் பிராமணரால் உருவாக்கப்பட்டிருந்த சமயக் கொள்கை பெரும்பாலானோரின் மனவழுத்தத்திற்கு காரணமாயமைந்தமை
- யாகம் செய்தல், வர்ண குலபேத தர்மமம் முதலிய கொள்கைகள் காரணமாக நெருக்குதலுக்குள்ளான பகுதியினர் சமூகத்தில் காணப்பட்டமை
- படிப்படியாக வளர்ச்சியடைந்த அரசியல், சமூக, பொருளாதார நிலைமை காரணமாக பிராமண கற்பனாவாதத்திலிருந்து விலகி தர்ம வழிக்குப் பதிலாக ஞான வழியைப் பின்தொடர்ந்த குழுவினர் உருவானமை.
- அவர்கள் உலகம், பிரபஞ்சம், வாழ்க்கை, ஆத்மா, மரணம் எனும் ஆழமான தத்துவங்களை வெளியிட்டுக் கலந்துரையாடியமை
- அதற்கிணங்க கி.மு. 6ம் நூற்றாண்டாகும் போது பிராமண மரபை ஒதுக்கிவிட்டு புதிய சமய, தத்துவ சிந்தனைகள் உதயமானமை.

**இந்தியாவில் உருவான புதிய சமய சிந்தனைகள்**

- வைதீக சமய நெறி
  - கி.பி. 8ம் நூற்றாண்டின் பின்னர் இந்து சமயமாகப் பரிணமித்தமை
  - சமூகத்தில் அதிமேலான வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் போதிக்கப்பட்டமை
  - கற்பனை வாதக் கொள்கைகள் மூலம் தமக்குச் சார்பான கொள்கையைச் சமூக மயப்படுத்தியமை

- வேதத்தைக் கற்றல், கற்பித்தல் யாகங்கள், ஹோமங்கள் செய்தல், தானாங்களை ஏற்றல் முதலியவற்றை அவர்கள் மேற்கொண்டமை
- வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிலை பேறான தன்மைக்குமாக யாகம் இன்றியமையாதது எனக் கூறி மகாயாகம் வரையில் யாக ஹோமங்களை வளர்த்த பிராமணர் சமூகத்தில் மேலாண்மையை அடைந்தமை

- **சமண சமயம்**
  - நிகண்ட பரம்பரையைச் சேர்ந்த 24வது தீர்த்தங்கரரான சமண மகா வீர முனிவர் இதன் காரணகர்தாவாவார்.
  - வட பீகாரின் வைசாலியபுரத்தில் பிறந்த சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த இவர் பிராமணப் போதனைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட தர்மம் ஒன்றை முன்வைத்தார்.
  - அதன்படி சமண தர்மத்தில் பின்வரும் அடிப்படைப் பண்புகள் அடங்கியுள்ளன.
    - யாகங்கள் உள்ளிட்ட வைதீக சமய வழிபாடுகளைப் புறக்கணித்தல்
    - தெய்வங்களை நம்புதல்
    - அஹிம்சையைக் கடைப்பிடித்தல்
    - சரீரத்திற்கு அதிக வேதனை வழங்குவதன் மூலம் ஆசைகளைக் குறைக்க முடியுமென்ற நம்புதல்
    - அஹிம்சை, தானம், உண்மை பேசல், திருடாமை, சொல்லால் செயலால் எண்ணத்தாலான சகல லௌகீக ஆசைகளையும் துறத்தல் எனும் ஐந்து கொள்கைகளைக் கடைப்பிடித்தல்
  - கி.மு. 6ம் நூற்றாண்டில் அரச அனுசரணை கிடைக்கப் பெற்றமையால் சமண சமயம் விரிவாக்கம் அடைந்தமை
  - கி.மு. 5ம் நூற்றாண்டில் குஜராத்தின் வலபி நகரில் சமண சமய குருமாரின் மாநாடு நடைபெற்றமை
  - பிற்காலத்தில் சந்திரகுப்த மௌரிய மன்னனின் அனுசரணை சமண சமயத்திற்குக் கிடைத்தமை
  - இதன்படி மத்திய இந்தியாவின் மால்வா, ராஜபுத்திரம் எனும் பிரதேசங்களிலும் தென்னிந்தியாவிலும் சமண சமயம் பரவியமை
  - பகவதி சூத்திரம், வைதுங்க சூத்திரம், சமாவதி சூத்திரம் எனும சமண இலக்கிய நூல்கள் உருவானமை

- **பௌத்த சமயம்**
  - கௌதம புத்தரால் முன்வைக்கப்பட்ட தத்துவம் புத்த தர்மம் எனப்படும்.
  - கபிலவஸ்துவின் சுத்தோதன மன்னனுக்கும் மாயா தேவிக்கும் பிறந்த சித்தார்த்தர் தனது 29வது வயதில் இல்லறத்தை துறந்து 6 வருடங்கள் சிரம பரியந்தம் செய்து 35வது வயதில் புத்த நிலையை அடைந்தார்.
  - உபாசகர்களுக்கு அஸ்டாங்க சீலத்தையும் ஏனையோருக்கு பஞ்ச சீலத்தையும் அறிமுகப்படுத்தினார்.
  - பிறப்புத் துன்பத்திலிருந்து மீள்வதற்கு தியான முறைகள் அறிமுகப்டுத்தப்பட்டமை.
  - அதன்படி பௌத்த தர்மத்தின் அடிப்படைப் பண்பைப் பின்வரும் வகையில் அறிமுகப்படுத்தலாம்.
    - மத்திய நிலைக் கொள்கை
    - சதுரார்ய சத்தியம் (உண்மை)
    - ஆரிய அஸ்டாங்க மார்க்கம்

- தெய்வங்கள் பற்றிய கருத்து
- வைதீக முறையிலான யாகம், ஹோமம் வளர்ப்பதைப் புறந்தள்ளுதல்
- தார்மீக முறையில் வாழ்தல்

- புத்த சமயத்தின் மீதான மக்கள் அபிப்பிராயம், அரச அனுசரணை என்பவற்றால் குறுகிய காலத்தில் அது இந்தியா முழுவதும் பரவி இந்தியாவின் அரச சமயம் எனும் நிலையை அடைந்தது.

- **சமகால இந்தியாவின் வேறு புதிய சமய சிந்தனைகள்**
  - கி.மு. 6ம் நூற்றாண்டளவில் இது போன்ற 62 கொள்கைகள் பற்றி பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - அவற்றின் சமய போதகர்களுள் பின்வருவோர் புகழடைந்த ரிஷிகளாவர்.

- பூரண காசியப்பர்
  - நன்மை, தீமைகளின்படி எந்தவொரு செயலினதும் விளைவுகள் கிட்டுவதில்லை என்றும் முயற்சியோடு செயற்படுவது அர்த்தமற்றது என்றும் செயற்பாடற்ற தத்தவத்தை முன்வைத்தமை
  - அஸ்வமேத யாகம், புருஷமேத யாகம் முதலிய யாகங்கள், ஹோமங்கள் இவரால் இழிவுபடுத்தப்பட்டமை
  - அஜாசத் மன்னன் கூட இவரைத் தரிசிக்க வந்தமை

- மக்கலி கோசாலர்
  - இவர் மூங்கில் தடியொன்றைக் கையில் வைத்திருந்தமையால் இப்பெயரைப் பெற்றார்.
  - அவருடைய போதனை நியதி வாதம் அல்லது நாஸ்திக வாதம் எனப்பட்டது.
  - அதாவது இவ்வுலகின் செயற்பாடுகள் எல்லாம் காரணமின்றி நிழ்வதாகவும் அதனை மாற்றுவதற்கு யாராலும் முடியாது என்ற கருத்து.
  - புத்த பெருமான் இத்தத்துவத்தை பரிகசித்து அது மனிதனின் முன்னேற்றத்திற்குத் தடையானது என்றார்.

- அஜித கேச கம்பலர்
  - உச்சவாத தத்துவத்தை வெளியிட்டார்.
  - நான்கு மூலதர்மங்களின் மூலம் உயிரினங்கள் உருவாவதாகவும் மரணத்தின் பின்னர் அவை நான்கு பூதங்களுக்கும் உரித்தாகுமென்று போதித்தார்.
  - எனவே பௌதிக வாதம் என்றும் அவருடைய போதனைகளை அறிமுகப்படுத்தலாம்.

- பகுட கச்சாயனார்
  - பிராமண குலத்தவரான இவர் ஆரம்பத்தில் நிகண்டர்கள் பின்பற்றிய தீர்த்தங்கராவார்.
  - பின்னர் அகிரிய வாதம் (சாஸ்தவத வாதம்) என்பதை முன்வைத்து புவி, நீர், நெருப்பு, வாயு, சுகதுக்கம் என்பவை யாராலும் உருவாக்கப்படவில்லை என்றும் போதித்தார்.

- சஞ்சய பெல்லட்டி புத்தர்
    - இவரது போதனை அமராவிக்கேப வாதம் எனப்பட்டது.
    - அதாவது நிலையான அடிப்படையற்ற தத்துவத்தை உலகம், ஆன்ம விடுதலை என்பன பற்றித் தான் எவ்வித கருத்தும் தெரிவிக்கப் போவதில்லை என்றார்.

- நிகண்ட நாத புத்தர் (சமண சமய முனிவர்கள் எனும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

- **புதிய சமய சிந்தனைகள் அரசியலில் செல்வாக்குச் செலுத்திய விதம்**
    - இந்தியாவில் வைதீக காலம் முதல் நிலவிவந்த குலபேதம், மத பேதம் முதலியவற்றைப் புறந்தள்ளி முன்னேறுவதற்குப் புதிய சமயங்கள் வாய்ப்பாக அமைந்தமை
    - சமூக முன்னேற்றத்தைப் போலவே சமூக ஒற்றுமைக்கும் உதவியாக அமைந்த சமத்துவம், பஞ்சசீலம் முதலிய போதனைகள் என்பவை உள்வாங்கப்பட்டமையும் விரிவான ஆரசியல் அலகுகள் உருவாகக் காரணமானமை
    - நான்கு சங்கிரக வஸ்துக்கள், தச சக்விதி, தசராஜ தர்மம் எனும் கொள்கைகள் அரசர்களுக்கு உதவியாக அமைந்தமை

- **புதிய சமய சிந்தனைகள் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய விதம்**
    - பிராமணரின் போதனைகளால் அழுத்தங்களுக்காளான அதிகளவான மக்கள் கி.மு. 6ம் நூற்றாண்டு இந்தியாவில் காணப்பட்டமை
    - அவர்கள் எதிர்பார்த்த அஹிம்சை, சமத்துவம் முதலிய பண்புகள் புதிய சமயங்களில் காணப்பட்டமை
    - பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்குக் காரணமான நடைமுறையிலான கருத்துக்கள் சமூக நன்மைக்கு உதவியாக அமைந்தமை
    - புத்த சமயம் போதித்த பஞ்சசீலம் சமண சமயத்திலும் பிரதான கொள்கையாகும். அது சமூக நன்மைக்கு இன்றியமையாததாகத் திகழ்ந்தமை.

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

01 - 05 வரையிலான வினாக்களுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) பௌத்த இலக்கியங்களின் படி கண இராச்சியம் அல்லாத இராச்சியம் எது?
   1. கோலி 2. லிச்சவி 3. விதேக
   4. மல்ல 5. அவந்தி ( )

2) முதலாம் பௌத்த பேரவையில் தலைமை வகித்தவர்
   1. மொக்கலி புத்ததிஸ்ஸ தேரர் 2. மகா காசியப்ப தேரர் 3. ஆனந்த தேரர்
   4. வசுமித்திர தேரர் 5. சாரிபுத்ததேரர் ( )

3) மகத இராச்சியத்தை ஆட்சி செய்த அரச வம்சங்களைச் சரியான ஒழுங்கில் காட்டுவது,
   1. சிசுநாகர், அரியங்கர், நந்தர், மௌரியர், சுங்கர்
   2. அரியங்கர், நந்தர், மௌரியர், சுங்கர், சிசுநாகர்
   3. அரியங்கர், சிசுநாகர், மௌரியர், நந்தர், சுங்கர்
   4. சிசுநாகர், அரியங்கர், சுங்கர், நந்தர், மௌரியர்
   5. நந்தர், அரியங்கர், மௌரியர், சிசுநாகர், சுங்கர் ( )

4) நான்காம் பௌத்த பேரவை எம்மன்னனின் ஆட்சியில் இடம்பெற்றது?
   1. அஜாசத் 2. காலாசோகன் 3. அசோகன்
   4. கனிஷ்கன் 5. ஹர்சவர்த்தனன் ( )

5) முதலாம் பௌத்த பேரவை இடம் பெற்றது
   1. புத்தர் பரிநிர்வாணமடைந்து 3 மாதங்களின் பின்னர்
   2. புத்தர் பரிநிர்வாணமடைந்து 100 வருடங்களின் பின்னர்
   3. புத்தர் பரிநிர்வாணமடைந்து 200 வருடங்களின் பின்னர்
   4. அசோக மன்னனின் ஆட்சிக் காலத்தில்
   5. கனிஷ்க மன்னனின் ஆட்சிக் காலத்தில் ( )

**கணிப்பீடும் மதிப்பீடும் - 02**

6 - 10 வரையிலான வினாக்கள் ஓர் அட்டவணையில் இரு கூற்றுக்களாகத் தரப்பட்டுள்ளன. முதல் அட்டவணைக்குப் பொருந்தும்படி அவற்றை வகைப்படுத்தி, பொருத்தமான இலக்கங்களை உரிய முறையில் அடைப்பினுள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரி | சரி |
| 2 | சரி | பிழை |
| 3 | பிழை | பிழை |
| 4 | பிழை | சரி |
| 5 | சரி | சரி முதலாம் கூற்றை மேலும் தெளிவுபடுத்துகிறது. |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 6. வைதீக சமய நெறி மூலம் கட்டியெழுப்பப்பட்ட சமயக் கொள்கை காரணமாக பாரத மக்களுக்கு உதவிகரமான நிலை உருவானது. | வைதீக சமய நெறி கி.பி. 8ம் நூற்றாண்டின் பின்னர் இந்து சமயமாக உருவெடுத்தது. ( ) |
| 7. பிந்திய வேத காலத்தில் வைதீக சமய நெறி மூலம் கற்பனாவாத கர்ம வழியிலிருந்து விடுபட்டு ஞான வழியை மதித்த குழுவினர் உருவாயினர். | பிந்திய வேத காலத்தில் புதிய தத்துவச் சிந்தனைகள் மூலம் உலகம், மரணம், ஆத்மா, பிரபஞ்சம் என்பன பற்றிய கருத்தாடல் இடம் பெற்றது. ( ) |
| 8. கி.பி. 6ம் நூற்றாண்டில் உருவான புதிய சமய சிந்தனைகளுள் சமண சமயம் பஞ்ச சீலக் கொள்கையைப் பின்பற்றியது. | தெய்வங்கள் பற்றிய நம்பிக்கையை சமண சமயம் ஒதுக்கியது ( ) |
| 9. பூரண காசியப்பரின் போதனைகள் இவ்வுலகில் நிகழும் அனைத்தும் காரணமின்றி நியதிவாதத்தின் அடிப்படையில் நிகழ்வதாகக் கூறுகின்றன. | பகுட கச்சாயனாரின் கருத்துப்படி நான்கு பூதங்கள் பற்றி கருத்து முன்வைக்கப் பட்டது. ( ) |
| 10. பௌத்த சமயப்படி இல்லறம், துறவறம் எனும் இரு பகுதியினருக்கும் பஞ்சசீலம், அஸ்டாங்க சீலம் எனும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. | பௌத்த சமயம் அனுமதித்துள்ள சீலம் இவ்வுலக, மறுவுலக நன்மைக்கு உதவுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. ( ) |

**கணிப்பீடும் மதிப்பீடும் - 03**

1) கி.மு. 6ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்திருந்த புதிய சமய சிந்தனைகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (14 புள்ளிகள்)
2) கி.மு. 6ம் நூற்றாண்டில் உருவான சமயக் கொள்கைகள் காரணமாகப் பாரத சமூகத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக வளரச்சி பற்றி மதிப்பீடு செய்க. (14 புள்ளிகள்)
3) "கி.மு. 6ம் நூற்றாண்டில் இந்திய நாகரிகத்தை வடிவமைத்த பிரதான சக்தி புத்த சமயமாகும்"
   i. கி.மு. 6ம் நூற்றாண்டில் பௌத்த சமய வளர்ச்சிக்குப் பங்களித்த ஆட்சியாளர் இருவரின் பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)
   ii. கி.மு. 6ம் நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட புத்த சமயக் கொள்கைக்கு நெருக்கமான கொள்கைகளை முன்வைத்த புதிய சமய சிந்தனைகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)
   iii. மேற்படி கூற்றை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக. (7 புள்ளிகள்)
4) கி.மு. 6ம் நூற்றாண்டு சமூக நிலையை ஒழுங்கமைப்பதில் பிராமண போதனைகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஆராய்க. (14 புள்ளிகள்)
5) கி.மு. 6ம் நூற்றாண்டில் சட்சாத்ரூ எனும் ரிஷிகள் முன்வைத்த கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக. (14 புள்ளிகள்)

**கணிப்பீடும் மதிப்பீடும் - 04**

- பின்வரும் இடங்களைத் தேசப்படத்தில் குறித்து அவற்றுள் இரண்டு பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
  குஜராத், வலபி, ராஜ்புத்தானம், மால்வா, கபிலவஸ்து, வைசாலி, மத்திய இந்தியா (18 புள்ளிகள்)

# 6. பேரரசுவாதக் கொள்கையும் மௌரியப் பேரரசும்

கி.மு. 6ம் நூற்றாண்டில் தொடங்கிய பதினாறு மகா ஜனபத யுக வளர்ச்சியின் ஆரம்பமாக அமைந்தது மகதத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த பேரரசின் மூலமாகும். வட இந்தியாவின் முதலாவது பேரரசொன்றாகக் கட்டியெழுப்பப்பட்டது மகதமாகும். பேரரசுவாதக் கொள்கை வரையில் ஏனைய மகா ஜனபதங்களைப் பின்தள்ளி மகதம் வளர்ச்சி காண்பதற்கான காரணங்கள் சில காணப்படுகின்றன. அவற்றுள் மகதத்தில் அதிக இயற்கை வளங்கள் காணப்பட்டமை, மகதத்தில் ஆட்சிபீடமேறிய அரச வம்சங்கள் மற்றும் அரசர்கள் பின்பற்றிய கொள்கைகள் என்பன பிரதானமானவை. அரியங்கர், சிசுநாகர், நந்தர், மௌரியர், சுங்கர் முதலிய அரச வம்சங்கள் மகதத்தின் ஆட்சியாளர்களாகச் சிறப்பிடம் பெறுகின்றனர். மகதத்தின் அரச அதிகாரத்திற்கான அடிப்படையானது அரியங்க வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரன், அஜாசத் எனும் அரசர்களால் இடப்பட்டது. வடமேற்கு இந்தியாவை செலியுகஸ் நிகேட்டரின் ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொண்ட சந்திரகுப்த மௌரியன் வட இந்தியா முழுவதையும் ஒரு பேரரசாக விரிவுபடுத்தினான். அவனால் வடமேற்கே பாரசீகம் வரையிலும், மேற்கே சௌராஷ்டிரம் வரையிலும், தெற்கே மைசூர் வரையிலும் பேரரசு விரிவாக்கப் பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அதன்படி வட இந்தியாவில் முதல் பேரரசைக் கட்டியெழுப்பியவன் சந்திரகுப்த மௌரியனாவான். சந்திரகுப்த மௌரியனின் மகனான பிம்பிசாரன் அப்பேரரசைப் பாதுகாத்ததுடன் அவனது மகனான அசோகனால் தென்னிந்தியாவின் நுழைவாயிலான கலிங்க தேசம் கைப்பற்றப்பட்டதுடன் பேரரசு உச்சக் கட்டத்தையடைந்தது. அசோகச் சக்கரவர்த்தியின் பின்னர் ஆட்சிபீடமேறிய அரசர்கள் மற்றும் சுங்க அரச வம்ச ஆட்சியாளர்களின் பலவீனம் காரணமாக மகதப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. பேரரசு செழிப்புடனும் செல்வாக்குடனும் திகழ்ந்த சந்தர்ப்பத்தில் பல்வேறு ஆட்சி முறைகள் நிலவியமை தெரிய வருகின்றது.

**தேர்ச்சி 6.0** : இந்திய வரலாற்று விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : பேரரசு என்ற எண்ணக்கருவை மௌரிய பேரரசை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :

- பேரரசுவாதக் கொள்கையை விளக்குவார்.
- பலம்வாய்ந்த மௌரியப் பேரரசு கட்டியெழுப்பப்பட்ட விதத்தை விளக்குவார்.
- பேரரசொன்றிற்கான இயல்புகளை மௌரிய ஆட்சியின் அடிப்படையில் விளக்குவார்.

- மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்குவார்.
- மௌரிய பேரரசின் வளர்ச்சியைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- **பேரரசுவாதமும் மௌரியப் பேரரசும்**
  - பதினாறு மகா ஜனபதங்களின் இறுதிக் காலப்பகுதியில் ஏனைய ஜனபதங்களைப் பின்தள்ளி மகதம் முன்னணிக்கு வருதல்
  - வட இந்தியாவில் முதன்முறையாகப் பேரரசொன்று உருவானது மகதத்தை அடிப்படையகாகக் கொண்டாகும்.
  - மகத இராச்சியம் பற்றிய முதலாவது இலக்கிய மூலாதாரக் குறிப்பாக அமைவது அதர்வண வேதமாகும்.
  - மகத இராச்சியத்தின் முதலாவது தலைநகராக அமைந்தது ராஜகிருகமாகும்.

- இந்தியாவின் முதலாவது பேரரசாக மகதம் எழுச்சியடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்:
  - பல்வேறு கலாசார செல்வாக்குக் காணமாக சமூகமுறை இலகுபடுததப்பட்டமை. (சமூக நெகிழ்வுத்தன்மை)
  - பௌத்தம், சமணம் முதலிய சமயக் கொள்கைகளால் சுதந்திரமான சிந்தனைகளுக்கு வழிபிறந்தமை.
  - வைதீக யுகத்தில் நிலவிய சக சம்மதம் என்பது செல்வாக்கிழந்தமை
  - இயற்கையான அமைவிடம் வாய்ப்பாக அமைந்தமை
  - மகதத்தை ஆட்சி செய்த அரச வம்சங்களினதும் அரசர்களினதும் கொள்கைகள்
  - அரசர்களுக்கு ஆலோசனை வழங்கிய அமைச்சர்கள் (சாணக்கியர், சுனீதர், சத்சகாரர்)

- இயற்கை அமைவிடம்
  - விந்திய மலைத்தொடர், இந்து சமுத்திரம், ஆரவல்லி மலைத்தொடர் என்பன மகதத்தை இயற்கையாகப் பாதுகாத்தமை
  - கங்கை நதியின் மூலம் செழிப்படைந்தமை (தங்கம், இரும்பு என்பவற்றுடன் விவசாயத்திற்கும் வளமான தன்மை)
  - கிஜ்ஜகூடம், இசிகிலி, பாண்டவம், வேஹாரம், வேபுல்லம் எனும் மலைகளால் தலைநகரம் இயற்கையான பாதுகாப்புப் பெற்றமை
  - தாமிரலிபதி துறைமுகத்திலிருந்து பாடலிபுத்திரம் வரை அமைந்திருந்த வர்த்தகப் பாதை மகதத்தை ஊடறுத்துச் சென்றமை
  - இயற்கையான கனிய வளங்கள் காணப்பட்டமை (உப்பு மற்றும் இரும்புச் சுரங்கங்கள்)

- அரசியல் கொள்கை
    - அரயங்கர் வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரன், அஜாசத்தன் எனும் மன்னர்களின் அரசியல் கொள்கையின் செல்வாக்கு
    - பிம்பிசாரனின் மகதத்தை விரிவுபடுத்தும் கொள்கை
        - திருமணத் தொடர்புகள்
        - நிர்வாகக் கொள்கைகள்
        - போர்க் கொள்கைகள்
        - தூதுத் தொடர்புகள்

- திருமணத் தொடர்பு
    - கோசல இளவரசியைத் திருமணம் செய்ததன் மூலம் காசி இராச்சியம் மகதத்துடன் இணைந்தமை
    - சேதி மன்னனின் மகளான செல்லனாவைத் திருமணம் செய்தமை

- நிர்வாகக் கொள்கை
    - கிராம நிர்வாகத்தை மத்திய நிர்வாகத்துடன் தொடர்புபடுத்துவதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமணிகளை நியமித்தல்

- போர்க் கொள்கை
    - கிழக்கிந்தியாவில் காணப்பட்ட அங்க இராச்சியத்தை ஆக்கிரமித்து அடிபணியச் செய்தமை

- தூதுத் தொடர்புகள்
    - காந்தாரத்தின் புக்குசானி மன்னனிடம் தூதுக் குழுவொன்றை அனுப்பி வைத்தமை.
    - அவந்தியின் சண்டப்பஜோதி மன்னன் நோயுற்றபோது தனது அரசவை வைத்தியரான ஜீவகரை அங்கு அனுப்பி வைத்தமை
    - அஜாசத் மன்னன் லிச்சவி இராச்சியத்தை தன்னடிப்படுத்தியமை மகத்தின் அதிகார வளர்ச்சிக்குக் காரணமாயமைந்தமை
    - அஜாசத் மன்னின் ஆட்சியின்போது மகதத்தின் பரப்பளவு 2300 சதுர மைல்களாகக் காணப்பட்டமை
    - சிசுநாகனால், அவந்திவர்தனன் தோற்கடிக்கப்பட்டு அவந்தி இராச்சியம் மகதத்துடன் இணைக்கப்பட்டமை
    - காலாசோக மன்னனால் பாடலிபுத்திர நகரம் மகதத்தின் நிலையான தலைநகராக்கப்பட்டமை
    - சிசுநாக அரச வம்சத்தையடுத்து நந்தவம்சம் மகதத்தில் ஆட்சிபீடமேறல்
    - நந்த வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன் மகா பத்மநந்தனாவான்.
    - நந்த வம்சத்தின் சிறந்த ஆட்சியாளர்கள் 9 பேர் பற்றி மகாபோதி வசம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை
    - மகாபத்ம நந்தன் சத்திரிய குலத்தை அழித்ததாகக் கூறப்படுகின்றமை
    - தனநந்த மன்னனுடன் நந்த வம்ச ஆட்சி முடிவடைந்தமை
    - புராண நூல்களின்படி நந்தவம்சம் 88 ஆண்டுகள் ஆட்சி புரிந்தமை

- மௌரியப் பேரரசின் ஆரம்பமும் வளர்ச்சியும்
    - மகதப் பேரரசு எழுச்சியின் உச்சக் கட்டமாயமைவது மௌரியரின் ஆட்சிக் காலமாகும்.
    - மௌரியர் காலம் பற்றி அறிவதற்குதவும் மூலாதாரங்கள்
    - மௌரியப் பேரரசின் எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கியமான ஆட்சியாளர்கள்
        - சந்திரகுப்த மௌரிய மன்னன்
        - பிந்துசார மன்னன்
        - அசோக மன்னன்

- சந்திரகுப்த மௌரியனின் ஆட்சிக்காலம் (கி.மு. 324 - 300)
    - மௌரியப் பேரரசின் ஆரம்பகர்த்தா
    - இந்தியாவின் முதலாவது பேரரசை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்
    - இந்து சமய மூலாதாரங்களின்படி சந்திரகுப்த மௌரியன், நந்த வம்ச அரசனொருவனுக்கும் தாவமுறா எனும் சூத்திர குலப் பெண்ணொருத்திக்கும் பிறந்தவனாவான்.
    - மௌரியர் சத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களாவர் என்று மகா வம்சத்திலும் பௌத்த மூலாதாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நந்தநகர் எனுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் அதனை உறுதிப்படுத்துகின்றமை.

- சந்திர குப்த மௌரியன் அடைந்த வெற்றிகள்
    - இவனது முதல் வெற்றியாக அமைந்தது நந்த வம்சத்திடமிருந்து மகதத்தைக் கைப்பற்றியமையாகும்.
    - கௌடியல்யர் அல்லது சாணக்கியன் எனும் பிராமணனின் ஆலோசனை கிடைக்கப் பெற்றமை
    - இவனது இரண்டாவது வெற்றியாக அமைந்தது வடமேல் இந்தியாவை கிரேக்க ஆட்சியாளரிடமிருந்து விடுவித்தமையாகும்.
    - அப்போது வடமேல் இந்தியாவின் ஆட்சியாளனான செலியுகஸ் நிகேட்டருடன் போரிட்டு வெற்றிபெற்றமையும் அவனுடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்டமையும்
    - நிகேட்டருக்குச் சொந்தமான ஹிராத், கந்தஹார், காபூல், பலுகிஸ்தான் முதலிய பிரசேதங்கள் ஒப்பந்தப்படி சத்திரகுப்த மௌரியன் வசமானமை
    - இவ்வெற்றியின் பின்னர் மௌரியப் பேரரசின் அதிகாரம் பாரசீகம் வரை பரவியதுடன் மேற்கே சௌராஷ்டிரம் வரையில் ஆட்சியதிகாரம் பரவியதுடன் அவ்விராச்சியத்தின் குறுநில மன்னனாக வைசிய புஷ்ப குப்தன் என்பவன் செயற்பட்டமை
    - அங்குள்ள சுதர்ஷன வாவி சந்திரகுப்த மௌரியனால் திருத்தியமைக்கப்பட்டதாக ஜூனாகட் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - சந்திர குப்த மௌரியனின் அதிகாரம் தென்னிந்தியா வரை பரவியிருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமை.
        - சந்திர குப்தன் மைசூரை ஆட்சி செய்ததாக மைசூர் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளமை
        - சந்திர குப்த மன்னன் எனக் கருதப்படும் சம்ப மோரியாயர் எனும் அரசனால் தென்னிந்தியாவின் திருநெல்வேலி பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டமை தொடர்பில் பழைய தமிழ் இலக்கிய நூலொன்றில் காணப்படுகின்றமை.


- மைசூரின் சமண சமயத்தவருக்குரிய குகை ஒன்றினுள் பத்ரபானு எனும் முனிவருடன் உபவாசமிருந்து சந்திரகுப்தன் மரணமுற்றதாக, சமண சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- புளூடாச் அவர்களின் கூற்றுப்படி ஆறு இலட்சம் வீரர்களுடனான படையணி ஒன்று இந்தியா முழுவதும் சென்று முழு இந்தியாவையும் தன்னடிப்படுத்தியுள்ளது. இதன்படி மௌரியர், கிரேக்கர் மற்றும் நந்தர்களிடமிருந்து இந்தியாவை மீட்டு மௌரியப் பேரரசின் அதிகாரத்தை வடமேற்கு இந்தியா, வட இந்தியா, தென்னிந்தியா என்று பாரிய பரப்பளவில் இந்தியாவின் முதலாவது பேரரசாக உருவாக்கியுள்ளனர்.
- மிசிர் (எகிப்து), சிரியா முதலியநாடுகளுடனும் தூதுத் தொடர்புகளை மேற்கொண்டதன் மூலம் மேற்கு நாடுகளும் சந்திரகுப்த மௌரியனின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டமை.

- பிந்துசாரின் ஆட்சிக்காலம் (கி.மு. 300 - 273)
  - சந்திர குப்தனின் மரணத்தின் பின்னர் அவனது மகனான பிந்துசாரன் ஆட்சி பீடமேறியமை
  - எதிரியை அழித்தொழிப்பவன் எனும் பொருள்படும் எதிரியின் எமன் எனும் நாமத்தால் குறிப்பிடப்பட்டமை.
  - கௌடில்யருடன் இணைந்து ஆட்சியாளர்கள் சிலரினதும் 16 நகரங்களினதும் அதிகாரத்தை வீழ்ச்சியுறச் செய்ததாக திபெத்திய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை

- மௌரிய அசோகனும் அவனது கொள்கையும்
  - ஆட்சிபீடமேறிய விதம்
    - பிந்துசார மன்னின் ஆட்சியின் போது தக்ஷிலாவில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்கு அசோகன் அனுப்பப்பட்டமை
    - தக்ஷிலா கிளர்ச்சியை அடக்கி விட்டு அவந்தி (உஜ்ஜேனி)க்கு வந்து அங்கு இளவரசனாகப் பணியாற்றியமை
    - பிந்துசாரனின் மரணத்தின் பின்னர் மூத்த மகனான சுசிமன் ஆட்சி பீடமேறியமை
    - அசோகன் பாடலி புத்திர ஆட்சியாளனாவதில் சுசீமன் சவாலாகத் திகழ்நதமை
    - சுசீமனைக் கொலை செய்து கி.மு. 269 இல் அசோகன் பாடலிபுத்திரத்தின் ஆட்சியாளனானதாக மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
    - அசோகன் அதிகாரத்தைப் பெறுவதற்காக 99 சகோதரர்களைக் கொலை செய்ததாகத் தீபவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை
    - திவ்வியாவதானம் எனும் நூல் சுசீமனை மாத்திரம் கொலை செய்ததாகக் குறிப்பிடுகின்றமை.
    - சகோதரர் ஆறுபேரைக் கொலை செய்து அரசனானதாக தாராநாத் குறிப்பிடுகின்றமை
    - அசோகன் ஆட்சி பீடமேறி நான்கு வருடங்களின் பின்னரே பட்டாபிஷேகம் செய்யப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றமை. அங்கு சிம்மாசன உரிமைப் போராட்டம் நிலவியமையாலிருக்கலாம்.

- அசோக மன்னனின் கீழ் பேரரசின் வளர்ச்சி
    - ஆட்சி பீடமேறி எட்டாவது வருடத்தில் கலிங்க தேசத்தைக் கைப்பற்றியமை.
    - அது அரசனின் முதலும் இறுதியுமான திக்விஜயக் கொள்கையாக அமைந்தமை
    - இப்போரினால் ஏற்பட்ட உயிரிழப்பு காரணமாக மனக் கவலையுற்றமையால் திக் விஜயக் கொள்கையைக் கைவிட்டதாக 13வது பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளமை. இவ்வெற்றியின் பின்னர் அசோகனின் பேரரசு எல்லை பின்வருமாறு அமைந்தமை.
        - வடக்கு - இமயம்
        - கிழக்கு - அசாம், கடற்கரை
        - வட கிழக்கு - வங்காளம்
        - தெற்கு - காவேரி நதி
        - மேற்கு - அறபிக் கடற்கரை
        - வடமேற்கு - காந்தாரம், புருஷபுரம்

மௌரியப் பேரரசு



- அசோக மன்னனின் தர்ம விஜயக் கொள்கை
  - பொது மக்களுடன் நெருக்கமாவதற்காக தர்ம மகா மாத்திரர்களை நியமித்ததாக 6வது பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - எல்லா சமயங்களுக்கும் மதிப்பளித்தல் நல்லது என 12வது பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - அரச கொள்கை தயாரிக்கும்போது பொதுமக்களின் நலன்புரி நடவடிக்கை கருத்திற் கொள்ளப்பட்டமை
  - கலிங்கப் போரின் பின்னர் பௌத்த சமயத்தை ஏற்று அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டமை
  - அசோகனால் முதற் தடவையாக பௌத்த சமயம் இந்தியாவின் அரச சமயமாக்கப்பட்டமை
  - பௌத்த சமயத்தைச் சர்வதேச மட்டத்தில் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தமை
  - சாஞ்சி விகாரை உட்பட 8400 விகாரைகள் அமைத்ததாக பௌத்த மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - பௌத்த சமயப் பிரசாரப்பணி, அசோக தர்மம் என்பவை ஒன்றல்ல இரண்டாகுமென புரிந்து கொள்ளப்பட்டமை.

- **அசோக தர்மம்**
  - அசோக மன்னன் பௌத்த சமயத்தைத் தழுவிய பின்னர் தனது நாட்டு மக்களுக்காகத் தனது கொள்கை ஒன்றை முன்வைத்தான். அசோக தர்மம் என்றால் என்னவென்பது தொடர்பில் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.
    - பிளீட் மற்றும் பியூலர் - அசோகன் போதித்த தர்மம் அரசியல் மற்றும் ஒழுக்கக் கொள்கை உள்ளடங்கியது.
    - ராஜ் குமுத் முகர்ஜி - அசோக தர்மம் என்பது அனைத்து சமயங்களினதும் சாராம்சமாகும்.
    - பீ.எம். பருவா - பௌத்த தர்மத்தின் உலகியல் பண்புகளை உள்ளடக்கிய போதனையாகும்.
    - வின்ஸ்டன் ஸ்மித் - இந்தியாவின் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான தர்மமாகும்.
  - அதிகளவிலான அறிஞர்களின் கருத்தாவது அசோக தர்மம் பெரும்பாலும் பௌத்த தர்மத்தால் போசிக்கப்பட்டுள்ளது என்பதாகும். சிங்காலோக வாதம், வியாகபச்ச, பராபவ முதலிய சூத்திரங்களின் போதனைகளில் குடும்ப வாழ்வின் ஒழுக்கம் பற்றிய படிப்பினைகள் பலவும் அசோக தர்மத்தில் அடங்கியுள்ளமை.
  - அசோகச் சக்கரவர்த்தி தனது நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக முன்வைத்த அசோக தர்மம் என்பது தனது தேச மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிக் கோவையாக முன்வைக்கப்பட்டமை.
  - அவை கல்வெட்டுக்களில் கிரேக்கம், கரோஷ்டி, பிராகிருதம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளமை
  - தர்ம மகமாத்திரர் மூலமும் அரச அதிகாரிகள் மூலமும் அசோக தர்மம் இராச்சியம் முழுவதும் பரப்பப்பட்டமை.

- அசோக தர்மத்தின் உள்ளடக்கம்
  - சுஸ்ருச (அடிபணிவு)
    பெற்றோருக்கும் மூத்தோருக்கும் ஆசிரியருக்கும் குடியினருக்கும் அடிபணிதல்
  - ஆச்சிதி (மதித்தல்)
    மாணவர் ஆசிரியருக்கும் ஆசிரியர் தனது குழு மீதும் மதிப்பு மரியாதை செலுத்தல்
  - சம்பிரதிபத்தி (தக்க உபசரிப்பு)
    பிராமணர், துறவியர், உறவினர், பணியாளர், தங்கிவாழ்வோர், ஏழைகள், அகதிகள், நண்பர்கள் முதலியோரைத் தக்க முறையில் உபசரித்தல்
  - தானம் (தர்மம்)
    பிராமணருக்கும், துறவியருக்கும் நண்பர்களுக்கும் உறவினருக்கும், முதியோருக்கும் தானமளித்தல்
    மிருகங்களைக் கொல்லாமை. உயிருள்ள எதனையும் கொலை செய்யாதிருத்தலும் அவற்றிற்குத் துன்பம் விளைவிக்காதிருத்தலும்
  - பொது வாழ்க்கையில் தனிநபர் தொடர்புகளின் வெற்றிக்கு வழிவகுக்கும் விடயங்களும் அசோக தர்மத்தில் அடங்கியுள்ளமை.
    உ-ம்: சத்தியத்தை மதித்தல், நன்றி மறவாமை, அதிக அர்ப்பணிப்பு, தியாக மனப்பான்மை, வரவு - செலவைச் சமமாகப் பேணல்
  - அசோக தர்மத்தின் அம்சங்களை அவன் அமைத்துள்ள கல்வெட்டுக்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அவ்வாறான சில கல்வெட்டுக்கள் சில வருமாறு,
    - டில்லி தோப்ரா தூண் கல்வெட்டு
      எனது தர்மம் என்பது என்ன? எனும் கேள்விக்கான பதிலாக இது எழுதப் பட்டுள்ளது. அதிலடங்கியுள்ள நல்ல விடங்கள் அநேகம். அன்பு, தானமளித்தல், உண்மையான தன்மை, தூய்மையான தன்மை என்பவையாகும். பாதமற்ற, இரண்டு பாத, நான்கு பாத, பல பாதங்கள் கொண்ட பிராணிகளுக்கு உயிர்த் தானம் அல்லது அபய தானமளித்தல். பெற்றோருக்கும் மூத்தோருக்கும் அடிபணிதல், உறவினரை உபசரித்தல், உயிரினங்களிடத்தில் அன்பு காட்டல், தர்மத்தின் வழி நடத்தல், ஆசிரியருக்குப் பணிவிடை செய்தல், பிக்குமாருக்கும் பிராமணருக்கும் தானமளித்தல், சிக்கனம் முதலியவற்றுடன் இன்னும் பல.



**டில்லி தோப்ரா தூண் கல்வெட்டு**

    - ஆறாவது பாறைக் கல்வெட்டு
      முழு உலகிற்குமான வேலையைத் திட்டமிடுவது எனக்குரிய செயற்பாடாகக் கருதுகிறேன். அதனை விட வேறொரு சேவை எனக்கில்லை. என்னால் மேற்கொள்ளப்படும் முயற்சியானது எல்லா உயிரினங்களினதும் இம்மை, மறுமை எனும் ஈருலக நன்மைக்காகவும் அவர்களுக்கு நான் பட்டுள்ள கடனிலிருந்து விடுதலை பெறுவதற்குமாகும்.
    - தௌலி சிறு பாறைக் கல்வெட்டு
      "சச்சே முனிச்சாவே பச்சா இம" அனைத்து மனிதரும் எனது பிள்ளைகளே!

- அசோகச் சக்கரவர்த்தியின் சமூக நலன்புரி நடவடிக்கைகள்
  - அசோகனின் அரசியல் கொள்கையில் சமூக நலன்புரி நடவடிக்கைகள் மேலோங்கியிருந்தன. அவனது கல்வெட்டுக்களைப் பரீட்சித்துப்பார்க்கும்போது அதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.
  - ஆறாவது பாறைக் கல்வெட்டு
    நான் உணவுட்கொள்ளும்போது, உறங்கும்போது, வாகனத்தில் செல்லும் போது, அந்தப்புரத்திலிருக்கும்போது செய்தியாளர்கள் வந்து நாட்டு மக்கள் பற்றிய தகவல்களைத் தாருங்கள்."
  - தனது இராச்சியத்தினுள் பாதைகள், கிணறுகள், தடாகங்கள், அம்பலங்கள் மூலம் வைத்தியசாலைகள், நிழல் தரும் மரங்கள், நந்தவனங்கள், மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டமை.
  - நன்னடத்தையுடன் கூடிய நல்ல சமூகமொன்றைக் கட்டியெழுப்பவதற்காக மக்களை அறிவூட்டல். அதற்காக இராச்சியத்தின் எல்லாப் பகுதிகளிலும் கற்றூண்களை அமைத்து தனது கருத்துக்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவற்காக எழுதி வைத்தமை.
  - அதற்காக,
    - தர்ம மகாமாத்திரர்களை அமர்த்தியமை
    - ஐந்து வருடங்களுக்கொரு முறை பூத்த மற்றும் ரஜுக எனும் அதிகாரிகளைத் தர்மப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியமை
    - நாடகங்களை மேடையேற்றியமை
  - மனிதருக்கு மாத்திரமன்றி ஐந்தறிவுள்ள விலங்குகளுக்கும் அன்பு காட்டியமை அசோகனின் நலன்புரி இராச்சியத்தின் சிறப்பம்சமாகும்.

- மௌரியத்தின் வீழ்ச்சியும் அதற்கான காரணங்களும்
  - அசோகச் சக்கரவர்த்தி மரணித்து 4 தசாப்தங்கள் கழிவதற்குள் மௌரியப் பேரரசு பல பகுதிகளாக சிதறுண்டு சீரழிவு ஆரம்பமானது.
  - அசோகனின் கொள்கைகள் மறைமுகமாக மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்தமை.
    - யாகங்கள் செய்வதற்காக மிருகக் கொலையைத் தடை செய்தமையால் பிராமணரின் எதிர்ப்பு ஏற்பட்டமை

        - தர்ம மகாமாத்திரர் நியமனம் மற்றும் நீதிமன்றத்தொகுதியால் ஏற்பட்ட சமநீதி முறைமைகளால் பிராமணரின் சமூக அந்தஸ்துக் குறைவடைந்தமை.
        - அஹிம்சைக் கொள்கை காரணமாக நிர்வாகத் திறனும் இராணுவ பலமும் பலவீனமடைந்தமை.
        - பௌத்த சமயம் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டமையால் பிராமண சமயம் புறந்தள்ளப்பட்டமை
        - பௌத்த சமயத்திற்காக அதிக செல்வங்கள் செலவிடப்பட்டமையால் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டமை.
    - அசோகனின் பின்னர் அரசுரிமை தொடர்பில் ஏற்பட்ட உள்ளகக் குழப்ப நிலைமையும் பிரதேச ஆட்சியாளர்கள் பலம் பெற்றமையும்
    - கி.மு. 187 அளவில் டிமேட்டிரியஸின் பக்டிரிய கிரேக்க ஆக்கிரமிப்பு வீழ்ச்சியை வேகப்படுத்தியமை
    - மௌரிய வம்சத்தின் இறுதி மன்னனான பிரகதூதனை கி.மு. 187 இல் புஷ்பமித்திர சுங்கன் கொலை செய்ததுடன் மௌரிய வம்ச ஆட்சி முடிவுற்றமை
    - மேற்படி காரணம் வீழச்சியில் செல்வாக்குச் செலுத்தவில்லை என்பது ஆய்வின்போது தெரியவருதல்
    - இராணுவம் பலவீனமடைந்தால் தளபதி சுங்கன் எவ்வாறு ஆட்சிக்கு வந்தான் எனும் கேள்வி எழுதல்.
    - அசோகன் பௌத்த சமயத்திற்கு மட்டுமன்றி அனைத்துச் சமயங்களையும் ஆதரித்ததாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றமை.
    - அசோகன் மாத்திரமன்றி அடுத்துவந்த ஆட்சியாளர்களும் பிராமணர்களுக்குக் கற்குகைகளைத் தானமளித்தமை.
    - நீதிமன்ற அதிகாரமானது அசோகனுக்கு முன்னரோ பின்னரோ எந்தவொரு பிராமணருக்கும் இருக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டமை.
    - சிம்மாசன உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமையும் அரச அதிகாரிகள் ஆட்சிபீடமேறியமையால் பேரரசு வீழ்ச்சியுற்றமையும்.
- மௌரிய நிர்வாக முறையும் கலாசாரமும்
    - மௌரியப் பேரரசின் நிர்வாக முறைமையைப் பிரதானமாக மூன்று பிரிவுகள் மூலம் கலந்துரையாட முடியும்.
        - மத்திய நிர்வாகம்
        - பிராந்திய நிர்வாகம்
        - நகர நிர்வாகம்
- மத்திய நிர்வாகம்
    - இராச்சியம் முழுதும் பேரரசன் மூலம் நிர்வாகம் செய்யப்பட்டமை. அதன் தலைவன் அரசனாவான். நிர்வாகத் தலைநகரம் பாடலிபுத்திரமாகும்.
    - அரசனை முதன்மையாகக் கொண்ட அரசாட்சி முறையொன்று செயற்பட்டமை. நீதிமன்றத்தின் தலைமைப் பதவியும் மன்னனாவான். மரண தண்டனை, நாடுகடத்தல், சிறைவைத்தல் முதலிய தண்டனை முறைகள் காணப்பட்டமை

- அரசாட்சி தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவியாக அமைச்சரவை காணப்பட்டமை. அமைச்சரவை அங்கத்தவர் தொகை 12 - 20 வரை காணப்பட்டமையால் மன்னனின் சர்வாதிகாரம் வரையறுக்கப்பட்டமை.
- மன்னனின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு அரச அதிகாரிகள் பெருந்தொகையினர் காணப்பட்டமை. அசோகனின் முதலாம் தூண் கல்வெடடில் அவர்கள் ராஜ புருஷர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் உயர்நிலை, மத்திய நிலை, கீழ்நிலை எனும் மூன்று பிரிவினுள் அடங்குவர்.
- இளவரசன், புரோகிதர், தளபதி, முதலமைச்சர் முதலியோர் அரசனுக்கு சமீபமாக விருந்த மேல்நிலை உத்தியோகத்தராவர்.
- அமைச்சர்களின் கீழ் அதிகார சபை எனும் திணைக்களங்கள் காணப்பட்டமை
- இவ்வதிகாரிங்களுக்குப் புறம்பாக வருடாந்தம் 24000 பொற்காசுகள் பெற்றுக் கொண்ட அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை
- இவை தவிர மகாமாத்திரர் எனப்பட்ட பதவிகளில் பலர் காணப்பட்டதாக அசோகக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றமை.
- இராணுவப்படை பரம்பரை, தரம், அகம்படி எனும் முப்பிரிவுகளைக் கொண்டிருந்தமை
- சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்காக அசோகனால் மகாமாத்திரர் பதவி ஆரம்பிக்கப்பட்மை
- நட்பு இராச்சியங்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்காகத் தூதுவர் எனும் பதவி ஏற்படுத்தப்பட்டமை
- இராச்சியம் முழுதும் நிர்வாக நடவடிக்கககள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ‘யூத்தர்’ எனும் அதிகாரிகள் அமர்த்தப்பட்டமை
- அசோகனின் ஆட்சிக்கால நிர்வாகம் அதிகளவில் மக்கள் சார்பான தன்மை கொண்டிருந்தமை

- பிராந்திய நிர்வாகம்
    - மௌரிய மத்திய நிர்வாகத்தின் மூலம் தலைநகரைச் சூழவுள்ள பிரதேசங்களே ஆட்சி செய்யப்பட்டன. ஏனைய பகுதிகளை நிர்வாகம் செய்வதை இலகுவாக்கும் வகையில் பிராந்திய ஜனபதங்கள் நான்கு வகுக்கப்பட்டிருந்தமை.
        - சுவர்ணகிரி
        - உதேனி
        - கோசலீ
        - தக்ஷிலா

      இப்பிராந்திய ஜனபதங்கள் ராஷ்டிரங்கள் (மாவட்டங்கள்) என்றும் ராஷ்டிரங்கள் ஆயிரம் கிராமங்கள், நூறு கிராமங்கள், பத்துக் கிராமங்கள், ஐந்து கிராமங்கள் என்றும் பிரிக்கப்பட்டிருந்தன.
    - மௌரிய நிர்வாக முறையில் சிறிய நிர்வாக அலகாகக் காணப்பட்டது கிராமம் ஆகும். கிராமத்தின் வழக்குகளைத் தீர்ப்பதற்கு கிராமகூடர் எனும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டமை.

- நகர நிர்வாகம்
  - பாடலிபுத்திர நகர நிர்வாகம் 6 மண்டலங்களைக் கொண்டிருந்தது.
    - கைத்தொழில் மண்டலம்
    - வெளிநாட்டு விவகார மண்டலம்
    - வர்த்தக நடவடிக்கை மண்டலம்
    - வருமான வரி அறவிடும் மண்டலம்
    - பிறப்பு, இறப்புப் பதிவு மண்டலம்
    - உற்பத்தி விநியோக மண்டலம்
  - அரசாங்க வருமானத்திற்காக உற்பத்தியின் 1/6 அல்லது 1/4 பங்கு வரியாக அறவிடப்பட்டமை.
  - முழுமையாகப் பார்க்கும்போது மௌரிய நிர்வாகம் முறையாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தமை.
- மௌரிய கலாசாரம்
  - விஷேடமான மிகப் பிரமாண்டமான அரச கலையம்சங்கள் உருவெடுத்தது மௌரிய காலத்திலாகும்.
  - மௌரியர் காலத்தில் கலாசார, கலைப் படைப் புக்களின் தன்மையை வெளிப்படுத்தும் அம்சங் கள் சில வருமாறு:
    - தூபிகள்/ விகாரைகள்
    - புத்தகயா விகாரையின் போதி மண்டபம்
    - கருங்கற்றூண்கள்
    - மலைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குகைகள்
    - அரண்மனைகள்
  - அரண்மனையின் சிதைவு கள் பாட்னா நகருக்கு அருகிலுள்ள புல்திபாக் எனுமிடத்தில் கண்டறியப் பட்டுள்ளமை



அரண்மனை

  - சந்திரகுப்த மௌரியன் தனது மாளிகையை பாரசீக அலங்காரங் களைக் கொண்டு அலங்கரித்ததாகப் பாரசீக பிரவுன் குறிப்பிட்டுள்ளமை.
  - மாளிகையின் தூண்களில் பூங்கொடி, விலங்கு, பறவை உருவங்கள் செதுக்கப்பட்டு அதற்கு வெள்ளி உருக்கிப் பூசப்பட்டிருந்தமை.
- விகாரைகள்
  - அசோகனால் அமைக்கப்பட்ட விகாரைகள் பற்றி வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றுள் சாஞ்சி தூபியும் பார்குத் விகாரையும் பிரதானமானவை.

- அவற்றுள் உயர் கலையம்சங்கள் கொண்ட படைப்பாக கலை விமர்சகர்களினால் பாராட்டுப் பெற்றது சாஞ்சி விகாரை என்பது
- சாஞ்சியின் முக்கியமான கலைப்படைப்பாக அமைவது நான்கு திசைகளிலும் அமைக்கப்பட்டுள்ள செதுக்கல் கலையுடனான தோரணங்கள் ஆகும்.
- தோரணங்களில் பௌத்த சமய மரபுப்படி ஜாதகக் கதைகள் செதுக்கல்களாக சித்தரிக்கப்பட்டுள்ளமை
- புத்தபெருமானைக் குறிப்பதற்காகத் தர்மச் சக்கரம், போதி மரம், வஜீராசனம் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளமை



**சாஞ்சி விகாரை**

- அசோகத் தூண்கள்
  - அசோக மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்ட புதுமையான கலைப்படைப்பாக அமைவது தனிக் கற்பாறையில் அமைக்கப்பட்ட தூண்களாகும்.
  - இத்தூண்களைப் பௌத்த சமய நிகழ்வுகளுடன் தொடர்பான இடங்களிலும் பௌத்த மக்கள் வாழ்ந்த இடங்களிலும் அமைக்கப்பட்டமை.
  - தற்போதைக்கு அசோகத் தூண்கள் 30 அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் அதி சிறந்த கலை நிர்மாணமாக அமைவது சாரணாத் தூண் முடியாகும்.

- தூண் முடிகளில் செதுக்கப்பட்டுள்ள யானை, குதிரை, எருது, சிங்கம் என்பவை நான்கு திசைகளையும் குறிப்பதாகக் கருத்து நிலவுதல்.
- அசோகன் காலத்தில் அமைக்கப்பட்ட குகைகள் சிறந்த கட்டடக் கலைப் படைப்புகளாகக் காணப்படுகின்றமை.




**சாரணாத் தூண் முடி**




**சாஞ்சி விகாரையின் தோரணம்**

- இயற்கையான கற்பாறைகளைக் குடைந்து குகைகளை அமைப்பது மௌரியர் காலத்திலே ஆரம்பமானமை.
- பராபர், நாகார்ஜுனா, சீதாதர் முதலிய மலைப் பாறைகளில் இவ்வாறான குகைகளைக் காணமுடிகின்றமை.
- சிற்பக் கலை எனும் வகையில் மணற் கல்லில் செய்யப்பட்ட அரக்கன், அரக்கி உருவமும் சுடுமண் சிலையும் முக்கியம் வாய்ந்தவை.
- இந்த அரக்க உருவங்கள் பிற்காலத்தில் உருவான மதுரா புத்தர் சிலைக்கு மாதிரியாக அமைந்தமை.



பராபர் குன்றுகளில் அமைக்கப்பட்டுள்ள சுதாமா கற்குகை



நாகார்ஜுனா மலைப் பாறையில் அமைக்கப்பட்ட கோபிகா குகை

**கணிப்பீடும் மதிப்பீடும் - 01**

01 - 02 வரையிலான வினாக்களுள் ஐந்துசோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாத சோடிச் சொல்லைத் தெரிந்து அவ்விலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) 1. மகதம் - பிம்பிசாரன் 2. கோசலம் - பிரசீனஜித்
3. உஜ்ஜைனி - சண்ட பச்சோத 4. அங்கம் - சிசுநாகன்
5. காசி - பிரம்மதத்தன் ( )

2) 1. பிம்பிசாரன் - அரியங்கர் 2. காலாசேக - சிசுநாகர்
3. தனநந்தன் - நந்தர் 4. குணால் - மௌரியர்
5. புஷ்பமித்திரன் - கன்வர் ( )

03 - 04 வரையிலான வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அவ்விலக்கத்தை அடைப்பினுள் இடுக.

3) அசோகக் கல்வெட்டுக்கள்
1. இந்தியாவில் கல்வெட்டுப் பொறிக்கும் கலாசாரத்தை முதன்முதல் அறிமுகப்படுத்தியவன் அசோகன்
2. அசோகக் கல்வெட்டுக்கள் இந்தியாவில் மட்டுமல்லாது ஆப்கானிஸ்தான், நேபாளம் முதலிய நாடுகளிலும் கிடைத்துள்ளன.
3. அசோகக் கல்வெட்டுக்கள் அதிகளவில் பிராகிருத மொழியிலே எழுதப்பட்டுள்ளன.
4. அசோகனின் சில கல்வெட்டுக்கள் கிரேக்க மற்றும் அரமானிய மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன.
5. அசோக மன்னன் கல்வெட்டுக்கள் மூலம் மக்களுடன் நேரடியாகக் கதைத்துள்ளான் ( )

4) மகத இராச்சியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயமைந்த பண்புகள்
1. தலைநகரினதும் இராச்சியத்தினதும் புவியில் அமைவிடம்
2. விவசாயம், வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை
3. திறமையான அரசர்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட படையினர்
4. இயற்கை வளங்களைக் கொண்டிருந்தமை
5. அயலிலிருந்த கண இராச்சியங்களின் உதவி ( )

05 - 06 வரையிலான வினாக்களின் X, Y நிரல்களை இணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக. ஐந்துசோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாத சோடிச் சொல்லைத் தெரிந்து அவ்விலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

5)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. மகதம் | A - பிம்பிசாரன் |
| 2. அவந்தி | B - உதயன் |
| 3. கோசலம் | C - பிரசீனஜித் |
| 4. வத்சயம் | D - புக்குசாதி |
| 5. காந்தாரம் | E - பச்சோத |

1. ABCDE 2. ACBED 3. ADBCE 4. AECBD 5. ADECB ( )

6)

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. இந்திரப்பிரஸ்தம் | A - கங்கை - யமுனை நதிகளிடையில் |
| 2. கௌசம்பி | B - யமுனா நதிக்கரையில் |
| 3. ஹரப்பா | C - சத்லேஜ் - ராவி நதிகளிடையில் |
| 4. நாசிக் | D - கோதாவரி நதிக்கரையில் |
| 5. பாருகச்ச | E - நர்மதா நதி முகத்துவாரத்தில் |

1. ABCDE 2. ACBED 3. ADBCE 4. AECBD 5. ADECB ( )

07 - 10 வரையிலான வினாக்களுக்கு ஓர் அட்டவணையில் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. முதல் அட்டவணைக்குப் பொருந்தும் படி அவற்றை வகைப்படுத்தி பொருத்தமான இலக்கங்களை உரிய முறையில் அடைப்பினுள் எழுதுக.

| முதலாம் கூற்று | | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரி | சரி |
| 2 | சரி | பிழை |
| 3 | பிழை | பிழை |
| 4 | பிழை | சரி |
| 5 | சரி | சரியானதுடன் முதலாம் கூற்றை மேலும் தெளிவுபடுத்துகிறது. |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 7. சந்திர குப்த மௌரியனின் தாய் நந்த வம்ச இளவரசியாவார். | நந்த வம்சத்தின் இறுதி அரசனான தனநந்தனைக் கொன்று சந்திரகுப்த மௌரியன் மகத மன்னனானான். ( ) |
| 8. மகா அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றி அதனை அவனது பிராந்தியமொன்றாக்கினான். | அப்பிரதேச ஆட்சியாளனாக செலியுகஸ் நிகேட்டர் அமர்த்தப்பட்டான். ( ) |
| 9. பாடலி புத்திர நகர நிர்வாகம் பற்றிய பூரண விளக்கம் மெகஸ்தனீஸின் நூலின் மூலம் கிடைக்கிறது. | நகர நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது ஐவரைக் கொண்ட ஆறு குழுக்களின் முப்பது உறுப்பினர்களைக் கொண்ட மண்டலத்தின் மூலமாகும். ( ) |
| 10. அசோக மன்னன் கீழ் மகாமாத்திரரின் கடமையாக அமைந்தது நாட்டு மக்களிடையெ பௌத்த சமயத்தைப் பரப்புவதாகும். | தர்ம மகாமாத்திரரின் கடமை அசோக தர்மத்தைப் பிரச்சாரம் செய்வதாகும். ( ) |

13 - 14 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள கூற்றுக்களின் தன்மையைப் பின்வரும் அடிப்படையில் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் இடுக.

- A யும் B யும் சரியெனில் இலக்கம் 1
- B யும் C யும் சரியெனில் இலக்கம் 2
- C யும் D யும் சரியெனில் இலக்கம் 3
- A யும் C யும் சரியெனில் இலக்கம் 4

ஒரு கூற்று அல்லது இரு கூற்றுக்களுக்கு மேல் சரியெனில் இலக்கம் 5 என்று அடைப்பினுள் எழுதுக.

13) மௌரியர்

A - அசோகக் கல்வெட்டுக்கள் அதிகளவில் பரோஸ்டி மற்றும் பிராமி எழுத்துக்களினால் எழுதப்பட்டுள்ளது.

B - சந்திர குப்த மௌரியனின் ஆட்சி தொடர்பான பெறுமதியான தகவல்களை கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரடோரஸ் தந்துள்ளார்.

C - அசோகக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரியதர்ஷன மன்னன் அசோகன் என்று அறியப்பட்டது தீபவம்சம், மகாவம்சம் மூலமாகும்.

D - மௌரியர் நாணயங்களைப் பயன்படுத்தியமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

( )

14) மெகஸ்தனீஸ்

A - இவர் சந்திர குப்த மௌரிய மன்னனின் அரச சபையிலிருந்த செலியுகஸ் நிக்ரோட்டனின் தூதுவராவார்.

B - இவரால் எழுதப்பட்ட இண்டிகா எனும் நூலில் சந்திர குப்த மௌரியனின் கால இந்தியாவின் ஆட்சி முறையும் ஆட்சி நிறுவனங்களும் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளன.

C - இவரது நூலில் அசோகனின் கலிங்கப் போர் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளன.

D - அசோகன் முடிசூடும் போது மெகஸ்தனிஸ் மௌரிய அரசவையில் இருந்தார். ( )

**கணிப்பீடும் மதிப்பீடும் - 02**

1) ''சந்திர குப்த மௌரியன் இந்தியாவின் முதல் பேரரசனாவான்'' கருத்துரைக்க. (14 புள்ளிகள்)

2) ''மௌரியப் பேரரசின் சிறந்த ஆட்சியாளன் அசோக மன்னனாவான்.''

i. மௌரிய வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளன் யார்? (01 புள்ளிகள்)

ii. அசோக மன்னன் பற்றி அறிய உதவும் ஆரம்ப இலக்கிய மூலாதாரங்கள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

iii. அசோகனின் அரசியல், கலாசாரப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தி மேற்படி கூற்றை விளக்குக. (07 புள்ளிகள்)

3) ''அசோக தர்மம் என்பது சமயமொன்று என்பதை விட ஓர் ஒழுக்க நெறிக் கோவையாகும்'' இக்கூற்றை ஆய்வு செய்க. (14 புள்ளிகள்)

4) ''அசோகச் சக்கரவர்த்தியின் நோக்கமாக அமைந்தது பொதுமக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசொன்றைக் கட்டியெழுப்புவதாகும்.'' கருத்துரைக்க. (14 புள்ளிகள்)

**கணிப்பீடும் மதிப்பீடும் - 03**

- பின்வரும் இடங்களைத் தேசப்படத்தில் குறித்து அவற்றுள் இரண்டு பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
  பாடலிபுத்திரம், சாஞ்சி, கலிங்கம், ராஜகிருகம், அலகாபாத், சிராவஸ்தி, உதேனி, சாராணாத் (18 புள்ளிகள்)

# ஐரோப்பிய வரலாறு



# 12.1. நவீன ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படை

## அறிமுகம்

ஐரோப்பிய நாகரிகம் மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ஆரம்பமானது. விசேடமாகக் கிரேக்க, உரோம நாகரிகங்களும், கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்களும் ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. இந்நாகரிகங்களில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் ஐரோப்பிய நாகரிகத்தின் மீது செலுத்திய செல்வாக்கினைக் கலந்துரையாடுவது இவ்வலகினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

புவியியல் ரீதியாகப் பார்க்குமிடத்து ஐரோப்பிய நாகரிகம் தெற்கில் மத்தியத்தரைக்கடலையும், வடக்கில் வட கடலையும் மேற்கில் அத்திலாந்திக் சமூத்திரத்தையும் கிழக்கில் ஆசியாக் கண்டத்தையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசத்தில் ஆரம்பமானது. கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்களின் ஆரம்பம் பரவுகை என்பவற்றை ஆராய்ந்து நவீன நாகரிகத்தின் அடிப்படை அமைவதற்கு அந்நாகரிகங்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார, தத்துவத் துறைகள் செல்வாக்குச் செலுத்திய விதம் இங்கே கலந்துரையாடப்பட உள்ளது.

**தேர்ச்சி 1.0** : • பல்வேறு சக்திகளை அடிப்படையாகக் கொண்டு நாகரிகங்கள் கட்டியெழுப்பப்படும் முறை பற்றி எடுத்துக் கூறுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.1 நவீன ஐரோப்பா தோற்றம் பெற்ற விதம் பற்றித் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :
- ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படையைப் பகுத்தாய்வார்.
- நவீன ஐரோப்பிய நாகரிகம் கட்டியெழுப்பப்படுவதற்குக் கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுவார்.
- கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகப் பரம்பலைப் புறவுருவப் படமொன்றில் குறிப்பார்.
- நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய செல்வாக்கு

### கிரேக்க நாகரிகம்

மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் கிரேக்க நாகரிகம் கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. கிரேக்க நாகரிகம் தோன்றும் முன்னர் இப்பிரதேச மக்கள் நாகரிகம் அடைவதற்கான இயல்புகளைக் காட்டும் சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. கி.மு. 2000 ஆம் ஆண்டளவில் கஸ்பியன் கடலுக்கு வடக்கிலும், கிழக்கிலுமிருந்த பிரதேசங்களிலிருந்து வந்த ஆரம்ப குடியேற்றவாசிகள் கிரேக்கத்தை அண்மித்த பிரதேசங்களில் குடியேறியதும் கிரேக்க நாகரிகம் ஆரம்பமானது. கிரேக்கத் தீவினை மையமாகக் கொண்டு கி.மு. 2000 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற மினோவன் நாகரிகமும் கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்றமைக்கான சான்றுகள் மயிசீனியன் நாகரிகமும் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பழைமையான நாகரிகங்களாகும். 400 ஆண்டுகள் அளவில் நிலவிய மயிசீனியன் நாகரிகம் கி.மு. 1150 ஆம் ஆண்டளவில் வீழ்ச்சியுற்று கிரேக்கப் பகுதியில் இருண்ட காலம் தோற்றம் பெற்றது. 150 ஆண்டுகளின் பின்னர்

டோரிய கிரேக்கர்களின் கீழ் கிரேக்கத்தில் புதிய நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டதுடன் அதுவே கிரேக்க நாகரிகம் எனப்பட்டது. முன்னர் நிலவிய நாகரிகத்தால் போசிக்கப்பட்டு அந்த நாகரிகம் வளர்ச்சியடைந்தது. ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிப்படையாக விளங்குவது கி.மு. 1000 ஆம் ஆண்டு முதற்கொண்டு வளர்ச்சியடைந்த கிரேக்க நாகரிகமாகும்.



மினோவன் நாகரிகத்திற்குரிய கட்டடம்



மயிசீனியன் நாகரிகம்




**கிரேக்கம்**



**அக்ரோபொலிஸ்**

## கிரேக்க நாகரிகத்தின் முக்கிய பண்புகள்

- **நிருவாக நடவடிக்கை**

  - கிரேக்கத்திற்கு வந்த முதல் குடியேற்றவாசிகள் முதலில் கிராமங்களை அமைத்துக் கொள்ளல்.
  - காலப்போக்கில் அவை நகரங்களாக மாற்றமடைதல்.
  - அந்த நகரங்களை மையமாகக் கொண்டு கிரேக்க நாகரிகத்தில் நகர ஆட்சிமுறை தோற்றம் பெறல்.
  - பினிஷியா, பாபிலோனியா போன்ற நாகரிகங்களில் இதற்கு முன்னர் நகர ஆட்சி நிலவிய பொழுதும் அரசு தொடர்பாக மிகத் தெளிவான சான்றுகள் கிடைப்பது கிரேக்கத்திலாகும்.

- **நகர ஆட்சியின் பிரதான பண்புகள்**
  - சிறிய நிலப்பரப்பை உடையது.
  - நகரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி கட்டியெழுப்பப்பட்டுள்ளமை.
  - எதேன்ஸ், ஸ்பாட்டா என்பன பெரிய நகர அரசுகளாக விளங்கிமை.
  - மக்கள் நான்கு பிரிவுகளாக இருந்தமை (குடிமக்கள், பெண்கள், அடிமைகள், வெளிநாட்டவர்)
  - குடிமக்களாகக் கிரேக்க ஆண்கள் மட்டுமே கணிக்கப்பட்டமை.
  - சமூதாயத்தில் குடிமக்கள் உயர்வானவர்களாகக் கணிக்கப்பட்டதுடன், பெண்கள், அடிமைகள், வெளிநாட்டவர் ஆகியோர் குறைவானவர்களாகக் கணிக்கப்பட்டமை.
  - தலைநகர் அக்ரோபொலிஸ் எனப்பட்டதுடன் அது வர்த்தக மத்திய நிலையமாக விளங்கியமை.
  - பொருட்களைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும், தமது பொருட்களை விற்பனை செய்யவும் இம்மத்திய நிலையங்கள் பயன்படுத்தப்பட்டமை.
  - அனைத்து நகர அரசுக்கும் அதிபதியாகக் கடவுள் அல்லது தேவதை ஒருவர் இருந்தமை.
  - அக்ரபொலிஸின் உயர்ந்த இடத்தில் கடவுள் அல்லது தேவதைக்கு ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தமை. ஏதேன்ஸ் நகருக்கு அதிபதியான அதீனா தேவதைக்குப் பாத்தினன் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தமையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.



**பாத்தினன் ஆலயம்**

- கிரேக்க நகராட்சியில் பலவித அரசியல் முறைமைகள் நிலவியமை.
- பெரிய அரசுகளில் ஒன்றான ஸ்பாட்டாவில் முடியாட்சி முறையும், ஏதேன்சில் ஜனநாயக ஆட்சி முறையும் நிலவியமை.
- நவீன உலகில் பிரசித்திபெற்ற அரசியல் முறைகளில் ஒன்றான ஜனநாயக முறையின் தாயகம் ஏதேன்ஸ் நகர அரசாகும்.
- அரிஸ்டோட்டில் மேற்கொண்ட ஆய்வின்படி கிரேக்க நகராட்சியில் பல்வேறுவிதமான 250 அரசியல் முறைகள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

- **பொருளாதார நடவடிக்கைகள்**
  - கிரேக்கத்தின் முக்கிய வாழ்வாதாரம் விவசாயமாகும்.
  - மத்திய தரைக்கடல் காலநிலைக்கமைய பரியிடக்கூடிய திராட்சை, ஒலிவ், காய்கறி என்பன பயிரிடப்பட்டமை.
  - சில பிரதேசங்களில் காணப்பட்ட வளமற்ற மண் காரணமாக எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான விவசாயத்தை மேற்கொள்ள முடியாமை.
  - நகர அரசுகள் அனைத்தும் கடலால் சூழப்பட்டிருந்தமையால் மீன்பிடித் தொழில் முக்கிய இடம்பெற்றிருந்தமை.
  - வெளிநாட்டு வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தமை.
  - களிமண் கைத்தொழிலும் காணப்பட்டிருந்தமை.
  - அடிமைகளின் உழைப்புப் பெறப்பட்டமை.
  - இயற்கை வளமாகப் பெருந்திரளான வெள்ளி காணப்பட்டமை. அவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுச் சுரங்கக் கைத்தொழில் காணப்பட்டமை.

- **கல்வி**
  - தனியார் பாடசாலைகள் மூலமும், தனிப்பட்ட ஆசிரியர்கள் மூலமும் கல்வியளிக்கப்பட்டமை.
  - பிளேட்டோவின் 'அக்கடமி' எனும் நிறுவனமும் அரிஸ்டோட்டலின் 'லைசியமும்' அவற்றில் முக்கிய இடம் பெற்றமை.
  - கல்வி கற்ற இளைஞர்களிடையே மிகவும் பிரசித்திப்பெற்ற 'சோபிட்ஸ்' எனப்பட்ட ஆசிரியர் குழுவொன்று இருந்தமை.
  - 'சோபிட்ஸ்' என்போர் பேச்சு, கணிதம், மெய்யியல், இலக்கணம், இலக்கியம் போன்ற பாடங்களைக் கற்பித்தனர்.
  - ஸ்பாட்டா நகர அரசில் அனைத்து ஆண்களும் யுத்தப் பயிற்சி பெறவேண்டிய நிலை இருந்தது.

- **மெய்யியலும் விஞ்ஞானமும்**
  - தேலிஸ், அனெக்சிமினிஸ், எம்பரடொலஸ் போன்ற மெய்யியலாளர்கள் ஆரம்ப மெய்யிய லாளர்களிடையே முக்கியமானவர்களாவர். (புவியின் அமைப்புப் பற்றிக் கருத்துக்களை முன்வைத்தோராவர்)
  - சோக்ரடீஸ் - வினா விடை முறை
  - பிளேட்டோ - இலட்சிய அரசு
  - அரிஸ்டோட்டில் - அரசியலின் தந்தை
  - அரிஸ்டாகஸ், ரெடோத்தினீஸ், ஹெரக்கிளிட்டஸ் - புவி மற்றும் கோள்கள் தொடர்பான முக்கிய விடயங்களை முன்வைத்த கணிதவியலாளர்கள்.
  - பைதகரஸ் - சிறந்த கணித மேதை - பைதகரஸ் தேற்றம்
  - ஆக்கிமிடிஸ் - கணிதம் தொடர்பான புதிய கண்டுபிடிப்பு - நீரமுக்க விதி
  - ஹிப்போகிரட்டஸ் - மேற்கத்திய வைத்தியத்தின் தந்தை
  - ஹெரடோடஸ் - வரலாற்றின் தந்தை

- **சயம நம்பிக்கை**

கிரேக்க சமய, வணக்க முறை பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்கள் பல்தேவவாதிகளாக இருந்தனர். கிரேக்கர்களில் கடவுளர் ஒரு வரிசை முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தனர். இக்கடவுள்கள் இயற்கையுடன் தொட்புடையதாக இருந்ததுடன் அவர்களிடையே உறவு முறை இருந்ததாக நம்பப்படுகின்றது.

- சியுஸ் - வானத்திற்கு அதிபதி, கடவுளின் பிரதானி
  ஹெரானா - சியுஸ் கடவுளின் மனைவி
  அதீனா - சியுஸ் கடவுளின் மகள்
  ஏரஸ் - யுத்தத்திற்கு அதிபதி, ஹெரானாவின் மகன்
  ஹரிகியுலஸ் - உலகைத் தாங்கி இருப்பவன், சியுஸ் கடவுளின் மகன்
  அப்பலோ - சூரியக் கடவுள்
  புரசயிடன் - சமுத்திரத்திற்கு அதிபதி
  அப்ரடயட் - காதலுக்கு அதிபதி

- கடவுளர் நகர அரசுகளின் அதிபதிகளாகவும் செயலாற்றியுள்ளனர்.
  - சியுஸ் - ஒலிம்பியா
  - அப்பலோ - டெல்பி,
  - அதீனா - ஏதேன்ஸ்
  - அப்பரடயிட் - கொரிந்து
  - பலி கொடுத்தலும் கிரேக்கர்களின் பூசை முறைகளில் ஒன்றாகும்.

- ஹோமரின் இலியட், ஒடிசி, பொசியோவின் வேலையும் நாளும் எனும் நூல்கள் கிரேக்க நாகரிகம் பற்றி அறிந்து கொள்ள உதவும் முக்கிய நூல்களாகும்.

- **விளையாட்டு**



**எதென்சில் அமைந்துள்ள பழைய ஒலிம்பிக் விளையாட்டு மைதானம்**

பாரசீகர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் இடையிலான போரில் வெற்றி பெற்ற ஏதேன்ஸ் படையின் தலைவர், அவர்களது வெற்றியை ஏதேன்ஸ் மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டுத் தூதுவன் ஒருவனை அனுப்பியதுடன் அந்தச் செய்தியை அறிவிக்கும் பொருட்டு ஓடிச் சென்று அறிவித்துவிட்டு மரதன் என்ற இடத்தில் உயிர்த்துறந்தான். இந்த நிகழ்வினை நினைவூட்டும் முகமாக ஒலிம்பிக் விழாவின் இறுதி அங்கமாக மரதன் ஓட்டப்போட்டி உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **கலையும், கட்டடக்கலையும்**

  பெரிக்கிளிஸ் யுகம் கிரேக்க கலையின் பொற்காலமாகும். கிரேக்க கலை ஐரோப்பிய நாகரிகத்தில் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சிற்பக்கலை, கட்டடக்கலை என்பன அவற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

- **சிற்பக்கலை**
  - கிரேக்கக்கலை தொடர்பாகப் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திய கிரேக்கர்களால் யானைத்தந்தம், தங்கத்தால் சிலை செதுக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டமை.
    எடுத்துக்காட்டு : அத்தீனாவின் சிலை, சியுஸ் கடவுளின் சிலை



அதீனா தேவதை

- எலும்பு, சதை என்பன தெளிவாகத் தெரியும் விதத்தில் சிலைகள் செதுக்கப்பட்டமை
  எடுத்துக்காட்டு : பரிதிவட்டம் வீசுதல், குத்துச் சண்டை
- சுண்ணக்கற்களாலும், பளிங்குக் கற்களாலும் கட்டிடங்கள் அமைத்தல் கிரேக்க கால கட்டிடக்கலையின் சிறப்பம்சமாகும்.
  எடுத்துக்காட்டு : ஏதேன்ஸ் அக்ரோபொலிஸ் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள பாத்தியன் சிலை



பரிதிவட்டம் வீசும் வீரன்



மல்யுத்தம்



டயோனிசியசின் நாடக அரங்கம்



**டயோனிசியசின் நாடக அரங்கின் கதிரைகளில் காணப்படும் கலை நிர்மாணிங்கள்**

- டொரிக் மரபிற்கு அமைய நிறுவப்பட்ட தூண்களில் கடவுளரின் கதைகள் தீட்டப்பட்டுள்ளமை.





**தூண்கள்**

- மட்பாண்டங்கள், நாணயம் என்பன, ஓவியங்களுடனான சுவர் நிர்மாணம் என்பனவும் முக்கிமானவை.
- கிரேக்கர்களுக்கே உரித்தான இலக்கியங்கள் காணப்பட்டமை.
  எடுத்துக்காட்டு : ஹோமரின் இலியட், ஒடிசி
- நாடகக் கலையில் கையாளப்படும் இன்பியல், துன்பியல் நிகழ்வுகள் அடங்கிய மாதிரிகள் கிரேக்கத்திலேயே ஆரம்பமாகின.
- கி.மு. 425 ஆம் ஆண்டு வாழ்ந்த அரிஸ்டோபேனிஸ் என்பவர் முதலாவது இன்பியல் (Comedy) நாடக அமைப்பாளர் எனக் கருதப்படுகின்றமை.
- ஈஸ்கிளஸ், யுரிபீடிஸ், சொபோக்ளிஸ் என்போர் பிரபலமான காவிய படைப்பாளர்களாக இருந்தமை.
- ஹெரடோடஸ் - வரலாற்றின் தந்தை - கிரேக்க - பாரசீக யுத்தத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்.
- தியுசிடிசிஸ் - பெலபெனேசிய யுத்தம்





**மட்பாண்டங்கள்**

- கிரேக்கத்தில் காணப்பட்ட பல்வேறு அடையாளங்கள் நவீன உலகிலும் அரசியல் சின்னங்களாகப் பயன்படுகின்றமை.
  எடுத்துக்காட்டு : கழுகு அரசியல் சின்னமாகப் பயன்படுத்தப்படுகின்றமை. கிரேக்க வைத்தியத் துறையில் பயன்படுத்தப்பட்ட பாம்பின் அடையாளம் - வைத்தியத்துறை மற்றும் ஏனைய அமைப்புகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு வைததிய அமைப்புகள்.



**கழுகும் பாம்பும்**

# உரோம நாகரிகம்

உரோமரின் எழுச்சி இத்தாலியின் டைபர் நதிக்கரைக்கு அருகில் வாழ்ந்த இலத்தீன் மொழி பேசிய மக்கள் குழுவால் ஏற்பட்டதெனப் பொதுவாக நம்பப்படுகின்றது. உரோமர்களின் கதைகளின்படி கி.மு. 753 ஆம் ஆண்டளவில் உரோம் ரொமியுலஸ், ரீமஸ் எனும் இரட்டை சகோதரர்களால் கட்டியெழுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை உரோம நாகரிகம் உயர் நிலையில் இருந்த காலமாகக் கருதப்படுகின்றது. உரோமர் யுத்த நடவடிக்கைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் திறமைவாய்தவர்களாக இருந்தனர். கி.பி மூன்றாம் நூற்றாண்டாகும்போது ஸ்பானியா, தென் பிரான்ஸ், வட ஆபிரிக்க பிரதேசம், எகிப்து, மசிடோனியா, சிரியா, ஆகிய பிரதேசங்களில் தம் அதிகாரத்தைப் பரவலடையச் செய்ததுடன் ஜுலியஸ் சீசரின் காலத்தில் வடபகுதியில் இங்கிலாந்தையும் தன்வசப்படுத்திப் பாரிய பேரரசை நிறுவுவதில் உரோமர் வெற்றி கண்டனர்.


ஜுலியஸ் சீசர், ஒகஸ்டஸ் சீசர், நிரோ, கெரகெல்லா, கொன்ஸ்தாந்தின், ஜஸ்டினியன், மார்க்கஸ் அவுரேலியஸ் ஆகிய பேரரசர்கள் உரோமப் பேரரசைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தனர். உரோமப் பேரரசின் சிறப்பான காலப்பகுதியில் மேற்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா ஆகிய பெரும் பிரதேசத்தில் உரோமப் பேரரசு பரவியிருந்தது. கிறிஸ்தவ சமயத்தின் தோற்றம், பரவல் என்பன இந்த யுகத்தில் நிகழ்ந்த விசேட நிகழ்வெனக் கூறலாம்.

மார்க்கஸ் அவுரேலியஸின் மரணத்தின் பின்னர் உரோமப் பேரரசின் வீழ்ச்சி ஆரம்பமானதொடு தியோக்ளேசியன், கொன்ஸ்தாந்தின் ஆகிய பேரரசர்கள் உரோமப் பேரரசு வீழ்ச்சியுறாமல் காத்துக்கொண்டனர். தியோக்ளேசியன் பேரரசரின் காலத்தில் கிழக்கு, மேற்கு உரோமப் பேரரசு என இரண்டாகப் பிளவடைந்தது. மேற்கு உரோமப் பேரரசின் தலைநகர் உரோம் நகராக விளங்கியதுடன் கிழக்குப் பேரரசின் தலைநகர் பைசாந்தியமாக விளங்கியது. கொன்ஸ்தாந்தின் பேரரசனால் மீண்டும் பேரரசுகள் ஒன்றிணைக்கப்பட்டு பைசாந்தியத்தை அதன் தலைநகராக்கி அதனை முன்னேற்றி கொன்ஸ்தாந்தின் நோபில் எனப் பெயரிட்டான். கொனஸ்தாந்தின் பேரரசரின் மரணத்தின் பின்னர் உரோமப் பேரரசு மீண்டும் இரண்டாகப் பிரிந்ததுடன் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் மிலேச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பின் காரணமாக உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றது. அவ்வாறே ஒட்டோமான் துருக்கியரால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பின் விளைவாக 1453 ஆம் ஆண்டு கிழக்கு உரோமப் பேரரசும் வீழ்ச்சியுற்றது.

## உரோமர்களின் அரசியல் பங்களிப்பு

- **நிருவாக முறை**

  ஆரம்பத்தில் பிரதான குடிமக்களால் அமைக்கப்பட்ட கூட்டாட்சியாக நிருவாக நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அந்தக் கூட்டாட்சியில் செனட்சபை பிரதான இடத்தினைப் பெற்றது. மூத்த குடிகளால் அந்தச் சபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
  - ஆரம்ப கால கட்டத்தில் செனட் சபையின் நிருவாகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் முதல்வர் என அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பின்னர் அவர் பேரரசர் எனப்பட்டார்.
  - கொன்சல்கள் எனப்பட்ட அதிகாரிகள் இருவருக்கு உரோமக் கூட்டாட்சியில் முக்கிய இடம் கிடைத்தது.
  - உரோமர் பேரரசைக் கட்டியெழுப்பியதுடன் பேரரசில் வாழ்ந்த அனைத்து மக்களின் சமாதானத்தையும், ஒருமைப்பாட்டினையும் உறுதி செய்யும் விதத்தில் மாகாண நிருவாக அமைப்பினை நடைமுறைப்படுத்தினர்.



பிரித்தானியா
கோல் தேசம்
ஸ்பானியா
இத்தாலி
ஆபிரிக்கா
சின்ன ஆசியா

- ஜஸ்டின் பேரரசனால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்ட முறை, உரோமானியர்களால் உலகிற்கு கிடைத்த பெரும் பங்களிப்பாகும்.
- வழக்கு விசாரனை, நிரூபித்தல், ஜுரி சபை மூலம் இறுதி முடிவெடுத்தல், குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றம் நிரூபிக்கப்படும்வரை அவரை நிரபராதி என ஏற்றுக்கொள்ளல், சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படல் என்பன அந்தச் சட்டத் தொகுதியில் அடங்கியுள்ளது. ஜனநாயக இயல்புகள் பல இச்சட்டத்தொகுதியில் உள்ளடங்கியிருந்தன.


- **பொருளாதாரம்**
  - உரோமப் பேரரசின் பிரதான வருமானமாக வர்த்தகம் காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுடன் மட்டுமின்றி அராபியா, சீனா, இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்பினை வைத்திருந்தனர். மட்பாண்டங்கள், புடவை, உலோகம், கண்ணாடி என்பன பரவலாக உற்பத்தி செய்யப்பட்டமை.
  - ஆசிய நாடுகளில் இருந்து உரோமுக்குக் கொண்டுவரப்பட்ட பட்டுப்புடவை, வாசனைப் பொருட்கள், பீங்கான் பொருட்கள், மருந்துகள், முத்து, இரத்தினக் கற்கள், யானைத் தந்தம், உணவுக்குப் பயன்படுத்தப்படும் வாசனைப் பொருட்கள் என்பன ஐரோப்பியச் சந்தையில் விற்கப்பட்டமை.
  - இவைதவிர கிராமப் புறங்களில் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை.

- **கல்வி**
  - கூட்டாட்சியின் ஆரம்பத்தில் மேல்மட்டத்திலுள்ள பிரபுக்களின் குடும்பப் பிள்ளைகளின் கல்வி பெற்றோராலேயே மேற்கொள்ளப்பட்டன. அறிவை வழங்குவதைவிடப் பண்டைய உரோமப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், வீரர்களின் வாழ்க்கை தொடர்பாக இளந்தலைமுறையினருக்குக் கூறுதல் என்பன முக்கிய இடத்தினை வகித்தன.
  - கிரேக்க தாக்குதலுக்கு உள்ளாகிப் பிற்காலத்தில் கல்வி படிப்படியாக நிறுவன அமைப்பைப் பெற்றது. கிரேக்க அடிமைகளும், சுதந்திரம் பெற்ற அடிமைகளும் உரோமில் ஆசிரியர் தொழிலில் இணைந்தனர். ஸ்பூலியஸ் காவிலியம்ஸ் எனும் சுதந்திரம் பெற்ற அடிமைகள் கி.மு. 250 ஆம் ஆண்டளவில் பணம் வசூலிக்கும் பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தனர்.
  - எழுத்து, வாசிப்பு, இலக்கணம், தர்க்க சாஸ்திரம் என்பன அக்காலத்தில் கற்பிக்கப்பட்ட பிரதான பாடங்களாகும்.
  - கிரேக்கம், இலத்தின், காவியம், பேச்சு, சட்டம், வைத்தியம் போர் முறை முதலான பாடங்களும் கற்பிக்கப்பட்டன.
  - வானியல், கணிதம், விஞ்ஞானம், வைத்தியம் ஆகிய பாடங்கள் உயர் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. செல்வந்தரிகளின் பிள்ளைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த உயர் கல்வி நிறுவனம், ஏதென்ஸ், ரோட்ஸ் முதலான நகரங்களிலும் அமைக்கப்பட்டன.

- **சமயம்**
  - உரோம் பேரரசு நிலையை அடையும்போதும் இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட சமயமொன்று இருக்கவில்லை. வெயில், மழை, மின்னல் போன்ற இயற்கை அமைப்புகளைக் கடவுளாகக் கருதி அவர்கள் வணங்கினர்.
  - உரோமர்களிடையே பல்தெய்வக் கொள்கை நிலவியது.
  - ஜுப்பிட்டர் - விண்ணுக்கு அதிபதி, மினர்வா - கைப்பாணியர்களுக்கு அதிபதி
    மார்ஸ் - யுத்தத்தின் அதிபதி, செரஸ் - விளைச்சளின் அதிபதி
    வீனஸ் - காதலுக்கு அதிபதி நெப்டியூன் - கடலுக்கு அதிபதி
  - ஆவிகளை வணங்குதல்

- தாய்த் தெய்வத்திற்குப் பூசைகள் செய்தல்
- இறந்த, உயிருடனுள்ள பேரரசர்களைக் கடவுளாகக் கருதி வணங்குதல் உதாரணம் (சீசர், ஜுலியஸ் சீசர், ஒகஸ்டஸ் சீசர், தியோக்ளேசியன்.)
- ஆரம்பத்தில் உரோமப் பேரரசர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக இருந்தபோதும், கொன்ஸ்தாந்தின் பேரரசர் காலத்தில் கிறிஸ்தவ சமயம் நிலையான சமயமாக பிரகடனஞ் செய்யப்பட்டது.
- தியடோஸியஸ் பேரரசனின் காலத்தில் கிறிஸ்தவ சமயம் உரோமப் பேரரசின் ஒரே மதமாக அதாவது அரச மதமாகியது.

- **இலக்கியமும் கட்டடக் கலையும்**
  - இலக்கிய நடவடிக்கைகளிலும், நீதிமன்ற நடவடிக்கைகளிலும் உரோமரின் பிரதான ஊடக மொழியாக இலத்தின் மொழி காணப்பட்டது.
  - பேரரசு நிருவாகக் காலம் (ஒகஸ்டஸ் சீசர்) உரோம இலக்கியத்தின் பொற்காலமாகும்.
  - ஜுலியஸ் சீசராலும் நூல்கள் எழுதப்பட்டன.
  - பேரரசர் ஒகஸ்டஸ் காலத்தில் வர்ஜில், ஹொரேஸ், லிவீ, ஒவிட் ஆகியோர் புகழ்மிக்க எழுத்தாளர்களாகத் திகழ்ந்தனர். வர்ஜில் என்பவரால் எழுதப்பட்ட ஈனிட் எனும் நூல் உலக இலக்கியங்களில் உயர்ந்த நூலாகக் கருதப்படுகின்றது.
  - டெஸிடஸ், புளுடாக், ஜுவேனஸ், செனக்கா, மார்ஸ், அவுரேலியஸ் ஆகியோர் இலத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர்களாவர்.
  - பிளினி என்பவர் இயற்கை வரலாறு தொடர்பாக (Natural Histiry) நவீன அகராதியை வெளியிட்டவராவார்.



உலகின் முதலாவது செய்தித்தாள் கி.மு. 131




**பொது மலசலகூடம்**

- பத்திரிகை வழியாக மக்களுக்கு செய்திகளை வழங்குதல் உரோமர் கடைப்பிடித்த வழிமுறையாகும். யுத்தவெற்றி, விளையாட்டு, குத்துச் சண்டை என்பன தொடர்பான விபரங்கள், மரண அறிவித்தல்கள் என்பன இப்பத்திரிகைகளில் காணப்பட்டன. அவை இரும்பு அல்லது கற்பலகையின் மீது வெட்டப்பட்டது. புத்தகங்களைக் கட்டும் முறையும் உரோம நாகரிகத்திலேயே ஆரம்பமானது. ஜுலியஸ் சீசர் பப்பிரஸ் தாளை இணைத்துக் குறிப்புப் புத்தகம் தயாரித்துள்ளதுடன் பிற்காலத்தில் பைபிளுக்காகவும் இம்முறை பின்பற்றப்பட்டது.
- பொதுக் கட்டிடங்கள் அமைத்தல், வசதியான குளியலறைகள், மலசலக்கூடத் தொகுதிகள் அமைத்தல் என்பன உரோமக் கட்டிடக் கலையில் தெளிவாகத் தெரிகின்றது.
- பாரிய கட்டிட வளைவு, கட்டிட உச்சியில் கோள வடிவமான சிகரம் அமைக்கப்பட்டது.
- கொலோசியம் விளையாட்டரங்கு, தியோக்கிளேசியப் பேரரசரின் மாளிகை வர்த்தக மத்திய நிலையமாக விளங்கிய பெசிலிக்கா கட்டிடம் என்பன உரோமரின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- அவர்கள் பயன்படுத்திய கொங்றீட் முறையும் கட்டிட நிர்மாணத்தில் சிறப்பிடம் பெறுகின்றது.
- நிறப்பாவனை, சித்திரங்களின் பொருட்டுப் பொருத்தமான ஒளி, இருளினைக் காட்டுவதில் பயன்படுத்திய திறமை, மட்பாண்டங்களை அலங்கரிக்கும் கலை என்பன சிறப்புப் பெற்றன.
- குணவியல்புகளை வெளிக்கொணரும் விதத்தில் சிலைகள் அமைத்தலும் உரோமரின் விசேட அம்சமாகும். ஒகஸ்டஸ், திராஜன், தியோக்கிளேசியன் போன்ற பேரரசர்களின் சிலைகள் இதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

- **பெருந்தெருக்கள்**
  - உரோமப் பேரரசுக் காலத்தில் பொறியியல் துறை சிறப்பான நிலையில் இருந்தது. முறையாக வீதிகளை அமைப்பதில் திறமை காட்டினர். பேரரசு முழுவதும் பெருந்தெருக்களால் பிரதான நகரத்துடன் (உரோமுடன்) தொடர்புப்படுத்தப்பட்டிருந்தது. கற்களைப் பரப்பி பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன.
  - பெரிய ஆறுகளுக்குக் குறுக்காகப் பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தமையும் (டன்யுப் நதிக்கு குறுக்காக முறையான நீர் வழங்கல் முறையும் இக்காலத்தில் காணப்பட்டது.)



உரோமப் பாலம்




நகருக்கு நீர் வழங்கப்பட்ட முறை



பண்டைய உரோமின் பாதை

- விஞ்ஞானச் சிந்தனை
    - தனிப்பட்ட சுகாதாரம், சுத்தம் என்பவற்றை உயர்வாகக் கருதிய உரோமியர் அதற்காக குளியல் தடாகங்களை அமைத்தனர்.
    - நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக வைத்தியர்களை நியமித்ததுடன், உள் நோயாளர் பராமரிப்பு (தங்கியிருந்து) முறையை வைத்திய சாலைகளில் செயற்படுத்தினர்.
    - அனைத்து விஞ்ஞானப் பாடங்கள் தொடர்பாகப் பிளினியால் நெச்சுரலிஸ் இஸ்டோரியா (இயற்கை வரலாறு) எனும் அகராதி எழுதப்பட்டது.
    - சொசிகினசால் ஜுலியஸ் நாட்காட்டி தயாரிக்கப்பட்டது.



உரோமில் அமைந்திருந்த பொதுமக்களின் குளியல் தடாகம்

# கிறிஸ்தவ நாகரிகம்

ஐரோப்பாவில் முதன் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட மதமாக கிறிஸ்தவ மதம் விளங்குகின்றது. ஐரோப்பிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் அடிப்படைக் காரணியாக கிறிஸ்தவ மதம் காணப்பட்டது. நவீன உலகம் முழுதும் பயன்படுத்தப்படும் கிறிஸ்து வருடம் எனப்படும் வருட முறை கிறிஸ்து பிறப்பினை மையமாகக் கொண்டே காணப்படுகின்றது. உரோமப் பேரரசில் ஒகஸ்டர் சீசரின் ஆட்சிக் காலத்தில் இயேசு பிறந்ததுடன், அவர் பிறந்த இடமாகிய பெத்தலஹேம் அக்காலத்தில் உரோமப் பேரரசுக்கு உரித்தான இடமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவ மதம் இயேசுவின் சிலுவை மரணத்தின் பின்னர் அப்போஸ்தவர் எனப்படும் அவரது சீடர்களின் போதனையின் பின்னர் பரவத் தொடங்கிளது.

## கிறிஸ்தவ நாகரிகத்தினால் ஐரோப்பாவிற்கு கிடைத்த பங்களிப்பு

- கிறிஸ்தவ நாகரிகம் நவீன ஐரோப்பிய நாகரிகம் தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்த ஒரு வழியாகும்.
- கி.பி. 3 ஆம் நூற்றாண்டாகும்போது உரோமப் பேரரசின் அனைத்துப் பிரதேசங்களிலும், சின்னாசியாவிலும் கிறிஸ்தவ மதம் பரவியிருந்தது.
- பேரரசர் கொன்ஸ்தாந்தின் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி கி.பி. 313 ஆம் ஆண்டில் மிலான் சாசனத்தை ஏற்படுத்தியதும் கிறிஸ்தவ மதம் அரச மதமாகியது.
- பேரரசர் தியோடசியஸ் 4 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ மதம் தவிர்ந்த அனைத்து மதங்களும் அஞ்ஞானமென்று கூறி அவற்றைப் பின்பற்றுவதைத் தடை செய்ததுடன் (உரோமப் பேரரசில் அரச மதமாகப் பிரகடனஞ் செய்தல்) உரோமப் பேரரசு முழுதும் கிறிஸ்தவ மதமே ஒரே மதமாக விளங்க வேண்டும் என நியமித்தார்.
- உரோமப் பேரரசின் மீதான மிலேச்ச ஆக்கிரமிப்பின் பின்னர் கோல் நாட்டைத் தலைமையாகக் கொண்டு தமது அரசைக் கட்டியெழுப்பிய குளோவிஸ் மன்னன் கிறிஸ்தவ மதத்தை தழுவியதுடன் ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதம் பரவியது.
- அதன் பின்னர் சிம்மாசனமேறிய சாளிமன் பேரரசர் அவ்வரசை பரிசுத்த உரோமப் பேரரசு எனப் பெயரிட்டு பரவலடையச் செய்தார்.
- அதன்மூலம் உரோமப் பேரரசில் பதவிகள் தோற்றம் பெற்றன.
- கிறிஸ்தவ நாகரிகத்தின் மூலம் ஐரோப்பாவிற்கு ஒழுங்கமைக்கப்பட்ட வகையிலான மதமொன்று கிடைத்தது.
- கி.பி. 590 ஆம் ஆண்டளவில் மஹா கிரகரி எனும் பாப்பரசரால் பாப்பாண்டவர் பதவி தோற்றம் பெற்றதுடன் அதற்கு ஐரோப்பிய சமூகத்தின் ஆதிக்கம் கிடைத்தது.
- அவரால் மிசனரிமார் (மறை பரப்பாளர்கள்) பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டு கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டது.
- கிறிஸ்தவ மதம் சமுதாயத்தை வழிநடத்தும் முக்கிய நிறுவனமாகியது.
- மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து மக்களைப் பாதுகாத்து பண்டைய பண்பாட்டையும் பாதுகாப்பது சபையால் மேற்கொள்ளப்பட்டது.
- கிறிஸ்தவ சபை கல்வி நடவடிக்கைகளை வழிநடத்தும் முக்கிய நிறுவனமாகியது.
- கலை அமைப்புகள் மீது கிறிஸ்தவ சபை அடிக்கடி செல்வாக்குச் செலுத்தியதால் மதம் சார்ந்த கலைப்படைப்புகள் தோற்றம் பெற்றன்.
- கிறிஸ்தவ மதத்தின் தாக்கம் அரசியல் துறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்படி தெய்வீகவாதக் கொள்கை அதிகளவில் முன்வைக்கப்பட்டது.




# இஸ்லாமியரின் ஆட்சிப் பரம்பல்

## முக்கிய கட்டங்கள்

கி.பி. 570 ஆம் ஆண்டில் அரேபியாவில் மக்கா நகரில் பிறந்த முஹம்மது நபி அவர்கள் போதித்த மதம் இஸ்லாம் மதம் எனப்பட்டது. அம்மதத்திற்கு அமைய உலகின் ஒரே கடவுளாக 'அல்லாஹ்' மட்டுமே உள்ளார். இப்புதிய மதம் பரிசுத்த குர்ஆனில் அடங்கியுள்ளது. இஸ்லாம் மதத்தைத் தழுவியோர் முஸ்லிம்கள் எனப்படுகின்றனர். காலப்போக்கில் இஸ்லாம் மதமும் உலகில் பிரதான மதங்களுடன் இணைந்தது.


முஹம்மது நபி அவர்களின் புதிய மதத்திற்கு எதிர்ப்பு எழுந்ததால் அவரின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது. இதனால் கி.பி. 622 ஆம் ஆண்டு அவர் மக்காவில் இருந்து மதீனாவுக்கு வந்தார். மதீனா நகரில் பலர் அவர்களின் சீடர்களாகியதுடன் கி.பி. 630 ஆம் ஆண்டில் மக்காவையும் கைப்பற்றினர். மக்கா நகரில் வாழ்ந்த மக்கள் அவரது போதனையை ஏற்றுக் கொண்டதுடன், அரேபியா முழுவதும் முஹம்மது நபி அவர்களின் மதம் பரவியது.

கி.பி. 632 ஆம் ஆண்டில் முஹம்மது நபி அவர்கள் இறந்தபோது அராபியா முழுவதும் இஸ்லாம் மதம் பரவியிருந்தது. அராபியப் பிரதானிகளால் முஹம்மது நபியின் பிரதிநிதியாக அபூபக்கர் (அவரது நண்பர்) நியமிக்கப்பட்டார். இவர் முதலாவது கலீபா எனப்பட்டார். தமது குறுகிய ஆட்சிக் காலத்தில் (632 - 634) அண்மை அரசான சிரியாவில் இஸ்லாம் மதத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டார். அவருக்குப் பின் வந்த கலீபாவான உமர் (634 - 644) பரந்த இஸ்லாம் அரசைக் கட்டியெழுப்பினார். உரோமப் பேரரசான ஹெரக்ளிடசைத் தோற்கடித்து சிரியா, டமஸ்கஸ், பலஸ்தீன், பிலிஷியா என்பவற்றைக் கைப்பற்றியதுடன் மொசபெத்தேனியா, எகிப்து, பாரசிகம் என்பன வரை இஸ்லாம் பேரரசை பரவலடையச் செய்தார். அடுத்த நூற்றாண்டில் வட ஆபிரிக்கா, ஸ்பானியா என்பனவற்றை வெற்றி கொண்டு பிரனீஸ் மலைத் தொடரைக் கடந்து பிரான்சைக் கைப்பற்ற முயன்றும் அது தோல்வியில் முடிவடைந்து 8 ஆம் நூற்றாண்டாகும் போது கிழக்கில் சிந்துப் பிரதேசம் வரை தமது அதிகாரத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டார்.



கி.பி. 9 ஆம் நூற்றாண்டாகும் போது சிசிலி, இத்தாலியின் தென் பகுதி என்பவற்றைக் கைப்பற்றி மத்தியத் தரைக்கடலில் ஆதிக்கம் செலுத்த இஸ்லாமியரால் இயலுமானதாக இருந்தது. நீண்டகாலம் செல்லும் முன்னர் கிழக்கு ஆபிரிக்கா, மலாயா, இந்தோனேசியா, மேற்குச் சீனாவின் சில பிரதேசங்கள், இந்தியா ஆகிய நாடுகளில் இஸ்லாம் பரவியிருந்தது.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை ஸ்பானியாவில் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் இஸ்லாமியர் வெற்றி கண்டனர். அராபியர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொள்ளும்படி வற்புறுத்தியதுடன் அவ்வாறு செய்யாவிடின் கப்பம் கட்டுவதற்கு அல்லது மரணத்தைத் தெரிவு செய்ய வேண்டி இருந்தது. ஸ்பானியா தேசிய அரசாகும் வரை ஸ்பானியாவில் முஸ்லிம்களின் ஆட்சி நிலவியது. பொஸ்பரஸ் நீரிணையிலிருந்து பிரனீஸ் மலைத் தொடர் வரை அவர்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டினர்.



## கலீபாக்கள்

அபூபக்கரின் பின்னர் கலீபாவாக நியமனம் பெற்ற உமரை அடுத்து உஸ்மான் கலீபாவானதுடன் அக்காலத்தில் ஏற்பட்ட சிவில் யுத்தத்தின் விளைவாக அவரும் கொல்லப்பட்டார். இதன் பின்னர் முஹம்மதுவின் மகளைத் திருமணம் செய்திருந்த அலி கலீபாவாக நியமிக்கப்பட்டார். சிரியாவின் ஆளுனராக விளங்கிய முகாவியாவுக்கும், அலிக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் அலி மரணமடைந்தார். அதன்பின்னர் முகாவியா கலீபாவாகப் பதவிக்கு வந்தார். கலீபா பதவிக்காக அலியின் மகன் ஹுசைனுக்கும் முகாவியாவின் மகன் செயிட்டுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின் விளைவாக ஹுசைன் இறந்தார். ஆட்சியின் பொருட்டு ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக முஸ்லிம்கள் சுன்னி, ஷியா என இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். அபூபக்கரும் அவரை அடுத்து ஆட்சிக்கு வந்த இருவரும் முஹம்மது அவர்களின் உண்மையான பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டோர் சுன்னி என்றும், அலி முஹம்மதுவின் உண்மையான பிரதிநிதி எனும் கொள்கையைப் பின்பற்றியோர் ஷியா என்றும் அழைக்கப்பட்டனர்.

## இஸ்லாமிய நாகரிகத்தால் ஐரோப்பா அடைந்த நன்மைகள்

- இஸ்லாம் மதம் பரவியிருந்த அராபியர்களிடையே உயர் கல்வி முறை நிலவியமை. அந்தக் கல்வி முறையால் ஐரோப்பா போசிக்கப்பட்டமை.
- உயர் நிறுவனங்கள் பல இருந்தமை
  உதாரணம் : கைரோ, பக்தாத், டமஸ்கஸ், கொரடோவா, செமிலே, பாசிலோனா ஆகிய பல்கலைக்கழகங்கள்
- அராபியக் கல்விமான்களால் பண்டைய கிரேக்க நூல்களும், கணித விஞ்ஞான நூல்களும் அரபு மொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டன.
- ஆட்சியாளர்களால் கற்பித்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு அனுசரணை கிடைத்தல். அதற்காகப் திறமையான மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படல், மூல நூல்களை ஒன்று சேர்த்து நூலகங்களை அமைத்தல்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் மூலம் உலக இலக்கியத்தில் தாக்கம் செலுத்திய பல இலக்கியங்கள் தோற்றம் பெறல்
  - உலகின் பிரதான நூல்களில் ஒன்றான குர்ஆன் எழுதப்பட்டமை.
  - மேலைத்தேய கீழைத்தேச எழுத்தாளர்களுக்குப் பெறுமதிவாய்ந்த சொத்தான அராபிய மொழியில் ஆயிரத்து ஓர் இரவுகள் எழுதப்படல். பிற்காலத்தில் இது பல மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டமை.
  - ஐரோப்பியக் கால காவியங்களில் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்திய ஓமார் கையாமின் ருபையாத்.
  - அல் தபாரியின் அப்போஸ்தவர்களினதும், அரசர்களினதும் சரிதை கதைகளில் முக்கிய இடத்தினைப் பெறுகிறது.

- **வைத்தியமும், விஞ்ஞானமும்**
  - அவிசின்னா - வைத்திய ஒழுக்க விதிகளான இதனைப் பல நூற்றாண்டுகளாகக் கைநூலாகப் பயன்படுத்தினர்.
  - ரஷேசின் வைத்திய நூல் அல்ஹவி
  - பஸ்ராவே அல்ஹசனின் - கண் வைத்தியம் அவர்களது நூலின் தழுவலாகும். மேற்கு நாடுகளின் வைத்தியர்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய இந்நூல் பிற்காலத்தில் இலத்தீன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டமை.
  - அல்ராசி என்பவரால் அம்மை நோய் அடையாளம் காணப்பட்டமை.
  - வைத்தியசாலை முறைமை முஸ்லிம்களாலேயே ஐரோப்பாவிற்குக் கிடைத்தமை.
  - உரோம இலக்கங்களுக்குப் பதிலாக இந்து, அராபிய இலக்கங்களைப் பயன்படுத்தும் முறை ஆரம்பமாதல். (0 - 9 வரை)
  - இந்திய விஞ்ஞான அறிவு அரேபியா வழியாக ஐரோப்பாவுக்குக் கிடைத்தல்.
    எடுத்துக்காட்டு : சரியான அளவு முறை, தசம முறை, பௌதிக விஞ்ஞானத்தின் நியதிகள்.
  - திரிகோணகணித முறை வளர்ச்சியடைதல்.

- அகலாங்கு, நெட்டாங்கு வரைவதில் சரியான அளவு முறை பயன்படுத்தப்படல்.
- சீனாவில் பயன்படுத்தப்பட்ட கடதாசி உற்பத்தி செய்யப்படல்.
- அச்சுக்கலை, திசையறி கருவி என்பன ஐரோப்பாவுக்கு அறிமுகமாதல்.
- நைட்றிக் அமிலம், சல்புரிக் அமிலம், பொரெக்ஸ் நைட்ரேட் போன்ற இரசாயனப் பதார்த்தம் ஐரோப்பாவுக்கு அறிமுகமாதல்.

- **பொருளாதாரம்**
  - வெளிநாட்டு வர்த்தகம் இஸ்லாம் நாகரிகத்தில் முக்கிய பொருளாதார முறையாக இருந்தது.
  - முஸ்லிம் பேரரசரின் பரவலுக்கும், உறுதிப்பாட்டிற்கும் முக்கிய காரணமாக விளங்கியது வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் பெற்ற இலாபமாகும். (பாலைவனங்கள் நிறைந்து காணப்பட்டதால் விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான சூழல் காணப்படாமை இதற்கான காரணமாக இருக்கலாம்)
  - பக்தாத் நகரம் முஸ்லிம் பேரரசின் முக்கிய வர்த்தக மத்திய நிலையமாக விளங்குதல்.
  - கீழ் நாடுகளைப் போன்றே ஐரோப்பிய நாடுகளுடனும் வர்த்தகத்தை மேற்கொள்ளல்.
  - ஆசியாவின் வர்த்தக ஆதிக்கம் 16 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பியர் கையில் இருந்தமை.
  - முஸ்லிம் பேரரசு அடைந்திருந்த முன்னேற்றமும், அவர்களது வர்த்தக ஆதிக்கமும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டு வரை நடைப்பெற்ற சிலுவைப்போர்களில் கிறிஸ்தவர்களைத் தோற்கடிப்பதற்குப் பெரிதும் உதவியது.




பக்தாத் நகரம்

- **கலையும், கட்டிடக் கலையும்**
  - புடவைகளுக்குச் சாயமூட்டும் கலை, சித்திரக் கலை, பாரசீகக் கம்பளங்கள் என்பன அராபியர்களாலேயே ஐரோப்பியர்களுக்குக் கிடைத்தமை.
  - சங்கீதம் தொடர்பான அறிவு (கிட்டார் போன்ற சங்கீதப் பொருட்கள், தாளம், இராகம்) அரேபியர்களால் ஐரோப்பா பெற்ற பெரும் செல்வமாகும்.
  - இஸ்லாமிய நாகரிகத்தில் விசேட கட்டிட நிர்மாண முறை நிலவியமை. ஸபானியாவில் கிரனடாவில் அல்ஹம்ரா மாளிகை, செலவில் அல்கசார், பக்தாத்தில் பெரிய பள்ளிவாயில், சமாரா பள்ளிவாயில் என்பன இஸ்லாமிய நாகரிகத்தின் உயர்ந்த படைப்புகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

- அவர்களது கட்டிட நிர்மாணங்களில் சிறப்பம்சமாக அரைவட்டக் கூரை, வளைவு, உயர்ந்த கோபுரம் என்பன உள்ளடங்கும்.



அல் ஹம்றா மாளிகை





அறாபிய கட்டடக்கலை

## மானிய முறையின் வீழ்ச்சி

- **மானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**
  - சிலுவைப்போரும் வர்த்தக முன்னேற்றமும்
  - சிலுவைப்போரை அறிமுகஞ் செய்தல்
  - சிலுவைப்போர் காலத்தில் மேற்கு, கிழக்கு நாடுகளின் வர்த்தகம் பரவலடைதல்
  - கொன்ஸ்த்தாந்தில்நோபிள் முக்கிய வர்த்தக மத்திய நிலையமாதல்
  - புதிய முடியாட்சி வர்த்தகத்திற்கு உற்சாகமூட்டல்
  - வர்த்தகப் பரவல் காரணமாக மானியப் பொருளாதார முறை நவீன ஐரோப்பாவிற்கு ஏற்ற முறையில் வடிவமைக்கப்பட்டமை.

- **நகர வளர்ச்சி**
  - மானிய முறை வீழ்ச்சியுற்றதும், சுதந்திரம் பெற்ற சிலரால் சிறு சிறு வர்த்தக நகரங்கள் தோற்றம் பெறல்
  - அண்மைப் பிரதேசங்களின் மூலப்பொருட்களையும், முடிவுப் பொருட்களையும் நகரங்களுக்குக் கொண்டுவருதல்
  - வர்த்தகத்தில் ஈடுபட்டோருக்குப் பாதுகாப்புத் தேவைப்பட்டதால் அவர்கள் இணைந்து குடியேறியதால் நகரங்கள் தோற்றம் பெறல்
  - வர்த்தகம் வளர்ச்சியுற்றுப் பணப் புழக்கம் அதிகரித்து, வங்கி மற்றும் ஏனைய வசதிகளைக் கொண்ட நாகரிகம் வளர்ச்சியடைதல்
  - நகர வளர்ச்சியுடன் ஐரோப்பா புதிய பாதையில் செல்லல்

- **மத்திய வகுப்பினரின் எழுச்சி**
  - வர்த்தகம் வளர்ச்சியுற்று, பணப்பரிமாற்றம் அதிகரித்ததும், செல்வத்தைச் சேகரித்த புதிய மத்திய வகுப்பினர் தோற்றம் பெற்றமை
  - அவர்கள் நன்கு கல்விகற்று சமுதாயத்தில் உயர் நிலையில் இருந்தமை

- மன்னர்கள் தமது ஆலோசகர்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் பிரபுக்களை அன்றி புதிதாகத் தோற்றம் பெற்ற மத்திய வகுப்பினரை நியமித்தல்
- இதனால் மத்தியகாலத்தில் பிரதேச ஆட்சியாளர்களாகவும், மன்னரின் ஆலோசகர்களாகவும் செயற்பட்ட பிரபுக்களின் அதிகாரம் குறைவடைந்தமை.
- மத்திய காலத்தில் பிரபுக்கள் பெற்றிருந்த சமூக நிலை மத்திய வகுப்பினருக்குக் கிடைத்தமை.
- பிரபுக்களை விட மத்திய வகுப்பினர் அதிகாரமுடையோராகியமை.
- இந்த மாற்றங்கள் நவீன யுகத்தை நோக்கி ஐரோப்பாவைக் கொண்டுச் சென்றமை.



புளோரன்ஸ் நகரம்



வர்த்தக வளர்ச்சியும் நகரங்களின் தோற்றமும்

# கணிப்பீடும் மதிப்பீடும்

**இலக்கம் 01 - 05 வரையிலான வினாக்களுக்கு முறையே ஐந்து பெயர்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று ஏதாவது ஒரு காரணத்தால் பொருத்தமற்றது. பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.**

01) 1. சோக்ரடீஸ் 2. பிளேட்டோ 3. சொசிகினஸ்
4. பைதகரஸ் 5. அனெக்சிமீனஸ்

02) 1. ஈசிகிலஸ் 2. சொபோக்லீஸ் 3. யுரிபீடஸ்
4. ஹோமர் 5. வர்ஜில்

03) 1. தியக்லீஷன் 2. கொன்ஸ்டன்டைன் 3. பெரிகிளிஸ்
4. குளோடியஸ் 5. மார்க்கஸ் அவுரேலியஸ்

04) 1. பக்தாத் 2. பொலொஞ்ஞா 3. கெய்ரோ
4. பார்சலோனா 5. டமஸ்கஸ்

05) 1. அவிசின்னா 2. ஒமார் கையாம் 3. அல்ஹசன்
4. பீடியாஸ் 5. அல்ராஷி

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01.

i. மானிய முறை என்றால் என்ன?

(01 புள்ளி)

ii. மானிய முறையின் அரசியல், பொருளாதார, சமூக இயல்புகள் இரண்டு வீதம் எழுதுக.
(06 புள்ளிகள்)

iii. மானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்களைச் சுருக்கமாக எழுதுக.
(07 புள்ளிகள்)

02. கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகப் பரம்பலைப் புறவுருவப் படமொன்றில் குறிக்குக.

(14 புள்ளிகள்)

03. ஐரோப்பிய நாகரிகத்தில் கிரேக்க, உரோம, இஸ்லாமிய நாகரிகங்கள் செலுத்தியுள்ள தாக்கத்தினை ஆராய்க.

(14 புள்ளிகள்)

04. நவீன ஐரோப்பாவின் ஆரம்பத்திற்கு வழிவகுத்த காரணிகளை விளக்குக.

(14 புள்ளிகள்)

# 2 நவீன ஐரோப்பாவின் ஆரம்பம்

## அறிமுகம்

ஐரோப்பிய வரலாற்றைக் கற்கும்போது அதனை மூன்று வரலாற்றுக் கால கட்டங்களாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு

- புராதன காலம் - கி.மு. 1000 - கி.பி 5 ஆம் நூற்றாண்டு வரை
- மத்திய காலம் - கி.பி. 5 ஆம் நூற்றாண்டு - கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை
- நவீன காலம் - கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலம்

முன்னைய பாடத்தில் புராதன மற்றும் மத்திய கால வரலாற்றின் அடிப்படையில் அமைந்த முறை அவதானத்தில் கொள்ளப்பட்டது. இந்த அலகில் மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி, புதிய கண்டுப்பிடிப்புகள், தேசிய அரசுகளின் எழுச்சி, நாடுகாண் பயணங்கள் மூலம் ஐரோப்பாவின் அதிகாரப் பரவல், அதன்மூலம் ஐரோப்பா நவீன யுகமாக மாற்றமடைந்த விதம் என்பன பற்றிக் கற்கற் கூடியதாக இருக்கும்.

**தேர்ச்சி** : • ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் உலகில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.1 ஐரோப்பா நவீன யுகத்திற்குள் பிரவேசித்த விதத்தை ஆய்வார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- மறுமலர்ச்சியை விபரிப்பார்.
- புதிய போக்குகள் மூலம் ஐரோப்பா நவீன யுகத்திற்கு வந்த விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகப் பரம்பலைப் புறவுருவப் படமொன்றில் குறிப்பார்.
- நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
**பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.**

- **நவீன ஐரோப்பாவின் ஆரம்பம்**
  - கிரேக்க உரோம நாகரிகங்களில் மீண்டும் மலர்ச்சி ஏற்பட்டது மட்டுமின்றி சமகால ஐரோப்பிய அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டுத் துறைகளில் பரவலான எழுச்சி ஏற்பட்டமை மறுமலர்ச்சி எனப்படும்.
  - மறுமலர்ச்சியின் உச்ச கட்டம் 15 ஆம் நூற்றாண்டாக இருந்தபோதும் அறிவு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான அறிகுறி 12 ஆம் நூற்றாண்டில் பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றதுடன் இருந்தமையை எடுத்துக்காட்டுவார்.

- **பல்கலைக்கழகங்களில் பாடத்துறைகள் மாற்றமடைதல்**
  - கி.பி. 1453 ஆம் ஆண்டு ஒட்டோமன் துருக்கியர் கொன்ஸ்தாந்தில்நோபிளைக் கைப்பற்றியமை மறுமலர்ச்சி ஏற்படுவதற்குப் பிரதான காரணமாக அமைந்தமை.
  - மறுமலர்ச்சி இத்தாலியை மையமாகக் கொண்டே ஏற்பட்டது என்பதை அடையாளம் காணல்.

- **மறுமலர்ச்சியின் தாக்கத்தால் எழுச்சி பெற்ற துறைகள்**
  - மொழி, கலை, கட்டிடக் கலை
  - கிரேக்க இலத்தின் மொழிகளின் எழுச்சி
  - மானிடவாதம் வளர்ச்சியடைந்தமை
  - சித்திரம், சிற்பம் ஆகிய கலைகள் கிரேக்க, உரோம சம்பிரதாயங்களுக்கு இசைவாக்கம் பெறல்
  - மறுமலர்ச்சிக்கால கலைகள் இயற்கைக்கும் லௌகீகத்திற்கும் கூடுதலாக இசைவாக்கம் பெறல்
  - கோதிக் மரபிற்கு அப்பாற்பட்ட கட்டிட நிர்மாணக் கலை தோற்றம் பெற்றமை
  - இத்தாலியில் ஆரம்பமான மறுமலர்ச்சி ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுகளுக்கும் பரவியமை.
  - மறுமலர்ச்சியின் மேற்குறிப்பிட்ட தாக்கம் காரணமாக ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாடு, கல்வி ஆகிய சகல துறைகளிலும் பரவலான மாற்றங்களை ஏற்படுத்தியது.
    - மானிய அரசியல் முறை வீழ்ச்சியுற்று அரசனது அதிகாரம் அதிகரித்தமை பிரபுக்களின் அதிகாரம் குறைவுறுதல், ஐக்கிய ஆட்சித்தொகுதி அமைவுறல், அரசியல் நிலைப்பாடு, அரசனுக்கு நிலையான படை இருந்தமை, தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை என்பன அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்க ளாகும்.
    - சுயதேவைப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை, வர்த்தகம் பரவலடைதல், பணப்புழக்கம் அதிகரித்தமை, வங்கி முறை ஆரம்பமாகியமை, தனிப்பட்ட பயிர்ச்செய்கை பரவலடை தல், கூட்டு வர்த்தக சங்கங்கள் தோற்றம் பெறல் என்பன பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களாகும்.
    - மானிய அடிமைத்தனம் அகன்று பிறப்பினால் அன்றி செல்வம், கல்வி என்பவற்றை மையமாகக் கொண்டு சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்பட்டமை, நகரமயமாதல், வர்த்தக நகரங்கள் தோற்றம் பெற்றமை, போட்டி மனப்பான்மை, லௌகீகத்திற்கு சிறப்பிடம் கிடைத்தல் என்பன சமூக ரீதியாக ஏற்பட்ட மாற்றமாகும்.
    - திருச்சபையின் பழைமையான கருத்துக்கள் சவாலை எதிர்நோக்கியதுடன் புதிய சபைகள் உருவாகின. குருமார்களின் அதிகாரங்கள் குறைந்தமை சமய ரீதியான மாற்றங்களாகும்.
    - ஆன்மீக செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு லௌகீக இரசனைக்கு அமைய நிர்மாணங்கள் தோற்றம் பெறல், கிரேக்க, உரோம பாணியில் புதிய கட்டிட நிர்மாணங்கள் தோற்றம் பெற்றமை பண்பாட்டு ரீதியிலான மாற்றங்களாகும்.
    - கிரேக்க இலத்தின் மொழிகளின் புதிய எழுச்சி, புதிய நூல்கள் அச்சிடப்படல், திருச்சபையில் இருந்து விடுதலை பெற்ற கல்வி முறை, பல்கலைக்கழகங்களிலும் பாடத்திட்டத்தில் புதிய பாடங்கள் சேர்க்கப்படல், கல்விமான், அறிவாளிகள் தோற்றம் பெறல் என்பன கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களாகும்.

- **விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்**
  - புவிமையக் கொள்கை மறைந்து சூரிய மையக் கொள்கை உறுதி செய்யப்படல்.
  - விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்புகள்
    - நிக்கலஸ் கொப்பர்னிகஸ் - புவி உருண்டையானதென்றும், கோள்கள் அனைத்தும் சூரியனைச் சுற்றி வருகின்றனவென்றும் கூறியமை.
    - ஜொஹென்ஸ் கெப்லர் - ஞாயிற்றுத்தொகுதியிலுள்ள கோள்கள் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றுதல்.
    - கலிலியோ கலிலி - தொலைநோக்கியைக் கண்டுபிடித்தமை. இதன்மூலம் உலகில் இதுவரை அறிய முடியாத விடயங்களை அறியக்கூடியதாக இருந்தமை.
    - ஐசக் நியூட்டன் - புவியீர்ப்புக் கொள்கை
    - திசையறிகருவி, வட நட்சத்திர ......... கண்டுபிடிப்பு - பாதுகாப்பான கடல் பயணத்தில் ஈடுபடக் கூடியதாக இருந்தமை.

- அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை - அச்சுக் கலை வளர்ச்சியடைந்ததுடன், பலருக்கு வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை.

- **வைத்தியத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**
  - பெரசல்சஸ் - நோய்கள் ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிந்து அது தொடர்பான சிகிச்சை முறைகளையும் கண்டறிதல்.
  - மைக்கல் சர்வேடஸ் - குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டறிதல்.
  - வில்லியம் ஹார்வே - குருதிச் சுற்றோட்டத் தொகுதியை முழுமையாகக் கண்டறிதல்.

விஞ்ஞானத்துறையின் இவ்வாறானக் கண்டுப்பிடிப்புகள் மரபுரீதியான கருத்து அழிவடைந்து ஐரோப்பாவைப் புதிய பாதைக்கு கொண்டுவர உதவியமை.

**தேர்ச்சி மட்டம்** : 2.2 ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்களில் பேரரசைக் கட்டியெழுப்பிய விதத்தினைப் பரீட்சிப்பார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :
- நாடுகாண் பயணங்களை விபரிப்பார்.
- ஐரோப்பாவின் பரவல் ஏனைய நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய விதத்தினை விளக்குவார்.
- நாடுகாண் பயணங்களையும் ஐரோப்பிய பரம்பலையும் தேசப்பட மொன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
**பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.**

- **நாடுகாண் பயணங்களும் ஐரோப்பிய அதிகாரப் பரவலும்**

**நாடுகாண் பயணங்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிங்கள்**

- அண்மிய காரணம்: 1453 ஆம் ஆண்டு ஒட்டோமன் துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியமை.
- இதன் விளைவாகப் பொருளாதார சிக்கல்கள் தோன்றுதல்.
- அத்தியாவசியப் பொருட்கள் உரிய வேளையில் கிடைக்காமை.
- பொருட்களின் விலை உயர்வடைதல்.
- தமது பிரதான அரசியல், பொருளாதார மத்திய நிலையமாக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டமையானது கிறிஸ்தவர்களுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது.
- விஞ்ஞான வளர்ச்சியால் புதிய உபகரணங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டதுடன், பல மாறுபட்ட கருத்துக்களும் முன்வைக்கப்பட்டமை. வட நட்சத்திரமாணியும் திசையறிகருவியும் உலகம் உருண்டையானது என்றும் கண்டறியப்பட்டமை.
- நாடுகாண் பயணத்திற்குத் தேசிய அரசுகளினது அனுசரணையும் மத்திய வகுப்பினரின் ஒத்துழைப்பும் கிடைத்தமை.
- நீண்ட பயணங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய பாதுகாப்புடனான கப்பல் கட்டுதல் ஐரோப்பியரால் ஆரம்பிக்கப்பட்டமை.
- உண்மையை அறிவதற்கான ஆவல், கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல், இஸ்லாமிய சமயத்தை அழிக்கும் நோக்கம், புகழ்பெறும் அவசியம்.
- முஸ்லிம்களின் கையில் இருந்த இந்து சமுத்திர வர்த்தகப் பேரரசைக் கைப்பற்றிக்கொள்ளல்.
- போர்த்துக்கேய மன்னனான கடலோடி ஹென்றியால் (கி.பி. 1394 - 1460) ஆரம்பிக்கப்பட்ட கடற் பயண நடவடிக்கை தொடர்பான ஆய்வு நிறுவனம், பாதுகாப்புடன் கடலில் பயணம் செய்வதற்கு உதவியமை.

## நாடுகாண் பயணங்கள் முன்னிலையில் இருந்த நாடுகள், நாடுகாண் பயணிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்கள்

| | | |
|---|---|---|
| போர்த்துக்கல் | • பர்த்தலோயோம டயஸ்<br>• வஸ்கொடகாமா | - 1488 இல் ஆபிரிக்காவின் தென் முனையை அடைதல் (புயல் முனை)<br>- 1498 இல் இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு வருதல். |
| ஸ்பானியா | • கிறிஸ்டோபர் கொலம்பஸ்<br>• அமெரிக்கோ வெஸ்புசி<br>• வஸ்கோ நியுனெஸ் டி பெல்போவா<br>• பெர்டினன்ட் மகெலன்<br>• பர்னென்டோ கோடெஸ்<br>• பிரன்சிஸ்கோ பிசரோ | - 1492 கரிபியின் (மேற்கு இந்திய) தீவுக் கூட்டத்தின் ஸ்பனியோலாவுக்கு வருதல்.<br>- அமெரிக்கக் கண்டத்தைக் கண்டு பிடித்தல்.<br>- 1513 பனாமா நீரிணையை அடைதல்.<br>- 1519 - 1522 உலகத்தைச் சுற்றிவருதல்.<br>- 1519 மெக்சிக்கோவைக் கண்டுபிடித்தல்.<br>- பேரு தேசத்தைக் கண்டுபிடித்தல். |
| இங்கிலாந்து | • ஜோன் கபொட், செபஸ்தியன் கபொட்<br>• பிரான்சிஸ் டிரேக், கில்பர்ட், வோல்டர் ரலே | - கேப் பிரிட்டன் தீவு, கனடா<br>- சென். லோரன்ஸிலிருந்து புளோரிடா வரையான பிரதேசங்கள் |
| பிரான்ஸ் | • ஜக்விஸ் கார்டியர்<br>• ஜொயிலட்<br>• லாசலே<br>• செம்ப்லேன் மாக்விடே | - 1535 இல் வட அமெரிக்காவில் புனித லோரன்ஸ் ஆற்றுப் பிரதேசம்<br>- 1573 மிசிசிப்பி ஆற்றுப் பள்ளத்தாக்கு<br>- மிசிசிப்பி ஆற்று முகத்துவாரம்<br>- 1608 குவிபெக் பிரதேசம் |
| ஒல்லாந்து | • ஹென்றி ஹட்சன் | - ஹட்சன் ஆறு மற்றும் ஹட்சன் குடா |

### நாடுகாண் பயணங்களின் விளைவுகள்

- ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவலடைதல்.
- கிறிஸ்தவ சமயம் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் பரவுதல்.
- ஐரோப்பிய பண்பாடு மற்றும் தொழில்நுட்பம் உலகம் முழுவதும் பரவுதல்.
- ஐரோப்பிய பேரரசு கட்டியெழுப்பப்படல்.
- புதிய வர்த்தகத் தொடர்புகள் ஏற்படல்.
- மேற்கூறப்பட்ட நாடுகாண் பயணங்கள், ஆட்சிப் பரவல் என்பன ஐரோப்பாவில் புது யுகம் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளது.

# கணிப்பீடும் மதிப்பீடும் 01

* **இலக்கம் 01 - 02 ஆகிய வினாக்கள் தொடர்பாக பெயர்ஃஇடங்கள் X, Y என்ற ரீதியில் கொடுக்கப்பட்டுள்ளது. X பிரிவில் உள்ளனவற்றிற்குப் பொருத்தமான விடையில் ஏதோ ஒரு வகையில் பொருத்தமாக உள்ளது. அவற்றை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01)

| X | Y |
|---|---|
| (i) போர்த்துக்கல் | A. ஜக்லிஸ் காட்டியர் |
| (ii) ஸ்பானியா | B. ஹென்ரி ஹட்சன் |
| (iii) இங்கிலாந்து | C. வஸ்கொட காமா |
| (iv) பிரான்ஸ் | D. பர்டினன்ட் மகெலன் |
| (v) ஒல்லாந்து | E. வோல்டர் ரலே |

(1) ACBED (2) CABED (3) DECAB (4) CAEBD (5) CDEAB (..........)

02)

| X | Y |
|---|---|
| (i) பிரான்சிஸ்கோ பிசாரோ | A. அமெரிக்காக்கண்டம் |
| (ii) பர்னன்டோ கோடெஸ் | B. குவிபெக் |
| (iii) சம்ப்லேன் மாக்விடே | C. மெக்சிகோ |
| (iv) அமெரிக்கோ வெஸ்புசி | D. ஆபிரிக்காவின் தென்முனை |
| (v) பர்த்தலோமியு டயஸ் | E. பேரூ தேசம் |

(1) ACDEA (2) BADEC (3) ECBAD (4) EBCAD (5) BDACE (..........)

* **இலக்கம் 03 - 04 வரையிலான அனைத்து வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் இருந்து விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று குறிப்பிட்ட தலைப்புக்குப் பொருத்தமற்றது. பொருத்தமற்ற விடயத்தைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

03) நாடுகாண் பயணங்களுக்குத் துணை புரிந்த காரணம்

(1) ஆசியப் பொருட்களை ஐரோப்பாவில் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிக்கல்.
(2) விஞ்ஞான வளர்ச்சியால் உபகரணங்கள் செய்யப்பட்டமை.
(3) தேசிய அரசுகளின் ஆட்சியாளர்களின் அனுசரணை.
(4) 1453 ஆம் ஆண்டு முஸ்லிம்களால் தோற்கடிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தமது தோல்வியை நிவர்த்தி செய்யும் நோக்கம்.
(5) இத்தாலியும் ஜேர்மனியும் ஐக்கியமடைந்ததால் ஏற்பட்ட அரசியல் நிலைப்பாடு.

(..........)

04) நாடுகாண் பயணங்களின் விளைவு

(1) ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கக் கண்டங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிபணிதல்.
(2) கிறிஸ்தவ சமயம் உலகம் முழுவதும் பரவுதல்.
(3) ஐரோப்பிய பண்பாடு, தொழில்நுட்பம் என்பன உலகம் முழுவதும் பரவியமை.
(4) தேசிய அரசுகள் தோற்றம் பெறல்.
(5) கைத்தொழில் புரட்சியின் பரவலுக்கு உதவியமை.

(..........)

## கணிப்பீடும் மதிப்பீடும் 02

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இனத்தவர் நாடுகாண் பயணங்களில் ஈடுபடுவதற்கான முக்கிய காரணங்கள் யாவை என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

02. நாடுகாண் பயணங்களால் ஏற்பட்ட விளைவுகளை விபரிக்குக. (07 புள்ளிகள்)

03. ''நாடுகாண் பயணங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் அதிகாரப் போட்டியை ஏற்படுத்து வதற்குக் காரணமாகியது.''

    i. நாடுகாண் பயணம் என்றால் என்ன? (01 புள்ளி)

    ii. நாடுகாண் பயணங்களுடன் தொடர்புடைய ஐரோப்பிய நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

    iii. நாடுகாண் பயணங்களுக்கு உதவிய காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

    iv. நாடுகாண் பயணங்களின் விளைவுகளின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட கூற்றினை விளக்குக. (07 புள்ளிகள்)

04. ஐரோப்பாவில் புதுயுகம் தோன்றுவதற்கு நாடுகாண் பயணமும், ஐரோப்பிய ஆட்சிப் பரவலும் உதவிய விதத்தினைப் பரிசீலிக்குக. (14 புள்ளிகள்)

## கணிப்பீடும் மதிப்பீடும் 03

* **உலகப் படமொன்றில் பின்வரும் நாடுகளைக் குறித்துப் பெயரிட்டு அவைகளில் இரண்டு தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.**

(i) மெக்சிகோ
(ii) பேரு தேசம்
(iii) கனடா
(iv) தென்னாபிரிக்கா
v. இந்தியா
vi. பிரான்ஸ்
vii. ஸ்பானியா
viii. இங்கிலாந்து

(சரியான விடைக்கு 1 புள்ளி, சிறுகுறிப்பிற்கு 10 புள்ளிகள்)

(18 புள்ளிகள்)

# தேசிய அரசுகளின் எழுச்சி

**தேசிய அரசு**

குறிப்பிட்ட தேச எல்லையையும், குறிப்பிட்ட மக்கள் தொகையையும் கொண்டு சமாந்தரமான மொழியொன்றைப் பேசும், பொதுவான தேசிய அடையாளத்துடனான அரசியல் அலகு தேசிய அரசு எனப்படும்.

**தேசிய அரசுகள் தோற்றம் பெறுவதற்கான பின்னணி**

- எழுச்சி பெற்ற மத்திய தர வகுப்பினரின் செயற்பாடு
- மக்கியவல்லி, ஜீன்போடின் எனும் தத்துவஞானிகளின் கருத்துக்கள்
- மறுமலர்ச்சியின் தாக்கம்
- வணிகவாதம்
- தேசப்பற்று பிரபல்யமடைதல்

**தேசிய அரசுகளின் பொது இயல்பு**

- நிச்சயமான புவியியல் ரீதியான தேச எல்லைகளைக் கொண்டிருத்தல்
- ஒன்றுபட்ட முடியாட்சி
- பிரதேசத் தலைவர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்படல்.
- தனிப்பட்ட படையை இல்லாதொழித்தல்
- மன்னனுக்கு நிரந்தரமான படை காணப்பட்டமை
- தேசிய சட்டத்தொகுதியொன்று தோற்றம் பெறல்
- தேசிய வரிக் கொள்கை பின்பற்றப்படல்.
- ஊதியம் பெறும் உத்தியோகத்தர்களின் தொகுதி உருவாதல்.

முதன் முதலில் ஸ்பானியா, இங்கிலாந்த, பிரான்ஸ் என்பவற்றை மையமாகக் கொண்டு தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன.

**இங்கிலாந்து**

ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற முதலாவது தேசிய அரசாகும்.

- நோமண்டி ஆட்சியாளனான விலியம் 1066 ஆம் ஆண்டு இங்கிலாந்தை வெற்றி கொண்டு பிளவுற்றிருந்த பிரதேசங்களை ஒன்றிணைத்தமை.
- சவிஸ்பரி உடன்படிக்கையின் மூலம் மானியப் பிரபுக்களை மன்னனுக்கு சார்பாகவும், பணிவாகவும் வைத்துக்கொள்ளல்.
- 1154 ஆம் ஆண்டு ஆட்சி பீடமேறிய 2ஆம் ஹென்றி மன்னன் பொதுச் சட்டத்தொகுதியை ஆரம்பித்ததுடன் நாடு முழுதும் அமுல் செய்யும் பொருட்டு நடமாடும் நீதிபதிகளையும், ஜுரி முறைமையையும் அறிமுகஞ் செய்தமை.
- 1485 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த 7ஆம் ஹென்றி மன்னன் டியுடர் என்ற பெயரில் புதிய அரச பரம்பரை ஒன்றை ஆரம்பித்து பிரபல முடியாட்யை நிறுவ நடவடிக்கை எடுத்தமை.
- பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்து மத்திய வகுப்பினரின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளல்.
- கலவரக்கார பிரபுக்களுக்கு எதிராக செயற்படுவதற்காக ‘ஸ்டார் சேம்பர்’ எனும் விசேட நீதிமன்றத்தை நிறுவுதல்.
- திருச்சபையின் அதிகாரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமை.
- பலம் வாய்ந்த கப்பற்படையைக் கட்டியெழுப்பியமை.
- 8 ஆம் ஹென்றி மன்னனின் ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றத்துடன் தொடர்புப்படுத்திப் புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்தை செயற்படுத்தி இங்கிலாந்திற்கும், உரோமன், கிறிஸ்தவ சபைக்கும் இடையில் இருந்த தொடர்பை முடிவுக்கு கொண்டுவந்து அங்கிளிக்கன் சபையை நிறுவியதுடன் அதன் தலைவனாகவும் மன்னன் செயற்பட்டமை.

- ஸ்டுவர்ட் வம்சம் அரசாளத் தொடங்கியதும் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையே சமய ரீதியான முரண்பாடுகள் ஏற்படல்.
- 1688 ஆம் ஆண்டின் மகோன்னத புரட்சி - உரிமை தொடர்பான பிரகடனம்.
- உரிமை தொடர்பான பிரகடனத்தின் மூலம் மன்னனது/அரசியினது அதிகாரத்தைப் பாராளுமன்றத்தின் கீழ் கொண்டுவந்ததுடன் பாராளுமன்ற ஆதிக்கத்தின் கீழ் புரட்டஸ்தாந்து அரசு நிறுவப்பட்டது. அதனுடன் இங்கிலாந்தில் தேசிய அரசு கட்டியெழுப்பப்படுவது நிறைவடைதல்.

## ஸ்பானியா தேசிய அரசாக கட்டியெழுப்பப்படல்

- 1469 ஆம் ஆண்டு அரகனில் பேர்டினட் இளவரசனுக்கும் கஸ்டல் இளவரசிக்கும் இடையே நடைபெற்ற திருமணம்.
- 1492 ஆம் ஆண்டு கிரனடான்வையும், 1512 ஆம் ஆண்டு நவாரையும் இணைத்துக்கொள்ளல் நாடுகாண் பயணம் வழியாக மற்றைய பிரதேசங்களை ஸ்பானியாவுடன் இணைத்து அதனைப் பலப்படுத்தல்.
- நேபில்ஸ், சிசிலி, சார்டினியா ஆகிய பிரதேசங்களில் ஸ்பானியா ஆதிக்கத்தைத் தோற்றுவித்தல். புனித உரோம பேரரசுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.
- ஸ்பானியாவில் பல சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளல், பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்து மத்திய வகுப்பினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.
- சமய சீர்த்திருத்தத்தின் மூலம் தேசிய உணர்வை ஏற்படுத்தல்.
- முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கு பரிசுத்த உரோம பேரரசின் பதவி கிடைத்தல்.
- ஸ்பானியா குடியேற்ற நாடுகளைக் கொண்ட பேரரசாக உருவெடுத்தல்.
- ஸ்பானியாவை ஐரோப்பாவில் செல்வம் மிக்க நாடாகத் திகழச் செய்தலும் உள்நாட்டு சீர்த்திருத்தங் களை மேற்கொள்ளலும்.
- இரண்டாம் பிலிப் மன்னன் விவாகத் தொடர்பினை ஏற்படுத்தி அரசுரிமையை நிலைநாட்டிக் கொள்ளல்.
- மானிய பிரபுக்களின் பலத்தைக் குறைக்க முயலுதல்.

## பிரான்ஸ்

- பிலிப் ஒகஸ்டட், 9ஆம் லூயி, 4ஆம் பிலிப், IIஆம் லூயி போன்ற அரசர்கள் பிரான்சில் தேசிய அரசு தோன்றுவதற்கு அத்திவாரம் இடல்.
- பிலிப் ஒகஸ்டஸ் மன்னன் பிரான்சில் இங்கிலாந்து மன்னனுக்கு இருந்த அதிகாரத்தை முடிவுக்கு கொண்டுவந்து வெளிநாட்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தல்.
- 9ஆம் லூயி மன்னன் பலவிதக் கொள்கைகள் மூலம் பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்து, சட்டம், பணம் அச்சிடல் போன்ற துறைகளில் சீர்த்திருத்தங்களை அறிமுகஞ் செய்தல்.
- திருச்சபைக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து வரி அறவிடுதல்.
- நைட்களின் சொத்துகளில் பெரும்பான்மையானதை மன்னன் தனதாக்கிக் கொள்ளல்.
- மன்னனுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படும்படி ஸ்டேட், ஜெனரல் சபையை வற்புறுத்தல்.
- இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் மன்னன் 4ஆம் பிலிப் தேசிய அரசைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டான்.
- பிரிட்டனின் பிரதேசம் தவிர்ந்த பிரான்சின் ஏனைய பிரதேசங்களில் பிரபுக்களின் ஆதிக்கத்தை தோற்கடித்து அப்பிரதேசங்களை மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் 2ஆம் லூயி மன்னன் வெற்றி கண்டான்.
- 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்களுக்கும் ஹியுகனோ எனும் பிரான்சின் புரட்டஸ்தாந்தருக்கும் இடையே நடைபெற்ற யுத்தம் காரணமாக குழப்ப நிலையை அடைந்த பிரான்சில் புரட்டஸ்தாந்துவாத நவாரின் ஹென்றி கத்தோலிக்க மதத்தைத் தழுவி 4 ஆம் ஹென்றி என அரசனானது பிரான்சில் தேசிய அரசு உருவாக வழிவகுத்தமை.

## 4 ஆம் ஹென்றி மன்னனின் செயற்பாடுகள்

- சமய சகிப்புத் தன்மையுடைய 4 ஆம் ஹென்றி நான்றிஸ் நல்லாணை மூலம் ஹியுகனோருக்கு சமய சுதந்திரம் அழித்துச் சமய சமத்துவத்தை ஏற்படுத்தியமை.
- நீதி அமைச்சர் சலீஹி பிரபுவின் ஆலோசனையின்படி வரி சீர்த்திருத்தம் ஒன்றினை அறிமுகஞ் செய்தமை.
- விவசாயத்தையும், கைத்தொழிலையும் முன்னேற்றி நாட்டில் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தியமை.
- பிரான்சிற்குச் சொந்தமான வெளிநாட்டுப் பேரரசை கட்டியெழுப்புவதற்கு அத்திவாரமிட்டு பிரான்சிய நாடுகாண் பயணிகளுக்கு அனுசரணை வழங்கி நேவாஸ் கோஷியாவில் பிரான்சிய குடியேற்றத்தை நிறுவியமை.
- 4 ஆம் ஹென்றி மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த 13 ஆம் லூயி மன்னன் இளம் வதினராக இருந்ததால் பிரதம அமைச்சராக இருந்த ரிச்லியு பிரான்சில் தேசிய அரசை தோற்றுவிக்க பெரும் பணியாற்றியமை.
- பிரான்சின் ஐக்கியத்தை பலப்படுத்துதல்.
- 30 வருட போரில் ஆஸ்திரியாவின் ஆட்சியாளர்களான ஹப்ஸ்பர்க் வம்சத்தை தோற்கடித்து பிரான்சை ஐரோப்பாவில் உயர் நிலைக்கு கொண்டுவருதல். பிரான்சின் பிரபுக்களினதும் ஹியுகனோக்களினதும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல்.
- பிரான்சின் நிருவாகம் தொடர்பாக மன்னனால் இன்டென்டன்ட் எனும் அதிகாரிகளை நியமித்தல்.

## 13 ஆம் லூயி மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த 14 ஆம் லூயி மன்னனின் செயற்பாடுகள்

- தனது ஆட்சிக்குத் தெய்வீக வழியுரிமையைப் பயன்படுத்திக் கொள்ளல்.
- மன்னனுக்குத் தேவையான விதத்தில் அதிகாரிகளை நியமித்தலும் நீக்குதலும்.
- வணிகவாத பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்துதல் (வர்த்தகச் சங்கத்தை நிறுவதற்கு அனுசரணை வழங்குதல்)
- நான்றிஸ் நல்லாணையை ரத்துச் செய்து ஹியுகனோர்கள் அனுபவித்த அதிகாரங்கள் சலுகைகள் என்பவற்றை நீக்குதல்.
- சமய நடவடிக்கைகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல்.
- பிரான்சின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வெளிநாட்டு யுத்தங்களில் ஈடுபடுதல்.
- பாரிஸ் நகரைப் பிரான்சிய ஐக்கியத்தின் அலங்கார மத்திய நிலையமாக்குதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **இலக்கம் 01 - 05 வரையிலான வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏனையவற்றுடன் பொருத்தமற்றது. அதனை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1)
1. வணிகவாதம்
2. பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்தல்
3. ஒரே நீதித்தொகுதி
4. பாப்பரசரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்
5. நிச்சயமான புவியியல் தேச எல்லை இருந்தமை (...............)

(2)
1. கஸ்டீல்
2. அரகன்
3. நேப்பிள்ஸ்
4. நவார்
5. கிரனடா (...............)

(3)
1. 4 ஆம் ஹென்றி
2. 2 ஆம் பிலிப்
3. ரிச்சலியு
4. மசாரின்
5. 14 ஆம் லூயி (...............)

(4)
1. கிரேக்க மொழி
2. உரோம மரபு
3. லௌகீகம்
4. கோதிக்கலை
5. மானிடவாதம் (...............)

(5)
1. அதிகாரத்தை மையப்படுத்துதல்.
2. மன்னனின் ஸ்டாடர் போர்ப் படை
3. பிரபுக்களின் அதிகாரம் அதிகரித்தல்
4. தேசிய அரசு
5. பணப் புழக்கம் (...............)

- **6 ஆம் வினாவுக்கு ஐந்து சோடி விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருத்தமற்றது. பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(6)
1. 4ஆம் ஹென்றி - நான்றிஸ் நல்லாணையை அமுல் செய்தல்
2. ரிச்லியு - ஹியுகனோரின் அரசியல் அதிகாரத்தை நீக்குதல்
3. மசாரின் - 30 வருடகால போரை வெற்றிக் கொள்ளல்
4. 13 ஆம் லூயி - ஏழாண்டுப் போரை வெற்றிக் கொள்ளல்
5. 14 ஆம் லூயி - அரசிகளின் யுத்தத்தில் பங்கேற்றமை (...............)

- **ஏழாம் வினாவின் தலைப்பிற்கு ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாது. பொருந்தான அவ்விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எழுதுக.**

(7) தேசிய அரசினைக் கட்டியெழுப்புவதுடன் தொடர்புடைய மன்னர்கள்
1. பர்டினன்ட், இசபெளா
2. 16 ஆம் லூயி மன்னன்
3. முதலாம் சார்ள்ஸ் மன்னர்
4. ஏழாம் ஹென்றி மன்னன்
5. நான்காம் ஹென்றி மன்னன் (...............)

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இத்தாலியை அடிப்படையாகக் கொண்டு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக. (14 புள்ளிகள்)

02. மறுமலர்ச்சியின் தாக்கத்தால் எழுச்சிபெற்ற துறைகளைப் பகுப்பாய்வு செய்க. (14 புள்ளிகள்)

03. மறுமலர்ச்சி நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு உதவிய விதத்தினைத் தெளிவுபடுத்துக. (14 புள்ளிகள்)

04. 1. புதிய முடியாட்சி முறையின் பிரதான இயல்புகள் யாவை? (06 புள்ளிகள்)

2. பின்வரும் நபர்களில் ஒருவரைத் தெரிவு செய்து புதிய முடியாட்சியைக் கட்டியெழுப்புவதில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணியினைப் பரிசீலனை செய்க.
அ. பிரான்சின் பர்டினன்ட், இநபெளா தம்பதியினர்
ஆ. பிரான்சின் கர்தினால் ரிச்லியு
இ. இங்கிலாந்தின் ஏழாம் ஹென்றி மன்னன் (08 புள்ளிகள்)

05. ‘நவீன ஐரோப்பிய வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில் தோன்றிய சிறந்த அரசாக திகழ்ந்தது தேசிய அரசாகும். பின்வரும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்து தேசிய அரசுகளின் பிரதான இயல்புகளைத் தெளிவுப்படுத்துக.
1. புதிய முடியாட்சி
2. வணிக வாதம்
3. பலம் வாய்ந்த நிரந்தரப் படை (14 புள்ளிகள்)

# மதச் சீர்த்திருத்தமும், புரட்டஸ்தாந்து நடவடிக்கையும்

## அறிமுகம்

மேற்கு ஐரோப்பிய வராலாறு மத்திய யுகத்திலிருந்து நவீன யுகத்திற்கு மாறியதில் முக்கிய நிகழ்வாக விளங்குவது மதச்சீர்த்திருத்தமாகும். 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட இந்த மதச் சீர்த்திருத்தத்தின் மூலம் கிறிஸ்தவ சபை பிளவுற்றது. இந்நடவடிக்கையின் முக்கிய நோக்காக விளங்கியது கத்தோலிக்க திருச்சபையில் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்துவதாகும். இவ்வாறு 1516 ஆம் ஆண்டு கத்தோலிக்க சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட எதிர் நடவடிக்கைகள் புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தம் எனப்படுகின்றது.

மத்திய காலத்தின் பின்னரைப் பகுதியிலிருந்த பாப்பரசர் தொடக்கம் குருமார் வரை தவறான வழியில் சென்றதுடன், மானிய முறைக் காலத்தில் நிலவிய கிறிஸ்தவ சபை பிளவுபடத் தொடங்கியது. இவ்வாறு புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்தால் உரோமன் கத்தோலிக்க மதத்திற்கு எதிராக ஏற்பட்ட சவால்களின் காராணமாக எதிர்மதச் சீர்த்திருத்தமும் ஏற்பட்டது. பின்னர் மதத்தை முன்வைத்து முப்பதாண்டு போர் முதலான சமயப் போர்களும் ஏற்பட்டன. இவ்வாறு ஒரு நிகழ்வால் மற்றுமொரு நிகழ்வு ஏற்பட்டதை வரலாற்றை நோக்குகையில் அறியக்கூடியதாக உள்ளது. இந்நிகழ்வுகள் அனைத்திலும் கவனம் செலுத்திச் சமயத் துறைகளில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாயத்தின் ஏனைய துறைகளில் தாக்கம் செலுத்தும் வித்ததினை விளங்கிக் கொண்டு அதற்கு ஏற்ற விதத்தில் மாற்றங்களுக்கு முகங்கொடுக்கத் தேவையான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல் இந்த அலகைக் கற்பதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 3.0** : • சமயத் துறையில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாயத்தின் ஏனைய துறைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அடையாளம் கண்டு அந்த மாற்றத்திற்கு முகங்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 ஐரோப்பாவில் சமய சீர்த்திருத்தம் ஏற்படுவதற்கு வழிவகுத்த காரணிகளைப் விளக்குவார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :
- மதச் சீர்த்திருத்தத்திற்கான பின்னணியை விளக்குவார்.
- மதச் சீர்த்திருத்த்தத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.
- மதச் சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய நாடுகளை புறவுருவப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### மதச் சீர்த்திருத்தம்

- பாப்பரசரதும், கிறிஸ்தவ சபையினதும் துர்நடத்தைக்கு எதிராக எழுந்த கருத்துக்களும் செயற்பாடுகளுமே மதச் சீர்த்திருத்தம் எனப்படுகின்றது.

### மதச் சீர்த்திருத்தத்தின் பின்னணி

மதச் சீர்த்திருத்ததிற்குப் பல காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

## (1) சமயக் காரணங்கள்

- திருச்சபை ஊழல்கள் நிறைந்ததாக இருந்ததுடன் செல்வம் மிகுந்த நிறுவனமாகவும் திகழ்ந்தமை.
- மத்திய காலத்தில் கத்தோலிக்கச் சபை பெரும் நிலப்பரப்பையும் சொத்துக்களையும் உரிமையாக்கிக் கொண்டிருந்தமை.
- ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் பீற்றர்பென்ஸ் எனும் வரியைப் போன்று குடும்பத்தின் வருமானத்தின் 1/10 பகுதியை டயித் எனும் வரியாக செலுத்த வேண்டியிருந்தமை.
- கத்தோலிக்க குருமார் சுகபோக வாழ்வு வாழ்ந்ததுடன் லௌகீக வாழ்வுக்கு இசைவாக்கம் பெற்றிருந்தமை.
- அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் பொருட்டு கிறிஸ்தவ சபை பல வழிகளை மேற்கொண்டமை.
- கிறிஸ்தவ உலகின் நன்மையான நிலைப்பாட்டிற்கு தடங்கல் ஏற்படுமாயின் லௌகீக ஆட்சியாளர்களின் உள்விவகாரங்களில் தலையிட பாப்பரசருக்கு அதிகாரம் உண்டெனவும், பாப்பரசர் இறைவனை விடத் தாழ்ந்தவர் என்றும் மனிதரை விட உயர்ந்தவர் என்றும் அனைவரையும் கேள்விக்கு உள்ளாக்கவும் அவரைக் கேள்விக்கு உள்ளாக்க முடியாது எனவும் கூறுதல்.
- மூன்றாம் இன்னசன்ட் பாப்பரசர் கத்தோலிக்க சபையின் ஊழல்களுக்கு எதிராக செயற்பட்டோரைக் கொலை செய்வித்தமை.

  உதாரணம் : பொஹிமிய இனத்தவரான ஜோன் ஹஸ் (கி.பி. 1363 - 1415)
  சவண ரோலா (கி.பி. 1452 - 1498)
- பாப்பரசர் பதவியின் மதிப்புக் குறைவடைதல்
  - பாப்பரசர் ஐரோப்பிய அரசியல் செயற்பாடுகளில் அதிகம் தலையிட்டமையால் இறைவனின் பிரதிநிதியாக இருப்பதைவிட உலகில் ஆட்சியாளராக அவர் செயற்படுவதை கிறிஸ்தவ மக்கள் உணர்ந்ததால் பாப்பரசர் பதவிக்கு உரிய மரியாதை குறைவடையத் தொடங்கியமை

- ஒரே வேளையில் பல பாப்பரசர்கள் நியமனம் பெறல்
  - எட்டாம் பொனிபஸ் பாப்பரசரின் மரணத்திற்குப் பின்னர் 1305 ஆம் ஆண்டு பிரான்சிய இனத்தைச் சேர்ந்த ஆயர் ஒருவர் ஆறாவது கிளமன்ட் எனும் பெயரில் பாப்பரசரானார்.
  - அவர் பாப்பரசர்களின் பாரம்பரிய மத்திய நிலையமான உரோமுக்குச் செல்லாது றோன் நதிக்கரையில் உள்ள அவிஞ்சோன் நகரில் தங்கினார்.
  - இது முதல் பாப்பரசர் பதவிக்கு வந்த அனேகர் பிரான்சிய இனத்தவராவார்.
  - அந்தப் பாப்பரசர்கள் உரோமில் அன்றி பிரான்சில் வாழ்ந்ததுடன் 1309 - 1377 வரையிலான காலப்பகுதி பாபிலோனிய சிறைவாசம் என அழைக்கப்பட்டது.
  - 1377 ஆம் ஆண்டு பாப்பரசர் பதவிக்கு வந்த 2ஆம் கிரகரி பாப்பரசர் உரோமிய மக்களின் வேண்டுகோளுக்கு அமைய உரோமில் தங்குவதற்குச் சென்றார்.
  - 2ஆம் கிரகரி பாப்பரசரின் பின்னர் ஆறாம் உர்பன் எனும் ஆயர் பாப்பரசர் பதவிக்கு வந்ததை பிரான்சின் கர்தினால்மார்கள் ஏற்றுக் கொள்ளாது 13ஆம் கிளமெண்ட் பாப்பரசரைத் தெரிவு செய்தனர்.
  - திருச்சபையைப் பாதுகாக்கும் நோக்குடன் அறிஞர்களாலும், கல்விமான்களாலும் அமைக்கப் பட்ட நிறுவனத்தால் மேற்கூறப்பட்ட இரு பாப்பரசர்களுக்குப் பதிலாக 5ஆம் அலெக்சாண்டர் எனும் பெயரில் பாப்பரசர் ஒருவரைத் தெரிவு செய்தனர்.
  - பாப்பரசர் பதவி தொடர்பாக இருந்த மோதல்கள் முடிவுக்கு வராமையால் பரிசுத்த உரோமப் பேரரசின் தலையீட்டில் இச்சிக்கல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மேற்கூறப்பட்ட மூன்று பாப்பரசர்களுக்கும் பதிலாகப் புதியப் பாப்பரசர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
  - இம்மோதல்களால் பாப்பரசர் பதவிக்கு இருந்த மதிப்புக் குறைந்தது.
  - இவை தவிர பாப்பரசர்களைப் போன்று ஏனைய ஆயர்களும், குருமார்களும் உலக இன்பங்களுக்கு இலக்காகிக் கத்தோலிக்க சபையின் ஆன்மீக, ஒழுக்கத் துறைகளில் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவில்லை.

## (2) பொருளாதாரக் காரணங்கள்

- திருச்சபைக்குச் செலுத்த வேண்டிய வரி தொடர்பான மக்களின் அதிருப்தி.
- பல நாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட வரி உரோமுக்கு அனுப்ப வேண்டியிருந்தமை. தமது நாடுகளில் இருந்து வருடந்தோறும் பெருந்தொகையான பணம் உரோமுக்குச் செல்வதை எழுச்சியுற்றுவந்த தேசிய அரசுகளின் மன்னர்களும், மத்திய வகுப்பைச் சேர்ந்த மக்களும் எதிர்த்தமை.
- திருச்சபைக்கு உரிய செல்வத்தைத் தனதாக்கிக் கொள்ள முடியாட்சி ஆட்சியாளர்களும், வர்த்தக சபையினரும் முயன்றமை.
- செல்வத்தைச் சேகரிக்கும் பொருட்டுத் திருச்சபை பல வழிமுறைகளைக் கையாண்டமை.
- புதிய வரிவிதிப்பு, பழைய வரிகளை முறையாக சேகரித்தல், நிதி நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்தல்.
- கத்தோலிக்கச் சபையின் உயர் பதவிகள் பணத்திற்கு விற்கப்படல்.
- பாவ மன்னிப்புப்பத்திரம் விற்பது ஊழல் நிறைந்ததாகுதல்.

## (3) அரசியல் காரணங்கள்

- தேசிய அரசு முறையில் மன்னர்களுக்கும், பாப்பரசர்களுக்கும் இடையே அதிகாரம் தொடர்பாக மோதல்கள் ஏற்படல்.
  உதாரணம் : பிரான்சின் நான்காம் பிலிப் மன்னனும், இங்கிலாந்தின் முதலாவது எட்வட் மன்னனும் கத்தோலிக்க சபையின் நிலங்களிலிருந்து வரி அறவிடல்.
- பாப்பரசரின் எதிர்ப்பைக் கவனத்தில் கொள்ளாது ஆயர்களைக் கைது செய்தல், சில சந்தர்ப்பங்களில் பாப்பரசர்களையும், குருமார்களையும் அரசர்கள் நியமித்தல்.
- பரிசுத்த உரோமப் பேரரசனுக்கும், ஜேர்மனியின் பிரதேச இளவரசர்களுக்குமிடையே மோதல்களை ஏற்படுத்துதல்.

## (4) அறிவுக் காரணங்கள்

- இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தை ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்தமை.
  ஜோன் வைக்ளிப் - ஆங்கிலம்
  மார்ட்டின் லூதர் - ஜேர்மன்
- மறுமலர்ச்சியால் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி காரணமாக அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை, இதனால் வேதாகமத்தில் பல பிரதிகள் மக்களைச் சென்றடைந்தமை.
- கல்வி வளர்ச்சியுடன் கட்டியெழுப்பப்பட்ட சுதந்திரக் கருத்துக்களால் திருச்சபையின் கருத்துக்கள் வீழ்ச்சியுற்றமை.
- ஐரோப்பாவில் நீண்ட காலம் நிலைத்திருந்த கத்தோலிக்க மதம் பிளவுபட மேற்கூறியவை காரணங்களாகின.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) மதச் சீர்திருத்தம் ஏற்படுதவற்குக் காரணமாக அமையாத விடயம் எது?
1. கத்தோலிக்கத் திருச்சபையின் ஊழல்.
2. மாட்டின் லூதரின் தலைமைத்துவம்.
3. பாவமன்னிப்புப்பத்திரம் விற்றமை.
4. கல்வினுக்கும் பாப்பரசருக்கும் இடையிலான நெருங்கிய உறவு.
5. கத்தோலிக்க சபையிடமிருந்த செல்வத்தை அரசுடமையாக்க ஆட்சியாளர்கள் முயன்றமை.

(..............)

02) பாப்பரசரின் பாரம்பரிய தலைமையகம் அமைந்த இடம் எது?
1. அவிஞ்ஞோ 2. லண்டன் 3. மாசெல்ஸ் 4. ஜெனோவா 5. உரோம்

(..............)

03) 'பாபிலோனிய சிறைவாசம்' எனப்படுவது எதனை?
1. பாபிலோனியா உரோமுக்கு உரியதாகுதல்.
2. பாப்பரசர்கள் பிரான்சில் வாழ்ந்த காலம்.
3. துருக்கியர் ஐரோப்பாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டியமை.
4. கத்தோலிக்க சபையின் அதிகாரம் பரவியமை.
5. மன்னர்கள் பாப்பரசரின் அரசைக் கைப்பற்றியமை. (..............)

04) மதச் சீர்திருத்தத்திற்கு வழிகோலிய காரணங்களைத் தெளிவுபடுத்துக.

(14 புள்ளிகள்)

05) பாப்பரசர்களின் செயற்பாடுகள் மதச்சீர்த்திருத்தத்திற்குக் காரணமாய் அமைந்த விதத்தினை விபரிக்குக.

(14 புள்ளிகள்)

**தேர்ச்சி மட்டம்** : 3.2 புரட்டஸ்தாந்து மதச் சீர்த்திருத்தத்தினதும் எதிர்மதச் சீர்த்திருத்தத்தினதும் விளைவுகளை ஆராய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :
- புரட்டஸ்தாந்த சீர்த்திருத்தத்தையும், எதிர்மதச் சீர்த்திருத்தத்தையும் தெளிவுப்படுத்துவார்.
- எதிர்மதச் சீர்த்திருத்ததின் விளைவுகளைப் பகுத்தாய்வார்.
- உரோமன் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்களின் பரவலை ஐரோப்பியப் படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## புரட்டஸ்தாந்துச் சீர்த்திருத்தமும், எதிர் மதச் சீர்த்திருத்தமும்.

- உரோமன் கத்தோலிக்கச் சபைக்கு எதிராகப் புரட்டஸ்தாந்து மதச் சீர்த்திருத்தம் ஜேர்மனியில் ஆரம்பமானது.
- இவ்வாறு புரட்டஸ்தாந்து இயக்கம் ஜேர்மனியில் ஆரம்பிப்பதற்கான காரணங்கள் பல உள்ளன.
- ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோன்றிய பொழுதிலும் ஜேர்மனியில் அவ்வாறான வளர்ச்சி ஏற்படவில்லை.
- ஜேர்மனிய பிரதேச இளவரசர்களுக்கும், பரிசுத்த உரோமப் பேரரசனுக்குமிடையே மோதல் ஏற்பட்டமை.
- பலம்வாய்ந்த மத்திய நிருவாகத்தை உடைய ஆட்சி முறை ஜேர்மனியில் இல்லாமை.
- ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விட ஜேர்மனியில் இருந்த பெருந்தொகையான செல்வம் உரோமைச் சென்றடைந்தமை.
- ஜேர்மனியில் திருச்சபை மிகவும் ஊழல் நிறைந்ததாகக் காணப்பட்டமை.
- ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்திற்குத் தலைமை தாங்கியவர் மார்ட்டின் லூதர் ஆவார். மத சீர்த்திருத்தத்தில் அவரது பங்களிப்புப் பின்வருமாறு:
- 1485 ஆம் ஆண்டு தியுரிங்கியாவில் எலிசபெத் எனும் கிராமத்தில் பிறந்தார்.
- ஜேர்மனியில் எர்வட் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான அவர் 1511 ஆம் ஆண்டு இறையியல் தொடர்பான பேராசிரியர் ஆனார்.
- வேதாகமம் தொடர்பான விரிவான கல்வியே லூதரின் பாடப்பரப்பாகும்.
- திருச்சபையின் படிப்பினைகள் தொடர்பாக அவர் வினாக்கள் எழுப்பினார்.
- அவர் இது தொடர்பாக கேட்ட வினாக்கள் இரண்டாகும்.
  1. பிறப்பிலேயே பாவம் உடைய மனிதன் மீட்புப் பெறுவது எவ்வாறு?
  2. மனிதன் மீட்படைய ஒரே வழி திருச்சபைதானா?

  இவையே இவர் எழுப்பிய வினாக்களாகும்.
- 1517 ஆம் ஆண்டு ரெட்சால் எனும் குரு பாவமன்னிப்புப் பத்திரம் விற்றமை தொடர்பாக விமர்சித்து அதற்கு எதிராக 95 நியாயங்களை முன்வைத்து 1517 அக்டோபர் மாதம் 31 ஆந் திகதி விற்றன்பேர்க் ஆலய கதவில் ஒட்டினார்.
- பிறப்பிலேயே பாவத்துடனான மனிதன் இறைவனின் கருணையாலும் இறைவன் மீதினில் கொள்ளும் பக்தியினாலும் மீட்படைய முடியும் என்பதே லூதர் முதன் முதல் முன்வைத்த படிப்பினையாகும்.
- தனிநபருக்கும் இறைவனுக்கும் இடையே நடுவில் குருவானவர் இருக்க வேண்டும் எனக்கூறும் கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினையை லூதர் நிராகரித்தார்.
- சாதாரண குருவானவர்கள் போன்றே பாப்பரசர்களும் தவறிழைக்கலாம்.
- தனிநபரொருவருக்குத் தனது ஆன்ம விசுவாசத்தைக் கட்டியெழுப்ப உதவும் ஒரே வழி வேதாகமம் ஆகும்.

- லூதர் வேதாகமத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.
- ஜேர்மனியை மையமாகக் கொண்டு ஆரம்பமான புரட்டஸ்தாந்து இயக்கம் பின்னர் ஐரோப்பாவின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவியது. இதில் முக்கிய இடத்தினை வகிக்கும் நபர்கள்:
  - சுவிட்சர்லாந்து - உள்ரிச் சுவிங்லி
  - பிரான்ஸ் - ஜோன் கல்வின்
  - இங்கிலாந்து - ஜோன் வைக்ளிப், எட்டாம் ஹென்றி
- இந்த நாடுகளை முன்னணியாகக் கொண்டு ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் ஐரோப்பாவுக்கு புரட்டஸ்தாந்து மதம் பரவியது.

### மதச் சீர்த்திருத்த்தின் விளைவுகள்

- ஒன்றாக இருந்த திருச்சபை உரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து என பிளவுபடல்.
- ஐரோப்பா மத ரீதியாக இரண்டாகப் பிளவுபட்டமை.
- பாப்பரசர்களின் பலம் குறைந்தமை.
- சமயத் தலைமைத்துவம் அரச நிருவாகத்திற்கு கீழ்படல்.
- எதிர்மதச் சீர்த்திருத்தம் ஏற்பட்டாலும் அதன்மூலம் கத்தோலிக்க சபையில் பலவிதப் பிரிவுகள் உருவாகுதலும்.
- மறை பரப்புப் பணி (மிசனரி) ஆரம்பமாதல்.
- மதம் தொடர்பான யுத்தங்களும், மோதல்களும் ஏற்படல்.

### எதிர் மதச் சீர்த்திருத்தம்

- புரட்டஸ்தாந்து இயக்கத்தால் கத்தோலிக்க சபைக்குச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் பொருட்டு கத்தோலிக்கச் சபையால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடே எதிர்மதச் செயற்பாடாகும்.
- விரைவாக வளர்ச்சியடைந்த பொதுமக்களின் பொறுப்பினைச் சீரமைக்கும் நோக்குடன் கத்தோலிக்க சபையால் பல செயற்றிட்டங்கள் பின்பற்றப்பட்டன. அதற்கிணங்க எதிர் மதச் சீர்த்திருத்தத்தின் நோக்கங்களாவன:
  1. புரட்டஸ்தாந்து எனும் இயக்கத்தால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தகர்க்கப்படல்.
  2. புரட்டஸ்தாந்து மதம் பரவுவதை தடைசெய்தல்.
  3. சமய ஒற்றுமையை நிலைநாட்டல்

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட எதிர்மதச் சீர்த்திருத்தம் பல அம்சங்களைக் கொண்டது.

### 1. இயேசு சபை நிறுவப்படல் (1534)

ஸ்பானிய இனத்தவரான இக்னேசியஸ் லோயாவா (1491 - 1556) அவர்களால் நிறுவப்படல். அவரால் எழுதப்பட்ட ‘ஆத்ம அப்பியாசம்’ எனும் நூல் இயேசு சபையினரின் கைநூலாகியது. கத்தோலிக்க எதிர் மதச் சீர்த்திருத்தத்தில் இயேசு சபை முன்னணியில் திகழ்ந்ததுடன் நன்று ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகவும் இருந்தது. இவ்வமைப்பால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வருமாறு,

- போதனை செய்தல்
- கத்தோலிக்க மதம் பற்றிய கல்வியை வழங்குதல்
- தேவையான சந்தர்ப்பங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்தல்

### 2. திரிதெந்தின் பொதுச் சங்கத்தைக் (Trent) கூட்டுதல் (1545 - 1563)

- 1545 ஆம் ஆண்டு 3 ஆம் பவுல் பாப்பரசர் திரிதெந்தின் (டிரெண்ட்) என்னுமிடத்தில் சங்கத்தைக் கூட்டினார்.
- பல தடவைகள் கூடிய இச்சங்கத்தில் அக்காலத்தில் அழிவுற்ற கத்தோலிக்கச் சபையின் நிலையை மீண்டும் கட்டியெழுப்புவதும், இழந்த அதிகாரத்தை மீள பெற்றுக்கொள்வதுமே இதன் நோக்கங்களாக அமைந்தன.

**இந்நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டுச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.**

1. உண்மையான கத்தோலிக்க மதம் வேதகாமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதென்றும், வேதகாமத்தை விளக்கும் உரிமை கத்தோலிக்க சபைக்கு மட்டுமே உண்டு எனவும் தீர்மானிக்கப்பட்டது.

2. மீட்படைய இறைவன் மீது விசுவாசம் கொள்வது போன்று, நற்செயல்களும் அவசியம் என்பதை வலியுறுத்தல்.

3. கத்தோலிக்கச் சபையில் பர்பபரசரின் அதிகாரமும், தலைமைத்துவமும் பற்றி வலியுறுத்தல்.

4. புரட்டஸ்தாந்தரின் கடும் எதிர்ப்புக்கு உள்ளான பாவமன்னிப்புப் பத்திரம் விற்பது தடை செய்யப்படல்.

5. ஆயர்களும், குருமார்களும் முறையே ஒரு மறைமாவட்டம், ஒரு பங்கு என்பனவற்றிற்கு மேலாகப் பொறுப்பினை வகித்தல் தடை செய்யப்படல், விவாகம் செய்தலும் தடை செய்யப்படல்.

6. குரு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு அனைத்து மறை மாவட்டங்களிலும் குருத்துவப் பயிற்சிக் கல்லூரிகளை அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தல்.

7. பதிதரது கருத்துக்கள் பரவாது தடுக்க மத விசாரனை மன்றம் நிறுவப்படல்.

8. சமய வழிபாடுகள் மக்கள் பயன்படுத்தும் மொழிகளில் நடாத்துதல்.

9. கத்தோலிக்க மதத்திற்கு எதிராகச் செயற்படும் ஆயர்கள், குருக்களுக்குத் தண்டனை வழங்கத் தீர்மானித்தல்.

10. மரபு ரீதியான இலத்தீன் வேதாகமத்தை ஏற்றுக்கொள்ளல்
    - புரட்டஸ்தாந்து மதத்திற்கு மதம்மாறியவர்களை மீளக் கத்தோலிக்க மதத்திற்கு மற்றும் பொருட்டுச் செயற்பட்ட மத விசாரணை மன்றம் கத்தோலிக்க மதத்தை ஏற்காதோரை எரித்துக் கொலை செய்தல் போன்ற கடுமையான தண்டனைகளை விதித்தல்.
    - சிறப்பாக ஸ்பானியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் வேத விரோதிகள் எனப்பட்ட பலர் மரணத்திற்கு அல்லது சிறைத் தண்டனைக்கு உள்ளாகினர்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **பின்வரும் விடயங்களில் பொருத்தமற்றதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) 1. மாட்டின் லூதர் 2. ஜோன் கல்வின் 3. உல்ரிச் சுவிங்ளி
4. ஜோன் ஹஸ் 5. பெரசெல்சஸ்

(..............)

02) 1. இயேசு சபை 2. அங்கிளிக்கன்சபை 3. லூத்தரன் சபை
4. கத்தோலிக்க சபை 5. கல்வினிஸ்ட் சபை

(..............)

03) 1. மாட்டின் லூதர் - ஜேர்மனி 2. உல்ரிச் சுவிங்ளி - சுவிட்சலாந்து
3. ஜோன் கல்வின் - பிரான்ஸ் 4. லியனாடோ டாவின்ஸசி - இத்தாலி
5. ஜோன் வைக்ளிப் - இங்கிலாந்து

(..............)

04) எதிர்மதச் சீர்திருத்தம் என்றால் என்ன?
1. கத்தோலிக்க சபை பல பிரிவுகளாகப் பிரிந்தமை.
2. புதிய நியாயங்களுடன் மதச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியமை.
3. புதிய கொள்கைகளால் கத்தோலிக்க சபைக்கு ஏற்பட்ட சவால்களுக்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை.
4. புரட்டஸ்தாந்து மதத்திற்குப் புதிய சட்டங்களை இயற்றுதல்.
5. கத்தோலிக்க சபைக்கு எதிராகப் புரட்டஸ்தாந்தர் மேற்கொண்ட நடவடிக்கை

(..............)

05) மதச் சீர்த்திருத்தத்தின் விளைவுகளைத் தெளிவுபடுத்துக.

06) எதிர்மதச் சீர்திருத்தத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக.

07) மதச்சீர்திருத்தத்துடன் தொடர்புடைய பின்வரும் நாடுகளைக் குறித்துப் பெயரிடுக.
ஜேர்மனி, சுவீடன், பிரான்ஸ், ஸ்பானியா, சுவிட்சலாந்து, நெதர்லாந்து, டென்மார்க், இங்கிலாந்து

# 7. முப்பதாண்டுப் போர்

## அறிமுகம்

கி.பி. 1618 - 1668 ஆம் ஆண்டுவரை ஜேர்மனியை மையமாகக் கொண்டு ஆரம்பித்து, ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தொடர்புபட்டு முக்கியமாக உரோமன் கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்தரும் இரு பிரிவினராகப் பிரிந்து நடாத்திய பல யுத்தங்களே முப்பதாண்டுப் போர் எனப்படுகிறது.

**தேர்ச்சி மட்டம்** : 3.3 மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட மோதல்களை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :
- முப்பதாண்டுப் போரினைத் தெளிவுப்படுத்துவார்.
- முப்பதாண்டுப் போரின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.
- முப்பதாண்டுப் போரின் முடிவில் ஐரோப்பாவின் நிலையை ஐரோப்பிய படமொன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### முப்பதாண்டுப் போருக்கான காரணங்கள்

- முப்பதாண்டுப் போருக்கு அரசியல், பொருளாதார, சமயக் காரணிகள் தாக்கம் செலுத்தின.
- அவைகளில் சமயக் காரணிகள் முக்கிய இடத்தினைப் பெற்றதால் அது சமய யுத்தம் எனப்படுகிறது.

### சமயக்காரணங்கள்

- மதச்சீர்திருத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைத் தீர்க்கும் பொருட்டு ஒக்ஸ்பர்க் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமை.
- அந்த உடன்படிக்கையில் குறைபாடு காணப்பட்டமையால், அதன் சரத்துக்கள் சரியாகச் செயற்படவில்லை. இதனால் மீண்டும் இருசாராருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் அதிகரித்தல்.

ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கைக்கு அமைய:

- 1552 ஆம் ஆண்டின் பின்னர் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிய குருமார் கத்தோலிக்கர்களாக இருந்த காலத்தில் அனுபவித்த நிலங்களின் உரிமைகளைக் கைவிட வேண்டி இருந்த போதிலும் அது சரியாக நடைபெறவில்லை. 1552 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் லூதரது மதத்தைப் பின்பற்றிய குருமார் கத்தோலிக்க சபைக்குச் சேர்ந்த நிலங்களைப் பலவந்தமாக வைத்திருத்தல். மேலும் 1552 ஆம் ஆண்டிற்கு முன்னர் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிய குருமாரினது நிலங்களை அபகரிக்க எதிர்மதச் சீர்திருத்தத்தால் வலுவடைந்த கத்தோலிக்கர் முயன்றமை.
- இவ்வாறு கத்தோலிக்க சபைக்குச் சொந்தமாக இருந்த சொத்துக்கள் தொடர்பாக ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கையின் நிபந்தனைகள் இரு சாராராலும் பின்பற்றப்படவில்லை.
- ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கைக்கு அமைய ஜேர்மன் அரசுகளில் அரசாங்க மதமாகக் கடைப்பிடிக்க வேண்டிய மதத்தினைத் தெரிவு செய்ய அந்த நாடுளின் ஆட்சியாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தமை. அரசனின் மதம் மக்களின் மதமாக இருக்க வேண்டும் என்பது.

- உடன்படிக்கைக்கு அமைய நாட்டின் மதமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது கத்தோலிக்க மதமும் லூதரது மதமும் ஆகும். எனினும் இக்கால கட்டத்தில் கல்வினது மதமும் ஜேர்மன் முழுவதும் பரவி இருந்ததுடன் அது புதிய அணியாக விளங்கியது. கல்வினது மதத்தைப் பின்பற்றியோருக்கு அதனை அரச மதமாக்க இருந்த தடைக்கு எதிராக அவர்கள் செயற்படல்/ பெலடையின், பிரன்டன்பேர்க் அரசுகளின் ஆட்சியாளர்கள் கல்வினது மதத்தைத் தழுவியவர்களாவர்.
- அநேகமான நாடுகளில் புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றியவர்கள் எதிர்மதச் சீர்திருத்தத்தின் விளைவாக மீண்டும் கத்தோலிக்க மதத்திற்குத் திரும்பி இருந்தனர். மேலும் புரட்டஸ்தாந்து மதம் பரவுதலும் தடை செய்யப்பட்டிருந்தது. இக்காரணங்களால் ஐரோப்பா முழுவதும் இருசாராருக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவியது.
- இருசாராரும் தமது வலிமையைச் சமப்படச் செய்யும் பொருட்டு அமைப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர்.

  உதாரணம்: - பெலடயின் ரசில் கல்வின் மத ஆட்சியாளனின் தலைமையில் ஜேர்மன் பகுதிகளில் புரட்டஸ்தாந்து இளவரசர்கள் ‘‘யூனியன்’’ என்ற அமைப்பை நிறுவியமை.
  - கத்தோலிக்க ஆட்சியாளர்கள் பவேரியாவின் மெக்சிமிலியனின் தலைமையில் ‘கத்தோலிக்க சங்கம்’ என்ற அமைப்பை நிறுவியமை.
  - இதற்கமைய கத்தோலிக்கம் - புரட்டஸ்தாந்தம் என்ற இரு அணிகள் இருந்தமை.

## அரசியல் காரணங்கள்

- பொகிமிய பெலடயின் நிகழ்வு
- பரிசுத்த உரோமப் பேரரசனுக்கும் ஜேர்மனியனின் சுதந்திர கோமகன்களுக்கும் இடையே அதிகாரம் தொடர்பாக மோதல்கள் ஏற்படல்.
- பிரான்சின் பூர்போன் வம்சத்தினருக்கும் ஜேர்மனியின் ஹப்ஸ்பேர்க் அரச வம்சத்தினருக்குமிடையே மோதல் ஏற்படல்.
- ஜேர்மனியில் சுதந்திர ஆட்சியாளர்களிடையே மோதல்கள் ஏற்படல்.

## பொருளாதாரக் காரணிகள்

- ஜேர்மனியின் சுதந்திரக் கோமகன்களுடன் வர்த்தக உறவை ஏற்படுத்திக்கொள்ள டென்மார்க் மன்னன் விரும்பியமை.
- போல்ட்டிக் கடலில் வர்த்தக ஆதிக்கத்தைப் பெற சுவீடன் விரும்பியமை.

## முப்பதாண்டுப் போரின் பரவல்

- ஜேர்மனை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தம், ஜேர்மன் அரசுகளுக்க மட்டும் அன்றி ஐரோப்பாவின் ஏனைய அரசுகளும் சம்பந்தப்பட்டு 30 ஆண்டு காலம் நடைபெற்றது. மேற்கூறப்பட்ட சமய, அரசியல், பொருளாதாரக் காரணிகள் இதில் தாக்கம் செலுத்தின.

- முப்பதாண்டுப் போரின் பிரதான கட்டங்கள் நான்காகும்.
  - பொஹீமிய பெலடைன் கட்டம் (கி.பி. 1618 - 1620)
  - டென்மார்க் கட்டம் (கி.பி. 1625 - 1629)
  - சுவீடன் கட்டம் (கி.பி. 1630 - 1635)
  - பிரான்சிய கட்டம் (கி.பி. 1635 - 1648)

## வெஸ்ட்பாலியா உடன்படிக்கை

முப்பது ஆண்டுகள் நடைபெற்ற யுத்தம் 1648 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட வெஸ்ட்பாலியா உடன்படிக்கையுடன் முடிவுக்கு வந்தது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையானது ஐரோப்பாவைப் புது வழிக்குத் திருப்பிய சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுகிறது. இங்கிலாந்து, ரஷ்யா தவிர்ந்த ஐரோப்பாவின் ஏனைய சிறிய, பெரிய நாடுகள் அனைத்தும் இதில் பங்கேற்றன. இந்த உடன்படிக்கையில் அடங்கும் விடயங்களாவன:

- 1555 ஆம் ஆண்டு ஒக்ஸ்பேர்க் மகாநாட்டின் அடிப்படையாக அமைந்த ஆட்சியாளனின் மதமே மக்களின் மதமாக இருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்படல்.
- உரோமன் கத்தோலிக்கம், லூதரது மதம், கல்வின் மதம் என்பன சட்டப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டமை.
- ஜேர்மனியின் பிரதேச இளவரசர்களுக்குச் சுயாதீனம் கிடைத்தல்.
- சுவீடனுக்குத் தான் எதிர்பார்த்த போல்ட்டிக் கடலில் வர்த்தக உரிமை கிடைத்தல்.
- உரோமப் பேரரசனின் பதவிகள் பெயரளவாதல்.
- பேரரசனின் ஆலோசனைச் சபைக்குப் புரட்டஸ்தாந்து மதப் பிரதிநிதி ஒருவரை அனுப்புவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை.
- போரில் வெற்றியடைந்த நாடுகளுக்கு மேலதிகப் பிரதேசங்கள் கிடைத்தமை.
  உதாரணம்: பிரான்சுக்கு - மெட்ஸ், டூல், வரடுன், அல்சேஸ் லொரேன்
  சுவீடனுக்கு - போல்டிக் கடலுக்கு எதிராக உள்ள பிரதேசம், வட கடலுக்கு எதிராக அமைந்துள்ள பிரதேசம்

## முப்பதாண்டுப் போரின் விளைவுகள்

- புனித உரோமப் பேரரசன் முப்பதாண்டுப் போரில் தோல்வியடைந்ததால் அவர் பெயரளவிலான நிலையை அடைதல்.
- பாப்பரசரின் அதிகாரம் கத்தோலிக்க மதத்தில் மீண்டும் நிலைநாட்டப்படல்.
- இதுவரையில் ஐரோப்பாவில் நடைபெற்ற சமய மோதல்கள் முடிவுக்கு வந்தன.
- பூர்போன் அரச வம்சம் ஐரோப்பாவில் பலம் வாய்ந்ததானதன் மூலம் பிரான்ஸ் ஐரோப்பாவில் பலம் வாயந்த அரசாக மாறுதல்.
- ஜேர்மனியின் பிரதேச இளவரசர்கள் சுதந்திரமடைந்ததன் காரணமாக ஜேர்மனி ஐக்கியமடைதல் தாமதப்படல்.
- சுவிட்சலாந்தும் நெதர்லாந்தும் சுயாதீன அரசுகளாதல்.
- சுவீடனுக்குப் போல்டிக் கடலில் வர்த்தக உரிமை கிடைத்தல்.

# கணிப்பீடும் மதிப்பீடும்

- ஐரோப்பாவில் கத்தோலிக்க சபையில் நிலவிய ஊழல்களுக்கு எதிராகக் கத்தோலிக்க சபையிலேயே ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாக மதச்சீர்திருத்தம் ஏற்பட்டது. இதில் பல காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன. அதற்கமைய பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

- **பின்வரும் விடயங்களில் பொருத்தமற்றதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) 1. பொகிமிய காலம் 2. பிரான்சிய காலம் 3. டென்மார்க் காலம்
4. இத்தாலிய காலம் 5. சுவீடன் காலம்

02) 1. மத்தியாஸ் 2. மாக்ஸ்மிலியன் 3. குஸ்டாவுஸ்
4. வொலன்ஸ்டைன் 5. நெக்கர்

03) 1. விற்றன்பேர்க் 2. பிரன்டன்பேர்க் 3. வர்டெம்பர்க்
4. ஹப்ஸ்பேர்க் 5. ஒக்ஸ்பேர்க்

04) முப்பதாண்டுப் போருடன் தொடர்பற்ற விடயம்
1. ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கையின் குறைபாடு
2. போரில் பிரான்ஸ் வெற்றி பெற்றமை
3 புனித உரோமப் பேரரசு தோல்வியுற்றமை
4. வெஸ்ற்பாலியா சமாதான உடன்படிக்கையுடன் சமயப் போர்கள் முடிவுற்றமை
5. பேரரசன் சாள்ஸ் போரில் ஈடுபட்டமை

05) முப்பதாண்டுப்போர்
1. 1618 ஆம் ஆண்டு ஜேர்மனியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டமை
2. கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தருக்கும் இடையே நடைபெற்றமை
3. புரட்டஸ்தாந்தர்கள் வெற்றி பெற்றதுடன் போர் முடிவுற்றமை
4. பிரான்ஸ் கத்தோலிக்கருக்கு உதவியமை
5. முப்பதாண்டுப் போர் ஐரோப்பாவின் சமய யுத்தங்களில் இறுதியானதாகும்.

06) முப்பதாண்டுப் போரில் ஈடுபட்ட நாடுகள்
1. டென்மார்க் 2. ரஷ்யா 3. பிரான்ஸ்
4. போலாந்து 5. இங்கிலாந்து

07) மதச்சீர்திருத்தம் முப்பதாண்டுப் போர் ஆகிய காலகட்டங்களில் செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை
1. ஒக்ஸ்பேர்ட் உடன்படிக்கை 2. லுபெக் உடன்படிக்கை
4. வெஸ்ட்பாலியா உடன்படிக்கை 5. பிராக் உடன்படிக்கை
5. ஏமியன்ஸ் உடன்படிக்கை

# 4. பிரித்தானிய பாராளுமன்ற முறை

## அறிமுகம்

தற்போதைய பாராளுமன்றம் வரை பிரித்தானிய பாராளுமன்ற முறை பரவலடைந்த வித்ததையும், பிரித்தானியப் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியடைந்த விசேட சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதும் இவ்வத்தியாயத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மத்திய காலத்தில் மன்னரின் விருப்பத்தின்படி நியமிக்கப்பட்ட பிரபுக்களுடன் கூடிய ‘மகாசபை’ எனும் நிறுவனம், தற்போது சட்ட, நிருவாக, நீதித்துறை என்பவற்றுடன் கூடிய பாராளுமன்றம் வரை வளர்ச்சியடைந்துள்ளது. 1215 ஆம் ஆண்டு மகாபட்டயத்தினால் முதன் முதலாக அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதுடன், டியுடர் காலத்தில் மன்னனும் பாராளுமன்றமும் இணைந்து நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றனர். எனினும் 1688 ஆம் ஆண்டின் மகோன்னத புரட்சி (இரத்தம் சிந்தா புரட்சி) யின் பின்னர் பிரித்தானிய மன்னனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டு பாராளுமன்றம் படிப்படியாக அதிகாரம் மிக்கதாகியமை மற்றும் பாராளுமன்ற முறையின் பிரதான இயல்புகள் என்பன இதன்கீழ் கலந்துரையாடப்படுகின்றது. பாராளுமன்ற முறையின் வளர்ச்சி, மனித இனத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்கின்றது என்பதனை இவ்வரலாற்று நிகழ்வுகளின் மூலம் பகுத்தாய்வது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 4.0** : • பாராளுமன்ற முறையின் வளர்ச்சி, மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 பிரித்தானிய பொருளாதார சமூக நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய அரசியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை ஆராய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :
- பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய அரசியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டுவார்.
- பிரித்தானிய பாராளுமன்ற முறையில் ஜனநாயகம் செயற்படும் முறையை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### பாராளுமன்றின் அதிகாரம் வளர்ச்சியடைதல்

- மத்திய காலத்தில் மன்னனின் விருப்பப்படி ஒன்று கூடிய பிரபுக்களைக் கொண்ட ‘மகாசபை’ தற்போதைய பாராளுமன்றத்தின் ஆரம்பக் கட்டம் எனக் கொள்ளப்படுகின்றது.
- சிறந்த மன்னர்களான இரண்டாம் ஹென்றி, முதலாம் ரிச்சட் ஆகியோருடன் கருத்து வேறுபாடுகளின்றி பிரபுக்கள் செயற்பட்டனர்.
- திறமையற்ற மூன்றாம் ஜோனின் காலத்தில் பிரபுக்கள் (மகாசபை) தாம் இழந்த அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மன்னனைக் கொண்டு 1215 ஆம் ஆண்டு மகாபட்டயத்தில் (மக்னாகாட்டா) கைச்சாத்திடச் செய்தமை பாராளுமன்றத்தினுள் அதிகார வளர்ச்சியின் முக்கிய கட்டமாகும்.
- இதன்மூலம் மன்னனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது.
- மகாசபையின் அனுமதியின்றி மன்னனுக்கு வரி அறவிட அதிகாரமின்மை.

- நாட்டில் நிலவும் சட்டத்திற்கு அமைய வழக்கு விசாரிக்கப்படாமல் சுதந்திரக் குடிமகன் ஒருவனுக்குத் தண்டனை வழங்க மன்னனுக்கு அதிகாரமின்மை.
- மன்னன் இதை மீறினால் மகாசபையின் இருபத்தைந்து பேரைக் கொண்ட குழுவால் மன்னனுக்குத் தண்டனை வழங்கக் கூடியதாக இருந்தமை.
- மூன்றாம் ஹென்றி மன்னரின் காலத்தில் (1216 - 1272) அதாவது 1265 ஆம் ஆண்டு மகாசபை பாராளுமன்றம் எனும் பெயரில் அறிமுகமாகியது. அக்காலத்தில் பாராளுமன்றம் பலம் பொருந்தியதாக இருந்ததுடன், மன்னர்களை ஆட்சியில் இருந்து அகற்றவும் முடியுமானதாக இருந்தது.

  உதாரணம் : மூன்றாம் ஹென்றி மன்னனுக்கு எதிராக கலகம் விளைவித்து மன்னனை சிறைப்படுத்தி 1258 ஆம் ஆண்டு சைமன் டி மொன்பட் என்பவரின் தலைமையில் பரான்களில் ஆட்சியை நிறுவியதைக் காணக்கூடியதாக உள்ளது.
- முதலாம் எட்வட் மன்னனின் காலம் (1272 - 1307) பாராளுமன்றத்தின் தந்தை எனப்பட்டதுடன் 1295 ஆம் ஆண்டு கூடப்பட்ட மாதிரி பாராளுமன்றம் பிரித்தானிய பாராளுமன்ற வளர்ச்சியின் முக்கிய சந்தர்ப்பமாகும்.

## அமைப்பு

- பாராளுமன்றம் இரு பிரிவினைக் கொண்டதாக விளங்கியமை. பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபை என்பவனவே அவைகளாகும்.

## அதிகாரங்கள்

- மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு சபாநாயகரை தெரிவு செய்யும் அதிகாரம் கிடைத்தமை.
- இரண்டாம் எட்வர்ட் மன்னனின் காலத்தில் (1307 - 1327) பாராளுமன்றத்தில் சட்ட, நிறைவேற்று அதிகாரங்கள் படிப்படியாக அதிகரிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

  உதாரணம் : 1327 ஆம் ஆண்டு பாராளுமன்றம் இரண்டாம் எட்வர்ட் மன்னனை நீக்கிவிட்டு அவனது மகன் மூன்றாம் எட்வர்ட்டை ஆட்சியில் அமர்த்தியமை.
- புதிதாக உள்நாட்டில் வரி அறவிடும் அதிகாரம் பாராளுமன்றத்திடம் இருந்தபோதிலும், வெளிநாட்டு வர்த்தகர்களிடம் இருந்த வரி அறவிடும் அதிகாரம் தொடர்ந்தும் மன்னனிடமே இருந்தது. எனினும் மூன்றாம் எட்வர்ட் மன்னனின் ஆட்சிக் காலத்தில் (1327 - 1377) அந்த அதிகாரத்தையும் பாராளுமன்றம் சுவீகரித்துக்கொண்டது.
- மன்னனின் நிதி தொடர்பான அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி அதனைப் பாராளுமன்றிடம் வைத்துக்கொண்டதுடன், மன்னன் முறையாகப் பாராளுமன்றின் நிபந்தனைகளைப் பின்பற்றுகின்றானா என்பதனைக் கவனிக்கும் பொருட்டு கி.பி. 1377 ஆம் ஆண்டு இருவரைக் கொண்ட பாராளுமன்ற குழு நியமிக்கப்பட்டது.
- இரண்டாம் ரிச்சட் மன்னனின் காலத்தில் (1377 - 1399) உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மன்னனின் அதிகாரம் நலிவுற்று பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்கியது. நூறாண்டு யுத்தம், விவசாயிகளின் கலகம், கருங்கொள்ளை தொற்று நோய் (Black Death) போன்றவை.
- நான்காம் ஹென்றி (1399 - 1413) பாராளுமன்றத்தின் உதவியுடன் இரண்டாம் ரிச்சட் மன்னனை ஆட்சியிலிருந்து நீக்கிவிட்டுத் தான் அரசனாகியமை.
- பாராளுமன்றத்தின் உதவியுடன் ஆட்சிக்கு வந்தமையால் நான்காம் ஹென்றியால் பாராளுமன்றத்தை மீறிச் செயற்பட முடியாமை. இதனால் பாராளுமன்றத்தின் அதிகாரம் அதிகரித்தமை.
- நூறாண்டுப் போருக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொண்டமை. பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடாத்தும் சுதந்திரம், நிதியை நிருவகிக்கும் உரிமை என்பன பாராளுமன்றத்திற்கு கிடைத்தமை. பாராளுமனற் உறுப்பினர்களைக் கைதுசெய்ய முடியாமை என்பன மூலம் இக்காலக்கட்டத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியடைந்தது.

## டியுடர் காலம் (1485 - 1603)

- ரோஜா யுத்தத்தின் பின்னர் ஏழாம் ஹென்றி (1485 - 1509) ஆட்சிக்கு வருதல். அவன் பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்திப் பாராளுமன்றத்திடம் இருந்த பெரும்பாலான அதிகாரங்களை மன்னனது கைக்கு கொண்டுவந்து முடியாட்சியைக் கட்டியெழுப்பியமை.
- எட்டாம் ஹென்றி மன்னனின் காலத்தில் உரோமன் கத்தோலிக்க திருச்சபையுடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டமை. கத்தரின் என்ற தனது பட்டத்தரசியை விவாகரத்து செய்து அன்னிபொலின் என்ற பெண்ணை மணந்துக்கொள்வதற்குப் பாராளுமன்றத்தின் துணையை நாடுதல். இதன் விளைவாக புரட்டஸ்தாந்த பாராளுமன்றம் தோன்றுதல். எட்டாம் ஹென்றி மன்னனின் ஆட்சிக் காலத்தில் (1509 - 1547) பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியடைவதின் மற்றுமொரு கட்டமாகியமை.
- முதலாம் எலிசபெத் இராணியின் காலத்தில் (1547 - 1603) பாராளுமன்ற நடவடிக்கை மூலம் சட்ட ரீதியான குடியரசு தோற்றம் பெறல். பாராளுமன்ற சலுகைகளுக்கு பங்கம் ஏற்படாமை.

## ஸ்டுவட் காலம்

- பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சி பெற்ற முக்கிய காலகட்டமாக விளங்குதல்.
- மன்னனுக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே ஸ்டுவட் காலம் முழுவதும் மோதல்கள் ஏற்பட்டமை.
- மன்னன் கத்தோலிக்கனாக இருந்ததுடன், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் புரட்டஸ்தாந்து கருத்தினையுடையோராக இருந்தனர். மன்னர்கள் தெய்வீக வரத்தை ஏற்றதுடன் பாராளுமன்றம் சமூக வாதத்தை ஏற்றமை. சட்டத்தின் ஊற்று மன்னனாக இருக்க வேண்டுமென ஸ்டுவட் மன்னர்கள் ஏற்றுக்கொண்டபோதிலும் மன்னனாயினும் பாராளுமன்றத்திற்கு அமைந்து நடக்கவேண்டுமெனப் பாராளுமன்றம் கருதியமை. இக்கருத்து வேறுபாடுகளால் மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டன.
- பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி அறவிடுதல், விசாரணையின்றி நபர்களை சிறையில் அடைத்தல் போன்ற செயற்பாடுகளால் மன்னனுக்கு எதிராகப் பாராளுமன்றம் செயற்படுதல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வது தொடர்பாக ஏற்பட்ட விவாதத்தில் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் தொடர்பான சிக்கலைத் தீர்க்கும் அதிகாரம் பாராளுமன்றுக்கு மாத்திரமே உண்டு என்பதை ஏற்றுக்கொண்டமை முதலாம் ஜேம்ஸ் மன்னன் அடைந்த தோல்வியாகும். இது பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்குவதற்கு வழிவகுத்தது.
- பாராளுமன்றத்திற்கும், மன்னனுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் காணப்பட்டன. மன்னனின் சர்வதிகாரச் செயற்பாடுகளை நிறுத்துதல், அரச அதிகாரிகளுக்கு குற்றம் சுமத்தும் உரிமை, வரிகளை அமுல் செய்யும் உரிமை, பேச்சுச் சுதந்திரம், பிரபுக்கள் சபையுடன் இணைந்து சட்டமியற்றும் உரிமை, கைதுசெய்யப்படாமலிருக்கும் உரிமை, மன்னன் தான் விரும்பியவாறு வரி அறவிடல் என்பன அவற்றில் முக்கியமானவையாகும்.
- நெருக்கடி நிலைகளில் நிதியினைப் பெறும் பொருட்டுப் பாராளுமன்றத்தைக் கூட்டுதல். உதாரணம் : 1624 ஆம் ஆண்டு ஸ்பானிய யுத்தத்திற்காக நிதி பெறல்.
- பிரான்ஸிஸ் பேகனுக்கு எதிராக பாராளுமன்றம் நம்பிக்கையில்லா பிரேரனையை முன்வைத்ததால் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையிலான மோதல்கள் மேலும் வளர்ந்தன. மன்னனால் சட்டத்திற்கு அப்பால் செயற்பட முடியாது எனும் கருத்து பரவியது.
- முதலாம் சார்ள்ஸ் மன்னனின் காலத்தில் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டமை. மன்னனின் வரவு செலவுத்திட்டம் அங்கிகரிக்கப்படாதவிடத்து பாராளுமன்றத்தைக் கலைத்தல், மன்னன் விரும்பியவாறு வரி அறவிடுதல், மன்னன் இடையிடையே பாராளுமன்றத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- முதலாம் சார்ள்ஸ் மன்னனின் காலத்தில் 1628 ஆம் ஆண்டு உரிமை தொடர்பான மனு பிரித்தானிய பாராளுமன்ற அதிகார வளர்ச்சியின் முக்கிய சந்தர்ப்பமாகியமை. இதற்கமைய பாராளுமன்றத்தின் அனுமதியின்றி எவ்வித வரியோ, நிதியோ அறவிடுதல் சட்டத்திற்கு முரணானதாகும்.

- நீதியான விசாரனையின்றி எவரையும் சிறையில் அடைத்தல் ஆகாது.
- வரி செலுத்தாதவர்களின் வீடுகளில் படை வீரர்களை நிறுத்துவது தடைச் செய்யப்பட்டது.
- சமாதானம் நிலவும் காலங்களில் இராணுவச் சட்டங்களை அமுல் செய்தல் தடை செய்யப்பட்டது.
- ஸ்கொட்லாந்து யுத்தத்திற்காக நிதி பெறுவதற்காக முதலாம் சார்ள்ஸ் மன்னனது காலத்தில் 1640 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கூட்டப்பட்டதுடன் அந்தப் பாராளுமன்றத் தவணைகள் மூன்று வாரத்திற்குக் கட்டுப்பட்டதால் அது குறுகிய காலப் பாராளுமன்றம் என அறிமுகமாகியது. அந்த ஆண்டிலேயே மன்னனால் கூட்டப்பட்ட பாராளுமன்றம் தொடர்ந்து நீண்டகாலம் கூட்டப்பட்டதால் அது நீண்டகாலப் பாராளுமன்றம் எனப்பட்டது.
- முதலாம் சார்ள்ஸ் மன்னனின் காலத்தில் 1648 ஆம் ஆண்டு ஒலிவர் குறோம் வெல்லின் தலைமையில் பாராளுமன்றத்துக்கும், அரசனுக்கும் இடையே சிவில் யுத்தம் நடைபெற்றது. பாராளுமன்றம் வெற்றி பெற்றதுடன் குறோம் ஒலிவர் குறோம் வெல்லின் தலைமையில் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியுடன் முதலாம் சார்ள்ஸ் மன்னன் கொலை செய்யப்படல்.
- குறோம் வெல்லிற்குப் பின்னர் மீண்டும் முடியாட்சி நிறுவப்பட்டதுடன் முதலாம் சார்ள்ஸ் மன்னனின் மகனான இரண்டாம் சார்ள்ஸ் ஆட்சிபீடம் ஏறினான்.
- இரண்டாம் சார்ள்ஸின் (1660 - 1685) காலத்தில் பாராளுமன்றத்துடன் மோதல்கள் ஏற்பட்டு பாராளுமன்றத்தின் அதிகாரம் வலுவடைந்தது. பாராளுமன்றத்தில் அரசனுக்குச் சார்பாக (டோரி) எதிராக (விக்) என இரு பிரிவுகள் தோற்றம் பெற்றன.
- இரண்டாம் ஜேம்ஸ் மன்னனின் ஆட்சிக்காலத்தில் (1685 - 1688) மன்னனுக்கும் பாராளுமன்றத் திற்கும் இடையிலான மோதல்கள் உச்ச நிலையை அடைந்தன. அதன் விளைவாக 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி (மகோன்த புரட்சி) ஏற்பட்டது. மன்னனின் அதிகாரத்தை மீறி இங்கிலாந்தின் பிரதான நிருவாக நிறுவனமாகப் பாராளுமன்றம் மாற்றம் அடைந்தது.
- இச்சம்பவத்தில் இரண்டாம் ஜேம்ஸ் பிரான்சுக்கு தப்பிச் சென்றதுடன் ஒல்லாந்த விலியமும், மேரியும், வரவழைக்கப்பட்டு அவர்களுக்குச் சிம்மாசனம் வழங்கப்பட்டமை. 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்தில் காணப்படும் நிபந்தனைக்கு அமைய அவர்கள் நாட்டின் நிருவாகத்தை முன்னெடுத்துச் செல்லச் சம்மதம் தெரிவித்தமையால் அதுமுதல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் மன்னனுக்கு மேலாக நாட்டின் உயர் நிறுவனமாகியது.
- 1689 உரிமைச் சட்டத்திற்கு அமைய,
    - வில்லியமும், மேரியும் இங்கிலாந்தின் அரசனாகவும், அரசியாகவும் ஏற்றுக்கொள்ளப்படல்.
    - கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றும் எவருக்கும் சிம்மாசனம் உரிமையாகக் கூடாது என தீர்மானித்தல்.
    - பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறாது மன்னனால் வரி விதிக்க முடியாது.
    - பாராளுமன்றில் பேசுதல், கருத்து வெளியிடுதல் போன்ற சுதந்திரத்திற்கு மன்னன் தடைவிதித்தலாகாது.
    - பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் நிரந்தரப் படையொன்றை வைத்திருத்தல் ஆகாது. இவ்வாறான நிபந்தனைகளுக்கு மன்னன் உட்பட வேண்டியேற்பட்டது.
- 689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் மிகவும் அதிகரித்தது. உரிமைச் சட்டத்தின் மூலம் மன்னனை நியமிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு கிடைத்தமையால் நீண்டகாலமாக மன்னனுக்கும் பாராளுமன்றுக்குமிடையிலான போராட்டம் பாராளுமன்றத்தின் வெற்றியின் மூலம் முடிவுக்கு வந்தது.
- ஹனோவர் வம்சத்திற்கு இங்கிலாந்தின் சிம்மாசனம் உரிமையாகியது.
- 1201, நிகராண சட்டத்தின் மூலம் ஆன் இளவரசியின் பின்னர் இங்கிலாந்தின் சிம்மாசனம் ஹனோவர் வம்சத்திற்கு உரிமையாதல். பாராளுமன்ற அதிகார வளர்ச்சியின் மற்றுமொரு நிகழ்வாகும்.
- ஹனோவர் வம்சத்தை சேர்ந்த முதலாம் ஜோர்ஜ், இரண்டாம் ஜோர்ஜ் ஆகிய மன்னர்களுக்கு ஆங்கில மொழி தெரியாததன் காரணமாக அவர்கள் நிருவாக நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தமையானது நாட்டின் நிருவாகச் செயற்பாடுகளில் பாராளுமன்றத்திற்கு முன்னுரிமை கிடைத்தமை. பிரதமர் பதவி வளர்ச்சியடைந்தமை.

- நாட்டை ஆட்சி செய்யும் பொருட்டுக் கபினட் குழு நியமிக்கப்பட்டதுடன் அதற்கு நிறைவேற்று அதிகாரம் கிடைத்தமை. பிரதமர் அதன் தலைவராக இருந்தமை.

- ஸ்டுவட் அரச வம்சம் 1688 ஆம் ஆண்டு புரட்சியின் விளைவாக ஆட்சிக்கு வந்ததுடன் ஆரம்பித்த மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்குமிடையிலான மோதல்கள் முடிவுற்றுப் பாராளுமன்றம் முக்கியம் பெற்றது. பாராளுமன்றம் முக்கியத்துவம் பெற்றதுடன் இங்கிலாந்தின் பொது மக்கள் பிரதிநிதிகள் அதிகாரம் பெறுவதற்காக மகா பட்டயத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சி 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவடைந்தது எனக் கூறலாம்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. மக்னா காட்டா எந்த மன்னனுடைய காலத்தில் கைச்சாத்திடப்பட்டது?
   1. இரண்டாம் ஹென்றி
   2. மூன்றாம் ஹென்றி
   3. மூன்றாம் ஜோன்
   4. முதலாம் எட்வர்ட்
   5. இரண்டாம் எட்வர்ட்

   (....................)

2. A, B யை இணைத்துச் சரியான விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1. மகாபட்டயத்தில் கைச்சாத்திடல் | A. முதலாம் சார்ள்ஸ் மன்னன் |
| 2. பாராளுமன்றத்தின் தந்தை | B. இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் |
| 3. டியுடர் வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன் | C. முதலாம் எட்வர்ட் மன்னன் |
| 4. ஒலிவர் குறோம் வெலினால் கொலை செய்யப் பட்ட இங்கிலாந்தின் மன்னன் | D. மூன்றாம் ஜோன் மன்னன் |
| 5. மகோன்னத புரட்சியின் போது இங்கிலாந்தின் மன்னன் | E. ஏழாம் ஹென்றி மன்னன் |

   (1). DABCE (2). ACBED (3). CEABD (4). EABDC (5) DCEAB

   (....................)

3. இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சி தொடர்பாகப் பொருந்தாத விடை
   A. மகாசபை B. மகாபட்டயம் C. பரன்களின் சபை
   D. டூமாசபை E. மக்கள் பிரதிநிதிகள் சபை (....................)

4. பராளுமன்ற அதிகார வளர்ச்சி தொடர்பாக டியூடர் காலத்தில் நிகழ்ந்த செயற்பாடாக விளங்குவது
   A. ஏழாம் ஹென்றி மன்னன் ரோஜா யுத்தத்தை வெற்றிக் கொண்டமை
   B. எட்டாம் ஹென்றி மன்னன் புரட்டஸ்தாந்து பாராளுமன்றத்தை நிறுவியமை
   C. மகாசபை நிறுவப்பட்டமை
   D. மக்னாகாட்டா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை
   E. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை (....................)

5. இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கும், ஸ்டுவட் கால மன்னர்களுக்கும் இடையே மோதலாக அமையாத விடயம்
   A. மன்னன் தெய்வீக வரத்தை ஏற்றுக்கொண்டமையும், பாராளுமன்றம் சமூக வாதத்தை ஏற்றுக் கொண்டமை
   B. பாராளுமன்றம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்
   C. பாராளுமன்றத்தைக் கூட்டுதலும், கலைத்தலும்
   D. சட்டம் இயற்றலும், செயற்படுத்தலும்
   E. வரவு செலவுத் திட்டத்தை அங்கிகரித்தல் (...................)

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. 1215 - 1688 ஆம் ஆண்டு வரை பிரித்தானிய பாராளுமன்ற முறை வளர்ச்சியடைத்த விதத்தினைச் சுருக்கமாக விளக்குக.

2. ஸ்டுவட் அரச வம்ச காலத்தில் மன்னனுக்கும் பாராளுமன்றுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களை விபரிக்குக.

3. ‘1688 ஆம் ஆண்டு மகோன்னத புரட்சியின் மூலம் மன்னனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது’

   I. மகோன்னத புரட்சியின் காரணமாக இங்கிலாந்தை விட்டுத் தப்பிச் சென்ற மன்னன் யார்? (01 புள்ளி)

   II. மகோன்னத புரட்சியின் பின்னர் இங்கிலாந்தின் ஆட்சி பீடத்தில் ஏற்றப்பட்டவர்கள் யாவர்? (02 புள்ளிகள்)

   III. மகோன்னத புரட்சிக்கான அண்மிய காரணத்தைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

   IV. மகோன்னத புரட்சியின் விளைவுகள் யாவை? (08 புள்ளிகள்)

**தேர்ச்சி 4.0** : • பாராளுமன்றத்தின் அதி காரத்தை அதிகரித்த, மனித இனத்தின் முன்னேற் றத்திற்கு வழிவகுத்த விதத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.2 பிரித்தானிய பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு, பாராளு மன்ற ஆட்சி முறையின் பிரதான இயல்புகளைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 5

**கற்றற்பேறுகள்** :
- பிரதிநிதித்துவப் பாராளுமன்ற முறை மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவும் விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- பிரதிநிதித்துவ முறை, கட்சி முறை, கபினட் முறை என்பவற்றைப் பிரித்தானிய பராளுமன்றத்தைத் தழுவிப் பகுப்பாய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பாராளுமன்ற முறையின் இயல்புகள்

### பிரதிநிதித்துவ முறை

- இங்கிலாந்துப் பாராளுமன்றம் பொது மக்களின் பிரதிநிதிகள் நிறுவனமாதல்
  - மக்களுக்கு வாக்குரிமை கிடைத்தமை
  - தேர்தல் தொகுதி முறை ஆரம்பமாதல்
  - தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தமை
  - மன்னனின் விருப்பப்படி அழைக்கப்பட்ட வரி வசூலிப்போர் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பொழுதிலும் 14 ஆம் நூற்றாண்டு முதல் பாராளுமன்றம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிறுவனமாதல்.
  - பிரதேச நிருவாக அலகாக விளங்கிய பிரிவு (ஷயர்) மற்றும் மன்னனது திட்டத்திற்கு உள்ளான நகரங்கள் மாத்திரம் ஆரம்பத்தில் தேர்தல் தொகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தத் தேர்தல் தொகுதிகள் அனைத்திலிருந்தும் பாராளுமன்றத்திற்கு இவ்விரண்டு உறுப்பினர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டமை.
  - தனிநபர் பெரும் வருமானத்திற்கு அமைய வாக்குரிமை கிடைத்தல்
  - 1832 ஆம் ஆண்டு சீர்த்திருத்தச் சட்டம் பிரதிநிதித்துவ முறையின் திருப்பு முனையாதல். அச்சட்டத்திற்கு அமைய,
    - தேர்தல் தொகுதி மீண்டும் பிரிக்கப்பட்டதுடன் வாக்குரிமை பரவலடைதல். அது சனத்தொதகையில் 24 வீதத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படல்.
    - சொத்துடையோருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாக்குரிமை இச்சட்டத்தினால் மத்திய வகுப்பினருக்கும் உரித்தாகுதல்.
  - வாக்குரிமையை எதிர்பார்த்த தொழிலாளர், வாக்குரிமையைப் பெறுவதற்காகக் குழுவாக இணைதல்.
  - இவ்வியக்கம் சாட்ஸ் இயக்கம் எனப்பட்டது.
  - அவர்களது முக்கிய வேண்டுகோள்களாவன,
    - வயதுவந்த அனைத்து ஆண்களுக்கும் வாக்குரிமை வழங்குதல்
    - இரகசிய வாக்கெடுப்பை அறிமுகஞ் செய்தல்.
    - பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குதல்
    - தேர்தல் வேட்பாளர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த சொத்துத் தொடர்பான தகைமைகளை ஒழித்தல்
    - சமமான மக்கள் தொகையைக் கொண்ட தேர்தல் தொகுதிகளை உருவாக்குதல்.
    - ஆண்டுதோறும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துதல்.

- 1858 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு அமைய வேட்பாளருக்கு இருக்க வேண்டிய நிலம் தொடர்பான தகுதி நீக்கப்பட்டது. அவ்வாறே எம்மதத்தை, சேர்ந்தவராயினும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க வாய்ப்பு கிடைத்தது.
- 1867 ஆம் ஆண்டு சட்டத்தில் வாக்காளருக்கு இருக்க வேண்டிய சொத்துத் தொடர்பான தகுதி தளர்த்தப்பட்டதால் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது.
- இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை 1872 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் ஆரம்பமானது.
- தேர்தல் முறையாக நடைபெறும் பொருட்டு 1883 ஆம் ஆண்டு ஊழல் மற்றும் சட்ட விரோத செயல் சட்டம் அமுலாக்கப்பட்டது.
- 1918 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. குடும்பத் தலைவிகளுக்கும், குடும்பத் தலைவர்களின் மனைவி (30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்) களுக்கும் வாக்குரிமை கிடைத்தது.
- 1928 ஆம் ஆண்டு பிரதமர் ஸ்டன்ஸி பொல்ட்வின் முன்வைத்த சட்டத்தில் 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் வாக்குரிமை உரித்தானது. இதற்கமைய 1928 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சர்வசன வாக்குரிமை செயற்படத் தொடங்கியது.

- **கட்சி முறை**
  - ஸ்டுவட் அரச வம்சத்தின் ஆரம்பம் முதல் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையில் நிலவிய சமயக் கருத்து முரண்பாடுகளின் காரணமாக இங்கிலாந்தில் அரசியல் கட்சி முறைகள் தோற்றம் பெற்றன. இரண்டாம் சார்ள்ஸின் பின்னர் கத்தோலிக்கர்களான அவனது சகோதரர் ஜேம்சிற்கு அரசுரிமை வழங்காது புரட்டஸ்தாந்த மதத்தைச் சேர்ந்த வேறொருவருக்கு அரசுரிமை வழங்க மக்கள் பிரதிநிதிகள் சபை நடவடிக்கை எடுத்த வேளையில் மக்கள் பிரதிநிதிதகள் சபை இரு கட்சிகளாகப் பிளவுற்றமை.
  - மொன்சன் கோமகனுக்குச் சார்பானவர்கள் முறையீட்டாளர்கள் எனவும், ஸ்டுவட் வம்சத்தினரிடமிருந்து சிம்மாசனத்தை பறித்துக்கொள்ளத் தயங்கியவர்கள் பயந்தோர் எனவும் அறிமுகமாதல்.
  - காலஞ்செல்ல அவர்கள் விக் கட்சி என்றும் டோரி கட்சி என்றும் அறிமுகமாகினர்.
  - மன்னனுக்குச் சார்பானவர்கள் டோரி என்றும், மன்னனுக்கு எதிரானவர்கள் விக் என்றும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இரு கட்சிகள் தோற்றம் பெற்றன.
  - இதற்கமைய இங்கிலாந்தில் இரு கட்சி முறை தோற்றம் பெற்றது.
  - இவ்விரு கட்சிகளும் 1832 ஆம் ஆண்டின் பின்னர் லிபரல், கன்சர்வேட்டிவ் எனும் பெயர்களில் அறிமுகமாகின.
  - 1900 ஆம் ஆண்டில் தொழிற்கட்சி ஆரம்பமாகியது.
  - 1906 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றதுடன் லிபரல் கட்சியுடன் இணைந்து முதன் முறையாக கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைத்தன.
  - 1924 ஆம் ஆண்டு ராம்சே மெக்டொனல்ட்டின் கீழ் முதன்முதலாகத் தொழிற்கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது.
  - 1929 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் பிரதான கட்சிகள் மூன்றும் இணைந்த மெக்டொனால்ட்டின் கீழ் தேசிய அரசாங்கத்தை அமைத்தன.
  - இரண்டாம் உலக மாகா யுத்தத்தின்போது ஏற்பட்ட தேசிய இடையூறினைக் கருத்திற் கொண்டு மூன்று கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன.
  - இரண்டாம் உலக மாகா யுத்தத்தின் இறுதியில் 1945 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வின்சன்ட் சேர்ச்சிலைத் தோற்கடித்து கிளமென்ட் அட்லி என்பவரால் தொழிற்கட்சி அரசாங்கம் நிறுவப்பட்டது.
  - லிபரல் கட்சி 1945 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பின்னர் பலவீனமடைந்ததுடன் கன்சர்வேட்டிவ், தொழிற்கட்சி என்பன எழுச்சியுற்றன.

- **கபினட் முறை**
    - கபினட் முறை மூன்றாம் ஹென்றி மன்னன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
    - மூன்றாம் ஹென்றி மன்னனின் நீதிச் செயற்பாடுகள் தொடர்பாகக் கூட்டிய பிரிவுக் கவுன்சிலின் விசேடக் கமிட்டியே கபினட்டின் ஆரம்பம் எனக் கருதப்படுகின்றது.
    - இரண்டாம் சார்ள்ஸ் மன்னரால் நிறுவப்பட்ட ஐந்து அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர் சபை பெரும்பாலும் தற்கால அமைச்சரவைக்கு ஒப்பானதாகும்.
    - 1688 ஆம் ஆண்டு புரட்சியின் பின்னர் சரியான முறையில் தற்கால கபினட் முறை ஆரம்பிக்கப்பட்டது.
    - அரசாங்கத்தின் பெருவாரியான அதிகாரத்தைத் தனதாக்கிக் கொள்ளப் பாராளுமன்றம் பின்பற்றிய கொள்கைகள் அமைச்சரவையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.
    - ஹனோவர் வம்சத்தின் முதலாவது, இரண்டாவது ஜோர்ஜ் மன்னர்கள் ஆங்கில மொழியை பேசக்கூடியவர்களாக இல்லாதிருந்தமையால் அமைச்சரவையின் கூட்டங்களில் அவர்கள் தலைமை வகிப்பதைத் தவிர்த்துக் கொண்டனர். இதனால் அமைச்சரவையில் சிரேஷ்டர் ஒருவர் தலைமை வகிக்கும் பழக்கம் ஆரம்பமானது.
    - இதன் மூலம் பிரதம மந்திரி பதவி ஆரம்பமாகியது. ரொபட் வோல்போல் முதலாவது பிரதம மந்திரியாகக் கருதப்படுகிறார்.
    - மன்னர்கள் அமைச்சரவையில் இருந்து விலகியதால் அமைச்சர்கள் கூடி எடுக்கும் தீர்மானங்களை அறிவிப்பதும், மன்னன் அதற்கு அனுமதி வழங்குவதும் பழக்கத்திற்கு வந்ததுடன் கபினட் முறை விரைவாக வளர்ச்சியடைந்தது.
    - முதன்முதலாக 1715 ஆம் ஆண்டு ஒரே அரசியல் கட்சியில் இருந்து கபினட்டிற்கு அமைச்சர்களைத் தெரிவு செய்தல் ஆரம்பமாகியது.
    - ரொபட் வோல்போலால் அது ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன்மூலம் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு என்ற அடிப்படை எண்ணக்கரு செயற்படத் தொடங்கியது.





THE SIXTH ANNUAL CONFERENCE OF THE LABOUR PARTY.
MEMORIAL HALL, FARRINGDON STREET, LONDON, E.C., FEBRUARY 15TH, 16TH, AND 17TH, 1906.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **பின்வருவனவற்றில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் மற்றவைகளுடன் பொருந்தாது. பொருத்தமற்ற விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) 1. ரம்சே மக்டொனல்ட் 2. வின்சன்ட் சர்ச்சில் 3. ஜோன் ரசல்
4. ஒலிவர் குரோம்வெல் 5. கிளமென்ட் அட்லி

(...........)

02) பிரித்தானிய பாராளுமன்ற வளர்ச்சி தொடர்பாக முக்கியமான மன்னர்கள் சிலரது பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் பாராளுமன்ற அதிகார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யாத மன்னன் யார்?
1. மூன்றாம் ஜோர்ஜ் 2. ஏழாம் ஹென்ரி 3. நான்காம் ஹென்ரி
4. எட்டாம் ஹென்ரி 5. இரண்டாம் ஜேம்ஸ்

(...........)

03) இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரித்தானியாவில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் தலைவர் யார்?
1. வின்ஸ்டன் சேர்ச்சில் 2. ஜோன் ரசல் 3. கிளமென்ட் அட்லி
4. ரம்சே மக்டோனல் 5. ஸ்டன்லி போலட்லின்

(...........)

- **பின்வரும் வினாவின் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

04) 1832 ஆம் ஆண்டு சீர்திருத்தச் சடத்திற்கு அமைய மாற்றமடைந்த விடயம் தொடர்பான விடைகள் அடங்குவது

A மத்திய வகுப்பினருக்கு வாக்குரிமை கிடைத்தமை
B பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குதல்
C சனத்தொகையில் 24% மானோருக்கு வாக்குரிமை கிடைத்தல்
D இரகசிய வாக்கெடுப்பு அறிமுகமாதல்

1. A யும் C யும்  2. B யும் D யும்  3. C யும் D யும்
4. C மாத்திரம்  5. அனைத்தும்

(...........)

05) இங்கிலாந்தில் சர்வதேச வாக்குரிமை செயற்படுத்தப்பட்டது
1. 1833 ஆம் ஆண்டு  2. 1858 ஆம் ஆண்டு  3. 1872 ஆம் ஆண்டு
4. 1918 ஆம் ஆண்டு  5. 1928 ஆம் ஆண்டு

(...........)

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. பிரித்தானிய பாராளுமன்ற முறையில் முக்கிய இயல்புகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் கலந்துரையாடுக.
i. பிரதிநிதித்துவ முறை
ii. கட்சிமுறை
iii. கெபினட் முறை

02. 18ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியப் பாராளுமன்றம் ஜனநாயக நிறுவனமாக மாற்றமடைந்த விதத்தினை விபரிக்குக.

03. பிரித்தானியப் பாராளுமன்ற முறையின் கீழ் இன்றுவரை கட்சிமுறை வளர்ச்சியடைந்த விதத்தினை விபரிக்குக.

# 5. கைத்தொழில் புரட்சி

## அறிமுகம்

மனிதன் தன் கைகளினால் சிறிய அளவில் தமது தேவைக்கெனப் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தமைக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்திப் பாரிய அளவில் விநியோகத்தின் பொருட்டுப் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தமையால் ஏற்பட்ட பாரிய மாற்றமே கைத்தொழிற் புரட்சி எனப்படும். கைத்தொழிற் புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார சமூக, அரசியல், பண்பாடு என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் ஐரோப்பாவிலும் பின்னர் ஏனைய கண்டங்களிலும் செலுத்திய தாக்கத்தினை விளங்கிக்கொள்வதே இந்த அலகின் முக்கிய நோக்கமாகும்.

**தேர்ச்சி 5.0** : • இயற்கையின் சவால்களுக்கு முகங்கொடுக்கும்போது மனிதன் பெற்ற வெற்றியினைத் தெளிவாக விளங்கிக்கொண்டு அதற்கமைய செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 உலகின் போக்கை மாற்றியமைப்பத்தில் கைத்தொழிற்புரட்சி ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- தைக்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணியையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் பகுத்தாய்வார்.
- கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளைத் தெளிவுபடுத்துவார்.
- கைத்தொழிற் புரட்சியின் பரவலைப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுவார்.
- நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

- **கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பம்**
  - தைக்தொழிற் புரட்சியை அறிமுகப்படுத்துவார்.
  - தேசிய அரசுகளின் ஆட்சியாளர்கள் பின்பற்றிய கொள்கைகள் கைத்தொழிற் புரட்சிக்குத் தேவையான பின்னணியை அமைத்தல்.
  - 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இங்கிலாந்தின் வர்த்தகம் விரிவடைந்தமை கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த விதத்தை எடுத்துக்காட்டுவார்.
  - கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்குக் குடித்தொகை அதிகரிப்பு முக்கிய காரணமாதல்.

- **இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்**
  - இங்கிலாந்தில் மானியமுறை வீழச்சியுற்றமையும் அரசியல் நிலைப்பாடும்.
  - பொருட்களின் கேள்விக்கேற்ப வழங்கலை மேற்கொள்ள உற்பத்தி முறை போதாமை.
  - நாட்டில் இயற்கை வளங்கள் மிகுதியாகக் காணப்பட்டமை.
  - வளவாளர்கள் இருந்ததுடன் அவர்களுக்கு அனுசரணை வழங்குவதற்குச் செல்வந்த வகுப்பினரும் இருந்தமை.

- புவியியல் ரீதியாக நாடு சிறிதாக இருந்தமை, தீவாக இருந்தமை, உள்நாட்டில் வளர்ச்சியடைந்த போக்குவரத்து இருந்தமை.
- வேலியடைப்பினால் மக்கள் வேலை தேடி நகரங்களுக்கு வந்தமை. இதனால் மனித உழைப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை.
- வளர்ச்சியடைந்த வங்கிகள் காணப்பட்டமை.
- இங்கிலாந்து அரசாங்கம் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள்.
- மூலப்பொருட்களைப் பெறவும், முடிவுப் பொருட்களை விற்கவும் கூடிய குடியேற்ற நாடுகளைக் கொண்ட பேரரசாக இங்கிலாந்து விளங்கியமை.
- இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி மூன்று முக்கிய கைத்தொழில்களின் அடிப்படையில் நடைபெற்றது.

- **புடவைக் கைத்தொழில்**

குடிசைக் கைத்தொழிலாக விளங்கிய புடவைக் கைத்தொழில், இயந்திரம், நீராவி மற்றும் எரிபொருள் வகைகள் என்பனவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றமடைந்ததைக் கைத்தொழில் புரட்சியின்போது காணக்கூடியதாக இருந்தது. அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பல்வேறு இடர்களை வெற்றி கொள்ளும் பொருட்டுப் புதிய கண்டுபிடிப்புக்கள் பல தோற்றம் பெற்றன.

- ஜோன் கே - பறக்கும் தறி ஓடம்/நூணாழி
- ஜேம்ஸ் ஹாகிரிவுஸ் - நூற்கும் ஜெனி (ஸ்பின்னிங் ஜெனி)
- ரிச்சர்ட் ஆக்ரைட் - நீர்ச் சட்டம்
- சாமுவேல் கொம்ப்டன் - மியுல் இயந்திரம்
- எலீ விடினி - பஞ்சிலிருந்து விதையை அகற்றும் இயந்திரம்
- எலியஸ் ஹாவே - தையல் இயந்திரம்
- எட்மன்ட் காட்ரைட் - வலுவால் இயங்கும் இயந்திரத் தறி

- **இரும்புருக்குக் கைத்தொழில்**

இங்கிலாந்தின் கைத்தொழில் புரட்சியைத் துரிதப்படுத்துவதில் இரும்புருக்குக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது, அதன் பொருட்டுப் புதிய இயந்திரங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன.

- ஏப்ரஹாம் டர்பி - 1709 நிலக்கரியைக் கொண்டு இரும்புத்தாதினை உருக்கி வார்ப்பு இரும்பினை உற்பத்தி செய்தல்.
- ஹென்ரி கோட் - 1784 ரோலர் இயந்திரம்
- ஹென்ரி பெஸ்மர் - 1856 எளிதாக இரும்பினை உற்பத்தி செய்யும் முறை
- விலியம் சீமன்ஸ், எமலி ஜெரி மாட்டின் தம்பதிகள் - 1860 திறந்த உலை முறை
- விலியம் சீமன்ஸ் - 1878 மின்சார உலை

- **நிலக்கரிக் கைத்தொழில்**


இயந்திரங்களை இயங்க வைப்பதற்கு எரிபொருளாக நிலக்கரியைப் பயன்படுத்தியமை கைத்தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.


- தோமஸ் நிவ்கொமன் - நீராவி இயந்திரம்
- ஜேம்ஸ் வோட் - நீராவி இயந்திரத்தை மேலும் முன்னேற்றம்
- ஹம்ரி டேவி - பாதுகாப்பு விளக்கு

- **கைத்தொழிற் புரட்சி பரவிய ஏனைய துறைகள்**

### விவசாயம்

- வேலியடைப்பால் பாரிய விவசாய நிலங்கள் உருவானமை
- விவசாயத்திற்கு இயந்திரங்களைப் பயன்படுத்தியமை.
- விவசாயப் பொருட்களை மாற்றும் முறை
- புதிய பயிரிடும் முறை (வரிசையாக விதைக்கும் முறை)
- புதிய பசளைகள்


நீராவி இயந்திரம்


பாதுகாப்பு விளக்கு

### போக்குவரத்து

- றொபட் புல்டன் - 1807 புகைப்படகு
- ஜோன் மெக்கடம் - 1811 மெக்கடம் முறை
- ஹென்ரி பெல் - 1811 புகைக்கப்பல்
- ஜோர்ஜ் ஸ்டீவன்சன் - புகைவண்டி
- டெம்லர் - 1885 மோட்டார் வண்டி
- ரைட் சகோதரர்கள் - 1903 விமானம்

### தொடர்பு சாதனங்கள்

- 1840 - இங்கிலாந்தில் பெனி தபால் சேவை
- 1844 - சாமுவேல் மோஸ் - தந்தி முறை
- 1866 - சைரஸ் டபிளியு பீல்ட் - கேபல் முறை
- 1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் - தொலைபேசி
- 1899 - ஜோன் லொகி பெயாட் - தொலைக்காட்சி

- **கைத்தொழிற் புரட்சியின் பரவல்**

18 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற கைத்தொழிற் புரட்சி விரைவில் ஐரோப்பா முழுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பரவியது. அதன் பின்னர் யப்பான் உட்பட ஆசியாக் கண்டத்திலும் ஏனைய நாடுகளிலும் தென்னமெரிக்கா, ஆபிரிக்கா கண்டம் என்பனவற்றிலும் பரவியது.

- **கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்**
  - குடிசைக் கைத்தொழில் மறைந்து பாரிய கைத்தொழில்கள் தோற்றம் பெற்றமை.
  - விவசாயத்தில் தங்கியிருந்த பொருளாதாரம் கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டமை.
    - பணப் புழக்கத்துடனான பாரிய வர்த்த அமைப்புக்கள் உருவானமை.
    - முதலாளித்துவ முறை தோற்றம் பெற்றமை.
    - புதிய பேரரசுவாதத்திற்கு வழி ஏற்பட்டமை.

**சமூகம்**

- செல்வத்தை முதலீடு செய்த செல்வந்தரும் தமது உழைப்பை விற்று வாழ்ந்த ஏழைகளும் என்று சமுதாயத்தில் இரு பிரிவினர் தோற்றம் பெற்றனர். இவ்விரு பிரிவினரிடையே மோதல்கள் ஏற்பட்டன.
- நகரமயமாக்கல்
- சூழல் மாசடைதல்.
- கிராமங்கள் பாழடைதல், நிலம் அற்றோர் தோற்றம் பெறல், மரபு ரீதியான சமூக அமைப்புச் சீர்கேடுகள்.

**அரசியல்**

- மத்திய வகுப்புத் தோன்றுதல்.



- பல்வேறு அரசியல் பொருளாதார கருத்துக்கள் தோன்றுதல்.
  - றொபட் ஓவனின் சமத்துவ இயக்கமும் சாடீஸ்ட் இயக்கமும்.
  - மாக்சிசக் கொள்கை, ஜெரம் பென்தமியின் பயன்பாட்டுவாதம்.
- அடம் ஸ்மித்தின் தலையிடாமைக் கொள்கை.
- தொழிலாளர் இயக்கங்கள் உருவாகுதல்.
- பேரரசுவாதம் விரிவடைதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

**பல்தேர்வு வினாக்கள்**

**முதலாம், இரண்டாம் வினாக்களுக்கு முறையே ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் மற்றொன்றுடன் பொருந்தாது. பொருந்தாத விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) 1. ஹென்ரி டர்பி 2. ஹென்ரி கோட் 3. ஹென்ரி பேஸ்மர் 4. மைக்கல் சர்வேடஸ் 5. விலியம் சீமன்ஸ்

02) 1. ஹென்ரி பெல் 2. றொபட் புல்டன் 3. டெம்ளர் 4. ஜோன் கல்வின் 5. ஜோன் மக்கடம்

**03 ஆம் வினாவுக்கு முறையே ஐந்து சோடிப் பதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாது. அதனைத் தெரிந்து அடைப்புக்கள் அதன் இலக்கத்தை எழுதுக.**

03)
1. ஜோன் கே - பறக்கும் தறி ஓடம்
2. ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ் - தையல் இயந்திரம்
3. ரிச்சர்ட் ஆக்ரைட் - நீர்ச்சட்டம்
4. சாமுவேல் குரோம்டன் - மியூல் இயந்திரம்
5. எட்மன்ட் காட்ரைட் - வலுவால் இயங்கும் இயந்திரத்தறி (.........)

**இலக்கம் 05, 06 ஆகிய வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அத்தலைப்பிற்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குகள் எழுதுக.**

04) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்?
1. இங்கிலாந்தில் மானியமுறை வீழ்ச்சியுற்றமை.
2. நாட்டில் இயற்கை வளங்கள் இருந்தமை.
3. குடியேற்ற நாடுகளிலிருந்து மூலப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.
4. புவியியல் ரீதியாக நாடு சிறிய தீவாக இருந்தமை.
5. பிரான்சியப் புரட்சியின் தாக்கம் இங்கிலாந்தை வந்தடைந்தமை. (.........)

05) கைத்தொழில் புரட்சியின் நன்மைகள்
1. உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்பி அதிக இலாபம் அடைந்தமை.
2. வேலை வாய்ப்பு அதிகரித்தமை.
3. வெளிநாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு உதவிகள் வந்தமை.
4. வங்கிகளின் வளர்ச்சி
5. முதலாளித்துவப் பொருளாதார முறை தோற்றம் பெற்றமை. (.........)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**பின்வரும் வினாவுக்கான சரியான விடைகளை எழுதுக.**

06. ''கைத்தொழில் புரட்சியின் காரணமாக ஐரோப்பாவில் தொழினுட்ப, பொருளாதார, சமூகத் துறைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன.''

i. கைத்தொழிற்புரட்சி முதலாவது ஏற்பட்ட நாட்டைப் பெயரிடுக.
(01 புள்ளி)

ii. அது அந்த நாட்டில் ஏற்படுவதற்கான மூன்று காரணங்களைத் தருக.
(03 புள்ளிகள்)

iii. புடவைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய மூன்று கண்டுபிடிப்புக்களைப் பெயரிடுக.
(03 புள்ளிகள்)

iii. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வினாவில் கூறப்பட்டுள்ள துறைகளில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக் கைத்தொழில் புரட்சி எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதை விவரிக்குக.
(07 புள்ளிகள்)

**07. பின்வரும் தலைப்புக்களின் கீழ் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி பற்றி விபரிக்குக.**

i. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணி
ii. கைத்தொழில் புரட்சியின் பிரதான கண்டுபிடிப்புக்கள்
iii. கைத்தொழில் புரட்சியின் பொருளாதார, சமூக விளைவுகள்
(14 புள்ளிகள்)

08. பிரித்தானிய புறவுருவப்படமொன்றில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக. அவற்றில் இரண்டு இடங்களைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. லிவர்பூல் | 2. மான்செஸ்டர் | 3. லண்டன் | 4. தேம்ஸ் நதி |
| 5. ஸ்கொட்லாந்து | 6. வேல்ஸ் | 7. வடகடல் | 8. ஆங்கிலக் கால்வாய் |

(14 புள்ளிகள்)

# 6. அமெரிக்க சுதந்திரப்போர்

## அறிமுகம்

சுதேச கோத்திர மக்களைக் கலைத்துவிட்டு வட அமெரிக்காவில் குடிபுகுந்த ஐரோப்பிய இனத்தவர் அங்கு குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். அமெரிக்கக் கண்டம் கண்டுபிடிக்ககப்பட்டதன் பின்னர் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகள் வட அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தன.

**உதாரணம்:** ஸ்பானியா - புளோரிடா
பிரான்ஸ் - நில் பிரான்ஸ் (கனடா), லுசியானா
பிரித்தானியா - 13 குடியேற்றங்கள்

யாத்திரைத் தந்தைகள் எனப்பட்ட பிரித்தானியக் குழுவினர் வட அமெரிக்காவுக்குச் சென்று அங்கு குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். சமய ரீதியாகத் தமது தாய் நாட்டினின்று சுதந்திரமாக செயற்பட விரும்பிய அவர்கள், தம்மால் கட்டியெழுப்பப்ட்ட குடியேற்றங்களின் நிருவாகத்தின் பொருட்டு ''மே பிளவர்'' (வைகாசிப் பூ) உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கினர். பிரித்தானிய அரசாங்கம் அமெரிக்காவில் குடியேறிய குடியேற்றவாசிகளிடமிருந்து வரி அறவிட முயன்றது. அதற்கு எதிராக செயற்பட்ட அமெரிக்க குடியேற்றவாசிகள் ''பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பதில்லை'' என்ற தொனிப்பொருளில் ஜோர்ஜ் வொஷிங்டனின் தலைமையில் போராடி இங்கிலாந்தைத் தோற்கடித்து 1776 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடு என்ற சுதந்திர அரசை நிறுவிக் கொண்டமை இந்த அலகின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

**தேர்ச்சி 6.0** : • ஒரு நாட்டு மக்கள் ஒன்றுமையுடன் செயற்படுவதன் மூலம் வெற்றி பெற முடியும் என்ற புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1 ஐரோப்பிய நாகரிகம் அமெரிக்கக் கண்டத்தில் பரவிய முறை பற்றிப் பரீட்சிப்பார்.
6.2 அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தினை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்** :


## பாடத்தைத் திட்டமிடுவற்குரிய அறிவுறுத்தல்கள்:
## அமெரிக்க சுதந்திரப் போர்

- 15 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பியரால் அமெரிக்கக் கண்டத்தில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டதாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அமெரிக்காவுக்குச் சென்ற ஐரோப்பியர் அக்காலத்தில் அங்கு நிலவிய நாகரிகத்தை முற்றிலும் அழித்துவிட்டு, ஐரோப்பிய நாகரிகத்தைத் தழுவிய புதிய நாகரிகமொன்றை அமெரிக்கப் பிரதேசத்தில் கட்டியெழுப்பினர்.
- ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த காலத்தில் அப்பிரதேசங்களில் நாகரிகமடைந்த மக்கள் வாழந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- தொல்பொருள் சான்றுகளின் மூலம் அமெரிக்காவின் ஆரம்பக் குடியேற்றவாசிகள் தொடர்பாகத் தகவல்கள் கிடைப்பதுடன் அவர்கள் பெரும்பாலும் சுற்றாடலை நேசிப்பவர்களாக இருந்தனர். அவர்கள் வடக்கு, தெற்கு, மத்திய அமெரிக்கப் பிரதேசதங்களில் பரவியிருந்தனர்.
- 15ஆம் நூற்றாண்டு ஐரோப்பியர் அமெரிக்காவுக்கு வந்தபோது அங்கிருந்த சுதேசிகள் பொதுவாகச் செவ்விந்தியர் எனப்பட்டனர்.

- செவ்விந்தியர் எனப்பட்ட அமெரிக்கக் கண்டத்தில் வாழ்ந்த சுதேசிகளால் கட்டியெழுப்பப்பட்ட முக்கியமான நாகரிகங்கள் பல இருந்தன.
  1. ஹோப்வேல் கோத்திர நாகரிகம்
  2. இரோக்கொயிஸ் கோத்திர நாகரிகம்
  3. பியுபிலோ கோத்திர நாகரிகம்
  4. மாயா நாகரிகம்
  5. இன்கா நாகரிகம்
  6. அஸ்டெக் நாகரிகம்
- இவைகளில் மாயா, இன்கா, அஸ்டெக் நாகரிகங்கள் மிகவும் முன்னேற்றமடைந்தவைகளாக இருந்தன.
- விவசாயம் முன்னேற்றமான நிலையில் இருந்தன.
- பாதைகள் பல்வேறு விதமான நிர்மாணங்கள், கட்டிடங்கள் என்பன இருந்தன.



அந்தீஸ் மலைக்கு அருகில் காணப்படும் இன்கா நாகரிகமும் பாதையும்




பயிர் செய்யப்பட்ட நிலமும் பயிர் செய்யப்பட்ட முறையும்



பயிர்ச்செய்கை நிலம் பரிசீலிக்கப்படும் இடம்



பாலம்

# ஐரோப்பியர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தமைக்கான காரணங்கள்

கி.பி. 1453 ஆம் ஆண்டு ஒட்டோமன் துருக்கியரால் கொன்ஸ்தாந்திநோபில் கைப்பற்றப்பட்டதன் விளைவாக ஐரோப்பியருக்குக் கீழைத்தேய வர்த்தகத் தொடர்பு தடைப்பட்டது. இதன் விளைவாகக் கீழைத் தேயசங்களுக்கு வருவதற்கு அவர்கள் புதிய வழியைக் கண்டுபிடிக்க முயன்றதன் விளைவாக அவர்கள் அமெரிக்காவுக்கு வந்தனர். இதற்கமைய மேலைத்தேசத்தவர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைக்க வழிகோலிய காரணங்கள் சில உள:

## (1) அரசியல் காரணங்கள்

- ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை.
- தேசிய அரசுகளில் மத்திய வகுப்பினர் பலம் வாய்ந்தவர்களாக இருந்தமை.
- தேசிய அரசுகளின் ஆட்சியாளர்கள் நாடுகாண் பயணிகளுக்கு அனுசரணை வழங்கியமை.
  ஸ்பானியா - பெர்டினன்ட், இசபெலா
  பிரான்ஸ் - நான்காம் ஹென்ரி
  போர்த்துக்கல் - கடலோடி ஹென்ரி
  இங்கிலாந்து - 7 ஆம் ஹென்ரி, 1ஆவது எலிசபெத் இராணி

## (2) பொருளாதாரக் காரணங்கள்

- வணிகவாதக் கருத்துக்கள் பரவியமை
- நாட்டுக்குச் சாதகமான வர்த்தக நிலுவை, பொன் நியமம் என்பனவை வணிகத்தில் பிரதான பண்புகளாயிருந்தன.
- நாடுகளைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்தமை.

  **உதாரணம்:**

  16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியா, தென், மத்திய அமெரிக்க பிரதேசங்களைக் கைப்பற்றியமை. அங்கு, பொன், வெள்ளி ஏராளமாகக் கிடைத்தமையே இதற்கான காரணமாகும்.

## (3) சமயக் காரணங்கள்

- 16 ஆம் நூற்றாண்டு நிகழ்ந்த சமயப் புரட்சியின் விளைவாகப் பல்வேறு சமயப் பிரிவுகளுக்கிடையே மோதல்கள் ஏற்படல்.
- இதனால் இன்னல்களுக்கு உள்ளான மக்கள் சுதந்திரத்தை விரும்பி அமெரிக்காவுக்குச் சென்றமை.

  **உதாரணம்:**

  - இங்கிலாந்தில் 8 ஆம் ஹென்ரி மன்னன், புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிக் கொண்டமை.
  - கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மேரி டியுடர் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர் களுக்கு இன்னல் விளைவித்தல், இவ்வாறான காரணங்களால் இங்கிலாந்து மக்கள் மதச் சுதந்திரம் நாடி அமெரிக்காவுக்குச் சென்றமை.
- உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றிய ஸ்பானியா, தனது சமயத்தைப் பாதுகாக்கவும் விரிவடையச் செய்யவும் கடும் முயற்சி செய்ததுடன் புதிய உலகில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நோக்குடன் செயற்பட்டமை.

## அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகள்

### (1) ஸ்பானியா

- 1492 ஆம் ஆண்டு தொடக்கம் கரிபியன் தீவுகளைக் கைப்பற்றி அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தல், ஸ்பானியாவில் பரந்த பேரரசைக் கட்டியெழுப்புதல்.
- தற்போதைய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புளோரிடா, டெக்சான், கலிபோர்னியா, நிவ் மெக்சிக்கோ, அரிசோனா, ஒக்லஹோமா ஆகிய பிராந்தியத்தைச் சேர்ந்த பிரதேசங்களைக் கைப்பற்றியமை.
- தென் அமெரிக்காவில் பேரு, மெக்சிக்கோ ஆகிய பிரதேசங்கள் ஸ்பானியப் பேரரசிற்குப் பணிதல்.

### (2) போர்த்துக்கல்

- 1500 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் பிரேசில் கைப்பற்றப்படல்.

### (3) இங்கிலாந்து

- ஆங்கிலேயர் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் பதின்மூன்று குடியேற்றங்களை நிறுவினர். ஜோர்ஜியா, தென் கரோலினா, வட கரோலினா, வேர்ஜினியா, மேரிலாந்து, டெலவெயார், பென்சில்வேனியா, கனெடிகட், நிவ்ஜேர்சி, ரோட்ஸ் தீவு, மசாசுசெட்ஸ், நிவ்ஹம்ஷயர், நிவ்யோர்க் ஆகிய குடியேற்ங்களில் ஆங்கிலேயரது ஆட்சி பரவியது.

### (4) பிரான்ஸ்

- தோல் வர்த்தகத்தில் பொருட்டு வட அமெரிக்காவில் பிரான்சியர் 1500 - 1700 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குடியேற்றங்களை அமைத்தனர்.
- புனித லோரன்ஸ் நதி தொடக்கம் மிசிசிப்பி நதியின் முகத்துவாரம் வரையிலான பிரதேசம் பிரான்சியருக்கு உரியதாக இருந்தது.

## பிரித்தானியரின் கீழ் குடியேற்றங்கள் நிர்வகிக்கப்பட்ட முறை

- பிரித்தானிய முடிக்கும், பாராளுமன்றத்துக்கும் குடியேற்றங்களை நிருவகிப்பதற்கு பெரும் அதிகாரம் இருந்தமை.
- பிரித்தானிய மன்னனால் நியமிக்கப்பட்ட ஆளுனரையும், ஆலோசனைச் சபையையும் கொண்ட குழுவில் அவை நிருவகிக்கப்பட்டமை.
- நிருவாக நடவடிக்கை தொடர்பாகக் குடியேற்றவாசிகள் அதிக சுதந்திரம் உடையவர்களாக இருந்தமை.
- பொருளாதார ரீதியாகக் குடியேற்றவாசிகளுக்குச் சுதந்திரம் இருக்கவில்லை.
- பிரித்தானியர் வட அமெரிக்கக் குடியேற்றங்களைத் தமது உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பிரதேசமாகவும் தமது முடிவுப் பொருட்களை விற்கும் இலாபம் பெறும் சந்தையாகவுமே குருதினர்.

  **உதாரணம்:**

  புடைவை நெய்தலுக்கான பருத்திச் செய்கைக்கும் சிகரட் உற்பத்திக்கான புகையிலைச் செய்கைக்கும் பிரித்தானியர் அனுமதி வழங்கிய போதிலும் அந்த மூலப் பொருட்களைக் கொண்டு கைத்தொழில்களை ஆரம்பிக்கக் குடியேற்றவாசிகளுக்குத் தடை விதித்தனர். மூலப் பொருட்களைக் கொண்டு பிரித்தானியரே கைத்தொழில்களை மேற்கொண்டனர்.
- மூலப்பொருட்கள் அனைத்தும் பிரித்தானியாவுக்கு அனுப்பப்பட்டதுடன், அவைகளின் விலையையும் பிரித்தானியாவே தீர்மானித்தது.

- நாவாய்ச் சட்டம், சுங்க வரி என்பனவற்றின் மூலம் குடியேற்றங்களின் பொருளாதார சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த பிரித்தானியா முயன்றமை. குடியேற்ற வாசிகள் பொருட்களை எடுத்துச் செல்லும்போது அவைகளைப் பிரித்தானியக் கப்பல்களிலேயே எடுத்துச் செல்ல வேண்டுமென்று நாவாய்ச் சட்டம் மூலம் விதிக்கப்பட்டமை.
- கப்பல்களில் பொருட்களை எடுத்துச் செல்லும்போது அந்தச் சட்டங்கள் கடுமையாகச் செயற்பட்டமை.

## அமெரிக்க சுதந்திரப் போர்

- வட அமெரிக்காவில் அத்திலாந்திக் கரையோரப் பிரதேசத்தில் அமைந்த பிரித்தானியக் குடியேற்றங்கள் பதின்மூன்றும் இணைந்து பிரித்தானியப் பேரரசிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக முன்னெடுத்துச் சென்ற இயக்கமே அமெரிக்க சுதந்திரப் போர் எனப்படும்.

- வடக்கு எல்லைப் பிரதேசத்திலிருந்த பிரான்சியராலும் மேற்கில் இருந்த செவ்விந்தியர்களாலும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டது. பிரித்தானியரிடமிருந்து பெறப்பட்ட உதவியினால் குடியேற்றவாசிகளுக்கு இந்த அச்சுறுத்தல்களின்போது பாதுகாப்புக் கிடைத்தது. 1756 - 1763 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஏழாண்டுப் போரில் குடியேற்ற வாசிகளின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. ஏழாண்டுப் போரில் பிரித்தானியா பிரான்சைத் தோற்கடித்ததுடன் 1763 ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானியக் குடியேற்றக் கொள்கை மேலும் கடுமையானது.

## அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள்

- **பிரித்தானிய வணிகவாதக் கொள்கை**

  பிரித்தானிய குடியேற்றங்களின் நிருவாகம் தொடர்பாக ஆளுனர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். குடியேற்ற நாடுகளின் திறைசேரியில் இருந்தே அவருக்குச் சம்பளம் வழங்க வேண்டியிருந்தது. பிரித்தானிய வர்த்தகர்களுக்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்கும் இலவசம் கிடைக்கக்கூடிய முறையில் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் விருப்பத்தின்படி தயாரித்த கொள்கை குடியேற்ற நாடுகளில் செயற்படுத்தப்பட்டது. அமெரிக்கக்குடியேற்றங்களின் ஏற்றுமதி, இறக்குமதியைக் கட்டுப்படுத்திய சட்டக்கோவை பிரித்தானியப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

  **உதாரணம்:**

  - வெளிநாட்டுப் பொருட்களைப் பணம் கொடுத்துப் பெறும்போதும் முதலில் அவற்றைப் பிரித் தானிய துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்று அங்கு சுங்கவரி செலுத்திப் பின்னர் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு எடுத்துச் செல்லும்படி விதித்தல்.
  - பிரித்தானியாவின் உற்பத்திக்குப் போட்டி ஏற்படும் விதத்தில் குடியேற்ற நாடுகள் பொருட்களை உற்பத்தி செய்தல் தடைசெய்யப்படல்.
  - குடியேற்ற நாடுகளின் வர்த்தகப் பொருட்களைப் பிரித்தானியருக்கு மாத்திரமே விநியோகிக்க வேண்டுமென விதித்தல்.

- பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் நடைபெற்ற ஏழாண்டு யுத்தத்திற்கு அதிக பணம் செலவிட வேண்டியிருந்ததால் பிரித்தானிய திறைசேரி வெறுமையடைந்திருந்தது. மேலும் புதிதாகப் பிரித்தானியா பெற்றுக்கொண்ட பிரதேசங்களைப் பாதுகாக்கவும் நிருவகிக்கவும் மேலதிக செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதால், புதிய வருமான வழிகளை அது தேட வேண்டி இருந்தது. அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாவன:
  1. சுங்க வரியை அதிகரித்தல்
  2. நாவாயச் சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்ததல்.

- ஏழாண்டுப் போரை வென்ற பின்னர் 1763 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளின் நிருவாகத்தை முறைப்படுத்தியமை.

- யுத்தச் செலவுகளில் ஒரு பகுதியைக் குடியேற்றவாசிகளிடமிருந்து பெற வேண்டும் என்பது பிரித்தானிய அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தது. ஏற்கனவே நடைபெறும் யுத்தங்களுக்குத் தேவையான பணத்தையும் படை வீரர்களையும் குடியேற்றவாசிகள் வழங்குவதால் மேலும் வரியை அவர்களிடமிருந்து அறிவிடக்கூடாதென்பது குடியேற்றவாசிகளின் கருத்தாக இருந்தது.

- எவ்வாறெனினும் இதுவரை கடுமையாகச் செயற்படுத்தப்படாத வணிகச் சட்டங்களைப் பிரித்தானிய அரசாங்கம் செயற்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டமை. மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் அமெரிக்கக் குடியேற்றங்களிலிருந்து வரி அறவிடுவதற்கும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டமை. இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சில:
  1. குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்த பிரித்தானிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
  2. பதின்மூன்று குடியேற்றங்களுக்கு மேலாகவோ மேற்குப் பகுதி தேச எல்லைக்கு உள்ளோ விரிவடைய குடியேற்றவாசிகளுக்குத் தடைவிதித்தல்.
  3. குடியேற்றங்களின் பாதுகாப்புக்கெனக்கூறி அமெரிக்காவுக்குப் படைகளை அனுப்பியதுடன் அவற்றின் செலவைக் குடியேற்ற நாடுகள் ஏற்க வேண்டும் என விதித்தமை.

- குடியேற்றவாசிகள் மேற்கு நோக்கிப் பரவுவதன் மூலம் செவ்விந்தியர்கள் சினந்தெழுவார்கள் என்பதற்காகவே இந்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தத் தடைகள் சிறு நில உரிமையாளர்களுக்கும் உரோமம் விற்பனை செய்வோருக்கும் பாதகமாமக அமைந்ததால் அவர்களுக்குப் பிரித்தானிய அரசாங்கம் மீது மனக்கசப்பு ஏற்பட்டது.

- குடியேற்றவாசிகள் ஏற்றுமதி செய்த கரும்புச் சாற்றிற்கு வரி செலுத்த வேண்டும் என சட்டம் கொண்டு வரப்பட்டது. 1764 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இந்தச் சட்டம் சீனி சட்டம் எனப்பட்டது. இச்சட்டம் கடுமையாகச் செயற்படுத்தப்பட்டதால் மக்கள் இதற்கு எதிராகச் செயற்பட்டனர்.

- குடியேற்றங்களில் நிறுத்தப்பட்டிருந்த பிரித்தானியப் படையின் செலவுகளைக் குடியேற்ற நாடுகள் ஏற்க வேண்டுமெனப் பிரித்தானியா வற்புறுத்தியதால் குடியேற்றவாசிகளின் ஆத்திரம் மேலும் அதிகரித்தது.

- 1765 ஆம் ஆண்டு பிரித்தானியப் பிரதமராக இருந்த ஜோர்ஜ் கிரேன்வில் அவர்களால் முத்திரை வரி ஒன்றும் புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கமைய
  - காணி உறுதி, பத்திரிகை, ஏனைய நிலையான ஆவணங்கள் என்பனவற்றுக்கு செலுத்தப்பட வேண்டிய முத்திரை வரி விதித்தல்.
  - குடியேற்றங்களிலிருந்து வரி அறவிடுவதற்கு இங்கிலாந்துப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளமை.
  - உரிமை தொடர்பாகக் குடியேற்றவாசிகள் வினா எழுப்புதல்.
  - எதிர்பபின் காரணமாக 1776 ஆம் ஆண்டு முத்திரை வரி நீக்கப்படல்.

### 1767 டவுண்ட்செண்ட் சட்டம்

பிரதமர் வில்லியம் பிட் என்பவரின் தலைமையிலான அமைச்சரவையின் திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்பட்ட சாள்ஸ் டவுண்ட்செண்ட் புதிய வரியை அறவிடத் தீர்மானித்தல்.

- பிரித்தானியப் பாராளுமன்றம் குடியேற்றவாசிகளிடமிருந்து கண்ணாடி, தகரம், சாய வகைகள், கடதாசி, தேயிலை என்பனவற்றுக்கான வரியை அறவிடத் தீர்மானித்தமை.
- குடியேற்றவாசிகள் இணைந்து அவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தமை.
- பின்னர் தேயிலை வரி தவிர்ந்த ஏனைய வரிகள் நீக்கப்பட்டமை.

  பிரித்தானியப் பாராளுமன்றத்திற்குக் குடியேற்றவாசிகளிடமிருந்து வரி அறவிடும் உரிமை உண்டென்பதைக் காட்டுவதற்காகத் தேயிலை வரி நீக்கப்படவில்லை.
- பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரித்து, உள்நாட்டில் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆர்வம் குடியேற்றவாசிகளுக்கு ஏற்பட்டமை.
- நிவ்யோர்க் குடியேற்றத்தில் சட்டசபையை இடைநிறுத்திடத் தீர்மானித்தல்.

## பொஸ்டன் தேநீர் விருந்து (1773 டிசம்பர் 16)



பிரித்தானியப் பாராளுமன்றம் தேயிலை வரியை நீக்காததால் கோபமடைந்த குடியேற்றவாசிகள் பொஸ்டன் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கிழக்கிந்திய சங்கத்தின் கப்பல்களில் ஏறி (சாமுவேல் அடம்ஸ் உட்பட்ட குழுவினர்) அதிலிருந்த தேயிலைப் பெட்டிகளைக் கடலில் எறிந்தனர். இதனக் கேள்வியுற்றதும் ஏனைய துறைமுகங்களிலிருந்து தேயிலையையும் அவ்வாறே செய்தனர். இந்நிகழ்வு யுத்தம் ஆரம்பிப்பதற்கு அண்மிய காரணமாக அமைந்தது.

இந்த நிகழ்வின் விளைவாக மூன்றாம் ஜோர்ஜ் மன்னனும் அவனது ஆலோசகரான நோர்த் பிரபுவும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

- பிரித்தானிய அரசாங்கத்தால் பொஸ்டன் துறைமுகம் மூடப்பட்டதுடன், குடியேற்றவாசிகளின் பகிரங்கக் கூட்டங்களும் தடைசெய்யப்பட்டன.
- குற்றம் சாட்டப்பட்ட குடியேற்றவாசிகளின் வழக்கு, பிரித்தானியாவில் விசாரிக்கப்படல்.
- மசாசுசெட்ஸ் குடியேற்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த விசேட உரிமைகள் இரத்துச் செய்யப்பட்டமை.

## முதலாவது கண்ட திட்ட மகாநாடு (1774)

பிரித்தானிய அரசாங்கத்தின் கடுமையான நடவடிக்கைகளுக்கு எதிராகத் தீர்மானம் எடுக்கும் பொருட்டு வேர்ஜினிய சட்டசபை கண்ட மகாநாடு ஒன்றைக் கூட்டும் பொருட்டு முதல் நடவடிக்கை எடுத்தது. முதலாவது கண்டத்துக்கான மகாநாடு 1774 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிலடெல்பியாவில் கூடியது. ஜோர்ஜியா தவிர்ந்த அனைத்துக் குடியேற்றங்களினதும் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர். ஜோர்ஜ் வாஷிங்கடன், ஜோர்ஜ் அடம்ஸ், சாமுேவேல் அடம்ஸ், ஜோன்ஜே ஆகிய அமெரிக்க வரலாற்றில் சிறப்பான செயலொன்றை நிறைவு செய்த தலைவர்கள் சிலர் இதில் பங்கேற்றனர். அதில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

- குடியேற்றவாசிகளின் உரிமை தொடர்பான பிரகடனமொன்றை அங்கீகரித்துக்கொள்ளுதல்.

- கண்டத்துக்கான அமைப்பினை நிறுவுதல்.
- தலைவராக ஜோர்ஜ் வாஷிங்டன் நியமித்தல்.
- கண்டத்துக்கான மகாநாட்டின் தீர்மானத்திற்கு அமையக் குடியேற்றவாசிகள் போருக்குத் தயாராகுதல்.

இதற்கமைய

- பிரித்தானியருக்கும் குடியேற்றவாசிகளுக்குமிடையே 1775 ஆம் ஆண்டு லெக்சின்டன் எனும் இடத்தில் முதலாவது போர் ஆரம்பமானது.
- 1775 ஆம் ஆண்டு குடியேற்றங்கள் அனைத்தினதும் பிரதிநிதிகள் ஒன்றுகூடிப் பணம் அச்சிடுவதற்கும் ஜோர்ஜ் வாஷிங்டனின் தலைமையில் போர்ப் படையொன்றை ஒழுங்கு செய்வதற்கும் தீர்மானித்தல்.

## சுதந்திரம் பிரகடனப்படுத்தப்படல் (1776 ஜுலை 04)

- 1776 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4 ஆம் திகதி அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் என்ற பெயரில் அறிக்கை வெளியிடப்பட்டமை.
- இதன் மூலம் அமெரிக்கர் சுதந்திர இனத்தினர் என ஏற்றுக்கொள்ளப்படல் ஆரம்பமானமை.
- ஜோர்ஜ் வோஷிங்டனின் தலைமையில் யுத்தம் ஆரம்பமாதல்.
- விலியம் ஹாவேயினால் ரோட் தீவில் குடியேற்ற நாட்டுப்படை தோல்வியுறல், நியூயோர்க் நகர் பிரித்தானியர் வசம் வருதல்.
- பிலடெல்பியாவும் பிரித்தானியர் வசம் வருதல்.
- இரண்டாவது மகாநாட்டில் பிரித்தானிப் பேரரசில் இருந்து விடுதலை பெறத் தீர்மானித்தல்.
- ஏழாண்டுப் போரில் தோல்வியுற்ற பிரான்ஸ், பிரித்தானியரைப் பழிவாக்கும் நோக்கில் 1778 ஆம் ஆண்டு குடியேற்றவாசிகளுக்கு உதவுதல்.
- பிரான்சிலிருந்து பணம், தொண்டர் படை, கப்பல் என்பன கிடைக்கப்பெற்றதால் குடியேற்றவாசிகள் வலிமை பெறல்.
- 1779 ஆம் ஆண்டு ஸ்பானியாவும் ஒல்லாந்தும் பிரித்தானியருக்கு எதிராகப் போரில் ஈடுபடல்.
- 1781 ஆம் ஆண்டு பிரித்தானியப் படையை நடாத்திச் சென்ற கொன்வோலிஸ், யோர்க் டவுனில் வோஷிங்டனின் படையால் தோற்கடிக்கப்படல்.

## குடியேற்றவாசிகளின் வெற்றிக்கான காரணங்கள்

- அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே தூரம் அதிகமாக இருந்தமை
- ஜோர்ஜ் வோஷிங்டனின் திறமையான தலைமைத்துவம்
- குடியேற்றவாசிகள் கொரில்லாப்போர் முறையில் சிறந்தவர்களாக இருந்தமை பிரித்தானியப் போர் வீரருக்கு அவ்வாறான திறமை இன்மை.
- பிரான்ஸ், ஸ்பானியா போன்ற நாடுகள் பிரித்தானியருக்கு எதிராகக் குடியேற்றவாசிகளுக்கு உதவியமை.
- ரஷ்யா, சுவீடன் முதலான ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பிரித்தானியாவுக்கு எதிராக நடுநிலை அணியொன்றை ஆரம்பித்தமை.
- பிரித்தானியப் பேரரசின் ஏனைய பிரதேசங்களிலும் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பமாகியமை.

### சுதந்திரம் பெறுதலும் புதிய அரசியல் யாப்பினை அங்கீகரித்தலும்

- 1783 ஆம் ஆண்டு பிரித்தானிய குடியேற்றங்கள் பதின்மூன்றும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு பாரிஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல்.
- கனடாவின் தென் எல்லையிலிருந்து புளோரிடாவின் வட எல்லை வரையும் அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து நாட்டின் உட்புறமாக மிசிசிப்பி நதி வரையும் பரவிக் காணப்படும் பிரதேசம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனப்பட்டமை.
- 1787 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற அமெரிக்கர் பிலடெல்பியா மகாநாட்டில் புதிய யாப்பொன்றினைத் தயாரித்துக் கொள்ளல்.
- முடியரசுக்கும் பாராளுமன்ற முறைக்கும் மாறுபாடான முறையைத் தெரிவுசெய்து நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை எனும் பெயரில் ஜனநாயக அரசைத் தோற்றுவித்தமை.
- அமெரிக்க சுதந்திரப் போர் நவீன காலத்தில் நிகழ்ந்த முதலாவத ஜனநாயகப் புரட்சி என உலக வரலாற்றில் இடம்பெற்றமை.
- உலகின் பலம் வாய்ந்த அரசான அமெரிக்க ஐக்கிய நாடுகள் தோற்றம் பெற்றன.

## கணிப்பீடும் மதிப்பீடும் 01

**பின்வரும் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதவும்.**

01) அமெரிக்கக் கண்டத்தில் குடியேற்றங்களை அமைக்காதோர்
1. ஸ்பானியர் 2. போர்த்துக்கேயர் 3. ஆங்கிலேயர்
4. பிரான்சியர் 5. சுவிட்சலாந்தர் (..........)

02) அமெரிக்க ஆரம்ப குடியேற்றங்களில் உள்ளடங்காதது?
1. ஜோர்ஜியா 2. வேர்ஜினியா 3. நியூஜேர்சி
4. டெலவெயார் 5. கலிபோனியா (..........)

03) அமெரிக்கர் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்ட ஆண்டு
1. 1776 2. 1774 3. 1765 4. 1779 5. 1781 (..........)

04) பிரித்தானியக் குடியேற்றங்கள் பதின்மூன்றும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை
1. பிராக் உடன்படிக்கை 2. லுபெக் சமாதான உடன்படிக்கை
3. பாரிஸ் உடன்படிக்கை 4. வெஸ்ட்பாலியா உடன்படிக்கை
5. ஏமியன்ஸ் உடன்படிக்கை (..........)

05) அமெரிக்க சுதந்திரப் போருக்குத் தலைமை வசித்தவர்
1. லிங்கன் 2. மொன்ரோ 3. வோஷிங்டன் 4. ஜெபர்சன் 5. ஜக்சன் (..........)

06) பின்வருவனவற்றுள் இங்கிலாந்தின் கீழ் அமெரிக்கக் குடியேற்றங்கள் நிருவகிக்கப்பட்டமை தொடர்பான சரியான விடையாக அமைவது எது?
A - பிரித்தானிய முடிக்கும், பாராளுமன்றத்துக்கும் குடியேற்றங்களை நிருவகிக்க அதிக அதிகாரம் இருந்தமை.
B - குடியேற்றவாசிகள் நிருவாக நடவடிக்கையில் சுதந்திரமாக இயங்கியமை.
C - குடியேற்றத்தின் நிருவாகத்தின் பொருட்டு நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபையில் அமெரிக்கா இருந்தமை.
D - குடியேற்றவாசிகள் பொருளாதார ரீதியாக சுதந்திரமற்றவர்களாக இருந்தமை.

1) A, B, C 2) B, C, D 3) A, B, D 4. அனைத்து விடைகளும் (..........)

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. அமெரிக்க சுதந்திரப்போர் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களைத் தெளிவுபடுத்தி அப்போரின் முக்கியத்துவத்தை விளக்குக.
(14 புள்ளிகள்)

02. ''அமெரிக்க சுதந்திரப் போர் அமெரிக்காவில் மட்டுமல்ல ஐரோப்பாவிலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.''

i. அமெரிக்க சுதந்திரப் போரின் தலைவரைப் பெயரிடுக. (01 புள்ளி)

ii. அமெரிக்க சுதந்திரப் போரின் பிரதான தாரக மந்திரம் என்ன? (01 புள்ளி)

iii. அமெரிக்க சுதந்திரப் போருக்கு வழியாய் அமைந்த பொருளாதார, அரசியல் காரணி களைத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

iv. அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகளின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட கூற்றினைத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

03. ''அமெரிக்க சுதந்திரப் போருக்கு அரசியல், பொருளாதாரம் என்பன காரணங்களாயின.''

i. இங்கிலாந்து மன்னனின் அனுசரணையுடன் 1497 ஆம் ஆண்டு நியூபவுண்லாந்துக்கு வருகை தந்த யாத்திரிகள் யார்? (01 புள்ளி)

ii. இங்கிலாந்து மக்கள் வட அமெரிக்காவில் குடியேறியமைக்கான இரண்டு காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

iii. வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் அமைக்கப்பட்ட ஆங்கிலக் குடியேற்றங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iv. ஆங்கில அரசாங்கத்தினால் வட அமெரிக்காவில் பின்பற்றப்பட்ட குடியேற்ற நாடுகளின் கொள்கையில் கவனம் செலுத்தி மேற்கூறப்பட்ட கூற்றினைத் தர்க்க ரீதியாக முன்வைக்குக. (08 புள்ளிகள்)

03. i. அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களைப் பரிசீலிக்குக.
(08 புள்ளிகள்)

ii. அமெரிக்கர் வெற்றியடைந்தமையில் தாக்கம் செலுத்திய காரணங்களை விபரிக்குக.
(06 புள்ளிகள்)

04. உலகப் படத்தில் ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட குடியேற்றங்களைக் குறிக்குக.
(14 புள்ளிகள்)

# 7. பிரான்சியப் புரட்சி

## அறிமுகம்

பிரான்சில் நிலவிய ஊழல் நிறைந்த ஆட்சிக்கு எதிராக 1789 ஆம் ஆண்டு பிரான்சிய மக்கள் செய்த புரட்சி பிரான்சியப் புரட்சி எனப்படும். அப்புரட்சியை நோக்குகையில் அது உடனடியாக ஏற்பட்ட புரட்சி அல்ல எனவும், பல வருடங்களாக நிலவிய சீர்கேடான நிலைமையால் ஏற்பட்ட புரட்சி என்றும் அறியக்கூடியதாக உள்ளது. பிரான்சில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகச் சீர்கேடுகளே பிரான்சியப் புரட்சிக்கான காரணங்களாகும். "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" எனும் தாரக மந்திரத்தின் அடிப்படையில் ஒருங்கமைக்கப்பட்ட இந்தப் புரட்சியில் 16 ஆம் லூயி மன்னனின் சர்வாதிகார ஆட்சி வீழ்ச்சியடைந்து மக்கள் வெற்றி பெற்றனர். பிரான்சியப் புரட்சியின் விளைவாகத் தோற்றம் பெற்ற மனித உரிமை தொடர்பான பிரகடனம் பிற்காலத்தில் உலகின் பல நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதால், பிரான்சியப் புரட்சியானது உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கொள்ளப்படுகிறது. இந்த அத்தியாயத்தில் இது தொடர்பாகக் கற்பது எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி 7.0** : • சுதந்திரமும் மனித உரிமைகளும் மக்கள் போராட்டத்தின் விளைவுகள் என்பதை விளங்கிக்கொண்டு அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 ரஷ்யப் புரட்சி உலக அரசியலில் செல்வாக்கு செலுத்திய விதத்தை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற் பேறுகள்** :
- ரஷ்யப் புரட்சியை விளக்குவார்.
- புரட்சி மூலம் வெற்றி கொண்ட சமவுடைமைக் கொள்கையை தெளிவு படுத்துவார்.
- சோசலிச வாதம் உலக அதிகார அணியாக உருவான விதத்தை எடுத்துக் காட்டுவார்.

### பாடத்தைத் திட்டமிடுவற்குரிய அறிவுறுத்தல்கள்:

#### அரசியல் காரணங்கள்

- நாட்டின் அனைத்து அதிகாரங்களும் மன்னனிடம் குவிந்து காணப்படல்.
- ஆட்சியாளர்கள் வினைத்திறன் அற்றவர்களாக இருந்தமை.
  உதாரணம்: பதினைந்தாம் லூயி மன்னன், 16 ஆம் லூயி மன்னன்
- தேவையற்ற போர்களில் ஈடுபட்டமை
  உதாரணம்:
  - பதினான்காம் லூயி மன்னன் ஸ்பானிய அரசுரிமைப் போரில் ஈடுபட்டமை
  - இங்கிலாந்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்
  - பதினைந்தாம் லூயி ஏழாண்டுப் போரிலும், அமெரிக்க சுதந்திரப் போரிலும் ஈடுபட்டமை
- 16 ஆம் லூயி மன்னனின் தூரநோக்கற்ற செயல்கள்
  உதாரணம்:
  - வர்கோ, நெக்கர் போன்ற திறமையான அமைச்சர்களை நீக்கிவிட்டு, பிரபுக் களின் வேண்டுகோளுக்கு அமையத் திறமையற்ற அமைச்சர்களை நியமித்தமை.
  - தனது மனைவியான மாரி அன்டொயினட்டின் அறிவுரைப்படி செயற்பட்டமை.
- முடியரசு பலவீனமடைதல்
- லெத்ரேதி கெச்சே எனும் பிடியாணை முறை
- ஸ்டேட் ஜெனரல் எனும் பாராளுமன்றம் கூட்டப்படாமை

**பொருளாதாரக் காரணங்கள்**

- பொதுமக்களால் சுமக்க முடியாத விதத்தில் வரிகளை விதித்தமை
- பிரபுக்கள் வரி செலுத்தாமல் பல சலுகைகளை அனுபவித்தமை
- நடுத்தர வகுப்பினரின் முன்னேற்றத்துக்கு இருந்த தடைகள்
- வரிக்கொள்கையின் சீரற்றதன்மை
- நில அடைப்பினால் ஏற்பட்ட விளைவுகள்
- அதிகரித்த செலவால் திறைசேரி வெறுமையாகியமை
- அரச குடும்பத்தின் ஆடம்பரச் செலவுக்கு நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி செலவிடப்படல்
- ஈடன் வர்த்தக ஒப்பந்தமும் அதன் விளைவுகளும்



அரசனின் படுக்கையறை (தங்கமுலாம் பூசப்பட்டது)



வேர்ல்ஸேல்ஸ் மாளிகை

### சமூகக் காரணங்கள்
- பொதுமக்கள் முகங்கொடுத்த இன்னல்கள்
- பிறப்பின் அடிப்படையில் சமூக நிலைமைகள் தீர்மானிக்கப்படலும் வகுப்பு வேறுபாடுகளும்
- பிரபுக்கள் மட்டும் அனைத்துச் சலுகையையும் பெற்றமை

### வெளிக் காரணங்கள்
- தத்துவ ஞானிகளின் தாக்கம் (ஹொப்ஸ், லொக், ரூசோ, வோல்டேயர், மொன்டஸ்கியு போன்றோர்)
- ஏழாண்டுப் போரும் அமெரிக்க சுதந்திரப் போரும்
- பிரான்ஸின் காலநிலை (அதிக குளிர், கோடை, பஞ்சம்)

### பிரான்சியப் புரட்சியின் தோற்றமும் பரவலும்
- பிரான்ஸ் முழுவதும் அமைதியற்ற நிலை ஏற்பட்டதால் பிரபுக்களின் வேண்டுகோளுக்கு அமைய 16 ஆம் லூயி மன்னன் ஸ்டேட் ஜெனரல் சபையைக் கூட்டுதல்.
- டெனிஸ் மைதான உறுதி மொழியும், தேசிய சபை செயற்பட்டமையும்
- நடுத்தர வகுப்பினரும் பிரான்சியப் புரட்சியில் தலைமைத்துவம் வகித்தல்.
- பஸ்டீல் சிறைக்கூடத்தைத் தாக்கியதுடன் புரட்சி ஆரம்பமாகியமை. புரட்சி வன்முறை தோற்றத்தைப் பெறல். (14.07.1789)
- பிரபுக்களின் சலுகைகள் நீக்கப்படல்.
- கி.பி. 1791 ஆம் ஆண்டு 16 ஆம் லூயி மன்னன் தப்பிச் செல்லுதலும் ஆஸ்திரியாவின் உதவியை நாடுதலும்.




கிளடீன்

### பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்கள்
- பிரான்சிய கூட்டரசாங்கத்தின் தோற்றம் (1792)
- 16 ஆம் லூயி மன்னனும் மாரி அன்டனட் அரசியும் கொலை செய்யப்படல் (1793)
- பிரான்சிய கூட்டரசாங்கத்திற்கு எதிராக யுத்தம் ஏற்படல் (இங்கிலாந்து, ஸ்பானியா, ஆஸ்திரியா)


### பயங்கர ஆட்சியின் ஆரம்பம் (1793-1795)
- டென்டன், மரட், ரொபெஸ்பியர் போன்றோர் ஜெகோபியன் கட்சியினரின் கையில் அதிகாரம் வந்தமை
- சிறிது காலம் ஆட்சியிலிருந்து ஜிரொன்டின் தலைவர்கள் ஜக்கோபினரால் கொலை செய்யப்படல்
- ஜக்கோபின்களிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியமையும் ஒருவர் ஒருவரைக் கொலை செய்தமையும் ரொபெஸ்பியரால் டென்டன் கொலை செய்யப்பட்டமை
- பயங்கர ஆட்சியின் முடிவும் தர்மிடோரியன் எதிர்புரட்சியும் (ஜாக்கோமின்களின் பயங்கர ஆட்சியை முறியடிக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட இயக்கம் தர்மிடோரியன் எதிர்ப்புப்புரட்சி எனப்பட்டது.)
- அதிகார சபை ஆட்சியைப் பொறுப்பேற்றல். (1795 ஒக்டோபர்)
- கொன்சல் முறை ஆரம்பிக்கப்பட்டமை
- நெப்போலியன் கொனபார்ட் அதிகாரத்தைப் பொறுப்பேற்றல்.



நெப்போலியன் பொனபார்ட்



16 ஆம் லூயி மன்னனை கிளடீனில் வைத்து கொலை செய்யப்பட்டதைச் சித்தரிக்கும் சித்திரம்



மேரி அன்டோய்னட் அரசி கிளடீனில் வைத்து கொலை செய்யப்பட்டதை சித்தரிக்கும் சித்திரம்

**பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்**

- கி.பி. 1791 ஆம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்படல்
- மானியமுறைப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்று முதலாளித்துவப் பொருளாதார முறை தோன்றுதல்.
- மத்திய வகுப்பினரின் தலைமைத்துவத்தின் கீழ் பலம் வாய்ந்த அரசாங்கம் ஒன்று அமைக்கப்படல்.
- மத்திய வகுப்பினருக்கு அரசியல் உரிமைகள் கிடைத்தல்.
- பிரபுக்களும் குருமாரும் தங்களது நிலங்களை இழந்தமை.
- பிரபுக்களிடமும் குருமாரிடமும் இருந்த நிலங்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதால் பிரான்சில் சிறிய நிலத்தையுடைய விவசாய வகுப்பு ஒன்று தோன்றியமை.
- சமமான வரிமுறை ஏற்படுத்தப்பட்டமை.
- 'சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம்' என்ற கருத்து ஐரோப்பா முழுவதும் பரவியமை.

**பிரான்சியப் புரட்சியின் முக்கியத்துவம்**

- ஐரோப்பா மத்தியகால மானிய முறையில் இருந்து நவீன முறைக்கு வருதல்.
- பிரான்ஸ் சர்வாதிகார முடியாட்சி முறையிலிருந்து ஜனநாயக ஆட்சிமுறை வரையில் மாற்றமடைதல்.
- பிரான்சிய மக்கள் எதிர்பார்த்த சுதந்திரம், சமத்துவம் முதலான அடிப்படை மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்படல்.
- அடிப்படை உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட லிபரல்வாதம், தேசிய வாதம் போன்ற வற்றை உரிமையாக்கியக் கொள்ளும் பொருட்டு ஐரோப்பா முழுவதும் பல புரட்சிகள் ஏற்பட்டமை.
- இதனை அடிப்படையாகக் கொண்டு இத்தாலி ஐக்கியம் அடைந்தமை, ஜேர்மனி ஐக்கியமடைதல் என்பனவற்றின் மூலம் ஐரோப்பாவில் தேசியவாதம் பரவலடைதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. லபாயட் 2. நெக்கர் 3. மெரட் 4. டென்டன் 5. மிராபோ
(...............)

(2) 1. மொன்டெஸ்கியூ 2. வோல்டேயர் 3. ரூசோ 4. ஜோன்லொக் 5. மக்கிய வலி
(...............)

(3) 1. நெக்கர் 2. டெர்கோ 3. ரிச்லியு 4. கெலொக் 5. பிரயன்
(...............)

(4) 1. 14ஆம் லூயி 2. 8ஆம் ஹென்ரி 3. ரிச்சலியு 4. மசாரின் 5. நெக்கர்
(...............)

(5) 1. கரிபால்டி 2. மெரட் 3. ரொபெஸ் பியர் 4. டென்டன் 5. மிராபோ
(...............)

- **பின்வரும் தலைப்புக்கள் ஒவ்வொன்றின் கீழும் ஐந்து விடயங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் ஒரு விடயம் தலைப்புக்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(6) பிரான்சியப் புரட்சி
1. பதினான்காம் லூயி மன்னனின் காலத்தில் ஆரம்பமாகியது.
2. மன்னனின் நிதி அமைச்சராக இருந்த நெக்கர் பல வரிச் சீர்திருத்தங்களை முன்வைத்தார்.
3. பிரான்சின் திறைசேரி வெறுமையானதே பிரான்சியப் புரட்சிக்கு அண்மிய காரணமாகும்.
4. 1789 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆந் திகதி பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை பிரான்சியப் புரட்சியின் முக்கிய நிகழ்வாகும்.
5. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன பிரான்சியப் புரட்சியின் தாரக மத்திரமாகும்.

(...............)

(7) பிரான்சியப் புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள்
1. தேசிய பொதுச்சபை நிறுவப்பட்டமை
2. கூட்டாட்சி நிறுவப்பட்டமை
3. பதின்மூன்றாம் லூயி மன்னனின் கீழ் பிரான்சின் முடியாட்சி மீளமைக்கப்பட்டமை
4. பயங்கர ஆட்சி
5. அதிகாரசபை ஆட்சிக்கு வருதல்

(...............)

(8) பிரான்சியப் புரட்சி
1. பழைய முடியாட்சி முறையின் பலவீனம் பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்களில் ஒன்றாகும்.
2. மொன்டெஸ்கியூ பிரான்சியப் புரட்சிக்கு உதவிய தத்துவஞானியாவார்.
3. 1789 ஆம் ஆண்டு மே மாதம் ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டது.
4. 1789 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டது.
5. 1793 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் லூயி மன்னன் முடி சூடினான்.

(...............)

(9) பிரான்சியப் புரட்சி
1. ஸ்டேட் ஜெனரால் கூட்டப்பட்டமை
2. பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை
3. 16 ஆம் லூயி மன்னன் சிரச்சேதம் செய்யப்பட்டமை
4. 18 ஆம் லூயி மன்னன் அரசனானமை
5. பயங்கர ஆட்சி

(...............)

(10) பிரான்சியப் புரட்சி
1. டெனிஸ் மைதான உறுதியுரை பிரான்சியப் புரட்சியின் ஆரம்ப அடையாளமாகும்.
2. பதினேழாம் லூயி மன்னன் சட்டரீதியான மன்னனாக முடிசூட்டப்பட்டான்.
3. மாரி அன்டொயினட் சிரச்சேதம் செய்யப்பட்டான்.
4. தேசிய சபையினால் மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டது.
5. பிரான்சியப் புரட்சியினால் மத்திய வகுப்பினரின் அபிப்பிராயங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

(...............)

- **பின்வரும் வினாக்களுக்கான A, B, C, D எனும் விடைகளில் ஒன்றோ, பலவோ சரியானதாகும். சரியான விடையைத் தெரிந்து A யும் B யும் சரியாயின் (1) எனவும், B யும் C யும் சரியாயின் (2) எனவும், C யும் D யும் சரியாயின் (3) எனவும், A யும் D யும் சரியாயின் (4) எனவும், ஒரு விடை அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் (5) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) பிரனர்சியப் புரட்சி தொடர்பான சரியான விடை / விடைகள்
A. பிரான்சியப் புரட்சியின் முக்கிய தாரக மந்திரம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதாகும்.
B. பிரான்சியப் புரட்சியின் மூலம் பிரபுக்களின் சலுகை உறுதி செய்யப்பட்டது.
C. ரொபெஸ்பியரின் தலைமையில் பிரான்சில் கூட்டாட்சி நிறுவப்பட்டது.
D. பிரான்சியப் புரட்சி மத்திய வகுப்பினரின் புரட்சி எனக் கருதப்படுகிறது.

(...............)

(2) பின்வருவோரில் பிரான்சியப் போரில் பங்குபற்றியோர் யாவர்?
A. லபாயெட் B. ரொபெஸ்பியர் C. ரிச்லியு D. லுயி நெப்போலியன்

(...............)

(3) பின்வருவனவற்றில் பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் எவை?
A. மானிய முறை வீழ்ச்சியுற்றமை.
B. மத்திய வகுப்பினர் அரசியல் உரிமை பெற்றமை
C. முடியாட்சி வலுவடைந்தமை
D. நெப்போலியன் பொனபாட் ஆட்சிக்கு வந்தமை

(...............)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் அனைத்துப் பிரிவினரும் பிரான்சியப் புரட்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்களின் பங்களிப்பினை விபரிக்குக.
    (i) மன்னர்கள் (ii) பிரபுக்கள் (iii) மத்திய வகுப்பினர் (iv) சாதாரண மக்கள்
    (14 புள்ளிகள்)

02. 'பிரான்சியப் புரட்சி மத்திய வகுப்பினராலேயே ஆரம்பிக்கப்பட்டது.''
    (i) பிரான்சியப்புரட்சி ஏற்படுவதற்கு அண்மிய காரணம் என்ன?
    (02 புள்ளிகள்)
    (ii) பிரான்சில் மத்திய வகுப்பினர் முகங்கொடுத்த இன்னல்கள் யாவை?
    (04 புள்ளிகள்)
    (iii) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களில் அவதானம் செலுத்தி, புரட்சியினை ஆரம்பிப்பதில் மத்திய வகுப்பினர் ஆற்றிய பணியை விமர்சன ரீதியில் விளக்குக.
    (08 புள்ளிகள்)

03. (i) 18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் நிலவிய பழைய முடியாட்சி முறையின் பிரதான இயல்புகள் யாவை?
    (07 புள்ளிகள்)
    (ii) 1789 புரட்சியின் ஆரம்பத்தையும் அதன் விளைவுகளையும் பரிசீலிக்குக.
    (07 புள்ளிகள்)

04. பிரான்சியப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளை விளக்குக.
    (14 புள்ளிகள்)

05. ''பிரான்சியப் புரட்சி பிரபுக்கள் வகுப்பினராலேயே தோற்றுவிக்கப்பட்டது.'' இதனை விமர்சன ரீதியாக முன்வைக்குக.
    (14 புள்ளிகள்)

06. 'பிரான்சியப் புரட்சி தற்போதைய ஐரோப்பாவைத் தோற்றுவித்த மிக முக்கிய நிகழ்வாகும்.''
    (i) பிரான்சியப்புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுத்த அண்மிய காரணம் என்ன?
    (01 புள்ளி
    (ii) புரட்சிக்கு முன்னர் பிரான்சில் நிலவிய சமூகக் கட்டமைப்பைத் தெளிவுபடுத்துக.
    (02 புள்ளிகள்)
    (iii) பிரான்சியப் புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள் யாவை?
    (03 புள்ளிகள்)
    (iv) பிரான்சியப் புரட்சியில் அவதானம் செலுத்தி அது பிரான்ஸ் தொடர்பாக மட்டுமன்றி ஐரோப்பாவின் ஏனைய நாடுகள் மீதும் செல்வாக்குச் செலுத்திய விதத்தை பரிசீலிக்குக.
    (08 புள்ளிகள்)


நவீன உலக வரலாறு

# 1. நவீன உலகின் தோற்றம்

**அறிமுகம்**

உலகின் முக்கியமான காலப்பகுதி 15ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னருமே தோற்றம் பெறுகிறது. அதற்கு அடித்தளமிடப்பட்டது ஐரோப்பாவிலாகும். ஐரோப்பிய நாகரிகத்திற்கு அத்திவாரம் அமைத்த உயர்மட்ட நாகரிகங்களான கிரேக்க, உரோம நாகரிகங்களின் காலம் பண்டைய காலம் எனப்படுகிறது. அவ்வாறான உயர் நாகரிகங்கள் கட்டியெழுப்பப்பட்டு வளர்ச்சியடைந்து வரும் 15ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலம் நவீன காலம் எனப்படுகின்றது. இவ்வாறான உயர் நிலைகளைக் கொண்டிராது பின்தங்கிய இயல்புகளைக் கொண்டிருந்த ஆறாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி இரண்டு உயர் நாகரிகங்களுக்கு இடைப்பட்ட காலமாக அமைவதால் அது மத்திய காலம் எனப்படுகிறது.

மத்திய காலம் எனப்படும் இக்காலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட மானிய முறை சிறப்பியல்பாகக் காணப்படுகின்றது. ஆயிரம் ஆண்டுகளாக ஐரோப்பாவில் அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் இருந்த மானிய முறையானது கல்வி வளர்ச்சி, வர்த்தக விரிவு, வணிக முதலாளித்துவத்தின் எழுச்சி, நாடுகாண் பயணங்கள், தேசிய அரசுகளின் தோற்றம், கைத்தொழில் புரட்சி ஆகிய காரணங்களால் வீழ்ச்சியுற்றது. ஐரோப்பாவை மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு மாற்றிய இந்தப் பல்வேறு அணிகள் செயற்பட்ட பதின்மூன்றாம் நுற்றாண்டு முதற்கொண்டு பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி மறுமலர்ச்சிக் காலம் எனப்படுகிறது. மறுமலர்ச்சியின் விளைவாக ஐரோப்பாவில் ஏற்பட்ட நவீனகால இயல்புகளான நாடு காண் பயணங்கள், பேரரசுகள் தோன்றுதல், சர்வதேச வர்த்தகம், கிறிஸ்தவ சமயம் பரவுதல் என்பன இடம்பெறலாயின. மேலும் இவைகள் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்கக் கண்டங்களுக்கும் பரவியதன் வழியாக நவீன உலகம் தோற்றம் பெற்றது. இதற்கமைய ஐரோப்பாவை மையமாகக் கொண்டு உலகம் முழுவதிலும் மனித நாகரிகம், பொருளாதாரம், அரசியல், சமயம், பண்பாடு முதலான அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களில் அவதானம் செலுத்தி, நவீன உலகின் தோற்றம் தொடர்பான விளக்கத்தை அளித்தல் இந்த அலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி 1.0** : • நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்று நிகழ்வுகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.1 வணிக முதலாளித்துவ முறையின் எழுச்சியானது நவீன உலகின் எழுச்சிக்கு வழிவகுத்த முறையினைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :
- வணிக முதலாளித்துவத்தை விளக்குவார்.
- ஐரோப்பாவில் வணிக முதலாளித்துவத்தின் எழுச்சி நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## 1.1 மானிய முறையின் வீழ்ச்சியும், வணிக வாத்தின் எழுச்சியும்

- மானிய முறை என்பது நில உரிமையையும், அதனுடன் தொடர்புடைய சேவையையும், முதன்மையாகக் கொண்ட அரசியல், சமூக, பண்பாட்டு முறையாகும்.

- அது உரோமப் பேரரசின் வீழ்ச்சியுடன் ஏற்பட்ட குழப்ப நிலையில் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் வளர்ச்சியடைந்த முறையாகும். உரோமப் பேரரசை வீழ்ச்சியுறச்செய்த ஜேர்மன் கோத்திர மக்களால் கட்டியெழுப்பப்பட்ட பல்வேறு அரசுகளில் செயல்பட்ட மானிய முறை பெரும்பாலும் ஒரே விதமான இயல்பினைக் கொண்டதாக இருந்தது.

## பிரதான இயல்புகள்

- அரசியல் ரீதியாகப் பலம் வாய்ந்த முடியரசுகள் இல்லாதிருந்ததுடன் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருந்த பிரதேச அரசுகள் பலம் வாய்ந்த பிரபுக்களின் கீழ் நிர்வகிக்கப்படல்.
- உற்பத்தி நடவடிக்கைகள் மானிய முறையை மையமாகக் கொண்டு நடைபெற்றதுடன், அப்பிரதேசங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அலகாக இருந்தமை.
- மானியப் பிரபுவின் கீழ் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட மானிய அடிமைகளின் வாழ்க்கை முறை அந்நியோன்ய ஒத்துழைப்பில் தங்கியிருந்தமை.
- கத்தோலிக்க சபை மேலாதிக்கம் செலுத்திய இக்காலகட்டத்தில் குருமாருக்கும் சிறப்பான ஒரு நிலை இருந்தமை.

## மானிய முறை வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள்

- கல்வி மற்றும் விஞ்ஞான எழுச்சி
- மறுமலர்ச்சி
- வர்த்தகம் பரவரலடைதலும், புதிய முதலாளித்துவ வகுப்பினர் தோற்றம் பெறுதலும், பணப்புழக்கம் அதிகரித்தலும்.
- வர்த்தக நகரங்கள் தோற்றம் பெறல்.
- தேசிய அரசுகள் தோன்றுதல்
- நாடுகாண் பயணங்கள்
- கைத்தொழில் புரட்சி

## மறுமலர்ச்சி

- மறுமலர்ச்சியானது ஐரோப்பாவை மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு மாற்றிய முக்கிய நிகழ்வாகும்.
- மறுமலர்ச்சிக் காலத்தில்
  * பொருளாதார ரீதியாக வர்த்தகம் பரவலடைந்து முதலாளித்துவம் எழுச்சிபெறல்.
  * அரசியல் ரீதியாகப் புதிய முடியாட்சி எண்ணக்கருவுடன் கட்டியெழுப்பப்பட்ட தேசிய அரசுகள் தோற்றம் பெறல்.
  * சமய ரீதியாகக் கத்தோலிக்க சபையில் காணப்பட்ட சர்வாதிகாரப்போக்கு தகர்க்கப்பட்டு சமய சீர்திருத்தம் ஏற்படல்.
  * கிரேக்க, உரோம நாகரிகங்களின் சிறப்பம்சங்கள் புத்துயிர் பெறல்.

## வணிக முதலாளித்துவத்தின் எழுச்சி

- வணிக முதலாளித்துவம் என்பது,
  வர்த்தக நடவடிக்கை மூலம் பணம் சம்பாதிக்கும் செல்வந்த வகுப்பு ஒன்று தோன்றுதலும், பணப்புழக்கத்தைப் பிரதானமாகக் கொண்ட சமூக, பொருளாதாரத் தொடர்புகள் கட்டியெழுப்பப் படுதலுமாகும். இதற்கமைய நாடொன்றின் செல்வத்தை அளவிடும் அளவுகோலாக விளங்கியது அந்த நாடு சேகரித்து வைத்துள்ள பொன், வெள்ளி, முத்து, இரத்தினக்கற்கள் என்பனவாகும்.
- நிலத்தை அடிப்படையாகக் கொண்ட மானிய சுயதேவைப் பொருளாதார முறை வீழ்ச்சி யடைந்து முதலாளித்துவ முறை தோற்றம் பெற்ற பின்னர் அந்த முறையைச் செயற்படுத்து வதற்கு அத்தியாவசியப் பொருட்களை விற்றல், விலை கொடுத்து வாங்குதல், பணப்புழக்கம், செலாவணிமுறை, வங்கிகள் ஆரம்பமாகி வளர்ச்சியுற்றமை என்பன உதவியாக அமைந்த காரணங்களாக விளங்கின. அவ்வாறே ஐரோப்பாவில் ஆரம்பமாகி வளர்ச்சியடைந்த வர்த்தக முதலாளித்துவம் அங்கு புது யுகத்தைத் தோற்றுவித்ததுடன், அதன் மூலம் நவீன உலகம் தோன்றுவதற்கும் உதவியமையைக் காணக்கூடியதாக உள்ளது.

- 11ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற சிலுவைப் போர்கள் ஐரோப்பாவில் மானிய முறையின் வீழ்ச்சிக்குப் பல வழிகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அவைகளின் பிரதனமானவைகள் வருமாறு:
  * மேற்கு கிழக்கு வர்த்தகம் விரிவடைதல்.
  * மானிய முறை வீழ்ச்சியுறல்
  * பணப்புழக்கம் விரிவடைதல்
  * வர்த்தக நகரங்கள் தோற்றம் பெறல்
  * பிரபுக்கள், நில அடிமைகள் என்ற நிலை வீழ்ச்சியுறல்.
- மத்திய காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட புதிய முடியாட்சி முறையின் கீழ் ஐரோப்பிய நாடுகளில் தேசிய வர்த்தகக் கொள்கையும், புதிய வரிக் கொள்கையும் செயற்படுத்தப்படல்.
- நாடுகாண் பயணங்களின் மூலம் குடியேற்றவாதப் பேரரசுகள் கட்டியெழுப்பப்படலும் அதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகள் ஐரோப்பாவுக்கு வெளியே ஏனைய கண்டங்களிலும் பரவியமை.
- வர்த்தகம் விரிவடைந்ததுடன், வர்த்தகத்தின் மூலம் செல்வத்தைச் சேகரித்த செல்வந்தர்கள் தோற்றம் பெற்றமை. இதன் மூலம் முதலாளித்துவம் படிப்படியே வளர்ச்சியடைதல்.
- வர்த்தக நடவடிக்கைகள் பரவலடைந்ததுடன்
  * புதிய நகரங்கள் தோற்றம் பெறல்
  * வங்கி முறைகளும், செலாவணி முறைகளும் தோன்றுதல்.
  * வர்த்தக சங்கங்கள் தோன்றுதல். (கூட்டு வர்த்தக சங்கம்)
- அதற்கமைய 11ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பாவில் வணிக முதலாளித்துவம் ஆரம்பமாகி பல நூற்றாண்டுகளாகப் படிப்படியே வளர்ச்சியடைந்து, பேரரசு விரிவாக்கத்துடன் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி நவீன உலகின் தோற்றத்திற்கு வழிவகுத்துள்ளமை பற்றிக் கலந்துரையாட வேண்டும்.



நவீன சந்தை நகரங்கள்




புளோரன்ஸ் நகரம்



புணர்நிர்மாணக் கலை

## கணிப்பீடும் மதிப்பீடும்

- **01 - 04 வரையிலான வினாக்களுக்கு (A), (B), (C), (D) என ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்றோ, பலவோ சரியானவை. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

A யும் B யும் மட்டும் சரியானால் ....................... 1 எனவும்.
B யும் C யும் மட்டும் சரியானால் ....................... 2 எனவும்.
C யும் D யும் மட்டும் சரியானால் ....................... 3 எனவும்.
D யும் E யும் மட்டும் சரியானால் ....................... 4 எனவும்.
ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் சரியானால் ....................... 5 எனவும்.

(...............)

1. பின்வரும் விடயங்களில் மானிய முறையின் பொது இயல்பு யாது?
   A. பலம் வாய்ந்த குடியரசு இல்லாமை
   B. குருமாருக்குச் சிறப்பிடம் இருந்தமை
   C. சர்வதேச வர்த்தகத் தொடர்பு இருந்தமை
   D. நில அடிமைகள் வர்த்தகத்தில் ஈடுபட்டமை
   E. நில அடிமைகளின் நிலைமை சீராக இருந்தமை

(...............)

2. பின்வரும் விடயங்களில் நிலமானியத்துவ முறை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் யாது?
   A. பிரபுக்களுக்கிடையிலான அதிகாரப் போட்டி
   B. நில அடிமைகளின் ஆர்ப்பாட்டம்.
   C. கல்வி மற்றும் விஞ்ஞான வளர்ச்சி
   D. பணப்புழக்கம் அதிகரித்தமை
   E. அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருந்தமை

(...............)

3. பின்வரும் விடயங்களுள் வணிக முதலாளித்துவத்தின் இயல்புகள் யாவை?
   A. திறந்த பொருளாதாரம்
   B. விவசாய வளர்ச்சி
   C. குடிசைக் கைத்தொழில் வளர்ச்சி
   D. பணப்பாவனை
   E. முதலாளித்துவ வகுப்பு தோற்றம் பெற்றமை.

(...............)

4. பின்வரும் விடயங்களுள் மறுமலர்ச்சியின் இயல்பு யாது?
   A. மதச் சீர்த்திருத்தம் ஏற்படல்
   B. லௌகீக (உலகியல்) வாதம் எழுச்சிபெறல்
   C. தேசிய அரசுகள் தோற்றம் பெறல்
   D. கிரேக்க, உரோம நாகரிகங்களின் மறுமலர்ச்சி
   E. பண்டைய சமூக அமைப்பு வீழ்ச்சியுறல்.

(...............)

5. மானிய முறை வீழ்ச்சியும், வணிக முதலாளித்துவ முறையின் எழுச்சியும் நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை விளக்குக.

**தேர்ச்சி மட்டம்** : 1.2 தேசிய அரசுகளின் எழுச்சி நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :
- தேசிய அரசுகள் தோன்றுவதற்கான காரணங்களைத் தெளிவு படுத்துவர்.
- ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் பற்றி விவரிப்பர்.
- ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளைத் தேசப்படத்தில குறித்துக் காட்டுவர்.
- தேசிய அரசுகளின் தோற்றம் நவீன உலகின் தோற்றத்தின் மீது தாக்கம் செலுத்தும் விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## 1.2 தேசிய அரசு

### • தேசிய அரசின் அறிமுகம்

குறிப்பிட்ட தேச எல்லையையும், குறிப்பிட்ட மக்கள் தொகையையும் கொண்ட ஒரே மொழியைப் பேசும், பொதுவான தேசிய அடையாளத்தைக் கொண்ட மன்னனின் அதிகாரத்தை உறுதியாகக் கொண்ட அரசியல் அலகே தேசிய அரசு எனப்படும்.

### • தேசிய அரசுகளின் இயல்புகள்

- குறிப்பிட்ட புவியியல் தேச எல்லை இருத்தல்
- பிரபுக்களின் அதிகாரம் குறைவடைந்து, மத்திய வகுப்பாரின் அதிகாரம் மேலோங்குதல்.
- சம்பளம் பெறும் உத்தியோக வகுப்பு தோற்றம் பெறல்
- இறைமை வாய்ந்த முடியாட்சி
- ஒரே சட்டத் தொகுதி
- வணிகவாதம்
- மன்னனுக்கு நிலையான படை இருக்கின்றமை
- ஒரே வித வரி முறை
- சமயத் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

இவ்வாறான இயல்புகளைக் கொண்ட அரசியல் முறை “ புதிய ஆட்சி முறை” எனப்படும்.

### • தேசிய அரசுகளின் விரிவாக்கம்

- ஐரோப்பாவில் தோன்றிய ஆரம்ப தேசிய அரசுகள்
  - இங்கிலாந்து
  - ஸ்பானியா
  - பிரான்ஸ்

- இங்கிலாந்து தேசிய அரசாக வளர்ச்சி பெறல்
  - இங்கிலாந்து தேசிய அரசாக வளர்ச்சி பெறுவதில் சிறப்பான பணியை நிறைவேற்றிய தலைவர்கள் சிலர் வருமாறு:
- நோமண்டியில் வில்லியம் கோமகன் (1066)
  - பிரான்சின் பிரதேச அலகுகளில் ஒன்றான நோமண்டியின் வில்லியம் கோமகன் 1066 ஆம் ஆண்டு இங்கிலாந்தை வெற்றி கொண்டதுடன் தேசிய அரசுக்குத் தேவையான அடித்தளமிடப்பட்டமை.
  - 1086 ஆம் ஆண்டில் சாள்ஸ்பரி வாக்குறுதி மூலம் மானிய பிரதானிகள் மன்னனுக்குப் பக்கச்சார்பானவர் என்பதை உறுதி செய்தமை
  - நாட்டின் அனைத்து நிலங்கள் தொடர்பான விபரம் அடங்கிய “டும்ஸ்டே புக்” எனும் பெயரில் அறிக்கை தயாரிக்கப்பட்டமை.

## • ஏழாம் ஹென்றி மன்னனின் ஆட்சிக்காலம்

- லங்கெஸ்டர், யோர்க் ஆகிய பிரிவினர்களிடையே நடைபெற்ற ரோஜா யுத்தத்தின் (1453 - 1485) பின்னர் லங்கெஸ்டர் வம்ச ஏழாம் ஹென்றி வெற்றிபெற்றமை.
- யோர்க் வம்ச எலிசபெத்தைத் திருமணம் செய்ததன் மூலம் அரச உரிமையுடைய இரு வம்சங்களை இணைத்து டியுடர் எனும் புதிய அரச வம்சம் ஆரம்பமாகியமை.
- இங்கிலாந்து தேசிய அரசாக மாறுவதில் ஏழாம் ஹென்றி மன்னனின் செயற்பாடுகள்.
  - சேவை எனும் சட்டத்தை அமுல் செய்து பிரபுக்களின் தனிப்பட்ட படையைத் தடை செய்தமை.
  - பிரபுக்களின் யுத்த அச்சுறுத்தலை நீக்கி அடைக்கலச் சட்டத்தை ஏற்படுத்தியமை.
  - ஸ்டார் சேம்பர் எனும் புதிய நீதிமன்ற முறையைத் தோற்றுவித்தமை
  - புதிதாக எழுச்சி பெற்று வந்த மத்திய வகுப்பினருக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளை வழங்கியமை.
  - மன்னனின் நிலையான படையை ஏற்படுத்தி அதனை முன்னெடுத்துச் சென்றமை.
  - வெடிமருந்துகளின் தனியுரிமையை மன்னன் பெற்றுக்கொண்டமை.
  - கம்பளி வர்த்தக வளர்ச்சியின் பொருட்டு பர்கஸ்டியுடன் ‘மாலுஸ் இன்டர் குர்சுஸ்’ எனும் வர்த்தக உடன்படிக்கையை மேற்கொண்டமை.
  - ஜோன் கபோட், செபஸ்தியன் கபோட் ஆகிய நாடுகாண் பயணிகளுக்கு அனுசரணை வழங்கியமை.
  - கல்வியினதும், மதத்தினதும் புத்தாக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

## • எட்டாம் ஹென்ரி மன்னனின் ஆட்சிக்காலம்

- இங்கிலாந்து தேசிய அரசாக வளர்ச்சி பெறத்தேவையான சமய சுதந்திரத்தை ஏற்படுத்தியமை
- விவாகம் தொடர்பான பிரச்சினையால் பாராளுமன்றத்தின் உதவியை நாடி உரோமன் கத்தோலிக்க சபையினின்றும், பாப்பரசிலிருந்தும் சுதந்திரம் பெற்றமையானது இங்கிலாந்தில் தேசிய அரசின் அதிகாரம் வளர்ச்சியடைய வழிகோலியமை.
- கத்தோலிக்க சபைக்குச் சென்ற வருமானத்தைத் தடைசெய்து அவற்றை அரசின் நலனுக் காகப் பயன்படுத்தியமை.

## • ஸ்பானியா தேசிய அரசாக வளர்ச்சியடைந்தமை

- தேசிய அரசுகளாக ஒன்றிணைந்து, ஐரோப்பாவில் பலம் வாய்ந்த அரசாக ஆரம்பக்கட்டத்தில் எழுச்சியுற்ற அரசுகளில் ஒன்றாக ஸ்பானியா விளங்குகின்றது. உரோம பேரரசு காலத்திலே ஹிஸ்பெனிக் எனும் மனித இனம் வாழ்ந்த அந்த பரந்த பிரதேசம் ஐபிரியக் குடா நாட்டில் முக்கிய பகுதியாக விளங்கியது. கி.பி.1450 ஆம் ஆண்டளவில் ஐபிரியன் குடா நாட்டில் ஐந்து பிரதான அரசுகள் காணப்பட்டன.

  1. கஸ்டீல் - இசபெலா அரசி
  2. அரகன் - பேர்டினன்ட் மன்னன்

3. கிரணடா - முஸ்லீம் ஆட்சியாளர்கள்
4. நவார் - சுயாதீன ஆட்சியாளர்கள்
5. போர்த்துக்கல் - சுயாதீன ஆட்சியாளர்கள்

- ஸ்பானியா தேசிய அரசாக எழுச்சி பெறுவதில் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.
  - பேர்டினன்ட் - இசபெலா தம்பதியினரால் செய்யப்பட்ட சேவைகள்: (1469-1516)
  - அரகனின் பேர்டினன்ட் மன்னனும், கஸ்டீலின் இசபெலா அரசியும் திருமணம் செய்து கொண்டதன் விளைவாக ஸ்பானியாவில் புதிய முடியாட்சிக்கும் பிரதேச இணைவிற்கும் அத்திவாரமிட்டமை.
  - பேர்டினன்ட் - இசபெலா தம்பதி 1492 ஆம் ஆண்டு முஸ்லீம்களைத் தோற்கடித்துக் கிரனடாவையும், 1512ஆம் ஆண்டு சுயாதீன ஆட்சியாளர்களைத் தோற்கடித்து நவார் அரசையும் இணைத்துக் கொண்டமை.
  - சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டுக் காவல் துறையை மறுசீரமைத்து நிரந்தர போர்ப்படையைத் தோற்றுவித்தமை
  - மன்னனின் ஆலோசகர் பதவிக்கும், ஏனைய பதவிகளுக்கும் மத்திய வகுப்பினரை நியமித்தமை.
  - பொதுச் சட்டத் தொகுப்பைத் தயாரித்தமை
  - நாணயத்தாள்களை அச்சிடுதலை அரசன் சுவீகரித்துக் கொண்டமை.
  - உள்நாட்டு வர்த்தகத்திற்கு இருந்த தடையை நீக்கியமை.
  - மன்னனின் ஆலோசனைச் சபையான கோடெஸ் சபையின் அதிகாரத்தைக் குறைத்தமை.
  - நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கியமை.
    உதாரணம்: கொலம்பஸ், மகலன்.
  - விவாகத் தொடர்பால் ஸ்பானியா பேரரசாக உருவாக நடவடிக்கை எடுத்தமை.
    உதாரணம்: பேர்டினன்ட் இசபெலாவின் மகளான ஜுவானாவை உரோமப் பேரரசனான மெக்ஸிமிலியனின் மகனான பிலிப்புக்கு விவாகம் செய்துவைத்தமை.

- **முதலாம் சாள்ஸ், ஐந்தாம் சாள்ஸின் ஆட்சிக்காலங்கள்:**
  - பேர்டினன்ட் இசபெலா தம்பதியினரின் பேரனான (ஜுவானா, பிலிப் ஆகியோரின் மகன்) முதலாம் சாள்சின் ஆட்சிக்காலம் ஸ்பானியப் பேரரசின் பொற்காலம் எனப்படுகின்றது.
  - விவாகத் தொடர்பால் அவருக்குத் தந்தை வழியிலும், தாய் வழியிலும் பரந்த பிரதேசம் உரிமையானமை.
    உதாரணம்:
    தாய்வழி உரிமை: ஸ்பானியா, நேப்பீள்ஸ், சிசிலி, சாடினியா.
    தந்தைவழி உரிமை: நோர்மண்டி பிரதேசம், பிளாண்டர்ஸ், நெதர்லாந்து, பிரான்ஸ், லக்ஸம்பேர்க்
  - ஸ்பானியாவின் முதலாவது சாள்ஸ் 1519 ஆம் ஆண்டு தனது பாட்டனாரான மெக்சிமிலியன் பேரரசரின் மரணத்துடன் உரோமப் பேரரசுப் பதவிக்கு உரித்துடையவனானான். அவன் 5ஆவது சாள்ஸ் எனும் பெயரில் ஆட்சிபீடம் ஏறினான்.
  - வணிகவாத பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியமை.
  - நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கியமை.
  - ஆட்சிக்கு வரும்போது தனக்கிருந்த உள்நாட்டுக் குழப்பங்களை வெற்றி கொண்டமை.

- **இரண்டாம் பிலிப் மன்னனின் ஆட்சிக் காலம்**
  - கடுமையான கத்தோலிக்கனான பிலிப், முக்கியமான புரட்டஸ்தாந்து நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் அவற்றை வெற்றி கொண்டமை.

- அரச பதவியை நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டு விவாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை.

  உதாரணம்:
  - போர்த்துக்கல் இளவரசியைத் திருமணம் செய்தல்.
  - இங்கிலாந்தின் மேரி அரசியை விவாகம் செய்தல்
  - பிரான்ஸிய அரச குடும்பத்தின் எலிசபெத் இளவரசியை திருமணம் செய்தல்
  - ஆஸ்திரிய ஹப்ஸ்பேர்க் வம்ச ஆன் இளவரசியை விவாகம் செய்தல்
  - ஐபிரியன் குடாநாட்டின் முழு அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளல்
  - நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்குதல்.

## பிரான்ஸ் தேசிய அரசாக வளர்ச்சியடைந்தமை

16ஆம் நூற்றாண்டு ஸ்பானியாவின் பொற்காலமாகத் திகழ்ந்தது போல 17ஆம் நூற்றாண்டு பிரான்ஸின் பொற்காலமாக விளங்கியது. பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்ற நூற்றாண்டு யுத்தத்தில் (1338 – 1453) பிரான்ஸ் வெற்றியடைந்ததுடன் அது தேசிய அரசாக வளர்ச்சியடைய அத்திவாரமிடப்பட்டது.

பிரான்சைத் தேசிய அரசாக முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பணியினை நிறைவேற்றிய தலைவர்களின் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

## நான்காம் ஹென்றி (1580-1610)

- பிரான்சில் சமய ஒற்றுமையை ஏற்படுத்தியமை
- நான்றிஸ் ஆணை மூலம் ஹியுகனோர்களுக்கு சிவில், அரசியல், சமய சுதந்திரத்தை வழங்கியமை.
- தேசிய வரிக் கொள்கையை செயற்படுத்தியமை
- நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கியமை
- புதிய பயிர்ச்செய்கை முறை, போக்குவரத்து முறை என்பவற்றை முன்னேற்றியதன் மூலம் விவசாய வளர்ச்சிக்கு உதவியமை.

## ரிச்சலியுவின் பணிகள்

- பிரபுக்களின் அதிகாரத்தை நீக்கி மன்னனின் அதிகாரம் மேலோங்கச் செய்தமை.
- பிரதேச நிர்வாகத்திற்காக இன்டென்டான்ட்டுகளை நியமித்தமை.
- நான்றிஸ் ஆணை மூலம் ஹியுகனோர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரசியல் அதிகாரங்களை ஒழித்தல்.
- பிரபுக்களிடையே நிலவிய இருபக்கப் போரைத் தடை செய்தல்
- முப்பதாண்டுப் போரை வென்றிட அடித்தளமிடுதல்.
- நீதிமன்ற சபையின் அதிகாரத்தைக் குறைத்தல்.

## 14ஆம் லூயி மன்னனின் பணிகள் (1643 -1715)

- பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கையை மேற்கொள்ளல்.
- நான்றிஸ் ஆணையை முற்றிலும் நீக்குதல்
- தெய்வீகவழியுரிமை என்ற கொள்கையை அரசாட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்துதல்.
- அதிகாரத்தைப் பரவலாக்கும் பொருட்டு வெளிநாட்டு யுத்தங்களில் பங்கேற்றல் (ஒல்லாந்து யுத்தம், ஒக்ஸ்பேர்க் சங்க யுத்தம், ஸ்பானிய வாரிசுரிமை யுத்தம்.)

- **குடியேற்றப் பேரரசைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தமை**
  - பிரான்சிய மேற்கிந்திய வர்த்தக சங்கம், வடக்கு சங்கம், லெவான்ட் சங்கம். பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் முதலான தனிப்பட்ட நிறுவனங்களை நிறுவுவதற்கு அனுசரனை வழங்குதல். அதன் மூலம் இந்தியா, கனடா, மேற்கிந்தியத் தீவுகள் முதலான பிரதேசங்களில் பிரான்சின் குடியேற்றப் பேரரசைக் கட்டியெழுப்ப அனுசரணை வழங்குதல்.

- **தேசிய அரசுகளின் தோற்றம் நவீன உலகின் உதயத்தில் செல்வாக்குச் செலுத்துதல்**
    - ○ பண்டைய மானியமுறை வீழ்ச்சியுறும் போது அதிகாரங்கள் ஒன்றுபடுத்தப்பட்ட ஆட்சிமுறை யொன்றைத் தோற்றுவித்து மேற்கொள்ளப்பட்ட மாற்றமானது நவீன கால ஆரம்பத்திற்கு உதவிய முறையைக் கலந்துரையாட வேண்டும்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

**இலக்கம் 1-3 வரையிலான வினாக்களுக்கு ஒரு தலைப்பிற்கு முறையே ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று தலைப்பிற்குப் பொருத்தமற்றதாகும். பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. தேசிய அரசு
    a. அதிகாரங்கள் அரசனிடம் குவிந்த பலம் வாய்ந்த முடியரசு.
    b. பலம் வாய்ந்த மானிய பிரபுக்கள் வகுப்பு.
    c. பலம் வாய்ந்த நிலையான படை.
    d. வர்த்தகப் பரவலுக்கு அரச அனுசரணை கிடைத்தமை.
    e. மன்னர்களால் மத்திய வகுப்பினரின் உதவி பெறப்படல்.

(...............)

2. இங்கிலாந்து தேசிய அரசாக வளர்ச்சி பெறல்.
    a. டியுடர் எனும் புதிய அரச வம்சம் ஆரம்பிக்கப்பட்டமை.
    b. பிரபுக்களின் தனிப்பட்ட படை தடை செய்யப்பட்டமை
    c. மத்திய வகுப்பினருக்கு அரசில் உயர் பதவிகள் வழங்கப்பட்டமை.
    d. பாராளுமன்றத்தின் உதவியுடன் கிறிஸ்தவ சபையிலிருந்து நீங்குதல்
    e. தெய்வீகவழியுரிமை என்ற கருத்தை ஆட்சியை உறுதி செய்து கொள்வதற்குப் பயன் படுத்துதல்.

(...............)

3. பிரான்ஸ் தேசிய அரசாக எழுச்சி பெறுவதில் 14ம் லூாயி மன்னனால் செய்யப்பட்ட பணிகள்
    a. பொருளாதார விருத்திக்கான நடவடிக்கையை மேற்கொள்ளல்
    b. நன்றிஸ் ஆணையை நீக்குதல்
    c. முப்பதாண்டு போரை வெற்றி கொள்ளல்
    d. குடியேற்றவாதப் பேரரசைக் கட்டியெழுப்புதல்
    e. வெளிநாட்டு யுத்தங்களில் பங்கேற்றல்.

(...............)

**பின்வரும் வினாவின் சரியான விடையைத் தெரிவு செய்க.**

4. ஸ்பானியாவைத் தேசிய அரசாக்குவதற்கு அத்திவாரமிட்டவர்கள் யாவர்?
    a. வில்லியம் கோமகன் b. பேர்டினன்ட் இசபெலா தம்பதியினர்
    c. முதலாம் சாள்ஸ் d. இரண்டாம் பிலிப்-மேரி தம்பதியினர்
    e. ரிச்சலியு

5. அதிகாரத்தை ஒரு நிலைப்படுத்திக் கட்டியெழுப்பப்பட்ட தேசிய அரசுகள் நவீனகால ஆரம்பத்திற்கு உதவிய விதத்தைத் தெளிவுபடுத்துக.

6. உலகப் படமொன்றில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்து | நவார் | நேப்பிள்ஸ் | பிரான்ஸ் |
| கஸ்டீல் | போர்த்துக்கல் | சிசிலி | கனடா |
| கிரனடா | உரோம் | சார்டீனியா | இந்தியா |
| அரகன் | ஸ்பானியா | ஆஸ்திரியா | மேற்கிந்தியத் தீவுகள் |

**தேர்ச்சி மட்டம்** : 1.3 தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் உலகிற்கு அறிமுகமான முறையை நாடுகாண் பயணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :
- ஐரோப்பாவின் நாடுகாண் பயணங்களுக்கு முன்னர் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் நிலவிய நிலைமையைத் தெளிவுபடுத்துவார்.
- ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.
- நாடுகாண் பயணங்கள், அவற்றின் விளைவுகள் என்பவற்றை எடுத்துக் காட்டுவார்.
- நாடுகாண் பயணப்பாதைகளைத் தேசப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## 1.3 நாடுகாண் பயணங்கள்

நாடுகாண் நடவடிக்கையின் பொருட்டு ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் நிலைமை பற்றிக் கற்பது அவசியமாகும். சிறப்பாக 15ஆம் நூற்றாண்டின் நாடுகாண் பயணங்களை ஆரம்பிக்கும் போது ஆசியாவில் மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாதார, அரசியல், சமூக நிலைமை காணப்பட்டது. சிறப்பாக இந்தியா குறிப்பிடத்தக்க நாகரிகமொன்றிற்கு உரிமையுடையதாக இருந்ததுடன் சீனாவும் ஆசியாவில் பேரரசு நிலையில் இருந்தது. இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க அளவில் அரசியல், பொருளாதார சமயத் தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. மேற்கு நாடுகளில் உள்ளோர் அமெரிக்காவில் சென்று குடியேறுமுன் அங்கு சுதேசிகள் வாழ்ந்து வந்தனர். சிறப்பாக இன்கா, மாயா. அஸ்டெக்ஸ் என்போரின் நாகரிகங்கள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருந்தமைக்கு தொல்பொருள் சான்றுகளின் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளன. இவை இரண்டினையும் விட ஆபிரிக்கக் கண்டத்தில் வேறுபட்ட நிலைமை காணப்பட்டது. இருண்ட கண்டம் எனப்பட்ட ஆபிரிக்கக் கண்டத்தில் பொருளாதார அரசியல், சமூக நிலை அவ்வளவு உயர்ந்ததாகக் காணப்படவில்லை.

## நாடுகாண் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள்

- 1453 ஆம் ஆண்டு மேற்கு-கிழக்கு நாடுகளின் வர்ததக மத்திய நிலையமாக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் கைவசமானமையால் ஐரோப்பியருக்கு வர்த்தகப் பாதை தடைப்பட்டமை.
- உலகம் தொடர்பாக ஏற்பட்ட ஆர்வம்
- விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்
- பேரரசு கட்டியெழுப்பப்பட்டமை.
- வர்த்தகச் சந்தைகளைத் தேடிச் செல்லும் நோக்கம்.
- மதப்பிரசாரம் செய்யும் நோக்கம்
- அரச அனுசரணை கிடைத்தமை
- சாகசம் மிக்க அனுபவங்களைப் பெறும் ஆவல்.
- முஸ்லிம்களுடன் ஏற்பட்ட போட்டி

## நாடுகாண் பயணிகளும், அவர்களது கண்டுபிடிப்புகளும்

- வாஸ்கொடாகாமா - கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை அடைதல்
- பர்த்தலோமியோ டயஸ் - புயல் முனையை அடைதல்
- கிறிஸ்டோபர் கொலம்பஸ் - மேற்கிந்திய தீவுகளான கியூபா, ஹைட்டி, ஹிஸ்பானியோலா எனும் கரிபியன் தீவுகளுக்குப் பயணித்தல் இதன் விளைவாக அமெரிக்காக் கண்டம் இருப்பதை அறிதல்
- பேர்டினனட் மகலன் - முதன் முறையாக உலகைச்சுற்றி வருதல்
- அமெரிக்கோ வெஸ்புசி - வட அமெரிக்காவில் தரையிறங்குதல்
- கப்ரால் - தென் அமெரிக்காவில் பிறேசிலில் தறையிறங்குதல்
- மாக்விட்டே - குவிபெக்கை கண்டறிதல்
- சேபஸ்தியன் கபோட், ஜோன் கபோட் - நியூபவுன்லாந்தைக் கண்டறிதல்
- பிரான்சிஸ்கோ பிசாரோ - பேரு பிரதேசத்தைக் கண்டறிதல்
- பேர்டினன்டோ கோடெஸ் - மெக்சிகோவைக் கண்டறிதல்
- ஜோயிலட் - மிசிசிப்பி ஆற்றுப்படுகையைக் கண்டறிதல்
- ஜேக்விஸ் நாட்டியர் - புனித லோரன்ஸ் ஆற்றுப் பிரதேசத்தைக் கண்டறிதல்



**மிசிசிப்பி ஆற்றுப்படுகை**

## நாடுகாண் பயணங்களின் விளைவுகள்

- ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் ஐரோப்பியரின் அதிகாரம் பரவியமை
- புதிய வர்த்தக நகரங்கள் தோற்றம் பெற்றமை.
- கைத்தொழில் புரட்சி பரவலடைந்தமை
- மதப்பிரசார நடவடிக்கைகள்
- ஐரோப்பிய நாகரிகம் உலகம் முழுவதும் பரவியமை
- உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்ற நிலை ஏற்படல்

- மேற்குக் கிழக்கு நாடுகளின் வர்த்தகம் விரிவடைதல்
  - புதிய வர்த்தக நகரங்கள் தோன்றுதல்.
    உதாரணம்: லிஸ்பன், கேடீஸ், லண்டன்
  - புல புதிய வர்த்தகப் பொருட்கள் ஐரோப்பாவில் அறிமுகமாதல்.
    உதாரணம்: உருளைக்கிழங்கு, கரும்பு, கொக்கோ, புகையிலை, சாய வகைகள், இண்டிகோ, தேயிலை, கோப்பி, பீங்கான் பொருட்கள்.
- நாடுகாண் பயணங்களின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்கள் நவீன உலகுமீது செல்வாக்குச் செலுத்தியுள்ளமை.
  - தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் உலகிற்கு வெளிப்பட்டமை.
  - நாடுகளின் ஆட்சி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.
  - மேற்கத்தேய பண்புகளுக்கு இசைவாக்கம் பெறல்.
  - சர்வதேச வர்த்தகம்.




இண்டிகோ பயிர்ச்செய்கை



இண்டிகோ வர்ணம்



கரும்பு பயிர்ச்செய்கை



ஆசியா
ஐரோப்பா
ஆபிரிக்கா
இந்தியா
சீனா
கிறீன்லாந்து
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
அவுஸ்திரேலியா
பசுபிக் சமுத்திரம்
அத்திலாந்திக் சமுத்திரம்
இந்து சமுத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

### பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. a. ரொபட் கிளைவ் b. வாஸ்கொடகாமா c. பெல்போவா
   d. ஹென்றி ஹட்சன் d. ஜெக்லீஸ் காட்டியர்

2. நாடுகாண் பயணங்களை மேற்கொள்வதில் செல்வாக்கு செலுத்திய காரணி.
   a. உலகம் தொடர்பாக ஏற்பட்ட ஆர்வம்
   b. பேரரசைக் கட்டியெழுப்பும் ஆர்வம்
   c. புதிய வர்த்தக நகரங்கள் தோற்றம் பெறல்
   d. அரச அனுசரணை கிடைத்தமை
   e. சாகசமான அனுபவங்களைப் பெற வேண்டும் என்ற ஆவல்

3. X உடன் Y ஐப் பொருத்துக.

| X | Y |
|---|---|
| 1. ஸ்பானியா | A. மௌனி வில்லியம் |
| 2. இங்கிலாந்து | B. ஆறாம் சாள்ஸ் |
| 3. பிரான்ஸ் | C. ஏழாம் ஹென்றி |
| 4. நெதர்லாந்து | D. பேர்டினன்ட், இசபெலா |
| 5. ஆஸ்திரியா | E. நான்காம் ஹென்றி |

1. BEACD 2. DABCE 3.DEACB 4.DCEAB 5.BACED

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

4. நாடுகாண் பயணங்கள் நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய விதத்தைத் தெளிவுபடுத்துக.

## கணிப்பீடும் மதிப்பீடும் 3

**5**. நாடுகாண் பயணங்களில் முக்கியத்துவம் பெற்ற நாடுகளைத் தேசப்படம் ஒன்றில் குறித்துப்பெயரிடுக.

# 2. ஐரோப்பிய அதிகாரப் பரவலும் பேரரசு கட்டியெழுப்பப்படுதலும்

## அறிமுகம்

கிறிஸ்தவ ஐரோப்பியரின் தலைநகராகவும், மேற்கு-கிழக்கு வர்த்தக நடவடிக்கைகளின் மத்திய நிலையமாகவும் விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதால் ஐரோப்பியர் கீழைத் தேசங்களுடன் செய்த வர்த்தகம் தடைப்பட்டது. இதனால் தேசிய அரசுகளின் அனுசரணையுடன் கீழைத்தேய நாடுகளுடன் தொடர்பினை ஏற்படுத்தும் பொருட்டு புதிய வர்த்தகப் பாதைகளைக் கண்டுபிடித்தல். நாடுகாண் பயணங்களின் ஆரம்பம் என்பன பற்றி முந்திய பாடத்தில் உங்கள் கவனம் ஈர்க்கப்பட்டது . இதன் விளைவாக ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியாக் கண்டங்களில் ஐரோப்பியரால் குடியேற்றங்களை அமைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இவ்வாறு ஐரோப்பியரது ஆதிக்கமானது ஐரோப்பாவுக்கு வெளியே ஏனைய நாடுகளில் பரவியமையே ஐரோப்பிய ஆதிக்க வளர்ச்சி எனப்படுகின்றது. இது பேரரசு செயற்பாடாகும்.

யாதேனும் அரசியல் எல்லைக்குட்பட்ட அரசு, தனது ஆதிக்கத்தை மற்றுமொரு தேச எல்லைக்குள் அமைந்துள்ள அரசில் பரப்புவது பேரரசுவாதம் எனப்படும்.

இந்தச் செயற்பாடுகளின் விளைவாக அடிபணிந்த அரசு குடியேற்றமாக இருந்ததுடன், அந்த அரசுகளில் நிலவி வந்த நிருவாக பொருளாதார சமூகக் கட்டமைப்புகள் மாற்றப்பட்டு பேரரசுக்குத் தேவையான விதத்தில் முன்னெடுத்துச் சென்றமை குடியேற்றவாதம் எனப்படும்.

- 1850 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறப்பாகக் கைத்தொழில் புரட்சியின் பின்னர் இச்செயற்பாட்டின் சுயரூபம் மாற்றமடைந்தது. அது முதல் இது ‘‘புதிய குடியரசு வாதம்’’ எனப்பட்டது.
- குடியேற்றங்களைக் கைப்பற்றுவது பேரரசைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டுடன் தொடர்புடையதாக இருப்பதால் பேரரசுவாதத்திற்கும் குடியேற்றவாதத்திற்கும் இடையே தொடர்பு உள்ளது.

நாடுகாண் பயணங்களுடன் ஐரோப்பிய நாடுகள் வேறு கண்டங்களில் தமது அவதானத்தைச் செலுத்தி குடியேற்றங்களை அமைத்துக் கொண்டமை. குடியேற்றங்களை அமைத்ததன் மூலம் தமது ஆட்சியை விரிவாக்கியமை என்பன இந்த அலகில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 2.0** : • நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய அம்சங்கள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.1 ஐரோப்பாவில் வலிமை வாய்ந்த அரசுகள், உலகம் முழுவதும் தமது அதிகாரத்தை விரிவடையச்செய்த முறையை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்களில் அவதானம் செலுத்துவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.
- ஐரோப்பிய நாடுகள் உலகின் ஏனைய நாடுகளின் தமது அதிகாரத்தை விரிவடையச் செய்த முறையை எடுத்துக் காட்டுவார்.
- ஐரோப்பிய ஆதிக்கப் பரவலை உலகப்படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

ஐரோப்பிய அதிகார விரிவாக்கமும், பேரரசு கட்டியெழுப்பப்படுதலும் ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்திற்குப் பின்னணியாக அமைந்த காரணங்களும்.

## நாடுகாண் பயணங்களுக்கு முன்னோடியாக அமைந்த காரணங்கள்

- போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகள் பங்கேற்றமை.
- சமயத்தைப் பரப்புதல்
  - கீழைத்தேய நாடுகளில் இஸ்லாமிய ஆதிக்கத்தைப் பலவீனப்படுத்துவதன் மூலம் அவர்களது பொருளாதாரப் பலத்தை வீழ்ச்சியுறச் செய்து கீழைத்தேச வர்த்தகத்தைத் தமதாக்கிக் கொள்ளுதல்.
  - உரோமன் கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்தர் ஆகிய இரு பிரிவினரும் மதம் பரப்புதலில் ஆர்வம் காட்டுதல்.
  - ஐரோப்பாவில் நிலவிய உள்நாட்டுச் சமய மோதல்களும், பூசல்களும்
  - இதன் விளைவாக சில குழுவினர் சமய சுதந்திரம் நாடி வேறு இடங்களுக்குச் செல்ல விரும்பியமை.

    உதாரணம்: இங்கிலாந்தில் பியூரிட்டன்கள் அமெரிக்காவில் குடியேறியமை.

## பொருளாதார நோக்கம்

தேசிய அரசுகளின் தோற்றத்துடன் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார போட்டி

## வணிக வாதம்

- தனியார் முயற்சிகளை ஊக்குவித்தல்
- அதன் மூலம் கூட்டு வர்த்தக சங்கங்கள் தோற்றம் பெற்றமை.

  உதாரணம்: ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம், ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கம். இச்சங்கங்கள் ஐரோப்பாவுக்கு வெளியே இலாபமீட்டுவதற்குச் சந்தர்ப்பம் தேடல். பொன் நியமம்
- நாடுகள், தங்கம் போன்ற பெறுமதி வாய்ந்த பொருட்களைச் சேகரிப்பதில் போட்டியுடன் செயற்பட்டமை.

  உதாரணம்: ஸ்பானியா, இலத்தீன், அமெரிக்க பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டமை.
- மானிய முறை வீழ்ச்சியுடன் வேலியடைப்பு, நகரங்கள் தோற்றம் பெறல் எனபன காரணமாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமை.
  - நகரங்களுக்கு மக்கள் வந்து குடியேறுவது அதிகரித்தமை
  - இதன் காரணமாக வேலையின்மை, உணவுத்தட்டுப்பாடு, வீட்டுப் பிரச்சினை, சுகாதார சமூக சிக்கல்கள் என்பன தீவிரமடைதல்
  - இந்நிலைமை அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமாக அமைந்தமை.
  - ஐரோப்பியர் தூரப் பிரதேசங்களில் மக்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்தமை. உதாரணம்: அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்து அங்கு மக்களைக் குடியேற்ற இங்கிலாந்து முன்வந்தமை.

## குடியேற்றங்களை விரிவாக்கும் பொருட்டுப் பின்பற்றப்பட்ட கொள்கைகள்

- குடியேற்றங்களை நிறுவுதல்
  - ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தமது நாட்டினர் கைப்பற்றிய பிரதேசங்களுக்குச் சென்று அங்குக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டமை.
  - பல சந்தர்ப்பங்களில் அப்பிரதேசங்களில் இருந்த சுதேசிகளைக் கலைத்தமை.

    உதாரணம்: இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற குடியேற்ற வாசிகளால் சுதேச மக்களான செவ்விந்தியர்கள் அகதிகளாக்கப்பட்டமை. ஆபிரிக்கக் கண்டத்தில் பல்வேறு பிரதேசங்களை ஐரோப்பிய நாடுகள் கைப்பற்றியதும் அங்கிருந்து கோத்திர மக்கள் பல்வேறு பிரதேசங்களில் மட்டும் வாழக் கட்டுப்படுத்தப் பட்டமை.

## சுதேச மக்களை அடிமைப்படுத்தல்

- தாம் அடிமைப்படுத்திய பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டு வந்த சுதேச ஆட்சி மற்றும் பரிபாலன முறை அவ்வாறே செயற்டுத்தப்பட்டமை.
  உதாரணம்: இலங்கையின் கரையோரப்பகுதிகளில் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் முன்னெடுத்துச்சென்ற ஆட்சியின் கீழ் சுதேச இராசகாரிய முறை அவ்வாறே செயற்படுத்தப்பட்டமை.
- குடியேற்றப் பிரதேசங்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பலம் வாய்ந்த பேரரசுகளில் செயற்படுத்தப்பட்ட ஆட்சி மற்றும் நிருவாகக் கட்டமைப்பை குடியேற்ற நாடுகளிலும் அறிமுகஞ் செய்தமை.
  உதாரணம்: பிரேசிலில் போர்த்துக்கேயரது நிவாகம்.

## குறைந்த செலவில் கூடிய வருமானம் பெறும் பொருளாதாரக் கொள்கையை செயற்படுத்துதல்

- ஆரம்பத்தில் குடியேற்ற நாடுகளிலிருந்த வர்த்தகப் பொருட்கள் செல்வம் என்பவற்றைத் தாய் நாட்டுக்கு அனுப்பியமை.
  உதாரணம்: கீழைத்தேசங்களில் வாசனைத் திரவியங்கள் இலத்தீன் அமெரிக்காவில் தங்கம், ஆபிரிக்காவில் அடிமைகள்.
- பின்னர் குடியேற்ற நாடுகளில் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றி அமைத்துப் பேரரசு நாடுகளுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்தமையும், ஏற்றுமதி செய்தமையும்.
- பெறப்படும் இலாபத்தைக் குடியேற்ற நாடுகளின் அபிவிருத்திக்குச் செலவிடாது அவற்றைத் தம் தாய் நாட்டிற்குக் கொண்டு செல்லல்.

## சுதேசிகளின் கவனத்தைப் பெறும் பொருட்டு உபாயங்களைக் கையாளுதல்

- சமய போதனை, கல்வி முறை, இலாபம் பெறுதல், பல்வேறு பண்பாட்டு இயல்புகளை அறிமுகம் செய்தமை.
- 'நாகரிகப்படுத்துதல்' என்ற தோரணையில் சமயத்தைப் பரப்புவதில் ஈடுபட்டனர்.

## பேரரசுக்குச் சாதகமான குடியேற்ற நாட்டுக் கொள்கைகளை அறிமுகம் செய்தலும் செயற்படுத்துதலும்

- புதிய சட்டங்களை அறிமுகம் செய்து குடியேற்ற நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
  உதாரணம்:
  1850 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றம் அறிமுகம் செய்த இரும்புச் சட்டத்தின் (Iron act) கீழ் குடியேற்ற நாடுகளிலிருந்து வரியின்றி இருப்புத்தாதினை இறக்குமதி செய்வதற்கான வசதிகைளச் செய்து கொடுத்ததன் மூலம் பிரித்தானிய வியாபாரிகளுக்குப் புதிய குடியேற்ற நாடுகளில் வியாபாரம் ஆரம்பிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை.

## பேரரசு கட்டியெழுப்பப்படல்

- ஐரோப்பாவின் அதிகாரப்பரவலுடன் பேரரசு கட்டியெழுப்பப்படுவதில் பிரதான பூகோள வலயங்கள் மூன்றினை மையமாகக் கொண்டு செயற்பட்டன. அவைகளாவன: வட அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா என்பனவாகும்.

  1492 ஆம் ஆண்டு கொலம்பசினால் ஸ்பானியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நாடுகாண் பயணங்களின் வழியாகக் கரிபியின் தீவுகள், அமெரிக்கப் பிரதேசம், தென் அமெரிக்கா, ஆசியாவுக்கு வருவதற்கான புதிய கடல்வழி என்பன கண்டுபிடிக்கப்பட்டன. வட, தென் அமெரிக்க பிரதேசம் 'புதிய உலகம்' எனப்பட்டதுடன், அவற்றிற்கு அமெரிக்கா என்ற பெயர் சூட்டப்பட்டது. இத்தாலிய நாடுகாண் பயணியான அமெரிக்கோ வெஸ்புசி என்பவரைக் கௌரவிக்கும் முகமாகவாகும்.

## ஸ்பானியரின் அதிகாரப் பரவல்

- சமயப் பிரசாரம், வர்த்தகம் என்பனவற்றின் பொருட்டு நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட ஸ்பானியர் கி.பி. 1600 ஆம் ஆண்டளவில் பாரிய பேரரசைக் கட்டியெழுப்பியமை.
- ஸ்பானியரின் பிரதான குடியேற்றத்தை இலத்தீன் அமெரிக்காவில் நிறுவியமை. கி.பி. 16ஆம் 17 ஆம் நூற்றாண்டில் மத்திய இலத்தீன் அமெரிக்க நிலப்பரிபில் 3/5 பங்கில் பேரரசு பரவியிருந்தமை.
  தற்போதைய ஐக்கிய அமெரிக்காவுக்குச் சொந்தமான புளோரிடா, மெக்சிக்கோ பனாமாவிலிருந்து டிரினிடெட் வரையிலான மேற்கிந்திய தீவுகள், ஆசியாவில் பிலிப்பீன், ஒஷினியா அதனை அண்டிய தீவுகள் என்பன இதில் அடங்கும்.
- தாய் நாட்டிற்குக் கூடுமான வரையில் செல்வத்தைக் கொண்டு வரும் நோக்கும் வர்த்தக ஏகபோக உரிமையையும் பொன் நியமத்தையும் செயற்படுத்துதல்.
- கத்தோலிக்க மதத்தைக் குடியேற்ற நாடுகளில் அறிமுகம் செய்தல்.
  - 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேரரசு வீழ்ச்சியுற்றமை
  - பேரரசு நிறுவப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள்
    – சுதேச பண்பாடு வீழ்ச்சியுற்றமை
    – 16 ஆம் நூற்றாண்டு ஸ்பானியா ஐரோப்பாவில் செல்வமிக்க நாடாக விளங்கியமை.

## போர்த்துக்கலின் அதிகாரப் பரவல்

- உலகம் முழுவதும் ஆங்காங்கே குடியேற்றங்களை நிறுவியமை
  - தென் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்கள் இதில் அடங்கும்.
  - தென் அமெரிக்காவில் பிரேசில், தெற்காசியாவில் இந்தியா, இலங்கை, தென்கிழக்காசியாவில் மலாக்கா, டிமோர் முதலான பிரதேசங்கள்.
- குடியேற்றங்களை அமைப்பதற்கான காரணங்கள்
  - தென் அமெரிக்கா - பெறுமதியான உலோகங்களைப் பெற்றுக்கொள்ளல், தோட்டப் பயிர்ச் செய்கை.
  - ஆசியா - வர்த்தகம், மதப்பிரசாரம், போர் நடவடிக்கைக்கு உகந்ததாக இருந்தமை
  - ஆபிரிக்கா - அடிமை வியாபாரம், பெறுமதி வாய்ந்த உலோகங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- 17ஆம் நூற்றாண்டில் பேரரசு வீழ்ச்சியுற்றமை.

## ஒல்லாந்தின் அதிகாரப்பரவல்

- வர்த்தகம், கடல் வலிமை, தேசியவாதம், அரச அனுசரணை என்பன பேரரசுப் பரவலுக்கு உதவியமை.
- 17 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதி அதன் பொற்காலமாக விளங்கியமை.
- ஆசியா, ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதி வட அமெரிக்காவின் அத்திலாந்திக் சமுத்திரப் பிரதேசம் ஆகியவற்றில் பேரரசு அமைக்கப்படல்
- பேரரசின் வீழ்ச்சி
  – ஆசியாவில் பேரரசுக்குப் பிரித்தானியா அச்சுறுத்தலாக இருந்தமை
  – 1670 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் ஒல்லாந்தரது ஆதிக்கம் வீழ்ச்சி அடைந்தமை

## பிரித்தானியப் பேரரசின் பரவல்

- 19ஆம் நூற்றாண்டில் உலகில் மிகப்பெரிய பேரரசை நிறுவியமை
  - உலக நிலப்பரப்பில் 1/4 பங்கு அதற்கு சொந்தமாக இருந்தமை.
  - 'சூரியன் மறையாத பேரரசு' என்று அழைக்கப்பட்டமை.
  - 1815 - 1914 இற்கும் இடைப்பட்ட காலம் பிரித்தானியப் பேரரசின் நூற்றாண்டுக் காலம் எனப்படுதல்.
  - ஜமேக்கா, பகாமாத் தீவுகள், பார்மடோஸ் உட்பட மேற்கிந்தியத் தீவுகள், வட அமெரிக்கா பிரதேசம், இந்தியா, இலங்கை, மலேசியா உட்பட ஆசியப் பிரதேசம் என்பன பிரித்தானியரின் கீழ் இருந்தமை. இப்பிரதேசங்களில் கரும்பு, பருத்தி, கோப்பி, தேயிலை, இறப்பர் போன்ற வர்த்தகப் பொருட்களினதும், இயற்கைக் கனிப் பொருட்களான தங்கம், காரீயம், வெள்ளி, இரத்தினக் கற்கள் என்பனவற்றினதும் வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொள்ளல்.

## முக்கோண வர்த்தகம் (Triangular Trade)

- ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்காவுக்கு இடையே நடைபெற்ற வர்த்தகம் இவ்வாறு அழைக்கப்பட்டமை.
- பிரித்தானியர் தமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆபிரிக்கப் பகுதியில் பிடித்த நீக்ரோ இனத்தவரை அமெரிக்காவின் குடியேற்றங்களுக்கு அடிமைகளாக விற்று அதற்குப் பதிலாக சீனி, பருத்தி, புகையிலை போன்ற பொருட்களை அமெரிக்காவிலிருந்து பெற்று அவைகளை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றமை. இதற்கமைய ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா என்பனவற்றுக்கிடையே முக்கோண வர்த்தகம் நடைபெற்றமை.
- 16 ஆம் 17ஆம் நூற்றாண்டு தொடக்கம் பேரரசு விரிவடைந்தமை.
  - நாடுகாண் பயணங்கள், வர்த்தக மத்திய நிலையங்களை நிறுவுதல், குடியேற்றங்களை அமைத்தல் என்பன மூலம் பேரரசு விரிவு நடைபெற்றமை.
- குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமையும், வர்த்தக நடவடிக்கையின் பொருட்டு வர்த்தக சங்கங்கள் நிறுவப்பட்டமையும்
- காலம் செல்ல பாரிய பேரரசை முன்னெடுத்துச் செல்லுதல் கடினமான செயலாகியமை.
  - குடியேற்றமொன்றை நிறுவும்போது மற்றுமொரு குடியேற்றம் விடுதலை பெற்றமை.
  - பிரான்சியரின் உதவி குடியேற்றங்களுக்குக் கிடைத்தமை.
    உதாரணம்: அமெரிக்க சுதந்திரப் போருக்குப் பிரான்ஸ் உதவியமை
  - உலகப் போரில் ஈடுபட்டமையும், குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் கிடைத்தமையும்.

## ஐரோப்பிய அதிகாரப் பரவலுடன் உலகில் ஏற்பட்ட மாற்றங்கள்

### அரசியல்

- குடியேற்ற நாடுகளின் ஆட்சியினதும் நிருவாகத்தினதும் கட்டமைப்பு வீழ்ச்சியுறல்.
- பல்வேறு இனப்பிரிச்சினைகளும் அரசியல் பிரச்சினைகளும் தோன்றுதல்.

### பொருளாதாரம்

- குடியேற்ற நாடுகளில் நிலவிய தேசிய பொருளாதார முறை வீழ்ச்சியுற்றமை.
- பல பிரதேசங்களில் பொருளாதார முறை இரட்டைத் தன்மை பெற்றமை
  - பேரரசின் தேவைக்கான அடையாளம் காணப்பட்ட பயிர்களின் செய்கை
    உதாரணம்: இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்பமும் பரவலும்
  - உள்நாட்டின் சுய தேவைப் பொருளாதாரம் வீழ்ச்சியுறல் செல்வத்தை அபகரித்தல்.
  - குடியேற்றங்களில் பலம் வாய்ந்தவர்களாக இருந்தவர்கள் உலகில் பொருளாதாரத்தில் பலம் வாய்ந்தவர்களானமை.

**சமூகம்**

- குடியேற்றங்களில் காணப்பட்ட சமூக அமைப்புச் சீர்குலைந்தமை.
- மேல்நாட்டுத் தாக்கத்துடனான கலப்பு சமூகத்தின் இயல்புகள் தோன்றியமை.
- புதிய இனங்கள் தோன்றியமை
  உதாரணம்: இலங்கையில் பறங்கியர், இந்தியாவில் அங்லோ இந்தியர், இலத்தின் அமெரிக்காவில் ஸ்பெனிக்கர்.
- வகுப்பு வாரியான சமூகம் தோன்றியமை.

**பண்பாடு**

- மேற்கு நாடுகளின் பழக்கவழக்கங்கள் ஏற்பட்டமை.
- மொழியில் புதிய சொற்களும் எண்ணக்கருக்களும் இணைந்தமை.
- கத்தோலிக்க மதத்தின் தாக்கம்.
- புதிய கலையம்சங்கள் அறிமுகமாகியமை.
- தேசிய பண்பாட்டில் சில அம்சங்கள் மறையத் தொடங்கியமை.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

ஐரோப்பாவில் குடியேற்றங்களுடன் தொடர்புடைய நாடுகளையும் குடியேற்ற நாடுகளையும் உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

- **பின்வரும் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) பேரரசு என்பது,
1. ஐரோப்பிய நாடுகள் மேற்கு, கிழக்கு நாடுகளில் தமது ஆட்சியைப் பரப்பி, அவற்றின் மீது மேலாதிக்கம் செலுத்துவது.
2. ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் நாடுகளைக் குடியேற்ற நாடுகளாக்கி, தமது அதிகாரத்தை விரிவாக்குவது.
3. குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நாடொன்று மற்றொரு எல்லைக்குட்பட்ட நாட்டின்மீது அதிகாரத்தைப் பரப்புவது.
4. ஏதேனும் ஒரு அரசில் நிலவிவரும் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளை மாற்றியமைத்து தமது அதிகாரத்தை நிலைநாட்டுதல்.
5. அரசொன்றின் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒற்றை ஆட்சியை முன்னெடுத்துச் செல்லல்.

(...............)

(2) ஐரோப்பியர் தமது அதிகாரத்தைப் பல்வேறு நாடுகளில் நிலைநாட்டிய வேளையில் அந்நாடுகளின் சுதேசிகளைக் கவரும் பொருட்டு மேற்கொண்ட உபாய நடவடிக்கை
1. சுதேசிகளின் உற்பத்தியைப் பணம் கொடுத்து வாங்குதல்.
2. சுதேச ஆட்சியாளர்களின் குறைபாடுகளை எடுத்துக்கூறுதல்.
3. பாடசாலைகளை ஆரம்பித்து, கல்வியைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
4. ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்திக் குடியேற்ற நாடுகளின் நன்மை கருதியே தாம் செயற்படுவதாகப் பிரசித்தப்படுத்துதல்.
5. குடியேற்ற நாடுகளில் தொழிற்சாலைகளை அமைத்து, சுதேசிகளை அவற்றில் சேவையில் அமர்த்துதல்.

(...............)

(3) முக்கோண வர்த்தகத்தை மேற்கொண்ட இனத்தவர்
1. அமெரிக்கர் 2. ஸ்பானியர் 3. ஒல்லாந்தர்
4. பிரித்தானியர் 5. பிரான்சியர்

(...............)

(4) ஒல்லாந்தரது அதிகாரம் பலவீனமடைந்தமைக்கான காரணங்களில் ஒன்றாக இருப்பது,
1. பிரித்தானியரது அதிகார விரிவாக்கம்
2. பிரான்சியரது அதிகார விரிவாக்கம்
3. ஒல்லாந்த ஆட்சியாளரது பலவீனம்
4. குடியேற்றங்களை முன்னெடுத்துச் செல்லப் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டமை
5. ஒல்லாந்தில் ஏற்பட்ட உள்நாட்டுச் சிக்கல்கள்

(...............)

(5) X உடன் Y ஐ இணைக்கும்போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | வணிகவாதம் | (A) | பெறுமதி வாய்ந்த உலோகங்களைச் சேகரிக்கும் போட்டி |
| (ii) | பொன் நியமம் | (B) | ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புக் களை மாற்றிப் பேரரசுக்குத் தேவையான முறையில் அமைத் துக்கொள்ளல். |
| (iii) | நாடுகாண் பயணங்கள் | (C) | அதிக இலாபம் பெறும் நோக்கம் |
| (iv) | பேரரசு வாதம் | (D) | கைத்தொழிற்புரட்சியின் பின்னர் ஏற்பட்டது |
| (iv) | புதிய பேரரசுவாதம் | (E) | புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல் |

(1) BACED (2) CAEBD (3) ACDBE (4) DEABC (5) ECADB

- **இலக்கம் 06 - 10 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமாக இவ்விரண்டு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாத் தொடர்பாகக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமானதைக் கீழே தரப்பட்டுள்ள 1, 2, 3, 4, 5 என்பனவற்றில் எது என்பதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவதை மேலும் தெளிவு படுத்துகிறது. |

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** | |
|---|---|---|---|
| 6 | ஐரோப்பாவில் மானியமுறை வீழ்ச்சியுற்ற துடன் வேலியடைப்பு இயக்கம் ஆரம்ப மானது. | நிலத்தை இழந்த மக்கள் நகரத்தை நோக்கி வந்ததுடன் சமூக, சுகாதார சிக்கல்கள் பல ஏற்பட்டன. | (.........) |
| 7 | அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்து அங்கு மக்களைக் குடியேற்ற இங்கிலாந்து முனைந்தமை. | குடியேற்ற நாடுகளிலிருந்து பெற்ற இலாபத்தை அந்நாடுகளின் அபிவிருத் திக்குப் பயன்படுத்தி மிகுதியானதை மாத்திரம் தமது நாட்டுக்குக் கொண்டு செல்ல பேரரசுவாதிகள் நடவடிக்கை எடுத்தனர். | (.........) |
| 8 | ஸ்பானியர்கள் கி.பி. 1600 ஆம் ஆண்டள வில் ஆசியாக் கண்டத்தில் பாரிய பேரர சைக் கட்டியெழுப்பி இருந்தனர். | கி.பி. 1800 ஆம் ஆண்டு ஒல்லாந்து ஆதிக்கத்தின் பொற்காலமாகும். | (.........) |
| 9 | 19ஆம் நூற்றாண்டளவில் பரந்த, பலம் வாய்ந்த பேரரசைக் கட்டியெழுப்பிய பிரித்தானியருக்கு உலகில் 3/4 நிலம் சொந்தமாக இருந்தது. | கிழக்கிந்தியத் தீவுகளின் அதிகார விரிவாக்கத்தில் பிரித்தானியர்களது பிரதான போட்டியாளரான ஒல்லாந்தர், பிரித்தானி யர்க்கு அச்சுறுத்தலாகவும் அமைந்தனர். | (.........) |
| 10 | இரட்டைப் பொருளாதாரமுறை என்பது ஏற்றுமதி, இறக்குமதி என்பனவற்றுடன் கூடிய பொருளாதார முறையாகும். | இலங்கையில் பறங்கியரும் இந்தியாவில் அங்லோ இந்தியரும் தோற்றம் பெற்றமை ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்துடன் ஏற்பட்ட மாற்றமாகும். | (.........) |

## கணிப்பீடும் மதிப்பீடும் 3

- **பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. ஐரோப்பிய ஆதிக்க விரிவாக்கத்திற்குப் பின்னணியாக அமைந்த காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

2. ஐரோப்பியர் குடியேற்றங்களின் விரிவாக்கம் தொடர்பாகப் பின்பற்றிய கொள்கைகளை உதாரணங்களுடன் விளக்குக.

3. பொன் நியமம், பேரரசுவாதம், புதிய பேரரசு வாதம் என்பவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

# 3. நவீன உலகினை உருவாக்கிய புரட்சிகள்

## அறிமுகம்

1215 ஆம் ஆண்டு மகாபட்டயத்தின் மூலம் முதலாவது முறையாக மன்னனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டதுடன், 1688 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கிலப் புரட்சி (மகோன்னத புரட்சி) யுடன் மன்னனின் அதிகாரம் குறைந்து பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்கத் தொடங்கியது. 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்துக்கு அமைய மன்னனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்ட சட்ட ரீதியான பாராளுமன்றத்தின் அதிகாரம் மேலோங்க வழி கிடைத்தது. இந்த மாற்றங்கள் சட்டரீதியாக நடைபெற்றமை அரசியல் ரீதியாக முறையாகப் பிரித்தானியப் பாராளுமன்றம் வலிமை அடைந்தமை என்பன தொடர்பாகக் கலந்துரையாடுவதே இந்த அலகில் எதிர்பார்க்கப் படுகிறது.

இன்கா, மாயா, அஸ்டெக்ஸ் ஆகிய நாகரிகங்களை அழித்து, ஸ்பானியா, தென் அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவியதுடன், ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் 13 குடியேற்றங்களை நிறுவினர். தாய் நாடான இங்கிலாந்தின் கீழ் நிர்வகிக்கப்பட்ட இந்தக் குடியேற்றங்கள் ஆங்கில அரசினால் அமுல் செய்யப்பட்ட வரிகளுக்கு எதிராகப் ‘பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை’ என்ற தொனிப்பொருளுடன் ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்தனர். ஜோர்ஜ் வாஷிங்டனின் தலைமையில் போராடி, ஆங்கில அரசாங்கத்தைத் தோற்கடித்து 1776 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுதந்திரப் பிரகடனம் மூலம் ஐக்கிய அமெரிக்கா எனும் சுதந்திர அரசைத் தோற்றுவித்தமை என்பன இந்த அலகில் கலந்துரையாடப்படுகிறது.

‘‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’’ எனும் தொனிப்பொருளுடன் பிரான்சிய சீர்கேடான ஆட்சிக்கு எதிராக 1789 ஆம் ஆண்டு பிரான்சிய மக்கள் ஆரம்பித்த போராட்டம் ‘பிரான்சியப் புரட்சி’ எனப்படுகிறது. பல வருடங்களாக பிரான்சில் நிலவிய அரசியல், பொருளாதார. சமூக நிலைமைகள் பிரான்ஸியப் புரட்சிக்குக் காரணமாக அமைந்த விதத்தையும் அக்காலத்தில் நிலவிய 16ஆம் லூயி மன்னனின் சர்வாதிகார ஆட்சியை முறியடித்து வெற்றிபெற்றமையும் இந்த அலகில் கலந்துரையாடப்படுகிறது. மேலும் பிரான்சியப் புரட்சியின் விளைவாக தோற்றம் பெற்ற உரிமைச் சட்டம் உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வு என்பதுவும் இதில் முன்வைக்கப்படுகிறது. 1688 ஆம் அண்டு ஆங்கிலப் புரட்சி 1776 ஆம் ஆண்டு அமெரிக்க சுதந்திரப்போர் 1789 ஆம் ஆண்டு பிரான்ஸியப் புரட்சி ஆகிய மூன்றும் நவீன உலகைத் தோற்றுவிப்பதில் பங்களிப்புச் செய்துள்ள விதத்தில் கவனம்செலுத்துவது இந்த அலகில் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி** : • நவீன உலகின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய அணிகள் வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஆங்கிலப் புரட்சியின் பங்களிப்பினைப் பரிசீலிப்பார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :
- ஆங்கிலப் புரட்சிக்கான காரணங்களை விளக்குவார்.
- ஆங்கிலப் புரட்சியின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் விபரிப்பார்.
- பேரரசுக்கு எதிராகக் குடியேற்றவாசிகள் போர் செய்த முறையை அமெரிக்கச் சுதந்திரப் போரின் அடிப்படையில் தெளிவுபடுத்துவார்.
- புதிய உலகை அமைப்பதில் பிரான்சியப் புரட்சியின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி

### புரட்சியின் பின்னணி

- இங்கிலாந்தின் பாராளுமன்ற அரசியல்முறை நீண்டகாலமாக வளர்ச்சியுற்றமை.
- 1215 ஆம் ஆண்டு மகாபட்டயத்தின் (மக்னாகார்டா) மூலம் மன்னனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டமை.
- மகா சபையின் அனுமதியின்றி மன்னனுக்கு வரி அறவிட முடியாமை.
- விசாரணையின்றி எவருக்கும் தண்டனை வழங்க முடியாமை
- மன்னன் இதனை மீறினால் மன்னனுக்குத் தண்டனை வழங்க மகா சபையின் பெரன்களின் சபைக்கு அதிகாரமளிக்கப்படல்.
- முதலாம் எட்வட் மன்னனின் காலம் (1272-1307) பிரித்தானிய பாராளுமன்றமுறை வளர்ச்சியின் முக்கியமான கட்டமாக விளங்கியமை.
- இரண்டாம் எட்வட் மன்னனின் காலம் (1303-1327) பாராளுமன்றத்தின் சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பனவற்றின் அதிகாரங்கள் படிப்படியே வளர்ச்சியடைந்தமை
- இரண்டாம் ரிச்சட் மன்னனின் காலத்தில் (1377-1399) மன்னனின் அதிகாரம் குறைந்து பாராளுமன்றத்தின் அதிகாரம் அதிகரித்தமை
- நான்காம் ஹென்ரி மன்னனின் காலத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியுற்றமை
- கத்தோலிக்க சபையுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக எட்டாம் ஹென்ரி மன்னன் பாராளுமன்றத்தின் உதவியைப் பெற்றமையால்அதன் அதிகாரம் அதிகரித்தமை. (புரட்டஸ்தாந்த பாராளுமன்றம்)
- ஸ்டுவட் மன்னர்களின் காலத்தில் மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணாமாகப் பாராளுமன்றம் மன்னனுக்கு எதிராகச் செயற்பட்டதுடன் அது பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சிக்குக் காரணமாகியமை
- முதலாம் சாள்ஸ் மன்னன் (1625-1649) உரிமை மனுவை ஏற்றுக்கொள்ளல். இதனால் மன்னனது அதிகாரத்துக்கு மேலாகப் பாராளுமன்றத்தின் அதிகாரம் வலுவடைந்தமை.
- அந்த மனுவிற்கு அமைய
  - பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி வரி அறவிட முடியாமை
  - நீதியான விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க முடியாமை
  - வரி செலுத்தாத நபர்களின் வீடுகளில் படைவீரர்களை நிறுத்துவது தடை செய்யப்பட்டமை.
  - அமைதி நிலவும் காலகட்டத்தில் இராணுவச் சட்டத்தைப் பயன்படுத்த முடியாமை
- முதலாம் சாள்ஸ் மன்னன் மனுவைக் கருத்தில் கொள்ளாது தன் விருப்புப்படி ஆட்சி செய்தமை
- 1648 ஆம் ஆண்டு உரிமை மனு தொடர்பாக மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே மீண்டும் மோதல்கள் ஏற்பட்டமை.
- முதலாம் சாள்ஸ் மன்னனின் காலத்தில் 1648 ஆம் ஆண்டு ஒலிவர் குரோம் வெல்லின் தலைமையில் பாராளுமன்றத்துக்கும் மன்னனுக்கும் இடையே உள்நாட்டுப் போர் ஏற்பட்டமை. அதில் பாராளுமன்றம் வெற்றியடைந்ததுடன் குரோம் வெல்லின் தலைமையில் கூட்டாட்சி அமைக்கப்பட்டமை.
- பாராளுமன்றத்தால் மன்னன் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டமை
- ஒலிவர் குரோம் வெல்லின் தலைமையில் கூட்டாட்சி செயற்பட்டமை
- இரண்டாம் சாள்ஸ் மன்னன் ஆட்சிக்கு வருதலும் மீண்டும் முடியாட்சி செயற்பட்டமையும்
- இரண்டாம் சாள்ஸ் மன்னன் காலத்தில் மீண்டும் பாராளுமன்றத்தின் அதிகாரம் வலுவடைதல்
- இக்காலகடத்தில் மன்னனுக்குச் சார்பாக ‘டோரி’ கட்சியும் மன்னுக்கு எதிராக ‘விக்’ எனும் கட்சியும் தோற்றம் பெற்றமை.
- பாராளுமன்றத்துடன் இணைந்து செயற்படாமையால் இரண்டாம் ஜேம்ஸ் மன்னனின் காலத்தில் (1685-1688) மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான மோதல்கள்.

- மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான மோதல் உச்சக் கட்டத்தை அடைந்ததன் விளைவாக 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி (மகோன்னத புரட்சி, இரத்தம் சிந்தாப்புரட்சி) ஏற்பட்டமை.
- இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் சிம்மாசனத்தை விட்டுச் சென்றமை
- பாராளுமன்றத்தால் சிம்மாசனத்துக்கு உரித்துடையவளான மேரி அரசியும் விலியம் இளவரசனும் (ஒல்லாந்து) வரவழைக்கப்பட்டு அவர்களுக்குச் சிம்மாசனத்தை வழங்கியமை.
- அதன் பின்னர் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை.
- 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்திற்கு அமைய
  - விலியம், மேரி ஆகியோர் இங்கிலாந்தின் அரசனும் அரசியும் என ஏற்றுக்கொள்ளப்படல்.
  - கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த எவருக்கும் இங்கிலாந்தின் சிம்மாசனம் உரிமையாக முடியாது எனத் தீர்மானித்தல்.
  - ஏற்கனவே இருந்த சட்டங்களை மாற்றவோ, புதிய சட்டங்களை அமுல் செய்யவோ மன்னனுக்கு அதிகாரம் இல்லை எனத் தீர்மானித்தல்.
  - பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் வரி அறவிட முடியாது.
  - பாராளுமன்றத்தின் பேசும் உரிமைக்கு மன்னன் தடையாக இருத்தலாகாது.
  - பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் நிரந்தரப் படை வைத்திருக்கலாகாது.
  - 1689 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் மன்னனின் அதிகாரத்தை விடப் பாராளுமன்றத்தின் அதிகாரம் மேலோங்கி இருந்தமை.
  - மன்னர்களை நியமிக்கும் அதிகாரம் உரிமைச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டமையால் நீண்ட காலமமாக மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே நிலவிய குழப்பம் முடிவுக்கு வந்து, பாராளுமன்றம் வெற்றியடைதல்.
  - 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டம் ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டுக்கு வழிகாட்டியாக இருந்தமை.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **பின்வரும் வினாக்களுக்கு ஐந்து சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மற்றையதுடன் பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. A. லங்கஸ்டர் B. டியுடர் C. பூர்போன் D.ஸ்டுவட் E. யோர்க்
(...........)
2. A. முதலாம் சாள்ஸ் மன்னன் B. இரண்டாம் எட்வட் மன்னன்
C. மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் D. ஏழாம் ஹென்றி மன்னன்
E. மூன்றாம் விலியம் மன்னனர்
(...........)
3. A. எழாம் ஹென்றி மன்னன் B. இரண்டாம் எலிசபெத் அரசி
C. எட்டாம் ஹென்றி மன்னன் D. ஒலிவர் குரோம் வெல்
E. மேரி டியூடர்
(...........)

4. பின்வரும் வினவின் X, Y என்பனவற்றை இணைத்துச் சரியான விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| 1. மகாபட்டயம் | A. முதலாம் சாள்ஸ் |
| 2. புரட்டஸ்தாந்து பாராளுமன்றம் | B. இரண்டாம் ஜேம்ஸ் |
| 3. போலிப் பாராளுமன்றம் | C. எட்டாம் ஹென்றி |
| 4. நீண்ட காலப் பாராளுமன்றம் | D. மூன்றாம் ஜோன் |
| 5. மகோன்னதப் புரட்சி | E. முதலாம் ஜேம்ஸ் |

(1) CFABD (2) FABDC (3) DCEAB (4) ABDCE (5) BDCEA
(...........)

5. இங்கிலாந்தின் பாராளுமன்ற வளர்ச்சி தொடர்பாகப் பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.
   1. 1215 ஆம் ஆண்டு மகாபட்டயம் கைச்சாத்திடப்படல்.
   2. 1776 ஆம் ஆண்டு அமெரிக்கா பிரித்தானியாவிலிருந்து விடுதலை பெறுதலைப் பிரகடனம் செய்தல்.
   3. 1628 ஆம் ஆண்டு முதலாம் சாள்ஸ் மன்னன் உரிமை மனுவை ஏற்றல்.
   4. 1648 ஆம் ஆண்டு ஒலிவர் குரோம் வெல்லின் தலைமையில் கூட்டரசாங்கம் நிறுவப்படல்.
   5. 1689 உரிமைகள் பிரகடனம்

(...........)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 1688 ஆம் ஆண்டு மகோன்னத புரட்சியின் விளைவாகப் பிரித்தானிய மன்னனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துக.
2. ஸ்டுவட் அரசவம்சக் காலத்தில் மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.
3. மகாபட்டயம் கைச்சாத்திடப்பட்டது முதல் 1689 ஆம் ஆண்டு வரை பிரித்தானியப் பாராளுமன்றம் வளர்ச்சியடைந்த முறையைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
4. ஆங்கிலப் புரட்சிக்கான காரணங்களைக் கலந்துரையாடுக.
5. ஆங்கிலப் புரட்சியின் விளைவுகளைத் தெளிவுப்படுத்துக.

**தேர்ச்சி மட்டம்** : 3.2 அமெரிக்க சுதந்திரப்போராட்டம் ஓர் உகல சக்தியாக அமைந்த விதத்தினை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற்பேறுகள்** :
- அமெரிக்க சுதந்திரப் போரை விபரிப்பார்.
- அமெரிக்காவில் பிரித்தானியக் குடியேற்றங்களைப் புறவரிப்படத்தில் குறித்துக் காட்டுவார்.
- அமெரிக்க சுதந்திரப்போர் உலக வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## அமெரிக்க சுதந்திரப் போர்

### ஐரோப்பிய இனத்தவர் வரும்போது அமெரிக்காவில் இருந்த ஆரம்பக்குடிகள்

- ஐரோப்பிய இனத்தவர் அமெரிக்காவுக்கு வந்திறங்கியபோது அமெரிக்காவில் இருந்தவர்கள் பொதுவாக செவ்விந்தியர் எனப்பட்டனர்.
- 15 ஆம் நூற்றாண்டளவில் அமெரிக்காவில் அடியெடுத்து வைத்த ஐரோப்பியர்கள், அமெரிக்காவில் வாழ்ந்த மக்களையும் அவர்களது முன்னேற்றமமான நாகரிகத்தையும் அழித்து, ஐரோப்பிய நாகரிகத்துக்குச் சமமான புதிய நாகரிகத்தை அங்கு நிலைநிறுத்தினர்.

### ஐரோப்பியர் அமெரிக்காவுக்குச் செல்வதற்கான காரணங்கள்

- கி.பி. 1453 ஆம் ஆண்டு ஐரோப்பாவின் முக்கிய வர்த்தக மத்திய நிலையமாக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் முஸ்லிம்களின் கைக்கு வந்ததால் கீழைத்தேசங்களுக்குச் செல்லும் வர்த்தகப் பாதை தடைப்பட்டது. இதனால் ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்குச் செல்வதற்குக் கடல் வழியைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் செல்கையில் அமெரிக்காவில் தரையிறங்கியமை.
- இங்கிலாந்தில் நிலவிய பொருளாதார, சமூக மாற்றங்களின் காரணமாக இன்னல்களுக்கு உ்ளளான மக்கள் தமக்குத் தேவையான தொழில், வர்த்தகம், நிலம் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் நல்வாழ்வு வாழ்வதற்கு வாய்ப்பைத் தேடிக் கொள்வதற்கும் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தமை.
- 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயப் புரட்சியின் விளைவாக சமயப் பிரிவுக்ள தோன்றியதுடன் அவைகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டமை.
- அவற்றால் துன்புற்ற மக்கள் மத சுதந்திரம் நாடி அமெரிக்காவை அடைந்தமை.

### ஆங்கிலேயர் அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவுதல்

- போர்த்துக்கேயர், ஸ்பானியர், பிரான்சியர், ஒல்லாந்தர் ஆகியோர் அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவிய ஏனைய ஐரோப்பிய இனத்தவராவர்.
  - ஆங்கிலேயர் வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் 13 குடியேற்றங்களை நிறுவினர்.
  - ஜோர்ஜியா, தென் கரோலினா, வட கரோலினா, வேர்ஜினியா, மேரிலாந்து, டெலவெயார், நியூஜேர்சி, பென்சில்வேனியா, கனெக்டிகட், ரோட் தீவு, மசாசுசெட்ஸ், நிவ்ஹம்ப்சயர், நிவ்யோர்க் எனும் குடியேற்றங்களை அமைத்த ஆங்கிலேயர் அக்குடியேற்றங்களைத் தாய் நாட்டின் கீழ் வைத்துக் கொண்டனர்.

### பிரித்தானியரின் கீழ் அமெரிக்கக் குடியேற்றங்கள் நிருவகிக்கப்பட்ட முறை

- பிரித்தானிய மன்னனால் நியமிக்கப்பட்ட ஆளுனராலும் ஆலோசனைச் சபையாலும் அமெரிக்கக் குடியேற்றங்கள் நிருவகிக்கப்பட்டமை.
- குடியேற்றங்களை நிருவகிப்பதில் பிரித்தானிய மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் நிறைய அதிகாரங்கள் இருந்தமை.

- குடியேற்றவாசிகள் நிருவாகம் தொடர்பாக சுதந்திரத்தை அனுபவித்ததால் நிருவாகத்திற்கு எதிராக அவர்கள் செயற்படாமை.
- பொருளாதார ரீதியில் அவர்களுக்குச் சுதந்திரமின்மை.
- அமெரிக்கக் குடியேற்றங்களில் கைத்தொழில் வளர்ச்சியடைவதைப் பிரித்தானியர் விரும்பாமை.
- பிரித்தானியர் வட அமெரிக்கக் குடியேற்றங்களைத் தமது உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் பிரதேசமாகவும் தமது முடிவுப் பொருட்களை விற்று இலாபம் பெறும் சந்தையாகவும் கருதியமை.

  உதாரணம்: புடைவை உற்பத்திக்குத் தேவையான பருத்தியையும் சிகரட் உற்பத்திக்குத் தேவையான புகையிலையையும் மட்டும் பயிர் செய்ய அனுமதி அளித்ததுடன், புடைவை உற்பத்தி, சிகரட் உற்பத்தி என்பனவற்றுக்குத் தடை விதித்தனர்.
- மூலப் பொருட்கள் அனைத்தையும் இங்கிலாந்தில் விற்க வேண்டுமென நிர்ப்பந்திருத்தல், அவைகளுக்கான விலை இங்கிலாந்தினாலேயே தீர்மானிக்கப்படல்.
- நாவாய்ச் சட்டம், சுங்க வரி என்பன மூலம் குடியேற்றங்களின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த பிரித்தானியர் நடவடிக்கை எடுத்தமை.
- சாதாரண கப்பல்களுக்கு இந்தச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.



சிகரட் உற்பத்திக்கான புகையிலை அமெரிக்காவில் பயிர்செய்யப்பட்டது.



புடவைகள் கைத்தொழிலுக்கான பருத்தி உற்பத்தி அமெரிக்காவில் பயிர்ச்செய்கையைக் காட்டும் சித்திரம்

## அமெரிக்க சுதந்திரப் போர்

- வட அமெரிக்காவில் அத்திலாந்திக் கரையோரப் பிரதேசத்தில் அமைந்த பிரித்தானியக் குடியேற்றங்கள் பதின்மூன்றும் இணைந்து பிரித்தானியப் பேரரசில் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே அமெரிக்க சுதந்திரப் போராகும். இது மெரிக்க சுதந்திரப் புரட்சி எனவும் அழைக்கப்படும்.
- வடக்கிலிருந்த பிரான்சியக் குடியேற்றங்களாலும் மேற்கில் செவ்விந்தியர்களாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல்களின்போது தாய்நாடான பிரித்தானியாவினது பாதுகாப்பு குடியேற்றவாசிகளுக்குத் தேவைப்பட்டமை.
- 1756 - 1763 வரை பிரித்தானியருக்கும் பிரான்சியருக்கும் இடையே நடைபெற்ற ஏழாண்டு யுத்தத்தில் பிரான்சியர் தோல்வியடைந்தமை.
- இதனால் வடக்கிலும் மேற்கிலிருந்தும் வந்த அச்சுறுத்தல்கள் முடிவுற்றதால் குடியேற்றவாசிகளுக்குத் தாய்நாட்டின் பாதுகாப்புத் தேவைப்படாமை.

## அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள்

- அமெரிக்கக் குடியேற்றங்களின் வர்த்தகப் பொருட்களைப் பிரித்தானியருக்கு மாத்திரமே விற்க வேண்டுமெனக் கூறியமை. மேலும் அப்பொருட்களுக்குப் பிரித்தானியா தான் விரும்பியவாறு விலையைத் தீர்மானித்தமை.
- வெளிநாட்டுப் பொருட்களை விலை கொடுத்து வாங்கும் பொழுதும், முதலில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான துறைமுகமொன்றுக்குக் கப்பல் கொண்டு செல்லப்பட்டு சுங்கவரி செலுத்திய பின்னர் குடியேற்றங்களுக்குக் கொண்ட செல்ல வேண்டுமென விதித்தல், இதனால் பொருட்களின் விலை அதிகமாகக் காணப்பட்டமை.
- பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குப் போட்டி ஏற்படும் எந்தப்பொருளும் குடியேற்றங்களில் உற்பத்தி செய்வதற்குத் தடை விதித்தமை.
  உதாரணம்: புடவை, சிகரட்
- ஏழாண்டுப் போரில் பிரித்தானியருக்கு அதிக செலவு ஏற்பட்டதன் விளைவாகப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை. அதனை ஈடு செய்வதற்காகப் பிரித்தானிய அரசாங்கம் குடியேற்றங்களிலிருந்து அதிக பணத்தைப் பெற்றுக்கொள்ள முயன்றமை.
  - நாவாய்ச்சட்டம் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படல்
  - புதிய வரிகள் விதித்தல்.

- வரிகளுக்குக் குடியேற்றவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்தமை.
- 1763 ஆம் ஆண்டின் பின்னர் பிரித்தானியப் பாராளுமன்றம் குடியேற்றங்களில் நிருவாகத்தை முறையாக முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கையை மேற்கொண்டமை.
- பாராளுமன்றத்தின் இந்தச் செயற்பாடு தமக்குத் தடையாக உள்ளது எனக்கூறிக் குடியேற்றவாசிகள் அதனை எதிர்த்தமை.
- பிரித்தானிய அரசாங்கம் அதுவரை கடுமையாகச் செயற்படுத்தாத வணிகச் சட்டங்களைக் கடுமையாகச் செயற்படுத்த முனைந்தமை.
- அமெரிக்காவுக்குப் போர்ப்படையை அனுப்பியமை.
- குடியேற்றவாசிகளை அடக்குவதற்குப் பிரித்தானிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியமை.
- மேற்கு எல்லையின் உட்புறமாக விரிவடைவதற்குக் குடியேற்றவாசிகளுக்குத் தடை விதித்தமை. குடியேற்றவாசிகள் மேற்கில் விரிவடைந்து சென்றால் செவ்விந்தியர்கள் கொதித்தெழுவார்கள் என்று எண்ணி இச்சட்டத்தை விதித்தமை.
- இச்சட்டம் (தடை) சிறு நில உரிமையாளர்களையும் கம்பனி உரோமம் விற்போர்களுக்கும் பாதகமாக இருந்ததால் அவர்கள் பிரித்தானியருடன் மனக்கசப்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

## அமெரிக்காவில் புதிய வரிகளை அறிமுகம் செய்தல்

- சீனிச் சட்டம் (1764) கரும்புச் சாறுக்கென ஒரு சட்டத்தை அமுல் செய்யத் தீர்மானித்தமை.
- சீனிச் சட்டத்தை மக்கள் எதிர்த்தமை.

- குடியேற்றங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரித்தானியப் படையினரின் பொருட்டுச் செலவாகும் தொகையைச் செலுத்துமாறு குடியேற்றங்களை வற்புறுத்தியமை.. இது அவர்களது அதிக கோபத்திற்குக் காரணமாகியது.
- 1765 ஆம் ஆண்டு முத்திரை வரியை விதித்தல் - உறுதி, பத்திரிகை, சட்டரீதியான ஆவணங்கள் என்பனவற்றுக்குப் பெருந்தொகையான பணத்தைக் குடியேற்றவாசிகள் செலுத்த நேர்ந்தமை.
- முத்திரை வரிக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தமை - எதிர்ப்பின் காரணமாக 1776 ஆம் ஆண்டு முத்திரை வரி நீக்கப்பட்டமை. குடியேற்றங்கள் மீது எந்த வரியையும் விதிக்கத் தமக்கு அதிகாரம் உண்டெனப் பிரித்தானியப் பாராளுமன்றம் கூறியமை.
- குடியேற்றங்களிலிருந்து வரி அறவிடுவதற்குப் பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு இருக்கும் அதிகாரம் பற்றிக் குறியேற்ற மக்கள் கேள்வி எழுப்புதல்.
- 'பிரநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை' என்ற கோஷத்துடன் குடியேற்றவாசிகள் பிரித்தானியருக்கு எதிராக செயற்படல்.

### டவுன்செண்ட் சட்டம் (1767)

- அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்படும் தேயிலை, தகரம், கடதாசி, சாய வகைகள் என்பனவற்றிற்குக் குடியேற்வாசிகளிடமிருந்து சுங்கவரி அறவிடப் பிரித்தானியப் பாராளுமன்றம் தீர்மானித்தல்.
- நியூயோர்க் குடியேற்றத்தின் சட்டசபையை நீக்குவதற்குத் தீர்மானித்தல்.
- இந்த சட்டங்களுக்கு எதிராக மக்கள் செயற்பட்டமை.
- பொஸ்டன், பிலடெல்பியா, நியூயோர்க் போன்ற நகரங்களின் வர்த்தகர்கள் பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரித்து ஆர்ப்பட்டம் செய்தல்.
- பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரித்துத் தேசியப் பொருட்களை உற்பத்தி செய்ய மக்கள் ஆர்வம் காட்டுதல்.
- மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கும் பொருட்டுத் தேயிலை வரி தவிர்ந்த ஏனைய வரிகளைப் பிரித்தானிய அரசாங்கம் நீக்குதல் (குடியேற்றங்கள் மீது வரி விதிக்கும் அதிகாரம் தமக்கு உண்டென்பதைக் காட்டும் பொருட்டுத் தேயிலை வரி நீக்கப்படவில்லை.)
- பிரித்தானிய அரசாங்கத்தின் இவ்வித செயல்களால் அவர்களது ஆட்சியிலிருந்து விடுதலை பெறக் குடியேற்றவாசிகள் தீர்மானித்தல்.
- சாமுவேல் அடம்ஸின் தலைமையில் பிரித்தானிய சுங்க அதிகாரிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதுடன் அந்த ஆர்ப்பாட்டம் கடுமையாகத் தடுக்கப்பட்டது.



பொஸ்டன் தேநீர் விருந்தைக் காட்டும் சித்திரம் (1773)

## பொஸ்டன் தேநீர் விருந்து (1773)

- தேயிலை வரிக்கு எதிராக அமெரிக்கக் கிளர்ச்சிக்காரர்களில் சிலர் பொஸ்டன் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலொன்றில் ஏறி, அதிலிருந்த தேயிலைப் பெட்டிகள் அனைத்தையும் கடலில் எறிந்தனர். ‘பொஸ்டன் தேநீர் விருந்து’ என இது அழைக்கப்படுகிறது.
- அமெரிக்க சுதந்திரப்போர் ஆரம்பிப்பதற்கு இது அண்மிய காரணமாக அமைந்தது.
- பொஸ்டன் சம்பவத்தைக் கேள்வியுற்றோர் ஏனைய துறைமுகங்களிலிருந்த தேயிலைப் பெட்டிகளுக்கும் இவ்வாறே செய்தனர்.
- பிரித்தானிய அரசாங்கம் பொஸ்டன் துறைமுகத்தை மூடியதுடன், பகிரங்கமாகக் கூட்டங்களையும் தடை செய்தது.
- மசாசுசெட் குடியேற்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த விசேட ஆணைப் பத்திரத்தை ரத்துச் செய்வதில் மேலதிக படையை மசாசுசெட் பிரதேசத்திற்கு அனுப்புதல்.
- குற்றவாளிகளின் வழக்குகள் பிரித்தானியாவில் விசாரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்படல்.
- பிரித்தானிய ஆட்சியாளரின் கடுமையான செயல்களுக்கு எதிராகக் குடியேற்றவாசிகள் செயற்பட முயன்றமை.

## முதலாவது கண்டதிட்ட மகாநாடு (1774)

- ஜோர்ஜியா தவிர்ந்த ஏனைய பன்னிரெண்டு குடியேற்றங்களினதும் பிரதிநிதிகள் இணைந்து பிரித்தானிய ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பிலடெல்பியாவில் மகாநாடு ஒன்றை நடத்தியமை. இது முதலாவது கண்டத்திற்கான மகாநாடு எனப்படும்.
- ஜோர்ஜ் வோஷிங்டன், ஜோன் அடம்ஸ், சாமுவேல் அடெம்ஸ், ஜோன் ஜே என்போர் அதில் தலைமை வகித்தமை.
- கண்டத்திற்கான அமைப்பு எனும் அமைப்பினை நிறுவுதல்.
- குடியேற்றவாசிகள் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நீக்குமாறு மூன்றாம் ஜோர்ஜ் மன்னனுக்குக் கடிதமொன்றை அனுப்புதல்.
- பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரித்தல்.
- மக்களின் உரிமை தொடர்பான பிரகடனம் ஒன்றை அங்கீகரித்துக் கொள்ளல்.
- கண்டத்திற்கான மகாநாட்டின் தீர்மானத்திற்கமைய குடியேற்றவாசிகள் போருக்குத் தயாராதல்.
- ஜோர்ஸ் வோஷிங்டனைத் தலைவராக நியமித்தமை.
- பிர்ததானியப் படைக்கும் குடியேற்றவாசிகளுக்குமிடையே 1775 ஆம் ஆண்டு லெக்சின்டன் எனும் இடத்தில் முதன்முதலாகப் போர் ஆரம்பித்தல்.
- பிரித்தானியப் படையினரால் குடியேற்றவாசிகள் தோற்கடிக்கப்பட்டு அவர்கள் சேர்த்து வைத்திருந்த ஆயுதங்கள் அழிக்கப்படல்.
- பிரித்தானியப் படையின் முரட்டுதனமான இச்செயல் தொடர்பான செய்திகள் பரவியதும் போர் ஆரம்பமாகுதல்.
- 1775 ஆம் ஆண்டு அனைத்துக் குடியேற்றங்களினதும் பிரதிநிதிகள் இணைந்து சங்கமொன்றைக் கூட்டிப் பணம் அச்சிடுவதற்கும் ஜோர்ஜ் வோஷிங்டனின் தலைமையில் போர்ப் படையொன்றை அமைப்பதற்குத் தீர்மானித்தல்.

## 1776 ஆம் ஆண்டு சுதந்திரப் பிரகடனம்

- இரண்டாவது கண்டத்திற்கான மகாநாட்டில் ஜோர்ஜியா தவிர்ந்த ஏனைய பன்னிரெண்டு குடியேற்றங்களதும் தலைவர்கள் யுத்தத்திற்கு அனுசரணை வழங்குதல்.
- அவ்வாறே பிரித்தானியப் பேரரசில் இருந்து விடுதலை பெறத்தீர்மானித்தல்.
- 1776 ஜுலை மாதம் 4 ஆந் திகதி தோமஸ் ஜெபர்சனின் தலைமையில் அமெரிக்கர் ‘சுதந்திரப் பிரகடனம்’ ஒன்றை வெளியிடுதல்.
  - இதில் அமெரிக்கர் சுதந்திர மக்கள் என ஏற்றுக்கொள்ளுதல் ஆரம்பமாதல்.
  - ஜோர்ஜ் வோஷிங்டனின் தலைமையில் போர் ஆரம்பமாதல்.
  - ஏழாண்டுப் போரில் தோலிவியடைந்ததால் பிரித்தானியரைப் பழிவாங்கத் தயாராக இருந்த பிரான்ஸ் குடியேற்றவாசிகளுக்கு உதவுதல் (1778)
  - பிரான்சிலிருந்து பண உதவி, படை உதவி, கப்பல்கள் என்பன கிடைத்தால் குடியேற்றவாசிகள் வலிமை பெறல்.

- ஒல்லாந்து, ஸ்பானியா என்பன பிரான்சின் நண்பர்களானதால் பிரித்தானியருக்கு எதிரகாப் போரில் பங்கேற்றல்.
- ரஷ்யா, டென்மார்க், சுவீடன் என்பனவற்றுடனான ஆயுதங்களுடன்கூடிய நடுநிலைச் சங்கமும் பிரித்தானியாவுக்கு எதிராகச் செயற்படல்.
- தொடர்பாடல் முறைகளின் குறைபாடு, பிரித்தானியாவிலிருந்து யுத்தக்களம் அதிக தூரத்தில் இருந்தமை, போருக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஆகிய காரணத்தால் பிரித்தானியப்படை பலவீனமடைதல்.
- போரில் தோல்வியுற்ற பிரித்தானியர் 1783 ஆம் ஆண்டு குடியேற்ற வாசிகளுடன் பாரிஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் போர் முடிவுக்கு வரல்.

- 1783 ஆம் ஆண்டு பிரித்தானியப் பேரரசில் இருந்து விலகி ஜோர்ஜ் வோஷிங்டனின் தலைமையில் ஐக்கிய அமெரிக்கக் குடியேற்றத்தை நிறுவிக் கொண்டமை.

## குடியேற்றவாசிகளின் வெற்றிக்கான காரணங்கள்

- அமரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான தூரம் அதிகமாக இருந்தமை.
- அமெரிக்காவின் புவியியல் அமைப்புத் தொடர்பாகப் பிரித்தானியப்படை அறிந்திராமை.
- குடியேற்றவாசிகள் கெரில்லாப் போரில் சிறந்து விளங்கியதுடன் அமெரிக்கப் படையால் அதற்கு ஈடுகொடுக்க முடியாமை.
- ஜோர்ஜ் வொஷிங்டனின் திறமையான தலைமைத்துவம், இதற்குச் சமமான ஒரு தளபதியேனும் பிரித்தானியப் படையில் இன்மை.
- பிரான்ஸ், ஸ்பானியா, ஒல்லாந்து ஆகிய நாடுகள் பிரித்தானியாவுக்கு எதிராகக் குடியேற்றங்களுக்கு உதவியமை.
- ரஷ்யா, சுவீடன், டென்மார்க், பிரஷ்யா போன்ற ஐரோப்பிய நாடுகளும் இங்கிலாந்துக்கு எதிராக நடுநிலை அணியொன்றை நிறுவியமை.
- பிரித்தானியப் பேரரசின் ஏனைய பிரதேசங்களிலும் பிரித்தானியருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஆரம்பமாதல்.
  உதாரணம்: அயர்லாந்து, இந்தியா
- பிரித்தானியாவிலேயே பிரித்தானியரது செயல்களை விரும்பாத குடியேற்றவாசிகளுக்குச் சாதகமாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் இருந்தமை.

## சுதந்திரம் பெறுதலும் புதிய அரசியல் அமைப்பை அங்கீகரித்தலும்

- 1783 ஆம் ஆண்டு பிரித்தானியா குடியேற்றங்களின் சுதந்திரத்தை சட்டரீதியாக ஏற்றுப் பாரிஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை.
- கனடாவின் தென் எல்லையில் இருந்து மெக்சிக்கோ குடா வரையிலும் அத்திலாந்திக் சமுத்திரத்தில் இருந்து மிசிசிப்பி நதி வரைக்கும் பரந்த நிலப்பிரதேசம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனப்படும்.
- 1787 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற அமெரிக்கர், பிலடெல்பியா மகாநாட்டில் புதிய அரசியல் யாப்பைத் தயாரித்தமை.
- முடியாட்சி முறைக்குப் பதிலாகக் கூட்டாட்சி முறையைத் தெரிவு செய்து ஜனநாயக ஆட்சியைக் கட்டியெழுப்பியமை.
- அமெரிக்க சுதந்திரப்போர் நவீன உலகில் நடைபெற்ற முதலாவது தேசியவாத, ஜனநாயகப் புரட்சி என உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றமை.
- தற்கால உலகில் பலம்வாயந்த நாடாக விளங்கும் ஐக்கிய அமெரிக்கா தோற்றம் பெறுதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

(1) X உடன் Y ஐ இணைத்து சரியான விடையைத் தெரிவு செய்க.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | போர்த்துக்கல் | (A) | குவிபெக் |
| (ii) | ஸ்பானியா | (B) | ஹட்சன் குடா |
| (iii) | இங்கிலாந்து | (C) | மெக்சிக்கோ |
| (iv) | பிரான்ஸ் | (D) | பிரேசில் |
| (iv) | ஒல்லாந்து | (E) | பென்சில்வேனியா |

(1) BDCEA (2) ABDCE (3) EABDC (4) DCEAB (5) CEABD

(...............)

• **பின்வரும் பெயர்களில் பொருத்தமற்ற பெயரைத் தெரிவு செய்க.**

(2) A. ஜோர்ஜ் வோஷிங்டன் B. ஜோன் அடம்ஸ் C. தோமஸ் ஜெபர்சன்
D. ஜோர்ஜ் கிரன்வில் E. சாமுவேல் அடம்ஸ்

(...............)

(3) A. லெக்சின்டன் B. லங்காஷயர் C. கொன்கோட்
D. பொஸ்டன் E. பிலடெல்பியா

(...............)

(4) அமெரிக்க சுதந்திரப்போரின் விளைவுகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.

1. பிரான்சியப் புரட்சிக்கு முன்னோடியாக விளங்குதல்.
2. ஆங்கிலப்புரட்சி அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவாகும்.
3. அமெரிக்க ஐக்கிய நாடு எனும் பெயரில் புதிய அரசொன்று தோற்றம் பெற்றமை.
4. பிரித்தானிய குடியேற்ற நாடுகள் சுதந்திரம் அடைவதற்கு வழிகாட்டியாய் அமைந்தமை.
5. முடியாட்சி முறைக்குப் பதிலாக அமெரிக்காவில் கூட்டாட்சிமுறை தோற்றம் பெறல்.

(...............)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களைத் தெளிவுபடுத்தி, அப்போரின் முக்கியத்துவத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

02. ''அமெரிக்க சுதந்திரப் போர் அமெரிக்காவில் மட்டுமன்றி, ஐரோப்பாவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.''
    (i) அமெரிக்க சுதந்திரப் போரின் தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
    (ii) அமெரிக்க சுதந்திரப் போரின் பிரதான தொனிப்பொருள் என்ன? (01 புள்ளி)
    (iii) வட அமெரிக்காவில் இருந்த குடியேற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
    (iv) அமெரிக்க சுதந்திரப் போருக்கு வழிவகுத்த பொருளாதார, அரசியல் காரணிகளைச் சுருக்கமாக முன்வைக்குக. (04 புள்ளிகள்)
    (v) அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகளின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட கூற்றினைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

03. ''அமெரிக்க சுதந்திரப் போருக்கு அரசியல், பொருளாதாரம் காரணங்களாகின.''
    (i) இங்கிலாந்து மன்னனின் அனுசரணையுடன் 1497 ஆம் ஆண்டு நியூபவுண்லாந்துக்கு வந்த யாத்திரிகன் யார்? (01 புள்ளி)
    (ii) இங்கிலாந்து மக்கள் வட அமெரிக்காவில் குடியேற வழிவகுத்த காரணங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளி)
    (iii) வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் மூன்றின் பெயரைத் தருக. (03 புள்ளிகள்)
    (iv) ஆங்கில அரசாங்கத்தால் வட அமெரிக்காவில் பின்பற்றப்பட்ட குடியேற்றவாத கொள்கையில் கவனம் செலுத்தி மேற்கூறப்பட்ட கூற்றினை விமர்சன ரீதியாக முன்வைக்குக. (04 புள்ளிகள்)
    (v) அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகளின்அடிப்படையில் மேற்கூறப்பட்ட கூற்றினைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

04. (i) அமெரிக்க சுதந்திரப்போர் ஏற்படுவதற்கு வழிவகுத்த பிரதான காரணங்களைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)
    (ii) அமெரிக்கரின் வெற்றியில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

05. உலகப்படத்தில் ஐரோப்பிய இனத்தவர் அமெரிக்காவில் நிறுவிய குடியேற்றங்களைக் குறித்துப் பெயரிடுக. (14 புள்ளிகள்)

**தேர்ச்சி மட்டம்** : 3.3 மனித உரிமைகளைக் காப்பதில் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டிப் பிரான்சியப் புரட்சியைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற்பேறுகள்** :
- பிரான்சியப் புரட்சி ஏற்படுதவற்கான காரணங்களைப் பகுத்தாய்வார்.
- பிரான்சியப் புரட்சியின் மூலம் வெற்றிகொண்ட அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக் காட்டுவார்.
- மனித உரிமைகளைப் பாதுகாத்தல் நவீன உலகம் பெற்றுக்கொண்ட எண்ணக்கரு என்பதனைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பிரான்சியப் புரட்சி

### அரசியல் காரணங்கள்
- நாட்டின் அனைத்து அதிகாரங்களும் மன்னனிடம் குவிந்து காணப்படல்.
- ஆட்சியாளர்கள் விளைத்திறன் அற்றவர்களாக இருந்தமை.
  உதாரணம்: பதினைந்தாம் லூயி மன்னன், 16 ஆம் லூயி மன்னன்
- தேவையற்ற போர்களில் ஈடுபட்டமை
  உதாரணம்:
  - பதினான்காம் லூயி மன்னன் ஸ்பானிய அரசுரிமைப் போரில் ஈடுபட்டமை
  - இங்கிலாந்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்
  - பதினைந்தாம் லூயி ஏழாண்டுப் போரிலும், அமெரிக்க சுதந்திரப் போரிலும் ஈடுபட்டமை
- 16 ஆம் லூயி மன்னனின் தூரநோக்கற்ற செயல்கள்
  உதாரணம்:
  - வர்கோ, நெக்கர் போன்ற திறமையான அமைச்சர்களை நீக்கிவிட்டு, பிரபுக்களின் வேண்டுகோளுக்கு அமையத் திறமையற்ற அமைச்சர்களை நியமித்தமை.
  - தனது மனைவியான மாரி அன்டொயினட்டின் அறிவுரைப்படி செயற்பட்டமை.
- முடியரசு பலவீனமடைதல்
- லெத்ரேதி கெச்சே எனும் பிடியாணை முறை
- ஸ்டேட் ஜெனரல் எனும் பாராளுமன்றம் கூட்டப்படாமை

### பொருளாதாரக் காரணங்கள்
- பொதுமக்களால் சுமக்க முடியாத விதத்தில் வரிகளை விதித்தமை
- பிரபுக்கள் வரி செலுத்தாமல் பல சலுகைகளை அனுபவித்தமை
- நடுத்தர வகுப்பினரின் முன்னேற்றத்துக்கு இருந்த தடைகள்
- வரிக்கொள்கையின் சீரற்றதன்மை
- நில அடைப்பினால் ஏற்பட்ட விளைவுகள்
- அதிகரித்த செலவால் திறைசேரி வெறுமையாகியமை
- அரச குடும்பத்தின் ஆடம்பரச் செலவுக்கு நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி செலவிடப்படல்
- ஈடன் வர்த்தக ஒப்பந்தமும் அதன் விளைவுகளும்

### சமூகக் காரணங்கள்
- பொதுமக்கள் முகங்கொடுத்த இன்னல்கள்
- பிறப்பின் அடிப்படையில் சமூக நிலைமைகள் தீர்மானிக்கப்படலும் வகுப்பு வேறுபாடுகளும்
- பிரபுக்கள் மட்டும் அனைத்துச் சலுகையையும் பெற்றமை



அரசனின் படுக்கையறை (தங்கமுலாம் பூசப்பட்டது)



வேர்ல்ஸேல்ஸ் மாளிகை

### வெளிக் காரணங்கள்
- தத்துவ ஞானிகளின் தாக்கம் (ஹொப்ஸ், லொக், ரூசோ, வோல்டேயர், மொன்டஸ்கியு போன்றோர்)
- ஏழாண்டுப் போரும் அமெரிக்க சுதந்திரப் போரும்
- பிரான்ஸின் காலநிலை (அதிக குளிர், கோடை, பஞ்சம்)

### பிரான்சியப் புரட்சியின் தோற்றமும் பரவலும்
- பிரான்ஸ் முழுவதும் அமைதியற்ற நிலை ஏற்பட்டதால் பிரபுக்களின் வேண்டுகோளுக்கு அமைய 16 ஆம் லூயி மன்னன் ஸ்டேட் ஜெனரல் சபையைக் கூட்டுதல்.
- டெனிஸ் மைதான உறுதி மொழியும், தேசிய சபை செயற்பட்டமையும்
- நடுத்தர வகுப்பினரும் பிரான்சியப் புரட்சியில் தலைமைத்துவம் வகித்தல்.
- பஸ்டில் சிறைக்கூடத்தைத் தாக்கியதுடன் புரட்சி ஆரம்பமாகியமை. புரட்சி வன்முறை தோற்றத்தைப் பெறல். (14.07.1789)
- பிரபுக்களின் சலுகைகள் நீக்கப்படல்.
- கி.பி. 1791 ஆம் ஆண்டு 16 ஆம் லூயி மன்னன் தப்பிச் செல்லுதலும் ஆஸ்திரியாவின் உதவியை நாடுதலும்.

### பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்கள்
- பிரான்சிய கூட்டரசாங்கத்தின் தோற்றம் (1792)
- 16 ஆம் லூயி மன்னனும் மாரி அன்டனட் அரசியும் கொலை செய்யப்படல் (1793)
- பிரான்சிய கூட்டரசாங்கத்திற்கு எதிராக யுத்தம் ஏற்படல் (இங்கிலாந்து, ஸ்பானியா, ஆஸ்திரியா)




கிளடீன்


### பயங்கர ஆட்சியின் ஆரம்பம் (1793-1795)
- டென்டன், மரட், ரொபெஸ்பியர் போன்றோர் ஜெகோபியன் கட்சியினரின் கையில் அதிகாரம் வந்தமை
- சிறிது காலம் ஆட்சியிலிருந்து ஜிரொன்டின் தலைவர்கள் ஜக்கோபினரால் கொலை செய்யப்படல்
- ஜக்கோபின்களிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியமையும் ஒருவர் ஒருவரைக் கொலை செய்தமையும் ரொபெஸ்பியரால் டென்டன் கொலை செய்யப்பட்டமை
- பயங்கர ஆட்சியின் முடிவும் தர்மிடோரியன் எதிர்புரட்சியும் (ஜாக்கோமின்களின் பயங்கர ஆட்சியை முறியடிக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட இயக்கம் தர்மிடோரியன் எதிர்ப்புப்புரட்சி எனப்பட்டது.)
- அதிகார சபை ஆட்சியைப் பொறுப்பேற்றல். (1795 ஒக்டோபர்)
- கொன்சல் முறை ஆரம்பிக்கப்பட்டமை
- நெப்போலியன் கொனபார்ட் அதிகாரத்தைப் பொறுப்பேற்றல்.



நெப்போலியன் பொனபார்ட்



16 ஆம் லூயி மன்னனை கிளடீனில் வைத்து கொலை செய்யப்பட்டதை சித்தரிக்கும் சித்திரம்



மேரி அன்டோய்னட் அரசி கிளடீனில் வைத்து கொலை செய்யப்பட்டதை சித்தரிக்கும் சித்திரம்

### பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

- கி.பி. 1791 ஆம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்படல்
- மானியமுறைப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்று முதலாளித்துவப் பொருளாதார முறை தோன்றுதல்.
- மத்திய வகுப்பினரின் தலைமைத்துவத்தின் கீழ் பலம் வாய்ந்த அரசாங்கம் ஒன்று அமைக்கப்படல்.
- மத்திய வகுப்பினருக்கு அரசியல் உரிமைகள் கிடைத்தல்.
- பிரபுக்களும் குருமாரும் தங்களது நிலங்களை இழந்தமை.
- பிரபுக்களிடமும் குருமாரிடமும் இருந்த நிலங்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதால் பிரான்சில் சிறிய நிலத்தையுடைய விவசாய வகுப்பு ஒன்று தோன்றியமை.
- சமமான வரிமுறை ஏற்படுத்தப்பட்டமை.
- ‘சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம்’ என்ற கருத்து ஐரோப்பா முழுவதும் பரவியமை.

### பிரான்சியப் புரட்சியின் முக்கியத்துவம்

- ஐரோப்பா மத்தியகால மானிமுறையில் இருந்து நவீன முறைக்கு வருதல்.
- பிரான்ஸ் சர்வாதிகார முடியாட்சி முறையிலிருந்து ஜனநாயக ஆட்சிமுறை வரையில் மாற்றமடைதல்.
- பிரான்சிய மக்கள் எதிர்பார்த்த சுதந்திரம், சமத்துவம் முதலான அடிப்படை மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்படல்.
- அடிப்படை உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட லிபரல்வாதம், தேசிய வாதம் போன்ற வற்றை உரிமையாக்கிக் கொள்ளும் பொருட்டு ஐரோப்பா முழுவதும் பல புரட்சிகள் ஏற்பட்டமை.
- இதனை அடிப்படையாகக் கொண்டு இத்தாலி ஐக்கியம் அடைந்தமை, ஜேர்மனி ஐக்கியமடைதல் என்பனவற்றின் மூலம் ஐரோப்பாவில் தேசியவாதம் பரவலடைதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. லபாயட் 2. நெக்கர் 3. மெரட் 4. டென்டன் 5. மிராபோ (...............)

(2) 1. மொன்டெஸ்கியூ 2. வோல்டேயர் 3. ரூசோ 4. ஜோன்லொக் 5. மக்கிய வலி (...............)

(3) 1. நெக்கர் 2. டெர்கோ 3. ரிச்லியு 4. கெலொக் 5. பிரயன் (...............)

(4) 1. 14ஆம் லூயி 2. 8ஆம் ஹென்ரி 3. ரிச்சலியு 4. மசாரின் 5. நெக்கர் (...............)

(5) 1. கரிபால்டி 2. மெரட் 3. ரொபெஸ் பியர் 4. டென்டன் 5. மிராபோ (...............)

- **பின்வரும் தலைப்புக்கள் ஒவ்வொன்றின் கீழும் ஐந்து விடயங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் ஒரு விடயம் தலைப்புக்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(6) பிரான்சியப் புரட்சி
1. பதினான்காம் லூயி மன்னனின் காலத்தில் ஆரம்பமாகியது.
2. மன்னனின் நிதி அமைச்சராக இருந்த நெக்கர் பல வரி சீர்திருத்தங்களை முன்வைத்தார்.
3. பிரான்சின் திறைசேரி வெறுமையானதே பிரான்சியப் புரட்சிக்கு அண்மிய காரணமாகும்.
4. 1789 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆந் திகதி பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை பிரான்சியப் புரட்சியின் முக்கிய நிகழ்வாகும்.
5. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன பிரான்சியப் புரட்சியின் தாரக மத்திரமாகும்.

(...............)

(7) பிரான்சியப் புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள்
1. தேசிய பொதுச்சபை நிறுவப்பட்டமை
2. கூட்டாட்சி நிறுவப்பட்டமை
3. பதின்மூன்றாம் லூயி மன்னனின் கீழ் பிரான்சின் முடியாட்சி மீளமைக்கப்பட்டமை
4. பயங்கர ஆட்சி
5. அதிகாரசபை ஆட்சிக்கு வருதல்

(...............)

(8) பிரான்சியப் புரட்சி
1. பழைய முடியாட்சி முறையின் பலவீனம் பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்களில் ஒன்றாகும்.
2. மொன்டெஸ்கியூ பிரான்சியப் புரட்சிக்கு உதவிய தத்துவஞானியாவார்.
3. 1789 ஆம் ஆண்டு மே மாதம் ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டது.
4. 1789 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டது.
5. 1793 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் லூயி மன்னன் முடி சூடினான்.

(...............)

(9) பிரான்சியப் புரட்சி
1. ஸ்டேட் ஜெனரால் கூட்டப்பட்டமை
2. பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை
3. 16 ஆம் லூயி மன்னன் சிரச்சேதம் செய்யப்பட்டமை
4. 18 ஆம் லூயி மன்னன் அரசனானமை
5. பயங்கர ஆட்சி

(...............)

(10) பிரான்சியப் புரட்சி
1. டெனிஸ் மைதான உறுதியுரை பிரான்சியப் புரட்சியின் ஆரம்ப அடையாளமாகும்.
2. பதினேழாம் லூயி மன்னன் சட்டரீதியான மன்னாக முடிசூட்டப்பட்டான்.
3. மாரி அன்டொயினட் சிரச்சேதம் செய்யப்பட்டாள்.
4. தேசிய சபையினால் மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டது.
5. பிரான்சியப் புரட்சியினால் மத்திய வகுப்பினரின் அபிப்பிராயங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

(...............)

- **பின்வரும் வினாக்களுக்கான A, B, C, D எனும் விடைகளில் ஒன்றோ, பலவோ சரியானதாகும். சரியான விடையைத் தெரிந்து A யும் B யும் சரியாயின் (1) எனவும், B யும் C யும் சரியாயின் (2) எனவும், C யும் D யும் சரியாயின் (3) எனவும், A யும் D யும் சரியாயின் (4) எனவும், ஒரு விடை அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் (5) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) பிரான்சியப் புரட்சி தொடர்பான சரியான விடை / விடைகள்
A. பிரான்சியப் புரட்சியின் முக்கிய தாரக மந்திரம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதாகும்.
B. பிரான்சியப் புரட்சியின் மூலம் பிரபுக்களின் சலுகை உறுதி செய்யப்பட்டது.
C. ரொபெஸ்பியரின் தலைமையில் பிரான்சில் கூட்டாட்சி நிறுவப்பட்டது.
D. பிரான்சியப் புரட்சி மத்திய வகுப்பினரின் புரட்சி எனக் கருதப்படுகிறது.

(...............)

(2) பின்வருவோரில் பிரான்சியப் போரில் பங்குபற்றியோர் யாவர்?
A. லபாயெட் B. ரொபெஸ்பியர் C. ரிச்லியு D. லுயி நெப்போலியன்

(...............)

(3) பின்வருவனவற்றில் பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் எவை?
A. மானிய முறை வீழ்ச்சியுற்றமை.
B. மத்திய வகுப்பினர் அரசியல் உரிமை பெற்றமை
C. முடியாட்சி வலுவடைந்தமை
D. நெப்போலியன் மொனபாட் ஆட்சிக்கு வந்தமை

(...............)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் அனைத்துப் பிரிவினரும் பிரான்சியப் புரட்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்களின் பங்களிப்பினை விபரிக்குக.
(i) மன்னர்கள் (ii) பிரபுக்கள் (iii) மத்திய வகுப்பினர் (iv) சாதாரண மக்கள்
(14 புள்ளிகள்)

02. ‘பிரான்சியப் புரட்சி மத்திய வகுப்பினராலேயே ஆரம்பிக்கப்பட்டது.”
(i) பிரான்சியப்புரட்சி ஏற்படுவதற்கு அண்மிய காரணம் என்ன?
(02 புள்ளிகள்)
(ii) பிரான்சில் மத்திய வகுப்பினர் முகங்கொடுத்த இன்னல்கள் யாவை?
(04 புள்ளிகள்)
(iii) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களில் அவதானம் செலுத்தி, புரட்சியினை ஆரம்பிப்பதில் மத்திய வகுப்பினர் ஆற்றிய பணியை விமர்சன ரீதியில் விளக்குக.
(08 புள்ளிகள்)

03. (i) 18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் நிலவிய பழைய முடியாட்சி முறையின் பிரதான இயல்புகள் யாவை?
(07 புள்ளிகள்)
(ii) 1789 ஆம் புரட்சியின் ஆரம்பத்தையும் அதன் விளைவுகளையும் பரிசீலிக்குக.
(07 புள்ளிகள்)

04. பிரான்சியப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளை விளக்குக.
(14 புள்ளிகள்)

05. ‘‘பிரான்சியப் புரட்சி பிரபுக்கள் வகுப்பினராலேயே தோற்றுவிக்கப்பட்டது.” இதனை விமர்சன ரீதியாக முன்வைக்குக.
(14 புள்ளிகள்)

06. ‘பிரான்சியப் புரட்சி தற்போதைய ஐரோப்பாவைத் தோற்றுவித்த மிக முக்கிய நிகழ்வாகும்.”
(i) பிரான்சியப்புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுத்த அண்மிய காரணம் என்ன?
(01 புள்ளி
(ii) புரட்சிக்கு முன்னர் பிரான்சில் நிலவிய சமூகக் கட்டமைப்பைத் தெளிவுபடுத்துக.
(02 புள்ளிகள்)
(iii) பிரான்சியப் புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள் யாவை?
(03 புள்ளிகள்)
(iv) பிரான்சியப் புரட்சியில் அவதானம் செலுத்தி அது பிரான்ஸ் தொடர்பாக மட்டுமன்றி ஐரோப்பாவின் ஏனைய நாடுகள் மீதும் செல்வாக்குச் செலுத்திய விதத்தை பரிசீலிக்குக.
(08 புள்ளிகள்)

# கைத்தொழில் புரட்சி

## அறிமுகம்

மனிதன் தன் கைகளினால் சிறிய அளவில் தமது தேவைக்கெனப் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தமைக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்திப் பாரிய அளவில் விநியோகத்தின் பொருட்டுப் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தமையால் ஏற்பட்ட பாரிய மாற்றமே கைத்தொழிற் புரட்சி எனப்படும். கைத்தொழிற் புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார சமூக, அரசியல், பண்பாடு என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் ஐரோப்பாவிலும் பின்னர் ஏனைய கண்டங்களிலும் செலுத்திய தாக்கத்தினை விளங்கிக்கொள்வதே இந்த அலகின் முக்கிய நோக்கமாகும்.

**தேர்ச்சி 4.0** : • நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திட வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 உலகின் போக்கை மாற்றியமைப்பதில் கைத்தொழிற்புரட்சி தாக்கம் செலுத்திய விதம் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :

- கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணியையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் பகுத்தாய்வார்.
- கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளைத் தெளிவுபடுத்துவார்.
- கைத்தொழிற் புரட்சியின் பரவலைப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுவார்.
- நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.
- தைக்தொழிற் புரட்சியை அறிமுகப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

- **கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பம்**
  - தேசிய அரசுகளின் ஆட்சியாளர்கள் பின்பற்றிய கொள்கைகள் கைத்தொழிற் புரட்சிக்குத் தேவையான பின்னணியை அமைத்தல்.
  - 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இங்கிலாந்தின் வர்த்தகம் விரிவடைந்தமை கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த விதத்தை எடுத்துக்காட்டுவார்.
  - கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்குக் குடித்தொகை அதிகரிப்பு முக்கிய காரணமாதல்.

- **இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்**
  - இங்கிலாந்தில் மானியமுறை வீழச்சியுற்றமையும் அரசியல் நிலைப்பாடும்.
  - பொருட்களின் கேள்விக்கேற்ப வழங்கலை மேற்கொள்ள உற்பத்தி முறை போதாமை.
  - நாட்டில் இயற்கை வளங்கள் மிகுதியாகக் காணப்படாமை.
  - வளவாளர்கள் இருந்ததுடன் அவர்களுக்கு அனுசரணை வழங்குவதற்குச் செல்வந்த வகுப்பினரும் இருந்தமை.

- புவியியல் ரீதியாக நாடு சிறிதாக இருந்தமை, தீவாக இருந்தமை, உள்நாட்டில் வளர்ச்சியடைந்த போக்குவரத்து இருந்தமை.
- வேலியடைப்பினால் மக்கள் வேலை தேடி நகரங்களுக்கு வந்தமை.
  இதனால் மனித உழைப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை.
- வளர்ச்சியடைந்த வங்கிகள் காணப்பட்டமை.
- இங்கிலாந்து அரசாங்கம் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள்.
- மூலப்பொருட்களைப் பெறவும், முடிவுப் பொருட்களை விற்கவும் கூடிய குடியேற்ற நாடுகளைக் கொண்ட பேரரசாக இங்கிலாந்து விளங்கியமை.
- இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி மூன்று முக்கிய கைத்தொழில்களின் அடிப்படையில் நடைபெற்றது.

- **புடவைக் கைத்தொழில்**

குடிசைக் கைத்தொழிலாக விளங்கிய புடவைக் கைத்தொழில், இயந்திரம், நீராவி மற்றும் எரிபொருள் வகைகள் என்பனவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றமடைந்ததைக் கைத்தொழில் புரட்சியின்போது காணக்கூடியதாக இருந்தது. அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பல்வேறு இடர்களை வெற்றி கொள்ளும் பொருட்டுப் புதிய கண்டுபிடிப்புக்கள் பல தோற்றம் பெற்றன.

- ஜோன் கே - பறக்கும் தறி ஓடம்/நூணாழி
- ஜேம்ஸ் ஹக்ரிவுஸ் - நூற்கும் ஜெனி (ஸ்பின்னிங் ஜெனி)
- ரிச்சர்ட் ஆக்ரைட் - நீர்ச் சட்டம்
- சாமுவேல் கொம்ப்டன் - மியுல் இயந்திரம்
- எலீ விடினி - பஞ்சிலிருந்து விதையை அகற்றும் இயந்திரம்
- எலியஸ் ஹாவே - தையல் இயந்திரம்
- எட்மன்ட் காட்ரைட் - வலுவால் இயங்கும் இயந்திரத் தறி

- **இரும்புக்குக் கைத்தொழில்**

இங்கிலாந்தின் கைத்தொழில் புரட்சியைத் துரிதப்படுத்துவதில் இரும்புருக்குக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது, அதன் பொருட்டுப் புதிய இயந்திரங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன.

- ஏப்ரஹாம் டர்பி - 1709 நிலக்கரியைக் கொண்டு இரும்புத்தாதினை உருக்கி வார்ப்பு இரும்பினை உற்பத்தி செய்தல்.
- ஹென்ரி கோட் - 1784 ரோலர் இயந்திரம்
- ஹென்ரி பெஸ்மர் - 1856 எளிதாக இரும்பினை உற்பத்தி செய்யும் முறை
- விலியம் சீமன்ஸ், எமலி ஜெரி மாட்டின் தம்பதிகள் - 1860 திறந்த உலை முறை
- விலியம் சீமன்ஸ் - 1878 மின்சார உலை

- **நிலக்கரிக் கைத்தொழில்**


இயந்திரங்களை இயங்க வைப்பதற்கு எரிபொருளாக நிலக்கரியைப் பயன்படுத்தியமை கைத்தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

- தோமஸ் நில்கொமன் - நீராவி இயந்திரம்
- ஜேம்ஸ் வோட் - நீராவி இயந்திரத்தை மேலும் முன்னேற்றல்
- ஹிம்ரி டேவி - பாதுகாப்பு விளக்கு

- **கைத்தொழிற் புரட்சி பரவிய ஏனைய துறைகள்**

**விவசாயம்**

- வேலியடைப்பால் பாரிய விவசாய நிலங்கள் உருவானமை
- விவசாயத்திற்கு இயந்திரங்களைப் பயன்படுத்தியமை.
- விவசாயப் பொருட்களை மாற்றும் முறை
- புதிய பயிரிடும் முறை (வரிசையாக விதைக்கும் முறை)
- புதிய பசளைகள்



நீராவி இயந்திரம்



பாதுகாப்பு விளக்கு

**போக்குவரத்து**

- ரொபட் புல்டன் - 1807 புகை வள்ளம்
- ஜோன் மெக்கடம் - 1811 மெக்கடம் முறை (பாதை அமைப்பு)
- ஹென்ரி பெல் - 1811 புகைக்கப்பல்
- ஜோர்ஜ் ஸ்டீவன்சன் - புகைவண்டி
- டெம்லர் - 1885 மோட்டார் வண்டி
- ரைட் சகோதரர்கள் - 1903 விமானம்

**தொடர்பு சாதனங்கள்**

- 1840 - இங்கிலாந்தில் பெனீ தபால் சேவை
- 1844 - சாமுவேல் மோஸ் - தந்தி முறை
- 1866 - சைரஸ் டபிளியு பீல்ட் - கேபல் முறை
- 1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் - தொலைபேசி
- 1899 - ஜோன் லொகி பெயாட் - தொலைக்காட்சி

- **கைத்தொழிற் புரட்சியின் பரவல்**

18 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற கைத்தொழிற் புரட்சி விரைவில் ஐரோப்பா முழுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பரவியது. அதன் பின்னர் யப்பான் உட்பட ஆசியாக் கண்டத்திலும் ஏனைய நாடுகளிலும் தென்னமெரிக்கா, ஆபிரிக்கா கண்டம் என்பனவற்றிலும் பரவியது.

- **கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்**
    - குடிசைக் கைத்தொழில் மறைந்து பாரிய கைத்தொழில்கள் தோற்றம் பெற்றமை.
    - விவசாயத்தில் தங்கியிருந்த பொருளாதாரம் கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டமை.
        - பணப் புழக்கத்துடனான பாரிய வர்த்த அமைப்புக்கள் உருவானமை.
        - முதலாளித்துவ முறை தோற்றம் பெற்றமை.
        - புதிய பேரரசுவாதத்திற்கு வழி ஏற்பட்டமை.

**சமூகம்**

- செல்வத்தை முதலீடு செய்த செல்வந்தரும் தமது உழைப்பை விற்று வாழ்ந்த ஏழைகளும் என்று சமுதாயத்தில் இரு பிரிவினர் தோற்றம் பெற்றனர். இவ்விரு பிரிவினரிடையே மோதல்கள் ஏற்பட்டன.
- நகரமயமாக்கல்
- சூழல் மாசடைதல்.
- கிராமங்கள் பாழடைதல், நிலம் அற்றோர் தோற்றம் பெறல், மரபு ரீதியான சமூக அமைப்புச் சீர்கேடுகள்.

**அரசியல்**

- மத்திய வகுப்புத் தோன்றுதல்.
- பல்வேறு அரசியல் பொருளாதார கருத்துக்கள் தோன்றுதல்.
    - ரொபட் ஓவினின் சமத்துவ இயக்கமும் சாடீஸ்ட் இயக்கமும்.
    - மாக்சிசக் கொள்கை, ஜெரம் பென்தமியின் பயன்பாட்டுவாதம்.
- அடம் ஸ்மித்தின் தலையிடாக் கொள்கை.
- தொழிலாளர் இயக்கங்கள் உருவாகுதல்.
- பேரரசுவாதம் விரிவடைதல்.

# கணிப்பீடும் மதிப்பீடும் 1

**பல்தேர்வு வினாக்கள்**

**முதலாம், இரண்டாம் வினாக்களுக்கு முறையே ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் மற்றொன்றுடன் பொருந்தாது. பொருந்தாத விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) 1. ஹென்றி டர்பி 2. ஹென்றி கோட் 3. ஹென்றி பேஸ்மர்
4. மைக்கல் சர்வேடஸ் 5. விலியம் சீமன்ஸ் (.........)

02) 1. ஹென்றி பெல் 2. ரொபட் புல்டன் 3. டெம்ளர்
4. ஜோன் கல்வின் 5. ஜோன் மக்கடம் (.........)

**03 ஆம் வினாவுக்கு முறையே ஐந்து சோடிப் பதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாது. அதனைத் தெரிந்து அடைப்புக்கள் அதன் இலக்கத்தை எழுதுக.**

03) 1. ஜோன் கே - பறக்கும் தறி ஓடம்
2. ஜேம்ஸ் ஹாக்கிரிவ்ஸ் - தையல் இயந்திரம்
3. ரிச்சர்ட் ஆக்ரைட் - நீர்ச்சட்டம்
4. சாமுவேல் குரோம்டன் - மியுல் இயந்திரம்
5. எட்மண்ட் காட்ரைட் - வலுவால் இயங்கும் இயந்திரத்தறி (.........)

**இலக்கம் 05, 06 ஆகிய வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அத்தலைப்பிற்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குகள் எழுதுக.**

04) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்?
1. இங்கிலாந்தில் மானியமுறை வீழ்ச்சியுற்றமை.
2. நாட்டில் இயற்கை வளங்கள் இருந்தமை.
3. குடியேற்ற நாடுகளிலிருந்து மூலப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.
4. புவியியல் ரீதியாக நாடு தீவாக இருந்தமை.
5. பிரான்சியப் புரட்சியின் தாக்கம் இங்கிலாந்தை வந்தடைந்தமை. (.........)

05) கைத்தொழில் புரட்சியின் நன்மைகள்
1. உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்பி அதிக இலாபம் அடைந்தமை.
2. வேலை வாய்ப்பு அதிகரித்தமை.
3. வெளிநாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு உதவிகள் வந்தமை.
4. வங்கிகளின் வளர்ச்சி
5. முதலாளித்துவப் பொருளாதார முறை தோற்றம் பெற்றமை. (.........)

## கணிப்பீடும் மதிப்பீடும்

**பின்வரும் வினாவுக்கான சரியான விடைகளை எழுதுக.**

06. ‘‘கைத்தொழில் புரட்சியின் காரணமாக ஐரோப்பாவில் தொழினுட்ப, பொருளாதார, சமூகத் துறைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன.’’

i. கைத்தொழிற்புரட்சி முதலாவது ஏற்பட்ட நாட்டைப் பெயரிடுக. (01 புள்ளி)

ii. அது அந்த நாட்டில் ஏற்படுவதற்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

iii. புடவைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய மூன்று கண்டுபிடிப்புக்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iii. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வினாவில் கூறப்பட்டுள்ள துறைகளில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக் கைத்தொழில் புரட்சி எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதை விவரிக்குக. (07 புள்ளிகள்)

**07. பின்வரும் தலைப்புக்களின் கீழ் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி பற்றி விபரிக்குக.**

i. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணி

ii. கைத்தொழில் புரட்சியின் பிரதான கண்டுபிடிப்புக்கள்

iii. கைத்தொழில் புரட்சியின் பொருளாதார, சமூக விளைவுகள்

(14 புள்ளிகள்)

08. பிரித்தானிய புறவுருவப்படமொன்றில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக. அவற்றில் இரண்டு இடங்களைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. லிவர்பூல் | 2. மான்செஸ்டர் | 3. லண்டன் | 4. தேம்ஸ் நதி |
| 5. ஸ்கொட்லாந்து | 6. வேல்ஸ் | 7. வடகடல் | 8. ஆங்கிலக் கால்வாய் |

(14 புள்ளிகள்)

# லிபரல்வாத தேசியவாதக் கொள்கைகளின் வளர்ச்சி

## அறிமுகம்

சுதந்திரத்தையும் நாட்டுப் பற்றையும் முன்வைத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் லிபரல்வாதமும் தேசியவாதமும் ஐரோப்பிய அரசியலில் அதிக தாக்கம் செலுத்தின. சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த பல ஐரோப்பிய நாடுக்ள இவ்விரு கொள்கைகளால் பெரிய, பலவந்த நாடுகளாயின. இத்தாலியும் ஜேர்மனியும் இவற்றில் முக்கியமானவையாகும். லிபரல்வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சி அவை நடைமுறையில் செயற்பட்ட விதம் என்பன பற்றி இந்த அலகில் கவனம் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி** : • நவீன உலகின் பல்வேறு அரசியல் கருத்துக்கள் நடைமுறையில் செயற்பாடாக மாற்றமடைந்த விதத்தினைப் பரிசீலிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 லிபரல்வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் சிந்தனைகளின் வளர்ச்சி பற்றியும் அவை நடைமுறையில் செயற்படுத்தப்பட்ட முறை பற்றியும் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :
- அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சியுடன் புரட்சி அணிகள் தோற்றம் பெற்ற விதத்தினை விபரிப்பார்.
- லிபரல்வாத, தேசியவாத அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்படுத்தப்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- இத்தாலிய ஐக்கியம், ஜேர்மனிய ஐக்கியம் என்பனவற்றை தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### லிபரல்வாதம்

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செயற்பட்ட பிரதான சிந்தனையாகும்.
- பொதுமக்களின் பிரதிநிதிகளின் சபையின் உதவியுடன் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டரீதியான அரசியல் திட்டத்தின் மூலம், மக்களுக்குத் திருப்திகரமான ஆட்சிமுறையைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.
- அரசியல் தலையீடின்றிச் செயற்படுத்தப்படும் சுதந்திரப் பொருளாதார சமூக முறையைக் கட்டியெழுப்புவதே இதன் முக்கிய இயல்பாகும்.

### தேசியவாதம்

- குறிப்பிட்ட புவியியற் பிரதேசத்தினுள் வாழும் மக்கள் பிரிவினர் தமது பொதுத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு தமது தனித்துவத்தைக் கட்டியெழுப்பும்போது அனைத்து மக்களையும் ஒரே தேசியத்துக்குள் இணைப்பது இதன் நோக்கமாகும்.
- இன, மொழி, சமய, பழக்க வழக்கங்களின் பொதுத்தன்மை பொது உரிமை எனப்படுகிறது.
- இந்தப் பொது உணர்வினால் மக்களின் சுதந்திரத்தை வளர்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றமை.

## 1815 ஆம் ஆண்டின் பின்னர் ஐரோப்பாவில் லிபரல்வாத, தேசியவாத இயக்கங்களின் வளர்ச்சி

- ஸ்பானியாவில் லிபரல்வாதமும் தேசியவாதமும் எழுச்சி பெற்றமையும் அவை ஒடுக்கப்பட்டமையும்.
- ரஷ்யாவில் லிபரல்வாத வேண்டுகோள்களும் அவை ஒடுக்கப்பட்டமையும்
- 1820 - 21 இத்தாலியில் நேப்பிள்ஸ், மீட்மன்ட ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சி
- 1821 - 1829 வரை கிரேக்கம், துருக்கிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையும் பொருட்டு போராடியமை. 1829 ஆம் ஆண்டு ஆத்ரியாநோபல் உடன்படிக்கை மூலம் கிரேக்கம் விடுதலை பெறுதல்.
- கிரேக்கம் சுதந்திரம் பெற்றமை தேசியவாதம் பெற்ற வெற்றியாகும்.
- 1814 - 1848 வரை பிரான்சில் அரசியல் சமநிலையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும், அவற்றுக்கு எதிரான சவால்களும்
- அக்காலகட்டத்தில் ஐரோப்பாவில் தேசியவாத புரட்சிகள் ஏற்பட்டமை (ஒல்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, ஜேர்மன்)
- இவ்வாறு ஐரோப்பிய சமுதாயத்தில் 1815 - 1848 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட பிரதான இயல்புகளாவன.
  - பிரபுத்துவ அரசியல் முறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஏற்கனவே நிலவிய அரசியல் கட்டமைபைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென எண்ணிய பிரிவினர்
  - மத்திய தொழிலாள வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவ்பபடுத்தி பழைய ஐரோப்பாவை மாற்றியமைத்து லிபரல்வாதம், தேசியவாதம் எனும் சீர்திருத்தங்களின் மூலும் முன்னோக்கிச் செல்லும் எண்ணத்தினையுடைய பிரிவினர் மேற்கொண்ட போராட்டம்

## 1848 ஆம் ஆண்டு புரட்சி

- 1848 ஆம் ஆண்டளவில் ஐரோப்பா முழுவதும் கிளர்ச்சிகரமான பின்னணி தோன்றியிருந்தமை
- பிரான்சில் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக லூயி நெப்போலியன் ஆட்சிக்கு வந்தமை
- இத்தாலியில் தேசியவாத, லிபரல்வாத செயற்பாடுகள்
- 1848 ஆம் ஆண்டு ஜேர்மனியில் செயற்பட்ட தேசியவாத, லிபரல்வாத அணிகள்
- பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன் ஆகிய நாடுகள் தவிர்ந்த பல ஐரோப்பிய நாடுகளில் தேசியவாதமும் லிபரல்வாதமும் தோல்வியடைந்தமை
- பிரித்தானியா மாத்திரம் புரட்சிகளின்றி சீர்திருத்தத்தை அறிமுகம் செய்தமை
- அதிகாரபலம்
- இத்தாலிய ஐக்கியம்
  - இத்தாலியின் ஐக்கியத்திறகு முன்னர் அங்கிருந்த நிலைமை
  - இத்தாலியில் நிலவிய அரசியல் பிளவுகள்
    - நேப்பிள்ஸ், சிசிலித் தீவுகள் என்பன ஸ்பானிய பூர்போன் அரச பரம்பரையால் ஆட்சி செய்யப்பட்டமை
    - உரோம், மத்திய இத்தாலி என்பன பாப்பரசரால் ஆட்சி செய்யப்பட்டமை
    - பார்மா, மெடோனா, டஸ்கனி என்பன ஆஸ்திரிய அரச பரம்பரையால் ஆட்சி செய்யப்பட்டமை.
    - வெனிஸ், லொம்பாடி ஆகிய பிரதேசங்கள் ஆஸ்திரிய பேரரசின் கீழ் ஆட்சி செய்யப்பட்டமை.
    - பீட்மன்ட், சாடீனியா உட்பட்ட பிரதேசங்கள் இத்தாலிய சவோய் அரச பரம்பரையின் கீழ் இருந்தமை.
    - நெப்போலியனது ஆட்சியின் விளைவாக இத்தாலிய மக்களிடையே ஒற்றுமை தொடர்பாக உணர்வு ஏற்பட்டமை.
    - தேசிய உணர்வு வளர்ச்சியடைந்தமை

### இத்தாலிய ஐக்கியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அவற்றுடன் தொடர்புடைய இயக்கங்களும்

- இத்தாலியின் தேசியவாதம் எழுச்சியுறல்
- காபோனாரி இயக்கம்
  - காபோனாரி இயக்கத்தினால் ஆஸ்திரிய ஆதிக்கத்துக்கு எதிராகச் சுதந்திரப்போர் ஆரம்பமாகியமை.
- மசினியின் இளம் இத்தாலிய இயக்கம்
- ஜியோபர்டியின் தலைமையின்கீழ் புதிய இயக்கம் ஆரம்பமாகியமை.
- ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் லிபரல்வாத அரசியல் சீர்திருத்தத்தை முன்வைத்தல்.
- 1848 ஆம் ஆண்டு இத்தாலியின் விடுதலைப்போர்.
- எதிர்ப்புக்கள் எழுந்தமையும் இவ்வியக்கம் தோல்வியடைந்தமையும்.

### இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவியோர்

- கவுன்ட் கவூர், பீட்மன்ட் அரசின் பிரதமராகியமை.
- இத்தாலி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தமை.
- லிபரல்வாதிகளின் உதவியைப் பெற்று இத்தாலியில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- இத்தாலி ஐக்கியமாகும் செயற்பாட்டின் தலைமைத்துவம் பீட்மன்ட் அரசுக்கு உரியதாகுதல்.
- கிரிமியன் போரில் சம்பந்தப்படுதல்
- இத்தாலிய ஐக்கியத்திற்குப் பிரான்சினதும் பிரித்தானியரதும் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- கவுன்ட் கவூர், பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் ஆகியோர் புலொம்பியாஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடல்.

### கரிபால்டி

- இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- கரிபால்டியின் செஞ்சட்டை வீரர்களால் தென் இத்தாலியப் பிரதேசம் கைப்பற்றப்பட்டு பீட்மன்ட் அரசனிடம் கொடுக்கப்பட்டமை
  - உரோமைத் தவிர்ந்த பாப்பரசரின் அனைத்துப் பிரதேசங்களும் கைப்பற்றப்படல்.
  - 1866 ஆம் ஆண்டு வெனிஸ் இணைக்கப்படல்.
  - 1870 ஆம் ஆண்டு உரோம் இணைக்கப்பட்டதுடன் இத்தாலியின் ஐக்கியம் நிறைவுற்றமை.

### ஜேர்மனியின் ஐக்கியம்

- ஜேர்மனிய ஐக்கியத்திற்கு முன்னர் நிலைவிய அரசியல் நிலைமை
  - 1648 ஆம் ஆண்டு வெஸ்ட்பாலியா உடன்படிக்கையின் விளைவாக ஜேர்மனி பல அரசுகளாகப் பிளவுபடல்.
  - நெப்போலியன் பொனபாட் ஜேர்மன் பிரதேசத்தை ஆக்கிரமித்து றைன் சங்கத்தை அமைத்தல்.
  - வியன்னா மகாநாட்டின் பின்னர் நெப்போலியனின் முயற்சி வீழ்ச்சியடைதல்.
  - சொல்வரையின் சங்கத்தின் கீழ் ஜேர்மனியில் பொருளியல் ஒருமைப்பாடு ஏற்படல்.
  - ஆஸ்திரியாவின் சான்சலர் மெட்டர்நிக்கால் லிபரல்வாதக் கருத்துக்கள் கட்டுப்படுத்தபடல். உதாரணம்: கால்ஸ்பாட் ஆணை
  - 1830 - 1848 ஆம் ஆண்டு போராட்டங்களும் அவைகளின் தோல்வியும்
  - 1848 பிராங்பட் பாராளுமன்றமும் 1848 புரட்சியின் தோல்வியும்

### ஜேர்மனியின் ஐக்கியத்தில் பிஸ்மார்க்கின் பங்கு

- ஒட்டோவன் பிஸ்மார்க் பற்றிய அறிமுகம்.
- ஜேர்மனியின் ஐக்கியத்திற்குத் தலைமை தாங்கத் தகுதியுடையதாகும்படி பிரஷ்யாவின் பொருளதாரத்தையும் அரசியலையும் பலப்படுத்துவதற்கு செயற்பட்ட விதம்
- பிஸ்மார்க்கின் இராஜதந்திர உபாயம், ‘இரத்தமும் இரும்பும்’ என்ற கொள்கை பிரஷ்யாவின் போர்ப்படையை வலுப்படுத்தியமை.
- ஷெல்ஸ்விக் ஹோல்ஸ்டைன் பிரச்சினை. ஷெல்ஸ்விக் இணைக்கப்படல்.
- 1866 ஆம் ஆண்டுப் போரில் ஆஸ்திரியா தோல்வியடைந்தமை.
- 1871 ஆம் ஆண்டு பிரான்சைத் தோற்கடித்ததன் மூலம் பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஐக்கிய ஜேர்மனி தோற்றம் பெறுதல்.

# இத்தாலியை ஐக்கியப்படுத்தல்



## ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல்



## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. தேசியவாதம் 2. கோர்சிக்கா 3. ஸ்பானியா
4. கிரேக்கம் 5. ரொடீஷியா (...............)

(2) 1. காபொனாரி இயக்கம் 2. இளம் இத்தாலிய இயக்கம்
3. கரியரிப்போர் இயக்கம் 4. தாஸ்கெப்பிட்டல் இயக்கம்
5. தேசிய இயக்கம் (...............)

(3) 1. லூயி நெப்போலியன் 2. ஒட்டவன் கரிபால்டி 3. ஜோசப் மசினி
4. கெமிலோ கவூர் 5. குசெப் கரிபால்டி
(...............)

(4) 1. லொம்பார்டி 2. தாஸ்கனி 3. வைமார்
4. பீட்மன்ட் 5. நேப்பிள்ஸ்
(...............)

(5) 1. ஜேர்மன் ஒன்றிணைப்பு 2. றைன் சங்கம் 3. சொல்வரைன் சங்கம்
4. கேஸ்டியன் மகாநாடு 5. பிலடெல்பியா மகாநாடு
(...............)

(6) பொருத்தமற்ற சோடியைத் தெரிவுசெய்க.
1. மசினி - இளம் இத்தாலிய இயக்கம்
2. கரிபோல்டி - செஞ்சட்டைப் படை
3. சார்டினியா - சவோய் அரச பரம்பரை
4. கெரன்ஸ்கி - செஞ்சட்டைப் படை
5. சொல்வரைன் உடன்படிக்கை - பொருளாதார சங்கம்
(...............)

(7) X யையும் Y யையும் இணைக்கும்போது பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| (i) மெட்டனிக் | (A) லிபரல் சீர்திருத்தத்தைச் செயற்படுத்துதல் |
| (ii) பிஸ்மார்க் | (B) தென் இத்தாலியைக் கைப்பற்றுதல் |
| (iii) ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் | (C) ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடிசூடுதல் |
| (iv) கரிபால்டி | (D) இரத்தமும் இரும்பும் கொள்கை |
| (iv) விக்டர் இம்மானுவேல் | (E) லிபரல் கருத்துக்களைக் கட்டுப்படுத்துதல் |

1. EDABC 2. ACDBE 3. DECBA 4. ADBCE 5. EABDC
(...............)

- **தலைப்புக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(8) 1. நெப்போலியன் பொனபாட்டின் கொள்கைகள், இத்தாலியில் தேசிய வாதத்தை எழுச்சிபெறச் செய்வதில் முக்கிய காரணமாக அமைந்தது.
2. இத்தாலியில் நிலவிய ஆஸ்திரிய ஆதிக்கம் இத்தாலியின் ஐக்கியத்தில் பிரதான தடையாக விளங்கியது.
3. இத்தாலிய ஐக்கியத்தின் முக்கிய பங்காளி கவூர் ஆவார்.
4. சொல்வரீன் சாடீனியத் தலைமைத்துவத்தின் கீழ் நிறுவப்பட்டது.
5. இத்தாலிய ஐக்கியம் 1870 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது.

(...............)

(9) ஜேர்மன் ஐக்கியமடைதல்
1. கவுண்ட் கவூர் புலோம்பியர்ஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடல்
2. பிஸ்மார்க் இராஜதந்திர உபாயங்களைக் கடைப்பிடித்தல்
3. பிரஷ்யாவின் தலைமையில் ஐக்கிய ஜேர்மனி உருவாகுதல்
4. ஷெல்விக் இணைக்கப்படல்
5. சொல்வரின் சங்கத்தின் கீழ் பொருளாதார இணைப்பை ஏற்படுத்துதல்

(...............)

(10) ஜேர்மனை இணைக்கும் முன்னர்
1. ஜேர்மனி மூன்று முக்கிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை
2. றைன் சங்கத்தை நிறுவியமை
3. சொல்வரைன் சங்கத்தின் கீழ் பொருளாதார இணைப்பை ஏற்படுத்தியமை
4. கால்ஸ்பட் ஆணை
5. பிரன்க்பர்ட் பாராளுமன்றம் தோல்வியுற்றமை

(...............)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) லிபரல் வாதத்தையும் தேசிய வாதத்தையும் தெளிவுபடுத்துக.
(ii) ஐரோப்பாவில் லிபரல்வாதத்தினதும் தேசியவாதத்தினதும் வளர்ச்சியினை விளக்குக.

02. ''இத்தாலிய ஐக்கியத்தில் லிபரல்வாதமும் தேசியவாதமும் நடைமுறையில் செயற்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.'' இதனைப் பரிசீலிக்குக.

03. ''இரத்தத்தினாலும் இரும்பினாலும் மாத்திரமே ஜேர்மனியை இணைக்க முடியும் என பிஸ்மார்க் நம்பினான்'' ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதில் பிஸ்மார்க் பின்பற்றிய செயல்முறைகள் இக்கூற்றுடன் பொருந்தும் முறையைப் பரிசீலனை செய்க.

04. பின்வரும் இடங்களை ஐரோப்பியப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
மிலான், ஜெனோவா, வெனிஸ், பொலொஞ்ஞா, உரோம், நேப்பிள்ஸ், அட்றியாட்டிக்கடல், சாடீனியா, கோசிக்கா, சிசிலி, அயோனியன் கடல், றைன் நதி, எல்ப்ஸ் நதி, டான்யுப் நதி, போ நதி, விஸ்டுவா நதி, பால்டிக் கடல், பெல்ஜியம், லக்சம்பார்க், பவேரியா, சைவேஷியா, பேர்லின், டான்சிக், பிரன்ட்பேர்க்

# முதலாம் உலக யுத்தகம்

## அறிமுகம்

1871 ஆம் ஆண்டு ஜேர்மனி ஐக்கியமடைந்த பின்னர் ஐரோப்பாவில் பிரான்ஸ் பெற்றிருந்த இடத்தை இழந்ததுடன் அந்த இடத்தை ஜேர்மனி பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் ஜேர்மனி படிப்படியே ஐரோப்பாவில் முன்னிலைக்கு வந்ததுடன் பிரான்சுக்கும் ஜேர்மனிக்குமிடையே போட்டி ஏற்பட்டது. பலம்வாய்நத நாடுகளிடையே நட்பினை ஏற்படுத்துவதன் மூலம் கூடிய அளவில் பிரான்சை ஐரோப்பாவில் தனிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை ஜேர்மனி பின்பற்றியது. இதன் விளைவாக ஐரோப்பா படிப்படியாக இரு அணிகளாகப் பிரிந்தது. இவ்வாறு இரு அணிகள் பிரிந்தமை, பல ஆண்டுகளாக ஐரோப்பாவில் நிலவிய ஏனைய பிரச்சினைகள் என்பன காரணமாக 1914 ஆம் ஆண்டு முதலாம் உலக யுத்தம் ஆரம்பமானது. பெருந்தொகை உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தி உலகம் முழுவதிலும் நடைபெற்ற இப்பயங்கர யுத்தத்துக்கான காரணங்கள் யுத்தத்தின் பிரதான கட்டங்கள். யுத்தத்தின் விளைவுகள் என்பனவற்றைக் கலந்துரையாடுவதும் யுத்தத்தின் கொடூரத்தையும் சமாதானத்தைப் பேணுவதன் அவசியம் பற்றிக் கவனம் செலுத்துவதும் இந்த அலகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 6.0** : • அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1 முதலாம் உலக யுத்தத்தின் அழிவுகள் பற்றி எடுத்துக் கூறுவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- உலக யுத்தம் ஏற்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார்.
- உலக யுத்தத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.
- உலக யுத்தம் தொடர்பான இடங்கள், நாடுகள் என்பனவற்றை உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### முதலாம் உலக யுத்தம்
- 1914 - 1919 வரை உலகம் முழுவதிலும் நடைபெற்ற யுத்தம் முதலாம் உலக யுத்தம் எனப்படும்.

### யுத்தம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி
- பொருளாதாரம், படைப்பலம், கடற்படை வலிமை என்பனவற்றில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விடப் பிரித்தானிய முன்னணியில் இருந்தமை.
- இதுவரை ஐரோப்பாவில் ஆதிக்கமிகுந்த நாடாக விளங்கிய பிரித்தானியாவுக்கும் மத்திய ஐரோப்பாவில் ஆதிக்கமிக்க நாடாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த ஜேர்மனிக்கும் இடையே நிலவி வந்த போட்டி நட்புறவில் விரிசல் ஏற்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையே போட்டி மனப்பான்மை ஏற்படல் (கடற்படை வலிமை தொடர்பாக)
- குடியேற்றவாதத்தின் பிரதான வலிமைவாய்ந்த நாடான பிரித்தானியாவுக்கும் மேலாகப் பிரான்ஸ், வடக்கு கிழக்கு, மேற்கு ஆபிரிக்கப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதியிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்டியமை.

- 20 ஆம் நூற்றாண்டாகும்பொழுது ஜப்பான் வட பசுபிக் வலயத்தில் பலம்வாய்ந்த நாடாக எழுச்சி பெற்றதுடன் ஆசியாவில் பல நாடுகளில் தனது ஆட்சியை நிறுவி இருந்தமை.
- மேற்கு வல்லரசுகளைப் போன்று ஜப்பானும் ரஷ்யாவும் சீனா மீது தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்ததுடன் சீனாவானது ரஷ்யா, ஜப்பான், மேற்கு நாடுகள் என்பனவற்றின் நெருக்குதலுக்கு உட்பட்டமை.
- விவசாயத்திலும் கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்திருந்த அமெரிக்கா மேற்கு அரைக்கோளத்தில் பலமிக்கதாக விளங்கியமை.

## முதலாம் உலக யுத்தத்திற்கான காரணங்கள்

### புதிய பேரரசுக் கொள்கை

- ஜேர்மனி, இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகள் புதிய வல்லரசுகளாக எழுச்சி பெற்று வந்தமை
- கைத்தொழிற்புரட்சியின் காரணமாகப் பிரதான ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்து வந்தமை.
- உற்பத்தியின் பொருட்டு மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல், பாரிய அளவில் உற்பத்தியை விநியோகம் செய்தல், மேலதிக மூலதனத்தை முதலீடு செய்யும் பொருட்டுச் சந்தைகளைப் பெற்றுக் கொள்ளல் என்பன புதிய பேரரசுவாதத்தின் நோக்கமாக இருந்தமை.
- பிரான்ஸ், பிரித்தானியா, போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகள் குடியேற்றவாதப் போட்டியில் ஈடுபட்டமை.

### ஆபிரிக்கா தொடர்பான போட்டி

- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியர் ஆபிரிக்கா மீது கவனம் செலுத்தியமை
- ஆபிரிக்காவிலிருந்த கனிப்பொருட்களைப் பெறுவதே ஐரோப்பியரின் நோக்கமாக இருந்தமை
- பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்பானியா, போர்த்துக்கல், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆபிரிக்காக் கண்டத்தைப் பங்கிட்டுக் கொண்டமை.

### போல்கன் பிரச்சினை

- 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் துருக்கியப் பேரரசு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. துருக்கியப் பேரரசின் கீழ் இருந்த கிறிஸ்தவர்கள் துருக்கிய பேரரசுக்கு எதிராக எழும்புதல்.
- துருக்கிப் பேரரசை அழித்துவிட்டு அப்பிரதேசத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட ரஷ்யா முயன்றமை.
- பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் அதற்கு எதிராக இருந்ததுடன் துருக்கிய பேரரசைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.
- ஆஸ்திரியா துருக்கிக்குச் சொந்தமான பொஸ்னியா - ஹர்சிகோவினா பிரதேசத்தை இணைத்துக் கொண்டமை.
- முதலாம் உலக யுத்தத்திற்கு அண்மிய காரணமாக விளங்கியது போல்கன் பிரதேசத்தில் ஏற்பட்ட சிக்கலாகும். (சரஜிவோ சம்பவம்.)



பர்டினன்ட் தம்பதியினர் சரஜிவோ தலைநகரில் கொலைசெய்யப்படுவதற்கு முன்

## ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிதல்

- பிரான்சுக்குச் சொந்தமான கனிப்பொருள் வளமிக்க அல்சேஸ்- லெரேன் பிரதேசம் 1871 ஆம் ஆண்டு ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டமையால் இரு நாட்டினருக்குமிடையே பகைமை ஏற்படல்.
- ஐரோப்பாவில் பிரான்சைத் தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் பிஸ்மார்க் ஐரோப்பாவில் நட்புக்கூட்டுறவு முறையை ஆரம்பித்தல்.
- பிஸ்மார்க்கிற்குப் பின்னர் ஜேர்மனின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றமடைதல்.
- ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராக இரு அணிகளாகப் பிரிந்தமை.
- ஆரம்பத்தில் நிலவிய பிரான்சிய - இங்கிலாந்து நட்பு, ரஷ்ய நட்பு என்பன ஜேர்மனிக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தமை (1927)
- 1908 ஆம் ஆண்டில் ஜேர்மனி - ஆஸ்திரியா, இத்தாலி ஒன்று சேருதல் (கடைசி நேரத்தில் இத்தாலி ஜேர்மனியிலிருந்து விலகி இங்கிலாந்துடன் இணைந்தமை)
- பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்பன நேச நாடுகள் எனவும், ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்பன அச்சு நாடுகள் எனவும் அழைக்கப்பட்டமை.

## போரின் பிரதான கட்டங்கள்

- 1914 ஆம் ஆண்ட ஜுன் மாதம் 28 ஆந் திகதி ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசன் பிரான்ஸிஸ் பேர்டினன்டும் அவனது மனைவியும் சரோஜிவாவில் சர்பிய இனத்தவன் ஒருவனால் கொல்லப்பட்டமையால் ஆஸ்திரியா சேர்பியாவுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தல்.
- ரஷ்யா சேர்பியாவுக்கு உதவ முன் வந்தமையால், ரஷ்யாவுக்கு எதிராக ஜேர்மனி யுத்தப் பிரகடனம் செய்தல்.
- இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் ஆஸ்திரியாவுக்கு எதிராக அணி வகுத்ததுடன் துருக்கி, பல்கேரியா, ஹங்கேரியா என்பன ஆஸ்திரியாவுக்குச் சார்பாக யுத்தத்தில் இறங்கியமை.
- போர் நடைபெற்ற முனைகள்
  - மேற்கு முனை
  - கிழக்கு முனை
  - தென்கிழக்கு முனை
  - ஆபிரிக்க முனை
  - கடற்போர்
  - அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் பங்கேற்றமை



யுத்த அழிவுகள்

### போரின் விளைவுகள்

- பெருமளவிலான உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் ஏற்படல்
- ஊழல் நிறைந்த முடியரசுகள் வீழ்ச்சியுற்றமை.
  உதாரணம்: ஆஸ்திரியப் பேரரசு, ஹங்கேரியப் பேரரசு, துருக்கியப் பேரரசு
- அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சியுறல்.

### வர்சேல் உடன்படிக்கை

- குற்றவாளியெனக் கூறி இவ்வுடன்படிகையின் மூலம் ஜேர்மனிக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படல்.
- அல்சேஸ் - லொரேன் பிரதேசமும் சார் பள்ளத்தாக்கு என்பனவும் பிரான்சுக்கும் ஷெல்சவிஸ் பிரதேசம் டென்மார்க்கிற்கும் வழங்கப்படல்.
- ஜேர்மனியின் அனைத்துக் குடியேற்றங்களும் வெற்றிபெற்ற அணி நாடுகளிடையே பகிர்ந்தளிக்கப் படல்.
- ஜேர்மனியின் படைவீரர்களின் எண்ணிக்கையை ஒரு இலட்சம் என வரையறுத்தல் கட்டாய யுத்த சேவையைத் தடை செய்தல்.
- ஜேர்மனியின் கடற்படை வலிமையைக் கட்டுப்படுத்தி, போர்க்கப்பல், நீர் மூழ்கி உற்பத்தியைத் தடை செய்தல்.
- வெற்றியடைந்த நாடுகளுக்குப் பெருந்தொகையான பணத்தை நஷ்டஈடாகச் செலுத்தும்படி ஜேர்மனிக்கு விதிக்கப்படல்.

### ஐரோப்பிய தேசப்படம் மாற்றியமைக்கப்படல்

- துருக்கிய பேரரசின் கீழ் இருந்த நாடுகள் சிலவற்றை இணைத்து யூகோஸ்லேவியா என்ற பெயரில் புதிய அரசைத் தோற்றுவித்தல்.
- மொரேலியா, சுடேன்டன்லாந்து ஆகிய அரசுகளை இணைத்து செக்கோஸ்சலேவேக்சியா என்ற நாட்டைத் தோற்றுவித்ததல்.
- போலாந்துக்கு டன்சிக் துறைமுகத்தையும் அங்கு செல்வதற்கான நிலப்பகுதி ஒன்றையும் பெற்றுக்கொடுத்து சுதந்திர நடாக்கியமை. இதனால் கிழக்கு, மேற்கு என்று ஜேர்மனி இரண்டாகப் பிளவுபட்டமை.
- ருமேனியா, பல்கேரியா என்பன புதிய அரசுகளாகத் தோற்றம் பெற்றதுடன் துருக்கி ஐரோப்பாவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டது.

- பின்லாந்து, லத்துவியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை ஏற்றமை.
- பழைய அரசுகளின் பெயர்களுக்குப் பதிலாகப் புதிய பெயர் சூட்டப்படல்.
  உதாரணம்: கொன்ஸ்தாந்திநோபிள் - இஸ்தான்பூல்
  மெசபொத்தேமியா - ஈராக்




## சர்வதேச சங்கம் நிறுவப்படல்

- உலகில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு சரவதேச சங்கம் நிறுவப்பட்டமை.
- முதலாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சனின் எண்ணக்கருவுக்கு அமைய சர்வதேச சங்கம் நிறுவப்படல்.

## ஆரம்பம்

- நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதானமாகத் தீர்த்தல்.
- சிறு அரசுகளின் சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாத்தல்.
- உலகளாவிய ஒற்றுமையின் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்.
- நாடுகளுக்கிடையே புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படச் செய்தல்.
- மனித இனத்தின் சமாதான நிலைப்பாட்டிற்குத் தேவையான வேறு நடவடிக்கைகளை எடுத்தல்.

## சர்வதேச சங்கத்தின் நல்ல பண்புகள்

- பொது அமைப்பு எண்ணக்கரு தோற்றம் பெறுதல்.
- சர்வதேச அமைப்புக்கள் கட்டியெழுப்பப்படல்.
  உதாரணம்: நீதிமன்றம், சுகாதாரம், தொழிலாளர் அமைப்புக்கள்
- சர்வதேச மோதல்கள் தீர்த்து வைக்கப்படல்
  உதாரணம்: 1921 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கும், நேபிள்ஸ்க்கும் இடையே சைலீசியா தொடர்பாக ஏற்பட்ட மோதல் தீர்த்து வைக்கப்பட்டமை.
  1925 ஆம் ஆண்டு கிரேக்கம், பல்கேரியா ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல்.
  1926 ஆம் ஆண்டு மொசுல் எண்ணெய் நிலம் தொடர்பாக ஈராக், துருக்கி என்பவற்றுகிடையிலான மோதல்.

- மனித உரிமைகள் உறுதிசெய்யப்படல்
  உதாரணம்: அகதிகளைப் புனர்வாழ்வளித்தல், அடிமை வியாபாரம், போதைப்பொருள் வியாபாரம் என்பனவற்றைத் தடை செய்தல், நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

**சர்வதேச சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்**

- பலம்வாய்ந்த நாடுகள் சங்கத்திலிருந்து விலகியமை.
  உதாரணம்: ஐக்கிய அமெரிக்கா சங்கத்தில் அங்கத்துவம் பெறாமை.
- தோல்வியடைந்த நாடுகள் புறக்கணிக்கப்பட்டமை.
  உதாரணம்: முதலாம் உலக யுத்தத்தின் குற்றவாளிகளான ஜேர்மன், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் கிடைக்காமை.
- வல்லரசுகளிடையே உடன்பாடின்மை
- சங்கத்துக்கென சர்வதேச போர்ப்படை இல்லாமை.
- நிராயுத கொள்கை பின்பற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட பொழுதிலும் அதற்கென நிராயுதக் குழு நியமிக்கப்பட்டாமை.
- உலக சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் வீழ்ச்சியுற்றமை.
  உதாரணம்: 1931 ஜப்பான், மஞ்சூரியாவை ஆக்கிரமித்தல்.
  1931 இத்தாலி, அபிசீனியாவை ஆக்கிரமித்தல்.
  1938 ஜேர்மன் றைன்லாந்தையும் செக்கோசெலவேக்சியாவை இணைத்துக் கொண்டமை போன்ற சநதர்ப்பங்களில் சர்வதேச மன்றத்தால் அதனைத் தடை செய்ய முடியாது போனமை.
- 1933 - 1938 காலப்பகுதியில் ஜேர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகள் சர்வதேச சங்கத்தி லிருந்து விலகியமை.

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **இலக்கம் 01 - 05 வரையிலான வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏனையவற்றுடன் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. ஜேர்மன் 2. ஆஸ்திரியா 3. இங்கிலாந்து 4. துருக்கி 5. பல்கேரியா (...............)

(2) 1. லொயிட் ஜோர்ஜ் 2. வின்ஸ்டன் சேர்ச்சில் 3. ஒலென்டோ 4. கிளமென்சோ 5. வுட்ரோ வில்சன் (...............)

(3) 1. வேர்சேல்ஸ் 2. சென்ட்ஜேர்மன் 3. நியுலி 4. ஷெல்ஸ்விக் 5. லொசன்தே (...............)

(4) X யையும் Y யையும் இணைக்கும்போது பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| (i) யுகோஸ்லேவியா | (A) வோர்சோ |
| (ii) செக்கொஸ்லவேக்கியா | (B) புக்கரெஸ்ட் |
| (iii) போலாந்து | (C) பெல்கிரேட் |
| (iv) ருமேனியா | (D) சேர்பியா |
| (iv) பல்கேரியா | (E) பிராக் |

1. BACDE 2. EDCBA 3. CEABD 4. DECAB 5. EDACB (...............)

- **சர்வதேச சங்கம் தொடர்பாகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(5) 1. முதலாம் உலகப்போரின் பின்னர் சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நிறுவப்பட்டது.
2. அது வூட்ரோ வில்சனின் ஆலோசனைப்படி நிறுவப்பட்டது.
3. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ரஷ்யா, ஜேர்மன் என்பன ஆரம்ப அங்கத்துவ நாடுகளாகும்.
4. எதிர்காலத்தில் உலகப்போர் ஏற்படாதிருப்பதைத் தடுப்பதில் சர்வதேச சங்கம் வெற்றி கண்டது.
5. சர்வதேச சங்கத்தை அமைப்பதற்கு முன்னின்ற பொழுதிலும் அமெரிக்க அதில் பங்கு கொள்ளவில்லை. (...............)

## கணிப்பீடும் மதிப்பீடும் 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. முதலாம் உலகப் போருக்கான காரணங்கள் யாவை?
02. முதலாம் உலகப் போரின் விளைவுகளை விளக்குக.
03. ‘‘1919 ஆம் ஆண்டு வேர்சேல்ஸ் உடன்படிக்கை பழிவாங்குவதை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சாசனமாகும்.’’
    1. முதலாம் உலகப் போருக்கான அண்மிய (உடனடி) காரணம் யாது?
    2. முதலாம் உலகப் போரில் பிரதான அணிகளைச் சேர்ந்த நாடுகளைக் குறிப்பிடுக.
    3. முதலாம் உலகப் போரில் தாக்கம் செலுத்திய மூன்று காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக.
    4. வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் சரத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலேயுள்ள கூற்றினைக் கலந்துரையாடுக.
04. சர்வதேச சங்கத்தின் வெற்றியையும் தோல்வியையும் கலந்துரையாடுக.
05. முதலாம் உலகப்போருடன் தொடர்புடைய நாடுகளை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

# ரஷ்யப் புரட்சி

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டில் முதல் இரு தசாப்தங்களில் ரஷ்யாவில் நிலவிய சர்வாதிகார மானியமுறையிலான சார் மன்னர்களின் ஆட்சிக்கு எதிராக விவசாய, தொழிலாளர் மத்திய வகுப்பினர் எழுச்சியுற்றமையும் இறுதியாக ரஷ்யாவில் சமவுடைமை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டமையும் ரஷ்யப் புரட்சி எனப்படுகிறது. இப்புரட்சியின் மூலம் ரஷ்யாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள், அம்மாற்றங்கள் ஏனைய நாடுகளில் பரவிய விதம், சமவுடைமைவாதம் புது அணியாகச் செயற்பட்ட முறை என்பனவற்றை விபரிப்பதே இப்பாடத்தின் அடிப்படை நோக்கமாகும்.

**தேர்ச்சி 7.0** : • நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் செயற்பாட்டு ரீதியில் நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்திய விதத்தைப் பரிசீலிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 ரஷ்யப் புரட்சி உலக அரசியலில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- ரஷ்யப் புரட்சியை விபரிப்பார்.
- புரட்சியில் வெற்றிகொண்ட சமவுடைமை எண்ணக்கருவைத் தெளிவு படுத்துவார்.
- சமவுடைமைவாதம் உலகின் பலம்வாய்ந்த சக்தியாக அமைந்ததை எடுத்துக்காட்டுவார்.
- சமவுடைமை பரவலடைந்த நாடுகளை உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### ரஷ்யப் புரட்சி
- ரஷ்யப் புரட்சியை அறிமுகம் செய்தல்.
- புரட்சி மூன்று கட்டங்களில் செயற்படல்.
  - 1905 புரட்சி - 1917 மார்ச் புரட்சி - 1917 ஒக்டோபர் புரட்சி

### ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்
- மேற்கு ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் ரஷ்யா எல்லாத் துறைகளிலும் பின்தங்கி இருந்தமை.
- 19ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும்போது ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டமை, மகா பீற்றர், மகா கெத்தரின் ஆகியோரின் ஆட்சிக்காலம்.
- சமூக, பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்ட பாரிய அரசை ஆட்சி செய்வது கடினமாக இருந்தமையால் சார் மன்னர்கள் சர்வாதிகார முறையில் செயற்படல்.
- சர்வாதிகார ஆட்சிக்குச் சார்பான அதிகாரிகள் சிலரின் நிருவாகம் பெரும் ஊழல் நிறைந்ததாகக் காணப்பட்டமை.
- நிலமானிய அடிமைகளைப் போன்று விவசாயிகளும் சமுதாயத்தில் பெரும் அநீதிக்கு உள்ளாகியமை.
- வர்த்தகத்தை மையமாகக் கொண்ட பல நகரங்கள் வளர்ச்சியடைந்ததுடன் வெளிநாடுகளின் முதலீடு அதிகரித்தமை.

- நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி உயர் அதிகாரிகளின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டமை.
- 19ஆம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்கள் - நில அடிமை விடுதலைச் சட்டம்.
- ரஷ்யாவினுள் சமூக சீர்திருத்த இயக்கங்கள் படிப்படியே வலுவடைதல்.
- சமவுடைமை சிந்தனையின் வளர்ச்சி
- சமவுடைமைக் கட்சிகளின் வளர்ச்சி

## புரட்சியின் அண்மிய காலத்தில் ரஷ்யாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலைமை

### அரசியல்

- இரண்டாம் நிக்கலஸ் மன்னனி ஊழல் நிறைந்த முடியாட்சி
- 1905 ஆம் ஆண்டு ரஷ்ய - ஜப்பான் யுத்தத்தில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டமை.
- 1905 ஆம் ஆண்டு பாரிய வேலை நிறுத்தம்.
- 1905 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டுமா தோல்வியுறல்.



வேலைநிறுத்தம்

### பொருளாதாரம்

- மானியப் பொருளாதார முறை பலவீனமடைதல்.
- மக்கள் தொகை அதிகரித்தலும், வேலையின்மை, ஏழ்மை நிலை அதிகரித்தமையும்
- வெளிநாட்டு முதலீட்டின் மூலம் உழைப்பை சுரண்டியமை.
- விவசாய, தொழிலாள, மத்திய வகுப்பினரின் பெருந்தொகையானோர் இன்னல்களுக்கு உள்ளானமை.
- ரஷ்ய திறைசேரி வெறுமையுற்றமை.

### சமூகம்

- பிரபலமான மத்திய வகுப்பினர் காணப்படாமை.
- உணவுப் பிரச்சினை அதிகரித்தலும் பொருட்களின் விலை உயர்வடைதலும்

**புரட்சி ஏற்பட்ட முறை**

- 1917 மார்ச் புரட்சி
- கொன்ஸ்கியின் மென்ஷெலிக் அரசாங்கம் வெற்றியடையாமை.
- 1917 அக்டோபர் புரட்சி
- பொல்ஷெலிக்குகள் ஆட்சிக்கு வருதலும் சோவியத் சமவுடைமை அரசாங்கம் நிறுவப்படுதலும்.




ரஷ்யர் பாதையிறங்கிப் போராட்டம்



ரஷ்யர் போராட்டத்தை நிறுத்தல்

## புரட்சியின் வெற்றியும் அதன் தாக்கமும்

- சர்வதிகார மானியமுறை சார் அரசர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றமை.
- லெனினின் தலைமையில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்படல்.
- பொதுமக்களும் நிருவாகத்தில் தொடர்புகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டமை.
- ஜோசப் ஸ்டாலினின் காலத்தில் ரஷ்யா பிரபல நாடாகியமை.
- சமவுடைமைக் கருத்துக்களும், ஆட்சி முறையும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஏனைய கண்டங்களுக்கும் பரவியமை.
  – சமவுடைமை நாடுகள் - சீனா, கியுபா, வட கொரியா, வியட்னாம்.



சார் மன்னனின் குடும்பம்



தலைமைதாங்கிய லெனின்

## கணிப்பீடும் மதிப்பீடும் 1

- **இலக்கம் 01, 02 என்பனவற்றின் தலைப்புக்களின் கீழ் முறையே ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு விடை தலைப்புக்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) ரஷ்யப் போர் ஏற்படுவதற்கான காரணம்
1. சார் மன்னர்கள் சர்வாதிகார முறையில் ஆட்சி செலுத்தியமை.
2. நிருவாக அதிகாரிகளின் செயல்கள் ஊழல்கள் நிறைந்ததாக இருந்தமை.
3. நிலமானிய சமூக, பொருளாதார முறை தொடர்ந்தும் நிலைத்திருந்தமை.
4. கைத்தொழிற் புரட்சியின் தாக்கம் நாடு முழுவதும் செயற்பட்டமை.
5. சமவுடைமைக் கருத்துக்களின் வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தமை.

(...............)

(2) ரஷ்யாவை ஆட்சி செய்த மன்னர்கள்
1. முதலாம் அலெக்சாண்டர் சார் மன்னன்
2. இரண்டாம் அலக்சாண்டர் சார் மன்னன்
3. மகா பீற்றர் மன்னன்
4. ஏழாம் ஹென்றி மன்னன்
5. முதலாம் நிக்கலஸ் மன்னன்

(...............)

- **மூன்றாம் நான்காம் வினாக்களுக்கு சோடிப் பதங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(3)
1. இரண்டாம் அலெக்சாண்டர் (சார்) மன்னன் - நில அடிமைகளை விடுதலை செய்தல்.
2. இரண்டாம் நிக்கலஸ் (சார்) மன்னன் - ஜப்பானுடனான யுத்தத்தில் தோல்வியடைந்தமை.
3. கெரன்ஸ்கி - மென்சிலிக் கட்சி
4. வீ.ஐ. லெனின் - பொல்ஷெலிக் கட்சி
5. ஜோசப் ஸ்டாலின் - டுரொட்சியுடனான மோதலில் தோல்வியுற்றமை.

(...............)

(4)
1. ரஷ்ய யுத்தம் - 1905
2. பொல்ஷெவிக் புரட்சி - 1917 அக்டோபர்
3. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் - ரஷ்யப் புரட்சி
4. வீ.ஐ. லெனினின் மரணம் - 1924
5. ஜோசப் ஸ்டாலின் - ஐந்தாண்டுத் திட்டம்

(...............)

கணிப்பீடும் மதிப்பீடும் 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. ‘‘போல்ஷெவிக் புரட்சி சமவுடைமைக் கருத்துக்களின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.’’
(i) போல்ஷவிக் புரட்சி ஏற்பட்ட ஆண்டினைத் தருக.
(01 புள்ளி)
(ii) இப்புரட்சிக்குத் தலைமை வகித்த இருவரின் பெயர்களை எழுதுக.
(02 புள்ளிகள்)
(iii) புரட்சியின்போது மக்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் யாவை?
(03 புள்ளிகள்)
(iv) மேலே கூறப்பட்டுள்ள கூற்றினைப் போல்ஷவிக் புரட்சியின் விளைவுகளின் அடிப்படையில் கலந்துரையாடுக.
(08 புள்ளிகள்)

02. (i) 1917 போல்ஷவிக் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களைப் பரிசீலிக்குக.
(06 புள்ளிகள்)
(ii) அப்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளைப் பகுத்தாய்க.
(08 புள்ளிகள்)

03. உலகப் படத்தில் பின்வரும் சமவுடைமை நாடுகளைக் குறித்துப் பெயரிட்டு, அவைகளில் இரண்டு நாடுகளைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. ரஷ்யா | 2. போலாந்து | 3. ஹங்கேரி | 4. பல்கேரியா |
| 5. கியுபா | 6. சீனா | 7. வியட்நாம் | 8. வடகொரியா |

(சரியாகக் குறிப்பிட்டவைகளுக்கு 01 புள்ளி வீதம் 08 புள்ளிகள்
வரலாற்றக் குறிப்புக்கு 05 புள்ளிகள் வீதம் 10 புள்ளிகள்)